Ov6m 211,N00f4
No.18-19
165409

January 1917 Registered No. M. 163.

# The Water of Life

# ஜீவத்தண்ணீர்

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்.' யோவான் 7: 38.

Vol. XVIII ஜனுவரி 1917

## A HAPPY NEW YEAR

1. Praise the Lord. கர்த்தர் நம்மேல் வைத்த மிகுந்த கிருபைக்காக அவருக்கு ஸ்தோத்திரம். கடந்த வருஷத்திலே நமக்கு நேரிட்ட அநேக வியாதிகளிலிருந்தும், மோசங்களிலிருந்தும், துன்பங்களிலிருந்தும் நம்மைக் காத்து இம்மட்டும் சுகபத்திரமாய் கொண்டுவந்து சேர்த்த தயவுக்காக அவருக்கு மிக ஸ்தோத்திரம் உண்டாவதாக. கடந்த வருஷத்திலே நம்மோடிருந்த அநேக சகோதரர்கள் இப்பொழுது நம்முடைய மத்தியில் இல்லை; அவர்களைப் பார்க்கிலும் நாம் நீதிமான்கள் என்று அல்ல; நாம் இந்தப் புது வருஷத்திலேயாகிலும் குணப்படாதவர்கள் குணப்பட்டு, பாவத்தில் குடிகொண்டிருக்கிறவர்கள் பாவத்தை விட்டு, ஆவியின் வளர்ச்சியில்லாதவர்கள் அதிகமதிகமாய் அவருக்குள் நெருங்கிய பரிசுத்த ஜீவியம் பண்ணுவதற்காக அவர் நம்மேல் வைத்த நீடிய பொறுமையினாலும் மிகுந்த கிருபையினாலும் நம்மை இம்மட்டும் உயிரோடே வைக்கச் சித்தங்கொண்டிருக்கிறார். அவருக்கே சதா காலங்களிலும் மகிமை உண்டாவதாக.—ஆமென். 'என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி, அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே.'

2. Life is transitory. வருஷங்கள் கடந்துபோகிறதையும் காலங்களின் பலவித மாறுதல்களையும் நாம் கவனிக்கும்போது, மனுஷனுடைய ஆயுள் எவ்வளவு நிச்சயமற்றது என்பதைப் பார்க்கிறோம். நேற்று இரவில் நம்மோடுகூட போஜனம்பண்ணின சகோதரன் இன்று காலையில் மறைந்துபோகலாம். காட்டுப் புல்லானது சில மணி நேரம் இருக்கும்

10-1-17

என்கிற நிச்சயமுண்டு; மனுஷனுடைய ஆயுளோ அடுத்த நிமிஷம் இருக்கும் என்கிற நம்பிக்கை இல்லை. அவன் கொஞ்சநேரம் தோன்றி மறைந்து போகிற நீர்க்குமிழுக்கும் புகைக்கும் ஒப்பானவனாயிருக்கிறான். ஆகையினாலே தான் சங்கீதக்காரன் 'வேஷமாகவே மனுஷன் திரிகிறான்; விருதாவாகவே சஞ்சலப்படுகிறான்; ஆஸ்தியைச் சேர்க்கிறான், யார் அதை வாரிக்கொள்ளுவான் என்று அறியான்' என்று சொல்லுகிறார். பூலோகத்தின் சகல சம்பத்தையும் அனுபவித்த பிரசங்கி 'மாயை மாயை, எல்லாம் மாயை' என்று புலம்புகிறார்; அப்படியே விசுவாசிகளின் தகப்பனாகிய ஆபிரகாம், தான் எவ்வளவு செல்வத்திலிருந்தபோதிலும் பூமியிலே பரதேசியைப்போல் சஞ்சரித்தார். பராக்கிரமசாலியாகிய தாவீது ராஜா 'பூமியிலே நான் பரதேசி' என்று அறிக்கையிட்டார். அப்படியே நம்முடைய முற்பிதாக்களாகிய மோசே, யோசேப்பு, சாமுவேல், தானியேல் முதலிய பக்தர்களும் பூமியின் மேல் தங்களை 'அந்நியரும் பரதேசிகளும்' என்று அறிக்கையிட்டு, வரப்போகிறதையே விசுவாசத்தோடே நோக்கிப் பார்த்தார்கள். ஆகையால் நாம் இந்தப் புதுவருஷத்திலே, உலகத்திலே நமக்கு ஒன்றுமில்லையென்றும், நம்முடைய சொத்துசுகம் நம்மை இரட்சிக்கமாட்டாது என்றும், நம்முடைய பரிசுத்த ஜீவியம் மாத்திரம் இப்போதும் எப்போதும் நம்மைக் காக்கக்கூடியது என்றும் நினைத்து இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், பழைய மனுஷனையும் அவன் பாவச் செய்கைகளையும் தள்ளிவிட்டு புதிய மனுஷனாகிய இயேசுகிறிஸ்துவின் அச்சடையாளங்களை நாம் தரித்துக்கொள்ளுவோமாக.

3. Are you prepared to meet your God? வருஷங்கள் கடந்து போகப் போக நாம் வயதிலே அதிகரிக்கிறோம். சென்ற வருஷத்திலே 20, 30, 40 வயதாயிருந்தவர்கள் இந்த வருஷத்தில் 21, 31, 41 வயதுள்ளவர்களாகிறார்கள். ஆகவே வருஷங்கள் கடக்கக் கடக்க நாம் விருத்தாப்பியமுள்ளவர்களாகிறோம். நாம் விருத்தாப்பியமுள்ளவர்களாக ஆக, மரணத்திற்கோ அல்லது தேவனுடைய நியாயத்தீர்ப்பின் நாளுக்கோ கிட்டி நெருங்கிச் சேருகிறோம். இந்த முக்கியமான இரகசியத்தை அநேக கிறிஸ்தவர்கள் கவனிக்கிறதேயில்லை. புது வருஷம் வந்ததும் உயர்ந்த வஸ்திரங்களை உடுத்துவதும், தமாஷான காரியங்களை செய்வதும், நல்ல சாப்பாடு பலகாரம் முதலியவைகளை செய்து சாப்பிடுவதுமே அநேகர் கொண்டாடுகிற கொண்டாட்டம். ஆனால் இயேசுகிறிஸ்துவின் நியாயாசனத்தின்முன் நிற்கும்போது தங்களுடைய கெதி என்னவாகும் என்று தங்கள் ஆத்துமாவைக்குறித்து இந்நாளில் கவலைப்படுகிறவர்கள் சிலர். ஆகையால் இந்த சந்தோஷ தினத்திலே இதைக்குறித்துத் தீர்மானம் செய்யவேண்டியது மிகவும் அவசியமான காரியமே. உலகத்தின் நாலா காரியங்களையும், கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துநாதரின் தீர்க்கதரிசனங்கள் நிறைவேறி வருகிறதையும் நாம் பார்க்கும்போது கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு வாசலருகே இருக்கிறது என்று

165409



பார்க்கிறோம். அந்த நாள் யார் யாருக்கு சந்தோஷமான நாளாயிருக்குமோ அல்லது யார் யாருக்கு துக்கமான நாளாயிருக்குமோ தெரியாது.

கிறிஸ்தவ சகோதரனே, சகோதரியே, உன்னை கர்த்தர் திடீரென்று இவ்வுலகத்தைவிட்டு அழைக்கச் சித்தங்கொண்டால் அல்லது கர்த்தர் தம்முடைய மகிமையோடு திடீரென்று வானத்தில் தோன்றினால், அவருடைய நியாயஸ்தலத்திலே நீ அவருடைய வலது பாரிசத்தில் சேர்க்கப்படுவாய் என்கிற நிச்சயம் இப்போது உனக்கு உண்டா? 'நிச்சயமில்லாதவனாக ஓடேன்' என்று அப்போஸ்தலன் சொல்லுகிறார். அந்த நிச்சயமில்லாதவன் பூரண கிறிஸ்தவன் அல்ல. நியாயத்தீர்ப்பின் நாளிலே பேர்க்கிறிஸ்தவர்களின் நிலைமை வெகு பயங்கரமானதாயிருக்கும்.

அந்நாளிலே ஒவ்வொரு கிரியையும் அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும் நன்மையானாலும் தீமையானாலும் தேவன் நியாயத்திலே கொண்டுவருவார். அந்நாளிலே தேவ அன்பைப்பற்றி பிரசங்கித்தும் தேவ அன்பு அற்றவர்களும் ஆவியானவரைப்பற்றி பிரசங்கித்தும் ஆவியானவரை பெற்றுக்கொள்ளாதவர்களும், கிறிஸ்துவை வர்ணித்துப்பேசினபோதிலும் அவரை அறியாதவர்களும், தேவ ஊழியத்தை சரீர ஆதாயத் தொழிலாக எண்ணுகிறவர்களுமான ஊழியர்களை எல்லாம் தேவன் எல்லாருடைய கண்களுக்கு முன்பாக வெட்கப்படுத்துவார். அந்நாளிலே பிழைப்பினிமித்தமோ, வேறே ஆதாயத்தினிமித்தமோ, தங்களைக் கிறிஸ்தவர்களைப்போல பாவனை காட்டி, கிறிஸ்தவர்கள் மத்தியில் கிறிஸ்தவர்கள்போலவும், இந்துக்கள் மத்தியில் இந்துக்கள்போலவும் நடிக்கிற வௌவால் கிறிஸ்தவர்களை தேவன் வெட்கப்படுத்துவார். அந்நாளிலே, பணத்தினாலும் வக்கீல்களுடைய சாமர்த்தியத்தினாலும் தப்பித்துக்கொண்ட அநேக பாதகர்களை கர்த்தர் வெளிப்படுத்துவார். மற்றவர்களுடைய நிலத்தையும் பணத்தையும் அநியாயமாய் அபகரித்துக்கொண்டவர்களையும் பிறருக்கு அநியாயமாய் கஷ்டத்தை விளைவித்தவர்களையும் ஏழைகளுடைய கூலியை குறைத்து அவர்களுடைய பிரயாசத்தின் பலனை தின்று கொழுத்தவர்களையும், விதவைகளை ஏமாற்றி அவர்கள் பொருள்களை அபகரித்து கண்ணீர் சிந்தவிட்டவர்களையும், லஞ்சம் வாங்கிக்கொண்டு கள்ளவழக்குப்பேசினவர்களையும் கர்த்தர் அந்நாளிலே தப்பவிடார்.

ஐயோ! இந்த உலகத்தின் அக்கிரமங்களை யாரால் விவரிக்கக்கூடும். வாயைத்திறந்தால் தன்னையும், தன் குடும்பத்தையும், தன் படிப்பையும், தன் சம்பாத்தியத்தையும், தன் சாமர்த்தியத்தையும் பேசுகிற பெருமையுள்ள நாவுகளை கர்த்தர் சிறுமைப்படுத்துவார். பொய்யும், கபடும் முகஸ்துதியும், மற்றவர்களை குறித்து பின்புரணியும், பேசுகிறவர்களுக்கு அந்நாளிலே தேவன் பலன் அளிப்பார். ஒருவருக்கு விரோதமாய் கோள் பேசி, சண்டைகளை மூட்டி குடும்பங்களுக்குக்குடும்பம் கலைத்து, [illegible]

தர்களை ஒருவருக்கொருவர் முறித்து, அதிகாரிகளுடைய பகைகளை உண்டாக்கி வருகிற கபடகாரனே! உனக்கு என்ன கிடைக்கும்! 'பலவானுடைய கூர்மையான அம்புகளும் சூரைச்செடியை எரிக்கும் தழலுமே கிடைக்கும்.' நியாயத்தீர்ப்பின் நாளிலே நீ எங்கே நிற்பாய். 'நான் என்னும் பெருமையை சால்வையைப்போல அணிந்து, கோபத்தையும் மனஸ்தாபத்தையும் மனதிலே வைத்து, தன்னைப்போல பிறரைப் பொறுக்காதவரும், மற்றவர்களுடைய குற்றங்களை மன்னியாமல் வர்மத்தையும் பகையையும் மனதிலே பேணிவைத்து, கர்த்தருடைய ஆலயத்திலும்போய் 'எங்களுக்கு விரோதமாய் குற்றஞ்செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல' என்று, சொல்லுகிறது இன்னதென்று உணராமல் மடமட என்று ஆளோடு ஆளாய் கடமை ஜெபம் செய்து, கர்த்தருடைய பந்தியிலும் துணிகரமாய் பங்குபெறும் ஆத்துமாவே! கர்த்தருடைய நாளில் நீ எப்படி தப்பித்துக்கொள்வாய்? யூதாஸின் பங்கே உனக்கும் கிடைக்கும். தேவன் ஏற்படுத்தின பரிசுத்த நாளாகிய ஓய்வுநாளை ஜெபத்திலும் வேதவாசிப்பிலும் செலவழிப்பதற்குப் பதிலாக அந்நாளை தங்கள் சரீர ஆதாயத்திற்காக உபயோகப்படுத்துகிறவர்களையும், ஓய்வுநாளில் சீட்டு ஆடி, வீண்பேச்சுப் பேசி அதைப் பரிசுத்தக் குலைச்சலாக்கின அசட்டைக்காரர்களை தேவன் சும்மா போகவிடுவாரோ! தங்களை அருமையாய் பெற்று வளர்த்த தாய் தந்தையர்கள் பசியினால் வருந்தும்போது, தானும் தன் மனைவியும் சம்பிரமமாகச் சாப்பிட்டு சந்தோஷிக்கிற பதாவிகள் அந்நாளிலே தேவனுக்கு எப்படி ஒப்புவிப்பார்கள்? 'வேத வாக்கியங்களை தேடி வாசியுங்கள்', 'இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்' என்று கர்த்தருடைய வேதம் சொல்லும்போது எத்தனை கிறிஸ்தவர்கள் வீட்டில் பைபிள் புஸ்தகத்தைத் திறந்து பார்க்கிறதே கிடையாது. கிலட்டுப் போட்ட பைபிள் பெட்டியிலே பத்திரமாய்த் தூங்கும். குடும்ப ஜெபம் இல்லாமல் தங்கள் காலங்களை கழிக்கிற கிறிஸ்தவர்கள் எத்தனை பேர்! இவர்கள் பரிசுத்த வளர்ச்சியில் எப்படி வளரக்கூடும்? ஐயோ! கிறிஸ்தவர்களின் நிலைமை எவ்வளவு பரிதபிக்கப்படத்தக்கதாய் இருக்கிறது. இந்தியா தேசம் ஏன் இன்னும் உயிர்ப்பிக்கப்படவில்லை? இவர்கள்தான் காரணம். பேர் கிறிஸ்தவர்களால் தேவனுடைய நாமம் இந்துக்கள் நடுவே எவ்வளவாய் தூஷிக்கப்படுகிறதே. பரிசுத்த இயேசு கிறிஸ்துவின் நாமத்தை தரித்துக்கொண்டிருக்கிற கிறிஸ்தவர்களின் வாயிலே தூஷணமும், அவர்களுக்குள் பிரிவினையும், சண்டையும், விபசாரமும், குடிவெறியும், காணப்படும்போது, கர்த்தருடைய நாமத்தை புறமதஸ்தர்கள் எவ்வளவாய் அவமதிக்கிறார்கள்.

கிறிஸ்தவ சகோதரனே! சகோதரியே! சற்றுநேரம் நின்று உன்னைத் தானே சோதித்துப்பார். கர்த்தருடைய நாமம் அவமதிக்கப்படுவதற்கு உன் பாவஜீவியம் காரணமாயிருக்குமானால் அது எவ்வளவு பயங்கரமானது



என்பதை நினைத்துப்பார். இதுவரை உன்னில் குடிகொண்டிருந்த துணிகரமும் இரகசியமுமான பாவத்தை இந்த நிமிஷத்திலே அறிக்கையிட்டு உத்தம மனஸ்தாபத்தோடு இயேசுவின் பாதத்தில் வைத்து 'ஆண்டவரே இந்த புதுவருஷம் எனக்கு ஆசீர்வாதமாயிருப்பதாக. இந்த வருஷத்திலேயாவது நான் என் பாவத்தை விட்டு, உலகத்துக்கு அடுக்க ஜீவியம் செய்யாமல் பாவமற்ற பரிசுத்த ஜீவியம் செய்து, நீர் மகிமையோடே வரும்நாளிலே களங்கமற்றவனாய் உம்முடைய சந்நிதியிலே காணப்படும்படி நீர் கொடுத்த இந்த சொற்ப காலத்திலேயாவது என்னை ஆயத்தப்பண்ணிக்கொள்ள உம்முடைய ஆவியானவரின் உதவியைத் தந்தருளும். இதுவரை என்னில் காணப்பட்ட பாவங்களை நான் சட்டோடேவிட்டு, இனி புது ஜீவியம் செய்ய உம்முடைய கிருபையை எனக்குத் தந்தருளும்' என்று உண்மையோடும் கண்ணீரோடும் ஜெபம்பண்ணு, ஆவியானவர் உன்னைத் தட்டி எழுப்பும் இந்தச் சமயத்தை இழந்துபோகாதே. நாளைய தினம் உன் நாளல்ல. ஆகையால் இன்று தொனிக்கும் தேவ எச்சரிப்பை நீ அல்ல தட்டாதே. நீ ஞானஸ்நானம் பெற்று, சபைடாப்பில் பேர் எழுதப்பட்டு, கர்த்தருடைய சாக்கிரமெந்துகளில் பங்குபெற்று வருகிறதினாலே மாத்திரம் நீ ரட்சிக்கப்படுவாய் என்று உன்னை வஞ்சித்துக்கொள்ளாதே. உன் மனம் மாறி, உன் பாவஜீவியம் மாறி உன் எண்ணம், உன் பேச்சு, உன் சகல செய்கைகளும் பரிசுத்தமானாலொழிய நீ ரட்சிக்கப்படுவது கூடாத காரியம். ஆகையால் இப்பொழுதே உன் பாவத்தை விட்டு மனந்திரும்பு; மரணகாலம் வராததற்கு முன்னும், நீ மனந்திரும்பும்படி விரும்பியும் நீ குணப்படாதபடி ஐசுவரியவானுக்கும் லாசருவுக்கும் நடுவில் உண்டான பெரும் பிளப்பு உனக்கு வராததற்கு முன்னும் இன்று என்னப்படும்போதே மனந்திரும்பு. இப்பொழுதே அனுக்கிரக காலம்; இப்பொழுதே ரட்சணிய நாள்.

## 'இந்த வருஷம்'

### எரேமியா 28: 16.

பழைய வருஷம் கடந்து ஓர் புதிய வருஷம் வரும்போது ஜனங்களுடைய மனதில் சரீரத்திற்கடுத்த காரியங்களைக் குறித்தும் ஆவிக்குரிய விஷயங்களைக் குறித்தும் பற்பல எண்ணங்கள் உண்டாகிறது இயல்பு. உண்மையின்படி பார்த்தால் புதிய வருஷமென்றும் பழைய வருஷமென்றும் இல்லை. பஞ்சாங்கமும் கால அட்டவணைகளும் மனுஷருக்கேற்ற ஏற்பாடாகயிருக்கிறது. நாம் தேவனோடு நெருங்கிச் சகவாசம் செய்யும்போது வருஷங்களையும் நாட்களையும் முக்கியமாக எண்ணமாட்டோம். தேவனுடைய ராஜ்யத்தில் ஜனுவரி என்றும் ஞாயிறு என்றும் பேசமாட்டோம். ஆகிலும் இந்த மாம்ச ஜீவியத்தில் மாறுதலுள்ள காலங்களை நமக்குத் தந்து,

அலைகளின் ஊடாக நம்மை வழிநடத்தித் தமது ராஜ்யத்துக்குத் தகுதியுள்ளவர்களாக்குவது தேவசித்தமாயிருக்கிறது. நாம் கர்த்தருக்கென்று நாட்களை விசேஷித்து அந்த நாளில் அவருடைய ஆசீர்வாதத்தை எதிர்நோக்குவது நல்லதே. 'இந்த வருஷம்' என்ற பிரசங்க வாக்கியத்திலிருந்து இரண்டு மூன்று காரியங்களைத் தியானிப்போம். ஆவியானவரின் சத்தத்திற்குச் செவிகொடுப்போம்.

1. முதலாவது, இந்த வருஷம் நம்மில் அநேகருக்கு அனுக்கிரக வருஷமாயிருக்கவேண்டும். கர்த்தருடைய அனுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்த வந்தேன் என்று இரட்சகர் நாசரேத் ஆலயத்தில் பிரசங்கித்தார். ஜூபிலி வருஷம் அநேகருக்கு விடுதலைவருஷம். அடிமைகள் சுயாதீனமானார்கள். கடன்காரருக்கு கடன் மன்னிக்கப்படும். அடைமானம் வைக்கப்பட்ட நிலங்கள் திரும்பக் கொடுக்கப்படும். அநேகருக்கு அந்த வருஷம் ஆனந்த வருஷமாயிருக்கும்.

பாவத்தால் கட்டுண்ட அநேகருக்கு இந்த வருஷம் அனுக்கிரக வருஷமாயிருக்கக்கூடும். அநேகர் கிறிஸ்துமார்க்கத்துக்குரிய ஆசாரங்களைத் தரித்தவர்களாயிருந்தும் உள்ளான மாறுதலின் வல்லமையை அறியாதிருக்கிறார்கள். கிறிஸ்தவப் பெற்றோருக்குப் பிறந்ததினாலே கிறிஸ்தவர்கள்; ஆனால் மறுபிறப்பின் அனுபவம் அவர்களுக்குத் தெரியாது. வழக்கம்போல ஞானஸ்நானத்தைப் பெற்றுக்கொண்டார்கள்; ஆவியின் ஸ்நானம் பெற்றவர்களல்ல. மரியாதையாய் கர்த்தருடைய பந்தியில் சேருவார்கள். அவருடைய அதிசய அன்பையும் அவர் மரணத்தின் பலனையும் கண்டவர்களல்ல. தங்கள் பணத்தை ஆண்டவர் ஊழியத்துக்காகக் கொடுத்தாலும் தங்கள் உள்ளத்தை அவருக்குக் கொடுக்கமாட்டார்கள். வேத அறிவு அவர்களுக்குண்டு. அது இறுமாப்புக்கேற்ற அறிவேயன்றி பக்திக்குரியதல்ல. பற்பல பாவங்களுக்கும் அக்கிரமங்களுக்கும் தங்களை ஒப்புக்கொடுத்திருந்தும் தங்களை தேவனுடைய பிள்ளைகள் என்று வஞ்சித்துக்கொண்டிருக்கிற அநேகர் சபையிலுண்டு. இப்படிப்பட்டவர்கள் இந்த வருஷத்தில் ரட்சிப்பைக் கண்டடையும்படி தேவன் கிருபை செய்வாராக.

அருமையான சகோதரனே! நீர் மனந்திரும்பிப் பிழைக்கும்படிக்கல்லவா தேவன் உம்மை இந்த வருஷத்தைக் காணச்செய்தார். நீர் பிறந்தபடியே வளர்ந்து, வளர்ந்தபடியே இருக்கிறீரே. நீர் மனதாரப் பாவத்தில் நிலைத்திருக்கிறீர். உம்முடைய ஜீவியத்தில் மாறுதல் இல்லை. நான் புதுசிருஷ்டி, பழையவைகள் ஒழிந்தன எல்லாம் புதிதாயின என்று நீர் சொல்லக்கூடுமோ? உம்முடைய நினைவுகளையும் பேச்சையும் பாரும். நீர் வாசிக்கிற புஸ்தகங்களையும் உம்முடைய தோழர்களையும் பாரும். உமது இரகசிய ஜீவியத்தையும் நீர் எழுதும் கடிதங்களையும் நீர் பிரவேசிக்கிற வீடுகளையும் பாரும். ஆ! பழையவைகள் இன்னும் ஒழியவில்லையே. நீர்



புதுமனுஷனாகவில்லையே. இயேசுவின்பேரில் உமக்கு அன்பில்லை. அவரை நேசிப்பது உமக்குக் கஷ்டமாயிருக்கிறது. அவரைப்பற்றிப் பேசுவது உமக்கு வெட்கமாயிருக்கிறது. வேதத்தியானத்தில் உமக்குப் பிரியமில்லை. பக்தர்களோடு உமக்குச் சகவாசமில்லை. கர்த்தர் என்னை ரட்சித்திருக்கிறார் என்று நீர் உண்மையாகச் சொல்லக்கூடுமோ? பொதுவாகக் கிறிஸ்தவன் என்று சொல்லிக்கொள்ளுகிறதினால் உமக்கு என்ன பிரயோஜனம்? நாம் மனுஷனை ஏமாற்றினாலும் கர்த்தனை ஏமாற்ற முடியுமா? சகோதரனே! நான் இன்னும் ரட்சிக்கப்படவில்லை, ஜீவியத்தில் மாறுதல் உண்டாகவில்லை என்று நீர் உணருவீரானால் இந்த வருஷத்திலாவது ரட்சிப்பைப்பெற்றுக்கொள்ளும். சுயநீதிக்காரனுக்கும் துணிகரக்காரனுக்குமல்ல; தேவனே நான் கெட்டுப்போன பாவி, என்னை ரட்சியும் என்று அவர் பாதத்தில் விழுகிறவனை அவர் கைதூக்கி ரட்சிக்கிறார். நீர் இந்த வருஷத்தில் பிழைத்திருப்பது இரட்சிக்கப்படுவதற்கேயன்றி மற்றொன்றுக்கும் அல்ல. இந்த வருஷம் உமக்கு அனுக்கிரக வருஷமாயிருப்பதாக. தேவனுடைய சத்தத்தை அசட்டைபண்ணவேண்டாம்,

2. இந்த வருஷம் நம்மில் அநேகரிடத்தில் கனிகள் காணப்படும் வருஷமாயிருக்கவேண்டும். 'ஐயா, இது இந்த வருஷமும் இருக்கட்டும்; கனிகொடுத்தால் சரி, கொடாவிட்டால் இனிமேல் இதை வெட்டிப்போடலாம்'. இந்த அத்திமரத்தின் உவமையை நாம் அறிவோம். வருஷத்துவக்கத்தில் அநேகர் இந்த வாக்கியத்தின்பேரில் பிரசங்கிப்பார்கள். இதிலே ஒரு திராட்சத்தோட்டத்தைக் காண்கிறோம். எஜமான் அந்தத் தோட்டத்தில் ஒரு அத்திமரத்தை நட்டினான். அதை நட்டினது அழகுக்காகவுமல்ல நிழலுக்காகவுமல்ல கனிகொடுக்கும்படிக்கே. மூன்று வருஷங்களாக ஆவலோடு கனிகளைத்தேடி வந்தான். கனி ஒன்றுமில்லை. எஜமான் ஏமாந்துபோனான். கனியுமில்லை நிலத்தையும் கெடுத்துக்கொண்டிருந்தது. எஜமான் கோபங்கொண்டு அத்தியை வெட்டக் கட்டளையிட்டான். தோட்டக்காரனோ ஐயா, இது இந்த வருஷமும் இருக்கட்டும் என்று பரிந்துபேச அத்தி வெட்டுக்குத் தப்பிற்று.

மனந்திரும்பாத பாவிகளுக்கு இது பெரிய எச்சரிப்பல்லவா? குணப்படாத பாவிகளில் அநேகர் இந்த வருஷத்தில் பிழைத்திருப்பது எதினாலே? கர்த்தராகிய இயேசுவின் பரிந்துபேசுதல் அல்லவா? ரட்சிக்கப்படாத என் சகோதரனே, போனவருஷம் உனக்கு விரோதமாய் எஜமான் கூறின தீர்ப்பை நீ கேட்டதில்லையோ? நீ மனந்திரும்பாமலிருந்ததோடுகூட மற்றவர்களையும் உன் பாவத்தால் கெடுத்துக்கொண்டிருந்தாயே. நீ வெட்டப்படும்படி தீர்ப்புப்பிறந்ததே. பிதாவே, இவன் 1917 வருஷமும் இருக்கட்டும் மனந்திரும்பினால் நல்லது இல்லாவிட்டால் பார்த்துக்கொள்ளலாம் என்று உன் மீட்பர் உனக்காக வேண்டிக்கொண்டதினால் அல்லவா

நீ தப்பியிருக்கிறாய். இதை உணர்ந்து நீ மனந்திரும்பினால் எவ்வளவு நல்லது.

இந்த உவமையில் ஊழியக்காரருக்குப் போதனை உண்டல்லவா? ஊழியர்களாகிய நம்மை தேவன் அழைத்துத் தமது தோட்டத்தில் வைத்திருக்கிறார். நம்மிடத்தில் கனியை எதிர்பார்க்கிறார். நாம் கனிகொடுக்க வேண்டும், அதிகக் கனிகளைக் கொடுக்கவேண்டும் மிகுந்த கனிகளைக் கொடுக்கவேண்டும் என்று ரட்சகர் நமக்குக் கட்டளையிட்டிருக்கிறார். கனி கொடாதிருக்கிற கொடிகளை தேவன் அறுத்துப்போடுகிறார். தேவ ஊழியர் என்கிற பேரும், கொடுக்கப்பட்ட வேலையைச் செய்து முடிப்பதுமே போதும் என்று நினைக்கக்கூடாது. என்னத்துக்குத் தேவ ஊழியர்? வேலை செய்வது என்னத்திற்காக? ஏராளமான ஊழியர் நோக்கமற்ற ஊழியர். எஜமான் நோக்கமற்றவரல்ல. நமது ஊழியத்தில் கனிகள் காணப்படாவிட்டால் நம்மை ஏற்படுத்தின எஜமானை ஏமாற்றுகிற ஊழியராயிருப்போம். 'நீங்கள் போய்க் கனி கொடுக்கும்படிக்கும் உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும் நான் உங்களை ஏற்படுத்தினேன்' என்றார்.

சகோதரரே, கடந்த வருஷ ஊழியம் எப்படிப்பட்டது? கர்த்தருடைய ஊழியத்தை அசதியாகச் செய்தவர்கள் எத்தனைபேர்? அரைகுறையாகச் செய்தவர்கள் எத்தனைபேர்? ஒழுங்கீனமாகச் செய்தவர்கள் எத்தனைபேர்? தாங்கள் சொல்லுகிறது இன்னதென்றும் சாதிக்கிறது இன்னதென்றும் அறியாமல் வாயில் வந்ததை உளறினவர்கள் எத்தனை பேர்? சம்பளத்தை நோக்கியும், மனுஷர் புகழ்ச்சியை நாடியும், சுயபெலனைச் சார்ந்தும் செய்யப்பட்ட ஊழியங்கள் எவ்வளவு? ஐயோ, தகாத நோக்கங்களோடு செய்யப்படும் ஊழியத்தில் கனிகள் எப்படிக் காணப்படும்? ஊழியத்தை ஊழியத்துக்காகச் செய்யாமல் ஆத்துமாக்களுடைய ரட்சிப்புக்கென்றல்லவா செய்யவேண்டும்.

கனியற்ற அத்திமரம் நிலத்தையும் கெடுத்தது. பாவிகள் ரட்சிக்கப்படத்தக்கதாக ஊழியம் செய்யாதவர்கள், அநேகர் கெட்டுப்போக ஏதுவாயிருக்கிறார்கள் என்பது எவ்வளவு உண்மை! 'என்னோடு சேர்க்காதவன் சிதறடிக்கிறான்' என்று ரட்சகர் சொன்னார். மெய்யாய் ரட்சிக்கப்பட்டு, கிறிஸ்துவின் அன்பை அறிந்து, ஆவியின் பெலனைப்பெற்றவர்கள் மிஷன் ஊழியத்தில் இருந்தாலும், பிரத்தியேகமாய் வேலைசெய்தாலும் ஆத்துமாக்கள் ரட்சிக்கப்படும்படி பிரயாசப்படுவார்கள் என்பது மெய். ஆனால் அநேகர் தங்களைத் தேவ ஊழியர் என்று எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் கர்த்தரால் ஏற்படுத்தப்பட்டவர்களல்ல. மனுஷரால் ஏற்படுத்தப்பட்டவர்கள். இவர்களுக்கு மனுஷரைப் பிரியப்படுத்தவும் வேலையைக் காப்பாற்றிக்கொள்ளவும் தெரியும். கர்த்தரைப் பிரியப்படுத்தவும் ஆத்துமாக்களை ரட்சிக்கவும் தெரியாது. நாற்பது வருஷம் ஐம்பது வருஷம் மிஷன்



ஊழியனாயிருந்திருக்கிறேன் என்று சற்று பெருமையாய்ச் சொல்லிக்கொள்வார்கள். வருஷத்தை எண்ணினார்களேயன்றி பலனைப்பற்றிப் பேசமாட்டார்கள்.

சகோதரரே, இந்த வருஷத்திலாகிலும் ஜனங்களுடைய ரட்சிப்புக்காக நாம் போராடுவோமாக. ஆத்துமாக்கள் இயேசுவண்டை சேரும்படி உழைப்போமாக. எஜமானுடைய பசி கனியினால் தீருமேயன்றி, இலைகளினாலும் மரத்தினாலும் தீராமாட்டாது. வேலையின் ஏராளமல்ல வேலையின் பலனையே கர்த்தர் கவனிக்கிறார். ஐயா, இவன் இந்த வருஷமும் இருக்கட்டும் கனிகொடுத்தால் சரி, கொடாவிட்டால் வெட்டிப்போடலாம் என்றார். கர்த்தரின் ஊழியர்களாகிய நாம் எச்சரிப்படைந்து இந்த வருஷத்தில் பலனை எதிர்பார்த்து ஊழியம் செய்வோமாக.

3 இந்த வருஷம் நம்மில் சிலர் மரிக்கும் வருஷமாயிருக்கலாம். நமது காலம் கர்த்தரின் கரத்திலிருக்கிறது. நமது பெலத்தாலும் தீர்மானத்தாலுமல்ல அவருடைய கிருபையால் பிழைத்துவந்தோம். இந்தப் புது வருஷத்தில் பிரவேசி என்று அவர் சொன்னதால் பிரவேசித்திருக்கிறோம். இன்ன நாளில் வா என்று அவர் சொன்னால் போகவேண்டியதுதானே. அனனியா என்றொரு பொய்த் தீர்க்கதரிசி இருந்தான். கர்த்தர் எரேமியாவை அவனிடத்தில் அனுப்பி 'இந்த வருஷத்திலே நீ சாவாய்' என்று சொன்னார். அப்படியே அனனியா அந்த வருஷம் ஏழாம் மாதத்தில் செத்துப்போனான். இந்த வருஷத்தில் சாகும்படி நாம் விரும்பமாட்டோம். ஆகிலும் நம்மில் சிலர் சாகப்போகிறது நிச்சயமே. யார், யார் சாவார்கள் என்றும், எந்த மாதத்தில் சாவார்கள் என்றும், என்னவிதமாய்ச் சாவார்களென்றும் நாம் சொல்லத் துணியோம். கர்த்தர் அதை அறிந்திருக்கிறார்.

சகோதரனே, இந்த வருஷத்தில் நீ மரிக்கவும் உன் தேவனைச் சந்திக்கவும் ஆயத்தமாயிருக்கிறாயா? போனவருஷம் மரித்துப்போன சிறு பிள்ளைகளை நினைத்துப்பார். போனவருஷம் மரித்துப்போன பலமாயிருந்த வாலிபர்களை நினைத்துப்பார். அருமையான மனைவிகளையும் மக்களையும் விட்டுப் பிரிந்த புருஷர்களை நினைத்துப்பார். புருஷரையும் பிள்ளைகளையும் விட்டுப்பிரிந்த மனைவிகளை நினைத்துப்பார். கல்வியில் நிபுணர் மாண்டார்கள். உயர்ந்த சம்பாத்தியக்காரர் மாண்டார்கள். தேசத்தில் பிரக்யாதி பெற்றவர்கள் மாண்டார்கள். பெலத்தோடும் சுகத்தோடும் இருந்தவர்கள் திடீர்திடீரெனப் பிரேதமானார்கள். எழுதிக்கொண்டும், பேசிக்கொண்டும், வாசித்துக்கொண்டும், பிரசங்கித்துக்கொண்டும் இருந்த வேளையில் எடுத்துக்கொள்ளப்பட்டார்கள். இரவில் படுத்தவர்கள் காலையில் இல்லை.

மரணம் மகா பயங்கரமான சத்துரு. மரணம் ஒரு வீட்டில் பிரவேசிக்கும்போது எவ்வளவு கலக்கமும் துயரமும் காணப்படுகிறது. சகோத

ரனே, கர்த்தர் உன்னை இந்த வருஷத்தில் அழைத்தால் அது உனக்கு எப்படியிருக்கும்? இந்த வருஷத்தில் ஜூலை மாதத்தில் நீ மரிக்க நேரிடுமானால் உன் முடிவு என்னமாயிருக்கும்? அப்படி நேரிடாது என்று நீ சொல்ல என்ன ஆதாரமுண்டு. நீ இன்னமும் குணப்படாத பேர்க்கிறிஸ்தவனாயிருந்தால் உன் மரணம் உனக்குப் பெரிய சஞ்சலமாயிருக்குமே. உலகத்தையும் நீ நேசித்த பாவங்களையும் விட்டுப்பிரிவாய். மாற்றப்படாத உன் இருதயம் கர்த்தருடைய சமுகத்திலிருந்து உன்னைப் பிரிக்கும். நீ கர்த்தருடைய பிள்ளையாயிருந்தால் நீ கலங்கவேண்டியதில்லை. அவர் ஏற்ற காலத்தில் உன்னை அழைப்பார். அது அவருக்கு மகிமையும் உலகத்துக்கு நன்மையுமாயிருக்கும்.

தேவனுடைய பிள்ளையே, இந்த வருஷம் நீ மரிக்க நேரிடுமானால் ஆயத்தமாயிருக்கிறாயா? ஐயோ, என் இரட்சகரை நான் இன்னும் நன்றாய் நேசிக்கவில்லையே, ஜெப ஜீவியத்தில் மகா குறைவுள்ளவனாயிருக்கிறேனே, வேதத்தை இன்னும் படிக்கவேண்டிய பிரகாரம் படிக்கவில்லையே, என் ஆண்டவருக்காக ஆத்துமாக்களை நான் சம்பாதிக்கவில்லையே, என் ஜீவியம் பரிசுத்தமாகவில்லையே, இதற்குள்ளாக நான் மரிக்கவா? ஐயோ, இந்த வருஷத்தில் நான் மரிப்பது எனக்குப் பிரியமேயில்லை என்று நீ சொல்லுவாயானால் கர்த்தருக்கு உன்னைப் பூரணமாய்ப் பிரதிஷ்டைசெய்யும்படியாக உன்னைக் கேட்கிறேன். உன் சகல குறைவுகள் நீங்கிப்போகவும் கிறிஸ்துவுக்குள் நீ ஆசீர்வதிக்கப்பட்டு அநேகருக்கு நீ ஆசீர்வாதமாயிருக்கத்தக்கதாக இந்தப் புது வருஷத்தில் உன்னை கர்த்தருக்கு முற்றிலுமாய் கையளித்துவிடு. இந்தப் பாக்கியமான ஜீவியத்துக்குத் தடையாயிருக்கக்கூடிய பாவங்களையும் சந்தேகமான காரியங்களையும் மனதார விட்டு விலகு. உன்னுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவோடும் இருக்குமானால் ஜீவலோகத்தில் அல்லவா நீ பிழைப்பாய். மரணம் என்பது உனக்கு ஒரு பொருட்டல்லவே. பாதாளம் என்பதை நீ நினைக்கமாட்டாயே. இங்கிலீஷில் ஒரு நல்ல பாட்டு இருக்கிறது. அதை விசுவாசியின் ஜெயகீதம் என்று சொல்லலாம். தமிழில் இல்லாததினால் இங்கிலீஷில் இரண்டு அடிகளைச்சொல்லி முடிக்கிறேன்.

For me be it Christ, be it Christ hence to live!
If Jordon above me shall roll,
No pang shall be mine, for in death as in life
Thou wilt whisper Thy peace to my soul.
'It is well, It is well with my soul'.

But Lord, tis for Thee, for Thy coming we wait;
The sky, *not the grave*, is our goal;



Oh, trump of the angel! Oh, voice of the Lord!
Blessed hope! blessed rest of my soul!
'It is well, it is well with my soul' &c.

## 'ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான்' யோ. 3: 3.

பழைய ஏற்பாட்டுக் காலத்தில், யூத ஜனங்கள் கட்டாயமாய்ச் செய்யவேண்டிய சில காரியங்கள் இருந்தன. யூதர்களென்றாலும், கர்த்தருடைய ஜனங்கள் என்று அழைக்கப்பட்டாலும் தங்கள் சொந்த இஷ்டத்தின்படி நடக்க இடமில்லை. இரண்டொரு காரியங்கள் அவர்களுக்கு இன்றியமையாத அவசியம். திருஷ்டாந்தமாக (1) விருத்தசேதனம் பண்ணவேண்டியது தீராத அவசியம். பிறந்த எட்டாம் நாளிலே கத்தியைக்கொண்டு பிள்ளையை விருத்தசேதனம் பண்ணவேண்டும். அதைச் செய்யாமற்போனால் மோசம் வரும். மோசே என்பவன் அந்நிய ஜாதியான ஸ்திரீயைக் கலியாணஞ் செய்ததினாலே, பிறந்த மகனை விருத்தசேதனம்பண்ண அவன் மனைவிக்கு மனமில்லை. அதினாலே உண்டான மோசம் என்ன? வழியில் தங்குமிடத்தில் கர்த்தர் அவனுக்கு எதிர்ப்பட்டு அவனைக் கொல்லப்பார்த்தார் (யாத். 4: 24.) பார்த்தீர்களா? இஸ்ரவேலரில் முக்கியமான மனுஷன், விசேஷித்த சனத்துக்கும் சலாக்கியத்துக்கும் அழைக்கப்பட்டவன்; யூத ஜனங்களை அடிமைத்தனத்திலிருந்து மீட்டு ரக்ஷிக்க அதிகாரம் பெற்றவன் என்றாலும் தன் மைந்தனை விருத்தசேதனம் பண்ணாமையினால் தேவன் அவனைக் கொல்ல எத்தனித்தார். புருஷனுடைய ஜீவனைக் காப்பாற்றுவதற்கு அவன் மனைவி சிப்போராள் உடனே கருக்கான கல்லை எடுத்து தன் புத்திரனை விருத்தசேனம் பண்ணிவிட்டாள். கட்டாயமாய்ச் செய்யவேண்டுமென்று கர்த்தர் சொல்லுகிற காரியத்தைச் செய்யாமற்போனால் மோசமும் மரணமும்வரும். (2) பஸ்காப்பண்டிகையை ஆசரிக்கவேண்டியது இன்றியமையாத அவசியம். 'பஸ்காவை ஆசரிக்காதேபோனால் அந்த ஆத்துமா, தன் ஜனத்தாரில் இராமல் அறுப்புண்டுபோவான் (எண். 9: 13.) பிரபு ஆனாலும் பிச்சைக்காரனானாலும் கோத்திரத்தலைவனானாலும் காசில்லாதவனானாலும் ஆட்டுக்குட்டியை அடித்து அதின் இரத்தம் சிந்தி அதின் மாம்சத்தைச் சாப்பிடாமற்போனால் கனமோசம் அடைவான் என்பது நிச்சயம். நல்லது அந்தக் கண்டிப்பான காலமெல்லாம் போய் விட்டது இது கிருபையின் காலம் என்று சொல்லுவீர்களோ? அப்படிச் சாக்குப்போக்குச் சொல்லவேண்டாம். இந்த ரக்ஷணிய காலத்திலும் இன்றியமையாத அவசியமான சில காரியங்கள் உண்டு. விசேஷமாய் 3 காரியங்கள் நமக்குத் தீராத அவசியம் என்று வேத வசனங்களைக்கொண்டு

ரூபிக்கிறேன். அந்த 3 காரியங்களைச் செய்யாமற்போனால் நம்மில் ஒருவனும் ரட்சிக்கப்படமாட்டான்.

1. மனந்திரும்பவேண்டியது தீராத அவசியம். 'நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள்' லூக் 13: 35 இது சத்தியமே சத்தியம் என்று காட்டும்படிக்கு ஒரு விசை மாத்திரமல்ல இரண்டு விசை சொல்லியிருக்கிறார். இரண்டு பயங்கரமான சம்பவங்கள் நடந்திருந்தன. (a) கலிலேயா நாட்டிலிருந்து அநேகம் ஜனங்கள் கூடாரப்பண்டிகையை ஆசரிக்கும்படி எருசலேம் தேவாலயத்திற்குப் போனதிலே, அவர்களுக்கும் ரோமருடைய சேவகருக்கும் கலகம் உண்டாயிற்று. அப்போது ரோம தலைவனாகிய பிலாத்து என்பவன் போர்ச்சேவகரை அனுப்பி, அந்தக் கலிலேயர் தேவாலயத்தில் பலி செலுத்துகையில் அவர்கள் எல்லாரையும் வெட்டிப்போட்டு அவர்கள் ரத்தத்தை அவர்களுடைய பலிகளோடு கலந்திருந்தான். இந்தப் பெரிய ஆபத்தைப்பற்றி இயேசுநாதருக்குத் தெரியப்படுத்தும்போது, அவர் ஜனங்களைக்கண்டித்து உணர்த்தி, 'அப்படிப்பட்டவைகள் சம்பவித்ததினாலே மற்றெல்லாக் கலிலேயரைப் பார்க்கிலும் அவர்கள் பாவிகளாயிருந்தார்கள் என்று நினைக்கிறீர்களோ'.... என்றார். (b) சீலோவாமிலே ஒரு பெரிய கோபுரம் கட்டப்பட்டிருந்தது. பொந்தியபிலாத்து அலங்காரத்துக்காகவோ வேறே முகாந்தரத்துக்காகவோ அதைக் கட்டுவித்தானோ. ஒருநாள் திடீரென்று அது விழுந்துவிட்டதில் அதைக் கட்ட உதவிசெய்த யூதரில் 18 பெயர் மாண்டுபோனார்கள். அந்நிய ஜாதியார் பரிசுத்த நகரத்தில் கட்டுமான வேலைசெய்யும்போது யூதர்கள் உதவி செய்ததினாலே அது தேவ செயலாய் நேரிட்ட தகுந்த தண்டனை என்று ஜனக்கள் அபிப்பிராயப்பட்டார்கள். ஆண்டவரோ, 'எருசலேமில் குடியிருக்கிற மனுஷரெல்லாரிலும் அவர்கள் குற்றவாளிகளாயிருந்தார்கள் என்று நினைக்கிறீர்களோ......'என்றார். ஆ இதைக் கவனித்துக்கொள்ளுங்கள். அருமை ரக்ஷகர் எச்சரித்துச்சொன்னபிரகாரமே யூதருடைய காரியம் பின்பு நடந்தது. அவர்களில் மிச்சமானபேர் மனந்திரும்பவில்லை. தங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தி வந்தார்கள். தங்கள் பாவங்களில் நிலைத்திருந்தார்கள். ஆகையால் தேவன் அவர்களுடைய பரிசுத்த நகரத்தை முற்றிலும் அழித்து அவர்களுடைய செழிப்பான தேசத்தைப் பாழாக்கி அவர்களைப் பூமியெங்கும் சிதறடித்துத் தண்டித்துப் போட்டார்.

பிரியமான சிநேகிதரே! உங்களையும் பார்த்து ஆண்டவர் இப்படிப் பேசுகிறார். பாவத்தை விட்டுவிடவேண்டும், மனந்திரும்பவேண்டும், சீர்ப்படவேண்டும் பாவம் செய்துசெய்து அப்புறம் மோட்சத்துக்குப்போகலாம் என்று நினையாதேயுங்கள். மாம்ச சிந்தை, உலக சிந்தை, மேட்டிமைச் சிந்தை இவைகளைப் பேணிக்கொண்டு பின்பு நல்லகதி அடையலாமென்று யோசியாதேயுங்கள். சகேயு என்பவன் அநியாயம்பண்ணி ஜனங்களை



வஞ்சித்து பணங்களை கட்டாயமாக அபகரித்துக்கொள்ளுமட்டும் அவனுக்கு ரக்ஷிப்பில்லை. அதெல்லாவற்றையும் விட்டுவிட்டு அநியாயமாய் வாங்கினதை நாலத்தனையாகச் செலுத்துகிறேன்' என்று ஒப்புக்கொண்டு இயேசு ரக்ஷகரை ஏற்றுக்கொண்ட பின்பு அல்லவா—'இந்த வீட்டுக்கு ரக்ஷிப்பு வந்தது' என்று ஆசீர்வாதமான வார்த்தையைக் கேட்டான். பாவமுள்ள ஸ்திரீ சோரமார்க்கமாய்ப்போய் விபசாரம் செய்கையில் அவளுக்குப் பாவ மன்னிப்புக்கிடையாது. துன்மார்க்கத்தை முற்றிலும் விட்டு, மனந்திரும்பி ரக்ஷகருடைய பாதத்தில்வந்து மனம் கசிந்து கண்ணீர் சொரிந்து பச்சாத்தாபம் காட்டும்போது அவள் 'உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது. உன் விசுவாசம் உன்னை ரட்சித்தது, சமாதானத்தோடே போ' என்ற அமிர்த வசனம் அவள் காதில் விழுந்தது. சகோதரரே! ஒரு கையினாலே பாவத்தையும் மறு கையாலே ரட்சிப்பையும் பிடித்துக்கொள்வது கூடாத காரியம். 'தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான் அவைகளை அறிக்கைசெய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்.' (நீதி. 28. 13: எரே. 7: 1—11).

(இன்னும் வரும்)

## அத்தியக்ஷரவர்களின் புதுவருஷ பிரசங்கம்

நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள். நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன். நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால் அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள். பரி. யோவான் 13: 34, 35.

புதுவருஷப்பிறப்பன்று ஓர் புதிதான கட்டளை நமக்குக் கொடுக்கப்படுகிறது. ஒருவகையாய்ப் பார்த்தால் ஜனுவரி மாசம் முதலாம் தேதியிதான் வருஷப்பிறப்பல்ல. விசுவாசிக்கு ஒவ்வொருநாளும் ஓர் வருஷப்பிறப்பென்று சொல்லலாம். அதுபோல இந்த வாக்கியத்தில் சொல்லப்பட்ட 'ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்' என்பது ஓர் புதிதான கட்டளையல்ல. பழைய ஏற்பாட்டின் காலத்திலும் 'உன்னைப்போல உன் பிறனையும் சிநேகிப்பாயாக' என்று கட்டளை கொடுக்கப்பட்டிருந்தது. அப்படியானால் இந்தக் கட்டளையை ரக்ஷகர் ஏன் புதிதான கட்டளையென்று சொல்லுகிறார்? இது ஓர் புதுக்கருத்தோடு சொல்லப்படுகிறது. 'நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல' என்பதைக் கவனித்தால் இரண்டு காரணங்களால் இக்கட்டளை புதுக்கருத்துள்ளதாயிருக்கிறது என்று பார்க்கலாம்.

I. தேவன் மனுஷனானார். ஆகையால் இக்கட்டளைக்குப் புதுக் கருத்துண்டாயிருக்கிறது. தேவ அன்பின் உன்னதம் இதுவே. மனுஷஜாதியின் சகல பாவத்தையும் பெலவீனத்தையும் அவர் தமமேல் ஏற்றுக்

கொண்டு அவர்களை மீட்கும்படி தம்மைத்தாமே ஒப்புக்கொடுக்கும்படி தாம் மனுஷனை இவ்வன்பினாலே இக்கட்டளை புதிதாயிருக்கிறது. சுய வெறுப்புக்கு இதுபோன்ற திருஷ்டாந்தம் இதற்கு முன்னிருந்ததுமில்லை. இனிமேல் வரப்போகிறதுமில்லை. அதுவே ஒப்பற்றது. தேவன் மனுஷனது மாத்திரமல்ல, மனுஷன் தேவ சுபாவத்தில் பங்கடைவதும் இவ்வன்பிலடங்கியிருக்கிறது. மனுஷன் தேவனைப்போலாகவேண்டும். தேவனைப்போல மனுஷனும் அன்பாயிராவிட்டால், மனுஷனும் மெய்யான மனுஷன் என்றழைக்கப்படப் பாத்திரனல்ல. ஆகையால் இந்தக் கட்டளை புதிதான கட்டளையென்பது தெளிவாயிருக்கிறது.

II. தேவன் தமது ஆவியை மனுஷனுக்குக் கொடுப்பதாலும் இக்கட்டளை புதிதாகிறது. தேவன் தமது ஆவியை மனுஷனுக்குக் கொடுக்கிறார். தேவ ஆவியானவர் அன்பாகவேயிருக்கிறார். ஆகையால் தேவன் தமது அன்பை மனுஷனுக்குக் கொடுக்கிறார். தேவ ஆவியானவர் ஓர்வித உணர்ச்சியை அல்லது எழுப்புதலை வேளாவேளைகளில் உண்டாக்குகிறவரல்ல. ஓர் ஜீவியத்தையே எப்போதும் நம்மில் தருகிறவர். அவர் கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கிறார்.

இயேசுநாதர் இந்த ஆவியினாலே நடத்தப்பட்டார்.

(a) அவர் சோதிக்கப்படும்படி ஆவியானவரால் கொண்டுபோகப்பட்டார். சாத்தான் அவர் தேவனைப்போல சிந்திக்க, தேவனைப்போல நடந்துகொள்ளவிடாமல் வேறுவிதமாய்ச் சிந்திக்கவும் பேசவும் ஏவினான். ஆனால் அவரோ இந்த விஷயத்தில் அவனுக்கு எதிர்த்து நின்று அவன் சோதித்த அந்த விஷயங்களிலெல்லாம் தேவனுடைய நினைவுகள் எவை. அவருடைய சித்தம் இன்னது என்பதையே உணர்ந்தவராய் அவனை ஜெயித்தார்.

(b) ஜெபத்தில் தேவ ஆவியினால் நடத்தப்பட்டார். இராமுழுவதும் ஜெபத்தில் தரித்திருந்தார். ஜெபமானது சிலர் எண்ணுகிறபடி நமக்கு வேண்டிய காரியங்களுக்காக ஓர் நீளமான ஜாபிதா செய்துகொண்டு அவரிடத்தில் கேட்பதல்ல. ஜெபம் என்றால் சிநேகிதன் சிநேகிதனோடு செய்யும் இன்ப சம்பாஷணை. இவ்விதமாகத்தான் ரட்சகர் தமது பிதாவோடு சம்பாஷணை செய்தார்.

(c) அவர் பிரசங்கத்தில் அவருடைய சம்பாஷணைகளில் தேவாவியினால் நடத்தப்பட்டார். சமாரியாவின் வழியாய்ப் போகும்போது இளைப்படைந்தவராய் கிணற்றினருகே உட்கார்ந்தார். சமாரிய ஸ்திரீ வந்தாள். யூதர் சமாரியரோடு பேசமாட்டார்கள். இயேசுநாதரோ அவளோடு சம்பாஷித்து அவளுடைய பாவ நிலைமையை எடுத்துக்காட்டி அன்புகூர்ந்து அவளை மீட்டுக்கொண்டார்.

(d) அவருடைய அனுதாபம், பக்ஷம் இவற்றில் தேவ ஆவியினால் நடத்தப்பட்டார். யூதர்கள் ஆயக்காரரோடும் பாவிகளோடும் எவ்வித



மும் கலக்கமாட்டார்கள். இவரோ அவர்களோடு சாப்பிட்டார். ஜனங்கள் ஆகாரமில்லாதிருக்கக்கண்டு அவர்களுக்காகப் பரிதபித்து ஆகாரங்கொடுத்தார்.

(e) அவருடைய மரணத்திலும் அந்த ஆவியினாலே நடத்தப்பட்டு தம்மைக் கொலை செய்தவர்களுக்காக வேண்டிக்கொண்டு, தமது வலது பாரிசத்துக் கள்ளனுக்கும் மன்னிப்புக் கூறினார். இவ்விதமாகத் தேவ ஆவியினால் நடத்தப்பட்டு தேவ அன்பை விளங்கப்பண்ணினார். இவ்விதமான கிறிஸ்துவின் சிந்தை அவருக்குமாத்திரம் உரியதல்ல. கிறிஸ்தவன் ஒவ்வொருவனுக்கும் உரியதே. நாமும் இந்தப் புதிதான கட்டளையை ஏற்றுக்கொண்டால் நாம் அவரைப்போல ஜீவிக்கலாம்.

III. நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால் அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள்'. இவ்வித அன்பு நம்மிலிருக்கிறதை மற்றவர்கள் அறிந்திருக்கிறார்களா? அன்பே உன் ஜீவியத்தின் லக்ஷணமாயிருக்கிறதா? அன்பின் ஜீவியத்தில் ஜெபம், சுவிசேஷ வாஞ்சை, பிறரிடத்தில் பக்ஷம், சுயவெறுப்பு இவைகளெல்லாம் அடங்கியிருக்கிறது.

ஆகையால் 'நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்' என்ற புதிய கட்டளையை இந்தப் புது வருஷத்தில் நமக்குச் சட்டவாக்கியமாக (Motto) வைத்துக்கொள்வோமாக.

## சிறந்த தேவஊழியன்

தேவாலயத்திற்கு உகந்த ஓர் சிறந்த ஊழியனின் காட்சியை, ஏசாயா தீர்க்கதரிசியின் புஸ்தகம் 6-ம் அதிகாரத்தில் காணலாம். அங்கே தீர்க்கதரிசிக்கு அளிக்கப்பட்ட தேவ மகிமையின் காட்சி ஒவ்வொரு தேவ ஊழியனிலும் நடைபெறவேண்டியது அவசியம். அவை யென்னவென்று பார்ப்போம்.

முதலாவது, தேவதரிசனம் பெற்றவன். தீர்க்கதரிசி தேவ மகத்துவத்தையும், அவரது திவ்ய பரிசுத்தத்தையும், அவர் எவ்வளவாய்ப் பயபக்திக்கும் வணக்கத்திற்கும் உரியவர் என்பதையும் தெளிவாகக் கண்டுகொண்டான். மோசேயின் மகத்துவ ஊழியத்திற்குமுன் நடந்ததும் இதுவே. முட்செடியில் தேவமகிமையின் தரிசனத்தை அடைந்தான். தான் சேவிக்கும் கடவுள் எவ்வளவு பரிசுத்தமுள்ளவர், உருக்கமுள்ளவர், அதிசயங்களை நடப்பிக்கக்கூடியவர் என்பதைக் கண்டுகொண்டான். அவ்விதமாகவே பரி. பவுல் அப்போஸ்தலன் பலத்த சாட்சியாய் விளங்குமுன் பரமதரிசனத்தை அடைந்தான். தேவனுடைய வல்லமையைக்கண்டான். அதுவே அவன் தைரியசாட்சி பகருவதற்கு அனுகூலமாயிருந்தது. தான் தெய்வத்தைக் காணாத தேவஊழியன் எப்படி அவரைப்பற்றிச் சாட்சியிடக்கூடும்?

அவரைச் சேவிக்கக்கூடும்? மற்றப்படி அவனுடைய சாட்சி பொய்சாட்சியாகுமல்லவா? நீ தேவதரிசனம் பெற்றவனா?

இரண்டாவது, தன்னை அறிந்தவன். அதாவது தன் நிர்ப்பந்த நிலைமையை உணர்ந்தவன். தேவன் பார்க்கிறபிரகாரம் தன்னைக் கண்டுகொண்டவன். தேவமகிமையைக் கண்டவுடன் தன்னை ஏறிட்டுப் பார்க்கிறான். தான் எவ்வளவு நிர்ப்பந்தன், அவருடைய பரிசுத்த ஊழியத்தைச்செய்ய எவ்வளவாய் அபாத்திரன் என்று உணருகிறான். 'ஐயோ அதமானேன் நான் அசுத்த உதடுகளுள்ள மனுஷன்' என்று கதறுகிறான். தேவமகிமையைக் கண்டவன் மாத்திரம் இப்படிச் செய்யமுடியும். இவ்விதமாகவே தேவமகிமையைக் கண்ட மோசேயும், யோபும் தங்களைத் தாழ்த்துகிறார்கள். நாங்கள் அபாத்திரர் என்று அறிக்கையிடுகிறார்கள். 'தன்னை அறிந்தவன் தலைவனை அறிவான்' என்பது பழமொழியல்லவா? மேன்மை பாராட்ட இடமுண்டா? தன்னைப்பற்றிப் பெருமையாய்ப்பேச வழியுண்டா? தெய்வ வெளிச்சத்திற்கு முன் நம்மைச் சோதித்தறிவோமாக. தேவன் பார்க்கிறபிரகாரம் நாம் நம்மைக் கண்டுகொள்ளும்படி அவருடைய கிருபைக்காகக் கெஞ்சுவோமாக. சங்கீதக்காரனோடு சேர்ந்து 'தேவனே என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை அறிந்துகொள்ளும்: என்னைச் சோதித்து, என் சிந்தனைகளை அறிந்துகொள்ளும். வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து, நித்திய வழியிலே என்னை நடத்தும்' என்று கெஞ்சுவோமாக.

மூன்றாவது, சுத்திகரிக்கப்பட்டவன். தான் அசுத்தன் என்று உணர்ந்து தேவனிடம் அறிக்கையிட்ட ஏசாயாவுக்குச் செய்யப்பட்டதைப் பாருங்கள். அக்கினிக்குறட்டால் தொட்டு சுத்தமாக்குகிறார். அதன்பின் தான் பரிசுத்த ஊழியத்திற்குப் பாத்திரனாகிறான். அக்கினிமயமான நாவுகள் போலப் பிரிந்திருக்கும் நாவுகள் வந்து அமர்ந்தபின்தான் அதாவது ஆவியின் அபிஷேகம் பெற்றபின்தான், அப்போஸ்தலர் தைரியசாட்சி பகர்ந்தார்கள். தைரியத்தையும், வாக்கு வல்லபத்தையும் அருளும் ஆவியினால் சுத்திகரிக்கப்பட்ட பிற்பாடுதான் ஒரு தேவஊழியன் சிறந்த ஊழியம் செய்யமுடியும். சுத்திகரிப்பின் ஜீவியம் மகா அவசியம். மெய்யான தெய்வம் அசுத்தனையும் அபாத்திரனையும் தமது நாமமகிமைக்கென்று உபயோகிக்கிறார். ஆனால் அந்த அசுத்தனை, அபாத்திரவானை சுத்தப்படுத்தப் பிற்பாடுதான் உபயோகிக்கிறார். அசுத்த பாத்திரங்களைத் தேவன் மேன்மையான ஊழியத்திற்கென்று ஒருபோதும் உபயோகிக்கிறதில்லை. 'ஒருவன் தன்னைச் சுத்திகரித்துக்கொண்டால், அவன் பரிசுத்தமாக்கப்பட்டதும், எஜமானுக்கு உபயோகமானதும், எந்த நற்கிரியைக்கும் ஆயத்தமாக்கப்பட்டதுமான கனத்துக்குரிய பாத்திரமாயிருப்பான்'.

Printed at the Palamcottah Printing Press, Palamcottah and published by the Chirstian Brotherhood Association, Tinnevelly.

February 1917 Registered No. M. 163.

# The Water of Life

# ஜீவத்தண்ணீர்

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்.' யோவான் 7: 38.

Vol. XVIII பெப்ருவரி 1917

## 'ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான்' யோ. 3. 3. (தொடர்ச்சி

I (a) ஓய்வுநாளை மீறுகிறவர்களே, இந்தப்பாவத்தை விட்டுவிடுங்கள். இஸ்ரவேல ஜனங்கள் வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணுகையில் நடந்த சரித்திரம் தெரியாதா? ஒரு மனுஷன் ஓய்வுநாளில் விறகுகளைப் பொறுக்கிக்கொள்ளப் போனான். தேவனுடைய உத்திரவின்பேரில் அவனைப் பாளயத்திற்குப் புறம்பேகொண்டுபோய் கல்லெறிந்தார்கள். அவன் செத்தான். எண். 15: 36. நீங்கள் மனந்திரும்பாமற்போனால் Etc. திருஷ்டாந்தம். சீமை தேசத்தில் நான் ஒருவிசை பிரசங்கம்பண்ணும்போது, அந்தப் பிரசங்கத்தைக்கேட்ட ஓர் மனிதன் தன் பாவத்தை உணர்ந்தான். அவனுக்கு ஓர் கெட்ட பழக்கமிருந்தது. என்னவென்றால் ஓய்வுநாளில் கடைவைக்கிறது. தேவாவியானவர் அன்றைக்கு இதுதப்பிதம் அப்பா, விட்டுவிடவேண்டும் என்று கண்டித்து உணர்த்தினார். உடனே வீட்டுக்குப்போய் கடையைப் பூட்டிவிட்டான்.

(b) பொய் சொல்லுகிறவர்களே! பாவத்தை விட்டுவிடுங்கள். கிறிஸ்தவர்கள் என்று சொல்லப்படுகிற உங்களுக்குள்ளே, எத்தனை பொய், எத்தனை புரட்டு, எத்தனை பித்தலாட்டம், பொய்ச் சாட்சி எத்தனை, பொய் ஆணை எத்தனை, பொய்ப் பிரமாணம் எத்தனை, ஐயோ! ஒரு பொய் சொன்னதினிமித்தம் அனனியா சப்பீராள் என்பவர்களுக்கு நேரிட்ட மோசநாசத்தை இன்னமும் உணரவில்லையா! விழுந்து செத்தார்களே! 'நீங்கள் மனந்திரும்பாமற்போனால்' Etc.

(c) பெருமைக்காரரே! பாவத்தை விட்டுவிடுங்கள். ஏரோது ராஜாவினுடைய பயங்கரமான மரணம் உங்களுக்குத் தெரியுமே. தன்னை மேன்மைப்படுத்தும்படி ராஜ வஸ்திரங்களைத் தரித்துக்கொண்டு, டம்பத்தோடும், மகிமையோடும் சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்து ஜனங்களுக்குக் கர்வத்தோடு பிரசங்கம்பண்ணினான். அவர்கள் எல்லாரும் முகஸ்துதியாக அவனைப் புகழ்ந்து பிரியப்படுத்தும்படி 'இது மனுஷ சத்தமல்ல, இது தேவ சத்தம் என்று இச்சகம் பேசும்போது உடனே கர்த்தருடைய தூதன் அவனை அடித்தான். அவன் புழுப்புழுத்துக் கேவலமான மரணமடைந்தானே?' நீங்கள் மனந்திரும்பாமற்போனால் Etc.

(d) தூஷணம் பேசுகிறவர்களே! பாவத்தை விட்டுவிடுங்கள். தூஷணமான வார்த்தைகள் தேவனுக்கு அருவருப்பானதென்று தெரியாதா? 'சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும், மற்ற எந்தத் துர்க்குணமும் உங்களை விட்டு நீங்கக்கடவது. (எபே. 4: 31). தூஷணவார்த்தைகளைப் பேசுகிற புருஷன், ஸ்திரீ, பிள்ளை மோட்சத்துக்குப் போவார்களென்று நினைக்கிறீர்களோ? ஒருபோதுமில்லை. 'வெறியரும் உதாசினரும் . . . . தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை'. (1 கொரி. 6: 10). நான்போய் விசாரித்த ஒரு வியாதியுள்ள பிள்ளை சாகும்பொழுது தூஷணமான வார்த்தைகளைச் சொல்லிச் செத்துப்போனான். 'நீங்கள் மனந்திரும்பாமற்போனால் Etc.

(e) களவு செய்கிறவர்களே! பாவத்தை விட்டுவிடுங்கள். ஆகான் செய்த பாவத்தை மறந்துபோனீர்களா? அவன் பொன்னையும் வஸ்திரங்களையும் திருடித் தன் கூடாரத்தில் புதைத்துவைத்து ஒருவருக்கும் இது தெரியாது என்று புத்தியீனமாய் நினைத்தானே. தேவன் அவன் பாவத்தை வெளியாக்கப்படுத்தி, அவனையும் அவன் வீட்டாரையும் கல்லெறிந்து நாசம்பண்ணக் கட்டளையிட்டாரே. 'நீங்கள் மனந்திரும்பாமற்போனால் Etc. பாளையங்கோட்டை தேவாலயத்திலிருந்து கோவில் சாமான்களைத் திருடின கிறிஸ்தவன் தண்டனைக்குள்ளாகிச் சிறைச்சாலைப் போய்ச்சேர்ந்தான். பிறனுடைய நிலத்தைத் தன் நிலத்தோடு கூட்டிச் சேர்க்கிறது; அடுத்த வீட்டுக்காரனுடைய மரங்களைச் சேர்த்துக்கொள்வது மற்றப்பையனுடைய பெட்டியிலிருந்து பலகாரத்தையாவது பண்டத்தையாவது எடுத்துக்கொள்வது முதலானவைகளை அகற்றிவிடுங்கள்.

(f) கள் குடிக்கிறவர்களே! பாவத்தை விட்டுவிடுங்கள். பாபிலோன் ராஜா தன் பிரபுக்களோடும் வைப்பாட்டிகளோடும் குடித்து வெறித்துக் களியாட்டு செய்துகொண்டிருக்கையில் மனுஷ கைவிரல்கள்தோன்றி, சுவரிலே 'மெனே—மெனே—தெக்கேல்—உப்பார்சின்' என்று எழுதினதே. அன்று ராத்திரியிலே அந்த ராஜா கொலை செய்யப்பட்டானே. நீங்கள் மனந்திரும்பாமற்போனால் Etc. நீ குடிக்கிற கள்ளானது 'முடிவிலே பாம்பைப்போல் கடிக்கும், விரியனைப்போல் தீண்டும்'. நீதி. 23; 32.



(g) பொருளாசைக்காரரே! பாவத்தை விட்டுவிடுங்கள். யூதாஸ் என்பவன் உயர்ந்த சலாக்கியங்களையெல்லாம் பெற்றவன். கிறிஸ்துவோடு இருந்த சீஷன். 30 வெள்ளிக்காசுக்காகத் தன் ரட்சகரை விற்றுப்போட்டான். தன் ஆத்துமாவை நஷ்டப்படுத்தினான். நான்றுகொண்டு செத்தான். 'நீங்கள் மனந்திரும்பாமற்போனால் Etc'. பொருளாசையானது சகல தீமைக்கும் வேராயிருக்கிறது. இழிவான ஆதாயத்துக்காக அண்ணன் தம்பியைக் கெடுக்கிறான்; தம்பியும் தமையனை வஞ்சிக்கிறான்.

சகோதரனே! சகோதரியே! அந்தரங்க பாவங்களையும் விட்டுவிடுங்கள். இல்லாவிட்டால் அது உங்களைப் பின்தொடர்ந்து பிடிக்கும் என்பது நிச்சயம். தேவ ஊழியக்காரன் ஒருவர் காட்டில் நடந்துபோகையில் ஒரு மனுஷனைக் கண்டு அவனிடத்தில் பேய்ப்பேசி, நீ ரட்சிக்கப்பட்டவனா? என்று கேட்டார். அதற்கு அவன் இல்லை ஐயா என்று சொல்லி, தன் சரித்திரத்தை விபரிக்க ஆரம்பித்தான். நான் வாலிபனாயிருக்கும்போது தேவாலயத்தில் ஒரு பிரசங்கத்தைக் கேட்டேன். என் மனம் அசைந்தது. என் பாவத்தை உணர்ந்தேன். ஆனாலும் அதை நான் விட்டுவிடவில்லை. சில வருஷங்களுக்குப்பின் வேறே பட்டணத்துக்குப்போய் வாசஞ்செய்ய நேரிட்டது. அங்கேயும் தேவாலயத்துக்குப் போனேன். குருவானவர் அந்த வசனத்தை எடுத்துக்காட்டி பலமாய்ப் பிரசங்கித்தார். எனக்குப் பயமுண்டாயிற்று. என் இருதயம் நடுங்கிற்று. அப்போதாவது என் பாவத்தை விட்டுவிட்டேனில்லை. இன்னமும் சில வருஷங்கள் சென்றபின்பு மூன்றாவது ஒரு இடத்தில் நான் குடியேறப்போனேன். அங்கேயும் கோவிலில் நான் போகும்போது அதே வாக்கியத்தின்பேரில் போதனை நடந்தது. தேவன் இங்கேயும் என்னைக் கண்டுபிடித்தார் என்று உணர்ந்தேன். ஆனால் பாவத்தை விட்டுவிட எனக்கு மனமில்லை. இப்போது என் இருதயம் இந்தக் கல்லைப்போலவே கடினப்பட்டுப் போயிற்று என்று தெரிவித்தான். ஆ! மனந்திரும்பிப் பாவத்தை விட்டுவிடுவது இன்றியமையாத அவசியம்.

II. (a) மறுபடியும் பிறக்கவேண்டியது தீராத அவசியம். (யோவான் 3: 3. 5). மனந்திரும்பிப் பாவத்தை விட்டுவிடவேண்டியது எப்படி அவசியமோ அப்படியே மறுபிறப்பை அடைந்து மனந்திரும்பவேண்டும் என்று லூக். 13: 3, 5-ல் சொல்வதுபோல இங்கேயும் ஒரு தடவை மாத்திரமல்ல, இரண்டுதடவையும் மறுபடியும் பிறக்கவேண்டும் என்கிறார். ஆகையினாலே இது அவசியமே அவசியம் என்று அறியலாம். இது உங்கள் எல்லாருக்கும் நன்றாய்த் தெரிந்த சத்திய உபதேசம். ஆனாலும் இந்த அனுபோகம் எல்லாருக்கும் உண்டா?

சீமை தேசத்தில் ஒரு குருவானவர் பிரசங்கம் செய்யும்போது பயங்கரமான ஒரு வார்த்தை சபையாருக்குச் சொன்னார். என்னவென்றால் 'சபைவாசிகளில் மிச்சமானபேர் குணப்படாத கிறிஸ்தவர்களாயிருப்பார்கள்'

என்று தம் அபிப்பிராயத்தைத் தெரியப்படுத்தினார். 'ஐயோ! வேதத்துக்குவந்து உயர்ந்த சலாக்கியங்களைப்பெற்று பிற்பாடு நரகவாசிகளானால் எவ்வளவோ பரிதாபம். 'தன் எஜமானுடைய சித்தத்தை அறிந்தும், ஆயத்தமாயிராமலும் அவனுடைய சித்தத்தின்படி செய்யாமலும் இருந்த ஊழியக்காரன் அநேக அடிகளால் அடிக்கப்படுவான்'. (லூக். 12: 47). இதிலே மோசம் போகவேண்டாம். அநேகம்பேர் இதிலே தவறிப் போகிறார்கள். நாங்கள் கிறிஸ்தவர்கள், ஆகையால் மோசம்வராது என்று தங்களைத் தேற்றிக்கொள்ளுகிறார்கள். ஆ தோ! தேவனுடைய சத்திய வசனத்தைக்கேட்டு யோசித்துக்கொள்ளுங்கள். ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் அந்தக் காரியத்தை விளக்கிக்காட்ட பிரயாசப்படுவேன்.

1. கிறிஸ்துமார்க்கம் வேறே, மறுபிறப்பு வேறே. மனிதர் பேசுகிறபிரகாரமாய் இப்போது பேசுகிறேன். நிசந்தான். பேருக்கு மாத்திரம் கிறிஸ்துமார்க்கமாயிருப்பது கிறிஸ்துமார்க்கமில்லை. ஆனாலும் நமக்குள் வழங்குகிற பேச்சின்படி கிறிஸ்துமார்க்கம் என்று சொல்லப்படுவது வேறே மறுபிறப்பு வேறே. Illustration. என்னைப்படித்த ஒரு வாலிபனை நீ குணப்பட்டிருக்கிறாயா என்று நாங்கள் கேட்டதற்கு, நான் கலியாணச் சொந்தவன் என்று சொன்னான். எத்தனைவிசை கேட்டாலும் அவ்வளவுதான் சொல்ல அவனுக்குத் தெரியும். அப்படிப்போல உங்களில் அநேகம்பேரும் நினைக்கிறதும் பேசுகிறதுமுண்டு. நான் வேதக்காரன், கிறிஸ்துமார்க்கத்தில் பிறந்தேன், கிறிஸ்துமார்க்கத்தில் வளர்ந்தேன், என் தகப்பன் பாட்டன் பூட்டன் எல்லாரும் கிறிஸ்தவர்கள்; நான் அஞ்ஞானியல்ல, நான் பேய்களை வணங்குகிறதில்லை, கோவிலுக்கு வருகிறேன், சங்கப் பணம் கொடுக்கிறேன்; மார்க்கவிஷயங்களில் எனக்கு அறிவுண்டு, அபிமானமுண்டு, வைராக்கியமுண்டு, ஆனாலும் என்னிடத்தில் குறைவு என்ன என்று சொல்லுகிறார்கள். ஆகா! மோசம்போகாதிருங்கள். சிநேகிதனே! நீ வேதக்காரனாயுமிருக்கலாம். உன் பந்துக்களெல்லாம் கிறிஸ்தவர்களாயிருக்கலாம், உன் தகப்பனோ மைத்துனனோ மற்ற ஆனதாரோ உபதேசியாராயிருக்கலாம். நீயும் விசேஷ உத்தியோகஸ்தனாயிருக்கலாம். ஆனாலும் நீ மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டாய் (யோவான் 1: 13). 'அவர்கள் இரத்தத்தினாலாவது, மாம்ச சித்தத்தினாலாவது, புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல் தேவனாலே பிறந்தவர்கள்' (a) இரத்தத்தினாலல்ல: என் தாய் தகப்பன்மார் கிறிஸ்தவர்கள், பக்திமான்கள், ஆகையால் நானும் குணப்பட்ட கிறிஸ்தவன் (ள்) என்று நினையாதேயுங்கள். மறுபிறப்பு இரத்தப் போக்காய் நடக்காது. சாமுவேல் மகா பக்திமான் என்றாலும் அவன் பிள்ளைகள் எல்லாரும் துஷ்டர்கள் என்று அறிவோமே. தாவீது அரசன் சிறந்த பக்தன். அவன் பெற்ற பிள்ளைகளில் அநேகர் கெட்டுப்போனார்கள், என்று தெரியாதா? இந்த இரத்தப்போக்காய் நமமுடைய பெற்றோரி



டத்திலிருந்து ஜென்மப்பாவம் கிடைக்குமேயல்லாமல் மறுபிறப்புக் கிடையாது.

(b) மாம்ச சித்தத்தினாலுமல்ல. அஞ்ஞானமார்க்கத்தில் யாதொரு நன்மையுமில்லை என்று கண்டு வேதத்திற்கு வந்திருக்கிறாயாக்கும், நல்லவனாகவேண்டும், அறிவும் வேண்டும், நாகரீகமும் வேண்டும் என்று கிறிஸ்தவனானாயாக்கும்; கலியாணஞ் செய்யாதிருக்கும்போது கிறிஸ்து மார்க்கத்தில் நல்ல பெண் கிடைக்குமென்று வந்துசேர்ந்தாயாக்கும். இதெல்லாம் மாம்சசித்தம்,—மறுபிறப்பல்ல. அப்படியிலே உன் காரியம் முடிந்துபோனதென்றால், நீ மெத்த நிர்ப்பாக்கியன்; தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டாய், அல்லது வேதத்தில் பிறந்து வளர்ந்து நல்லவனாய் நடப்பேன்; பொய் சொல்லமாட்டேன் என்று தீர்மானம் பண்ணினாயாக்கும்; நல்ல காரியந்தான். ஆனால் மாம்ச சித்தம். முடியாது—முடியாது. அந்த வாலிப பிரபு இயேசுநாதரண்டையில் வந்து நல்ல தீர்மானம்பண்ணினவனாக 'நல்ல போதகரே, நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக்கொள்ள நான் என்ன செய்யவேண்டும் என்று கேட்டான்' (மாற். 10: 17). அவன் ஊக்கத்தைப் பாருங்கள், ஓடிவந்தான். ஆனால் எல்லாம் மாம்சசித்தம். அவன் மனமாறவில்லை. பொருளாசையை எடுத்துவிட்டு புது மனுஷனாக அவனுக்குப் பிரியமில்லை. துக்கத்தோடே போய் விட்டான்'.

(c) புருஷனுடைய சித்தத்தினாலுமல்ல. நான் குணப்படவேண்டும் என்று பெரியோர் விரும்புகிறார்கள். ஆகையால் அவர்களுக்குப் பிரியமுண்டாக பக்திவேஷம்போட்டு கிறிஸ்தவனைக் காட்டுவேன் என்று சொல்லாதேயுங்கள். ஐயாமார்கள் பிரசங்கம்பண்ணினார்கள், பலவித நல்ல பலனைக்கேட்டுவந்தார்கள். ஆகையால் வேதத்திற்குவந்து கிறிஸ்தவர்களானோம் என்றிருக்கிறீர்களா? வேண்டாம்! வேண்டாம்! எவ்வளவோ பரிசுத்தவான்களென்றாலும் புருஷனுடைய சித்தத்தால் முடியாது—முடியாது! தேவனாலே பிறக்கவேண்டும். சீர்கெட்டவனாக, ஒன்றுமில்லாதவனாக, சண்டாளப்பாவியாக, யேசுவின் பாதத்தில் வந்து விழுந்து அவனவன் பாவம் கழுவப்பட்டு மனம்மாறி புது சிருஷ்டியாக வேண்டும். ஐயோ! வேதத்திலிருக்கிற ஏராளமான ஜனங்கள் மறுபடியும் பிறக்கவில்லையென்பது நிச்சயம். Illustration அப்சலோம் என்பவன் அந்நிய தேசத்திலிருந்து திரும்பி வந்தபிற்பாடு ராஜாவின் முகத்தைக் காணாமலே இரண்டு வருஷம் எருசலேமிலே குடியிருந்தான். (2 சாமு. 14: 28). பரிசுத்த நகரத்தில் வாசம்பண்ணினான், ராஜாவினுடைய ஜனங்களோடே கலந்துபேசினான், ஆனாலும் ராஜாவின் முகத்தைக்காணவில்லை! அப்படிப் போல வேதத்தில் 2, 5, 10, 20, 30 வருஷமிருக்கலாம். இயேசுவின் முகத்தைக் காணாமலும் இரட்சிப்பை அடையாமலும் இருந்தால் என்ன

பிரயோஜனம். Illustration. குருவேஷம்போட்ட மனுஷன் பார்த்தீர்களா? கிறிஸ்துமார்க்கம்வேறே, மறுபிறப்புவேண்டும். வேதக்காரன் ஆனாலும் மறுபடியும் பிறவாவிட்டால் உனக்கும் அஞ்ஞானிகளுக்கும் ஒரு வித்தியாசம்மாத்திரம் உண்டு. என்னவென்றால் அவர்களுக்குக் கிடைக்கும் ஆக்கினையைவிட உனக்கு பெரிய ஆக்கினை, தண்டனை கிடைக்கும்.

2. ஞானஸ்நானம் வேறே, மறுபிறப்பு வேறே அநேகம்பேர் தாங்கள் ஞானஸ்நானம் பெற்றிருக்கிறதாகவும் ஆகையால் பாவம் நீங்கி மெய்யான கிறிஸ்தவர்களாய் எப்படியும் மோட்சத்திற்குப் போகலாம் என்பதாகவும் சொல்லுகிறார்கள். நிசந்தான். ஞானஸ்நானமானது ஆண்டவராலே ஏற்படுத்தப்பட்ட பரிசுத்த சடங்காயிருக்கிறது. மெய்தான். மெய்மனஸ்தாபத்தோடும் உயிருள்ள விசுவாசத்தோடும், அதைப்பெறுவோமானால் அதில் மிகுந்த பிரயோஜனமும் ஆசீர்வாதமும் உண்டு. ஆனாலும் சரியான வரிசையைப் பார்க்கவேண்டும். விசுவாசமுள்ளவனுக்கு அப்புறம் ஞானஸ்நானம் பெறவேண்டும் என்று கிறிஸ்துநாதர் உத்தரவு தருகிறார் (மாற். 16: 16). 'மனந்திரும்பி' ஞானஸ்நானம் பெறவேண்டும் என்று பேதுரு அப்போஸ்தலன் சொல்லுகிறார் (நட. 2: 28). அதாவது மறுபடியும் பிறந்து பின்பு அதற்கடையாளமாக ஞானஸ்நானம் பெறவேண்டும் என்பது தேவனுடைய கட்டளை. மனிதரோ அதை மாற்றப் பார்க்கிறார்கள். புத்தியீனம்! மோசம்! நம்முடைய ராணியவர்களுக்கு அநேக கோட்டை அரண்மனைகள் உண்டு. கொஞ்சக்காலம் ஒரு கோட்டையில் வாசஞ்செய்து அப்புறம் இன்னொரு அரண்மனையிலும் போய் வசிப்பது அவர்கள் வழக்கம். ராணியவர்கள் ஒரு மாளிகையில் வந்து வாசம் பண்ணும்போது, அதின் மேல்புறத்தின்மேல் கொடியேற்றுவார்கள். ஆனால் அவர்கள் இல்லாத சமையத்தில் கொடியேற்றமாட்டார்கள். அந்தக் கொடியானது தாங்கிவந்ததற்கடையாளம். அதைப் பார்த்தவுடனே ராஜாத்தியவர்கள் இங்கே வந்திருக்கிறார்களென்று அறியலாம். ஆனாலும் அவர்கள் வந்திராத சமயத்தில் கொடியேற்றினால் பித்தலாட்டமல்லவா? ஐயோ! கிறிஸ்தவர் சபையில் அப்படிப்பட்ட பித்தலாட்டம் அதிகம் 'என் இருதயத்தில் பரமராஜா வந்திருக்கிறார்', 'என் மனம் அவருடைய மாளிகையாயிற்று' என்பதற்குக் குறிப்பாக ஞானஸ்நானம் பெறுகிறோம், கொடி ஏற்றுகிறோம், அடையாளங் காட்டுகிறோம் உள்ளபடியோ ராஜா வரவில்லை, மறுபடியும் பிறக்கவில்லை. நம்முடைய இருதயம் வெறும் இருதயம். (நட. 8: 13-21.) சீமோனும் ஞானஸ்நானம் பெற்று பிலிப்பைப் பற்றிக்கொண்டான். (சீமோனே ரக்ஷகனைப் பற்றிக்கொண்டால் தாவிலை) இந்த விஷயத்தில் உனக்குப் பங்குமில்லை, பாகமுமில்லை. ஞானஸ்நானம் பெற்றவன். இரட்சிப்பிலோ அவனுக்குப் பங்குமில்லை பாகமுமில்லை ஞானஸ்நானம் பெற்றவர்களே, எச்சரிக்கையாயிருங்கள்.



3. சீர்திருத்தல் வேறே, மறுபிறப்பு வேறே சிலர் பெரிய பாவங்களை விட்டுவிட்டு சீராக நடந்தால் போதுமென்று நினைக்கிறார்கள். குடிகாரன் குடிவெறியை விட்டுவிட்டால் மறுபடியும் பிறந்தான் என்று சொல்லுகிறார்கள். கிடையாது! ஏரோது ராஜாவைக் கவனித்துப்பாருங்கள். யோவான்ஸ்நானகன் பிரசங்கத்தைக் கேட்டுப் பயந்து 'அவன் யோசனையின்படியே அநேக காரியங்களைச் செய்தான் என்று பார்க்கிறோம்'. (மாற். 6: 20.) அவன் குடிவெறியை விட்டுவிட்டானுக்கும். ஜனங்களைக் கொடுமையாய் நடத்துவதை விட்டுவிட்டானுக்கும். யோவான் யோசனையின்படி அநேக காரியங்களைச் செய்து அநேக பாவங்களை விட்டுவிட்டுத் தன் நடக்கையைச் சீர்திருத்தப் பார்த்திருக்கலாம். குணப்பட்டானோ! விபசாரக்காரனும், கொலைபாதகனும் போய்விட்டான் அல்லவா? இன்னொரு மனுஷனைப்பற்றி வாசிக்கிறோம். அவன் பிரசங்கங்கேட்டதினாலேயோ? வேறே முகாந்தரத்தினாலேயோ? தன் துன்மார்க்கத்தை விட்டுச் சீர்ப்பட்டான். அதைக்கண்டு அசுத்தஆவி கொஞ்சக்காலம் அவனை விட்டுப்போனது. அவனோ மறுபடியும் பிறக்கவில்லை. தன் இருதயத்தில் புது ஜீவனையும் வல்லமையையும் அடையவில்லை. அநேக பாவங்களை அகற்றிவிட்டான். ஆனால் அவன் இருதயம் பழைய இருதயம், புது இருதயமல்ல. அதைக் கொஞ்சம் பெருக்கி ஜோடித்து வைத்தான். ஆனாலும் பழைய இருதயந்தான். நடந்ததென்ன? பிசாசு அங்கே வந்து சுத்தவீடு வெறுமையாகவும் பெருக்கி ஜோடிக்கப்பட்டதாகவும் இருக்கக்கண்டு திரும்பிப்போய் தன்னிலும் பொல்லாத வேறு ஏழு ஆவிகளைத் தன்னோடு கூட்டிக்கொண்டு வந்து உட்புகுந்து அங்கே குடியிருந்தது. அப்பொழுது அந்த மனுஷனுடைய முன்னிலைமையிலும் அவன் பின் நிலைமை அதிகக் கேடுள்ளதாயிருந்தது. (மத். 12: 44-45). Illustration. பார்வதியாபுரம் உபதேசியார் வீடு அதிகப் பழையவீடு. பல பொத்தல் வளை தொளைகள் உண்டு. அதிலே பாம்பு அதிகம். எத்தனை பாம்புகளை அடித்தாலும், வந்துகொண்டே இருக்கிறது. அந்த வீட்டிலே குடியிருப்பது மோசம். சிலநாள் பார்த்தோம். வேறே வழியில்லை. அந்த வீட்டை முழுவதுமாய் இடித்து புதிதாய்க் கட்டவேண்டியதாயிருந்தது. அப்படிப்போல, உங்கள் இருதயத்தில் பாவப்பாம்பு அதிகம். எத்தனை அடித்தாலும் வந்துகொண்டே இருக்கிறது. குடிப்பாம்பை அடித்தாலும் பெருமைப் பாம்பு இருக்கிறது. புது வீடுவேண்டும், புது சுபாவம் வேண்டும், புது இருதயம் வேண்டும்.

Rev. T. Walker.

## 'கன்மலையைப் பார்த்துப் பேசுங்கள்'

எண். 20: 8.

நாம் கற்றுக்கொள்ளவேண்டிய போதனைகள் நமது ஜீவியத்தின் முடிவில்தான் கிடைக்கக்கூடியவைகளாயிருக்கின்றன. மோசேயின் விஷயத்திலும் அப்படியே நடந்திருக்கிறதென்று பார்க்கிறோம். ஜலம் வரும்படியாகக் கன்மலையை அடிக்கிறது லேசாகவும் அதைப்பார்த்துப் பேசுகிறது கடினமாகவும் காணப்படுகிறது. மோசே வனாந்தரத்தில் ஜீவித்த 40 வருஷத்தில் இவ்விதப் பரீட்சை அவனுக்குக் கொடுக்கப்படாமல் அப்படி இரட்டிப்பான வருஷம் கடந்தபின் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்பொழுது அவன் தவறிவிட்டான். ஆகையால் எக்காலத்திலும் நாம் பரீட்சையில் தேறினவர்களென்றாவது தவறமாட்டோமென்றாவது எண்ண இடமில்லை. மோசே தவறின இந்த விஷயத்தில் நான் தவறமாட்டேன் என்று துணிவுகொள்வது மோசமாகும்.

இஸ்ரவேலின் பிரயாண ஆரம்பத்தில் (யாத். 17) நடந்த சம்பவத்தோடு இதைக் குழப்பக்கூடாது. இரண்டும் வெவ்வேறு சம்பவங்கள். ஆனால் இவ்விரண்டிலும் ஜனங்கள் தாகமடைந்து தண்ணீருக்காக மோசேயோடு வாதாடினார்கள். இவ்விரண்டிலும் கன்மலையிலிருந்தே தண்ணீர் புறப்பட்டு வந்தது. இவ்விரண்டு சமயத்திலும் அவ்விடத்துக்கு 'மேரிபா' என்று பெயரிடப்பட்டது. ஆனால் வித்தியாசங்களுண்டு. முன் சம்பவத்தில் மோசே மாத்திரம் சொல்லப்படுகிறான். இங்கே மோசேயும் ஆரோனும் வருகிறார்கள். முன் சம்பவம் மலைகளுக்குள்ளே மூப்பரில் சிலர் மாத்திரம் இருக்கும்போதும், இதோ, ஜனங்கள் யாவருக்கு முன்பாகவும் நடந்தது. முன்னே மோசே தன் கோலை எடுத்துக்கொள்ளவும் இப்போது கர்த்தருக்குமுன் வைக்கப்பட்டிருந்த ஆரோனின் கோலை எடுத்துக்கொள்ளவும் உத்தரவுபெற்றான். முன் மலையை அடிக்கவும், பின் மலையோடு பேசவும் உத்தரவுபெற்றான், முன் சம்பவம் எகிப்தின் எல்லையாகிய ரெவிதீமிலும் பின் சம்பவம் கானானின் எல்லையாகிய காதேசிலும் நடந்தது. அது கிறிஸ்துவின் மரணத்துக்கும் உயிர்த்தெழுதலுக்கும் முன் குறிப்பாகவும் இது அவருடைய மத்தியஸ்த ஊழியமாகிய பிரதான ஆசாரியத்துவத்துக்கும் பிதாவின் மகிமைக்கும் முன் குறிப்பாகவும் இருக்கிறது. 'அந்தக் கன்மலை கிறிஸ்துவே'. இது கிறிஸ்துவைக் குறிக்குமென்பதற்கு ஆக்ஷேபமில்லை. பிரயாணத்தின் துவக்கத்தில் ரெவிதீமிலும் கடைசியில் காதேசிலும் 'அவர்கள் கூடச்சென்ற கன்மலையின் தண்ணீர்' என்பதால் பிரயாணத்தின் மத்தியிலும் கிறிஸ்து காணப்படுகிறார்.

யாத்திராகமத்தில் பரிசுத்த திரித்துவத்தின் அடையாளம் காணப்படுகிறது. 'நான் உனக்கு முன்பாகக் கன்மலையின்மேல் நிற்பேன்'



என்பதால் பிதாவாகிய தேவனும், 'நீ அந்தக் கன்மலையை அடி' என்பதால் குமாரனாகிய தேவனும், 'ஜனங்கள் குடிக்க அதிலிருந்து தண்ணீர் புறப்படும்' என்பதால் பரிசுத்தாவியாகிய தேவனும் ஆகிய திரியேகதேவன் இச்சந்தர்ப்பத்தில் விளங்குகிறார். வெளிப்படுத்தின விசேஷத்தில் நாம் வாசிக்கிறபடி 'பளிங்கைப்போல் தெளிவான ஜீவதண்ணீருள்ள சுத்தமான நதி தேவனும் ஆட்டுக்குட்டியானவருமிருக்கிற சிங்காசனத்திலிருந்து புறப்பட்டு வருகிறதை' ஞானதிருஷ்டிக்காரனாகிய பரிசுத்த யோவான் கண்டார். மோசேயின் காட்சியும், பரி. யோவானின் காட்சியும் ஒன்றுக்கொன்று சம்பந்தமுள்ளதாயிருக்கிறது—ஆகிலே சுவாசமுள்ள மனுஷன் பரிசுத்த தேவனோடே ஐக்கியப்படவும், கன்மலையைப் பார்த்துப் பேசவும் அவனுக்குக் கிடைத்த சிலாக்கியம் எவ்வளவு பெரிது!! இந்த மனுஷசந்ததியினியில் தாகத்தில் தொய்ந்துபோன உலகத்துக்கும் வறண்டுபோன அவருடைய சுதந்தரமாகிய திருச்சபைக்கும் அவருடைய ஆசீர்வாதமான ஜலம் வராது என்பதையும் கவனிக்கும்போது எவ்வளவு ஆச்சரியத்தைக் கொடுக்கத்தக்கதாயிருக்கிறது.

(1) கன்மலையை அடிக்கவேண்டியதில்லை. இவைகளெல்லாம் அவர்களுக்கு நேரிட்டது ஓர் முன் குறிப்பாகவும் அவைகள் எழுதப்பட்டது நமக்கு எச்சரிப்பாகவும் இருக்கிறது. ரெவிதீமில் மோசே கன்மலையை அடித்தபின், மலையின் மேல் ஏறி ஜனங்கள் யுத்தத்தில் ஜெயம் பெறும்படி தன் கைகளை உயர்த்திக்கொண்டு நின்றான். அதுபோலவே யெகோவாவின் தாசனாகிய இயேசு சிலுவையில் அறையப்பட்டபின் எல்லாருடைய துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் விரோதமாய்த் தமது பிள்ளைகள் செய்யும் போராட்டத்தில் ஜெயம்பெறும்படியாக பரலோகத்துக்கேறி அவர்களுக்காகப் பரிந்துபேசிக் கொண்டிருக்கிறார்.

ரட்சகருடைய சரீரம் குத்தப்பட்டபோது ரத்தமும் ஜலமும் அதிலிருந்து புறப்பட்டது. ரத்தமானது மீட்பின் கிருபையையும் ஜலம் பரிசுத்த ஆவியின் வருகையையும் குறிக்கிறது. கர்த்தராகிய இயேசு மரணத்தால் மகிமைப்படுமட்டும் பரிசுத்த ஆவி அருளப்படமாட்டார். ஜலம் புறப்படுமுன் கன்மலை அடிக்கப்படவேண்டும். மோசே கன்மலையை அடித்த மலைகளின் மத்தியில் நாம் நின்று அவன்கோல் கன்மலையை அடிக்கிற சத்தத்தைக் கவனித்துக் கேட்கக்கூடுமானால் நமது ஞானக்கன்மலையாகிய கிறிஸ்து வேலைக்காரரின் கைகளாலும், போர்ச்சேவகரின் சவுக்கினாலும் சத்துருக்களின் பரியாசங்களாலும் சிலுவையின் ஆணிகளாலும் அவருடைய இருதயத்தைப் பிளந்த ஈட்டியினாலும் அவர் பட்ட அடிகள் நமது ஞாபகத்துக்கு வரும்.

ஆனால் கிறிஸ்துவோ ஒரேதரம் மரித்தார். அவர் மரித்தது பாவத்துக்கென்று ஒருதரம் மரித்தார். மோசே கன்மலையை இரண்டாந்தரம் அடித்

நதால் தேவனுடைய திவ்ய ஒழுங்கைக் குலைத்ததுபோலிருக்கிறது. கிறிஸ்து சதாகாலமும் பிழைத்திருக்கிறார் என்பது விசுவாசிக்கு எவ்வளவு ஆறுதல் கொடுக்கிறது. கன்மலை ஒருதரம் அடிக்கப்பட்டது. அதுபோதும் இனிமேல் அது அடிக்கப்படவேண்டியதில்லை. அதோடு பேசினால் போதுமானது.

(2) ஆசாரியனுடைய கோலைப் பிடித்துக் கொள்ளவேண்டும் மோசேயின் கோலைப்பற்றிய சரித்திரம் மிகவும் ஆச்சரியமானது. சாதாரணமான ஓர் செடியிலிருந்து வெட்டி எடுக்கப்பட்ட ஓர் வளைவான கோல். அது கன்மலைகளின் சிக்குகளிலிருந்து வழிதவறின ஆட்டை விடுவித்திருக்கும். இரவில் இடையன் ஆடுகளை எண்ணுகையில் ஒவ்வொரு ஆட்டின் தலையின் மேலும் வைத்து உபயோகித்திருக்கும். வழிவிலகின ஆடுகளை நல்வழிப்படுத்தியிருக்கும். அதுமோசேயின் அழைப்புக்கும் அவனுடைய அன்றாடக ஊழியத்துக்கும் அடையாளம். ஆனால் அது தேவனுடைய பாதத்தண்டையிலிருந்து விசுவாசத்தோடு கையிலெடுக்கப்பட்டு எகிப்தின் வாதைகளையும், இஸ்ரவேலரின் அதிசய மீட்பையும் பிரயாணத்தின் அற்புதக் கிரியைகளையும் நடப்பித்த கோல். ஆனால் இந்தச் சமயத்தில் மோசேயின் கோல் உபயோகப்படவில்லை, காரணம் விளங்கவில்லை, ஒருவேளை தேவனுடைய மகத்துவ வல்லமை இந்தக் கோலால் முன் விளங்கினபடியால் ஜனங்கள் அதைச் சாதாரணம் என்று எண்ணி விடுவார்களென்றோ அல்லது அந்தக்கோலில் ஏதோ ஓர் மந்திரமிருக்கிறதென்று நினைப்பார்களென்றோ? நாம் அறியோம். ஆனால் மோசேயும் ஆரோனும் கன்மலையைப் பார்த்துப்பேசக் கட்டளை பெற்றபடியால் முன் வல்லமை விளங்கிய மோசேயின் கோல் உபயோகப்படவில்லை. ஆரோனின் கோலை உபயோகிக்க உத்தரவுகிடைத்தது. ஆரோனும் அவன் குமாரரும் ஆசாரிய ஊழியம் செய்வதைப்பற்றிய முறுமுறுப்பு இதற்குச் சற்றுமுன் லேவிப்புத்திரருக்குள் உண்டாகி தேவன் ஆரோனின் கோல் துளிர்க்கும்படிசெய்தார். இந்த ஆரோனின் கோல் கர்த்தராகிய இயேசுவின் நித்திய ஆசாரியத்துவத்துக்கு முன் அடையாளமாயிருந்தது. இந்தக் கோலை மோசே தன் கையிலெடுத்துக் கொள்ள உத்தரவு பெற்றான். மோசே தன் ஆசாரிய உத்தியோகத்தின்படி ஜனங்களின் மத்தியஸ்தனாகவும் அவர்களுக்காகப் பரிந்துபேசுகிறவனாகவும் கன்மலைக்கு முன் காணப்படும்படி ஆரோனின் கோலைக் கொண்டுபோக உத்தரவு பெற்றான்.

இதோ, நாமும் ரட்சிப்பின் கன்மலையாகிய இயேசுவினிடத்தில்போய் நின்று பரிசுத்தாவிக்காக விண்ணப்பம் செய்யும்போது அவருடைய பிரதான ஆசாரியத்துவ மத்தியஸ்தத்தின்மூலமாகவே விண்ணப்பம்செய்யவேண்டும். நமக்காகப் பரிந்துபேசும்படி என்றைக்கும் உயிரோடிருக்கிற அவர் மூலமாகவே விண்ணப்பம் செய்யவேண்டும். நமது விண்ணப்பங்கள் அவருடைய



மத்தியஸ்த மன்றாட்டோடு சேர்ந்துதான் நமக்குப் பலன் தரக்கூடியது. பெந்தெகோஸ்தே நாளில் கிறிஸ்துவானவர் பிதாவினிடத்தில் பரிந்துபேசினதினாலேயே பரிசுத்தாவியானவர் அருளப்பட்டார். 'நான் பிதாவை வேண்டிக்கொள்வேன், அப்பொழுது என்றைக்கும் உங்களோடிருக்கும்படி வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தருவார்' என்ற அவர் திருவாக்கின்படியே நிறைவேறிற்று. ஆகையால் கிறிஸ்துவின் மத்தியஸ்த மன்றாட்டாகிய கோலோடே கன்மலையைப் பார்த்துப் பேசு.

(3) மெதுவாய்ப் பேசினாலும் கன்மலையிலிருந்து தண்ணீர் புறப்படும். மோசே தன் கையில் கோலைப் பிடித்துக்கொண்டு கன்மலையைப் பார்த்து என்ன பேசியிருக்கக்கூடும்? ஓ, கன்மலையே, தேவதடாகமே, நித்தியரின் நீரூற்றே, நீ சிருஷ்டிக்கப்பட்டபோதே உன்னில் தேவன் அமைத்த ஜலத்தை அவருடைய ஜனங்கள் குடிக்கத்தக்கதாக திறந்து அனுப்பு' என்றுதான் பேசியிருக்கலாம்!!! இப்படி நேரிட்டிருக்குமானால், பின்சந்ததியாராகிய கிறிஸ்துவின் ஊழியக்காரராகிய குருமார், உபதேசிமார், பிரசங்கிகள் யாவரும் பொற்பத்தில் ஏறி கன்மலையோடுபேசி தேவனுடைய ஜனங்களின் தாகம் தீர்த்தக்க ஜீவதண்ணீருள்ள நதிகள் பாய்ந்தோடத்தக்கதாக மோசேயின் செய்கை ஓர் ஏற்ற முன்மாதிரியாயிருந்திருக்கும். மோசே தேவகட்டளையை மீறினதால் நமக்கு ஓர் மாதிரி எழுதிவைக்கப்படாவிட்டாலும் தேவனுடைய சித்தம் அதுதான் என்பதை நாம் அறிந்துகொள்ளக்கூடியவர்களாயிருக்கிறோம். தற்காலத்தில் தேவ ஊழியர் கற்பாறையை ஒருதரம் அல்ல பலதரம் அடிக்கிறவர்கள்போல் காணப்படுகிறோம். உலகஞானம் நிறைந்ததும், சாதுரிய வார்த்தை உள்ளதும் மாம்சத்தின் பிரயாசமும் முயற்சியுமுள்ளதுமான பிரசங்கங்கள் ஒருவேளை ஜனங்களை நம்மண்டை இழுக்கிறதேயல்லாமல், அவர்கள் தாகந்தீர ஜீவத்தண்ணீரைக் கண்டவர்களாய்த் திரும்புகிறதில்லை. நாம் கன்மலையோடு பேசுவோமானால், 'பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல் ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது உங்கள் பரமபிதா தம்மைநோக்கி வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்குத் தமது பரிசுத்தாவியைக் கொடுப்பது அதிக நிச்சயமல்லவா?' என்ற வாக்கின் உண்மையைப் பலதரம் ரூபித்திருக்கலாம்.

(4) மோசேயின் தவறுதலால் தண்ணீர் நின்றுபோகவில்லை. தேவன் கட்டளையிட்டபடி மோசே பேசியிருப்பானானால், தண்ணீர் தீவிரமாயும், திரளாயும் வந்திருக்குமோ நாமறியோம். ஆனால் ஒன்று நிச்சயம். மனுஷனுடைய அவிசுவாசம் தேவனுடைய உண்மையை அவமாக்கவில்லை. நமது பாவங்களின் திரட்சியினால் தேவ அன்பு குறைந்துபோகவில்லை. நாம் அவருடைய அன்பை அறியாமலும் உணராமலும் போவதால் தனித்தனி ஆட்களின் விஷயத்தில் தேவன் கண்டிப்பாய் நடத்தியிருக்கிறார். ஆனால் தமது ஜனத்தையோ அதினிமித்தம் மறந்துபோகமாட்டார். அப்

படிப்போலவே, கர்த்தராகிய இயேசுவின் ஊழியர் அவருடைய சித்தத்தை நிறைவேற்றாமல் உத்தம ஊழியம் செய்யாதபோதிலும் தமது ரட்சிப்பின் கிருபையைத் தமது ஜனங்களுக்குக் காட்டாமற்போனதில்லை. மேலும் தவறுதலுள்ள பல ஊழியரின் ஊழியம் ஆச்சரியமான பலனுள்ளதாயும் காணப்படுகிறதுண்டு. மோசேயின் பாவத்தால் அவனுடைய பின்ஜீவியம் அந்தகாரப்பட்டபோதிலும், புருஷர், ஸ்திரீகள், குழந்தைகள், ஆடு மாடுகள் ஆகிய இவற்றின் ஜீவன் கர்த்தரின் பார்வைக்கு அருமையாயிருந்தபடியால் அவர்களுக்குத் தண்ணீர் கிடைக்கச் செய்தார். வனாந்தரத்தின் வறண்ட ஸ்தலங்கள் ஏதேன்போலாகும்படி செய்தார்.

(5) மற்றவர்களைத் தேவனுடைய இளைப்பாறுதலுக்குட்பட நடத்துகிறவன் கன்மலையோடு பேசப் படிக்கவேண்டும். மோசேயும் 'ஆரோனும் கூடாரத்துக்குட் பிரவேசித்தவுடனே தேவன் அவர்களை நோக்கி இந்தச் சபையாருக்கு நான் கொடுத்த தேசத்துக்குள் நீங்கள் அவர்களைக் கொண்டுபோவதில்லை' என்றார். அவ்விருவருக்கும் இது மிகவும் கசப்பான தண்டனை. ஆரோன் ஓர் மலையிலும் மோசே பிஸ்காவின் கொடுமுடியிலும் மரித்தார்கள். மோசே மறுபடியும் ஆண்டவரை நோக்கி, கர்த்தராகிய ஆண்டவரே, நீர் உமது அடியேனுக்கு உமது மகத்துவத்தையும் உமது வல்லமையுள்ள கரத்தையும் காண்பிக்கத் தொடங்கினீர்.... நான் யோர்தானைக் கடந்துபோய் அந்த நல்ல தேசத்தைப் பார்க்கும்படி உத்தரவு கொடும் என்று விண்ணப்பம் செய்தபோதிலும் தேவன் தமது தீர்மானத்தை மாற்றாமல் மோசேயை நோக்கி, 'போதும், இனி இந்தக் காரியத்தைக் குறித்து என்னோடே பேசவேண்டாம்' என்றார். ஒருவகையாய்ப் பார்த்தால், மன்னிக்கப்படாத பாவங்களில் இது ஒன்றுபோல் தோன்றுகிறது. மோசே அன்று காலையில் புறப்படும்போது தன் ஜீவியத்தில் இவ்வளவு பெரிய துக்கம் சஞ்சலம் நேரிடும் என்பதை எண்ணாமலிருந்திருப்பான். ஆனாலும் இது நம்மெல்லாருக்கும் எவ்வளவு எச்சரிப்பாயிருக்கிறது. நம்முடைய செய்கைகளில் காணப்படும் ஓர் சிறு தவறுதல் நமது பின்னான ஜீவியத்தையெல்லாம் மாற்றக்கூடியதாயிருக்கும். வாக்குத்தத்த தேசத்தின் காட்சியளித்தார். மரணத்தில் கர்த்தர் அவனை மகிமைப்படுத்தினார். மறுரூபமலைக் காட்சிகளின் பங்குமளித்தார். இவ்விதமாய்த் தமது தண்டனையைச் சற்று ஒதுவாக்கினதுபோல் தோன்றுகிறது என்றாலும் அந்தத் தண்டனை பயங்கரமே.

மோசே இளைப்பாறுதலின் தேசத்திற்கு வெளியே மரணமடைந்த காரணத்தைப் பார்த்தோமே. தன் விசுவாச ஜீவியத்தில் அந்தப் பரம இளைப்பாறுதலின் ரகசியத்தை அறியாதபடியால் இரண்டாந்தடவை கன்மலையை அடித்து சபையாரோடு பதறிப் பேசினான். 'என்னைப் பரிசுத்தம் பண்ணும்படி நீங்கள் என்னை விசுவாசியாமல் போனீர்கள்' என்பதே



தேவனுடைய தீர்ப்பு. மற்றவர்களை இளைப்பாறச் செய்யும்படி எங்களை இளைப்பாறுதலின் ஜீவியத்துக்குள் நடத்தும் பரிசுத்த ஆவியே! நாங்கள் அவிசுவாசத்தால் கன்மலையை அடிக்காமல் பூரண சமாதானத்துடனும் அமர்க்கையுடனும் கன்மலையோடு பேசும் கிருபையை அருளிச்செய்யும். ஆமென்.

## இயேசுவின் மௌனம்

'இயேசு மாறுத்தரம் ஒன்றும் சொல்லவில்லை' யோ. 19-9.

இயேசுவின் வார்த்தைகளின்பேரில் பல பிரசங்கங்கள்செய்யப்பட்டு, பல புஸ்தகங்களும் எழுதப்பட்டுள்ளன. ஆனாலும் இயேசுவின் மௌனம் மெத்த மகத்துவமாய்க் காணப்படுகிறது. அவருடைய பாடுகளின் மத்தியில் மூன்றுதடவை அவரிடத்தில் கேள்விகேட்டபோது அவர் மாறுத்தரம் ஒன்றும் சொல்லவில்லை. காரணமென்ன? அவரிடத்திலல்ல, அவரைக் கேட்டவர்களிடத்தில் அதின் காரணமிருக்கிறதென்று அறியலாம்.

முதலாவது, பொய்ச்சாட்சிகள். ரட்சகரைப்பிடித்துப் பிரதான ஆசாரியன் முன் நிறுத்தினார்கள். சத்துருக்கள் தந்திரமான பல கேள்விகளால் அவரைக் குற்றப்படுத்தப்பார்த்தார்கள். ஆனால் அவரோ நேரான உத்தரவு சொன்னார். ஆகையால் அவர்கள் மற்றவர்களுடைய வாக்குமூலங்களைக்கொண்டு அவரைக் குற்றத்துக்குட்படப்பண்ண யோசித்துப் பொய்ச்சாட்சிகளைத் தேடினார்கள். அவர்கள் சாட்சிகள் பொய்யாயிருந்தபடியால் ஒவ்வவில்லை. கடைசியாக இரண்டுபேரை முன்னிறுத்தினார்கள். அவர்களுடைய சாட்சி பாதிபொய்யும்பாதி மெய்யுமாயிருந்தது. இது மோசமான காரியம். அவர்கள் சாட்டின குற்றமாவது, 'கையினால் செய்யப்பட்ட இந்த ஆலயத்தை இடித்துப்போட்டு கைவேலையல்லாத இன்னொரு ஆலயத்தை மூன்று நாளில கட்டுவேன் என்றான் என்பது' இயேசுவோ மாறுத்தரம் ஒன்றும் சொல்லவில்லை. 'மயிர் கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போல்' மௌனமாயிருந்தார். ஏனென்றால் நியாயாதிபதிகளும் சாட்சிகளும் தாங்கள்செய்வது வஞ்சகம், சொல்லுகிறது பொய் என்று அறிந்தார்கள். இப்படிப்பட்டவர்களிடத்தில ஆண்டவர் பேசுகிறதில்லை.

தன்னைத்தானே வஞ்சித்துக்கொள்ளுகிற மனுஷன் எவ்வளவு நிர்ப்பந்தமானவன். அவனுக்காகச் செய்யப்படும் எவ்வித நற்கிரியையும் பலனற்றதாய்ப்போகும். அவனுக்காகப் பிரயாசப்படுகிறவர்களும் நம்பிக்கையற்றுப் போகிறார்கள். சாத்தான் எவ்வளவு பலமாய் அவர்கள் மனதை வசப்படுத்திக் கொள்ளுகிறான். சிலவேளைகளில் இவர்கள் உள்ளத்தில் திடீரென்று பாவ உணர்வுண்டாகும். அதற்காக ஜெபிப்பார்கள். ஆனால் தங்கள் பாவ வழி

களையோவிட்டுவிடமாட்டார்கள். அகுஸ்தீன் என்னும் பரிசுத்தவான் ஓர் காலத்தில்ஜெபித்ததுபோல், 'ஆண்டவரே, என்னைக் கிறிஸ்தவனுக்கும், ஆனால் இப்போது வேண்டாம்' என்பதுபோல் இவர்களும் ஜெபிக்கிறது போலிருக்கிறது. இப்படிப்பட்டவர்கள் விஷயத்தில் ரட்சகர் மௌனமாயிருக்கிறார். அவர்கள் கிறிஸ்துவண்டை வந்தாலும் இரு மனதோடு வருவார்கள். ஆகையால் இரு மனமுள்ள சகோதரனே, உன் இருதயத்தை நோக்கு. தேவனோடு நேராய்ப் பேசு. உன் இருதயத்தில் எதையும் மறைத்துவைக்காமல் தெளிவாய்ப் பேசு. அப்போது ரட்சகர் உன்மேல் கருணைகொண்டு உனக்கு மன்னிப்பளித்து உன்னைப் பெலப்படுத்துவார்.

**இரண்டாவது, பிலாத்து.** பிலாத்து இயேசுவைப்பார்த்து, 'நீ எங்கேயிருந்து வந்தாய்?' என்று கேட்டது ஓர் நியாயமான கேள்வி. இயேசு மாறுத்தரம் ஒன்றும் சொல்லவில்லை. அதின் காரணத்தை அறியவேண்டுமானால் பிலாத்துவின் காரியத்தைச் சற்று தெளிவாய் கவனிக்கவேண்டும். பிலாத்து யூதேயா நாட்டுக்கு அதிபதி. அவன் தேசத்தில் சமாதானமும் ஒழுங்கும் பெருகவும் ரோம ஆளுகை நடந்தேறவும் ஏற்படுத்தப்பட்டவன். இதுவரைக்கும் யூதர்கள் சம்மந்தமாய் அவன் நடந்துகொண்டவிதம் மிகவும் மோசமானது. இப்பொழுது அவர்களைச் சமாதானப்படுத்த விரும்பி அதற்கு இயேசுவின் விசாரணையையே கருவியாகக்கொள்ள வேண்டுமென்பது அவனுடைய விருப்பம். ஆகையால் இந்த விசாரணை முழுவதிலும் தான் ரோம தேசாதிபதி, ரோம அதிகாரமும் சட்டமுமுடையவன், என்பதைப் பூரணமாய்த் தள்ளிவிட்டு ஜனங்களுடைய அபிப்பிராயம், பிரியம் இவைகளுக்குத் தக்கதாகத்தான் நிலையற்றவிதமாய் நடந்துகொண்டான். முதலாவது, அவன் இயேசுநாதரைக் குற்றமற்றவர் என்று தீர்ப்புகூறுகிறான். அப்படியிருந்தும் அதற்கெதிரிடையாக அவரை வாரால் அடிக்க ஒப்புவிக்கிறான். அவரைப் பரியாசம்பண்ணுகிறான். அவரைச் சிலுவையிலறையும்படி ஜனங்களிடத்தில் ஒப்புவிக்கிறான். அப்படி ஒப்புக்கொடுத்தவுடனே அவர்கள் கைகளினின்று அவரை விடுதலையாக்க வகைதேடுகிறான். ஜனங்கள் உண்டாக்கின பல அமளிகளில் ஒன்று, 'அவர் தன்னை தேவகுமாரன் என்று சொல்லுகிறான்' என்பதே. பிலாத்து ரோமன், அஞ்ஞானி. தன் மார்க்கத்தின்படி தேவகுமாரர் மனுஷராகப் பூமியில்வந்த சரித்திரங்களை நம்புகிறவன். ஆகையால் இயேசுநாதரும் அவர்களிலொருவராயிருக்கலாமே என்று எண்ணுகிறான். ஆகையினால் தான் அவர் தேவனுடைய குமாரன் என்றதைக் கேட்டவுடன் அவனுக்குள் அதிகக் கலக்கம் உண்டாகிறது. இயேசுநாதரைத் தனியே அழைத்துக் கொண்டுபோய், 'நீயார், எங்கேயிருந்து வந்தவன்' என்று கேட்கிறான். இயேசுவோ மாறுத்தரம் ஒன்றும் சொல்லவில்லை. காரணமென்ன? தேவகுமாரன் யார் என்று தீர்க்கிறது பிலாத்துவின் வேலையல்ல, நியாயத்தையும் நீதியையும் செய்வதுதான் அவனுடைய வேலை. ரோம சட்டத்தை



நிறைவேற்றி, குற்றமற்றவனை விடுதலையாக்கி குற்றவாளியைத் தண்டிப்பதே அவனுக்கடுத்த வேலை. இயேசுநாதர் தேவனுடைய குமாரனோ, கலிலேயா நாட்டிலுள்ள ஓர் ஏழைக் குடியானவனோ, இதைத் தீர்க்கிறது அவனுக் கடுத்ததல்ல. நீதியுள்ள நியாயாதிபதி இயேசுநாதர் விஷயத்தில் செய்ய வேண்டியது அவரை விடுதலைபண்ணுவதே. அப்படியிருக்கத் தன் மனச்சாட்சியை மழுக்கி அவரை ஆக்கினைத்தீர்ப்புக்குட்படுத்தினான்.

மனச்சாட்சியே மனுஷன் எவனுக்குள்ளும் விளங்கும் தேவசுபாவத்தின் தன்மை. அதன்மூலமாய்த்தான தேவன் நம்மில் கிரியை நடப்பிக்கிறார். நமக்குச் சுயாதீனச் சித்தமுண்டு. நமக்குப் பிரியமானதை நாமே தெரிந்துகொள்ளும் சத்தியம் நமக்குண்டு. மனச்சாட்சியே முன்நின்று இந்தச் சித்தத்தை நடத்தவேண்டியது. அந்த மனச்சாட்சி நன்மையைச் சுட்டிக்காட்டி அதைத் தெரிந்துகொள்ளும்படி ஏவுகிறது. தீமையைக் குறிப்பிட்டு அவற்று விலகிப்போ என்றும் எச்சரிக்கிறது. நமது ஜீவியத்தை நடத்தவேண்டியது நமது மனச்சாட்சியே. நம்மில் தர்க்கிக்கும் சுபாவம் உண்டாகும்போது மனச்சாட்சி கட்டளைகொடுக்கும். நம்மில் சந்தேகம் எழும்பும்போது மனச்சாட்சியே திடமாயிருக்கும்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நமது நடுவில்நின்று நம்மை நியாயந்தீர்க்கிறவராய் விளங்குகிறார். நாம் அவருக்கு விலகியோடமுடியாது. பரி. பேதுரு அப்போஸ்தலன் ரோமாபுரியின் அழிவுக்கு தப்பியோடும்போது ரட்சகர் எதிர்ப்பட்டு 'எங்கேபோகிறாய்?' என்று கேட்டார். அப்போஸ்தலன் தான் கிறிஸ்துவுக்கு விலகியெங்கும் போகக்கூடாது என்னும் பாடத்தைக் கற்றுக்கொண்டார். உமது ஆவிக்கு மறைவாக நான் எங்கே போவேன்? உமது சமுகத்தைவிட்டு எங்கே ஓடுவேன்? பரிசுத்த ஆவியினால் கூர்மையாக்கப்பட்ட உன் மனச்சாட்சி 'அவரை ராஜாவாக்கு, அவரே உன் எஜமான்' என்று நமக்குப் போதிக்கிறது. ஆனால் சிலவேளைகளில், அவசரத்தினாலோ, ஸ்திரமின்மையினாலோ, கோழைத்தனத்தினாலோ நாம அந்தச் சத்தத்துக்குச் செவிகொடாமலபோகிறோம. மனச்சாட்சியின் சத்தத்துக்கு உடனே கீழ்ப்படிவோமானால் சகலமும் நன்மையாயிருக்கும். கீழ்ப்படியாமற்போவோமானால் மறுபடியும் அதே சத்தம் கேட்கும். முதல்தரம் கீழ்ப்படியாததால் மனச்சாட்சிமழுங்கிப் போகிறது. அதன் முடிவென்ன? அதின்சத்தம கேட்கப்படாமல்வரவர அமைதலாய் அல்லது மௌனமாய்ப் போகிறது.

**மூன்றாவது, ஏரோது.** பிலாத்துவின் விசாரணையில் இயேசு கலிலேயாவிலிருந்து வந்தவரென்று யாரோ ஒருவன் சொன்னதைக்கேட்டு அவரைத் தன்னைவிட்டுக் கழித்து கலிலேயாவுக்கு அனுப்ப யோசித்தான். அப்படியே அப்பொழுது எருசலேமுக்கு வந்திருந்த ஏரோதினிடத்திற்கு அவரையனுப்பினான். ஏரோது அவரைக் கண்டபோது சந்தோஷப்பட்

டான். அவரைக்குறித்து வெகுவாய்க் கேள்விப்பட்டிருந்தான். ஆகையால் அவரைக் கண்டபோது சந்தோஷப்பட்டு பல காரியங்களைக் குறித்து அவரிடத்தில் வினவினான். ஆனால் இயேசுவோ மாறுத்தரம் ஒன்றும் சொல்லவில்லை. ஏனென்றால் ஏரோது வேடிக்கைப் பிரியன். அவர் அற்புதங்கள் நடப்பிக்கிறவர் என்று கேள்விப்பட்டு சிலவற்றை செய்யச்சொல்லி வேடிக்கை பார்க்கலாம் என்று விரும்பினான். தேவகுமாரனும், பாடுபடுகிற மனுஷ குமாரனுமாகிய அவரைக்குறித்து அவன் கொண்டிருந்த எண்ணம் அவ்வளவுதான். ஆனால் அவரோ இப்படிப்பட்டவர்களுக்கு இணங்கமாட்டார். விதவையின் மகனை உயிரோடெழுப்பி அவளை ஆறுதல்படுத்தத் தமது வல்லமையை உபயோகிப்பார். ஏரோதையும அவன் அரண்மனையிலுள்ளவர்களையும சந்தோஷப்படுத்த ஓர் சின்ன அற்புதமும் செய்யமாட்டார். ரட்சகர் ஜீவ்வியமாய்த் தமது வல்லமையைக் கண்டமட்டும் உபயோகிக்காமல் மட்டுப்படுத்தினதைப்போல் ஆச்சரியப்படத்தக்க காரியம் சுவிசேஷத்தில் வேறொன்றுமில்லையென்றே சொல்லலாம். ஆனால் ஏரோது எப்போதும் இவ்வித உல்லாசப் பிரியனாயிருந்ததில்லை. ஓர் காலத்தில் யோவான்ஸ்நானகன் அவனுடைய சிநேகிதன். அவன் அரண்மனையிலேயே இருந்தான். அவனுடைய பிரசங்கத்தைக் கேட்டான். அவன் சொன்ன அநேகம் காரியங்களைக் கேட்டு அவன் சொற்படி செய்து வந்தான். ஆனால் ஏரோது தன் ஜீவியத்தில் ஒரு காரியத்தை மாத்திரம் விட்டுவிடவில்லை. அந்தக் காரியமே அவனைக் கேட்டுக்கு வழி நடத்தினது. பாவம் எப்படியும் ஓர் நாளில மனுஷனைக் கண்டுபிடிக்கும்.

காயீன் தன் சகோதரனுக்கு விரோதமான பகையை மனதில் வைத்திருந்தான். அதைக் குறித்துத் தேவன் அவனோடு பேசும்போது ஓர் உவமானம் பேசுகிறார். ‘நீ நன்மை செய்யாதிருந்தால் பாவம் உன் வாசற்படியில் படுத்திருக்கும்’. அதன் கருத்து என்னவென்றால், பாவத்தை ஓர் சிங்கத்துக்கு ஒப்பிடுகிறார். அதை ஒருவன் தன் வாசல்படியில் படுக்க இடங்கொடுக்கிறான். 2 தடவை, 3 தடவை அவனை ஒன்றும் செய்யாமல் படுத்திருக்கிறது. இந்த 4-ம் தடவை அது அவன்மேல் பாய்ந்து அவனைக் கொன்றுபோடுகிறது. இதுவே பாவத்துக்கு இடங்கொடுத்து பாவத்தோடு விளையாடி அதை அற்பமாய் எண்ணுகிறவர்களுடைய நிலைமை. நீ போஷித்து இடங்கொடுக்கிற பாவம் துஷ்ட மிருகம்போல் உன் வாசலில் மறைந்திருந்து நீ விழிப்பில்லாதிருக்கும்போது உன்னை ஜெயித்துவிடும். இதுவே ஏரோதின் ஜீவியம். அவன் அந்தப் பாவத்தை எப்போதாவது விட்டுவிடலாமென்றிருந்தான். ஆனால் அப்பாவமோ அவன்மேல் பாய்ந்து அவனை ஜெயித்துவிட்டது. கடைசியாக அவன் தனக்கிருந்த உத்தம பக்தியுள்ள சிநேகிதனைக் கொல்லும்படி அவனை ஏவிவிட்டது. (இன்னும் வரும்).

Printed at the Palamcottah Printing Press. Palamcottah and published by the Chirstian Brotherhood Association, Tinnevelly.

March 1917 Registered No. M. 163.

# The Water of Life
# ஜீவத்தண்ணீர்

“என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்.’ யோவான் 7; 38.

Vol. XVIII மார்ச்சுமீ 1917

12 APR 1917 MADRAS

## 19-ம் வருஷ கன்வென்ஷன் கூட்டங்கள்—1917

டக்கரம்மாள்புரம், மேமீ 7-10உ முடிய (சித்திரைமீ 25-28உ)

கர்த்தருக்குள் பிரியமான சகோதரரே, அன்பு நிறைந்த நமது பரம பிதா நம்மைக் காப்பாற்றி நாம் இன்னோர் கன்வென்ஷன் கூட்டங்களை ஆரம்பிக்கக் கிருபை செய்ததற்காக அவருக்கு நன்றி செலுத்துவோமாக. இந்த வருஷத்திலும் நாம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஒன்றுகூடி அவருடைய பரிசுத்தாவியினால் ஏவி நிரப்பப்பட்டு அவருடைய மகிமை விளங்கும் சபையாக எங்கும் பிரகாசிக்கவும் சங். 87: 7ல் சீயோனைக் குறித்துச் சொல்லப்பட்ட பிரகாரம், ‘எங்கள் ஊற்றுகளெல்லாம் உன்னிலிருக்கிறது என்று பாடுவோரும் ஆடுவோரும் ஏகமாய்ச் சொல்லுவார்கள்’ என்று நம்மைக் குறித்தும் சொல்லத்தக்கதாக நாம் அநேகரை இழுக்கும் கருவிகளாயிருக்கக் கிருபை செய்வாராக. சீயோனைக் குறித்து இப்படிச் சொல்லப்பட இரண்டு காரணங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. (1) கர்த்தர் தாமே அதின் அஸ்திபாரமாயிருக்கிறார். (2) சீயோனின் வாசல்களில் கர்த்தர் பிரியமாயிருக்கிறார். திருநெல்வேலிச் சபையே, உன்னைக் குறித்தும் மகிமையான விசேஷங்கள் (கர்த்தரால்) வசனிக்கப்படவேண்டுமா? உன்னை அடிமைப்படுத்தின எகிப்தியரும், உன்னைத் துன்பப்படுத்தின பாபிலோனியரும் உன்மேல் பொறாமையாயிருந்த பெலிஸ்தியரும் உன்னை அறியாத அவபக்தி நிறைந்த தீரியரும் எத்தியோப்பியருங்கூட உன்னில் வந்து அடைக்கலம் பெறவேண்டுமா? உன்னதமானவர் தாமே உன்னை ஸ்திரப்படுத்தவேண்டுமா? எண்ணிக்கைக்கு அடங்காதவர்கள் உன்னிலிருந்து தோன்றினார்களென்று கர்த்தர் உன் ஜனங்களை பேரெழுதித் தொகையிடவேண்டுமா? எங்கள் ஊற்றுகளெல்லாம் உன்னிலிருக்கிறதென்று ஜனங்கள் ஏகமாய் ஆடிப்பாடவேண்டுமா? உன்னுடைய அஸ்திபாரம் எங்கேயிருக்கிறது? யார்பேரில் உன் நம்பிக்கையை வைத்திருக்கிறாய்? எது உன் பெருமையாயிருக்கிறது? கர்த்தருக்குள்

7-4-17

உன் அஸ்திபாரம் இருக்கிறதா? கர்த்தரைப்பற்றும் திட நம்பிக்கை உன் ஆத்தும நங்கூரமாயிருக்கிறதா? புரண்டோடும் வெள்ளமும் கொந்தளித்தெழும்பும் புசலும் உன்னைச் சற்றும் புரட்டாமலும் அசைக்காமலுமிருக்க வேண்டுமோ? உன்னுடைய அஸ்திபாரங்களெல்லாம் கர்த்தரில் இருப்பதாக'. திட அஸ்திபாரமாகிய கிறிஸ்துவில் நான் நிற்கிறேன். வேறு அஸ்திபாரம் அறியேன் என்று சாட்சியிடுவாயாக.

இரண்டாவது. யாக்கோபின் வாசஸ்தலங்களெல்லாவற்றைப் பார்க்கிலும் சீயோனின் வாசல்களில் பிரியமாயிருக்கிறார். அவர் உன் அஸ்திபாரமாயிருக்கிறதுமாத்திரமல்ல, உன் வாசல்களில் அவர் பிரியமாயிருக்க வேண்டும். அஸ்திபாரம் பெலனாயிருக்கலாம். மேல் கட்டடம் பெலவீனமாயிருந்தால் கட்டடம் நிலைக்காது. அஸ்திபாரம் நிற்கும். அதை யாரும் அசைக்கமாட்டார்கள். அதின்மேல் பரீட்சிக்கப்பட்ட கற்கள் இசைவிணைப்பாய்க் கட்டப்படவேண்டும். கற்கள் நன்றாய்ப் பண்படுத்தப்பட்டு ஒன்றோடொன்று இசைந்து கட்டப்படவேண்டும். உன் கட்டடத்தின் கற்களெல்லாம் பணிப்படுத்தப்பட்டவைகளா? உன் சபைகள் ஆவிக்குரிய சபைகளா? அவர்களுக்குள் இன்னும் பொய், அசுத்தம், குடிவெறி முதலிய பாவங்களுண்டா? எகிப்தியர், பாபிலோனியர், பெலிஸ்தியர், தீரியர், எத்தியோப்பியர் எப்படி இவ்வித சலாக்கியம் பெற்றார்கள்? அவர்கள் சீயோனில் பிறந்தார்கள் மறுபிறப்பு அவசியம். மனந்திரும்புதல் அவசியம். பாவத்தை முற்றிலும் வெறுத்துத் தள்ளவேண்டும். அப்பொழுதான் இணைக்கப்படலாம். மேலும் பண்படுத்தப்பட்ட கற்கள் ஒன்றோடொன்று இணைக்கப்படவேண்டும். கட்டடம் உறுதிப்படுவது எதினால்? கற்கள் ஒன்றோடொன்று இசைவதினாலேயே அஸ்திபாரக் கல்லோடு எல்லாக் கற்களும் ஒட்டமுடியாது. அதோடு ஒட்டிக்கொண்டிருக்கும் கற்களோடேதான் ஒட்டவேண்டும். சீயோன் தன்னை எல்லா ஜாதிகளுக்கும் மேலாய் உயர்த்துகிறவர்கள். அவர்கள் தாழவேண்டியிருந்தது. மற்ற ஜாதிகளோடு கைகோர்க்கவேண்டியது வந்தது. அப்போது கர்த்தர் சீயோனின் வாசல்களில் பிரியப்பட்டார். நமது தேவனாகிய கர்த்தருடைய பிரியம் உன் மேலிருக்கவேண்டுமா? நீ உன்னைத் தாழ்த்து. மற்றவர்களுக்கு உன்னைச் சமமாக்கு. அன்பினால் எல்லாரையும் உன்னண்டையில் இழுத்துக்கொள். எவ்விதப் பெருமையும் பாராட்டாதே. அப்போதுதான் உன்னிலிருந்து தோன்றினவர்களுக்கு உன்னிலிருந்து ஊற்றுகள் புறப்படும். அவர்களும் ஊற்றுகளாவார்கள். ஜீவதண்ணீருள்ள நதிகள் தேசமெங்கும் புரண்டோடும். உன்னைக் குறித்து ஜாதிகள் பாடுவார்கள் ஆடுவார்கள். உன்னைக் குறித்துக் கேள்விப்படுவதும் உன்னைப் பார்ப்பதும் அவர்களுக்கு ஆனந்தமும் சந்தோஷமுமாயிருக்கும். பரிசுத்தாவியானவர் தேவ அன்பை உன் இருதயங்களில் ஊற்றுவாராக. அப்பொழுது ஆவியின் கனியாகிய அன்பு உன்னில் விளங்கும், தேவனுடைய பரிசுத்



தாவியானவர் நம்மை இந்த வருஷத்தில் விசேஷித்த விதமாய்ச் சந்தித்து தமது அன்பினால் நம்மை நிரப்பி, நாம் அநேகம் ஜாதிகளைக் கர்த்தருக்கென்று ஆதாயப்படுத்தும் கருவிகளாக்குவாராக.

இந்த வருஷத்திலும் கூட்டங்கள் வழக்கம்போலிருக்கும், மேமீ 7உ-யாகிய திங்கள் சாயங்காலத்திலேயே சகோதரர் யாவரும் வரும்படியழைக்கிறோம். முதல் கூட்டத்திற்கே யாவரும் வந்திருக்கும்படி வருந்திக் கேட்கிறோம. அந்த நேரமுதல் வருகிற யாவருக்கும் சாப்பாடு கொடுக்கப்படும். மற்ற ஒழுங்குகளெல்லாம் முன்போலவே நடக்கும். திங்கள் சாயங்காலம் சாப்பாடு வேண்டியவர்கள் தயவுசெய்து முன்னமே அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதக் கேட்கிறோம். இவ்வருஷத்துக் கூட்டங்களில் சுவிசேஷப் பிரபல்லிய ஊழியத்தின் சம்பந்தமான விசேஷித்த எழுப்புதலான காரியங்களும் நடைபெறும்.

சகோதரரே, எல்லாரும் இக்கூட்டங்களுக்கு வாருங்கள். உங்கள் சிநேகிதரையும் கூட்டிக்கொண்டுவாருங்கள். வரும்படியழையுங்கள். கர்த்தர் இக்கூட்டங்களை யாசீர்வதிக்கும்படி இன்றுமுதல் ஜெபியுங்கள். சகோதரர் பலரிருக்கும் ஊர்களில் அடிக்கடி கூடி ஜெபியுங்கள். கர்த்தர் தாமே இக்கூட்டங்களைத் தமது சபையின் நல்வாழ்வுக்கென்று நடத்துவாராக. ஆமென்.

கன்வென்ஷன் நடத்தும் சகோதரருக்காக,

Palamcottah. 3[illegible]—3—1917 — R. V. ASIRVADAM, *Bishop's Chaplain.*

## இயேசுவின் தனிமை

'நீங்கள் என்னைத் தனியே விட்டுவிடுங்காலம் வரும்'. யோ. 16: 32.

நாம் தாழ்மையாயும் பயபக்தியாயும நடந்துகொள்வதற்கு தேவன் நம்மை அறிந்திருப்பதுபோல் நாமும் நம்மை அறிந்துகொள்வது எவ்வளவு நல்லது? சீஷர்கள் எல்லாவற்றையும்விட்டு கர்த்தரைப் பின்பற்றின விஷயத்திலும அவரோடு நிலைத்திருந்த விஷயத்திலும் அவரால் புகழப்பட்டது மெய்யே. ஆகிலும் சோதனை நேரத்தில் அவர்கள் பயந்து ஓடிப்போவார்கள் என்கிற உண்மையை அவர் சொன்னபோது அவர்கள் நம்பவில்லை. ஆண்டவரே, அப்படியோ நினைக்கிறீர், என்ன நேரிட்டாலும் நாங்கள் உம்மை விடுவோமா? காவலிலும சாவிலுங்கூட நாங்கள் உம்மைப் பின்பற்ற ஆயத்தமாயிருக்கிறோம் என்றார்கள். இனிச்சொல்வதில் பிரயோஜனமில்லை அனுபவத்தில் அவர்களே கண்டுகொள்ளட்டுமென்று ஆண்டவர் பேச்சைவிட்டுவிட்டார். சத்துருக்கள் கிறிஸ்துவைப் பிடித்தபோது எல்லாரும் அவரைத் தனியேவிட்டு ஓடிப்போனார்கள். வார்த்தைச் சமர்த்துக்கும் அனுபவத்துக்கும் எவ்வளவு வித்தியாசம்? நாம் விசுவாசிக்கிறவரையில் கிறிஸ்துவைத்தொடர்ந்து பற்றிக்கொண்டிருக்கிறோம். பயமும் சந்தேக

ளும் உண்டானவுடனே பின்வாங்கிப்போகிறோம். விசுவாசம் ஜீவன்; அவிசுவாசம் சாவு. விசுவாசம் தைரியம்; அவிசுவாசம் கோழைத்தனம். விசுவாசம் இரட்சிப்பு; அவிசுவாசம் ஆக்கினை.

I. முதலாவது இயேசுவின் தனிமையை விசாரிப்போம். கரிசல் என்ற ஊரில் ஓர் அருமையான சகோதரன் உண்டு. அவர் தேவனுடைய பிள்ளைகளோடு பேசிக்கொண்டிருக்கையிலே திடீரென அவர்களை விட்டுப் பிரிந்து காட்டைநோக்கிப்போவார். எங்கே இவ்வளவு அவசரம் என்று கேட்டால் 'ஐயா தனிமைக்கு' என்பார். சற்றுநேரம் பொறுத்து அதிக மகிழ்ச்சியோடும் புதுப்பெலனோடும் திரும்பிவருவார். கர்த்தரோடு தனித்திருக்கும் தேவமக்களுக்கு இதின் ரகசியம் தெரியும்.

நமதாண்டவர் ஜனங்களைவிட்டும் தமது சீஷர்களைவிட்டும் பிரிந்துபோய் பிதாவோடு தனித்திருந்த சமயங்களுண்டு. ஜனங்கள் மத்தியில் வல்லமையோடு தமது ஊழியத்தை நிறைவேற்றக்கூடிய பெலத்தையும் உற்சாகத்தையும் தனித்திருந்த சமயங்களில் அவர் பெற்றுக்கொண்டார். ஆனால் நாம் கவனிக்கப்போகிற தனிமையோ அப்படிப்பட்டதல்ல. இதிலே பூரண மனுஷனாகிய அவர் சிநேகிதருடைய துணையைத்தேடினார். அது அவருக்குக் கிடைக்கவில்லை.

(1) கெத்செமெனேயில் அவருடைய தனிமையைப் பார்ப்போம். மேல்வீட்டிலிருக்கும்போதே பன்னிருவரில் ஒருவனாகிய யூதாசை பிசாசு கொண்டுபோய்விட்டான். பதினொருவரோடு ஒலிவமலையை நோக்கிச் செல்லுகிறார். தாங்கக்கூடாத பாரம் அவர் உள்ளத்தை இறுக்குகிறது. தோட்டத்துக்குச் சமீபமாக வந்தபோது எட்டுப்பேரை வெளியே நிறுத்திவிட்டார். தூண்களாக எண்ணப்பட்ட மூன்றுபேரையும் தோட்டத்திற்குள் அழைத்துக்கொண்டுபோனார். அம்மூவரையும் ஓரிடத்தில் இருக்கச் சொல்லி அவர்களைவிட்டுக் கல்லெறி தூரம்போய் முழங்கால்படியிட்டு ஜெபிக்க ஆரம்பித்தார். கெத்செமனேயின போராட்டம் நேபுகாத்நேச்சாரின் ஏழுமடங்கு சூடாக்கப்பட்ட சூளையைப்போலிருந்தது. அந்தப் பக்தர்களைச் சூளையில்போடும்படி தூக்கிக்கொண்டுபோனவர்கள் அக்கினியின் அகோரத்தால் செத்தார்களே. தேவநீதியின் கோபாக்கினி பற்றியெரியும் அவ்வேளையில் யார் அவரை அண்டக்கூடும்? கல்லெறிதூரத்தில் அவர்களை வைத்ததே சரி. அருமைத்தூண்கள அவருக்காக அனுதாபப்பட்டு தங்கள் ஜெபத்தினால் அவரைத் தாங்குவார்கள் என்று அவர் எதிர்பார்த்தார். அவர்களோ நன்றாய்த் தூங்கினார்கள். 'தேற்றுகிறவர்களுக்குக் காத்திருந்தேன். ஒருவனையும் காணோம். ஒண்டியாய் ஆலையை மிதித்தேன்.' என்னைத் தனியே விட்டுவிட்டார்கள்.

(2) விசாரணையின் தனிமை. 'நான் முதல்விசை உத்தரவு சொல்லுகையில் ஒருவனும் என்னோடேகூட இருக்கவில்லை, எல்லாரும் என்னைக் கைவிட்டார்கள்' என்று விருத்தாப்பிய பவுல் பிற்காலத்தில் சொன்னதுபோல அவருடைய எஜமானும் சொல்லவேண்டியதாயிற்று. அவருக்கு விரோதமாக எத்தனையோ பேர் பேசினார்கள். அவரை ஆக்கினைக்குட்படுத்தும்படி அநேக பொய்ச்சாட்சிக்காரர் கூடிவந்தார்கள். அவருக்காகப் பேசும்படி எவனாகிலும் ஒருவன் வந்ததுண்டோ? சூம்பின கையாயிருந்து குணமானவன் எங்கே? குருடராயிருந்து பார்வையடைந்தவர்கள் எங்கே? குஷ்டரோகிகளாயிருந்து சுகமானவர்கள் எங்கே? செத்துப்பிழைத்தவர்கள் எங்கே? பிசாசுகள் நீங்கினவர்கள் எங்கே? அற்புதமாய்ப் பெருகின அப்பம் புசித்த திரள் எங்கே? பாவமன்னிப்பையும் சமாதானத்தையும் பெற்றவர்கள் எங்கே? ஐயோ, இவரிடத்தில் நன்மைபெற்றவர்கள் எத்தனை ஏராளம்! ஒருவனாகிலும் வந்து அவருக்காகப் பரிந்து பேசக்கூடாதா? பிலாத்துவின் மனைவி பேசினாள் மெய்தான். சொற்பனக்காரி பேச்சு நியாய ஸ்தலத்தில் செல்லுமோ? இதுநிற்க, உயிருக்குயிரான அன்பின் சீஷன் எங்கே? உயிரையும் கொடுப்பேன் என்ற மலையப்பன் எங்கே? ஐயோ, ஒருவனையும் காணோம். அவர் தனிமையாகக் கட்டுண்டவராய் ஆசாரியர் முன்னும், பிலாத்து, ஏரோதுமுன்னும் நிறுத்தப்பட்டு விசாரணையடைந்தார். என்னைத் தனியே விட்டுவிட்டார்கள்.



(3) சிலுவையின் தனிமை. அவர் பக்கத்தில் இரண்டுபேர் சிலுவையில் அறையப்பட்டிருந்தபடியால் ஒருவிதமாக அவர் தனிமையாயிருக்கவில்லை என்று நினைக்கலாம். அவர்களால் இவருக்கு என்ன ஆறுதல்? சிலுவையின் கொடிய வேதனையை அடைந்த ஆண்டவருக்குத் துணைசெய்வார் ஒருவருமில்லை. அருமையானவர்களில் சிலர் சிலுவையினடியில் நின்று தேம்பித்தேம்பி அழுதார்கள். அவர்களால் என்ன செய்யக்கூடும்? கள்ளர்களில் ஒருவன் அவரை நீதிபரர் என்றும், ஆண்டவரென்றும், அரசனென்றும் அறிக்கையிட்டான். குற்றவாளியின் சொல்லை அங்கீகரிப்பவன் யார்? இவ்விதமாக ஆண்டவர் யாதொரு துணையும் தேறுதலுமற்று குரூர மரணத்தைத் தனிமையாகச் சகித்தார். பரலோகமும் கைவிட்டது, பூலோகமும் கைவிட்டது. பரத்துக்கும் இகத்துக்கும் நடுவே தனித்துத் தொங்கினார். என்னைத் தனியே விட்டுவிட்டார்கள்.

II. ஏன் இப்படித் தனித்துவிடப்பட்டார்? சீஷர்களின் மிகுந்த பயம் அவரைக் கைவிட்டது. எஜமான் இக்கதிக்குள்ளாவார் என்று அவர்கள் நினைத்ததில்லை. அவர் பாவிகள் கையில் அகப்பட்டுக்கொண்டது சீஷர்களுக்கு மிகுந்த திகிலைக்கொடுத்தது. என்னசெய்வது என்று தெரியாமல் ஓடிப்போய்விட்டார்கள். தோட்டத்திற்குள் சிலர்மாத்திரம் வந்தபோது மலையப்பர் ஒருவனுடைய காதை வெட்டிப்போட்டார். அவர் குறிப்பாய்க் காதை வெட்டினதைப் பார்க்கும்போது எவ்வளவு தைரியத்தோடு பட்டயத்தை வீசியிருப்பார் என்பதைச் சொல்லவேண்டியதில்லை.

திரள்கூட்டம் தோட்டத்துக்கு வெளியே வந்தபோதோ சீஷர்கள் பயந்து ஓடிவிட்டார்கள். ஓடினபடியால் அவர்களைத் துரோகிகள் என்று சொல்லக்கூடாது. துரோகி அவன் ஒருவனே. துரோகியின் முடிவு தற்கொலையே. இவர்களோ கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாயிருந்தார்கள். பயத்தினால் அவர்கள் ஓடிப்போக நேரிட்டது.

இன்னொரு காரணம். இப்படி அவர் கைவிடப்படவேண்டியது நியாயமே. நாம் தேவனுக்கு விரோதமாகவும் மனுஷருக்கு விரோதமாகவும் பாவம் செய்தவர்களானதால் தேவனாலும் மனுஷராலும் நாம் கைவிடப்படவேண்டியது நியாயம். கிறிஸ்து நமது பிணையாளியாக வந்து நமது பாவங்களைத் தமதுமேல் ஏற்றுக்கொண்டார். அப்படி ஏற்றுக்கொண்டதினால் வரக்கூடிய சகல பாடுகளையும் படவேண்டியது நியாயமாயிருந்தது. அவர் நமது பாவங்களைச் சுமந்ததுமாத்திரமல்ல, நமக்காக அவர் பாவமாக்கப்பட்டார். பாவங்களைச் சுமப்பதற்கும் தாமே பாவமாவதற்கும் வித்தியாசம் மிகுதி. தேவன் 'பாவமறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்', (2 கொ. 5: 21). பாவமாக்கப்படுவதைப்போல் கிறிஸ்துவானவருக்குக் கசப்பானது வேறொன்றுமில்லை. நாம் பாவம் செய்யும்போது இரண்டு காரியங்களைக் கவனிக்கிறோம். பாவச்செய்கை ஒன்று. அச்செய்கையினால் உண்டாகும் கலக்கம், வெட்கம், பயம், அவமானம் முதலிய உள்ளான அனுபவம் இன்னொன்று. அவர் பாவமாக்கப்பட்டாரென்று சொல்லும்போது அவர் பாவமறியாதவராயிருந்தும், பாவத்தை விரும்பாதவரும் செய்யாதவருமாயிருந்தும், பாவிக்குப் பதிலாக அவர் பூரண பிணையாளியாக நின்றபடியால் பாவம் செய்தவனுக்கு இருக்கக்கூடிய பயம், வெட்கம், அவமானம் முதலான உணர்ச்சி அவருக்குள் உண்டானது. அவர் நமது பாவங்களைச் சுமந்ததும் பாவமானதும் வெளிவேஷம்போல் அல்ல, மெய்யாகவே என்று ஏசாயா சொல்லுகிறார். ஆ! அவருடைய பாடுகளின் இரகசியத்தையும் எவ்வளவுதூரம் பரிசுத்த ரட்சகர் தம்மை நம்மோடு ஒன்றாக்கினார் என்பதையும் நாம் அறியக்கூடுமானால் நமது உள்ளங்கள் பொங்காதோ? அவர்மீது அன்பு பெருகாதோ?

III. தனித்துவிடப்பட்ட இயேசுவின் மனநிலை எப்படியிருந்தது?

(1) அதிக மனவுறுதியுள்ளவராயிருந்தார். பயந்து பின்வாங்கவில்லை. என்னைக் கைவிட்ட மனிதருக்காக நான் ஏன் பாடுபடவேண்டும் என்று நினைக்கவில்லை. எவ்விதத்திலும் பாவிகளை இரட்சிக்கவேண்டும் என்று புறப்பட்டுவந்த ஆண்டவர் தமது தீர்மானத்தைவிட்டு வலது இடது புறம் விலகவில்லை. நீ என்னை மறந்தாலும் நான் உன்னை மறப்பதில்லை; நீ என்னைக் கைவிட்டாலும் நான் உன்னைக் கைவிடுவதில்லை என்று சொல்லிக்கொண்டு சிலுவையை நோக்கிச் செல்லுகிறார்.

(2) அதிகத் தைரியமுள்ளவராயிருந்தார். பிரதான ஆசாரியருக்கு முன்னும், பிலாத்து ஏரோதுக்கு முன்னும் நிறுத்தப்பட்டபோது எவ்வ



ளவு தைரியம் காண்பித்தார். விரோதிகள் சொல்லும் குற்றங்களுக்குக் கணக்கில்லை. துணைநின்று அவர் பட்சம் பேச ஒருவரில்லை. அப்படியிருந்தும் குற்றவாளியைப்போல் அல்ல, மகத்துவ ராஜனாக விளங்கினார். அவருடைய மௌனத்திலும் அவர் பேசின ராஜரீக வார்த்தைகளிலும் எவ்வளவோ தைரியம் காணப்பட்டதல்லவா?

(3) அன்பில் மாறாதிருந்தார். தம்மைக் கைவிட்ட சீஷர்கள்மேல் கடுகளவும் கோபமில்லை. அவர்களுடைய பெலவீனத்தை மன்னித்தார். உயிர்த்தெழுந்தபின்பு அதைச் சொல்லிப் பழிக்கவில்லை. அவர்களிடத்தில் அன்புவைத்தபடியே முடிவுபரியந்தம் அன்புவைத்தார்.

IV. இவ்வளவு மனஉறுதிக்குக் காரணம் என்ன? 'நீங்கள் என்னைத் தனியே விட்டுவிடுங்காலம் வரும். ஆனாலும் நான் தனித்திரேன், பிதா என்னுடனேகூட இருக்கிறார்.' பிதாவின் சமுகம் அவரோடிருந்ததும் அவருடைய ஜீவியத்திலும் ஊழியத்திலும் பிதாவின் முகமலர்ச்சி அவரைத் தைரியப்படுத்தினதும் மெய்தான். ஆனால் இச்சமயத்தில் பிதா கூடயிருக்கிறார் என்று சொல்லுவது சற்று விகற்பமாகத் தோன்றவில்லையா? சிலுவையிலிருந்து என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர் என்றாரே. கர்த்தரோ அவரை நொறுக்கச் சித்தமாகி அவரைப் பாடுகளுக்குட்படுத்தினாரே. அப்படியிருக்க பிதா கூடயிருக்கிறார் என்பதும் அதினாலே தைரியங்கொண்டு பாடுகளின் பாதையில் துணிந்து சென்றார் என்பதும் எப்படி?

இரட்சிப்பின் ஒழுங்கு பிதாவும் குமாரனும் சேர்ந்து உண்டாக்கினதல்லவோ? அவ்வொழுங்கில் குமாரன் பிதாவினால் கைவிடப்படவேண்டியது அவசியம். இப்படிக் கைவிடப்பட்டது பிதாவும் குமாரனும் முன்னமே அறிந்ததும் சம்மதித்ததுமான காரியமே. ஆபிரகாம் ஈசாக்கைப் பலிசெலுத்தின விஷயத்தில் நாம் ஆபிரகாமின் விசுவாசத்தையே பிரதானமாகக் கவனித்து ஈசாக்கை முற்றிலும் மறந்துபோகிறதுண்டே. அந்த விஷயத்தில் நாம் ஆபிரகாமை எவ்வளவு புகழுவோமோ அவ்வளவு ஈசாக்கையும் புகழவேண்டியதல்லவோ நியாயம். ஈசாக்குக்கு மனமில்லையென்றால் ஆபிரகாமைப் பிடித்துக் கீழேதள்ளிவிட்டு ஓடிப்போயிருக்கக்கூடுமே. அப்பொழுது ஈசாக்கு பலமுள்ள வாலிபனாயிருந்தானே. ஈசாக்கு மனதாரத் தன்னை ஒப்புக்கொடுத்தபடியால் தகப்பன் அவனைக் கையும் காலும் கட்டி விறகின்மேல் கிடத்தக்கூடியவனாயிருந்தான். தகப்பனும் மகனும் சேர்ந்து செலுத்தின பலியல்லவா? அப்படிப்போல இப்பாடுகளில் பிதாவின் முகம் மறைந்து, அவர் இவரைப் பாடுகளுக்குட்படுத்துகிறதாயிருந்தாலும், அந்த ஒழுங்கு பிதாவின் ஒழுங்காயிருப்பதால் பிதா கூடயிருக்கிறார் என்றார்.

சிநேகிதர்கள் தம்மைக் கைவிட்டபோதிலும், சீஷர்கள் தம்மைத் தனியேவிட்டு ஓடிப்போனபோதிலும், பிதாவின் முகமலர்ச்சியுள்ள பார்

லையை நாம் அனுபவிக்கக்கூடாமற்போனபோதிலும், இப்படி எல்லாராலும் கைவிடப்பட்டுத் தனித்து நிற்கும் சமயத்திலும், சகலமும் தமது பிதாவின் ஏற்பாடும் சித்தமுமாயிருக்கிறதென்பதை அவர் திட்டமாக அறிந்து, என் பிதா என்னுடனே கூடயிருக்கிறார் என்று சொன்னார். பிதாவின் சித்தம் எங்கேயோ அங்கே பிதாவுண்டு. அந்தச் சித்தம் சில வேளைகளில் ஆனந்தமாயும் மகிழ்ச்சியாயுமிருக்கும். சிலவேளைகளில் அந்தச்சித்தம் பாடுகளும் கண்ணீருமுள்ளதாயிருக்கும். மகிழ்ச்சியான ஜீவியத்தில்தான் தேவனுண்டு, கண்ணீரின் பாதையில் தேவனில்லை என்று கலங்கக்கூடாது. தேவசித்தப்படி குடியிருக்கிறோம், தேவசித்தப்படி வேலைசெய்கிறோம், தேவசித்தப்படி போஷிக்கப்படுகிறோம் என்ற நிச்சயம் இருக்கிறவனாயில் நமது பாதை இன்பமாயிருந்தாலும் கசப்பாயிருந்தாலும் தேவன் கூடயிருக்கிறார் என்பதற்குச் சந்தேகமில்லை. எல்லாம் விரோதமாகத் தோன்றும் காலத்திலும் கிறிஸ்துவில் விளங்கின இந்த விசுவாசம் நம்மிலும் காணப்படுவதாக.

S. பரமானந்தம்.

---

## ஆதியாகமம் ஓர் மிஷனெரி நடபடியாகமம்

தேவன் ஓர் ஆளாகத் தமது திருவுளச் சித்தத்தை நிறைவேற்றத் தகாத ஆட்களையும் அதற்குதவியாயிராத சங்கதிகளையும் தள்ளிவிட்டு தமது பரிபூரண சித்தத்தை நிறைவேற்றத்தகுந்த ஆட்களைத் தெரிந்தெடுத்து அவர்களைப் பயிற்றுவிக்கிறதை இவ்வாகமத்தில் பார்க்கலாம். 'ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்' என்று ஆரம்பிக்கிறது. சிருஷ்டிப்பின் விபரம் ஒருவாறு சொல்லப்பட்டபோதிலும் அது பூரண விபரமல்ல. வானம், பூமி, ஊர்வனம், பறவைகள், மிருகம், மனுஷன் என்று பொதுவாய்ச் சொல்லியிருக்கிறதேயொழிய பூமிசாஸ்திர மேரையாய் அல்லது ஒவ்வொன்றையும் பிரத்தியேகப்படுத்தி அவைகளை விஸ்தாரமாய்ச் சொல்லவில்லை. அது இவ்வாகமத்தின் நோக்கமல்ல.

அப்புறம் 'வம்சவரலாறு' என்ற பதம் இவ்வாகமத்தில் 10 தடவை வருகிறது.

1. வானமும் பூமியும் சிருஷ்டிக்கப்பட்ட வரலாறு. அதி. 2: 4—4: 26. ஏறக்குறைய மூன்று அதிகாரங்கள் இதற்கென்று உபயோகித்திருக்கிறது. ஆனால் அவைகளின் பேர் மாத்திரம் வருகிறதேயொழிய அவைகளின் விஸ்தரிப்பு அல்லது நாளதுவரை பூமியில் அவைகளைப்பற்றிய சாஸ்திரமேரையான விபரம் எத்தனையோ புஸ்தகங்கள் எழுதப்பட்டிருந்தும் அவ்விதமாய் இங்கே சொல்லப்படவில்லை. அதுவும் இவ்வாகமத்தின் நோக்கமல்லவென்பது தெளிவாயிருக்கிறது.



2. ஆதாமின் வம்ச வரலாறு. அதி. 5—6: 8. மனுஷன், மனுஷ ஜாதியின் வரலாறு. இவைகளைப்பற்றி புஸ்தகங்கள் கடந்த [illegible]0 வருஷங்களுக்குள் ஏராளமாய் எழுதப்பட்டுள்ளன. ஆனால் இவ்வாகமத்திலோ ஒரே அதிகாரமட்டும் அது விஷயத்துக்கென்று விடப்பட்டிருக்கிறது.

3. நோவாவின் வம்ச வரலாறு. அதி. 6; 9—9: 29.

4. நோவாவின் குமாரருடைய வம்ச வரலாறு. அதி. 0: 1—11: 9.

5. சேமுடைய வம்ச வரலாறு. அதி. 11: 10—26.

6. தேராகுடைய வம்சவரலாறு அதி. 11: 27—25: 11. இந்த ஒரு மனுஷனுக்கு 14 அதிகாரங்கள் விடப்பட்டிருக்கின்றன. வானம், பூமி சிருஷ்டிக்கப்பட்ட விபரம், மனுஷஜாதியுண்டான விபரம் இவற்றைப் பதினொரு அதிகாரத்தில்மட்டும் சொல்லி ஆபிரகாமுக்குப் பதினாலு அதிகாரங்கள் கொடுத்திருக்கிறதைப் பார்க்கும்போது ஆபிரகாமின் விசேஷமே இவ்வாகமத்தின் முக்கியமென்று காட்டுகிறது.

7. இஸ்மவேலின் வம்ச வரலாறு. அதி. 25: 12—18. இவனுடைய வம்ச விபரம் 7 வாக்கியங்களில்மட்டும் காட்டியிருக்கிறது.

8. ஈசாக்குடைய வம்ச வரலாறு. அதி. 25: 19—35: 29. இவனுடைய விபரம் 10 அதிகாரங்களில் சொல்லியிருக்கிறது.

9. ஏசாவின் வம்ச வரலாறு. அதி. 36: 1—37: 1 இவனுக்கு ஒரு அதிகாரம் மாத்திரம் கொடுக்கப்பட்டது.

10. யாக்கோபுடைய சந்ததியின் வரலாறு. அதி. 37: 2—50: 26 இவனுக்கு 14 அதிகாரங்கள். இவைகளின் சுருக்கத்தைப் பார்த்தால், மனுஷர் படித்து ஞானமடையத்தக்க வானசாஸ்திரம், பூமிசாஸ்திரம், முதலிய சாஸ்திரங்களுக்கெல்லாம் ஆதி உற்பத்தி சரித்திரத்தைக்காட்டிய விசேஷங்கள் 11 அதிகாரங்களில்மட்டும் சொல்லியிருக்க ஆட்களின் சரித்திரம்மட்டும் மீதியான 39 அதிகாரங்களில் வருகிறது. அவர்களிலும் 12-ம் அதிகாரமுதல் வருகிற ஐந்து பேர்களின் சரித்திரத்தில் மூன்று பேருடைய சரித்திரம் மட்டும் 38 அதிகாரங்களில் சொல்லியிருக்கிறது. ஆகையால் இவ்வாகமம் பின்னால் காட்டிய ஆபிரகாம, ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களின் சரித்திரத்தையே முக்கியப்படுத்துகிறதென்று பார்க்கிறோம். இஸ்மவேலுக்கும் ஏசாவுக்கும் 'வம்ச வரலாறுகள்' கொடுத்தபோதிலும் அவர்கள் சரித்திரத்தை முறையே 8 வாக்கியங்கள், 1 அதிகாரத்தில் சொல்லிவிட்டு மற்றவர்களின் சரித்திரத்தையோ விஸ்தாரமாய்ப் பேசுகிறது. லோத்து, யோசேப்பு இவர்கள் சரித்திரங்கள் இடையே வந்தபோதிலும், யோசேப்பின் சரித்திரம்தான் இவ்வாகமத்தின் முடிவில் மிகவும் விசேஷித்ததாயிருந்தபோதிலும் இவர்களுடைய வம்சவரலாறுகள் தனியாய்க் காட்டப்படவேயில்லை. ஆகவே தேவன் ஆபிரகாமை ஓர் விசேஷித்த நோக்கத்தோடு தெரிந்துகொண்டு அவன் மூலமாய் தமது சித்

த்தின் தீர்மானத்தை நிறைவேற்றத் திருவுளங்கொண்டு அதற்கென்று அவனைப் பயிற்றுவித்தார் என்று அறியலாம்.

முதலாவது, ஆபிரகாமுடைய மார்க்க பக்தி, சன்மார்க்க ஒழுக்கம் விசேஷித்தது. 'ஆபிரகாம் தன் பிள்ளைகளுக்கும் தனக்குப் பின்வரும் தன் வீட்டாருக்கும்: நீங்கள் நீதியையும் நியாயத்தையும் செய்து கர்த்தருடைய வழியைக் காத்து நடவுங்கள் என்று கட்டளையிடுவான் என்பதை அறிந்திருக்கிறேன்' என்று தேவன் தாமே அவனைக் குறித்துச் சொல்லுகிறார். நிம்ரோத்தைப்போல் பலத்த வீரனாவான், பட்டணங்களைக் கட்டுவான், நூதனமானவைகளைக் கண்டுபிடிப்பான் என்று தேவன் ஆபிரகாமைத் தெரிந்துகொள்ளாமல் தமது சித்தம் நிறைவேறத்தக்கதாக தன் பிள்ளைகளுக்கும் வீட்டாருக்கும் நியாயத்தையும் நீதியையும் கற்பிப்பான் என்று சொல்லுகிறார். ஆபிரகாமுக்கும் அவன் சந்ததிக்கும் வாக்குத்தத்தங்கள் 5 தடவை கொடுக்கப்பட்டிருக்கிறது. (1) ஆதி. 12: 3-ல் பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும். (2) சோதோமின் அழிவுக்கு முன்னான தரிசனத்தில் ஆதி 18: 17 'அவனுக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்'. (3) மோரியா மலையின் காட்சியில், ஆதி. 22: 18 உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும். (4) ஈசாக்குக்கு, ஆதி. 26: 5-ல் உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும். (5) யாக்கோபுக்கு ஆதி. 28: 14. உனக்குள்ளும் உன் சந்ததிக்குள்ளும் பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும் என்று 5 தடவையாக புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. தேவன் ஆபிரகாமை ஓர் மிஷனெரியாகவும் அவனுடைய சந்ததியை ஓர் மிஷனெரி சந்ததியாகவும் தெரிந்துகொண்டு இந்த விசேஷித்த நோக்கத்திற்கென்றே அவர்கள் கடற்கரை மணலைப்போலவும் வானத்து நக்ஷத்திரங்களைப்போலவும் பெருகுவார்கள் என்றும் அந்தத் தமது சித்தத்தை நிறைவேற்றவே உலகத்தின் மத்தி ஸ்தானமாகிய கானான் தேசத்தை அவர்களுக்குச் சுதந்தரமாகக் கொடுப்பேனென்றும் வாக்களித்தார்.

இரண்டாவது, ஆபிரகாம் பலத்த விசுவாசியாயிருந்ததோடு நீதியை விரும்பும் சுத்த மனச்சாட்சியுள்ளவனாயிருந்தான். தேவன் யாரை மிஷனெரியாக உபயோகிப்பார் என்றால் தூரத்துக் காட்சியையுடைய விசுவாசியும், தற்காலத்து நடபடிக்கைகளில் திருப்தியடைந்துபோகாமல் பெரிய காரியங்களை எதிர்நோக்குகிறவனும், இவ்விதக் காட்சிகளையுடைய ஒருவன் நீதியை நிலைநிறுத்துகிறவனுமாயிருக்கிறவனைத்தான் ஆண்டவர் உபயோகிப்பார். தேவன் ஆபிரகாமைப் பார்த்து 'நான் செய்யப்போகிறதை ஆபிரகாமுக்கு மறைப்பேனோ' என்றார். ஆபிரகாம் சோதோமின் அழிவையறிந்தவனாய், தன் மனச்சாட்சியில் நீதிக்கும் அநீதிக்குமுள்ள வித்தியாசத்தையும் அதன் பலாபலனையும் உணர்ந்தவனாய் 'துன்மார்க்கரோடு நீதிமா



னையும் அழிப்பீரோ?' என்றும் சர்வலோக நியாயாதிபதி நீதிசெய்யாதிருப்பீரோ என்றும் பேசுகிறான். ஆண்டவர் ஆபிரகாமின் நீதிநியாயத்தை வியந்துகொண்டவர்போல், இப்பேர்ப்பட்டவன்தான் தமது சித்தத்தை நிறைவேற்றத்தக்கவன் என்று அகமகிழ்ந்தவர்போல அவன் விண்ணப்பத்துக்கு உத்தரவாக அவனுடைய நேர்மைக்கேற்ற உத்தரவு சொன்னதுமட்டுமல்ல, சர்வலோக நியாயாதிபதி நீதிசெய்வது மாத்திரமல்ல, சன்மார்க்கர் நிமித்தம் துன்மார்க்கரையும் காப்பாற்றுவார்' என்றும் சொல்லுகிறார். 50 நீதிமான்களிருந்தால் அவர்களையும் காப்பாற்றி அவர்கள் நிமித்தம் பட்டணம் முழுவதையும் அழிக்கமாட்டேன் என்கிறார். இப்போது மிஷனெரி ஆச்சரியமடைந்து 5 பேர் குறைந்தால் எப்படி? என்கிறான். அதற்கும் சம்மதிக்கிறார். அப்புறம் 40, 30, 20, 10 நீதிமான்கள்வரையும் இருந்தால் என்ன? என்பதுபோல் மன்றாடுகிறான். ஆண்டவரும் அம்மட்டும் சம்மதிக்கிறார். ஆனால் அதற்குமேல் 5 அல்லது ஒரு நீதிமான் வரையும் இருந்தாலும் இரட்சிக்கவேண்டும் என்று ஆபிரகாம் போராடவில்லை. என்றாலும் அவனில் விளங்கிய விசுவாசம், அவ்விசுவாசத்தால் உண்டான ஜெபசிந்தை, இவைகள் எவ்வளவு சிறந்தவை.

மேலும் இவ்வாகமத்தில் தேவ நோக்கத்துக்கேற்காத காரியங்கள் முக்கியப்படுத்தப்படாமல் அவைகள் வருகிற இடங்களில் பேர்மட்டும் காட்டப்பட்டும் தகாத ஆட்களின் சரித்திரம் விஸ்தரிக்கப்படாமலும் இருக்கின்றன. நாகரீகம், சங்கீதம், விவசாயம், சிற்பவேலை, யுத்தவீரம், கைத்தொழில் முதலியவைகள் ஓரோரிடத்தில் காட்டப்பட்டு விடப்பட்டன. அவைகள் இவ்வாகமத்தின் நோக்கத்திற்கிசைந்தவையல்ல. அப்படியே பொருளாசையுள்ள லோத்து, கலகக் குணமுள்ள இஸ்மவேல், இச்சைமேற்கொண்ட ஏசா இவர்களுடைய சரித்திரங்கள் விசேஷித்துக் காட்டப்படவில்லை. இவர்கள் தங்கள் சொந்த இச்சையின்படி நடந்து தங்களைக் கெடுத்துக்கொண்டதுமல்லாமல், எவ்விதத்திலும் மற்றவர்களுக்கும் பிரயோஜனமாயிருந்ததில்லையென்று பார்க்கிறோம். அவர்களுடைய சரித்திரத்தால் உத்தமர்களின் சரித்திரம் மிகவும் தெளிவாய்க் காணப்படுகிறதேயல்லாமல் மற்றப்படி அவர்கள் உலகத்துக்கு அவர்கள் ஜீவியமாவது செய்கையாவது, நன்மை விளைவிக்கத்தக்கவைகளாயில்லை. ஆனால் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்னும் பக்தர்களோ தாங்கள் காண்கிறவைகளின்பேரில் நம்பிக்கை வைக்காமல் தாங்கள் காணாதவைகளின்பேரில் நம்பிக்கைவைத்து தேவவாக்கை விசுவாசித்து உலகத்துக்கு ஆசீர்வாதமாய் விளங்குகிறார்கள்.

மூன்றாவது, ஆபிரகாம் ஓர் உத்தம போதகன். மிஷனெரியானவன் போதகனாயிருக்கவேண்டும். தன் சொந்தக் குடும்பத்தைப் போதிக்கிறவனாயிருக்கவேண்டும். உலகத்துக்குப் பேர் நன்மையை இவ்விதமாய் உண்டாக்கத்தக்கவனாயிருக்கவேண்டும். அமெரிக்காவின் ஓர் பாகத்தில் செவிடு, ஊமை, குருடு இக்குறைகள் ஒருமிக்கப்பெற்ற ஓர் குழந்தை பிறந்தது.

அப்பிள்ளையின் பேர் ஹெலன் கெல்லர். இயற்கையறிவும் வேறெவ்வித அறிவும் காணாய் அடையக்கூடாத நிர்ப்பந்த நிலைமையிலிருந்தது. சல்லிவன் என்னும் ஓர் துரைசானி மிகுந்த பொறுமையோடும், திறமையோடும், சுயவெறுப்போடும் அப்பிள்ளைக்குப் போதித்து எவ்வளவோ காலத்தைச் செலவிட்டு அதின் பலனாக அப்பிள்ளை கற்றுத் தேறி கலாசாலைப் பட்டமும் பெற்றனள். சல்லிவன் துரைசானியின் பேர் நூற்றாண்டுகளாய்ப் போற்றப்படுகிறதல்லவா? இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர் குடிக்கக்கொடுக்கிறவன் தன் பலனையடையாமற் போவதில்லை. ஓய்வு நாள் பள்ளிக்கூடத்து உபாத்திமார், உபாத்திச்சிமாரோ, சிறுவர்களுக்குக் கல்வியூட்டுபவர்களோ, சபையில் பற்பல நிலைமையுள்ளவர்களுக்கு உபதேசம் பண்ணுகிறவர்களோ, யாரும் இளக்கரித்துப்போகாமல், விசுவாசத்தோடும், பொறுமையோடும் தங்கள் ஊழியத்தை சுயவெறுப்பின் சிந்தையோடு நடத்துவார்களானால் அவர்கள் தேவனுடைய திருவுளச்சித்தத்தை நிறைவேற்றுகிற மிஷனெரிகளாவார்கள். இவர்களுடைய சரித்திரங்கள் புஸ்தகசாலைகளில் நிறைந்திருக்கும் புஸ்தகங்களில் வரையப்படாவிட்டாலும், கற்கள் கோபுரங்களில் சிற்றுளியால் வெட்டப்பட்டு ஞாபகப்படுத்தப்படாதபோதிலும் உலகத்தை ரட்சித்து தமது குமாரனைப்பற்றும் அறிவாகிய வெளிச்சத்தை யாவரும் அடையவேண்டும் என்ற தீர்மானமுள்ள நித்திய தேவனுடைய ஞாபகப் புஸ்தகத்தில் பதிக்கப்பட்டு நித்திய பலனையடையும்படி வாசிக்கப்படும் என்பதற்குச் சந்தேகமில்லை.

## On the Spiritual Life of the Evangelists

### உபா. 34: 12. கர்த்தரை முகமுகமாய் அறிந்த மோசே

ஒரு வரியில் இவன் ஜீவியத்தை வரையவேண்டுமானால் தேவகாட்சி கண்டு, அதால் நிரப்பப்பட்ட ஜீவியம் என்கலாம். தேவகாட்சியை எந்தெந்த விசேஷித்த காரியங்களுக்கென்று கண்டான்.

1. இஸ்ரவேலரின் நிர்ப்பந்தத்தை அறிய, காட்சிகண்டான். யாத். 3: 7—10. இஸ்ரவேலரின் நிர்ப்பந்தமான அடிமைத்தனக் காட்சியை முட்செடியிலுண்டான தரிசனத்தினால் கண்டான்.

3: 7. எகிப்திலிருக்கிற என் ஜனத்தின் உபத்திரவத்தை நான் பார்க்கவே பார்த்து ஆளோட்டிகளினிமித்தம் அவர்கள் இடுகிற கூக்குரலைக் கேட்டேன். அவர்கள் படுகிற வேதனைகளை அறிந்திருக்கிறேன்

3: 9. இஸ்ரவேல் புத்திரரின் கூக்குரல் என் சந்நிதியில் வந்து எட்டினது. எகிப்தியர் அவர்களை ஒடுக்குகிற ஒடுக்குதலையும் கண்டேன்.

3: 10. என் ஜனத்தை எகிப்திலிருந்து அழைத்தும் வரும்படி உன்னைப் பார்வோனிடத்திற்கு அனுப்புவேன் வா.



இங்கே தேவகாட்சியை முட்செடியிலுண்டான தரிசனத்தினால் கண்ட மோசே, புறத்தியாருடைய நிர்ப்பந்த நிலைமையைக்காண காட்சிபெற்றார் என்கலாம். இன்னொர் பக்தன் ஏசாயா என்பவர் தேவதரிசனத்தின் காட்சியைக்காணவே தன் நிர்ப்பந்த நிலைமையைக்கண்டான். ஏசா. 6: 4-6. சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே, நீர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர், வானமும் பூமியும் உமது மகிமையுள்ள மகத்துவத்தால் நிறைந்திருக்கிறது என்று சேராபீன்கள் ஆராதித்த அதிமகத்வ காட்சியைக் காணவே, ஐயோ நான் அதமானேன், அசுத்த உதடுகளுள்ளவன், அசுத்த உதடுகளுள்ள ஜனங்களின் மத்தியில் வாசம் பண்ணுகிறவன். சேனைகளின் தேவனாகிய கர்த்தரை என் கண்கள் கண்டதே என்றான்.

அருமையானவர்களே, தேவகாட்சியும் தேவசமுகமும் நமக்குக்கிடைக்கும்போது, முதலாவது நமது நிர்ப்பந்தமான நிலைமையை நமக்குக் காட்டுகிறது. நாம் பாவிகள் என்று அறிவோம். என்றாலும் தேவனுடைய பரிசுத்தத்தின் காட்சி நம்மில் காணப்படவே, தேவன் நம்மைப் பார்க்கிறபிரகாரம் பார்த்து, நம்மைத் தூளிலும் சாம்பலிலும் தாழ்த்துவோம். இவ்வித நிர்ப்பந்தமான காட்சியை நமது சொந்தவிஷயமாய்க் கண்டதுண்டா? அப்பால், மோசே புறத்தியாருடைய நிர்ப்பந்த காட்சியைக் கண்டதுபோல, நாம் தேவதரிசனம பெற்று அந்த நிர்ப்பந்த காட்சியையும் அறிந்ததுண்டா?

நம்முடைய தேசத்தின் நிர்ப்பந்த காட்சி நமக்குத் தெரிகிறதா? பாவ அடிமைத்தனக்காட்சி, இந்தியாவைப்பிடித்திருக்கிற ஜாதிவித்தியாசமான கட்டின் நிர்ப்பந்தகாட்சி, சாத்தானின் அடிமைத்தனக்காட்சி, நாள் பார்க்குதல், குறிகேட்குதல இவைகளின் நிர்ப்பந்தமானகாட்சி. இக்காட்சியை நம்முடைய கண்களுக்குமுன் நாம் கண்டிருந்தாலும், தேவகாட்சி நமக்குப் பூரணமாய்க் காட்டப்படும்போது மாத்திரம் அவைகளின் தன்மையை அதின் உள்ள யதார்த்தமான நிலைமையில் அறிவோம். மோசே முன்னமே இப்படிப்பட்ட காட்சிகளைக் கண்டு விசனப்பட்டிருந்தான். இப்போதோ அந்த நிர்ப்பந்தக்காட்சியை தேவன் பார்க்கிற பிரகாரம் பார்த்தான். இப்படிப்பட்ட காட்சியைக்கண்ட ஊழியர் மாத்திரம் பின்னால் சொல்லப்பட்ட ஒரு பெரிய விடுதலையைச்செய்ய கிருபைபெறுவார்கள்.

2. பிரமாணங்களைப் பெறக் காட்சிபெற்றான். யாத். 19: 14-20, 21. ஒரு மிருகமாவது மனிதனாவது மலையைத்தொட்டால் செத்துப்போம் என்று தேவகட்டளை பிறக்க, இவனோ ஸ்தூலசரீரமற்ற சூட்சம சரீரம் உடையவன்போல காரிருளுக்குள்ளும் புகை, அக்கினிக் காடாகிய மலைக்குள்ளும் சென்று தேவ சமுகத்தில் போய்நிற்கிறான், தேவகற்பனையை பெறுகிறான். தேவமனசை தேவன் கற்பலகைகளில் எழுதப்பார்க்கிறான். யாதொரு சேதமும் அடையவில்லை. காரணம்: தேவசமுகத்தினால் சூழப்பட்டிருக்கிறான். தேவகாட்சியை ஓயாமல் பார்த்தவனாயிருக்கிறான். இஸ்ரவேலர் 12-ம் அதி. பெற்ற விடுதலை சரீரப்பிரகாரமான விடுதலை

யென்றே சொல்லவேண்டும். முன்னே பார்த்த நிர்ப்பந்த ஸ்திதியிலிருந்த இஸ்ரவேலர் ஆவிக்குரிய விடுதலையை இந்தச் சீனாய் மலையில் பெறுகிறார்கள். இங்கே அவர்கள் தேவவிஷயமாய் விசேஷித்த சம்பந்தத்துக்குள்ளாக்கப்பட்ட தேவகற்பனையைப்பெறுகிறார்கள். இஸ்ரவேலரின் ஆவிக்குரிய நிர்ப்பந்தத்தைத்தவிர்க்க, தேவமனசாகிய அவருடைய வசனம் அவர்களுக்கு அழியாமையையும் நித்தியஜீவனையும் கொடுக்க, அவர்கள் மத்தியில தொனிக்கிறது. அப்படியே நாமும் நம்முடைய நிர்ப்பந்தத்தையும் நம்முடைய தேசத்தாரின் நிர்ப்பந்தகாட்சியையும் கண்டபின், நாம் அடையவேண்டிய தேவகாட்சி என்ன? பிரமாணங்களைப்பெற, தேவகாட்சி அடையவேண்டும். நம்முடைய தேசத்தாரின் நிர்ப்பந்தத்தை தவிர்க்கவும், அவர்களுக்குள் அழியாமையையும் நித்திய ஜீவனையும் விதைக்கவும், தேவ வசனக்காட்சியையும், தேவ திருமனசின் காட்சியையும் பெற்று அவர்களுக்குக் கொடுக்கவேண்டாமா? இந்தக் காட்சி நமக்கு இப்போது கிடைக்கிறது எப்படி? பிரமாணங்களைப்பற்றிய காட்சியை எங்கே அடையலாம்? அவருடைய திருவசனத்தில் தேவன்பேசிய யாவும் அடங்கியிருக்கிறது தேவதிருமனசு அங்கே எழுதிவைக்கப்பட்டிருக்கிறது. தேவதாசர்யாவரும் அந்தச் செய்தியால் நிரப்பப்பட்டிருக்கவேண்டும். அன்று எம்மாவூருக்குப் போனவர் தம்முடைய சீஷரின் இருதயங்களைத் திறந்து தேவவசனக் காட்சியை அடைய கிருபை அளித்ததுபோல நமக்கும் அவர் செய்யவேண்டும். அவரே தமது வசனத்திலிருந்து நமக்குப் போதித்து கொடுக்கும்போது, இந்துக்களிடம் பேசவேண்டிய செய்தியையும் அவருடைய வசனத்திலிருந்து நமக்குக் கொடுப்பார். கிறிஸ்து பிறரிடம் பேசவேண்டிய செய்தியையும் கொடுப்பார். உடன் ஊழியரிடம் பேசவேண்டிய செய்தியையும் அருளுவார்.

3. வழிநடத்தக் காட்சிகண்டான். யாத். 33: 11, 12. உம்முடைய வழியை எனக்கு அறிவியும் என்று கேட்ட மோசேக்கு, என் சமுகம் உன்னோடே செல்லும் என்ற உத்தரவு கிடைத்தது. வா. 14. நமக்கு இம்மானுவேலாக வந்த நமதாண்டவர் உலகத்தின் முடிவு பரியந்தமும் சகல நாட்களிலும் உங்களோடேகூட இருப்பேன் என்று தமது திருச்சபைக்கும் விசேஷமாய் தமது சுவிசேஷ ஊழியமாய் ஊழியஞ்செய்வோருக்கும் வாக்களித்திருக்கிறார். இந்தக் காட்சியைக் காணவிரும்பி, அந்த வாக்குப்படி நமக்கு செய்விக்க அவருடன் போராடி, கர்த்தருடைய ஊழியத்தைச் செய்யப்புகும்போதெல்லாம் அவர் நம்முடன் இருக்கிறதாகவும் செல்லுபவராகவும் அவரைக் கண்டிருக்கிறோமா? ஊழியத்தைச்செய்ய வழிநடத்தும், ஊழியஞ்செய்யப்படவேண்டிய இடத்துக்குப்போக வழிநடத்தும், பேசவேண்டிய ஆட்களிடம் போய்ச்சேர வழிநடத்தும், கேட்போருக்கு ஏற்றபிரகாரம் பேச வழிநடத்தும் என்று கேட்போமாக.



4. தேவமகிமையைக் காண காட்சிபெற்றான். யாத். 33: 18. என்னண்டையில் ஒரு இடமுண்டு. நீ அங்கே கல்மலையில் நில்லு. வா. 22.

காட்சி, அதி. 34: 6, 7. தேவலட்சணம் உருவகமெடுத்து மோசேக்கு முன்சென்றது. நமக்கோ தேவகுமாரன் பூமியில் வந்தபோது, தேவலட்சணம் உருகமெடுவந்து ஒரு சரீரத்துக்குள் அமைந்துவந்தாற்போல வந்தார். அவருடைய மகிமையைக் கண்டோம். அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவேயிருந்தது. யோ. 1: 14. நமதாண்டவரும் என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான் என்றார். யோ. 14: 7, 8.

இவ்விதமாக தேவகுமாரன் பூரணமாய் பிதாவை வெளிப்படுத்தினவராக, அவருடைய பரிசுத்த மகிமையாகிய அவருடைய அன்பின் பூரணத்திலும், தாழ்மையின் பூரணத்திலும், சுயவெறுப்பின் பூரணத்திலும், உருக்க இரக்கங்களின் பரிபூரணத்திலும், இவரிடம் விளங்கிய பரிசுத்த மகிமையைக் கண்டோமா? எல்லாரிலும் சாந்தமானவர் மோசே. இங்கே அவருக்குக் காட்டப்பட்டது தேவ அன்பின் காட்சி. அந்தக் காட்சியை காணவே அவர் அன்பாகவும் சாந்தமாகவும் மாறினார். நாமும் இயேசு சுவாமியில் விளங்கிய ஆச்சரிய அன்பின் காட்சியைக்காண, அவர் அன்பாகவிருக்கிறதுபோல நாமும் அன்பாக மாறியிருக்கிறோமா?

இயேசுவைக் காண காண இம்மையில் பாவந்தீரும்
இயேசுவைக் காண காண இகத்தில் பரம் உதிக்கும்
இயேசுவைக் காண காண தீர்ப்பின் சமுகம் தோன்றும்
இயேசுவைக் காண காண தேவமகிமை ஒளிவிடும்
இயேசுவைக் காண காண இம்மை மறுமையாகும்.

5. தான் கண்ட தேவமகிமை சபையின் நடுவில் தங்கியிருக்கிறதற்காக வாசஸ்தலத்தை மலையில் காண்பிக்கப்பட்ட மாதிரிப்பிரகாரம் செய்ய காட்சிபெற்றான். யாத். 25: 40; 26: 30; 40: 34, 35; எபி. 9: 5. மாதிரிப்படி செய்ய எச்சரிக்கையாயிரு.

மோசே கண்ட வாசஸ்தலத்தின் காட்சி இயேசுகிறிஸ்துவே. அப்பால் அது அவருடைய திருச்சபையையும் குறிக்கும். கிறிஸ்து சபையும் அதிலுள்ள ஒவ்வொருவரும் தேவமகிமை எப்போதும் தங்களின் மத்தியில் தங்கியிருக்கத்தக்கதாக அவருடைய காட்சியை பூராவாகப் பெற்று, அவருடைய சமுகத்தில் தங்கியிருக்கவேண்டும். பரி. பவுல் அவ்வித காட்சியைக் கண்டார். எபே. 3: 17–21. உள்ளான மனிதன் ஆவியினால் வல்லமையாய் பலப்படவும், (2) கிறிஸ்து விசுவாசத்தினால் நம்முடைய இருதயங்களில் வாசமாயிருக்கவும். (3) தேவ அன்பின் ஆழமும் உயரமுமான காட்சிபெற்று வாழவும். (4) தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிரப்பப்படவும் காட்சிபெற்றார். இது ஒவ்வொரு சாதாரண கிறிஸ்தவனுக்

331



காகவும் காட்டப்பட்ட காட்சி. அப்படியானால் நாம் எவ்வளவாய் இந்த மகிமையினால் கிரப்பப்பட்டிருக்கிறோம்.

6. மரணத்திலும் காட்சிபெற்றான். உபா. 34: 5, 6. தேவன் அவனைப்பார்த்து நீ செத்துபோ என்று கட்டளையிடசாகிறான். ஆண்டவர் அவனை அடக்கம்பண்ணுகிறார். அவனுடைய ஆவியோ என்றும் தம்முடன் இருக்க, தாம் எடுத்துக்கொள்கிறார். இந்த மரணம் எவ்வளவு பாட்சிமையான மரணம்!! பயங்கர மரணமல்ல. தேவசமுகம் கூடவேயிருந்த மரணம். தேவனே கல்லறை தோண்டி அடக்கம்பண்ணின மரணம்.

## நோட்டீஸ்

கனம் D. J. Harris ஐயரவர்கள் சங்கீதத்தின் முதலாம் புஸ்தகத்தின்பேரில் எழுதிய தியானக்குறிப்புகளடங்கிய புஸ்தகம் ஒன்று பிரசுரமாயிருக்கிறது. அதையாவரும் வாங்கி வாசிக்க விரும்புகிறோம். அதன் விலை அணா 8. தபால் கூலி வேறே. வேண்டியவர்கள் அவர்கள் விலாசத்துக்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

Rev. D. J. HARRIS, B. A.,
*Perpilankulam,*
*Panagudi Post, Tinnevelly Dt.*

### சந்தாவரவு. Nov. 1916—Feb. 1917

| | Rs. | A. | P. | | Rs. | A. | P. |
|---|---|---|---|---|---|---|---|
| Rev. Samuel Joseph | 3 | 0 | 0 | Rev. C. N Eames | 1 | 14 | 0 |
| Miss S. Munisami | 0 | 7 | 0 | Mrs E. S. Nalliah Pillai | 0 | 4 | 0 |
| Mr. S. Jivanandham | 1 | 10 | 0 | ,, Minton Thomas | 0 | 4 | 0 |
| Rev. C. N. Ramasami | 7 | 2 | 0 | ,, Appasami Pillai | 0 | 8 | 0 |
| ,, S. Abraham | 1 | 4 | 0 | Maragatham Ammal | 0 | 4 | 0 |
| Mr. J. B. David | 0 | 14 | 0 | Mr. S. Asirvatham | 0 | 7 | 0 |
| ,, D. Joseph | 0 | 7 | 0 | ,, V. Samuel | 0 | 8 | 0 |
| Sasa Varangu Vathan | 0 | 14 | 0 | ,, S. Samuel | 0 | 7 | 0 |
| Mr. T. E. Mathan | 0 | 7 | 0 | ,, P. Gnanamoni | 0 | 14 | 0 |
| Rev. J. C. Bunyan | 1 | 2 | 0 | Mrs. H. E Dunhill | 1 | 0 | 0 |
| ,, G. Isaac | 0 | 7 | 0 | Mr. S. David Catechist | 0 | 8 | 0 |
| Mr. F. J. Arulappa Pillai | 1 | 0 | 0 | ,, M. Chinnappa Pillai | 0 | 7 | 0 |
| ,, Y. Jacob Catechist | 0 | 7 | 0 | Rev S A. Devasagayam | 2 | 2 | 0 |
| ,, D. Pakianathen | 1 | 0 | 0 | Mr. G. Israel Devadason | 0 | 7 | 0 |
| ,, J. Devadason | 1 | 0 | 0 | ,, Y Peter | 0 | 7 | 0 |
| Rev. G. M. Arulananthan | 0 | 14 | 0 | ,, V. David | 0 | 8 | 0 |
| Mr. J. P. Thomas | 0 | 14 | 0 | ,, S. G. Abraham | 0 | 2 | 9 |
| ,, M. Vethanayagam | 0 | 7 | 0 | Miss Elwood | 19 | 2 | 0 |

Printed at the Palamcottah Printing Press, Palamcottah and published by the Chirstian Brotherhood Association. Tinnevelly

April 1917 Registered No. M. 153.

# The Water of Life
# ஜீவத்தண்ணீர்

" என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்.' யோவான் 7: 38.

Vol. XVIII ஏப்பிரல் 1917

## 'வல்லமையும் கிருபையும்'

காலமே உமது வல்லமையைப் பாடி, காலையிலே உமது கிருபையை மகிழ்ச்சியோடு புகழுவேன் (பாடுவேன்). சங். 59: 16.

இங்கிலீஷ் வேதாகமத்தில் சங்கீதங்களை வாசிக்கும்போது கிருபை (Grace) என்ற வார்த்தை மகா அபூர்வமாக வருகிறது. ஆனால் இரக்கம் (Mercy) என்ற வார்த்தையோ ஏராளமாக வருகிறது. தமிழில் சங்கீதங்களை வாசிக்கும்போது கிருபை என்ற வார்த்தை அடிக்கடி வருவதைக் காணலாம். Mercy என்ற வார்த்தையை சிலவிடங்களில் இரக்கம் என்றும், வேறு இடங்களில் கிருபையென்றும் திருப்பப்பட்டிருப்பதே இதற்குக் காரணம். ஆகிலும் இவை இரண்டும் ஒன்றுக்கொன்று விரோதமான வார்த்தைகள் அல்ல. கிருபையை விஸ்தரிக்கப்போனால் அறியாமலே இரக்கம் என்ற சொல் வாயில் வரும். இரக்கத்தை விஸ்தரிக்கப்போனால் கிருபை என்ற சொல் வந்துவிடும். Mercy Seat என்பதைக் கிருபாசனம் என்று சொல்லுகிறோம். அதுவே இரக்காசனமுமாயிருக்கிறது.

அற்ப அறிவுடையோராகிய நமக்கு தேவன் தம்மைப் பல லட்சணங்களினாலே வெளிப்படுத்தியிருக்கிறார். அவைகளில் ஒரு லட்சணத்தை மாத்திரம் பிடித்துக்கொண்டு இதுதான் தேவன் என்று நாம சாதிக்காமல் எல்லா லட்சணங்களும் பொருந்தினவரே தேவன் எனக்கொள்ளவேண்டும். சூரிய வெளிச்சத்தில் எழு நிறங்களுண்டு. அதில் மஞ்சளையோ, சிவப்பையோ பார்த்து அதுதான் சூரியனுடைய நிறமென்று சொல்வது பிசகல்லவோ? எழுநிறமும் சேர்ந்ததல்லவோ வெளிச்சம். தேவ சமூகத்தில் நிற்கும் தூதர்கள் அவரைப் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தரெனப் போற்றுகிறார்கள். நமது குறைந்த அறிவுக்கு அவர் தம்மை அன்பு, ஞானம், சத்தியம், வல்லமை முதலிய குணங்களுடையவராக வெளிப்படுத்தியிருப்பது, நாம் ஒன்றைமாத்திரம் பிடித்துக்கொண்டு மற்ற லட்சணங்

களை மறந்துபோகும்படிக்கல்ல. ஒருவன் அவருடைய இரக்கத்தைமாத்திரம் பிடித்துக்கொண்டு அவருடைய வல்லமையை மறந்துபோவானானால் அவன் ஜீவியம் மகாபெலவீனப்பட்டுப்போகும். வேறொருவன் அவருடைய வல்லமையைமாத்திரம் பிடித்துக்கொண்டு அவருடைய கிருபையை மறந்துபோவானானால் அவனுடைய ஜீவியம் பயத்துக்கும் நடுக்கத்துக்கும் உரியதாயிருக்கும்.

சங்கீதக்காரனோ தேவனுடைய லட்சணங்களை பிரித்துப்போடாமல் அவைகளைச் சேர்த்தே பாடியிருக்கிறார். தேவனே நான் உமது வல்லமையையும் கிருபையையும் குறித்துப் பாடுவேன் என்கிறார். 62ம் சங்கீதம் 11, 12ல் தேவன் ஒருதரம் விளம்பினார், இரண்டுதரம் கேட்டிருக்கிறேன்: வல்லமை தேவனுடையது, கிருபையும் உம்முடையது, (நியாயத்தீர்ப்பும் உம்முடையது) ஏனென்றால் தேவரீர் அவனவன் செய்கைக்குத் தக்கதாகப் பலனளிக்கிறீர் என்று பாடியிருக்கிறார். தேவனை அவருடைய சர்வ லட்சணங்களில் தியானித்துப் பாடுவது அவருக்கு ஆறுதலும் ஆனந்தமுமாயிருந்தது. ஆண்டவரே, உமது வல்லமையைக் குறித்துமாத்திரமல்ல, உமது கிருபையைக் குறித்துமாத்திரமல்ல, உமது வல்லமையையும் உமது கிருபையையும் குறித்துப் பாடுவேன் என்கிறார்.

I. கிருபையற்ற வல்லமை எப்படிப்பட்டதென்று பார்ப்போம். கிருபையற்ற வல்லமை சர்வவல்லமையாயிருந்தாலும் யார் அதற்குமுன் நிற்க விரும்புவான்? யார் அதைக் குறித்து மகிழ்ச்சியாகப் பாடுவான்? கிருபையற்ற வெறும் வல்லமை பயங்கரமான வல்லமையல்லவோ? பூமியதிர்ச்சியினால் உண்டாகும் பயங்கரங்களும், உயிர் நஷ்டமும், பொருள் நஷ்டமும் எவ்வளவு! யார் அதின் வல்லமையைக் குறித்து மகிழ்ச்சியாய்ப் பாடுவான்? அக்கினிமலை கக்கி, அதன் பெருக்கினால் நகரங்கள் அழிந்து, உயிர்கள் மாளும்போது, யார் அதின் வல்லமையைப் பாடுவான்? பெரும் புசலடித்து, மரங்கள் யாவும் வேரோடு பிடுங்கப்பட்டு, தேசம் நாசமாகி ஆயிரக்கணக்கான மனுஷரும் மிருகங்களும் மாண்டுபோகும்போது யார் அதின் வல்லமையைப் பாடுவான்? இப்படிப்பட்ட வல்லமைக்கு முன்பாக மனுஷர் பயந்து நடுங்குவார்களேயன்றி மகிழ்ச்சியோடு பாடமாட்டார்கள். இவ்வுலகம் இரக்கமற்ற வெறும் சக்தியினால் ஆளப்படுமானால் இந்த உலகத்துக்கு ஐயோ! வல்லமையுள்ள பிசாசினால் ஆளப்பட்டதுபோலிருக்குமே. சாத்தான் வல்லவன்தான். அவனில் இரக்கம், கிருபை கிடையாது. ஆகையால் அவன் வல்லமையினால் அழிவும், நாசமும், நரகமும் உண்டாகிறதேயன்றி யாதொரு பாக்கியமுமில்லை. சாத்தானுடைய கிருபையற்ற வெறும் வல்லமையைக் குறித்து நாம் மகிழ்ச்சியாகப் பாடமுடியாது. கிருபையற்ற வல்லமைக்குப் பாட்டில்லை.

II. வல்லமையற்ற கிருபை எப்படிப்பட்டது? கிருபையற்ற வல்லமையைப்போல வல்லமையற்ற கிருபை பயப்படத்தக்கதல்ல. கிருபையற்ற வெறும் வல்லமை பயங்கரம்! வல்லமையற்ற கிருபையோ பிரயோஜனமற்றது. இரக்கம் இருந்தும் நன்மைசெய்யும் சக்தி அதற்கில்லையென்றால் அப்படிப்பட்ட வெறும் கிருபையைக்குறித்து யார் மகிழ்ச்சியோடு பாடுவான்? அதோ செடியின்கீழ் கதறுகிற பிள்ளை தாகத்தினால் கதறுகிறது. ஆகார் என்ன செய்வாள்? இரக்கமில்லையோ? உருக்கமில்லையோ? எல்லாம் உண்டு. குழந்தையின் நாவை நனைக்க அவளுக்குச் சக்தியில்லை. எத்தனையோ நல்ல தாய்மார் அருமைப் பிள்ளைகள் வியாதியில் அவஸ்தைப்படும்போது இராப் பகலாய்க் கண்விழித்து, வேண்டிய பிரயாசம் எடுத்தும், மனதுருகிக் கண்ணீர் சொரிந்தும், பிள்ளை தவறிப்போகும்போது எவ்வளவாய் அங்கலாய்க்கிறார்கள். இரக்கம் உண்டு சக்தியில்லை. தேவன் கிருபையுள்ளவராயிருந்தும் அக்கிருபையின்படி எனக்கு நன்மைசெய்ய வல்லமை அவருக்கில்லையென்றால் அப்படிப்பட்ட பிரயோஜனமற்ற வெறுங்கிருபையைக் குறித்து நான் எப்படிப் பாடுவேன்?



III. வல்லமையும் கிருபையும் சேர்ந்திருப்பதின் மேன்மை. இரண்டும் ஒன்றாய்ச் சேர்ந்திருக்கும்பொழுது ஒன்று மற்றொன்றுக்குப் பெலனாயிருக்கிறது. வாக்கியத்தின் பின்பாகத்தைப் பாருங்கள். உமது வல்லமையையும் உமது கிருபையையும் குறித்துப் பாடுவேன். ஏனென்றால் எனக்கு நெருக்கமுண்டான நாளிலே நீர் எனக்குத் தஞ்சமும் உயர்ந்த அடைக்கலமுமானீர் என்று பாடுகிறார். தேவன் நமக்குத் தஞ்சமும் உயர்ந்த அடைக்கலமுமாயிருக்கவேண்டுமானால் கிருபையோடு வல்லமையும், வல்லமையோடு கிருபையும் சேர்ந்திருக்கவேண்டும். கிருபை எனக்குத் தஞ்சமும் அடைக்கலமுமாயிருக்க விரும்புகிறது. வல்லமை அந்த விருப்பத்துக்குப் பெலன் கொடுக்கிறது. வல்லமைக்கு நாசமாயிருக்கக்கூடிய சக்தியிருந்தாலும் கிருபை அதை ஆண்டு நடத்துகிறது. நான் பாடுவது வல்லமையற்ற கிருபை அல்ல, கிருபையற்ற வல்லமையுமல்ல. சங்கீதக்காரனோடு நானும் சேர்ந்து தேவனுடைய வல்லமையையும் கிருபையையும் குறித்துப் பாடுவேன். தேவவல்லமை கிருபையோடு சேர்ந்திருப்பதால் அவருடைய வல்லமை நமக்கு ஆசீர்வாதமே. மின்னலிலிருந்து பாயும் மின்சார வல்லமையால் மரங்கள் முறிந்துவிழும். ஆனால் அந்த மின்சார சக்தி தந்திக்கம்பியின் மூலமாய் வரும்போது பெறுநரிடமிருந்தும் அனுப்புநரிடமிருந்தும் நமக்குச் செய்தியைத் துரிதத்தில் கொண்டுவருகிறது. தேவவல்லமை அவருடைய கிருபையாகிய தந்திக்கம்பியின் மூலமாக வரும்போது எனக்கு அவ்வளவும் ஆசீர்வாதமே.

அப்படியே அவருடைய கிருபையும் அவருடைய வல்லமையோடு சேரும்போது அவ்வளவும் எனக்கு ஆசீர்வாதமே. தேவகிருபையை வற்றிப்போகப்பண்ண யாரால் கூடும்? அது வற்றாக் கிருபையல்லோ? அது சர்வ வல்லமையால் தாங்கப்பட்ட கிருபையல்லோ! எவ்வளவு ஆசீர்

வாதங்கள் நாம் பெற்றுக்கொண்டாலும் இன்னும் அது குறையாத கிருபையே. யாரோ ஒரு உபகாரி பக்தனாகிய ரோலண்டு ஹில் என்பவரிடத்தில் 100 பவுண் கொடுத்து இவர் அறிந்த ஒரு தேவ ஊழியனுக்கு அனுப்பும்படி கேட்டுக்கொண்டார். ரோலண்டு ஹில் என்பவர் 100 பவுனையும் மொத்தமாய் அனுப்புவது உசிதமல்லவென்று கண்டு, 5 பவுனை மாத்திரம் தபால்மூலம் அனுப்பி வேறொன்றும் சொல்லாமல் 'இன்னும் வருகிறது' என்று மாத்திரம் உள்ளே எழுதிவைத்தார். கர்த்தரை நம்பி பிழைத்த அந்த ஏழை ஊழியன் நன்றியோடு அதைப் பெற்றுக்கொண்டு ஆண்டவரை ஸ்தோத்திரித்தார். சிலநாட்பொறுத்து மறுபடியும் 5 பவுண் வந்தது. முன்போல் 'இன்னும் வருகிறது' என்று உள்ளே எழுதப்பட்டிருந்தது. இப்படியாக 100 பவுனையும் அவர் பெற்றுக்கொள்ளுகிறவரை 'இன்னும் வருகிறது' என்கிற வார்த்தை வந்துகொண்டேயிருந்தது. அந்த ஊழியன் அவ்வார்த்தைகளை தன் ஜீவகாலத்தில் ஒருபோதும் மறந்துபோகவில்லை.

சகோதரரே! தேவன் தமது கிருபையின் ஐசுவரியத்திலிருந்து நம்மை ஆசீர்வதிக்கிறார். அவர் நமக்கு ஒரு நன்மை செய்யும்போது இன்னும் உனக்கு வருகிறது என்று வாக்களிக்கிறார். உன் பாவங்களை மன்னித்தேன் இன்னும் உன்னை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சுத்தமாக்கினேன் இன்னும் உன்னைப் பரிசுத்தமாக்கப்போகிறேன். உன்னை எனக்குப் பிள்ளையாக்கினேன் இன்னும் உன்னை என்னைப்போலாக்குவேன். உனக்கு வரம் தந்தேன் இன்னும் மேன்மையான வரம் அருளுவேன். உன்னைப் பெலப்படுத்தினேன், இன்னும் உன்னை வல்லவனாக்குவேன் உனக்கு ஆத்துமாக்கள் தந்தேன் இன்னும் ஏராளமாகக் கொடுப்பேன். உன்னை வழி நடத்தினேன் இன்னும் கடைசிவரை நடத்துவேன். உன்னை விடுவித்தேன் இன்னும் அநேக தீமைகளுக்கு உன்னை விடுவிப்பேன். உன்னோடு பழகிக்கொண்டேன் இன்னும் அதிகமாய் என்னை உனக்கு வெளிப்படுத்துவேன். உன் குடும்பத்துக்கு நன்மை செய்தேன் இன்னும் மகிமையாக நடத்துவேன். ஆ, அவருடைய கிருபை சமுத்திரம். அவருடைய வல்லமையும் சமுத்திரம். நான் உமது வல்லமையைக் குறித்துப் பாடுவேன்; உமது கிருபையையும் பாடுவேன். உமது வல்லமை கிருபை சேர்ந்த வல்லமை. உமது கிருபை வல்லமை சேர்ந்த கிருபை.

எஸ். பரமானந்தம்

## ஆவிக்கேற்ற ஊழியம்

திருச்சபை தனக்கு ஒப்புவிக்கப்பட்ட கடமையை நிறைவேற்றத்தக்கதாக அதற்கு வல்லமை எங்கேயிருந்து கிடைக்கும். உலகமெங்கும் போங்கள். சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள், ஞானஸ்நானம் கொடுங்கள்.



பெந்தேகோஸ்தின் வல்லமையில்லாமல் இக்கட்டளைகளை நிறைவேற்றிக்கொள்ள முடியாது. பெந்தேகோஸ்தின் வல்லமைதான் என்ன? பரிசுத்த ஆவியானவரே அவர் ஒரு ஆளாக விசுவாசியின் உள்ளத்தை நிரப்பிப் பயன்படுத்துகிறார். என்னென்ன ஊழியங்களைச்செய்ய அவர் பெலப்படுத்துகிறார்?

**முதலாவது, சுவிசேஷ ஊழியம்.** இது ஆவியின் பெலத்தினால் மாத்திரம் செய்யக்கூடிய ஊழியம். இது பாவியை அழைக்கும் ஊழியம். ஆவியும் மணவாட்டியும் 'வா' என்கிறார்கள். பரிசுத்த ஆவியானவரும் திருச்சபையும் ஒரே அழைப்பைக் கூறுகிறார்கள். மணவாட்டியில் வாசம் பண்ணுகிற ஆவியானவர் பாவிகளை இழுத்து அவர்களைக் கிறிஸ்துவுக்கென்று ஆதாயப்படுத்துகிறார்.

**இரண்டாவது, அன்பின் ஊழியம்.** இவ்விதமாய்ச் சேர்க்கப்பட்ட சபை எவ்விதமாய்க் கட்டப்படக்கூடும்? ரோமர் 5: 5ல் 'நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறது'. பரிசுத்தாவியினால் உண்டாகும் அன்பே நம்மை ஆத்துமாக்களுக்காக உழைக்கும்படி ஏவுகிறது. ஏனென்றால் ஆவியின் கனி அன்பே. ஆத்துமாக்களின் பேரிலுள்ள அன்பே. இவ்வித அன்பே அநேக ஆத்துமாக்களை ஊன்றக்கட்டும் என்று ரட்சகரும் சொல்லுகிறார். அவர் பேதுருவை நோக்கி: 'சீமோனே, நீ என்னை நேசிக்கிறாயா? மெய்யாகவே என்னை நேசிக்கிறாயா? அப்படியானால் என் ஆடுகளை மேய். என் ஆட்டுக்குட்டிகளைப் போஷி. அதை அன்பினால் செய்யவேண்டும். அன்பில்லாவிட்டால் அவ்வேலை செய்யவேகூடாது. பேதுருவே, அன்பினால்தான் அவர்களை ஜெயிக்கவேண்டும். மற்றப்படி அவர்களிடத்தில் வேலைசெய்வது வீண்' என்பதுபோல் சொல்லுகிறார். பேதுருவிடத்தில் ஆண்டவர் பேசினதுபோல் உருக்கமாய் வேறு யாரிடத்திலும் பேசினதாக வேதத்தில் நாம் பார்க்கிறதில்லை. பரத்தின் அன்பு முழுவதையும் தமது பிதாவின் அன்பு முழுவதையும் பரிசுத்தாவியின் அன்பனைத்தையும் தம்மில் பெற்றிருந்த இயேசு தம்மிடத்தில் ஆதியில் அன்புகூர்ந்து அதைவிட்டுச் சற்று தவறிப்போன பேதுருவிடத்தில் எவ்வளவு உருக்கமாய்ப் போராடுகிறார். பேதுருவின் அன்புதான் தமது ஊழியத்துக்கு இன்றியமையாதது. அவ்வித உத்தம அன்பு இல்லாவிடில் ஆடுகளையும் ஆட்டுக் குட்டிகளையும் மேய்ப்பதும் போஷிப்பதும் பிரயோஜனமற்ற காரியம் என்பதுபோல் பேசுகிறார்.

**மூன்றாவது, பரிசுத்த ஆவியின் அபிஷேகம்பெற்ற ஊழியம்.** இது பெந்தேகோஸ்தின் அபிஷேகம். ஆவியின் கனியாகிய அன்புமுதிர்ந்து சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை முதலிய சிறந்த குணங்கள் காணப்படவேண்டும். இவ்விதக் கனிகள் பரிசுத்த ஆவியினாலேயே சிறந்து விளங்கும். ஆகையினால் தேவனுடைய சபையில் மேலான பணிவிடைகள்

செய்யவேண்டுமானால் ஆவியின் அபிஷேகம் அவசியம். ருஷியா தேசத்துச் சக்கரவர்த்திக்குப் பட்டாபிஷேகம் கொடுக்கும்போது செய்யப்படுவது நல்ல திருஷ்டாந்தமாகும். சக்கரவர்த்தியைப் பார்த்து மேற்றிராணியார், 'நீர் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை மெய்யாய் விசுவாசிக்கிறீரா?' என்று கேட்க அவர் கர்த்தருடைய ஜெபத்தையும், விசுவாசப் பிரமாணத்தையும் சத்தமாய்ச் சொல்லவேண்டும். அது முடிந்தபின் அவர் கையில் செங்கோலையும் தங்கக் கிரீடத்தையும் கொடுக்க அவர் கிரீடத்தை சக்கரவர்த்தினியின் தலைக்கு நேராகச் சற்றுநேரம் பிடித்துக்கொண்டிருந்து அப்பால் தன் சிரசின்மேல் வைத்துக்கொள்வார். உடனே 'சக்கரவர்த்தி நீடூழி வாழ்க, சக்கிரவத்தினியை தேவன் காப்பாராக' என்று ஆர்ப்பரிக்க ஆலயத்துக்கு வெளியே நிற்கும் ஜனக்கூட்டத்தாரும் இவ்விதமாய் ஆர்ப்பரிப்பார்கள், பட்டணம் முழுவதும் ஆரவாரிக்க முந்நூறு ஆலயங்களிலுள்ள மணிகளும் அடிக்கப்படும். இவ்விதமாய்த் தேசமுழுவதிலும் புதிய சக்கிரவர்த்தி கிரீடஞ் சூட்டப்பட்டார் என்ற செய்தி பரம்பும்.

இவ்விதம் வெளியே கொண்டாட்டம் நடக்க கிரீடம் தரிக்கப்பட்ட சக்கிரவர்த்தி எழும்பித் தனிமையாய்த் தங்கக்கிராதிக்குள் சென்று கிராதிக் கதவையடைத்துக்கொண்டு திருமேசையின் முன் தனியாய் முழங்காற்படியிட அத்தியக்ஷர் பரிசுத்த தைலத்தை அவருடைய தலையிலும், கண் இமைகளிலும், மூக்கிலும், உதடுகளிலும், நெஞ்சிலும், கையிலும் வார்த்து, 'இதோ, பரிசுத்தாவியாகிய தேவனுடைய முத்திரை, அவர் உம்மை என்றைக்கும் பரிசுத்தமாய்க் காப்பாராக' என்று சொல்வார். இதுதான் பூமிக்குரிய ஒரு ராஜாவின் மகுடாபிஷேகச் சடங்கு. தேவனுடைய சபையில் ராஜாக்களும் ஆசாரியர்களுமாயிருக்கிற நமக்கு இது ஓர் நல்ல திருஷ்டாந்தம். நாமும் நம்மைப் 'பூரண பிரதிஷ்டை செய்யவேண்டுமென்று போதிக்கிறது. சக்கிரவர்த்தியைப் போலவே நாமும் தனிமையாய் அவர் சமூகத்தில் பிரவேசித்து நமது மகா பிரதான ஆசாரியராகிய கிறிஸ்துவின் பாதத்தில் விழுந்து நம்முடைய இருதயத்தையும், கைகளையும், கால்களையும் நமது சரீரத்தின் சகல உறுப்புகளையும் அவருக்கென்று பிரதிஷ்டைசெய்வோமாக. அப்போது திவ்ய அபிஷேக தைலமாகிய பரிசுத்தாவியானவர் நமக்கு அருளப்படுவார். நாம் அந்தத் திவ்விய அபிஷேகத்தைப்பெற்று அவருக்கு ஊழியம் செய்வோம்.

## 'தேவனுடைய ராஜ்யத்துக்குரியவைகள்' அப். 1: 3.

நமது ரட்சகரின் உயிர்த்தெழுதலுக்கும் பரமேறுதலுக்கும் இடையிலுள்ள காலத்தில் அவருடைய சம்பாஷணைகள் எதைப்பற்றினதாயிருந்ததென்று இவ்வார்த்தைகளால் தெரிகிறது. அந்த 40 நாட்களிலும் தம்மை உயிரோடிருக்கிறவராகக் காண்பித்தார். தேவனுடைய ராஜ்யத்துக்குரியவைகளை அவர்களோடுபேசினார்.



தேவனுடைய ராஜ்யத்தை ஸ்தாபிக்கவே அவர் பூமிக்கு வந்தார். அந்த ராஜ்யம் இப்போது உலகமெங்கும் பரவி, உலகத்தின் ராஜ்யங்கள் நமது கர்த்தருக்கும் அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யங்களாயின. அவருடைய சம்பாஷணையை நாம் மொத்தமாய்க் கவனித்துப் பார்க்கும்போது அதை மூன்று பிரிவாகச் சொல்லலாம்.

முதலாவது, வேதவாக்கியங்களைக் குறித்து அவர்களோடு பேசினார். பரி. லூக்கா சுவிசேஷம் 24-ம் அதிகாரத்தில் எம்மாவூருக்குப்போன இரண்டு சீஷரோடு நடந்த சம்பாஷணையில் கிறிஸ்து அவர்களை நோக்கி, தீர்க்கதரிசிகள் சொன்ன யாவையும் விசுவாசிக்கிறதற்கு புத்தியில்லாத மந்த இருதயமுள்ளவர்களே என்று அவர்களைக் கண்டித்தார். அவர்கள் விசுவாசியாததால் புத்தியில்லாதவர்கள். அவர்கள் விசுவாசிக்கத் தாமதித்தபடியால் மந்த இருதயமுள்ளவர்கள். ஆனால் இக்காலத்திலுள்ள எத்தனையோ கிறிஸ்தவர்களை 'புத்தியில்லாதவர்கள்' என்றும் 'மந்த இருதயமுள்ளவர்கள்' என்றும் சொல்லலாம். ஏனென்றால் அவர்கள் தீர்க்கதரிசனங்கள் நம்பத்தக்கவைகளல்லவென்கிறார்கள். உயிர்த்தெழுந்த ஆண்டவர் தோமா தம்மைப் பார்த்து, 'என் ஆண்டவரே, என் தேவனே' என்று சொன்னதை ஒப்புக்கொண்டார். எம்மாவூருக்குப்போன சீஷரோடு மோசே முதல் சகல தீர்க்கதரிசிகளும் எழுதின வேதவாக்கியங்களைக் குறித்துப் பேசினபோது, தம்மைக்குறித்து இவ்விதமாய் எழுதியிருக்கிறது என்றார். 41-ம் வசனத்தில் 'மோசேயின் நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும் சங்கீதங்களிலும் என்னைக்குறித்து எழுதியிருக்கிறதெல்லாம் நிறைவேறவேண்டியது' என்று சொல்லுகிறார். இம்மூன்று பிரிவுகளும் கொஞ்சங்குறைய பழைய ஏற்பாடு முழுவதையும் அடக்குகிறது. ஆகவே உயிர்த்தெழுந்த தம்மைக்குறித்துப் பழைய ஏற்பாட்டு ஆகமங்களெல்லாம் எழுதியிருக்கிறதென்றும் அவைகளால் குறிக்கப்பட்ட தேவனும் ஆண்டவரும் தாமே என்றும் சொல்லி அவைகளை முத்தரிக்கிறார்.

மேலும் தேவனுடைய ராஜ்யத்துக்கடுத்த விசேஷங்கள் பழைய ஏற்பாட்டில் அடங்கியிருக்கின்றனவென்று மாத்திரமல்ல, பழைய ஏற்பாடு முழுவதுமே தம்மைப்பற்றியே சொல்வதாகக் காட்டுகிறார். ஆனால் சிலர் பழைய ஏற்பாட்டின் சில பாகங்கள் கட்டுக்கதைகள், வாஸ்தவமாய் நடந்தவைகளல்லவென்றும் தீர்க்கதரிசனமே கிடையாது என்றும் சொல்வதால் சில விசேஷங்கள் அவைகள் நடந்தபிற்பாடுதான் எழுதப்பட்டவையென்றும் சொல்லும்போது அவர்கள் தவறுகிறார்கள். அவைகள் எல்லாம் கிறிஸ்துவையே குறிக்கிறது. ஜான் பனியன் என்பவர் சாலோமோனின் தேவாலயத்தைக்குறித்து வாசித்துக்கொண்டிருக்கும்போது வெண்கலப் பலிப்பீடம், கடல்தொட்டி, குத்துவிளக்கு முதலியவைகளின் கருத்து இன்னதென்று தாம் அறியமுடியாத சமயத்தில், பலிப்பீடம் கிறிஸ்து

பலியும் கிறிஸ்து, அப்பமும் கிறிஸ்து, தேவாலயக் கூடாரமும் கிறிஸ்து, கிருபாசனமும் கிறிஸ்துதான் என்று சொல்லுகிறார். ஆகவே, எம்மாவூருக்குப்போன சீஷருடைய கண்களை அவர் திறந்ததுபோல நம்முடைய கண்களையும் திறப்பாரானால் நாமும் வேதவாக்கியங்களில் தேவனுடைய ராஜ்யத்துக்கடுத்தவைகள் எந்தப் பாகத்திலும் இருக்கிறதாகவும் அவைகளெல்லாம் கிறிஸ்துவையே குறிக்கிறதாகவும் காணலாம்.

அதுவுமல்லாமல் வேதவாக்கியங்கள் அதிகாரமுள்ளவைகள். 26-ம் வசனத்தில் 'கிறிஸ்து பாடுபடவும் மகிமையில் பிரவேசிக்கவும் வேண்டியதில்லையா?' என்றும்; 44-ம் வசனத்தில் 'எழுதியிருக்கிறவைகளெல்லாம் நிறைவேறவேண்டியது' என்றும்; 46-ம் வசனத்தில் 'மரித்தோரிலிருந்தெழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது' என்றும் சொல்லுகிறார். வேதவாக்கியங்கள் நிறைவேறவேண்டியது. வேதவாக்கியங்களின்படி கிறிஸ்து பாடுபடவேண்டியது. வேதவாக்கியங்களின்படி அவர் மரித்து மூன்றாம் நாளில் எழுந்திருக்கவேண்டியது. எழுதியிருந்தபடி மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும்வேண்டியது. இப்போது வேதவாக்கியங்கள் நிறைவேறிற்றா? கிறிஸ்து பாடுபட்டார், மரித்தார், உயிர்த்தெழுந்தார் இவை மூன்றும் நிறைவேறிற்று.

இரண்டாவது, சுவிசேஷம் சகல ஜாதிகளுக்கும் பிரசங்கிக்கப்படவேண்டும். இது இன்னும் முற்றுப்பெறவில்லை. கிறிஸ்தவன் ஒவ்வொருவனும் 20 அல்லது 30 பேருக்கு மாத்திரந்தான் சுவிசேஷத்தை அறிவித்துவிடுவானானால் இவ்வேலை முடிந்துவிடும் என்று சிலர் எண்ணுகிறார்கள். இது வருத்தமான வேலைபோல் தோன்றவில்லை. இதைச் செய்யவேண்டியது நமது கடமையென்று கர்த்தருடைய வசனம் கூறுகிறது. இதுவே நமது இருதயத்தின் பாரமும் நமது ஜீவியத்தின் முக்கிய வேலையும் நமது ஜெபங்களின் நோக்கமும் நாம் செய்யவேண்டியதும் கொடுக்கவேண்டியதுமான சகலமுமாயிருக்கவேண்டும். மெய்க்கிறிஸ்தவன் ஒவ்வொருவனும் இவ்விதமாய் உணர்ந்து தேவனுடைய வல்லமையைப் பெற்று இந்தக் கட்டளைக்குக் கீழ்ப்படிவானானால் ஒரு தலைமுறைக்குள் சுவிசேஷம் பூமியெங்கும் அறிவிக்கப்பட்டு முடியும் என்று தைரியமாய்ச் சொல்லலாம்.

மூன்றாவது, இந்தக் கடமையை நிறைவேற்ற வேண்டிய பெலன். ரட்சகருடைய வாக்குத்தத்தம் இருக்கிறது. 'இதோ, என் பிதா வாக்குப்பண்ணினதை (பண்ணினவரை) நான் உங்களிடத்தில் அனுப்புகிறேன்'. யுத்தம் செய்யப்போகும் போர்வீரன் தனக்கு வேண்டிய உடை, ஆயுதம் முதலியவைகளைத் தன் செலவிலே செய்து கொள்ளுகிறதில்லை. அப்படியே ஆண்டவர் தமது கொடியின் கீழ் யுத்தம்செய்யும்படி நம்மை அழைக்கும்போது நம்முடைய சொந்த பெலத்தில் போகும்படி சொல்லாமல் தாமே தமது திவ்ய ஆவியின் ஈவை பெந்தெகொஸ்தின் சீஷருக்கு அரு



ளினவண்ணம் நமக்கும் தருவதாக வாக்குப்பண்ணுகிறார். ஆனால் அந்த ஆவியைப் பெற்றுக்கொள்ளும்படி நாம் செய்யவேண்டிய காரியம் ஒன்றுண்டு. மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் கூறியறிவிக்கும்படி நாம் நம்மை ஒப்புக்கொடுக்கவேண்டும். ஆகையால் நாம் அவரை ஸ்தோத்திரித்து ஆண்டவரே, தேவரீர் அருளிய கட்டளைக்காகவும் அக்கட்டளையை நிறைவேற்றத் தேவரீர் வாக்களிக்கும் பெலனாகிய பரிசுத்தாவிக்காகவும் உம்மைத் துதிக்கிறேன். நானும் அக்கட்டளையை நிறைவேற்றுவதில் பங்குபெறும்படி அந்த வல்லமையின் ஆவியிலும் எனக்குப் பங்குதாரும்' என்று ஜெபிப்போமாக.

---

## இயேசுவின் மௌனம் (தொடர்ச்சி)

சொற்பக் காலத்துக்குள்ளாக இயேசுவின் கீர்த்தி கலிலேயா முழுவதும் பரவிற்று. அவர் யாரோவென்று பலரும் பலவிதமாய்ப்பேச ஆரம்பித்தார்கள். சிலர் அவர் கண்டிப்பான பிரசங்கியென்று கேள்விப்பட்டு, அவரை 'எலியா' என்றார்கள். சிலர் அவர் பேசும் மனஉருக்கமான வார்த்தைகளைக் கேட்டு 'எரேமியா' என்றார்கள். வேறு சிலர் அவரைக்குறித்துத் திட்டமாய் விசாரிக்காமல் 'தீர்க்கதரிசிகளில் ஒருவர்' என்றார்கள். இந்தச் செய்திகளெல்லாம் ஏரோதின் அரண்மனைக்கு வந்தது. தான் கொன்ற யோவான்ஸ்நானகனின் காட்சிதான் அவன் முகத்துக்கு முன் நின்றது. இவர் எலியாவல்ல, எரேமியாவுமல்ல, இவர் நான் சிரச்சேதம்பண்ணின யோவான்தான். அவன் மரித்தோரிலிருந்து எழுந்துவிட்டான் என்று சொன்னான். அக்காலத்தில் இயேசுநாதர் ஏரோதைக் கண்டிருந்தால் அவன் மனதின் கலக்கமும் துக்கமும் அவனுக்கு நன்மையை வருவித்திருக்கலாம். ஆனால் இன்னும் ஒருவருஷம் தன் உல்லாசத்திலும் சிற்றின்பத்திலும் தன் நாட்களைப் பின்னிட்டான். அவன் இருதயத்தின் உணர்வு போய்விட்டது. இப்போது அவரைக் கண்டபோது அவனுடைய உல்லாசமான நினைவுகள்தான் உண்டாகிறது. ஏரோது தன் போர்ச்சேவகரைக்கொண்டு அவரைப் பரியாசம் பண்ணுகிறான். இயேசுவோ ஒன்றும் மாறுத்தரம் சொல்லவில்லை. இப்படிப்பட்டவனிடத்தில் பேசுகிறதினால் என்ன பிரயோஜனம் உண்டாகும்!!

ஏரோது கிறிஸ்தவர்களில் பலருக்கு நல்ல திருஷ்டாந்தமாயிருக்கிறான். அவர்கள் வியாபாரத்தில், விளையாட்டில், உலக வேலைகளில் மெத்த ஜோலியாயிருக்கிறார்கள். இயேசுவின் சத்தம் அவர்கள் காதுக்கெட்டாதபடி மற்றக்காரியங்கள் அவர்கள் கவனத்தையெல்லாம் இழுத்துக்கொள்ளுகிறது. கடைசியாகத் தமது சத்தத்துக்குப் பதிலில்லையென்று கண்டு தாம் பேசுவதை நிறுத்துகிறார். இக்காலத்திலும் அநேகருடைய ஜீவியத்தில் இயேசுவின் மௌனம் காணப்படுகிறது. ஐயோ, எவ்வளவு பரிதாபம்!!

இயேசுநாதர் மூன்று பேருடைய ஜீவியத்தில் தமது மௌனத்தைக் காண்பித்தார் என்று பார்த்தோம். வஞ்சகக்காரனோடு அவர் பேசமாட்டார். தன் மனச்சாட்சியை அழுக்கிப்போடுகிறவனோடும் மாறுத்தரம் சொல்லமாட்டார். பரியாசக்காரன், உல்லாசப் பிரியனிடத்திலும் அவர் பேசுகிறதில்லை. அப்படியானால் அவர் சத்தம் யாருக்குக் கேட்கும்? யாரோடு அவர் பேசுவார்? உண்மையாய் அவரைத் தேடுகிற யாவரிடத்திலும் அவர் பேச வாஞ்சிக்கிறார். சாமுவேல் என்னும் பிள்ளையாண்டானைப்போல, கர்த்தாவே, பேசும். அடியேன் கேட்கிறேன் என்று யார் சொல்லுவார்களோ அவர்களுக்குத் தேவசத்தம் நிச்சயமாய்க் கேட்கும்.

சீனா தேசத்திலுள்ள ஓர் மிஷனெரி ஆஸ்பத்திரிக்கு வந்த கண் கெட்டுப்போய்க் குருடனான ஓர் சீனனுக்குக் கண் உரித்து அவனைச் சொஸ்தமாக்கினார். சில வாரங்களுக்குப்பின் இதைக் கேள்விப்பட்ட 48 குருடர் ஓர் கயிற்றைப்பிடித்துக்கொண்டு தங்களுக்கு வழிகாட்ட ஓர் சிநேகிதனையும் கூட்டிக்கொண்டு 250 மைல் தூரம் நடந்து அந்த ஆஸ்பத்திரிக்கு வந்தார்கள். கிட்டத்தட்ட அவர்களெல்லாருக்கும் சுகம் கிடைத்தது. என்ன ஆச்சரியம்!! இவ்வண்ணமாய்ப் பாவத்தினால் குருடானவர்கள் பரம வைத்தியராகிய இயேசுவிடம் வந்தால் எவ்வளவு அன்போடு அவர்களை ஏற்றுக்கொண்டு அவர்கள் கண்களைத் திறப்பார்!!!

## 119-ம் சங்கீதம்

ஆலெப் செக்ஷன். வா. 1—8

பேர்: உத்தமரும் அவர்களுக்குரிய பாக்கியமும்.

### பொழிப்புரை.

வா. 1. கர்த்தருடைய வேதத்தின்படி நடப்பதால், மனிதர் மாசு மறுவற்ற உத்தம மார்க்கத்தார் ஆகிறார்கள். அவர்கள் பாக்கியர்.

வா. 2. அவருடைய சாட்சிகளைக் கைக்கொண்டு, அவரை முழு இருதயத்தோடும் தேடுகிறவர்களும் உத்தமராகிறார்கள். அவர்களும் பாக்கியரே.

வா. 3. அவர்கள் தங்களைத் தீட்டுப்படுத்தும் அநியாயம் ஒன்றும் நடப்பியாமல் அவருடைய வழிகளில் உத்தமமாய் நடக்கிறார்கள்.

வா. 4. உமது கட்டளைகளை நாங்கள் கருத்தாய்க் கைக்கொண்டு அவ்வித உத்தம வழியில் நடக்கும் பாக்கியத்தை அடைவதே உமது கற்பனை.

வா. 5. உமது பிரமாணங்களில் உத்தமமாய் நடக்கும்படி என் நடைகள் உமது பிரமாணங்களில் ஸ்திரப்பட எவ்வளவு உத்தமமாய் வாஞ்சிக்கிறேன்.

வா. 6. உமது கற்பனைகளை உத்தமமாய்க் கண்ணோக்கி அதை உத்தமமாய்க் கைக்கொள்ளும் உத்தமர் ஒருநாளும் வெட்கப்படாமல், தைரியசாலிகளாகிறார்கள். இதுவும் அவர்களுக்கு கிடைத்த பாக்கியமே.



வா. 7. உமது நீதி நியாயங்களை நான் கற்றுக்கொள்ளும்போது அது எனக்குள் அந்தரங்க இருதயத்தை உண்டாக்கி, உம்மை ஏற்றபிரகாரம் துதிக்க என்னை அருகனாக்குகிறது.

வா. 8. உமது பிரமாணங்களை உத்தமமாய்க் கைக்கொள்ளுவேன் ஒரு நாளும் என்னைக் கைவிடாதேயும்.

### பொருட்குறிப்பு

1. உத்தமருடைய பொதுவான பாக்கிய நிலைமை. வா. 1, 2.

2. அவர்களுடைய விசேஷித்த பாக்கியம் வா. , 6, 7.

(a) அவர்கள் அநியாயம் செய்யாமல், அவருடைய வழிகளில் நடக்கிறார்கள் வா. 3.

(b) அவர்கள் வெட்கப்படாமல் தைரியசாலிகளாகிறார்கள். வா. 6.

(c) அவர்கள் இருதய சுத்தமுடையவர்களாகி, அவரை ஏற்றபிரகாரம் துதிக்க அருகராகிறார்கள். வா. 7.

3. இந்தப் பாக்கிய நிலைமையைப்பற்றிய தேவகட்டளையும் மனித இருதய சார்பும். வா. 4, 5.

**தேவகட்டளை:** அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுவதினால் மனிதர் இந்தப் பாக்கிய நிலைமையை அடைந்துகொள்ளவேண்டுமென்பதே. வா. 4.

**மனித இருதயசார்பு:** மனித உள்ளம் அந்த தேவ கட்டளைக்கிசைய காட்டும் ஆவல். வா. 5.

4. கடைசியாக பக்தன் தேவகட்டளையைக் கைக்கொள்ள தீர்மானித்தலும் அதற்காக ஜெபமும். வா. 8.

இவனே உத்தமன்.

ஜெபம். எங்கள் பரம பிதாவே, உமது கற்பனைகளைக் கைக்கொள்ளுவதே எங்களுக்குக் கிடைத்த மேலான பாக்கியம் என்று நீர் கற்பிக்கிறீர். அந்த உம்முடைய கற்பனைக்கு இணங்க எங்கள் இருதயத்தை உம்மண்டைக்கு இழுத்துக்கொள்ளும். எங்கள் ஆவிக்குரிய போராட்டத்தில் உம்முடைய நன்மைச் சித்தமே எங்களை மேற்கொள்ளவும் எங்கள் சுய சித்தம் கீழடங்கிப்போகவும் கிருபைசெய்து உம்முடைய கற்பனைக்குப் பூராவாய்க் கீழ்ப்படிந்து நடக்கும் இருதயத்தை எங்களுக்குள் உண்டாக்கி, அவர்களுக்குரிய பாக்கியத்தை எங்களுக்கு அளித்து, இவ்விதமாய் எங்களை உமது

வேதத்தின்படி நடக்கிற உத்தம மார்க்கத்தார் ஆக்கியருளவேண்டுமென்று அவர் நிமித்தமே மனத்தாழ்மையோடு கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுகிறோம். ஆமென்.

D. J. HARRIS

---

## On the Spiritual Life of the Evangelists (தொடர்ச்சி)

இவ்வித மகத்வ காட்சியைக் காணவும் தேவசமுகப் பிரவேசம் இவ்வுலகில் அடையவும் தேவனுடன் பழகி ஜீவிக்கவும் அவருடன் முகமுகமாய்ப் பேசவும் மோசேக்கு இருந்த ஏது என்ன? எவ்விதமாய் மோசே இந்த மகத்துவ காட்சியைக் காண ஆயத்தமாக்கப்பட்டிருந்தான்? அவன் தேவனுடன் ஜீவித்த மகத்வ ஜீவியத்தை யாத். முதல் உபாகமம்வரையிலும் அதின் ரகசியத்தை எபிரேயர் நிருபத்திலும் காணலாம்.

1. மோசே உலக மகிமையைச் சமூலமாய் அருவருத்துத் தள்ளினான் வா. 23. மோசே பெரியவனானபோது, பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப்படுவதை வெறுத்தான். உலகப் பிரகாரமாய் பார்வோனுடைய வம்சத்தானாயிருப்பது எவ்வளவு பெருமை? அவனுடைய குமாரத்தியின் மகன் என்னப்படுவது எவ்வளவு சலாக்கியம்? யாராவது இதை வெறுப்பார்களா? மோசேயோ, அதை அற்பமாகவும் தூசியாகவும் எண்ணினான். மோசேயின் கண்களுக்குமுன் இரண்டு காட்சி தோன்றின. ஒன்று பார்வோனின் குடும்பத்திலிருந்துகொண்டு அவன் அரண்மனையில் அனுபவிக்கும் உலகப் பெருமையும், ஆளுகையும், டம்பமும். மற்றொன்று தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அனுபவிப்பது. ஆனால் மோசேயின் கண்களுக்குமுன்பாக, தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அனுபவிப்பது அவனுக்குப் பெருமையாயிருந்தது. அந்த தேவனுடைய ஜனங்கள் இம்மைக்குமட்டும் உரியவர்களல்ல. இவர்கள் நித்தியத்துக்குரியவர்கள். இவ்வளவு அற்பமாய் எண்ணப்படுகிற இவர்கள் ஏதோ ஒரு மேன்மைக்கென்று பிறந்தவர்கள்போல் இவன் கண்களுக்குப் புலப்பட்டது. அந்த ஜனங்களோடேகூட துன்பத்தை அனுபவிப்பது கிறிஸ்துவுடன் துன்பத்தை அனுபவிப்பதாகவும் இவனுக்குத் தோன்றிற்று. ஏனெனில் கிறிஸ்து இவர்கள்மூலம் பாடுபடுகிறார், துன்பத்தை அனுபவிக்கிறார் என்றும் கிறிஸ்து ரட்சகர் அவ்வளவு தூரம் இவர்களில் ஐக்கியப்பட்டிருக்கிறார் என்றும் ஆகையால் அவர் நிமித்தம் தனக்கு வரும் நிந்தையும் பாடும் எகிப்திலுள்ள சகல பொக்கிஷங்களிலும் மேலானது என்றும் இவனுடைய ஆவியின் காட்சியில் கண்டார்.

மோசே இவ்வளவு மகத்வ காட்சியும் அடைவதற்கு உள்ளான ரகசியம் இதிலே இருக்கிறது. மோசே தன் ஜீவியத்தினால், தேவனுக்கும் உலக நேசத்துக்கும் சிநேகம் ஏது? நீ தேவனுடையவனாயிருக்கவேண்டு



மானால் உலகத்தை வெறுத்து, அதை அற்பமாய் எண்ணி, அதைத் தூசியும் குப்பையுமாக எறிந்துவிடு என்று சொல்லுகிறதுபோலில்லையா? நாமும் தேவ காட்சியும் தேவ மகிமையும் அடையவேண்டுமானால் உலகத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் வெறுத்து, சிலுவையில் அறையவேண்டும். உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகை. அப்படியானால் இரண்டையும் ஒருமிக்க ஒரு இருதயத்தில் வைத்துக் கொள்ளக்கூடுமா? தேவன் வாசம்பண்ண விரும்பும் இடம் உலகத்தைச் சமூலமாய் வெறுத்த வெறும் பாத்திரமே. பவுல் அப்போஸ்தலன் கிறிஸ்துவின் அருமை பெருமையை அறிய பிலி. 3: 7, 8. என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறியும் அறிவின் மேன்மைக்காக, எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டுவிட்டேன், குப்பையுமாக எண்ணினேன் என்று சொல்லவில்லையா? கிறிஸ்து சபை Constantine காலமுதல் உலகத்துடன் ஐக்கியப்பட்டு உலகத்துக்கு வாழ்க்கைப்பட்டு, அதின் சத்துவத்தையும் மகத்துவத்தையும் இழந்துவிட்டது. இப்போது நடக்கும் பயங்கர யுத்தத்தின் ரகசியமென்ன? Constantine காலமுதல் உலக மகிமையை தனக்கு தேவ மகிமையாகவும் உலகவாழ்வை தனக்குக் கிடைத்த தேவ வாழ்வாகவும் திருச்சபை எண்ணி, இவ்விதமாக தனக்குரிய சுய மகிமையை திருச்சபை உலக மகிமைக்குமாறாக விற்றுப்போட்டதினால், அந்த திருச்சபையின் பூரண தேவ மகிமையை மங்கலாக்கும் உலக மகிமையை சுத்திகரிக்கும் பலிபீடமாக இந்த யுத்தத்தை உபயோகிக்கிறார் என்று எண்ண இடமில்லையா? அரும் பிரயாசத்துடன் சேர்த்துவைத்த பொக்கிஷங்கள் எங்கே? கூடகோபுரங்களும் மாளிகைகளும் எங்கே? பொருள் பொக்கிஷம், பணம், பவுனையாவும் ஒன்றுமில்லை என்று காட்டப்பட, அவையாவும் வெடி மருந்தாக மாறி நிற்கவில்லையா?

அப்படியானால் திருநெல்வேலி நாட்டுசசபையே, இதிலிருந்து நீ படிக்கவேண்டிய பாடம் என்ன? அதின் ஊழியர் அறியவேண்டிய அறிவு என்ன? தேவ மகிமையை உலகத்துக்கு விளக்கிவைக்கும்படி உன்னிடத்தில் அதிக சாதனமுண்டு. உன் எளிமை ஓர் விசேஷித்த தயவு. Constantine போலொத்த ராஜாக்கள் இன்னும் உன்னை ஆதரிக்க ஏற்படாததும் உனக்குக் கிடைத்த ஓர் விசேஷித்த பாக்கியம். அப்படியானால் உனக்காக சமூலமாய் ஏழையின் ரூபமாக வந்தவரும் இருந்தவரும் உனக்கென்று சமூலமாய் தமது இயல்பான மகிமை முதலாய் வெறுத்தவருமாகிய உன் இயேசு நாயகருக்கென்று நீயும் சமூலமாய் இரு. பின்பு அவருக்கென்று ஜீவி. அவருக்கென்று உன்னைத் தத்தம்பண்ணு.

இந்த அன்பின் பாசந்தான்—என் மீட்பருக்கு என்னை
முழுத்தத்தம் செய்யத்தான்—ஏவி ஆத்துமா தேகத்தை
சர்வாங்க பலியாக ஸ்வாமியே படைக்கிறேன்
எனக்காக மரித்தீர் கல்வாரிச் சிலுவையில் என்று சொல்லு.

அப்போது தேவ மகிமை உன்னில் விளங்கும். தேவ சமூகம் உன்னோடு செல்லும். தேவ கிருபை உன்னைப் பின்னாலே காக்கும்.

2. நித்தியத்தின் மேல்நோக்கம் வா. 26. இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்தான். மனிதனுக்கு 3 தத்துவமுண்டு. சரீரம், தேகம், உடல் இவையாவும் ஒன்றே. இது வெளிப்பிரகாரத்தை அடுத்த தத்துவம். புத்தி, மூளை, சித்தம், ஆத்மா, மனசு இவையாவும் ஒன்றே. இவை பரிசுத்த ஸ்தலத்தை அடுத்தவை. இருதயம், ஆவி, இவ்விரண்டும் ஒன்றே. இது மகா பரிசுத்த ஸ்தலத்தை அடுத்தது. ஆனால் எந்த தத்துவத்தோடு, புத்தி, மூளை, சித்தம், மனசு, ஆத்மா என்று சொல்லப்பட்ட இந்த தத்துவம் சேருகிறதோ அதற்கே இந்த மானிட ஆலயத்தில் அதிகாரம். அப்படியானால் மனிதனை ஆண்டு நடத்துகிறது அவனுடைய சித்தம் என்னப்பட்ட மூளையே. மோசேயோ அவனுடைய சித்தம் என்பவனில் நித்தியம் என்று எழுதிவிட்டான். நம்முடைய புத்தி மூளையில் நாமும் நித்தியம் என்று எழுதக்கடவோம். நித்தியம் என்பது மோசேக்குமுன்பாக வெகுபிரத்தியட்சமாயிருந்தது. நம்முடைய கண்களுக்குமுன்பாக எவ்வளவு தூரம் அநித்தியமான இச்சீவன் வெகுபிரத்தியட்சமாய் இருக்கிறதோ அதினால் அநித்தியம் நம்மை எவ்வளவு தூரம் ஆளுகிறதோ அவ்வளவு தூரம் அவனுடைய புத்தியையும் மூளையையும் ஆண்டுகொண்ட காரியம் தான் நித்தியத்துக்குரியவன் என்பதே. காண்பதெல்லாம் அநித்தியம் காணப்படாதவைகளோ நித்தியம். மோசே தன் சொற்ப ஜீவியம் நித்தியமாயிருக்கிற சமுத்திரம்போன்ற நீடித்த ஜீவனின் ஒரு துளி என்றும் அப்பால உலக ஜீவனை எண்ணி பரத்துக்குரியவனாக இகத்தில் ஜீவித்தான். அப்படியானால் அவனுடைய ஆவிக்குரிய கண்கள் எவ்வளவு தூரம் பிரகாசிப்பிக்கப்பட்டு, தூரதேசத்து காட்சியைக் காண கூர்மையாக்கப்பட்டிருக்கவேண்டும். நித்தியத்தை இவன் கண்களுக்குமுன் மறைக்கக்கூடிய உலக மகிமை, உலக ஜீவன், மரணம் இவைமுதலான திரைகளை ஊடுருத்து நித்தியத்துக்குள் வாசமாயிருந்து நித்தியவாசியின சமுகம் சென்று ஜீவிக்கிறான். ஏனோக்கையும் எலியாவையும்போல இவனுக்கும் தெய்வத்துக்கும் இடையில் ஒரு திரையும் இல்லை, மறைவும் இல்லை.

இவன் இப்படி ஜீவித்ததினால் என்ன காட்சியை அடைந்தான்?

3. தேவ காட்சிக்குள் ஜீவித்தான் வா. 2. காணக்கூடாத ஆண்டவரைக் கண்டு தரிசித்தவன்போல் ஜீவித்தான். என்ன பாக்கியம் எவருக்குண்டு இந்த சிலாக்கியம்! 'அவருடன் பேசுவான்; அவருடன் புழங்குவான், அவர் சத்தம் கேட்பான், அவர் இன்பமுகம் பார்ப்பான். அவருக்குள் பேரானந்தம் அடைவான். அவர் சாயலாக மாற்றப்பட்டான் தேவனுடைய மனுஷனாகிவிட்டான். இதோ பரலோகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகக் கேட்டேன். இதோ மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலம் இருக்கிறது, அவரும் அவர்களிடத்திலே வந்து வாசம்பண்ணுவார் என்பது இப்பூலோக ஜீவியத்தில் உண்மையாயிற்று.

அன்பின் ரூபி, மோட்சானந்தம்—பாரில் ஈயவந்தீரே
எங்கள் ஏழை நெஞ்சில் வாசம்—பண்ணி, மருள் தீர்ப்பீரோ
யேசுதேவ நீர் பரிதாபம்—அன்புமாயிருக்கிறீர்
பார துக்கங்கொண்ட உள்ளம்—வந்து தேற்றல் செய்குவீர்.

என்ன சுகம், என் ரட்சகரின் சமுகம் பேரானந்தம். பரமானந்த மோட்ச சுகானந்தம். அதைப்பெற்று அனுபவித்தால் என்ன சுகம். இதைப் பாக்கியம்



நீசப்பாவிகளாகிய நமக்கா? ஆம் நமக்குத்தான் இப்பாக்கியத்தை நம்மனைவருக்கும் இப்பூலோகத்தில் கர்த்தர் கிருபையாகத் தந்தருளுவாராக. ஏனெனில் பூமியில் கர்த்தரை அனுபவியாதவன் அவருடன் சுகிக்காதவன், பரத்தில் அவரை அனுபவிக்கமாட்டான் அவருடன் சுகித்திருக்கமாட்டான். ஆகையால் இப்போதே இந்த நல்ல பங்கு நமக்குரியதாவதாக.

## நீர் எங்களுடனே தங்கியிரும். லூக். 24: 29.

எம்மாவுருக்குப்போன இரு சீஷர் உயிர்த்தெழுந்த தங்கள் ஆண்டவரை நோக்கிச்செய்த இந்தச் சிறு விண்ணப்பம் நமக்கும் ஏற்றது. பண்டிகையின் ஆனந்தத்தில் கிறிஸ்து உயிர்த்தெழுந்தார் என்ற சந்தோஷம் நமது உள்ளத்திலிருப்பதோடு 'எங்களுடனே தங்கியிரும்' என்ற ஜெபமும் நமது உதடுகளில் காணப்படவேண்டும். நமது ரட்சகர் உயிர்த்தெழுந்த அதே நாளில் மகதலேனா மரியாளுக்கும் மற்ற ஸ்திரீகளுக்கும் பேதுருவுக்கும் இந்தச் சீஷர்களுக்கும் தோமா தவிர 10 அப்போஸ்தலருக்கும் தரிசனமளித்தார். இவ்விரண்டு சீஷரில் ஒருவன் கிலேயோப்பா என்பவன் மற்றவன் லூக்காவாயிருக்கவேண்டும். அவர்கள் போகும் வழியில் அன்றைபத்தினம் நடந்த விசேஷங்களையும் அதோடு கிறிஸ்து ரட்சகரைப் பற்றியும் பேசிக்கொண்டு போனார்கள். மல்கி. 3: 16ல் கர்த்தருக்குப் பயந்தார்கள் ஒருவரோடொருவர் பேசிக்கொள்வார்கள். 'கர்த்தர் கவனித்துக் கேட்பார்' என்று எழுதியிருக்கிற பிரகாரம் இவர்கள் ஒருவரோடொருவர் பேசி சம்பாஷித்துக்கொண்டு வழிநடந்து போகையில் இயேசு தாமே சேர்ந்து அவர்களுடனேகூட நடந்துபோனார். என்ன ஆச்சரியம்!! நமது சம்பாஷணைகள் பரத்தைப்பற்றினவைகளாயிருக்கையில் இயேசு நம்மோடிருக்கிறார் என்ற நிச்சயத்தோடிருப்போமாக. இந்தச் சீஷர் இருவருக்குத் தரிசனமான சரித்திரத்திலிருந்து மூன்று குறிப்புகளைக் கவனிப்போம். இயேசுவின் சமுகம் நமக்கு இன்பமும் அவரோடு சம்பாஷித்தல் நமக்குப் பெலனுமாயிருக்கவேண்டுமானால் நாம் எப்படிப்பட்டவர்களாயிருக்கவேண்டும் என்று பார்ப்போம்.

முதலாவது அவர்கள் மெய்யுணர்வடைந்தார்கள். மெய்தான் வ. 16ல் அவரை அறியாதபடிக்கு அவர்களுடைய கண்கள் மறைக்கப்பட்டிருந்தது. நீர் அந்நியரோவென்றார்கள். அவர்கள் துக்க முகமுள்ளவர்களாய் வழிநடந்து போனார்கள். அவர் இஸ்ரவேலை மீட்டு ரட்சிப்பார் என்று நாங்கள் நம்பியிருந்தோம். 'ஆனாலும்' அவரை மரண ஆக்கினைக்குட்படுத்திச் சிலுவையில் அறைந்து மூன்று நாளாகிறது. தேவதூதரை தரிசித்தோம் என்று சொல்லி எங்களைப் பிரமிக்கப்பண்ணினார்கள். கண்களில் மறைவு, முகத்தில் துக்கம், மனதில் அவிசுவாசம், பிரமிப்பு இப்படிப்பட்டவர்களாய் வழிநடந்து பேசினார்கள். இயேசுநாதர் அவர்களைப் பார்த்து 'புத்தியில்லாத மந்த இருதயமுள்ளவர்களே' என்கிறார். அவர்கள் தெளிந்த புத்தியும் கூர்மையுமான இருதயமுமுள்ளவர்களாயிருந்தால் இயேசுநாதர் உயிரோடிருக்கையில் பல தடவைகளாகத் தாம் பாடுபட்டு மரித்து மூன்றாம் நாளில் உயிரோடெழுந்திருப்பேன் என்று சொன்ன வார்த்தைகளை நினைவுகூர்ந்திருப்பார்கள். மத்தேயு சுவிசேஷத்தில் 6 தடவை சீஷர்களுக்கு முன்னறிவித்திருக்கிறார் என்று பார்க்கிறோம். ஆகையால் ரட்சகர் மோசே முதலிய தீர்க்கதரிசிகள் எழுதின வேத வாக்கியங்களெல்லா

வற்றிலும் தம்மைக் குறித்து எழுதியிருக்கிறவைகளை அவர்களுக்கு விவரித்துக் காண்பித்தார். அப்போது அவர்களுடைய இருதயம் கொழுந்துவிட்டு எரிந்தது. தங்கள் அவிசுவாசத்தையும் இருதயக் குருட்டாட்டத்தையும் உணர்ந்தார்கள். இயேசு அப்புறம் போகிறவர்போல காணப்பட்டபோது 'நீர் எங்களுடனே தங்கியிரும்' என்று கெஞ்சினார்கள்.

தேவனுடைய வசனம்தான் பேதைகளை உயிர்ப்பிக்கிறது, அவர்களை ஞானிகளாக்குகிறது. வேத வசனத்தை அறியாததினால்தான் தப்பான எண்ணங்களும் அபிப்பிராயங்களும் உண்டாகிறது. வேத வசனமே மெய்யான பாவ உணர்வுண்டாக்குகிறது. அது ஆத்துமாவையும் ஆவியையும் கணுக்களையும் ஊடறுத்துச் செல்லக்கூடிய ஆவியின் பட்டயம். அவிசுவாசத்தை நீக்கி விசுவாசத்தைப் பெலப்படுத்தும்.

**இரண்டாவது, அவர்கள் மெய்க்காட்சி கண்டார்கள்.** அவர்கள் கண்கள் தங்களோடு நடந்து பேசிக்கொண்டுவருகிற ரட்சகரை காணக்கூடாதபடி மறைக்கப்பட்டிருந்தது. அவர்களுக்கு ரட்சகர் நன்றாய்த் தெரியும், அவர் நாசரேத்திலிருந்து வந்தவர், வாக்கிலும், செய்கையிலும் தேவனுக்கு முன்பாகவும் ஜனங்களெல்லாருக்கு முன்பாகவும் வல்லமையுள்ள தீர்க்கதரிசியாயிருந்தார் என்று அறிந்திருந்தார்கள். அவர்களில் சிலர் கல்லறையினிடத்திற்குப் போய் அவருடைய சரீரத்தைக் காணாமல் அவர் உயிரோடெழுந்திருந்தார் என்று சொன்ன தேவதூதர்களைக் கண்டார்கள் என்பதையும் அறிந்திருந்தார்கள். ஆனால் தங்களோடு பேசிக்கொண்டுவருகிற அவரே தங்கள் எஜமான் என்பதைக் காணவில்லை. வீட்டுக்குள் பிரவேசித்து அப்பத்தை எடுத்து ஆசீர்வதித்தார். அதைப் பிட்டு அவர்களுக்குக் கொடுத்தார். வனாந்தரத்தில் 5000 பேருக்கும் 4000 பேருக்கும் போஜனமளித்தபோது அவ்வண்ணம் அப்பத்தை எடுத்து ஆசீர்வதித்தாரே. அவ்வண்ணம் இன்னும் செய்தபோது அப்பம் பெருகி ஆசீர்வாதமுண்டாயிற்று. பாடுபட்ட அன்றிரவு எருசலேமின் மேல்வீட்டறையில் 'இது என்ன சரீரம்' என்று அப்பத்தை ஆசீர்வதித்துப் பிட்டுக்கொடுத்தாரே. அந்த ஞாபகமும் விசுவாசமும் அவர்களில் உண்டாகும். மெய்யாகவே அவரைக் கண்டார்கள், அவர்கள் கண்கள் திறக்கப்பட்டது, அவரை அறிந்தார்கள்.

**மூன்றாவது, மெய்யான சாட்சி கொடுத்தார்கள்.** தங்கள் ரட்சகரை தரிசித்தவுடனே 'அந்நேரமே' எழுந்திருந்து இராவிலேயே எருசலேமுக்குத் திரும்பிவந்து சீஷர்கள் கூடியிருக்கக்கண்டு 'கர்த்தர் மெய்யாகவே உயிர்த்தெழுந்தார், சீமோனுக்குத் தரிசனமானார், நாங்கள் அவரைக் கண்டோம்' என்று சாட்சிகொடுத்தார்கள். இயேசுவைக் கண்டவன், அவரை மெய்யாய் விசுவாசிக்கிறவன் அவரைக் குறித்து மற்றவர்களிடத்தில் பேசாமலிருக்கக்கூடாது. பேதுருவும் யோவானும் சனகரிம் சங்கத்துக்கு முன்பாக தைரியமாய் 'நாங்கள் கண்டவைகளையும் கேட்டவைகளையும் பேசாமலிருக்கக்கூடாதே' என்று அப். 4: 20ல் சொன்னார்களென்று பார்க்கிறோம். நாமும் மெய்யாய் இயேசுவைத் தரிசிக்கிறவர்களானால் அவரைக்குறித்த சாட்சி நமது வாயினின்றும் எப்போதும் புறப்படும். வெட்கப்படாமல் பயப்படாமல் தைரியத்தோடு அவரைக்குறித்து மற்றவர்களிடத்தில் பேசுவோம்.

Printed at the Palamcottah Printing Press, Palamcottah and published by the Christian Brotherhood Association, Tinnevelly.

May 1917 Registered No. M. 163

# The Water of Life
# ஜீவத்தண்ணீர்

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்." யோவான் 7: 38.

Vol. XVIII மே 1917

## இயேசுவும் பரிசேயரும்

'இந்த மனுஷன் தீர்க்கதரிசியாயிருந்தால் தம்மைத் தொடுகிற ஸ்திரீ இன்னாளென்றும் இப்படிப்பட்டவளென்றும் அறிந்திருப்பார்; இவள் பாவியாயிருக்கிறாளே'. லூக். 7: 39.

'இவர் பாவிகளை ஏற்றுக்கொண்டு அவர்களோடே சாப்பிடுகிறார்'. லூக். 15: 2.

'இவர் பாவியான மனுஷனிடத்தில் தங்கும்படி போனார்'. லூக். 19: 7.

லூக்கா சுவிசேஷத்தில் முறையே வருகிற இந்த மூன்று வாக்கியங்களையும் பிரசங்கவாக்கியமாக் கொள்ளுவோம். நமது ஆண்டவருடைய ஊழியகாலத்தில் அவருடன் சம்பந்தப்பட்டவர்களில் பரிசேயர் ஒரு வகுப்பார். இவர்களுடைய நிலை மூன்றுவிதமாக மாறினது. ஆரம்பத்தில் அவர்கள் ஆண்டவரிடம் வந்தபோது அவர்மேல் அபிமானம்வைத்து அவருடைய வார்த்தைகளுக்குப் பிரியமாய்ச் செவிகொடுத்தார்கள். கொஞ்சக்காலம் பொறுத்து அவர்களுடைய மனநிலை மாறி அவரைக் குற்றப்படுத்தும்படி பிரயாசப்பட்டார்கள். கடைசியாக அவரை விரோதித்துக் கொலைசெய்யத் தீர்மானித்தார்கள். இவைகளில் முதலையும் கடைசியையும் விட்டுவிட்டு அவர்பேரில் குற்றம்பிடிக்க முயன்ற விஷயத்தை மாத்திரம் சிந்திப்போம்.

I. நடந்த சம்பவம் என்ன? மேலே சொன்ன மூன்று வாக்கியங்களும் மூன்று சமயங்களில் சொல்லப்பட்ட பரிசேயருடைய வார்த்தைகள். அவைகள் நமதாண்டவரைக் குற்றப்படுத்தும் சொற்களாயிருக்கிறது. நடந்த சம்பவங்களை முறையே பார்ப்போம். பரிசேயரில் ஒருவன் நமதாண்டவரைத் தன்னோடு போஜனத்துக்கு அழைக்க, அவர் அவன் வீட்டில் பிரவேசித்துப் பந்தியிருக்கிறார். அச்சமயத்தில் ஊருக்கெல்லாம் தெரிந்த கெட்டுப்

போன ஒரு பெண்பிள்ளை, அவரிருந்த வீட்டுக்குள் வந்து தீர்க்கதரிசியைத் தொடுகிறதும் பாசம் காட்டுகிறதுமாயிருக்கிறாள். அவ்வீட்டுக்குள் வர அவள் யோக்கியதையுடையவள் அல்ல. அவர் காலைத் தழுவுகிறதும், பாசக் கண்ணீர் வடிக்கிறதும், பாதத்தில் படுத்துக்கொண்டு ஓயாமல் முத்தம் கொடுக்கிறதும், வாசனை எண்ணெயால் அவர் பாதங்களைப் பரிமளிக்கச் செய்ததுமான இப்படிப்பட்ட சமுசயத்துக்கிடமான காரியங்களைப் பரிசேயன் கண்டபோது: இந்த மனுஷனை தீர்க்கதரிசியென்று மதித்திருந்தோமே, இவர் தீர்க்கதரிசியாயிருந்தால் இப்பேர்ப்பட்ட அயோக்கியமான ஸ்திரீ தம்மைத் தொட இடங்கொடுக்கலாமா என்பது அவனுடைய தாவா.

இரண்டாவது சம்பவம், பரிசேயரில் தலைவனாயிருந்தவன் வீட்டில் சாப்பிடப் போயிருந்தார். அங்கொரு அற்புதம் செய்ததின் பின் அநேகம் அருமையான உபதேசங்கள் செய்தார். இதற்குள்ளாக பல பாவிகளான பெருங்கூட்டத்தார் அவருடைய திருவசனத்தைக் கேட்க வாஞ்சைகொண்டு அவரிடம் வந்து சேர்ந்தார்கள். நாம் நமது சிநேகிதர்களைக் கூட்டமாகக் கண்டவுடன் ஆவலோடு போய்ச் சேர்ந்துகொள்வதுபோல அந்தப் பாவிகளான புருஷரையும் ஸ்திரீகளையும் அவர் கண்டமாத்திரத்தில் அவர்களைப் பட்சமாய் ஏற்றுக்கொண்டு அவர்களோடு கலந்து உறவாடினார். கூட உட்கார்ந்து போஜனம் சாப்பிட்டார். உடனே பரிசேயர் முறுமுறுத்தது: ஐயா! இதென்ன? இவரைப்பற்றி நாம் எவ்வளவோ மேலாக எண்ணியிருந்தோமே, 'இவர் பாவிகளை ஏற்றுக்கொண்டு அவர்களோடு சாப்பிடுகிறாரே' என்றார்கள். நமக்குள் Reception என்று சொல்லப்படுகிற கூட்டத்தில் சிநேகிதர்களைக் கொஞ்சநேரம் ஏற்றுக்கொண்டு உபசரிக்கிற முறை உண்டு. அது பொதுவான ஒரு வழக்கம். அதினாலே நாம் நம்மை அழைத்தவர்களுக்குப் பிராண சிநேகிதர்களாகிறதில்லை. அல்லது அவர்கள் நமக்கு உற்ற சகோதரராகிறதுமில்லை. இயேசுவானவர் இப்பாவிகளை ஏற்றுக்கொண்டார் என்று சொல்லும்போது மெய்யாகவே தம்மை அவர்களுடைய சொந்தச் சகோதரனாகவும் சிநேகிதனாகவும் ஒப்புக்கொடுத்து அவர்களைத் தமது அன்புக்குரியவர்களாக்கிக்கொண்டார் என்பதே கருத்து.

மூன்றாம் சம்பவம் குள்ளனைக் குறித்தது. இவன் ஆயக்காரருக்குத் தலைவனும் சனத்த ஐசுவரியவானுமாயிருந்தான். இயேசுவைப்பற்றி அதிகமாய்க் கேள்வியுற்றுப் பார்க்க ஆசைப்பட்டான். மற்ற மனுஷரோடு நின்று பார்க்க வளர்த்தி போதாது. குள்ளர்களுக்கு யுக்தி அதிகம். சாமியுண்டாக்கின மரம் சாலையிலே நின்றது. நோக்கிப் பார்த்தான், உடையை வரிந்து கட்டினான், துரிதமாய் ஏறி இலைக்குள் மறைந்துகொண்டு கீழ் நோக்கின கண்ணாயிருக்கிறான். தம்மைத் தேடுகிறவர்களை [illegible]டாக ஆண்டவர் மரத்தின்கீழ் வந்தபோது நின்றார். ஜனங்கள் திகைக்கிறார்கள். குள்ளனுக்குக் கைகால் பதறுது, நெஞ்சு துடிக்குது



[illegible] JUN 1917

சகேயுவே! சீக்கிரமாய் இறங்கிவா, இன்றைக்கு நான் உன் வீட்டிலே தங்கவேண்டும் என்றார். இவ்வளவு சொன்னதுதான் மரத்திலிருந்து கீழே இறங்கி சந்தோஷத்தோடு அவரை அழைத்துக்கொண்டு போனான். இதைக் கண்டவுடன் 'இவர் பாவியான மனுஷனிடத்தில் தங்கும்படி போனார்' என்றார்கள்.

II. இம்மூன்று சம்பவங்களில் அவர்கள் கண்டுபிடித்த குற்றமென்ன? முதல் சம்பவத்தில் அவரை அழைத்த பரிசேயன் சொல்லுகிற வார்த்தைகளைக்கொண்டு அவன் எந்த விஷயத்தில் நமதாண்டவரைக் குற்றப்படுத்தினான் என்பதை நாம் அறிந்துகொள்ளலாமல்லவா? நமதாண்டவர் இன்னாரென்றும் எப்படிப்பட்டவரென்றும் அவன் அறிந்தவனல்ல. ஆனால் அந்த ஸ்திரீ இன்னாளென்றும் எப்படிப்பட்டவளென்றும் அவனுக்கு நன்றாகத் தெரியும். அவளோடு பழகினவர்களும் உறவாடினவர்களும் அயோக்கியமான மனுஷரென்பதும் அவனுக்குத் தெரியும். அப்பேர்க்கொத்த கேவல ஸ்திரீ தம்மைத் தழுவ, முத்தமிட, பாசக் கண்ணீர்வடிக்க ஆசையோடு இடங்கொடுக்கிறாரே. சேற்றில் நடந்தால் காலில் சகதி ஒட்டாமல் போகுமா? இந்த அசுத்த ஸ்திரீயைத் தொட இடங்கொடுத்தவர் கறைப்படாதிருக்கக்கூடுமோ என்பது அவனுக்குத் தோன்றின குற்றம்.

இரண்டாம் சம்பவத்தில், பாவிகளான ஸ்திரீகளோடும் புருஷரோடும் தோழமை கொண்டாடி அவர்களோடு சரியாய் உட்கார்ந்து போஜனம் பண்ணினபடியால் அவரும் அவர்களைப் போன்றவர்தான் என்பது அவர்களுடைய துணிபு. சாதாரணமாய் மத சபையைச்சேர்ந்த ஒரு வாலிபன் தகாத நடக்கையுள்ள வாலிபர்களோடு போக்கும்வரத்துமாயிருந்து அவர்களோடு புசித்துப் பானம்பண்ணுவதை நாம் கண்டால் அவன் கெட்டே போனான், அதற்கு ஆட்சேபனை என்ன என்று சொல்லமாட்டோமா?

மூன்றாம் சம்பவத்தில், சகேயுவை எல்லாரும் நன்றாய் அறிவார்கள். ரோம ஆளுகைக்குள் வரிவாங்கும் உத்தியோகம் பெற்றவர்கள் அநியாய சம்பாத்தியமில்லாமலே திரவியம் சேர்த்து சம்பிரமமாக வாழக்கூடும். ஆனால் அநேகர் தங்கள் வருமானத்தோடு ஜனங்களை ஒடுக்கி அநியாயமாக சம்பாதித்து, ஐசுவரியமடைகிறதுண்டு. சகேயு அப்படிப்பட்டவன். அப்படிப்பட்ட கிஷ்டே பாவியின் வீட்டில் இவர் தங்கும்படிபோனால் அவனுடைய அநியாயத்துக்கும் திருட்டுக்கும் இவரும் உடன்பட்டவரல்லவா என்பது அவர்கள் சொல்லக்கூடிய குற்றம்.

இம்மூன்று விஷயத்திலும் இவர்கள் சொன்ன குற்றங்கள் நியாயம் போல் தோன்றுகிறதல்லவா? அவர்கள் சொன்னதில் பொய் ஒன்றும் இல்லையே. நாம் இயேசுவை இன்னாரென்றும் எப்படிப்பட்டவரென்றும் அறிவோம். என் பரிசுத்த ஆண்டவரை இந்தப் பரிசேயர் இப்படியும் குற்றப்படுத்தலாமா என்று நாம் வைராக்கியங்கொள்ளலாம். ஆனால் அவரை

அறியாத பரிசேயர் அவரைக் குற்றப்படுத்தினது ஆச்சரியமல்ல. தோற்றத்தின்படி தீர்ப்புச்செய்தார்கள். அவர் இன்னாரென்று அறிந்திருப்பார்களானால் நீதியின்படி தீர்ப்புச்செய்திருப்பார்கள்.

III. வாஸ்தவத்தில் நடந்த விசேஷம் என்ன? பாவியான ஸ்திரீ தன்னைத்தொட இடங்கொடுத்தது மெய்தான். பாவிகளை ஏற்றுக்கொண்டு அவர்களோடு போஜனம் பண்ணினதும் மெய்தான். பாவியான மனுஷன் வீட்டில் தங்கும்படி போனதும் மெய்தான். இவைகளை ஒருவரும் மறுக்க முடியாது. இப்படி அவர் தொட இடங்கொடுத்ததால், ஏற்றுக்கொண்டு போஜனம் பண்ணினதால், வீட்டிற்குள்போய் தங்கினதால் உண்டான தீமை என்ன? ஸ்திரீயினால் கறைப்பட்டாரோ அல்லது அவளை ரட்சித்தாரோ? பாவிகளால் தீட்டுப்பட்டாரோ அல்லது அவர்களை நீதிமான்களாக்கினாரோ? சகேயுவுக்கு திருடக்கற்றுக்கொடுத்தாரோ அல்லது தர்மவாளனாக்கினாரோ? ஒருவருடைய பாவசோதனைக்குள் நான் இழுக்கப்பட்டது மெய்யானால் நான் ஆவிக்குரிய பெலனை இழந்துபோகிறேனே. இப்படியிருக்க நான் அவர்களை இரட்சிப்பதெப்படி? மற்றவர்களுடைய வியாதி என்னை ஆண்டுகொண்டு படுக்கவைக்குமானால் அவ்வியாதிக்காரருக்கு நான் உதவிசெய்வதெப்படி? பாவிகள் நடுவில் உலாவின நமதாண்டவர் பாவங்களுக்கு முற்றிலும் விலகினவரும் பாவங்களை நிராகரிக்கிறவல்லவருமாயிருந்தார். குஷ்டரோகிகளை மற்றவர்கள் தொடமாட்டார்கள். இவரோ அவர்களைத் தொட்டார்; குஷ்டரோகம் பறந்து போய்விட்டது. குஷ்டத்தை அவர் மேற்கொண்டிருக்க அக்குஷ்டம் அவரைத் தீட்டுப்படுத்துவதெப்படி? பிரேதங்களைத்தொட்டார். செத்தவர்கள் பிழைத்தார்கள். பிரேதத்தைத் தொட்டதினால் அவர் தீட்டுப்பட்டாரென்று எவன் சொல்லத்துணிவான். தீமையை நன்மை ஜெயிக்கும்போது அத்தீமையால் நன்மைக்குத் தீட்டில்லை. இந்த இரகசியத்தை பரிசேயர் கவனிக்காமற் போனது ஆச்சரியமே.

அவள் பாவியாயிருந்தது மெய்தான். ஆகிலும் கர்த்தரைத் தரிசித்தது முதல் தானறிய, உலகமறிய முற்றிலும் புதுமனுஷியாக மாற்றப்பட்டாள். 'உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது, உன் விசுவாசம் உன்னை ரட்சித்தது சமாதானத்தோடே போ'. என்றார். இவள் ஜீவியம் இவ்வளவு பரிசுத்தமானது எதினாலே என்று கேட்கிறார்கள். இயேசுவின் பாதத்தைப் பிடித்துக் கொண்டாளாம், இம்மாறுதலடைந்தாளாம் என்று பேசிக்கொள்ளுகிறார்கள். இந்தப் பாவிகளான ஸ்திரீகள் புருஷர்களுக்கு பரமசிந்தை உண்டானதெவ்விதம் என்று கேட்கிறார்கள். நசரேயனாகிய இயேசு அவர்களை ஏற்றுக்கொண்டு அவர்களைச் சிநேகித்து அவர்களோடு சாப்பிட்டாராம். அவர்கள் இப்படி மாற்றப்பட்டுப் போனார்களாம் என்று சொல்லிக்கொள்ளுகிறார்கள். நாலாதிக்கிலுமிருந்து ஏராளமான ஏழை ஜனங்கள் சகேயுவின் வீட்டைச் சூழ்ந்து நிற்கிறார்கள். போதுமான சாப்பாடு, வஸ்திரம், பொரு



ளுதவி தாராளமாக அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. அதுவுமன்றி அநேகரை அவன் அழைத்து அவர்களுக்கு அதிகமான பணம் கொடுத்து அனுப்புகிறான். ஒருவன் மற்றவனைப்பார்த்து சகேயு உனக்கென்ன கொடுத்தார் என்று கேட்கிறான். எனக்கு ரூ 40 கொடுத்தார் என்கிறான். கணக்கென்ன என்று கேட்கிறான். கொஞ்சக்காலத்துக்கு முன் என்னிடத்தில் ரூ 10 அநியாயமாக வசூல் செய்தார். அப்போ எனக்கிருந்த வருத்தம் சொல்லிமுடியாது. இந்த முடிவான் எப்போ ஒழிவான் என்று புலம்பினேன். இப்போ திடீரென என்னை அழைத்து நாலத்தனையாகக் கொடுத்து தயவுசெய்து மன்னிக்கவேண்டும், சுவாமி உன்னை ஆசீர்வதிப்பாராக என்று சொல்லி அனுப்பினார் என்கிறான். உனக்கு மாத்திரமா இப்படி என்று அவன் கேட்க, எனக்கு மாத்திரமா? ஐயோ, எத்தனையோபேர் ஏராளமான பணம் கைநிறைய, மடிநிறைய வாங்கிக்கொண்டு சந்தோஷமாகப் போகிறார்களே. 100 வாங்கினவனும், 200 வாங்கினவனும், 300, 500, வாங்கினவர்களும் உண்டே என்கிறான். வாங்கினவர்கள் என்ன சொல்லிக்கொண்டு போகிறார்கள் என்று கேட்க, என்ன சொல்லுகிறார்கள் இதென்ன; நாலத்தனையாக அள்ளிக்கொடுக்கிறாரே என்றுதான் சொல்லுகிறார்கள் என்கிறான். இதென்ன ஆச்சரியம்! ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுப்பதும், அநியாயமாய் வாங்கினவர்களுக்கு நாலத்தனையாகத் திருப்பக்கொடுப்பதுமான இவ்வளவு சுயவெறுப்பும் தர்மசிந்தையும் உத்தம ஜீவியமும் பொருளாசை சகேயுவுக்கு எங்கேயிருந்து வந்தது? இதற்குக் காரணம் இருக்கவேண்டுமே என்கிறான். நசரேயனாகிய இயேசு என்னும் ஒரு தீர்க்கதரிசி அவன் வீட்டுக்குள் தங்கப்போனாராம், அன்றுமுதல் இப்பெரிய மாறுதல் அவனில் காணப்படுகிறதென்றும், அவன் ரட்சிக்கப்பட்டு தெய்வத்துக்குப் பிள்ளையானானென்றும் எல்லாரும் சொல்லிக்கொள்ளுகிறார்கள் என்று மற்றவன் சொல்லுகிறான்.

கிறிஸ்துவைக் குற்றப்படுத்தும்படி பரிசேயர் சொன்ன வார்த்தைகளுக்காக நாம் சந்தோஷப்படவேண்டும். பாவிகளாகிய நமக்கு அவ்வார்த்தைகள் எவ்வளவோ அருமையானவைகள்! அவர்கள் குற்றப்படுத்தும்படி சொன்ன வார்த்தைகளே நமது ஆண்டவருக்கு அதிக மகிமையை உண்டாக்குகிறது. பாவி அவரைத் தொட்டதினால், பாவிகளோடு அவர் போஜனம் பண்ணினதினால், பாவியின் வீட்டில் தங்கினதினால் அவர் சுத்தமுள்ளவரல்லவென்றும், அவர்கள் பாவங்களுக்கு உடந்தைப்பட்டவரென்றும் நினைத்தார்கள். அவர் நம்மைப்போல் வெறும் மனுஷனாகமாத்திரம் இருந்தால் அவர்கள் நினைத்தது சரியாயிருக்கலாம். அயோக்கியர்களோடு நாம் சகவாசம் பண்ணுவோமானால் நாம் தான் அவர்களை ஆதாயம்பண்ணுவோமா அல்லது அவர்கள்தான் நம்மை ஆதாயம்பண்ணிக்கொள்வார்களோ எப்படிச் சொல்லலாம்? இயேசுவோ நம்மைப்போன்றவரல்ல. மனுஷீகத்தின்படி அநேக விஷயங்களில் நமக்கொப்பான சகோதரனாக விளங்குகிறார். சற்று

உற்று ஆராய்ந்துபார்த்தால் என் ஆண்டவரே, என் தேவனே, என்று நாம் அதிசயிக்கத்தக்கதாக வானங்களுக்கு மேலாக உயர்ந்து நிற்கிறீரே. மனுஷனாக வெளிப்பட்ட அவர் தெய்வீக அமைப்புள்ளவர் என்பதை பரிசேயர் அறிந்தார்களில்லை. ஆகிலும் அவர்கள் சொன்ன வார்த்தைக்காக நாம் நன்றியாயிருக்கவேண்டும். நான் எவ்வளவு பெரும்பாவியாயிருந்தாலும் நான் அவரிடம் போய் ரட்சிக்கப்படலாம். அவரும் நானும் அந்நியோந்நிய சிநேகிதர்களாயிருக்கலாம். பாவியாகிய என் உள்ளத்தில் அவர் வந்து வாசம்பண்ணலாம். ஏனென்றால் அவர் பாவிகளை ஏற்றுக்கொள்ளுகிறவர் அவர்களோடு தங்க விரும்புகிறவர். பாவிகளைத் தேடிவந்த பரம ரட்சகரே, உலகத்தின் சமஸ்தகோடி பாவங்களையும் நிராகரிக்க வல்லவரே, நீர் கிருபையிலும் வல்லமையிலும் நிறைந்திருக்கிறீர். பரிசேயர் உம்மை அறியாமல் கெட்டுப்போனார்கள். நொறுங்குண்ட பாவிகள் இரக்கம் பெற்றார்கள். உமதுபேரில் சாட்டப்பட்ட மூன்று குற்றங்களும் எனக்கு விலையுயர்ந்த மூன்று முத்துக்கள்போலிருக்கிறது. பாவியான நான் உம்மைத் தொட்டுக் குணமாவேன். உம்மோடு போஜனம்பண்ணி உம்மோடைக்கியமாவேன். நீர் என்னில் வாசம்பண்ண நான் பரிபூரணமடைவேன். என் இயேசு ரட்சகரே! உமக்கு அனந்தானந்த ஸ்தோத்திரம், ஆமென்.

S. பரமானந்தம்

---

## 'பாவத்தை அறிகிற அறிவு' ரோ. 3: 20.

இந்த அறிவு அநேகருக்கு இல்லை. வாயினாலே 'பாவம் செய்தேன்' என்று சொல்லுவது, பாவத்தை அறியவுமில்லை, உணரவுமில்லை, வெறுக்கவுமில்லை, விட்டுவிடவுமில்லை. பார்வோனைப்போல வாயினாலே சொன்னாலும் இருதயத்தைக் கடினப்படுத்துகிறது. பிலேயாம்போல் அதை விட்டுத் திரும்பினால் இன்னும் அதிகப் பிரியத்தோடு செய்கிறது. யூதாஸ்போல், பாவத்தின்மேல் பாவம்போய்ச்செய்வது. யோபுக்கு இந்த அறிவும் உணர்வுமிருந்தது. 'நான் என்னை அருவருத்து தூளிலும் சாம்பலிலுமிருந்து மனஸ்தாபப்படுகிறேன்'. (யோபு. 42: 6). தாவீதுக்குமிருந்தது. 'என் மீறுதல்களை நான் அறிந்திருக்கிறேன். என் பாவம் எப்பொழுதும் எனக்கு முன்பாக நிற்கிறது'. சங். 51: 3. சீமோன் பேதுருவுக்குமிருந்தது; தன் பாவத்தை நினைத்துக்கொண்டு 'வெளியேபோய் மனங்கசந்து அழுதான்.' மத். 26: 75. பவுல் அப்போஸ்தலனுக்குமிருந்தது,—'மூன்று நாள் புசியாமலும் குடியாமலுமிருந்தான்.' அப். 9: 9. இந்த அறிவு அவசியம் வேண்டும். தேவன் பாவத்தைப்பற்றிச் சொல்லுவது, 'அருவருப்பை உன் வீட்டிலே கொண்டுபோகாயாக, அதைச் சீ என்று வெறுத்து, முற்றிலும் அருவருக்கக் கடவாய்'. உபா. 7: 26. 'நான் வெறுக்கிற இந்த அருவருப்பான காரியத்தைச் செய்யாதிருங்கள். எரே. 44: 4.



I. **'நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம்'.** 1 யோ. 3: 4, திருஷ். I ராஜா. 2: 36–46. ராஜாவின் உத்தரவு எருசலேம் பட்டணத்தில் குடியிருந்து அங்கேயிருந்து வெளியே போகக்கூடாது. 'நீ வெளியே போய் கீதரோன் ஆற்றைக் கடக்கும் நாளில் நீ சாகவே சாவாய்'. (V. 37). நல்வார்த்தை என்று ஒப்புக்கொண்டான். மூன்று வருஷம் சென்றபின்பு அந்த உத்தரவை மீறி எல்லையைக் கடந்துபோனான். 'சீமேயி' மீறியாயிற்று. எத்தனைவிசை? ஒரேவிசை . . . ராஜா அவனைக்கொன்றுபோடுவித்தான். கீதரோன் ஆறுபோல் நியாயப்பிரமாணம் இருக்கிறது அதைக் கடந்து போனால் நித்திய மரணம். நம்மைச்சுற்றி ஒரு வேலியைப்போல் அடைத்திருக்கிறார். அதற்கு அப்பாலேபோனால் நரகம். சகோதரனே! சகோதரியே! எல்லையைக் கடந்துபோனாய்! எத்தனைவிசை! பத்துக் கற்பனையையும் திரும்பத்திரும்ப மீறியிருக்கிறாய். பட்டயத்திற்கு எப்படித் தப்பித்துக் கொள்ளக்கூடும்? திருஷ். ரோமருடைய பழைய ராஜ்யத்துக்கு எல்லை ஒரு சிறு நதி. எந்த ரோமன் படைகளோடு அதைக் கடந்து, அந்த ராஜ்யத்தில் பிரவேசித்தானோ அவனுக்குத் துரோகி என்று பேர். விரோதங்கொண்டு அந்த தேசத்தில் வந்தவன் ஆகையால் துரோகி. ஆ! பாருங்கள்! மாம்ச சிந்தை தேவனுக்கு விரோதமான பகை. கட்டளையை மீறி, தேவதுரோகிகளானோம்.

II. 'அநீதி எல்லாம் பாவம்'. 1 யோ. 5: 17. அவர் பார்வையில் நியாயமில்லாத எந்தக் காரியமும், செம்மையல்லாத எந்தக் கிரியையும் ஒழுங்கீனமான எந்த எண்ணம் வார்த்தை செய்கையும் பாவமே.

திருஷ். ஆமோஸ். 7: 7, 8. இதோ! தூக்குநூல் பிரமாணத்தினால் கட்டப்பட்ட ஒரு மதிலின்மேல் நின்றார். 'அவர் கையில் தூக்குநூலிருந்தது'. இதோ! இஸ்ரவேல் என்னும் என் ஜனத்தின் நடுவே தூக்குநூலை விடுவேன், இனி அவர்களை மன்னிக்கமாட்டேன். அவர் நூல் நேராயிருக்கிறதா? கோணலாயிருக்கிறதா?

ஐயோ! தேவன் தமது தூக்குநூலைவிட்டு நம்முடைய நினைவு, பேச்சு, செய்கை ஒவ்வொன்றையும் சோதித்துப் பார்த்தால் எவ்வளவோ கோணல்! திருஷ். தானியேல் 5: 27. 'நீ தராசிலே நிறுக்கப்பட்டுக் குறையக் காணப்பட்டாய்'. ஒவ்வொரு ஆணையும், பெண்ணையும், பிள்ளையையும் தேவன் தம்முடைய தராசிலேபோட்டு நிறுத்துப் பார்க்கிறார். ஒரு தட்டிலே இயேசுகிறிஸ்துவையும், மறுதட்டிலே உன்னையும் தூக்கிப் பார்க்கிறார். எத்தனை குறைவு! குறையக் காணப்பட்ட மனுஷன் அன்று ராத்திரியிலே கொலை செய்யப்பட்டான்.

III. **'தீயநோக்கம் பாவம்'.** நீதி. 24: 9. வார்த்தையைமட்டுமல்ல, கிரியையைமாத்திரமல்ல நோக்கத்தையும் பார்க்கிறார், கெட்ட நினைவு, துராசை, அசுத்த இச்சை, பெருமை, பொறாமை, வஞ்சகம், மன

சில் தன்புத்தாழ்ச்சி, தீய யோசனை யாவும் பாவமாம். அப்படியானால் உன் பாவங்களை கணக்கிடக்கூடுமோ? திருஷ். லூக். 12: 19. ஐசுவரியவான் 'தனக்குள்ளே சிந்தித்துச் சொல்லிக்கொண்டான்'. வாயினாலே சொல்லவில்லை. கர்த்தரோ அவன் தீய யோசனையை அறிந்துகொண்டார். 'மதிகேடனே' 'உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த ராத்திரியில் எடுத்துக்கொள்ளப்படும்' என்று உத்தரவு கொடுத்தார். மத். 3: 5. கிறிஸ்துநாதர் ஜெப ஆலயத்தில் போதிக்கிறார். ஜனங்கள் அவர்பேரில் குற்றம் சாட்டலாமென்று அவர்மேல் நோக்கமாயிருந்தார்கள். வாயினாலே ஒன்றும் சொல்லவில்லை. இயேசுநாதரோ அவர்கள் தீய யோசனையை அறிந்துகொண்டார். அவர்களுடைய இருதயக் கடினத்தினிமித்தம் அவர் விசனப்பட்டு, கோபத்துடனே சுற்றிலுமிருந்தவர்களைப் பார்த்தார். அப்படியானால் நம்மேல் அவர் விசனப்படவில்லையா? கோபத்துடனே கிறிஸ்துநாதர் பார்க்கிறதில்லையா?

IV. நன்மை செய்யாமை பாவம். James 4: 17. ஒருவன் நன்மை செய்ய அறிந்திருந்தும் அதை செய்யாமல்போனால், அது அவனுக்கு பாவமாயிருக்கும்.

திருஷ். யோனா ஓடிப்போய்விட்டான். அதினால் உண்டான மோசம் பெரிது. பெரிய கொந்தளிப்பு. அவன் கடலில் எடுத்துப்போடப்பட்டான். குணப்படவேண்டுமென்று அறிந்தும் கடத்திக்கடத்திவந்த வாலிபன்.

V. விசுவாசத்தினாலே வராத யாவும் பாவமே. ரோ. 14: 23.

திருஷ். காயீனுடைய காணிக்கை, நல்ல காணிக்கை என்றாலும் விசுவாசத்தினால் வராத காணிக்கை, ஆகையால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. நல்லபாம்பின் குட்டிகள் எல்லாம் விஷப்பாம்பு. கடல் தண்ணீர் எல்லாம் உப்புத்தண்ணீர். வேப்பமரத்தின் காயோ, சாறோ எல்லாம் கசப்பு அதில் இனிப்பு கிடையாது. குணப்படாத இருதயத்திலிருந்து உண்டானதெல்லாம் பாவமே.

## சங்கீதம் 119

### பேத் செக்ஷன். வா. 9—16.

பெயர். உமது வசனத்தினாலே என்னைப் பரிசுத்தமாக்கும்.

பொழிப்புரை.

வா. 9. உமது வசனம் வாலிபனுடைய வழிகளைப் பரிசுத்தமாக்குகிறது.

வா. 10. உமது வசனம் வழிதப்பவிடாமல் பரிசுத்தமாக்குகிறது.

வா. 11. உமது வசனம் பாவஞ்செய்யவிடாமல் பரிசுத்தமாக்குகிறது.



வா. 12. உமது வசனம் உமது தெய்வீக மகத்துவத்தைத் தெளிவாய்க் காட்டி என்னைப் பரிசுத்தப்படுத்துகிறது.

வா. 13. உமது வசனமாகிய நியாயத்தீர்ப்புகளை கூறி அறிவிக்க அறிவிக்க அது என்னைப் பரிசுத்தப்படுத்துகிறது.

வா. 14. உமது வசனத்தில் களிகூரும்படி செய்து அது என்னைப் பரிசுத்தப்படுத்துகிறது.

வா. 15. உமது வசனத்தில் தியானத்தை மூட்டி, என்னைப் பரிசுத்தமாக்குகிறது.

வா. 16. உமது வசனத்தில் மனமகிழ்ச்சியை யுண்டுபண்ணி அது என்னைப் பரிசுத்தமாக்குகிறது.

போட்குறிப்புகள்.

1. கர்த்தருடைய வசனத்தாலுண்டாகும் பரிசுத்தத்தின் ஆரம்பம். வா. 9, 10.

*a.* அது வாலிபனுடைய வழியைச் சுத்தமாக்கி, அதை நேரான பரிசுத்த வழியில் நடத்துகிறது. வா. 9.

*b.* அந்த நேரான பரிசுத்த வழியைவிட்டு விலகாதபடி காக்கப்பட ஜெபம். வா. 10.

2. கர்த்தருடைய வசனத்தாலுண்டாகும் பரிசுத்தத்தின் வளர்ச்சி. வா. 11—13.

*a.* கர்த்தருடைய வசனம் ஆண்டவருக்கு விரோதமாய் பாவஞ்செய்யாதபடி தடுக்கிறது. வா. 11. யோசேப்பு.

*b.* உமக்கு விரோதமாய் என்று சொன்னவுடனே, ஆண்டவருடைய பரிசுத்த லட்சணங்களின் மகத்துவம் ஒன்றுகூடி, சங்கீதக்காரன் கண்களுக்குத் தென்படவே, அவருடைய பரிசுத்த மகத்துவத்தைச் சிந்தித்து, கர்த்தாவே நீர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்கிறார். கர்த்தருடைய வசனத்தால் உண்டாகும் பரிசுத்தம் தெய்வத்தைப்பற்றிய பரிசுத்த பயத்தை உண்டாக்குகிறது. வா. 12.

*c.* கர்த்தருடைய நியாயத்தீர்ப்புகளை விவரிக்க விவரிக்க பரிசுத்தம் வளருகிறது. வா. 13.

3. கர்த்தருடைய வசனத்தாலுண்டாகும் பரிசுத்தத்தின் ஊக்கம். வா. 14—16.

(1) அது திரளான செல்வத்தில் ஒரு மனிதன் களிகூருவதுபோல, அவருடைய பிரமாணங்களில் களிகூரும்படி செய்கிறது. தேவப்பிரமாணத்தில் களிகூருதல் பாவத்துக்குச் சாவுதானே. பரிசுத்தத்தின் உயிரும் உச்சமும் இதுதானே. வா. 14.

(2) அது கர்த்தருடைய பிரமாணங்களில் தியானத்தை மூட்டி, அவைகளையே கண்ணோக்கச்செய்கிறது. வா. 15.

(3) கர்த்தருடைய பிரமாணங்களில் மனமகிழ்ச்சியை யுண்டுபண்ணி அவனைப் பரிசுத்தப்படுத்துகிறது. வா. 16.

ஒருவனை ஆண்டவரிடத்தும் மனம் பாவத்தை வெறுத்து, கர்த்தருடைய கட்டளைகளில் உள்ளங்களித்து மகிழும்போது, அது பரிசுத்தத்தின் உயர்வுதானே. வா. 9, 10. வாலிபனுடைய வழி, என் வழி என்றிருக்க, வா. 14, 15ல் உமது சாட்சிகளின் வழி, உமது வழி என்று சொல்லப்பட்டதைக் கவனிக்கும்போது, பக்தன் தன் சொந்த வழியை விட்டுவிட்டு, கர்த்தருடைய வழியைத் தனக்குச் சொந்தமாக்கிக்கொண்டதைக் குறிக்கிறது. இதுவல்லவா பரிசுத்தத்தின் உச்சம்.

**ஜெபம்.** எங்கள் அன்புள்ள பரமபிதாவே, தேவரீர் உமது திருக்குமாரனுடைய மன்றாட்டின் பிரகாரம், உமது வசனத்தினாலே எங்களைப் பரிசுத்தமாக்கும். உமது திருமனசாகிய வேதவசனம் எங்கள் உள்ளத்தில் தங்கச்செய்து, எங்கள் தீயமனதை மாற்றி, உமது தெய்வீக சிந்தையின் சாயலாக அதை மறுரூபமாக்கியருளும். உமது திருமனசின்மேல் வாஞ்சை பெருகப் பெருக, எங்கள் பாவ ஆசையின் சாவைக் காண்கிறோம், நீரே எங்கள் இருதயத்தின் பரிசுத்தத்தைத் தொடங்குகிறவரும் முடிக்கிறவருமாயிருப்பதால், உமது திருவசனம் பாவஞ்செய்யாதபடி எங்களைத் தடுத்து, எங்களை பரிசுத்தமாக்கவும், தேவ மனசின்மேல் வாஞ்சையை உண்டாக்கி எங்களைப் பரிசுத்தப்படுத்தவும், தேவமனசாகிய உமது வசனத்தின்மேல் மகிழ்ச்சியையும் ஆனந்தத்தையும் உண்டாக்கி எங்களைப் பரிசுத்தப்படுத்தவும் உமது பரிசுத்த ஆவியின் மூலமாய்க் கிரியை செய்தருளவேண்டுமென்று இயேசுவினிமித்தம் மனத்தாழ்மையோடு வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

D. J. HARRIS.

## நூறு பவுன்

ஏறக்குறைய 23 வருஷங்களுக்கு முன் நடுப்பிராயமுள்ள ஓர் விதவையான ஸ்திரீ பிள்ளைகளொன்றுமில்லாமல் தனிமையாய் ஜீவித்துக்கொண்டு வந்தாள். அவள் சித்திரப்படங்கள் செய்து விற்று அதினால் தன் ஜீவனார்த்தத்தைக் கழித்துவந்தாள். அவள் ஓர் சீமானுடைய தோட்டத்திலுள்ள ஓர் சிறு வீட்டில் வாடகை கொடுத்து வசித்துவந்தாள். ஆண்டவருக்குப் பயந்து நடக்கிறவள். தான் குடியிருந்த சிறு வீட்டைத் தன் வீடுபோல் பேணி, அலங்கரித்து வைத்திருந்தாள். அவள் எப்போதும் தன் வறுமையிலிருந்து மற்றவர்களுக்கு உதவி செய்கிற பழக்கமுடையவள்; படஞ்செய்து



விற்கிறவளானபடியாலும் மற்றவர்களுக்கு சிற்சில உதவிகள் புரிந்துவந்தபடியாலும் மற்றவர்கள் அவளுடைய ஆஸ்தியைக் குறித்து மட்டுக்குமிஞ்சி எண்ணினார்கள். சிலர் அவள் அப்படிச் செய்வது நல்லதல்லவென்று குற்றஞ்சாட்டுவதும் உண்டு. ஆனால் அவள் நிதானமும், ஞானமுமில்லாமல் உபகாரம் செய்கிறதில்லை. தாங்களே வேலைசெய்து ஜீவிக்கக்கூடிய சிலர் மாய்மாலம்பண்ணி உதவிக்காக வந்தபோதிலும் அவர்கள் ஏமாற்றுக்குள் அவள் அகப்படுகிறதில்லை. அபாத்திரமானவர்களுக்குப் பிச்சையிடமாட்டாள். குடிவெறி முதலிய பாவங்களிலகப்பட்டவர்கள் யாசிக்க ஏற்பட்டு வந்தபோதும் அவர்களுடைய வாஸ்தவமான ஸ்திதியை அவள் சீக்கிரத்துக்குள் அறிந்துகொள்வாள். மற்றநேரால் கைவிடப்பட்டவர்களுக்கு இவள் உதவிசெய்வதுண்டு. இளைஞனான ஆசாரவற்ற ஒருவன் நல்ல புத்திக் கூர்மையுள்ளவனென்று கண்டால் அவனுக்குப் புஸ்தகம் வாங்கிக்கொடுத்து படிக்கச் சொல்வாள். குழந்தைகளுள்ள விதவையான ஸ்திரீ ஒருத்தி வியாதிப்பட்டு பெலவீனமாகி வைத்தியரால் கடற்கரையருகில் வசித்தால் சுகமாகும் என்று ஏற்படுமானால், அவள் கடற்கரையில் வசிப்பதற்கு அவசியமான ஜாஸ்திச் செலவைக் கொடுத்துதவுவாள். வியாதிப்படுக்கையிலிருந்த ஓர் சிறுவன் தனக்கு வாத்தியப்பெட்டியொன்று (Concertina) வேண்டுமென்று கேட்க அவனுக்கு ஒன்று வாங்கிக்கொடுத்தாள். அந்தச் சிறுவன் வியாதிப்படுக்கை அவனுக்கு இன்பமாகி மரணமாகுமட்டும் அதை உபயோகித்துக்கொண்டே வந்தான். ஆனால் தன்னுடைய ஈகைக் குணத்தை யாருக்கும் சொல்லிக்கொண்டிருக்கமாட்டாள். ஆனாலும் இவ்வித உதவி செய்கிறதாகக் கேள்விப்பட்டவர்கள் இவளிடத்தில் ஏதோ ஐவேசிருக்கிறதென்றே உத்தேசிக்க இடமுண்டாயிற்று. என்றாலும் தனக்கு இவ்வகையாய் ஜாஸ்தியான செலவு நேரிடும்போதெல்லாம் மிகுந்த பிரயாசத்தோடு இரட்டிப்பான படங்கள் செய்து விற்றுத்தான் அதைச் சரிப்படுத்துவாள். இப்படியிருக்கும்போது ஒரு நாள் அவளுக்கு ஓர் கடிதம் வந்தது. அக்கடிதத்தில தான் குடியிருந்த வீட்டு நிலச்சுவான் தான் அந்த வீட்டை விற்கப்போகிறதாகவும் அவள் விலைக்கு வாங்குகிறதாயிருந்தால் 130 பவுன் பெறுமான விலையைக் குறைத்து அவளுக்கு நூறு பவுனுக்குக் கொடுப்பதாகவும் கண்டிருந்தது. அதை வாசித்ததும அவளுக்குண்டான மனவருத்தம் கொஞ்சநஞ்சமல்ல. ஐயோ, நான் என்ன செய்வேன்? இனிமேல் நான் எங்கே போவேன் வருஷாவருஷம் நான் இவ்வீட்டை அலங்கரித்து மிகுந்த நேர்த்தியாய் வைத்திருந்தேனே. எத்தனையோ கவலையுற்ற ஆத்துமாக்கள் இவ்விடத்துக்குவந்து ஆறுதலும சந்தோஷமும பெற்றுப்போனார்களே! இன்னும் எத்தனையோபேர் இவ்விடத்துக்கு வந்து பாவவுணர்வடைந்து தங்கள் பாவங்களை யறிக்கையிட்டு மன்னிப்புப்பெற்றுத் திரும்பினார்களே. அனேகம் ஸ்திரீகள் இங்கு கூடி தாகைகள் பெற்றுக்கொண்ட ஆத்தும சரீர நன்மைகளுக்காகத் தேவனுக்குத் துதி தோத்திரம் செலுத்தி புதுத் தீர்மானங்

கள் செய்து புதுப் பெலனடைந்து திரும்பினதுண்டே. ஏழையாகிய நான் நூறு பவுனுக்கு எங்கே போவேன் என்று அங்கலாய்ப்போடு பேசி தன் மன விசாகுலங்களையும் வருத்தங்களையும் கவலைகளையும் பரம பிதாவினிடத்தில் சொல்லி பதிக்கையிட்டாள். அவள் மனதில் உண்டான எண்ணங்களாவன:—

இந்த நூறு பவுன் ஆண்டவருக்கு எம்மாத்திரம்! ஆண்டவர் தமது பிள்ளைகளின் உள்ளத்தை ஏவி எழுப்புவாரானால் எத்தனையோ நூறு பவுன்கள் கொடுக்கத்தக்கதாக அத்தனை ஏராளமான பேர் இத்தேசத்தில் உண்டே. ஒருவேளை என்னைப் பார்க்கிலும் அதிக அவசரமானவர்கள் எத்தனையோ பேரிருக்கலாம். என்றாலும் என் அவசரத்தையும் அறிந்திருக்கிற ஆண்டவர் எனக்கு எப்படியும் வழியுண்டாக்குவார் என்ற நம்பிக்கையோடே முழங்காற்படியிட்டு கடிதத்தை விரித்துவைத்துக்கொண்டு, 'ஆண்டவரே; இது உமக்குச் சித்தமானால், உம்மாலே கூடும் என்று ஜெபித்துவிட்டு எழுந்திருந்தாள். இரண்டு நாளைக்குப்பின் இன்னொரு கடிதம் வந்தது. ஓர் வக்கீல் அக்கடிதம் அனுப்பினார். அதில் 'தன்னிடத்தில் வழக்குக்காக வந்த ஓர் சீமான் நூறு பவுன் செக்கை யனுப்பி, தான் இந்த அம்மாளிடத்தில் வாங்கின சித்திரப்படம் ஒன்று அநேக வருஷங்களாய்த் தனக்கு மிகுந்த ஆறுதலையும் நம்பிக்கையையும் சந்தோஷத்தையும் கொடுத்ததாகவும் தான் அதற்கு நன்றியறிதல் செலுத்த மறந்துபோனதாகவும் இப்பொழுது அந்தச் செக்கை அந்த அம்மாளுக்கு அனுப்பவேண்டுமென்று கேட்டுக்கொண்டதாகவும் கண்டிருந்தது. அந்த அம்மாள் அதை மிகுந்த நன்றியறிதலோடு பெற்றுக்கொண்டு ஆண்டவருக்கு ஸ்தோத்திரம் செலுத்தி அந்த வீட்டைக் கிரயத்துக்கு வாங்கிக்கொண்டார்கள்.

## சந்தா வரவு Feb.—April, 1917

| | ரூ. | அ. | ப. | | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|---|---|---|
| Mr. G. D. Joshna | 1 | 6 | 0 | Mr. T. J. Matthew | | 8 | 0 |
| Rev G. Yesuadian | 0 | 7 | 0 | ,, B. M Kadaksham | 0 | 8 | 0 |
| ,, S. Masillamoni | 0 | 7 | 0 | ,, D. Samuel | | 8 | |
| Mr. J. D. Rhenius | 0 | 8 | 0 | ,, V. Abraham | 0 | 15 | 0 |
| ,, Daniel V. Kanthasami | 1 | 7 | | ,, P. Chinnapan | 0 | 8 | 0 |
| ,, Z. Paul | 0 | 14 | 0 | ,, Daniel | 0 | 15 | 0 |
| Rev. J. Rowland | 0 | 14 | 0 | ,, C. H. Cooke | 0 | 15 | 0 |
| Mr. K. M. Thomas | 2 | 5 | 0 | Ensign Yudha Daksha | 0 | 8 | 0 |
| ,, V. P. Thommy | 1 | 7 | 0 | Mr. G. S. Nathaniel | 1 | 8 | 0 |
| ,, A Abel | 0 | 8 | 0 | ,, G. Jeyamoni | 0 | 8 | 0 |
| ,, S. M. Doss | 0 | 8 | 0 | ,, G. Lazarus | 0 | 8 | 0 |

Printed at the Palamcottah Printing Press Palamcottah and published by the Christian Brotherhood Association, Tinnevelly.

June 1917. Registered No. M. 163

OFFICE OF THE REGISTRAR ... JUL 19 ... MADR

The Water of Life
ஜீவத்தண்ணீர்

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்.' யோவான் 7: 38.

Vol. XVIII ஜூன் 1917

# உயிர்த்தெழுதலின் ஜீவியம்

கொலோ. 3: 1—4. (வாக்கியங்களை வாசித்துக்கொள்ளவும்)

தேவன் தமது சத்தியங்களை நாம் அறிந்துகொள்ளும் திராணிக்குத் தக்கதாகப் படிப்படியாய் வெளிப்படுத்துகிறார் என்பது மெய். அவர் அப்போஸ்தலர்களை நடத்தினவிதமும் அதுவே. முதலாவது, கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல். அவர் தம்மை தேவனுடைய குமாரன் என்று ரூபிக்க அவருக்கே அவசரமாயிருந்ததென்று கண்டார்கள். 'தேவனுடைய சுதனென்று மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பலமாய் ரூபிக்கப்பட்ட தேவகுமாரனுமாயிருக்கிறார்' என்று ரோமர் 1: 5-ல் வாசிக்கிறோம். இரண்டாவது, அவருடைய மரணம் உயிர்த்தெழுதலில் தங்களுக்கு ரட்சிப்பு இருக்கிறதென்றும் கண்டார்கள். 'அவர் நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டும், நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக எழுப்பப்பட்டும் இருக்கிறார்' என்று சாட்சி பகர்ந்தார்கள் (ரோமர் 4: 25). அவரடைந்த சிலுவையின் மரணம் உலகத்தின் ரட்சிப்புக்காக அவர் ஒருவரே அடையவேண்டிய மரணமென்றும், அது பூரணமும் நிறைவுமான பலியென்றும், அந்த மரணத்தில் இன்னொருவன் கூடமரிப்பது கூடாதென்றும், உலகத்தில் உள்ளவர்கள் யாவரும் முழங்காலில் நின்று அவர் ஒருவரையே நோக்கிப்பார்த்து ரட்சிக்கப்படவேண்டியதென்றும் அறிந்துகொண்டார்கள். இன்னும் கொஞ்சம்பொறுத்து தேவன் வேறொரு சத்தியத்தையும் அவர்களுக்கு வெளிப்படுத்தினார். அதாவது, அவர்மாத்திரமல்ல இவர்களும் அவருடைய மரணம் உயிர்த்தெழுதலில் ஐக்கியப்பட்டவர்களென்கிற பிரதான சத்தியத்தையும் அறிந்துகொண்டார்கள். அப்போஸ்தலன் இதைக்குறித்து அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்

11-7-17

போம்' என்றும், 'கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார்' என்றும் எழுதியிருக்கிறார். (ரோமர் 6: 5; எபே. 2: 7). இப்போ நாம் சிந்திக்கப்போகிற விஷயம் கடைசியாக நாம் கவனித்த உயிர்த்தெழுதலின் சத்தியமே. நாம் முதலில் வாசித்த நாலு வசனங்களில் அப்போஸ்தலன் விசுவாசியின் ஜீவியத்தைக் குறித்து மூன்று காரியங்களைச் சொல்லுகிறார்.

1. விசுவாசி கிறிஸ்துவோடுகூட எழுந்தவன்
2. விசுவாசி கிறிஸ்துவோடுகூட தேவனுக்குள் மறைந்தவன்
3. விசுவாசி கிறிஸ்துவோடுகூட மகிமையில் வெளிப்படப்போகிறவன்

**1. விசுவாசி கிறிஸ்துவோடுகூட எழுந்தவன்.** 'நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்துண்டானால்' கிறிஸ்துவின் சிலுவை எக்காலத்திலும் மரணத்திற்கு அடையாளம். சிலர் பரிசுத்த ஜீவியத்தைக் குறித்துப் போதிக்கிறபோது கிறிஸ்துவுடன் சிலுவையில் நாம் மரிக்கவேண்டுமென்பதையே முக்கியப்படுத்திப் பேசுகிறதுண்டு. மரணத்தை வற்புறுத்தும்போது உயிர்த்தெழுதலின் ஜீவியம் மறக்கப்பட்டுப்போகிறது. ஒன்றை விட்டு ஒன்றைப் பிரிக்காமல் இரண்டையும் சேர்த்தே நாம் கவனிக்கவேண்டும். நமதாண்டவர் தமது மரணத்தைப்பற்றிப் பேசினபோதெல்லாம் உயிர்த்தெழுதலைப்பற்றியும் பேசியிருக்கிறார். சிலுவையில் அறையப்படுவேன் ஆகிலும் உயிர்த்தெழுந்திருப்பேன் என்றார். அப்போஸ்தலன் கிறிஸ்துவைக் குறித்து, 'கிறிஸ்துவே மரித்தவர் அவரே எழுந்துமிருக்கிறவர்' என்று மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் சேர்த்தே பேசுகிறார். தம்முடைய அனுபவத்தைக் குறித்து, 'நான் மரித்தேன் ஆகிலும் பிழைத்திருக்கிறேன்' என்று சொன்னார். ஆகையால் நமது ஐக்கியம் கிறிஸ்துவின் மரணத்தோடு மாத்திரமல்ல அவருடைய உயிர்த்தெழுதலின் ஜீவனோடும் இருக்கிறது என்று காண்கிறோம். விசுவாசி பாவத்துக்கும் உலகத்துக்கும் மரித்தவன் என்பது மெய்யாயினும் அவன் புதிய ஜீவனடைந்து பாவத்தோடும் உலகத்தோடும் போராடுகிறவன் என்பதும் உண்மையல்லவா? 'உலகம் எனக்குச் சிலுவையில் அறையுண்டிருக்கிறது, நானும் உலகத்துக்குச் சிலுவையில் அறையுண்டிருக்கிறேன்' என்கிற வார்த்தைகளைக் கவனிக்கும்போது இருபக்கத்திலும் மரணத்தையல்லவா காண்கிறோம். உலகம் பவுலைக் கெடுக்கக்கூடாதபடிக்கு உலகம் செத்துப்போனது, உலகத்தை இரட்சிக்கக்கூடாதபடிக்கு பவுலும் செத்துப்போனார் என்றல்லவா பொருள்படும். அப்போஸ்தலனே நான் மரித்தேன் ஆகிலும் பிழைத்திருக்கிறேன் என்கிறார். உலகமே நான் உனக்குச் செத்தேன், உனக்கும் எனக்குமென்ன? என்று சொல்லி நாம் வனாந்தரத்தில் சென்று தவத்தில் தரித்திருக்கவல்ல நாம் உயிர்த்தெழுதலின் ஜீவனைப்பெற்று கெட்டுப்போன உலகத்தில் தங்கி, அதன் சோதனைகளையும் பாவங்களையும்



மேற்கொண்டு, மற்றவர்களை இரட்சிக்கும்படிக்கே ஆண்டவர் நம்மைத் தெரிந்துகொண்டார்.

இரட்சிக்கப்படுமுன் எனக்குள்ளிருந்த ஜீவன் வேறே. அப்பொழுது நான் உலகத்துக்கு ஜீவனுள்ளவனாயிருந்தேன். உலகமும் எனக்கு ஜீவனுள்ளதாயிருந்தது. உலகம் தன் பாவங்களை என்னிடத்தில் கொண்டுவந்தது. நான் ஆவலோடு அவைகளை வாங்கிக்கொண்டேன். இப்போ கிறிஸ்துவுடனேகூட சிலுவையில் அறையப்பட்டு மரித்தேன். மரித்துப்போன எனக்கு உலகமும் மரித்ததுபோலாயிற்று. நான் மரித்ததுமாத்திரமல்ல அவருடைய உயிர்த்தெழுந்த ஜீவனுக்குப் பங்குள்ளவனானேன். இந்தப் புதிய ஜீவனோடு உலகத்துக்கு முன்பாக நிற்கிறேன், அப்போஸ்தலன் கொலோசெக் கிறிஸ்தவர்களுக்கு எழுதுகிற சத்தியம் இதுதான். நீங்கள் அவரோடேகூட அடக்கம்பண்ணப்பட்டது மாத்திரமல்ல, அவரோடேகூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள், அப்படி எழுந்ததுண்டானால் உங்கள் தேட்டமும் நாட்டமும் எப்படிப்பட்டதாயிருக்கவேண்டும் என்று அவர்களை ஏவி எழுப்பிவிடுகிறார்.

சகோதரனே, இந்தப் புதிய ஜீவனைப் பெற்றிருக்கிறாயா? ஒருவன் கிறிஸ்துவைப் புகழலாம், அவர்பேரில் பாடலாம், அவரைக் குறித்துப் பேசலாம். அவர் உபதேசங்களை மெச்சிக்கொள்ளலாம், அவருடைய மாதிரியின்படி நடக்க விரும்பலாம், இவைகள் யாவும் நல்லதே. ஆகிலும் இவைகளினாலே ஒருவன் கிறிஸ்தவனாகிறதில்லை. இக்காலத்தில் அநேகர் தங்களை வஞ்சித்துக்கொண்டிருக்கிறார்கள். கிறிஸ்தவர்களுக்குப் பிறந்து, திருச்சபையின் சிலாக்கியங்களில் பங்குபெற்றிருப்பதினிமித்தம் தங்களை தேவனுடைய பிள்ளைகள் என்று எண்ணிக்கொள்ளுகிறார்கள். அவர்களுடைய கனிகளினாலே நீங்கள் அவர்களை அறிவீர்கள். இரத்தப் பிறப்பல்ல, மாம்சசித்தப் பிறப்பல்ல, புருஷனுடைய இஷ்டப் பிறப்பல்ல, கிறிஸ்துவின் ஜீவனாலுண்டாகும் மறு பிறப்பாகிய தேவ பிறப்பை உடையவேணும். 'இனி நானல்ல கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்' என்பதே இப்புதிய ஜீவியத்தின் இரகசியம்.

**2. விசுவாசி கிறிஸ்துவோடேகூட மறைந்தவன்.** 'உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது.' காற்றினுடைய சத்தத்தை நாம் கேட்கிறோம். அதன் கிரியைகளைக் காண்கிறோம். ஆகிலும் அது இன்ன இடத்திலிருந்து வருகிறதென்றும் இன்ன இடத்துக்குப் போகிறதென்றும் நமக்குத் தெரிகிறதில்லை. உயிர்த்தெழுதலின் ஜீவனைப் பெற்றவனுடைய ஜீவியமும் அவ்விதமாகவேயிருக்கிறது. நமது இரட்சகருடைய மரணத்துக்கு முன்னுள்ள ஜீவியத்துக்கும் உயிர்த்தெழுந்தபின்னுள்ள ஜீவியத்துக்கும் மிகுந்த பேதமிருந்தது. அவரது உயிர்த்தெழுந்த ஜீவியம் எத்தன்மையானதென்று சொல்ல மனுஷனுக்கு அறிவு போதாது. மரித்தோரிலிருந்து எழுந்த லாசருவின் ஜீவனும் மரித்தோரிலிருந்து

எழுந்த இயேசுவின் ஜீவனும் ஒன்றல்ல. அவர் தம்மை ஏதோ ஒரு வகையாய் அவர்களுக்கு வெளிப்படுத்தினாலன்றி மற்றப்படி அவர்கள் அவரை இன்னாரென்று அறிந்துகொள்ளக்கூடாதிருந்தது. அவர்கள் நடுவில் நிற்கிறார். அவர்கள் கொடுத்தவைகளை வாங்கிப் புசிக்கிறார். அவர்களோடு வழி நடக்கிறார். அவர்களோடு பேசுகிறார். ஆகிலும் அவர்கள் அவரை அறியவில்லை. தமது வழக்கமான முந்தின செய்கையால், பட்சமான வார்த்தையால், அற்புதக் கிரியையால், பேர்சொல்லி அழைத்ததால், தம்மை இன்னாரென்று வெளிப்படுத்தினாலேயன்றி, மற்றப்படி அவருடைய ஜீவியம் அவர்களுக்குப் பெரிய இரகசியமாகவேயிருந்தது. அவர் உயிர்த்தெழுந்த 48 மணி நேரங்களில் நடந்த சம்பவங்களை வரிசைப்படுத்தப்பார்ப்பது அசாத்தியமே. எம்மாவுக்குப் போகிற சீஷரோடு பேசிக்கொண்டு போனவர் ஏதோ ஒரு இடத்தில் பேதுருவுக்குத் தரிசனம் கொடுத்தது எவ்வளவு ஆச்சரியம்! அவர் ஓரிடத்தில் இருக்கும்போது இன்னோரிடத்தில் இருக்க முடியாதென்கிற முந்தின ஜீவியம் ஒழிந்தது. இடம் தூரம் அவருக்கு ஒரு பொருட்டல்ல. காணப்படுகிறதும் ஒரு நிமிஷத்திலே மறைகிறதும் ஒரு நிமிஷத்திலே. ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குப் பிரயாணம் செய்யும் கஷ்டம் அவருக்கில்லை; உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போகிறார், அங்கே அவரைக் காண்பீர்கள் என்று தூதனும் இரட்சகரும் திரும்பத்திரும்பச் சொன்னதின் கருத்தென்ன? உங்களுக்கு முன்னே, நீங்கள் நேரே அங்கே போய்விட்டாலுங்கூட அவர் உங்களுக்குமுன்னேயே போயிருக்கக் காண்பீர்கள். நீங்கள் எவ்வளவு சீக்கிரமாக கலிலேயாவுக்கு முந்திப்போனாலுங்கூட அவர் உங்களுக்கு முன்னமே போயிருக்கக் காண்பீர்கள். இவர்களைப்போல அவர் போகவேண்டியதில்லை. அவர் அங்கேயேயிருப்பார். ஆம் அவருடைய உயிர்த்தெழுதலின் ஜீவியம் உலகத்துக்கு மறைந்த ஜீவியம்: பக்தர்களுக்கு வெளிப்படுத்தப்பட்ட ஜீவியம்.

விசுவாசி கிறிஸ்துவோடுகூட தேவனுக்குள் மறைந்தவன். உலகம் அவனை அறியமாட்டாது. மறுபிறப்படையாத கிறிஸ்தவர்கள் அவனை அறியமாட்டார்கள். அது ஆச்சரியமல்ல. இவர்களுடைய ஜீவியம் வேறே அவனுடைய ஜீவியம் வேறே. இவர்களை தங்களைப்போல அவனையும் எண்ணிக்கொள்ளுவார்கள். அவனுடைய உள்ளான அநுபவம் இவர்களுக்கு இல்லாததினால், அவனுடைய நல்நோக்கங்களை இவர்கள் தப்பருத்தப்படுத்துவார்கள். அவனுடைய ஜீவியம் விசேஷம் என்று தோன்றுமானால் அதற்கொரு காரணம் சொல்லுவார்கள். அவன் ஊழியத்தில் வல்லமை காணப்பட்டால் அதற்கொரு காரணம் சொல்லுவார்கள். பரிசுத்தாவியின் கிரியையை பெயல்செபூலின் கிரியையென்று சொல்ல இவர்கள் அஞ்சமாட்டார்கள். எத்தனை வருஷம் இவன் அவர்களோடு பழகினாலும் அவர்கள் இவனை அறியமாட்டார்கள். யூதர்கள் இயேசுவைக் கொன்றதற்கும் தாங்கள் கெட்டுப்போனதற்கும் காரணம் அவரை இன்னாரென்று அறியாத



தினாலேதானே ஜென்ம சுபாவத்தாரான யூதர் ஆவிக்குரிய கிறிஸ்துவை ஒருபோதும் அறியமுடியாது. அதுபோகட்டும், அவரைப் பின்சென்று வந்த சீஷர்களாவதும் அவரை அறியவேண்டியபிரகாரம் அறிந்தார்களா? இவ்வளவுகாலம் நான் உங்களுடனேகூடயிருந்தும் நீங்கள் என்னை அறியவில்லையா என்று அவர் அவர்களைக் கேட்க நேரிட்டது. அவர்கள் கிறிஸ்துவைப் பற்றிக்கொண்டபோதிலும் இன்னும் மாம்சத்துக்குரியவர்களாகயிருந்தார்கள். பெந்தெகொஸ்தே நாளுக்குப்பின் அவர்கள் ஆவிக்குரியவர்களானார்கள். அப்பொழுது தங்களோடு சஞ்சரித்த நாசரேத்தூரான் சர்வத்துக்கும் மேலான தேவன் என அறிந்துகொண்டார்கள்.

இனம் இனத்தை அறியும். உயிர்த்தெழுதலின் ஜீவனைப்பெற்ற பிள்ளைகள் ஒருவரை ஒருவர் அறிந்துகொள்வார்கள். மற்றவர்கள் இவர்களை அறியக்கூடாதபடி இவர்களுடைய ஜீவன் தங்கள் இரட்சகரோடுகூட தேவனுக்குள் மறைந்திருக்கிறது. தேவனுக்குள் மறைந்த ஜீவியம் சமாதானமும்; ஆறுதலும், நம்பிக்கையும் வல்லமையுமுள்ள ஜீவியம். கிறிஸ்து தேவனுடைய வலது பாரிசத்திலிருக்கிறார். வலதுபாரிசம் என்பது சர்வ வல்லமை என்று அர்த்தமாகும். அவரோடுகூட தங்குகிறவர்கள் அந்தச் சர்வவல்லமைக்குள் தங்குகிறார்கள். ஒன்றும் அவர்களைச் சேதப்படுத்தாது. சகோதரனே, கிறிஸ்துவுடனேகூட தேவனுக்குள் மறைந்த ஜீவியத்தின் அநுபவம் உனக்குண்டா?.

3. விசுவாசி கிறிஸ்துவோடுகூட மகிமையில் வெளிப்படப்போகிறவன். கிறிஸ்து சீக்கிரத்தில் மகிமையோடு வெளிப்படப்போகிறது நிச்சயம். தேவதூதர்கள் பொய்சொல்லமாட்டார்கள். அவர்கள் தங்கள் சொந்த வார்த்தைகளையல்ல தேவன் கொடுத்த வார்த்தைகளையே சொல்லுவார்கள். மரியாளுக்குச் சொன்ன வார்த்தை தவறவில்லை. சகரியாவுக்குச் சொன்ன வார்த்தை தவறவில்லை. மேய்ப்பருக்குச் சொன்ன வார்த்தை தவறவில்லை. கொர்நேலியுவுக்குச் சொன்ன வார்த்தை தவறவில்லை. கல்லறையில் ஸ்திரீகளுக்குச் சொன்ன வார்த்தை தவறவில்லை. அப்படிப்போல இயேசு மறுபடியும் வருவார் என்று அவர் பரத்துக்கு ஏறின சமயத்தில் சீஷர்களுக்குச் சொன்ன வார்த்தை தவறாது. ஏனென்றால் தூதர்களின் வார்த்தை தேவனுடைய வார்த்தை.

அவருடைய வருகையை ஆதிகிறிஸ்தவர்கள் நம்பி எதிர்பார்த்தவண்ணம் தற்காலத்தில் கிறிஸ்தவர்கள் எதிர்பார்க்கிறதில்லை. நாம் ஒருவரை ஒருவர் காணும்போது 'காலைவந்தனம்' 'மாலைவந்தனம்' என்று வாழ்த்துதல் சொல்லுகிறோம். அவர்கள் ஒருவரை ஒருவர் காணும்போது 'கர்த்தர் வருகிறார்' என்று ஒருவன் சொல்ல மற்றவனும் ஆம் 'கர்த்தர் வருகிறார்' என்று பதில் சொல்லி வாழ்த்துவானாம். நிருபங்களை நாம் வாசிக்கும்போது அவர்கள் எவ்வளவு ஆவலோடு கர்த்தரின் வருகைக்கு காத்திருந்தார்கள் என்று பார்க்கிறோம். இக்காலத்தில் அநேகர் கர்த்தரின் வருகையை

முற்றிலும் மறந்தேபோனார்கள். இது மோசமான காலம்! அவர் வருகைக்குமுன் இப்படிப்பட்ட நிர்விசாரமும் அவிசுவாசமும் ஜனங்களுக்குள் உண்டாயிருக்குமென்று ஆண்டவரே சொல்லியிருக்கிறார். அவர் சீக்கிரம் வெளிப்படப் போகிறார் என்பதற்கு இதுவே ஒரு அடையாளம். நோவாவின் நாட்களில் நடந்ததுபோல, லோத்தின் நாட்களில் நடந்ததுபோல என்கிற வார்த்தைகள் நம்மை எச்சரிக்கட்டும்.

உயிர்த்தெழுதலின் ஜீவனைப் பெற்ற பிள்ளைகள் அவர் வெளிப்படும்போது அவரோடுகூட வெளிப்படுவார்கள் அந்த மகா மகிமையிலும், பிரகாசத்திலும் அவருக்கொப்பானவர்களாய் அவரோடுகூடப் புறப்பட்டு வருவார்கள் (1 யோ. 3: 1).

இந்த நம்பிக்கையிலிருந்து பிறக்கும் உத்தரவாதம் என்ன? ஆவிகுரிய முயற்சி நம்மிடத்தில் காணப்படவேண்டும். பூமிக்குரியவைகளில் நாம் மனதைச் செலுத்தாமல் நமது இரட்சகர் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளையே நாம் நாடித் தேடவேண்டும். சாத்தான் தன்னால் கூடியதைச் செய்யும்போது தேவனுடைய பிள்ளைகளும் மேலான மகிமையைச் சுதந்தரிக்கப்போகிறவர்களுமாகிய நாம் அசதியாயிருப்பது நியாயமல்ல கிறிஸ்துவின் ஜீவன் நமக்குள்ளிருக்குமானால் நம்மைச் சும்மாயிருக்கவொட்டாது. உம்முடைய ராஜ்யம் வருவதாக என்று ஜெபிக்கிறவர்களாக மாத்திரமல்ல அந்த ராஜ்யம் சீக்கிரம் வரும்படி உழைக்கிறவர்களாயுமிருப்போமாக.

S. பரமானந்தம்.

## பிரசங்கிகளுக்கேற்ற திருஷ்டாந்தங்கள்

[1] **ஜெபத்தின் பெலன்.** இத்தலிதேசத்தின் புராதன நகரங்கள் ஒன்றிலுள்ள ஓர் பொது ஜனசாலையைச்சேர்ந்த கோபுரம் ஒன்றில் அரசன் ஓர் மணி தூக்குவிக்கும்படி ஏற்பாடு செய்து அந்த மணிக்கு நீதியின் மணியென்று பெயரிட்டு யார் யாருக்கு அநியாயம்செய்யப்பட்டதோ அவன் ஓடிப்போய் அந்த மணியை அடிக்கவேண்டும் என்றும் அம்மணிச் சத்தம் கேட்டதும் நகராதிபதி வரவே அவரிடத்தில் தன் வழக்கைச் சொல்லி நியாயம்பெற்றுக்கொள்ளவேண்டும் என்றும் கட்டளை பிறப்பித்தார். சில காலத்துக்குப்பின்பு மணியில் கட்டியிருந்த கயிற்றின் அடிப்பாகம் இற்று அறுந்துபோனபடியால் அதன் நுனியில் காட்டுத் திராட்சக்கொடியைச் சேர்த்துக் கட்டியிருந்தது. ஒருநாள் பசியினால் வருந்தின ஓர் கிழக்குதிரையை எஜமான் துரத்திவிடக் காடெல்லாம் அலைந்து கடைசியாக இந்தக் கோபுரத்துக்குள் வந்து திராட்சக்கொடியைக் கடித்ததின் பிரயாசப்பட்டதில் மணியடித்துவிட்டது. நியாயாதிபதி வந்து மணியடித்தது யாரென்று விசாரிக்கப் பசியினால் இளைத்துப்போன குதிரையைக் கண்டு



யாருடையதென்று விசாரித்துச் சொந்தக்காரனைக் கண்டுபிடித்துக் குதிரைக்கு நியாயஞ்செய்தார், அதாவது அது சாகுமட்டும் எஜமான் அதைப் பேணி வளர்த்து போதுமான ஆகாரம் கொடுக்கவேண்டுமென்று தீர்மானித்தார்.

அதிகப் பெலவீனமான விசுவாசியும் ஜெபமணியை விசுவாசத்தோடு அடித்தால் தேவனுடைய அன்பும் வல்லமையும் விளங்கும்படியான உத்தரவு கிடைக்கும். கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான்.

[2] **ஊழியத்துக்கு சுயவெறுப்பு அவசியம்.** அமெரிக்காவில மிக்க ஐசுவரியமும் டாம்பீகமுமான ஓர் துரைசானி மிஷனெரி ஊழியம்செய்ய வேண்டுமென்று தீர்மானித்தாள். அவள் சேர்ந்திருந்த மிஷன் சங்கத்தார் அவள் அந்த வேலைக்கு ஏற்றவளல்லவென்று கண்டு அவளை வெகுகாலமாய் ஒப்புக்கொள்ளவில்லை. கடைசியாக அந்த அம்மாள் விடாப்பிடியாய்க் கேட்டபடியால் சங்கத்தார் ஒப்புக்கொண்டு எவ்விடத்துக்கு வேலைக்குப் போகப்பிரியம் என்று கேட்டார்கள். அந்த அம்மாள் சற்று நேரம் யோசித்து பாரீஸ் பட்டணத்துக்குப் போவதாக சம்மதித்தாள். சீனா, இந்தியா, மத்திய ஆப்பிரிக்கா இவ்விடங்களுக்குப் போகிறதைப் பார்க்கிலும் தன் மனப்படியிருக்கத்தக்க பிரான்சு தேசத்தைத தெரிந்துகொண்டாள். ஆனால் எஜமானோ, ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால் தன்னைத்தான் வெறுத்துத் தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன் என்று விதித்திருக்கிறார்.

[3] **தூறை தனக்கே மோசமானது.** கிரேக்க தளகர்த்தனான பிரேசிடாஸ் என்பவர் ஓர் பட்டணத்தைப் பாதுகாக்கும் சேனையை நடத்திக்கொண்டிருந்தார். சத்துருக்கள் அப்பட்டணத்தைத் தாக்கிக்கொண்டிருந்தார்கள். ஒருநாள் காலையில் தளகர்த்தன் தன் உத்தியோகஸ்தரோடு நின்று பட்டணத்தைத் தாக்கும் சேனைகளைப் பார்த்துக்கொண்டிருந்து சொன்னதாவது 'நமது சத்துருக்களின் சேனையைப் பார்க்கிறீர்களே, அவர்களின் ஈட்டிகளின் வரிசை ஒழுங்காயில்லை. சேனைக்குச் சரியான யுத்தாப்பியாசமில்லாததால் அவ்வித ஒழுங்கீனமிருக்கிறது. பொழுது அஸ்தமிக்குமுன் அவர்கள் தங்களையே குத்திக்கொல்லத்தக்கதாக நேரிடும் என்றார். அப்படிப்போல தேவனுடைய சத்தியத்திற்கு விரோதமாய்க் குதர்க்கம் பேசுகிறவர்கள் சீக்கிரத்துக்குள் ஒருவருக்கு விரோதமாக ஒருவர் சண்டையிடுவார்கள் என்பது சத்தியம். 1 ராஜா 20, 23.

[4] **ஆவியில்லாத பிரசங்கம்.** பரிசுத்த அந்தோனி என்பவர் சாத்தானைக்குறித்து ஓர் உவமானக் கதை சொல்லியிருக்கிறார். சாத்தான் ஓர் சந்நியாசிபோல வேஷமாறி சுவிசேஷத்தைப் பிரசங்கித்தானாம். தேவனுக்கும் மனுஷருக்கும் சத்துருவாகிய நீ எப்படிச் சத்தியத்தைக் கூறியறிவிக்கலாமென்று கேட்டபோது அவன் பிரதியுத்தரமாக திவ்ய அபிஷேகம் பெறாமல் போதிக்கிற சுவிசேஷத்தைப்போல வேறொன்றும் மனுஷ

னுடைய இருதயத்தைக் கடினப்படுத்தாது என்றும் தான் அபிஷேகம்பெற்றபடியால் தன் ராஜ்யத்துக்கு யாதொரு அபாயமும் சேரிடாது என்றும் தன் பிரசங்கம் ஜீவவாசனையாயல்ல மரண வாசனையாயிருக்குமென்றும் சொன்னானும்.

## மே மாசத்து கன்வென்ஷன்

தமிழ் கிறிஸ்தவர்களுக்கென்று நடத்தப்படுகிற இந்தப் பத்தொன்பதாவது கன்வென்ஷன் கூட்டங்கள் நாளது மாசம் 7உ முதல் 10உ முடிய நடைபெற்றது. இந்த வருஷத்தில் விசேஷமாய் பாளையங்கோட்டை ஆன்வாரி, செவல் சர்க்கிள்களிலுள்ள மிஷன் ஆசாமிகளுக்கும் வழக்கமாய் வைக்கப்படும் கன்வென்ஷன் கூட்டங்களும் இதோடு நடக்கும்படி ஒழுங்காயிற்று. ஏறக்குறைய 150 பேர் இக்கூட்டங்களில் வந்திருந்து போதனை பெற்றார்கள். சர்க்கிள் ஆசாமிகள் பேர் மற்றவர்கள் பேர் நோட்டீஸ்கள் ஏற்கனவே அனுப்பப்படாததால் வழக்கமாய் வருகிற பலர் வரவில்லை. 7 குருமாரும் 4 விசாரணை உபாத்திமாரும் இக்கூட்டங்களுக்கு வந்திருந்தார்கள். கனம். எஸ். ஜி. மதுரம் ஐயரவர்களும், கனம். டி. எஸ். டேவிட் ஐயரவர்களும, கனம். ஜே.டி. ஞானயுதம் ஐயரவர்களும் இக்கூட்டங்களில் பேசினார்கள். வந்திருந்த குருமார் யாவரும் பற்பல உதவிபுரிந்தார்கள். கிறிஸ்துவோடு ஜீவித்தல் கிறிஸ்துவுக்குள் ஜீவித்தல் இப்பொருளின்பேரிலேயே எல்லாப் பிரசங்கங்களும் நடந்தன. கடைசி நாள் இந்தியா இலங்கை உயிர்ப்பிக்கப்பட பொதுவான ஜெபக்கூட்டமும் நடந்தது. சாயங்காலம் மிஷனெரிக் கூட்டத்தில் கனம் டி. எஸ். டேவிட் ஐயரவர்கள் டோர்ணக்கல் மிஷன் எங்கே ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறதென்றும் அவ்விடத்து இராஜாங்கம், ஜனங்கள், பாஷை முதலிய விவரங்கள் இன்னதென்றும் கடைசியாக நமது டோர்ணக்கல் மிஷன் ஊழியத்தில் நாளது வரை எவ்வாறு தேர்ச்சியுண்டாயிருக்கிறதென்றும் தெளிவாய்க் காட்டினார்கள். கனம். ஜே. அன்புடையான் அவர்கள் இந்தியாவில் தற்காலம் காணப்படும் மார்க்க எழுப்புதல் என்ற விஷயத்தின்பேரில் சுவிசேஷ பிரபல்யம் செய்வதற்குத் தற்காலம் மிகவும் ஏற்றது என்பதை வற்புறுத்திப் பேசினார்கள். இரவு பரிசுத்த நற்கருணை ஆராதனையோடு கூட்டம் முடிந்தது. இக்கூட்டத்துக்கு வந்திருந்து நற்போதனைகள் கேட்ட யாவரையும் ஆண்டவர் தாமே ஆசீர்வதித்து பேசப்பட்ட இவ்வ சத்தியங்கள் அவர்கள் மனதில் பலமாய்க் கிரியைசெய்ய அருள்புரிவாராக.

**நூற்றாண்டுற்சவம்.** சர்ச் மிஷனெரி சங்கத்தார் திருநெல்வேலியில் சுவிசேஷ ஊழியம் ஆரம்பித்து 1920-ம் ஞு ஜூலை 7உயோடு நூறு வருஷமாகிறது. இந்த உற்சவத்தை மிகுந்த நன்றியறிதலோடும் ஞாபகத்தோடும் கொண்டாடும்படி டிஸ்ற்றிக்ட் கவுன்சலார் தகுந்த ஏற்பாடுகள் செய்துகொண்டிருக்கிறார்கள். திருநெல்வேலி சபையின் ஆவிக்குரிய வளர்ச்சிக்கனுகூலமாய்ச் சகலமும் நடைபெற ஜெபிப்போமாக.



## நம்மைச் சுத்திகரித்துக்கொள்வோமாக 2. கொரி. 7.

இவ்வசனம் முந்தின அதிகாரத்தின் கடைசியில் வரவேண்டியது. 14-ம் வசனமுதல் அப்போஸ்தலன் ஓர் நியாய தோரணையைத் துவக்கி இவ்வசனத்தோடு முடிக்கிறார் பரிசுத்த ஜீவியத்துக்கு ஓர் பெரிய அழைப்புக் கூறப்படுகிறது. 'பிரியமானவர்களே, இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்கள் நமக்குண்டாயிருக்கிறபடியினால் பரிசுத்தமாகுதலை தேவ பயத்தோடே பூரணப்படுத்தக் கடவோம்' என்கிறார். தேவனுடைய எண்ணிறந்த வாக்குத்தத்தங்களே பரிசுத்த ஜீவியத்துக்கு நம்மை ஏவியெழுப்பிவிடவேண்டியது என்கிறார். 'நான் அவர்களுக்குள்ளே வாசம்பண்ணி அவர்களோடு உலாவுவேன்' என்கிறார். நம்மைத் தமது குமாரரும் குமாரத்திகளுமென்றழைக்கிறார். சில வேளைகளில் பரிசுத்த ஜீவியத்துக்கு அழைக்கும் மனுஷர் தாங்கள் உன்னத ஜீவியத்தின் சத்தியங்களை அறிந்திருக்கிறபடியால் அந்த ஜீவியத்துக்கு வந்தெட்டாமல் பெலவீனராயிருக்கிறவர்களுடைய குறைவுகளைப் பெரிதாக்கி அதின் மூலமாய்ப் பரிசுத்த ஜீவியத்துக்கு அழைக்கிறதுண்டு. ஆனால் தேவ ஆவியானவரோ, மனுஷருடைய குறைகளையல்ல, தமது சிறந்த வாக்குத்தத்தங்களையே நமக்கு முன்வைத்து அன்போடு அழைக்கிறார் ஓர் சிறு திருஷ்டாந்தம் இதை நன்குவிளக்கும் ஓர் ஆலயத்தில் எண்ணெய் விளக்குகள்தான் வெளிச்சம் கொடுத்தன. ஆனால் மின்சார விளக்குகள் உபயோகத்துக்கு வந்தபோது அந்த எண்ணெய் விளக்குகளுக்கு எண்ணெய்விடாமல், திரி வெட்டப்படாமல், விளக்குகள் சுத்தமாக்கப்படாமல், பொருத்தப்படாமலிருந்தன. இப்போது ஆலயத்தை வெளிச்சமாக்க மின்சாரத்தை மாத்திரம் ஏற்றவேண்டியதாயிருந்தது. எண்ணெய் விளக்குகள் அவசியமில்லை. அப்படிப்போல தேவனுடைய மேலான வாக்குத்தத்தங்கள் மின்சார விளக்குகள்போல எந்தக் குறைவுள்ள ஆத்துமாவையும் பிரகாசிக்கத்தக்கது. எண்ணெய் விளக்குகளை உபயோகிக்கவில்லையென்று யாரும் விசனப்படமாட்டார்கள். ஏனென்றால் அதிலும் மேலான வெளிச்சம் உபயோகத்துக்கு வந்துவிட்டது. சமாரிய ஸ்திரீயின் உள்ளத்தில் ஜீவதண்ணீர் உண்டாக [illegible] கிரியை செய்துவிட்டபடியால் அவள் தன் குடத்தை வைத்துவிட்டு ஊருக்குள்ளே ஓடினாள் என்று பார்க்கிறோம். ஆகையால் நாம் மாம்சத்திலும் ஆவியிலுமுண்டான எல்லா அசுசியும் நீங்க வகையென்னவென்று பார்ப்போம்.

I. தேவனுடைய சிறந்தமாதிரி இன்னதென்று பார்ப்போம்.

(1) முந்தின அதிகாரம் 14-ம் வசனத்தில் நாம் நீதியுள்ளவர்களாயிருக்கவேண்டுமென்றழைக்கிறார். தேவனுக்கு முன்பாகப் பரிசுத்தமும் மனுஷர் முன்பாக நீதியும் உடையவர்களாயிருக்கவேண்டும். மனதில் நீதியில்லாதவன் தேவனுக்கு முன்பாக உண்மையுள்ளவனாயிருக்கமாட்டான். தேவனுடைய மனுஷனாயிருக்கக்கூடாது. சகரியாவும் எலிசபெத்தும் நடந்துவந்ததுபோல, 'கர்த்தரிட்ட சகல கற்பனைகளின்படியேயும் நியமங்களின்படியேயும் குற்றமற்றவர்களாய் நடந்து தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாயிருந்தார்கள்'. தேவனுடைய பிள்ளைகள் உலகத்திற்கு முன்பாக சன்மார்க்கத்திலும் சகல நல்லொழுக்கங்களிலும் மிகவும் சிறந்து விளங்குவதே அவருக்கு மகிமை. தேவன் சாத்தானைப் பார்த்து 'நீ என் தாசனாகிய யோபின்மேல் கவனம் வைத்தாயோ'. உத்தமனும் சன்மார்க்கனும் தேவனுக்குப் பயந்து பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாகிய அவனைப்போலப் பூமியில் ஒருவனுமில்லை' என்கிறார்.

(2) ஒளியாயிருக்கவேண்டும். (வா. 14) துஷ்ட மிருகங்களைத் தங்கள் இருப்பிடங்களுக்குத் துரத்துகிறதும் துன்மார்க்கரை அவர்கள் ஒளிப்பிடங்களுக்குப் போகப்பண்ணுகிறதுமான வெளிச்சம் போலிருக்கவேண்டும். யாதொரு சப்தம், சந்தடியன்னியில் உதயமாகி, மலைகளையும் ஏரிகளையும் காடுகளையும் பிரகாசித்துத் தான் காணப்படக்கூடாமலிருக்கிற ஒளிமயம்போல் நாமிருக்கவேண்டும். இதுதான் நமது ஜீவியத்தின் வல்லமை. ஓர் காலத்தில் அந்தகாரமாயிருந்தோம். இப்போதோ கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறோம். வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்துகொள்வோமாக. நம்மில் ஒருபாகமாவது இருட்டாயிராமல் யாதொரு பிரயாசையில்லாமல் ஒளியின் கனிகளைக் கொடுத்து சகல நற்குணத்திலும் உண்மையிலும் விளங்குவோமாக (எபேசி. 5: 8-10).

(3) கிறிஸ்துவைப்போலிருக்கவேண்டும். (வா. 15). அவர் ஒளியிலிருந்ததுபோல, அவர் ஒளியில் நடந்ததுபோல, அவர் நீதியுள்ளவராயிருந்ததுபோல, அவர் அன்புகூர்ந்ததுபோல நாமும் இருக்கவேண்டும். அவர் மனிதருக்காகத் தமது ஜீவனைக் கொடுத்ததுபோல நாமும் மற்றவர்களுக்காக ஜீவனைக்கொடுக்க மனமுள்ளவர்களாயிருக்கவேண்டும். மனுஷர் நம்மைப் பார்க்கும்போது கிறிஸ்துவைக்குறித்து நினைக்கத்தக்கதாக நாம் கிறிஸ்துவுக்கு நற்கந்தமாயிருக்கவேண்டும். அவர் தம்மை வெளிப்படுத்துவதற்கு நாம் கருவிகளாயும் அவரது திருமுகப் பிரகாசத்தை உலகத்துக்குக் காண்பிக்கும் பிரதிபிம்பமாயுமிருக்கவேண்டும். இதற்காக அவர் நம்மை உலகத் தோற்றத்துக்கு முன் தெரிந்துகொண்டு தமது குமாரனுடைய சாயலுக்கொப்பாகும்படி நம்மை முன்குறித்து அழைத்திருக்கிறார்.

(4) பரிசுத்தாவியின் ஆலயங்களாயிருக்கவேண்டும். (வா. 16). இந் நிருபத்திலும் இதற்கு முந்தின நிருபத்திலும் ஆலயங்களைப்பற்றி அடிக்கடி சொல்லியிருக்கிறது. காரணமென்னவென்றால் கொரிந்து பட்டணம்



சிறந்த சித்திரவேலை தீர்ந்த ஆலயங்களால் நிறைந்துள்ளது. உலகமெங்கும் கீர்த்திபெற்றது. ஆனால் இவ்வாலயங்களில் தேவன் வாசம்பண்ண விரும்பார். தமது பிள்ளைகளில் யார் யார் தங்களை அவருக்கு முற்றிலும் ஒப்புக்கொடுத்திருக்கிறார்களோ அவர்களில் வாசம்பண்ணி, அவர்களோடு உலாவி தமது சமுகத்தின் பிரசன்னத்தினால் அவர்களைப் பிரகாசமாக்குவார்.

(5) குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பார்கள். (வா. 18). இதுதான் முற்கூறியவெல்லாவற்றிலும் சிறந்தது. உயர்ந்தது. தேவதூதருக்கு இம்மேன்மை கிடையாது. அவர்கள் பணிவிடை செய்பவர்கள்தான். சொற்படி கேட்டு நடப்பவர்கள்தான். நாமோ குமாரர்கள்; குமாரத்திகள்; பிள்ளைகள், உடன்சுதந்தரர், கிறிஸ்துவுக்கு உடன்சுதந்தரர், நமது குடும்ப ரகசியங்கள், குடும்ப துக்க சந்தோஷங்கள், குடும்ப ஐசுவரியம், இவைகளில் பங்குண்டு. அவர் நம்மைப் பார்த்து, மகனே, நீ எப்போதும் என்னோடிருக்கிறாய். எனக்குள்ளதெல்லாம் உன்னுடையதே' என்கிறார். நாம் பிள்ளைகளானதால், குமாரனின் ஆவியானவர் நம்மில் வாசம்பண்ணுவார்.

பரிசுத்த ஜீவியத்துக்கு ஏவியெழுப்ப மேலே சொன்னவைகள் எத்தனை வல்லமையுள்ளவைகள். தேவனுடைய ராஜ்யம் நீதியுள்ளதென்பதற்கு நான் சாட்சியல்லவா? அப்படியானால் அநீதி என் கையிலும் அநியாயச் சம்பாத்தியம் என்னிலும் காணப்படலாமா? நான் வெளிச்சமா? அப்படியானால் எவ்வித அந்தகாரக் கிரியையும் என்னில் காணப்படக்கூடாது. நான் கிறிஸ்துவைப்போலிருக்கவேண்டுமா? அப்படியானால் பேச்சிலும் செய்கையிலும் பேலியாளின் குணம், பெருமை காணப்படலாமா? நான் தேவனுடைய ஆலயமா? அப்படியானால் விக்கிரகங்களுக்கும் எனக்கும் சம்பந்தமேது? தேவனுக்குப் பிரியமான பிள்ளையென்றழைக்கப்படவேண்டுமா? அப்படியானால் மாம்சத்துக்கிடங்கொடுத்து உலகமக்களில் ஒருவனைப்போல நடந்துகொள்ளலாமா? நாம் தேவனைப் பிதாவென்றழைக்கும்போது, நாம் கீழ்ப்படிதலுள்ள பிள்ளைகளாய், அறியாமையின் காலத்தில் செய்துவந்த இச்சைகளுக்கேற்ற விதமாய் நடவாமல், பரிசுத்தத்துக்கு அழைக்கப்பட்டவர்களானபடியால் நமது சம்பாஷணைகள், கிரியைகள் யாவற்றிலும் பரிசுத்தமுள்ளவர்களாய் நடப்போமாக.

## உங்கள் பாவம் உங்களைத் தொடர்ந்து பிடிக்கும் என்று நிச்சயமாய் அறியுங்கள். எண். 32: 28.

வாஸ்தவமாய் நடந்த சரித்திரம். சீமை தேசத்தில் ஒரு மனிதன் பெண்சாதியைக் கொன்றுபோட்டு வீட்டின் தளவரிசையைத் தோண்டி, பிரேதத்தை அடக்கம்பண்ணி, மேலே செங்கல்போட்டு சுண்ணாம்பு பூசி, அப்புறம் அவன் எங்கேயோ போனான் என்று பிரஸ்தாபம்பண்ணினான். அப்புறம் சமயம் பார்த்து வேறே இடத்திற்குப்போய், வேறே ரூபம்

411



தரித்துக்கொண்டு வாசம்பண்ணினான். இன்னொரு பெண்ணையும் கலியாணஞ்செய்தான். இரண்டு மூன்று வருஷங்களுக்குப் பின்பு, அவளையும் கொலைசெய்து அப்படியே செய்துபோட்டு தூரதேசத்திற்குப் போய்விட்டான். அந்தக் கொலைபாதகம் ஒருவருக்கும் தெரியாது. ரகசியமாய்ச் செய்த பாதகம். தூரதேசத்தில்போய் அங்கே மூன்றாவது பெண்ணை விவாகம்செய்தான். கொஞ்சக் காலத்துக்குப் பின்பு அவளையும் அப்படியே கொன்றுபோட்டு புதைத்துவைத்தான். இப்படியே நாலாம் ஐந்தாம் ஸ்திரீகளைக் கொலைசெய்தான். ஒருவனுக்கும் தெரியாது, தேவன் பார்த்தார். 6-ம் பெண்ணைக் கலியாணம்செய்ய ஏற்பாடுசெய்தான். அந்தச் சமயத்தில் அவன்மேல் சமுசயம்வந்தது. 5-ம் சமுசாரத்தின் பந்துக்கள் சமுசயப்பட்டு, அவன் கடைசியாகக் குடியிருந்த வீட்டைப் பரிசோதித்துப்பார்த்தார்கள். ஒன்றும் காணப்படவில்லை. அப்புறம் தேவச்செயலாய் அவர்கள் மனதில் ஓர் யோசனையுண்டாயிற்று. ஒவ்வொரு அறையின் தளவரிசையை எடுத்துப்பார்ப்போம் என்பது. பார்த்தபோது பிரேதம் அகப்பட்டது. வா, வா, வா முன் சரித்திரம் எல்லாம் தெரியவந்தது. அவன் குடியிருந்த ஒவ்வொரு வீட்டையும் பார்த்ததில் தளவரிசைக்குக்கீழ் எலும்புக் கூடுகள் காணப்பட்டது. அவன் 20 வருஷத்துக்குமுன் கொன்றுபோட்ட முதல் பெண்ஜாதியின் எலும்புகள் அகப்பட்டது. பார்த்தீர்களா! அவன் பாவம் அவனைத் தொடர்ந்துபிடித்தது. தூக்குமரத்திற் போட்டுக் கொன்றுபோட்டார்கள். சகோதரரே! நம்மை உண்டாக்கின தேவர் காண்கிறார் என்று நினைக்கிறீர்களா? நம்மை உண்டாக்கின தேவன் கேளாரோ? நம்மை உருவாக்கினவர் காணாரோ! சங். 94: 9. நீ விபசாரம் செய்யும்போது சுவாமிக்குத் தெரியாதென்று நினைத்தாயா? சீட்டு விளையாடிக் கள் குடித்து வெறிக்கும்போது, தேவன் கவனிக்கமாட்டார் என்று நினைத்தாயோ? படம் பிடிக்கிறதைப் பார்த்திருப்பீர்கள். நம்முடைய சாயல்போல படம் எடுக்கிறார்கள். அது மாத்திரமல்ல நூதனமாய் ஒரு காரியத்தை இப்போ கண்டுபிடித்திருக்கிறார்கள். நம்முடைய சரீரத்துக்குள் இருக்கிற ஒவ்வொரு எலும்பையுங்கூட படம் பிடிக்கிறார்கள். நம்முடைய தோலானது அதை இனிமேல் மறைக்கிறதில்லை. அப்படியானால் நம்முடைய இருதயத்திலுள்ள யோசனைகளையும் எண்ணங்களையும் தேவன் ஏன் பார்க்கக்கூடாது? புத்தியும் சித்தமும் உள்ளது ஆத்துமா. அந்தரங்க பாவமோ, ரகசிய தந்திரமோ எல்லாம் தெரியும். ஒரு நாள் வெளியாங்கமாகும் பாவம் நம்மைத் தொடர்ந்துபிடிக்கும். வேதத்தில் எத்தனையோ திருஷ்டாந்தங்கள் உண்டு. இன்று காலையில் பாவஞ்செய்த மனுஷர்கள் பாவத்தால் கண்டுபிடிக்கப்படாத ஒருவனாவது இல்லையா என்று சோதித்துப்பார்த்தேன். (இன்னும் வரும்).

Printed at the Palamcottah Printing Press Palamcottah and published by the Christian Brotherhood Association, Tinnevelly.

July 1917. Registered No. M. 163

# The Water of Life
# ஜீவத்தண்ணீர்

" என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்.' யோவான் 7: 38.

Vol. XVIII ஜூலை 1917

OF THE REGISTRAR OF ... 1 JUL 1917 ... MADRAS

## களைத்துப்போன கிறிஸ்து.

'கப்பலின் பின்னணியத்தில் அவர் தலையணையைவைத்து நித்திரையாயிருந்தார்'. மாற். 4: 38.

நாம் அறியாத, அல்லது நம்மிடத்தில் இல்லாத விசேஷித்த காரியங்களை மற்றவர்களிடத்தில் காணும்போது அதை வியந்துகொள்வது நமக்கு இயல்பு. நமதாண்டவராகிய கிறிஸ்துவை நாம் ஆச்சரியத்தோடு நோக்கிப் பார்ப்பதின் இரகசியம் அதுதான். அவர் நம்மைப்போன்ற மனுஷகுமாரனாயிருந்தாலும் நமது புத்திக்கெட்டாத உன்னதமானவராயிருக்கிறார். அவருடைய ஜீவியத்திலும் ஊழியத்திலும் விளங்கின அதிசயசெயல்களை ஆவலோடு கற்றுக்கொள்ள நாடுகிறோம். மனுஷீகத்துக் கடுத்த சாதாரண விஷயங்களையோ நாம் அவ்வளவாகக் கவனிக்கிறதில்லை. அவரில் விளங்கின மேலான காரியங்கள் எப்படிப் போதனை நிறைந்ததாயிருக்கிறதோ, அப்படியே அவருடைய தாகம, பசி, களைப்பிலும் நமக்கு நிறைவான போதனை உண்டு.

'அவர் படவிலிருந்தபடியே அவரைக் கொண்டுபோனார்கள்.' நவம்பர் மாசம் நான் திருக்கோவலைவிட்டுத் திரும்பினபோது ஒரு மனுஷனை படுக்கையிலிருந்தபடியே ஸ்டேஷனுக்குக் கொண்டுவந்தார்கள். படுக்கையிலிருந்தபடியே ரெயில் வண்டிக்குள் வைத்தார்கள். படுக்கையிலிருந்தபடியே பட்டணம் கொண்டுவந்தார்கள். ஏன் இப்படி என்று விசாரித்தபோது அவன் அதிகக் களைப்பும் பலட்சியமுமாயிருக்கிறான் என்றார்கள். நமதாண்டவர் அந்த நாளில் செய்த வேலையினால் மிகவும் களைத்து இனி ஒன்றும் செய்யக்கூடாத நிலைமையில் இருந்தார். இரவுக்காக உடுப்பு மாற்றவோ, எழுந்து வேறே இடத்தில் உட்கார்ந்துகொள்ளவோ கூடாத

28-7-17

நிலைமையில் அவர் இருப்பதைக்கண்டு அவர் இருந்தபடியே அவரைக் கொண்டுபோனார்கள் என்று தோன்றுகிறது.

கொஞ்சநேரத்துக்குள்ளாக அயர்ந்து நித்திரைபோனார். தற்காலத்துக் கப்பல்கள் எவ்வளவோ வசதியுள்ளவைகள். முதலாம் இரண்டாம் வகுப்புகளிலுள்ள படுக்கைகள் மகா நேர்த்தியும் வசதியுமானவை. வீட்டின் வசதியும் சுகமும் அவைகளுக்கு நிகரல்ல. நமதாண்டவர் நித்திரைசெய்த இடமோ மீன்பிடிக்கிற படவு. சொகுசான மெத்தைகளும் வெல்வெற்று தலையணைகளும் அங்கேயில்லை. கப்பலின் பின்னணியமாகிய மரத்தில் தன் தலையைவைத்து உடனே தூங்கிவிட்டார். இவ்வளவு சீக்கிரம் அவர் தூங்கினதைப் பார்க்கும்போது அவர் எவ்வளவாகக் களைத்துப்போயிருக்க வேண்டும்! இந்த சமயத்தில் பெரும் ஆபத்து நேரிட்டது. திடீரென பயங்கரமான சுழல்காற்று உண்டாகி, சமுத்திரம் கோஷ்டமாகி, படவு நிரம்பத்தக்கதாக, பலத்த அலைகள் அதின்மேல் மோதிற்று. படவு பட்டபாடு இவ்வளவென்று சொல்லமுடியாது. இவ்வளவு கோஷ்டமும் ததளிப்பும் உண்டாயிருந்தும் அவருடைய தூக்கம் கலையவில்லை ஆ! அவருடைய ஆயாசமும் களைப்பும் எவ்வளவாயிருந்திருக்கவேண்டும்! போதகரே, நாங்கள் மடிந்துபோகிறோமே உமக்குக் கவலையில்லையாவென்று அவர்கள் அவரைத் தட்டி எழுப்பவே, அவர் காற்றையும் கடலையும் அதட்டி இரையாதே அமைதலாயிரு என்றார். உடனே மிகுந்த அமைதல் உண்டாயிற்று. எவ்வளவு சாதாரணமாய்த் தூங்கினாரோ அவ்வளவு சாதாரணமாய் காற்றையும் கடலையும் அமர்த்தினார். சீஷர்கள் மிகவும் பயந்து இவர் யாரோ? இவர் எப்படிப்பட்டவரோ என்று அதிசயப்பட்டார்கள். சகோதரரே, நமது மார்க்கத்தின் பெருமையும் மகிமையும் இதுதான். நாம் நம்பியிருக்கிற கிறிஸ்து தேவனும் மனுஷனுமாயிருக்கிறார். நம்மைப்போல் களைத்துப்போகக்கூடிய மனுஷனும் நாம் பிரமிக்கத்தக்க அதிசயங்களைச் செய்யக்கூடிய தேவனுமாயிருக்கிறார். அவர் தேவனமாத்திரம் வந்தால் யார் அவரை அண்டக்கூடும்? அவர் மனுஷனமாத்திரம் இருந்தால் யார் இரட்சிக்கப்படக்கூடும்?

I. அவர் செய்த ஊழியம் எப்படிப்பட்டது? நாலு சுவிசேஷங்களையும் நாலு பெயர்களால் அழைக்கலாம். மத்தேயு இராஜாவின் சுவிசேஷம். லூக்கா மனுஷகுமாரனுடைய சுவிசேஷம். யோவான் தேவவார்த்தையின் சுவிசேஷம். மாற்கு தேவஊழியனுடைய சுவிசேஷம். அவரை ஊழியம் செய்யவந்தவராகக் காட்டவேண்டுமென்பதே மாற்கு சுவிசேஷத்தின் நோக்கமாயிருந்தபடியால் அவர் உயிரோடெழும்புகிறவரை 'கர்த்தர்' என்று அழைக்கப்படவில்லை.

களைத்துப்போகத்தக்கதாக அவர் செய்த ஊழியம் எப்படிப்பட்டதென்று பார்ப்போம்.



(a) அது மகா சுறுசுறுப்பான ஊழியம். அசதி சோம்பல் அவரிடத்தில் காணப்படவில்லை. கொஞ்சமும் ஓய்வில்லாமல் மடமடவென்று தமது ஊழியத்தை நடப்பித்ததாக மாற்கு தெரிவிக்கிறார். உடனே, உடனே என்கிற வார்த்தையால் அதை அறிந்துகொள்ளலாம். 'ஜலத்திலிருந்து கரையேறின வுடனே'. 'உடனே ஆவியானவர் அவரை ஏவினார்'. 'உடனே அவர்கள் தங்கள் வலைகளைவிட்டு அவருக்குப் பின்சென்றார்கள்'. யாக்கோபையும் யோவானையும் கண்டு உடனே அவர்களையும் அழைத்தார்' 'உடனே ஓய்வுநாளில் அவர் ஜெபஆலயத்தில் பிரவேசித்தார்', 'உடனே அந்த அசுத்த ஆவி அவனைவிட்டுப் போய்விட்டது'. 'உடனே அவர்கள் ஜெபஆலயத்தைவிட்டுப் புறப்பட்டார்கள்'. 'உடனே அவளைக்குறித்து அவருக்குச் சொன்னார்கள்'. 'உடனே ஜுரம் அவளைவிட்டு நீங்கிற்று'. 'அவர் சொன்ன உடனே குஷ்டரோகம் அவனைவிட்டு நீங்கிற்று', உடனே அவனை அனுப்பிவிட்டார்' மாற்கு முதல் அதிகாரத்தில் மாத்திரம் உடனே என்ற சொல் இத்தனைதரம் வருகிறது. தமது ஊழியத்தில் அவர் வைத்த வாஞ்சையினால் சற்றும் தாமதியாமல் இவ்வளவு துரிதமாக வேலையை நடப்பித்தார் என்று அறிகிறோம். அவர் வேலை செய்த மாதிரியைக் கவனிக்கும்போது அவர் களைத்துப்போனது ஆச்சரியமல்ல.

(b) களைத்துப்போகும்வரை செய்யப்பட்ட ஊழியம். அவர் படவிலிருந்தவண்ணமாக அக்கரைக்குப்போக விரும்பின நாளில் அதிகமான வேலை செய்திருந்தார். திரளான ஜனங்கள் அவரிடத்தில் கூடிவந்தார்கள். அவர்களுக்கு அநேக விசேஷங்களை உவமைகளாகப் போதித்தார். தேவராஜ்யத்தின் சம்பந்தமாய் அவர் சொன்ன உவமைகளைத் தமது சீஷர்களுக்கு அந்நாளில் விவரித்துச் சொல்லவேண்டியதாகவுமிருந்தது. அவர் அந்நாளில் செய்த மிகுதியான ஊழியம் அவருடைய சரீரத்தில் களைப்பை உண்டாக்கினதினால் ஜனங்களைவிட்டுப் பிரிந்து அக்கரைக்குப் போகவிரும்பினார்.

(c) சாப்பிடவும் கூடாதபடி செய்யப்பட்ட ஊழியம். வேலை செய்ய மனமற்றவன் சாப்பிடக்கூடாது என்று அப்போஸ்தலன் சொன்னார். ஆகையால் கஷ்டப்பட்டு வேலைசெய்கிறவன் நன்றாய்ச் சாப்பிடவேண்டியவன் என்பது மெய். வேலைசெய்கிறவர்களுக்குப் பசி அதிகம். வாசிப்போ, எழுத்தோ, படித்துக்கொடுக்கிறதோ, பிரசங்கிக்கிறதோ அல்லது வெட்டுகிறதோ, கொத்துகிறதோ, தண்ணீர் இறைக்கிறதோ எவ்வகையான வேலையிலும் பசி உண்டு. பசிக்கிற வேளைக்குக் கொஞ்சம் ஆகாரம் புசித்துக்கொண்டால் பின்னும் அதிகமாய் வேலைசெய்யலாம். ரெயில்வண்டியிலுள்ள என்ஜினுக்கு அல்லவோ இடைக்கிடையே தண்ணீர் கொடுக்கிறார்கள்.

உக்காரத்தோடும் மகா ஊக்கத்தோடும் ஊழியம்செய்த நமதாண்டவருக்கு எவ்வளவோ பசியிருந்திருக்கும்! எனக்குப் பசிக்கிறது, இப்போ உடனே சாப்பிட்டால் நல்லது என்று அவர் சொல்ல, சீஷர்கள் சாப்பாட்டை ஆயத்தம்பண்ணுகிறார்கள். பசியோடிருந்த நமது இரட்சகர் சாப்பிட்டாரா? அவருடைய கண்கள் மங்கியிருக்காதா? கைகள் நடுங்கியிருக்காதா? ஐயோ, ஜனங்கள் அவரைச் சாப்பிடவிடவில்லை. மாற்கு மூன்றாம் அதிகாரத்திலும், ஆறாம் அதிகாரத்திலும் 'அவர் சாப்பிடுவதற்கும் சமயமில்லாதபடிக்கு அநேக ஜனங்கள் மறுபடியும் கூடிவந்தார்கள்' என்றும், 'வருகிறவர்களும் போகிறவர்களும் அநேகராயிருந்தபடியினால் போஜனம்பண்ணுகிறதற்கும் அவர்களுக்குச் சமயமில்லாதிருந்தது' என்று வாசிக்கிறோம். அப்படியிருந்தும் அவர் விசனமடையாமல் தேவசித்தமே என் சாப்பாடு என்று சொல்லிக்கொண்டு தன் பசியை மறந்து வந்தவர்களுக்கு வசனத்தை உபதேசித்தார். இதினிமித்தம் அவருடைய இனத்தார் அவரை மதிமயங்கிப்போனாரென்று நினைத்துப் பிடித்துக்கொள்ள வந்தார்கள்

(*d*) சற்றும் இளைப்பாறக்கூடாமற் செய்யப்பட்ட ஊழியம். உண்மையாய் வேலைசெய்கிறவர்களுக்கு இளைப்பாறுதல் இன்னதென்று தெரியும். இதற்குமேல் வாசிக்கவோ, யோசிக்கவோ, எழுதவோ, நடக்கவோ முடியாதென்று சொல்லக்கூடிய அவ்வளவு களைப்பு சில சமயங்களில் நமக்கு வந்திருக்கலாம். அச்சமயத்தில் இளைப்பாறுகிறதைப்போல் இன்பமும் சுகமும் வேறில்லை. இயேசுவானவர் செய்த கஷ்டமான ஊழியத்தை நாம் கவனிக்கும்போது அவர் இளைப்பாறும்படி விரும்பினது ஆச்சரியமல்ல. என்றாலும் ஜனங்கள் அவரை இளைப்பாறவிடவில்லை. பகல் முழுவதும் எவ்வளவோ வேலைசெய்து மாலை நேரத்தில் பலவிதமான நோயாளிகளையும் பிசாசு பிடித்தவர்களையும் குணமாக்கி இரவில் கொஞ்சநேரம் தூங்கி, அதிகாலையில் எழுந்து புறப்பட்டு வனாந்தரத்திற்கு தனித்திருக்கும்படி போனார். கொஞ்சநேரத்திற்குள்ளாகச் சீஷர்கள் பின்தொடர்ந்துபோய் எல்லாரும் உம்மைத் தேடுகிறார்களே என்றார்கள். வேறொரு சமயம் அவர் சீஷர்களைப் பார்த்து: நாம் வனாந்தரமான ஓரிடத்திற்குத் தனித்துப்போய் சற்றே இளைப்பாறலாம் வாருங்கள் என்றார். மெய்யாகவே அவர் களைத்துப்போனதால் இளைப்பாறும்படி விரும்பினார். அப்படியே படவில் ஏறிப்போனார்கள். இதற்குள்ளாக சகல பட்டணங்களிலுமிருந்து அநேகர் கரைமார்க்கமாக கால்நடையாய் ஓடி, இவர் இறங்கிப்போகிற இடத்தில் முன்னதாகவே வந்து பெருங்கூட்டமாகக் கூடிவிட்டார்கள். அவர்களைப் பார்த்தபோது அவருக்கு எப்படியிருந்திருக்கும்? இயேசுவின் தனிமை திரள்கூட்டமே. அவருடைய இளைப்பாறுதல் அவருடைய ஊழியமே. இனி என்ன செய்கிறது? ஐயோ, என்னைக் கொஞ்சமும் இளைப்பாற விடமாட்டோமென்கிறீர்களே, இது உங்களுக்கு நியாயமாவென்று கோபப்பட்டாரோ? இல்லை. ஒரு நிமிஷத்தில் இளைப்பாறுதல்



என்கிற வார்த்தையை மறந்துவிட்டார். மேய்ப்பனில்லாத ஆடுகள்போல் கரையில் நின்ற அவர்கள்மேல் மனதுருகி அநேக காரியங்களை அவர்களுக்கு உபதேசிக்கத் தொடங்கினார். அநேக மைல் தூரம் பாரமான சுமையைச் சுமந்துகொண்டு வருகிறவன் களைத்து வேர்த்து கழுத்து வளைந்து, சுமைதாங்கிக் கல்லில் தன் பாரத்தை இறக்கும் சமயத்தில் வேறொருவன் அதை வைக்காதே எடு எடு என்று சொல்லி அவன் மறுபடியும் தன் சுமையைத் தலைமேல் தூக்குவானானால் அவனுக்கு எப்படியிருக்கும்? நமதாண்டவர் வேலையின் மிகுதியால் களைத்து இனி ஒன்றும் செய்யக்கூடாதவராக சற்று இளைப்பாறும்படி ஆசைப்பட்டபோது அவ்விளைப்பாறுதல் அவருக்குக் கிடைக்கவில்லை. இளைப்பாறக்கூடாத ஊழியம்!

சகோதரரே! மேற்சொன்ன நாலு குறிப்புகளையும் பார்க்கும்போது நமதாண்டவருக்கு முன்பாக நாம் வெட்கப்படவேண்டியவர்களாயிருக்கிறோம். நாம் செய்துவருகிற ஊழியத்தில் எவ்வளவோ அசதியும் சோம்பலும் காணப்பட்டிருக்கிறதே. நமது தேகத்தைக் குறித்தும் தொண்டையைக் குறித்தும் எவ்வளவோ கவலையும் ஜாக்கிரதையும் நமக்கு இருக்கிறது. தவித்துப்போகிறவரை ஊழியம்செய்யும் நாட்டம் நமக்கில்லையே. அதிகச் சத்தமாய்ப் பேசினால் ஆயுசு சுருக்கம் எனப்பயந்து பிறருக்குக் கேட்டாலும் கேட்காவிட்டாலும் பரவாயில்லை, சத்தத்தைக் காப்பாற்றிக்கொள்ளவேண்டுமென்று தீர்மானித்துக்கொள்ளுகிறவர்களில்லையா? அதிக நேரம் பேசினால் ஆயாசம் வந்துவிடும் என்றஞ்சி சில நிமிஷம் சுருக்கமாகப் பேசி முடிக்கிறவர்கள் இல்லையா? 'தன் ஜீவனை இரட்சிக்கப் பார்க்கிறவன் அதை இழந்துபோவான்'. நமது வேலையைப் பார்க்கிலும் நமது சாப்பாடு நமக்கு விசேஷமாயிருக்கிறதே. நமது சாப்பாடு சகல விஷயத்திலும் திருப்தியாகயிருக்க பிரயாசப்படுகிறோம். நேரம் தப்பாமல் மணிக்கணக்கின்படி சாப்பிட விரும்புகிறோம். சாப்பிடுகிறது பாவமல்ல. ஆனால் போஜனமா? ஊழியமா? எது நமது வாஞ்சை? எதற்காக நாம் பிழைக்கிறோம்? பசியோடிருந்தும் ஊக்கமாய் ஊழியம்செய்த கிறிஸ்துவின் சிந்தை நம்மிடத்தில் உண்டா? ஓர் காலத்தில் குறிக்கப்பட்ட வேலையைச் செய்து பின்பு அதிகமாய் நாம் இளைப்பாறியிருக்கலாம். காலம் செல்லச் செல்ல தேவன் அதிகமான வேலையையும் அதிகமான உத்தரவாதத்தையும் நமக்குக் கொடுக்கிறார். முன்னாலிருந்ததைப்போல் இளைப்பாறக்கூடுமோ? பகல் முழுவதும் வேலைசெய்தபின் இரவிலும் அதிகநேரம் விழித்திருக்க நேரிடுமே. சில சமயங்களில் ஒரு வேலையை முடித்துக் களைத்து வீட்டுக்குத்திரும்பி, உட்காருமுன் ஒரு சகோதரன் அவசரமாக நம்மை வீட்டுக்கு வரும்படி அழைக்கலாம். வேர்வை உடுப்புகளைக் கழற்றாமல் மறுபடியும் போட்டுக்கொண்டு உற்சாகமாய்ப் போகவேண்டுமல்லவோ? தனித்து தியானம்பண்ணப்போகும்போது நம்மைக் கண்டுபேசும்படி இன்னொருவர் வரலாம். இதென்ன தொல்லை எனக்கு ஓய்வில்லையா என்று முறு

முறுக்கலாமா? நியாயத்தை நிறுத்திவிட்டு வந்தவரோடு பட்சமாகப் பேசவேண்டுமே. நியானிக்கும் தேவன் எப்பொழுதும் நமது கூடயிருக்கிறாரே, ஆத்துமாக்கள் எப்போதும் நமது கூடயிருக்கமாட்டார்களே. கர்த்தருக்காகச்செய்யும் அன்பின் ஊழியமே நமக்கு இளைப்பாறுதலாயிருப்பதாக.

II. இவ்வித ஊக்கமான ஊழியத்துக்கு அவரை ஏவிவிட்டதென்ன? மனுஷர் பலவிதமாய் முயற்சிசெய்கிறார்கள். அம்முயற்சிகளுக்குப் பல நோக்கங்களுண்டு. நமதாண்டவர் இவ்வளவு கஷ்டத்தோடு தமது ஊழியத்தை நிறைவேற்றினதற்குக் காரணம் இருக்கவேண்டுமே.

முதலாவது, இந்த ஊழியத்தை நிறைவேற்றும்படி பிதா தம்மை அனுப்பினார் என்பதை எப்பொழுதும் உணர்ந்து ஜீவித்தார். நானல்ல அவரே என்னை அனுப்பினார். நானல்ல அவரே இந்த ஊழியத்தை எனக்குத் தந்தார். என்னை அனுப்பினவருடைய கிரியையை நான் செய்யவேண்டும். என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனம். என் பிதாவுக்கு அடுத்தவைகளில் அல்லவா நான் இருக்கவேண்டும். தமது நேச பிதா தமக்கு இந்த ஊழியத்தைக் கொடுத்தபடியால் அவர்பேரிலுள்ள அன்பு இவ்வளவு ஊக்கத்தோடே அதை நிறைவேற்றும்படி அவரை ஏவிவிட்டது.

இரண்டாவது, காலம் சுருக்கம் என்பதை உணர்ந்து ஜீவித்தார். தாம் உலகத்தில் செய்யக்கூடியதெல்லாவற்றையும் செய்துமுடிக்க வெகு சொற்பக்காலமாத்திரம் உண்டென்று கண்டார். 'பகற்காலமிருக்குமட்டும் நான் என்னை அனுப்பினவருடைய கிரியைகளைச் செய்யவேண்டும், ஒருவனும் கிரியை செய்யக்கூடாத இராக்காலம் வருகிறது' என்று சொன்னார். இதற்குள்ளாக உபதேசிக்கவேண்டியவைகளை உபதேசிக்கவேண்டும். சுற்றவேண்டிய கிராமங்கள் சுற்றித்தீரவேண்டும். செய்யவேண்டிய அற்புத கிரியைகளைச் செய்யவேண்டும். அப்போஸ்தலர் ஏற்படுத்தப்படவேண்டும். உலகத்தை விடும்போது நல் மனச்சாட்சியோடே 'பிதாவே, பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன், நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியைகளைச் செய்து முடித்தேன்' என்று சொல்லக்கூடியவராக இருக்கவேண்டும்.

மூன்றாவது, பாவிகள் பேரிலுள்ள பரிதாபம் இவ்வளவு ஊக்கமான ஊழியத்தைச் செய்யும்படி அவரை ஏவிவிட்டது. அவருக்கும் அவர்களுக்கும் எவ்வளவு வித்தியாசம்! அவர்கள் நடுவில் மனுஷகுமாரனாக நிற்கிறார். மற்றமனுஷர் எவ்வளவாகக் கெட்டுப்போயிருக்கிறார்கள் என்பதைத் திட்டமாகக் காண்கிறார். தாம் பரிசுத்தர் அவர்கள் அசுத்தர். தாம் ஞானமுள்ளவர் அவர்கள் மகா அறிவீனர். தாம் வல்லபர் அவர்கள் பெலவீனர்.



இப்படித் தமக்கும் அவர்களுக்குமுள்ள பெரும் பேதத்தைப் பார்த்தபோது மனதுருகி மனுஷருடைய இரட்சிப்புக்காக எவ்வளவு கஷ்டத்தையும் உத்தரிக்கச் சித்தமானார்.

சகோதரரே, கிறிஸ்துவைப்போல் நாமும் உத்தமமும் ஊக்கமுமான ஊழிய செய்யவேண்டுமானால் மேற்சொன்ன 'மூன்று குறிப்புகளும் நம்மிடத்தில் காணப்படவேண்டுமே. நாம் செய்துவருகிற ஊழியத்தை மிஷன் ஊழியம் என்றாவது மிஷனெரி கொடுத்த ஊழியம் என்றாவது எண்ணாமல் என் பிதா இந்த ஊழியத்தை எனக்குத் தந்தார், அவரே இந்த ஊழியத்தில் என்னை அனுப்பியிருக்கிறார் என்று உணரவேண்டும். குணப்படாத ஊழியர்களுக்கு இந்த உணர்வு வரவேமாட்டாது. இரண்டாவது காலம் சுருக்கம் என்பதை நாம் மறக்கலாகாது. 20 வருஷம் 30 வருஷம் ஊழியம் செய்திருக்கிறேன் என்று ஒருவன் சொல்லலாம். இனி இத்தனை வருஷம் ஊழியம் செய்வேன் என்று அவன் சொல்லக்கூடுமோ? நமது ஊழியம் முடியும் காலத்தை நாமறியோமே. நினையாத நேரம் கர்த்தர் நம்மை அழைத்தால் அதோடு முடிந்தது. நமது திறமையும், அறிவும் சாமர்த்தியமும், அதோடு முடிந்தது. ஆகையால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளவேண்டியது எவ்வளவோ அவசரம்! செய்யக்கூடியதையெல்லாம் முழுபெலத்தோடு செய்துமுடிக்கவேண்டியது எவ்வளவோ நியாயம்! காலம் அநிச்சயம் என்பது நம்மை ஊக்கமான ஊழியத்திற்கு ஏவி விடுவதாக.

ஜனங்கள்பேரில் பரிதாபமும் வேண்டும். ஆத்துமாக்கள்பேரில் பரிதாபம் இயல்பாய் நமக்கில்லை. கிறிஸ்து தமது பரிதாபத்தை நமக்குத் தரவேண்டும். ஏராளமான வேலை மற்ற மற்ற வேலைகளைப்போல் செய்யப்பட்டுவருகிறது. இக்காலத்தில் சுவிசேஷ ஊழியத்தின் பேரால் அதிகமான ஏற்பாடுகளும் முயற்சிகளும் நடக்கிறது. மோசம்போகாதபடி எச்சரிக்கையாயிருப்போமாக. எவரும் இந்த ஊழியத்தைச் செய்யலாம் என்பது தற்கால ஏற்பாடு. மேலும், ஒரு முயற்சியை நடத்துகிறவர் எப்படிப்பட்டவரோ அவரோடு சேர்ந்தவர்களும் அவரால் ஏற்படுத்தப்படுகிறவர்களும் அப்படிப்பட்டவர்களே. சுவிசேஷ ஊழியத்தை நடத்துவதற்கு லட்சணங்கள் என்ன? படிப்புப் போதுமோ? லட்சணமாய் உடுத்தினால் போதுமோ? சாமர்த்தியம் போதுமோ? ஆள் பார்க்கப் பகட்டாயிருந்தால் போதுமோ? அவன் ரட்சிக்கப்பட்டவனா? அவன் இயேசுவின் அன்பை ருசித்தவனா? ஆவியினால் போதிக்கப்பட்டவனா? ஆத்துமாக்களை இழுக்கக்கூடிய உன்னத பெலன் பெற்றவனா? இப்படிப்பட்ட கேள்விகள் இக்காலத்தில் கேட்கப்படுகிறதில்லை. ஒருவேளை இவைகள் அவ்வளவு அவசரமில்லை, காரியங்களை நடத்தத் திறமை இருந்தால் போதும் என்று எண்ணிக்கொண்டார்களாக்கும்?

எஜமானைக் கவனித்துப்பாருங்கள்! 'அவர் பன்னிரண்டு பேரை தெரிந்துகொண்டு அவர்கள் தம்மோடே கூடயிருக்கவும், பிரசங்கம் பண்ணும்படியாகத் தாம் அவர்களை அனுப்பவும்'. மாற். 3: 14. இதுவே எக்காலத்திலும் எல்லா ஊழியர்களுக்கும் பிரமாணம். கிறிஸ்துவை அறியாதவன் அவருக்கு ஊழியக்காரனாகக்கூடாது. அவரோடு தங்கி அவரிடத்தில் கற்றுக்கொள்ளாதவன் அவருக்காகப் பிரசங்கிக்கப் போகக்கூடாது. நமது முயற்சிகளில் மெய்யான பலன் கிடைக்கவேண்டுமானால் அது அவரிடத்திலிருந்து நமது மூலமாக உண்டாகவேண்டியது. 'ஒருவன் என்னிலும், நான் அவனிலும் நிலைத்திருந்தால் அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான், என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது'. மனுஷன் தானாகச்செய்யும் முயற்சிகள் யாவும் கனிகளாகமாட்டாது. அவரில் நிலைத்திருந்து அவர் மூலமாக வராத முயற்சிகள் எல்லாம், மனுஷருடைய பார்வைக்கு தேவ ஊழியம்போல் தோன்றினாலும் கர்த்தருக்கு முன்பாக அருவருப்பே.

இக்காலத்தில் தேவபக்தி அதிகப்படவேண்டும். தேவனுடைய ஜீவ வார்த்தைகள் பயபக்தியோடு படிக்கப்படவேண்டும். ஊக்கமான ஜெபங்கள் பெருகவேண்டும். ஆவியானவருக்கு முற்றிலும் இணங்கவேண்டும். இயேசுவின் அன்பு உள்ளத்தை நிரப்பவேண்டும். ஜீவியத்தில் பரிசுத்தம் காணப்படவேண்டும். ஆத்துமாக்கள் பேரில் வாஸ்தவத்தில் பரிதாபம் பொங்கவேண்டும். இதுவே கர்த்தருக்குப் பிரியமாக ஊழியஞ்செய்யும் இரகசியம். இவைகளைக் கவனியாமல் மற்ற வேலைகளைப்போலவே தேவ ஊழியத்தையும் மாம்ச முயற்சியில் செய்துவருவோமானால் வெகு சீக்கிரத்தில் ஆண்டவர் நம்மை வெட்கப்படச்செய்வார் என்பது உண்மை.

S. பரமானந்தம்.

## உங்கள் பாவம் உங்களைத் தொடர்ந்து பிடிக்கும் என்று நிச்சயமாய் அறியுங்கள். எண். 32: 23.

(தொடர்ச்சி)

முதலாவது, பொய்சொன்ன பாவியைப் பாருங்கள். அப்போ. 5: 1—8. அனனியாவும் சப்பீராளும் பொய்சொன்னார்கள். அவர்கள் சபையார். சங்கப்பணம் கொடுக்கிறவர்கள். தங்கள் சொத்தை விற்றுப்போட்டு மிச்சமான பாகத்தைத் தேவனுக்கென்று கொண்டுபோய்ப் படைப்பார்கள். முழுவதையும் கொடுக்கவில்லை. எல்லாவற்றையும் கொடுத்தோமென்று பொய்சொன்னார்கள். அவர்கள் பாவம் அவர்களை உடனே தொடர்ந்து பிடித்தது. திடீரென்று செத்துப்போனார்கள். உங்களைப் பார்க்கிலும் பெரிய பாவிகளா? இல்லை, இல்லை. ஆண்டவர் அவர்களை விடவே இல்லை. உங்களையும் விடமாட்டார்.



எரேமியா 28: 16, 17. இன்னொரு அனனியாவுமுண்டு. அவன் தரித்திரன், ஜனங்களுக்குத் தெரியாது, அவனும் பொய்சொன்னான். அவன் ஒரு தீர்க்கதரிசி, தேவனுடைய நாமத்தினாலே பேசுவதுபோல அபத்தம்பேசினான். பாபிலோன் தேசத்துக்குக் கொண்டுபோகப்பட்ட தேவாலய சாமான்களை இரண்டு வருஷங்களுக்குள்ளாகத் தேவன் கொண்டுவரச் சொன்னார் என்று கள்ளத் தீர்க்கதரிசனஞ் சொன்னான். தேவன் விசனப்பட்டு எரேமியாத் தீர்க்கதரிசியின்மூலமாய்க் கண்டித்து, இந்த வருஷத்திலேயே சாவாய் என்றார். அப்படியே அவன் அந்த வருஷம் 7-ம் மாசத்திலேயே மாண்டுபோனான். பழைய ஏற்பாட்டில் ஒரு அனனியா, புது ஏற்பாட்டிலொரு அனனியா. இவனும் செத்தான், அவனும் செத்தான். தேவனுடைய தண்டனைக்குள்ளாகி பொய்சொல்லும் நாவே அனனியாவே உங்கள் பாவம் உங்களைத் தொடர்ந்துபிடிக்கும். இன்றைக்கோ இந்த வருஷத்திலேதானோ! இன்னுங் கொஞ்சக்காலம் பொறுத்தோ உன்னைப்பிடித்து நரகத்திலே தள்ளிப்போடும்.

இரண்டாவது, விபசாரஞ்செய்த பாவியைப் பாருங்கள். மாற் 6: 17, 18. ஏரோது செய்ததென்ன? தன் சகோதரன் மனைவியை எடுத்துக்கொண்டான், விபசாரக்காரன். யோவான் ஸ்நானகன் அவனைக் கண்டித்தான், 'உம்முடைய சகோதரன் மனைவியை வைத்துக்கொள்வது சரியல்ல' என்று எச்சரித்துப் பேசினான். அவன் கேட்கவில்லை. அந்தப் பாவம் அவனுக்கு இனிமையாய்த் தோன்றினது. தன்னைக் கண்டித்த மனிதனைக் கொலைசெய்தான். பாவத்திற் பலப்பட்டான். சிலகாலம் நன்றாய் வாழ்ந்தான். சுகமாய் இருந்தான். புத்தியீனரே! உங்கள் பாவம் உங்களைத் தொடர்ந்துபிடிக்கும்; 6 வருஷக்காலம் சந்தோஷமாயிருந்தான். பின்பு ரோமாபுரிக்குப் போய் தனக்கு உயர்ந்த பட்டங்கொடுக்கும்படி ரோமரிடத்தில் கேட்டான். அப்பொழுதுதான் அவன் பாவம் அவனைத் தொடர்ந்துபிடித்தது. ரோமராயன் அவன் வேண்டுகோளுக்கு இசையாமல் அவனைக் கைதியாக்கி தீவாந்தரமாய் அனுப்பிவிட்டான். சுகம் போயிற்று, விபசாரத்தின் இனிமை போயிற்று, ராட்சியம் போயிற்று, எல்லாம் போயிற்று. அப்போஸ். 24: 25 பேலிக்ஸ் தேசாதிபதி பவுலின் பிரசங்கத்தைக் கேட்டான். அப்போஸ்தலன் நீதியையும், இச்சையடக்கத்தையும், இனிவரும் நியாயத்தீர்ப்பையும் குறித்துப் பேசுகையில் பேலிக்ஸ் பயமடைந்தான். ஏன்? விபசாரக்காரன். ஏன் அவன் பக்கத்தில் உட்கார்ந்திருந்த மனைவி அவன் சொந்த மனைவியல்ல, இன்னொருவனுடைய மனைவி. குணப்பட்டானோ? இல்லை. பாவம் அவனைத் தொடர்ந்து பிடித்ததா? ஆம் கொஞ்சக்காலம் சுகமாயிருந்தான் அந்த வைப்பாட்டிக்கு ஒரு ஆண்பிள்ளை பிறந்தது, நன்றாய் வாழ்ந்தார்கள். பின்பு திடீரென்று அவன் உத்தியோகம் நீங்கிப்போயிற்று; சொந்த தேசத்துக்குப்போய் அவமானமடைந்தார்கள். அங்கே அக்கினிக்கும் மலை ஒன்று

இருந்தது. ஒருநாள் திடீரென்று அந்த மலை அக்கினி கக்கி அந்தப் பெண்ணும் மகனும் அக்கினிக்கு இரையானார்கள்.

மூன்றாவது, கள்குடித்த பாவியைப் பாருங்கள். தானியேல் 5-ம் அதி. பாபிலோன் ராஜா பெரிய விருந்து செய்கிறான். அவனால் அழைக்கப்பட்டவர்கள் நன்றாய்க் குடித்தார்கள். குடிக்கிறது என்ற வார்த்தை திரும்பத் திரும்ப வருகிறது. திடீரென்று அவன் சந்தோஷம் போய்விட்டது. மனுஷ கைவிரல்கள் தோன்றி சுவரிலே எழுதிற்று. ராஜாவின் கால்கள் ஒன்றோடொன்று மோதிக்கொண்டது. 'நீ தராசிலே நிறுக்கப்பட்டு குறையக் காணப்பட்டாய்'. முடிவு என்ன? அன்று ராத்திரியிலே கொல்லப்பட்டான்.

நான்காவது பொருளாசைக்காரனைப் பாருங்கள். 2 இரா. 5: 20-27. கேயாசி நல்ல எஜமானுடைய வேலைக்காரன். தேவ ஊழியத்தில் பங்குபெற்றவன் அஞ்ஞானியல்ல பணத்தின் மேல் ஆசைவைத்தான். தேவ ஊழியஞ்செய்வதோடுகூட கொஞ்சம் பணம் சம்பாதித்தால் தோஷம் என்ன? என்று சொல்லி நாகமானின் பின்னாலே போய், தன் எஜமானுக்காக ஒரு தாலந்து வெள்ளியும் இரண்டு மாற்று வஸ்திரங்களையும் தரவேண்டும் என்று கேட்டான். தான் விரும்பினதைப் பார்க்கிலும் அதிகம் பெற்றுக்கொண்டான் அதிகப் பணத்தை வாங்கிக்கொண்டான். சந்தோஷத்தோடு திரும்பினான் ஒருவருக்கும் தெரியாதென்று நினைத்தான். புத்தியீனன்! தேவன் பார்க்கவில்லையா? அந்தப் பொருளாசையை மறைக்கும்படி எஜமானிடத்தில் பொய் சொன்னான். பொருளாசைக்காரர் எல்லாரும் பொய் அநேகமாய்ச் சொல்லுவார்கள். ஐயோ! பாவம் அவனைக் கண்டுபிடித்தது. 'அவன் உறைந்த மழை நிறமாய் வெண்குஷ்டரோகியாகிக் கெட்டுப்போனான்'. அவன் மாத்திரமா? இல்லை. ஆண்பிள்ளை மாத்திரமா? இல்லை. 'லோத்தின் மனைவியை நினைத்துக்கொள்ளுங்கள்'. பொருளாசையினாலே அவளும் கெட்டுப்போனாள் 'உப்புத்தூண் ஆனாள்'. பிலேயாம், ஆகான், சவுல், ஆகாப், யோசேப்பின் சகோதரர், பரிசேயர் முதலானவர்களின் பாவத்தை எடுத்துக்காட்டினால் அதிகமாய் விரியும். சொன்னது போதும்.

Rev. T. Walker.

## நம்மைச் சுத்திகரித்துக்கொள்வோமாக

2 கொரி. 7: 1. (தொடர்ச்சி).

II. உள்ளான சுத்திகரிப்படையும் விதமென்ன?

(1) அவிசுவாசிகளோடு இணைக்கப்படாதிருப்போமாக. கிறிஸ்துவுக்குள் விசுவாசியாகிய ஒருவன் கிறிஸ்தவனல்லாதவனோடு விவாகத்தில் இணைக்கப்படவே கூடாது. விவாகம் 'கர்த்தருக்குள்ளாக' மாத்திரம்



இருக்கவேண்டுமென்பது கிறிஸ்துவின் தெளிவான கட்டளை. உலகத்துக்கடுத்த வியாபாரம், தொழில் முதலிய விஷயங்களில் கிறிஸ்தவர்களும் கிறிஸ்தவர்களல்லாதவர்களும் சம்பந்தப்படுகிற காரியத்தைப்பற்றி திட்டமாய்ச் சொல்லமுடியாது. அப்படியானால் நாம் முற்றிலும் உலகத்தை விட்டு நீங்கவேண்டியது வரும். மேலும் அப்படி எல்லாவற்றிலும் பிரிந்திருந்தால் கிறிஸ்துவை அறியாதவர்களுக்குச் சுவிசேஷம் எவ்விதமாய் அறிவிக்கக்கூடும். பிரேதம் கெட்டுப்போகாதபடி உப்பு செலுத்தப்படவேண்டும். வெளிச்சம் இருளில்தான் பிரகாசிக்கவேண்டும். ஆனால் உபாகமம் 22: 10ல் 'மாட்டையும் கழுதையையும் பிணைத்து உழாதிருப்பாயாக' என்றபடி அதிக நெருக்கமும் அடிக்கடி பழக்கமுமான சிநேக சம்பந்தம் எவ்வளவு மாத்திரம் கூடியதோ அம்மட்டும் வைத்துக்கொள்ளலாம்.

(2) அநியாயம், அக்கிரமமான காரியங்களில் ஐக்கியப்படக்கூடாது. பணத்தை அநியாய வட்டிக்கு விடல், லாகிரியுள்ள வஸ்துக்களைச் செய்து விற்றல், சன்மார்க்கத்துக்கு விரோதமான எவ்விதக் களியாட்டு முதலியவைகளில் கூடுறவுகொள்ளல், எவ்விதமாயாவது பிறரை வஞ்சிக்கும், ஏமாற்றும் காரியங்களில் சம்பந்தப்படல் இவை முதலானவைகளோடு சற்றேனிலும் ஐக்கியப்படக்கூடாது.

(3) அந்தகாரக் கிரியைகளில் சம்பந்தப்படக்கூடாது. பேசுகிறதற்கும் வெட்கமான எந்தக் கிரியைகளிலும் ஐக்கியப்படக்கூடாது. ஒளியினிடத்தில் செய்யப்படும் எக்கிரியைகளையும் கண்டிக்கவேண்டும். (எபேசி 5: 1, 12). மற்றவர்களைக் குற்றவாளியாகத் தீர்க்கிறவனே, நீ யாரானாலும் சரி மற்றவர்களைக் குற்றப்படுத்தும் எக்காரியத்திற்கும் விலகியிருக்கவேண்டும். உத்தமர்கள் காணக்கூடாதென்று நாம் செய்யும் எந்தக்காரியமும் தகாதது. நமது உள்ளத்தில் எவ்வித அசுத்த நினைவுகளுக்கும் இடங்கொடுக்கக்கூடாது. நமது ஜீவியத்தின் எந்தக் காரியமும் சுத்தக் கண்ணாடிபோல் தெளிவாயிருக்கவேண்டும். நம்மிடத்தில் வேதனையுண்டாக்கும் வழி உண்டோ என்று கவனித்து ஆண்டவர் நம்மை முற்றிலும் ஆராய்ந்து பார்க்கும்படி கேட்டு தீமையான யாவற்றிலும் நின்று நம்மை விடுதலையாக்கக் கெஞ்சவேண்டும். ஒளியின் பிள்ளைகள் அந்தகாரத்தின் காரியங்களில் சற்றேனிலும் தாமதிக்கவே கூடாது.

(4) பேலியாளோடு நமக்கு ஐக்கியம் இருக்கக்கூடாது. பேலியாள் என்பது கானானிய பதம். பூர்வத்தில் ஓர் விக்கிரகத்தின் பெயர். வீணும் பிரயோஜனமற்றதும் அற்பத்தனமுமான எதையும் குறிக்கும். கிறிஸ்துவின் பிள்ளை வீணும் வேடிக்கையுமான சம்பாஷணைகள், பிரயோஜனமற்ற புஸ்தகங்களை வாசித்தல் ஆத்துமாவைக் கெடுக்கும் எக்காரியமும் செய்தல் தகாது. இதினால் தேவனுடைய பிள்ளைகள் நகைத்துச் சந்தோஷமாயிருப்பது தகாதென்றல்ல, பாவமற்ற சகல சந்தோஷங்களும் தேவ

னுடைய பிள்ளைகளுக்குரியதே. ஆனால் பரிசுத்தாவியைத் துக்கப்படுத்தும் எவ்விதக் கிரியையும் தகாது.

(5) விக்கிரகங்களுக்கும் நமக்கும் சம்பந்தம் உதவாது. எக்காலத்திலும் உலகத்தின் விக்கிரகம் அதின் பொன்னும் பணமுமே. உலகச் சிற்றின்பம் சிலருடைய விக்கிரகமாகும். சுய மேன்மை, மற்றவர்களால் புகழப்படல் வேறு சிலருடைய விக்கிரகமாம். இவ்விக்கிரகங்களை மனுஷர் பணிந்து அவைகளைப்போற்றி வணங்குகிறார்கள். தங்கள் முழுப் பிரயாசத்தையும் பெலத்தையும் இதற்கென்று செலவிடுகிறார்கள். ஆனால் நமக்கோ தேவனே எல்லாவற்றிலும் எல்லாமாயிருக்கிறார். என்னைத் தவிர வேறே தேவர்கள் உனக்கு வேண்டாமென்கிறார். பிள்ளைகளே, விக்கிரகங்களுக்கு விலகி உங்களைக் காத்துக்கொள்ளுங்கள் என்கிறார் தேவனே நமக்குத் துவக்கமும் மத்தியும் முடிவுமாயிருக்கவேண்டும். தம்மிலே நமக்குத் தேவையான சகல நன்மைகளையும் உடையவராயிருக்கிறார். தாராளமாய்க் கொடுக்கிறவருமாயிருக்கிறார்.

(6) நாம் பிரிந்துபோய் அசுத்தமானதைத் தொடாதிருக்கவேண்டும். ஏசாயா 52-ம் அதிகாரத்திலிருந்து இவ்வசனம் எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. அங்கே சிறையிருப்பில் பாபிலோனிலிருந்த யூதருக்குக் கூறப்பட்ட வார்த்தைகள். அவர்கள் சிறை மீட்பின் காலம் சமீபித்தபடியால், புறப்படுங்கள் புறப்படுங்கள் அசுத்தமானதைத் தொடாதிருங்கள். 'கர்த்தருடைய பாத்திரங்களைச் சுமக்கிறவர்களே அதின் நடுவிலிருந்து புறப்பட்டு உங்களைச் சுத்திகரியுங்கள்' என்று கூறுகிறது. ஏசாயா 52: 11. இஸ்ரவேலர் தங்கள் பரிசுத்த நகரத்தைப் பார்த்து 70 வருஷமாயிற்று. இப்போது நல்ல செய்தி கொண்டுவருகிறவனுடைய பாதங்கள் மலைகளின்மேல் காணப்பட்டு மேற்சொன்ன வார்த்தைகளை வசனிக்கிறான்.

இவ்வார்த்தைகள் நமக்கும் ஏற்றது. நாமும் சொந்த தேசமவிட்ட பரதேசிகளதான். இந்த உலகமாகிய பாபிலோனில் இருக்கிறோம். பரிசுத்த ஸ்தலத்தின் பரிசுத்த பாத்திரங்கள் நம்மிடத்தில் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது. நமக்குத்தான் இவ்வித அழைப்பு கூறப்பட்டிருக்கிறது. உலகமெங்குமுள்ள தேவனுடைய சபை தன் உத்தரவாதத்தை உணர்ந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும். பாபிலோன் அச்சபையின் சொந்த தேசமல்ல, ஐபிராத்து, டைகிரிஸ் நதிகள் அச்சபைக்கு அந்நியம். அவர்களைச் சுற்றியுள்ளவர்களுடைய தொழில் துறைகள் வேறே, சபையின் நோக்கம் வேறே. ஆகையால் தேவனுடைய பரிசுத்த நகரத்தார் அசுத்தமான பாபிலோனைவிட்டுப் பிரியவேண்டியது மெத்த அவசரம். அதை முற்றிலும் வெறுத்துதள்ளிப் புறப்படவேண்டும். அதோடு ஒட்டிக்கொள்ளவே கூடாது.

Printed at the Palamcottah Printing Press, Palamcottah and published by the Christian Brotherhood Association, Tinnevelly.

August 1917. Registered No. M. 163

REGISTRAR OF ... 17 AUG 1917 ... MADRAS

# The Water of Life
# ஜீவத்தண்ணீர்

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்." யோவான் 7: 38.

Vol. XVIII ஆகஸ்டு ௴ 1917

## ஒரு அநுபோக சித்தாந்தம்

**கர்த்தர் நீதிமான்களின் வழியை அறிந்திருக்கிறார். சங். 1: 6.**

இந்த வாக்கியத்தின்பேரில் ஒரு பிரசங்கம் செய்யாமல் இதை விளக்கத்தக்கதான ஒரு அநுபோக சித்தாந்தத்தை எழுத விரும்புகிறேன். அதாவது நான் ஒரு சமயத்தில் திருநெல்வேலியிலிருந்து ஆர்க்கோணத்துக்கு ஒண்டியாய்ப் பிரயாணம் செய்ய நேரிட்டது. ஆனால் திருநெல்வேலியில் வண்டி ஏறாமல் நாட்டுப்புறத்திலிருந்து ஒரு சிறு ஸ்டேஷனுக்கு வந்து லோக்கல் டிரேனில் ஏறினதால் ஆர்க்கோணத்துக்கு Through Ticket கொடாமல் மதுரை வரைக்கும்தான் கொடுக்கப்பட்டது. அப்படியே புறப்பட்டு மதுரை இரவு 8 மணிக்குப் போய்ச்சேர்ந்தேன். அங்கு இறங்கி வேறு டிக்கட் எடுத்து அரைமணி நேரத்துக்குள் அடுத்த வண்டி ஏறுவது மிகக்கஷ்டம். மதுரை பெரிய ஸ்டேஷனானதால் ஏராளமான ஜனங்கள் இறங்குவதும் ஏறுவதுமாயிருக்குமே. டிக்கட் கொடுத்துவிட்டு வெளியே போகவும் மறு டிக்கட் எடுத்து உள்ளே வரவும் காலதாமதமாகும். அதோடு சாமான்களைப் பார்த்துக்கொள்ள சொந்த ஆளில்லாததால் போர்ட்டரை நம்புவதும் கூடாத காரியம். ஆயினும் நேரம் பிடிக்காமல் டிக்கட் எடுக்கவும், போர்ட்டர் சாமான்களை மோசம் போக்காமல் வைத்துக்கொண்டிருக்கவும் கர்த்தர் தயவுசெய்தார். அப்புறம் வண்டியேறப்போகவும் ஒவ்வொரு வண்டியிலும் நிற்கக்கூட இடமில்லாமல் ஜனம் நிறைந்திருந்தது. அங்கும் இங்கும் ஓடித்திரிந்து கடைசியாக வண்டி புறப்படப்போகிற சமயத்தில் ஒரு வண்டியில் எனக்காக ரிஸர்வ் பண்ணப்பட்டதுபோல கொஞ்சம் இடம் காலியாயிருந்தது. அதில் ஏறி சௌக்கியமாய் உட்கார்ந்துகொண்டேன். உடனே வண்டியும் புறப்பட்டது, இவ்விதமாய் வண்டி தவறாமல் கிடைக்கும்படி செய்தது கர்த்தருடைய பெரிதான தயவு என்று

ணர்ந்து அவருக்கு ஸ்தோத்திரஞ் செலுத்தினேன். அன்றையத்தினம் வண்டி தவறினல் நான் வேலைபார்க்கிற இடம் ஆர்க்கோணத்துக்கு தென் மேற்கில் 12 மைல் தூரத்திலிருக்கிறது. நானிறங்கவேண்டிய ஸ்டேஷன் ஆர்க்கோணத்துக்கு தெற்கே இரண்டாவது ஸ்டேஷன். அங்கே கூலியாள் கிடைப்பது கஷ்டம். ஆகையால் எனது கிராமத்திலிருந்து ஒரு ஆள் வரும்படியாய் எழுதியிருந்தேன். அன்றையத்தினம் நான் வராமற்போனல் ஆள் விருதாவாய்க் காத்திருந்து போய்விடும் அடுத்த நாள் போனல் ஆள் கிடையாமல் கஷ்டப்படுவேன். இவ்வித வசதியீனங்கள் நேரிடாமல் பிரயாணத்தை வாய்க்கச்செய்தது கர்த்தருடைய பெரிதான ஒத்தாசையேயன்றி வேறல்ல. ஆகையால் கர்த்தர் தமது பிள்ளைகளின் வழியை அறிந்திருக்கிறார் என்பது திருஷ்டாந்தபூர்வமாயிருக்கிறது.

மதுரையில் எடுத்த டிக்கட் ஆர்க்கோணம் வரையும் கொடாமல் செங்கற்பட்டு வரைக்ும்தான் கொடுக்கப்பட்டது. மறுபடியும் சங்கடம் நேர்ந்தது. செங்கற்பட்டில் போய் டிக்கட் எடுக்கவும் சாமான்களைப் பார்த்துக்கொள்ள ஆள் தேடவும்வேண்டுமே என்ற சஞ்சலமுண்டாயிற்று. வண்டி மதுரையைவிட்டுப் புறப்பட்டு தஞ்சாவூர் விடிய 6 மணிக்கு வந்துசேர்ந்தது. தண்ணீர்குழாய் நானிருந்த வண்டிக்கு எதிரில் இருந்தபடியால் வண்டியைவிட்டு இறங்கி தந்தசுத்தி செய்துகொண்டு சேப்பிலிருந்த கைக்குட்டையை எடுத்து முகத்தைத் துடைத்துக்கொண்டு என்னுடைய இருப்பிடத்தில் போய் உட்கார்ந்து குட்டையை மறுபடியும் சேப்பில் வைக்கும்பொழுது அதற்குள்ளிருந்த டிக்கட்டைக் காணோம். உடனே இடி அடித்ததுபோல மனம் கெடிகலங்கி கீழும் மேலும் பார்த்தும் காணாமல் இருந்த அறையின் பக்கவழியாய் தேடிக்கொண்டு குழாய் வரைக்கும் போய்ப் பார்த்தும் காணாமையால் வெகு விசாரத்தோடு மறுபடியும் வண்டிக்குள் வந்து நடைபாதையிலுள்ள சந்துபொந்தெல்லாம் தேடிவிட்டு வைத்தியங்கொண்டவன்போல் மறுபடியும் நான் இருந்த கம்பார்ட்டுமெண்டுக்கு அடுத்த கம்பார்ட்டுமெண்டில் ஒரு சாய்பு தன் கையில் ஒரு டிக்கட் வைத்துக்கொண்டிருந்ததைக் கண்டு ஒருவேளை அது நமது டிக்கட்டாயிருக்கலாமென்று நினைத்து அதைக் காட்டச்சொன்னேன். அவன் காட்டமாட்டேன் என்றான். பக்கத்திலுள்ளவர்கள் நீ Ticket collector அல்லவே ஏன் காட்டச்சொல்லுகிறாய் என்றார்கள். அதற்கு நான் என் டிக்கட் ஒன்று இப்பொழுதான் தவறிவிட்டது, அதாயிருக்குமென்று கேட்டேன் என்றேன். அப்பொழுது அங்கே உட்கார்ந்திருந்த ஒரு மனிதன் எந்த ஊருக்கு டிக்கட் எடுத்தது என்றான். செங்கற்பட்டுக்கு என்றேன். உடனே தன் மடியிலிருந்து அந்த டிக்கட்டை எடுத்து இது இந்த நடபாதையில் கிடந்தது, யாருடையதோ தேடிக்கொண்டுவந்தால் கொடுத்துவிடலாமென்று வைத்திருந்தேன். நீ அதிர்ஷ்டசாலி வேறு யார் கையிலாவது அகப்பட்டிருந்தால் கிடைக்கப்போகிறதில்லை.



4 ரூ. 1 அணவும் செத்தது. அதோடு இரட்டைச் சார்ஜும் வாங்கிவிடுவார்கள். இதோ பத்திரமாய் வைத்துக்கொள்ளென்று சொல்லிக் கொடுத்தான். பக்கத்திலுள்ளவர்கள் அவனைப் பார்த்து அரை ரூபாய் ஒரு ரூபாய் வாங்கிக்கொண்டு கொடுக்கப்படாதா என்றார்கள். அதற்கு அவன் ஐயோ பாவம் இதை இழந்தவர்களுக்கு எவ்வளவு சஞ்சலமிருக்கும் அவர்களிடமிருந்து அரை ரூபாய் வாங்கிவிட்டதினால் நான் கோடீஸ்வரனாகிவிடுவேனா? அது வேண்டாம் என்றான். உடனே அவனுக்கு நன்றிசெலுத்திவிட்டு சந்தோஷமாய்ப் போனேன். இதிலே சவாரி செய்த பெரிய தயவைப் பாருங்கள். குழாயில் முகங்கழுவிவிட்டு முகத்தைத் துடைக்க என் குட்டையை அப்பொழுது எடுத்திருப்பேனானால் அந்த டிக்கட் வெளியே விழுந்து யாராவது எடுத்துக்கொண்டுபோயிருப்பார்கள். அப்படியிராமல் வண்டிக்குள் வந்து நடைவழியில் குட்டையை எடுத்து முகந்துடைக்கும்படி கர்த்தர் செய்தார் அது நடைவழியில் விழவும் எனது பக்கத்து கம்பார்ட்டுமெண்டில் வந்து உட்கார்ந்த ஒருவன் கையில் அகப்படவும் செய்தது அவரது அதிசயமே. மேலும் நான் அந்த கம்பார்ட்டுமெண்டில் போய்க் கேட்கும்படியாய் நேர்ந்ததும் அற்புதமே. அந்த வாலிபன் பிரதியுபகாரத்தை நாடாமல் திருப்பிக் கொடுத்துவிட்டதும் அவரது திருச்செயலே. அந்த டிக்கட் கிடையாமல்போயிருக்குமானால் செங்கற்பட்டு போனதும் டிக்கட் கொடுக்கவேண்டும் அல்லது நம்பராவது சொல்லவேண்டும் இரண்டுமில்லை. ரூல்பிரகாரம் இரட்டைச்சார்சு கொடுக்கிறதற்கு என் கையில் பணமுமில்லை. அங்கே தெரிந்தவர் யாருமில்லை. இப்படிப்பட்ட பெரிய அவதி நேரிடாமல் வழி நடத்தினது அவரது சுத்த கிருபையேயன்றி வேறல்ல. ஆகையால் கர்த்தர் நீதிமான்களின் வழியை அறிந்திருக்கிறார் என்பது சத்தியமே.

தஞ்சாவூரிலிருந்து புறப்பட்ட வண்டி செங்கற்பட்டுக்கு இரவு $8\frac{1}{2}$ மணிக்கு வந்து சேர்ந்தது. உடனே ஒரு போர்ட்டரைக் கூப்பிட்டு சாமான்களை எடுத்து ஆர்க்கோணம் போகிற வண்டியிலேற்றிவிடு நீ கேட்கிற கூலி கொடுத்துவிடுகிறேன் என்றேன். அதற்கு அவன் வழக்கமாய் 4 அணா கொடுக்கிறது 3 அணா கொடுங்களென்றான். மேலும் இப்பொழுது வண்டியில்லை, நாளைக் காலை $6\frac{1}{2}$ மணிக்கு ஆர்க்கோணம் போகிறது இங்கே ஜனங்களோடு படுத்திருங்கள், காலையில் வந்து வண்டி ஏற்றிவிட்டு பணம் வாங்கிக்கொள்ளுகிறேன் என்றான். இப்பொழுதும் இங்கு இரண்டு கஷ்டம் வந்துநேர்ந்தது. அதாவது இரவுபகலாய் $1\frac{1}{2}$ நாள் பக்ஷணத்தைத்தவிர போஜனம் கிடையாது. இன்று இரவிலும் சாப்பிடாவிட்டால் அடுத்தநாள் காலை ஆர்க்கோணம் $9\frac{1}{2}$ மணிக்குப் போய்ச்சேரும். அதிலிருந்து நானிருக்கும் கிராமத்துக்கு 12 மைல் தூரம் நடக்கமுடியாது. ஆகையால் அவசியம் சாப்பிடவேண்டியது. ஸ்டேஷனில் நல்ல போஜனம் கிடையாது. ஊருக்குள் போய்த்தான் சாப்பிட்டுவிட்டு வரவேண்டுமென்றார்கள்.

சாப்பிட்டுவிட்டு வரும்வரை சாமான்களைப் பார்த்துக்கொள்ள போர்ட்டரைக் கேட்டேன். நான் சாப்பாட்டுக்கு வீட்டுக்குப் போகவேண்டும். காலையில் போகிறவர்கள் பார்த்து உங்கள் சாமான்களை ஒப்புவிக்கிறேன் நீங்கள் போய் சாப்பிட்டு வாருங்களென்றான். நான் சற்று திகைத்து நின்றேன். அப்பொழுது அவன் சந்தேகமில்லாமல் போய்வாருங்கள், பத்திரமாயிருக்குமென்றான். அப்படியே நான் போய் சாப்பிட்டுவிட்டுவர 10 மணியாயிற்று. அதுவரையும் அந்தப் போர்ட்டர் அவர்களையும் நம்பாமல் நான் வருகிறவரையும் இருந்து என் சாமான்களை என்னிடம் ஒப்புவித்துவிட்டு நான் காலையில் 5 மணிக்கு வந்து வண்டியிலேற்றிவிடுகிறேனென்று அனுப்பிக்கொண்டு போய்விட்டான். சுவாமி இங்கு செய்த பெரிய தயவை நினைத்து அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்திவிட்டு சாமான் பக்கத்தில் உட்கார்ந்து தூங்கியும் தூங்காமலுமிருந்து எப்பொழுது விடியுமென்று காத்திருந்தேன். காலையில் $5\frac{1}{2}$ மணிக்கு போர்ட்டர் வந்து டிக்கட் எடுத்து வண்டியில் கொண்டுபோய் ஏற்றினான். அவன் செய்த உதவிக்காக பேசின 3 அணாவுடன்கூட 1 அணா போட்டு 4 அணா கொடுத்தனுப்பினேன். இவ்விதமாய் செங்கற்பட்டில் நான் எதிர்பாராதவண்ணம் கர்த்தர் எனக்கு உதவி செய்து 9 மணிக்கு இறங்கும் ஸ்தலத்தில் பத்திரமாய்க் கொண்டுவந்து சேர்த்தார்.

இறங்கினவுடனே நான் என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்திரி அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே என்று ஸ்தோத்திரித்து சுகமாய் வீடுவந்து சேர்ந்தேன். கர்த்தர் நீதிமான்களின் வழியை அறிந்திருக்கிறார்.

J. D.

---

## On the Spiritual Life of the Evangelists

(தொடர்ச்சி)

Wednesday 21st Feb. 1917.

Tuckerammalpuram

இனி கர்த்தருடைய வேதத்தில் சொல்லப்பட்ட மற்றும் பரிசுத்தவான்கள் தேவ சமூகத்தை உணரும்படி முயற்சித்த சில விஷயங்களைக் கவனிப்போம்:—

1. சங். 16: 8. கர்த்தரை எப்போதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன். அவர் என் வலது பாரிசத்திலிருக்கிறபடியால் நான் அதிகமாய் அசைக்கப்படுவதில்லை என்கிறார். நாம் முன்னமே மூளை என்னப்பட்ட சித்தம் என்பவன் நம்முடைய சரீரத்தை ஆளும் அதிகாரியாக வைக்கப்பட்டிருக்கிறான் என்று பார்த்தோம். இப்போது அந்த மூளையே இரு



ருதயத்தின் கண்ணாயிருப்பதால், அந்த மூளை என்று சித்தம் என்பவனிலே இந்தப் பக்தன் கர்த்தரை எப்போதும் வைத்து இருத்தியிருந்தாராம். அதினாலே சித்தம் என்பவன் கர்த்தரால் ஆளப்பட்டு வந்தான். சித்தம் என்பவனை கர்த்தர் ஆட்கொண்டபடியினாலே, அவர் தாமே வந்து பக்தனுடைய வலது பாரிசத்தில் நிற்கிறார். என்ன ஆச்சரியம்! இங்கே பக்தன் கர்த்தருடைய பரிசுத்த லட்சணங்களையும் ஒன்றுசேர்த்து அமைத்து அவரைத் தன் மனசினால் போற்றி வச்சிருக்கிறான். அவன் புத்தி சிதறாமல், தெய்வத்தினிடத்திலும் அவருடைய பரிசுத்த லட்சணத்தினிடத்திலும் அவனுடைய புத்தி ஒருமைப்பட்டு நிற்க, அந்த புத்தி வழியாய் ஆண்டவர் பிரவேசித்து, அவனுடைய இருதயத்துக்குள் சென்று, அங்கே தங்குகிறார். இவ்விதமாக அவனுடைய புத்தியும் ஆவியும் ஒன்றாகூடி, தேவ தரிசனமடைகிறார்கள். தேவ சமூகத்தில் தங்கக்கூடிய நிலைமைக்கு மனிசன் ஆளாயிருக்கிறான். கிறிஸ்து ரட்சகர் விசுவாசத்தினாலே நம்முடைய இருதயங்களில் வாசமாயிருக்கிறார். இந்த அப்பியாசம் முதலாவது சில நாட்களுக்கு பாரமாய்த் தோன்றினாலும், வரவர இந்த தேவ சமூக அப்பியாசம் இன்ப அப்பியாசமாகிவிடுவதால், அவர் தாமே நமது வலது பாரிசத்தில் வந்து இருக்கிறதை அறியலாம். இவ்விதமாக தேவ சமூக அப்பியாசம் மெய்யாகவே அநுபவ சித்திக்கு வரக்கூடிய அப்பியாசமாகிவிடுகிறது. இந்த தேவ சமூக அப்பியாசத்தில் மனிதனுடைய மூன்று சத்துவங்களும் பங்கெடுக்கிறதைப் பார்க்கலாம். சங். 16: 9. ஆகையால் என் இருதயம் பூரித்தது, என் ஆத்துமா களிகூர்ந்தது, என் மாம்சமும் நம்பிக்கையோடே தங்கியிருக்கும். இந்த தேவ சமூக அப்பியாசம் ஜீவ மார்க்கமாக காண்கிறார். சங். 16: 11. அந்த தேவ சமூக அப்பியாசம் பரிபூரண ஆனந்தமும் நித்திய பேரின்பமும் நிறைந்த அநுபோகமாக உணருகிறார்.

2. சங். 18: 22. அவருடைய நியாயங்களை எல்லாம் எனக்கு முன்பாக நிறுத்தினேன். தேவ சமூகத்தை அப்பியாசித்த பக்தன் கையாடின இன்னொரு முறை, தேவனுடைய கற்பனைகளையெல்லாம் நிமிஷந்தோறும் தன்னை ஆண்டு நடத்தும் சித்தம் என்பவனிடத்தில் நிறுத்தினாராம். தேவப்பிரமாணம் நம்முடைய மூளையை ஆட்கொள்ள, அவருடைய திருமனசு நம்முடைய மனசாகி, நம்முடைய மனசின் மூலமாய் இருதயத்துக்குள் பரிசுத்த ஆவியினால் எழுதப்படுகிறது. எரே. 31: 33. இவ்விதமாய் நம்முடைய ஆவி தேவ ஆவியினாலும் தேவ வசனத்தினாலும் பலப்பட பலப்பட, உள்ளான மனுஷன் ஆவியின் ஒத்தாசையினால் நன்மையானவைகளை தைரியத்தோடே செய்யவும் தீமையானவைகளை தைரியத்தோடே எதிர்த்து மடங்கடிக்கவும் பலப்படுகிறான். கிறிஸ்துவின் வசனம் சம்பூரணமாய் நம்முடைய இருதயங்களில் வாசம்பண்ணுகிறது. அதாவது தேவனுடைய திருமனசும் அவருடைய பரிசுத்த லட்சணமும் நம்முடைய இருதயங்களில் தங்க தங்க, தேவ சமூகம் தானாய் வந்து நம் உள்ளத்தை நிரப்புகிறது.

தேவ வசனம் எழுதப்பட்ட இடத்திலும் அவருடைய திருமனசு தங்குமிடத்திலும், தேவ சமூகம் தங்குமேயொழிய, மற்றோர் இடத்தில் அது தங்கித் தரியாது எனக் காணலாம்.

3. சங். 26: 3. உம்முடைய கிருபை என் கண்களுக்கு முன்பாக இருக்கிறது. முதலாவது தெய்வத்தையும், அப்பால் அவருடைய பரிசுத்த லட்சணத்தையும், நியாயங்களையும் தமது சிந்தனைக்குமுன் நிறுத்தி, தேவ சமூகத்தை அப்பியாசித்தவர் இப்போது அவருடைய பரிசுத்த லட்சணங்களில் விசேஷித்த ஒன்றை தெரிந்துகொண்டு, அதை சிந்தனைசெய்கிறார். தேவனுடைய அன்பை விசேஷித்து தமது சித்தம் என்பவனில் நிறுத்துகிறார். சரீரப் பிரகாரமாய் பாராட்டப்பட்ட அன்பை அவர் சிந்திக்கையில், பூமி முழுவதும் உம்முடைய கிருபையினால் நிறைந்திருக்கிறது என்று காண்கிறார். பூமியில் மனித உபயோகத்துக்கென்று சிருஷ்டிக்கப்பட்ட ஒவ்வொன்றும் தேவனுடைய கிருபையை சங்கீதக்காரனுக்கு உணர்த்திற்று. மீட்பின் விஷயமாய், அவதரித்த அவதார புருஷன், கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய் நமக்குள்ளே வாசம் பண்ணக்கண்டார். பரி. யோவான் மீட்பின் விஷயமாய், பாவி பெற்றுக்கொண்ட நன்மைகளை சிந்தனை செய்யும்போது, பாவம் பெருகின இடத்தில் தேவகிருபை அதிகமாய் பெருகிற்று என்று பரி. பவுல் கண்டார். மீட்பின் செய்கைகளைப் பிரஸ்தாபிக்கும் விஷயமாய், அவர்கள் எல்லாரிலும் நான் அதிகமாய் கிருபை பெற்றவன் என்று அவரே திரும்பவும் உணர்ந்தார். இவ்வாறு அவருடைய பக்தர்கள் தேவகிருபையை தங்கள் இருதயக் கண்ணாகிய சித்தம் என்பவனில் வைத்து, அதைச் சிந்திக்க சிந்திக்க தேவ பிரசன்னமும் அவருடைய திவ்விய சமூகமும் தங்களை நிரப்பக்கண்டார்கள். தேவன் அன்பாகவேயிருக்கிறார். அவரின் அன்பின் பரிபூரணத்தையும் அன்பாக விளங்கிய தேவ குமாரனையும் சிந்திக்க சிந்திக்க தேவ சமூகம் கூடச் செல்லுவதைக் காணலாம்.

4. கர்த்தருடைய ஆலயத்தில் அவரைப் பார்க்க வாஞ்சித்த பக்தர் அவருடைய வல்லமையையும் மகிமையையும் அங்கு கண்டார்கள். சங். 63: 2.

கர்த்தருடைய ஆலயத்தில் பக்தர்கள் அவரைப் பார்க்க விரும்பி, அவரை ஆவியோடும் முழு இருதயத்தோடும் சேவிக்கும்போது, அவருடைய பக்தர்களின் ஆவி தேவ ஆவியோடு இசைந்து கூடி, இவ்விதமாய் இணைக்கப்பட்ட ஆவியோடு கர்த்தரைத் தொழுதுகொள்ளுகையில், எந்தப் பக்தன்தான் அவரைக் காணாமலும் சந்தியாமலுமிருக்கக்கூடும்? கர்த்தருடைய ஆலயத்தைப் பிதாவின் வீடாக நம்முடைய அருள்நாதர் பாவித்து, அப்படியே அவரைச் சந்திக்கும் இடமாக உபயோகித்து, நமக்கு முன்மாதிரி காட்டியிருக்க, நாம் அப்படிப்பட்ட இடத்தை வாஞ்சிப்பதும் அவரைத் தரிசிக்க நாடுவதும் எவ்வளவு அவசியம். நம்முடைய அருமை ஆண்டவருக்கு ஆலய ஆராதனை அவ்வளவு அவசியமாக இருந்து, அதைப் பிதாவின் வீடாக



கண்டால், நமக்கு எவ்வளவோ தூரம் அது பிதாவின் வீடாகவிருந்து, பிதாவைச் சந்திக்கிற இடமாக இருக்கவேண்டியது. ஆகையால் கர்த்தருடைய ஆலயம் தேவ சமூகம் காணப்படுகிற இடமாக நாமும் உணருவோமாக.

5. கலா. 3: 1. இயேசுகிறிஸ்து சிலுவையிலறையப்பட்டவராக உங்கள் கண்களுக்குமுன் பிரத்தியட்சமாய்க் காட்டப்படவில்லையா? பரி. பவுல் அப்போஸ்தலன் தமது சபைகளுக்கு இயேசுகிறிஸ்துவை, சிலுவையிலறையப்பட்ட அவரையேயன்றி வேறொன்றையும் தமது சபைக்கு அறிவியாதிருக்க தீர்மானித்திருந்தார். அவர் தாமும் சிலுவையிலறையப்பட்ட இயேசுவையே ஓயாமல் தமது கண்களுக்குமுன் நிறுத்திவந்தார். இயேசுநாட்சகர் சிலுவையை நோக்கின பொழுதெல்லாம் அந்த சிலுவை அவருடைய பக்தர்களின் பாவத்தின் கல்லறையாகவும், உயிர்த்தெழுந்த இயேசு பாவத்தின்மேல் ஜெயமடைந்து, தேவ சமூகத்தில் என்றும் வாழ வந்து புதிய ஜீவனோடு எழுந்திருந்தவண்ணம் தம்மை நம்பும் பக்தர்களும் அவருக்குள் உயிர்த்தெழுந்து தேவ சமூகத்தில் வாழ அவர்களையும் உயிரோடே எழுப்பிக்கொண்டு வந்திருக்கிறதை உணர்ந்தார். அங்கே சிலுவையிலறையப்பட்ட இயேசுவைப்பற்றிய தியானம் தேவ சமூகத்தில் நிற்கும் தியானமாகக் கண்டார். அவரைத் தியானிக்க தியானிக்க தேவ சமூகம் அவரை சூழவருவதைக் கண்டார். சிலுவையிலறையப்பட்ட இயேசுவை தியானிக்க பாவ அழிவைச் சமூலமாய்க் கண்டார். பாவம் அழிய அழிய பரிசுத்தம் பெருக பெருக, தேவ சமூகம் நிரம்ப நிரம்பக்கண்டார். இவ்விதமாய் பக்தர்கள் 'தேவனை தங்கள் சிந்தனைக்கு முன்பாக நிறுத்தியும், அவருடைய பிரமாணங்களை அவர்களுடைய இருதயக் கண்ணாகிய சித்தம் என்பவனுக்கு முன்பாக நிறுத்தியும், அவருடைய கிருபையை தங்கள் மூளை என்னப்பட்ட ஆத்துமாவில் நிறுத்தியும், அவருடைய ஆலயத்தில் ஆவியாயிருக்கிற ஆண்டவரை ஆவியோடும் உண்மையோடும் ஜெபித்தும், கடைசியாக சிலுவையிலறையப்பட்ட இயேசுவை தேவ சமூகம் நிற்கிற இடமாக சிந்தித்தும், தேவ சமூக அப்பியாசத்தில் பயிற்சித்து முற்றுப் பெற்று, தேவ சமூகத்தின் இன்ப அநுபோகத்தை அடைந்தார்கள். அவ்வாறே நாமும் அந்த திவ்விய சமூகத்தில் ஜீவித்து அவருடைய சாயலாக மறுரூபமாகக்கடவோம். அதற்கு வேண்டிய கிருபையை தேவன் தாமே நமக்கருளுவாராக.

## 119-ம் சங்கீதம்

### 3. கிமெல் செக்ஷன். வா. 17—24.

**பேர்.** தூய ஆத்துமாவின் வாஞ்சை.

**பொழிப்புரை.**

வா. 17. உமது வசனத்தை நீடியகாலம் கைக்கொள்ளத்தக்கதாக, நீடிய ஜீவனுக்காக வாஞ்சிக்கிறேன்.

வா. 18. உமது வேத மகத்துவங்களைப் பார்க்க என் இருதயக் கண்கள் திறக்கப்பட வாஞ்சிக்கிறேன்.

வா. 19. நான் பரதேசியானதால் உமது வசனப நான் நடக்கவேண் வேண்டிய வழியை எனக்கு தெளிவுபடுத்த வாஞ்சிக்கிறேன்.

வா. 20. உமது நியாயங்களை எனக்கு தெளிவுபடுத்த மிகவும் ஊக்கமாய் வாஞ்சிக்கிறேன்.

வா. 21. உமது கற்பனைகளைவிட்டு வழி விலகினவர்களை நீர் கடிந்துகொள்ள வாஞ்சிக்கிறேன்.

வா. 22. அப்படிப்பட்டவர்கள் என்னை நிந்திக்கும் நிந்தையை நீக்கிவிட வாஞ்சிக்கிறேன்.

வா. 23. பிரபுக்கள் எனக்கு விரோதமாகினும் உமது வசனத்தைத் தியானிப்பதே என் வாஞ்சை.

வா. 24. மனிதர்களால் அவமதிக்கப்படினும் உமது வசனம் எனக்கு இன்பமும் ஆலோசனைக்காரருமாயிருக்க வாஞ்சிக்கிறேன்.

**பொருட்குறிப்பு.**

I. சுககாலம் உண்டான வாஞ்சை. வா. 17—20.

(1) ஜீவியத்தின் நோக்கத்தைப்பற்றிய வாஞ்சை. நீடித்த காலம் உமது கற்பனைகளைக் கைக்கொள்ள. வா. 17.

(2) வேத மகத்துவத்தைப்பற்றிய வாஞ்சை. வா. 18. வேத மகத்துவத்தை அறிய, இருதயத்தின் கண்கள் திறக்கப்பட.

(3) கற்பனைகள் தெளிவுபடுத்தப்பட வாஞ்சை. வா. 19.

காரணம்: பூமியிலே நான் பரதேசி.

நோக்கம்: நடக்கவேண்டிய வழியை அறிய.

வாஞ்சை: கற்பனைகள் தெளிவுபடுத்தப்பட; உமது கற்பனைகளை எனக்கு மறையாதேயும்.

(4) அது விஷயமாய் உண்டான தொய்வு. வா. 20. கற்பனைகள் தெளிவுபடுத்தப்படவேண்டுமென்ற வாஞ்சை அதிகரித்ததே தொய்வுக்குக் காரணம்.



II. துன்பகாலம் உண்டான வாஞ்சை. வா. 21—24.

1. துன்பம்: (*a*) அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளுவதினால், மற்றவர்கள் அவமானத் தூஷிக்கும் தூஷணமும் நிந்தையும். வா. 22.

(*b*) பிரபுக்களும் உட்கார்ந்து எனக்கு விரோதமாய் பேசிக்கொள்ளுகிறார்கள். வா. 23.

2. தைரியம்: அவருடைய பிள்ளைகளைத் துன்பப்படுத்தும் அகங்காரிகளை ஆண்டவர் கடிந்துகொள்ளுகிறார் என்பது மாறாத சத்தியம். வா. 21.

3. வாஞ்சை: (*a*) நிந்தையை என்னைவிட்டகற்றும். வா. 22.

(*b*) துன்பத்தில் இன்பமும் ஆலோசனையும். வா. 24. உம்முடைய சாட்சிகளே அவ்விதமாயிருக்க வாஞ்சிக்கிறேன்.

4. வேலை. (*a*) நான் உம்முடைய சாட்சிகளைக் கைக்கொள்ளுகிறேன். வா. 22.

(*b*) நானோ உமது பிரமாணங்களைத் தியானிக்கிறேன்.

**ஜெபம்.** எங்கள் அன்புள்ள பரம பிதாவே, சங்கீதக்காரன் உள்ளத்தில் உண்டான தூய வாஞ்சை எப்பொழுதும் எங்கள் உள்ளத்திலும் உண்டாகிக்கொண்டிருக்க கிருபைதாரும். உமது வசனத்தைக் கைக்கொள்ளவும் உமது வேத மகத்துவத்தை அறியவும் உமது வசனங்கள் எங்களுக்கு தெளிவுபடுத்தப்படவேண்டுமென்கிற வாஞ்சை சுககால முழுவதும் எங்களை மேலிட்டுக்கொண்டிருக்கவும் கிருபைதாரும். எங்கள் துன்பகாலத்திலும் உமது வசனத்தை எங்களுக்கு இன்பமாக்கி, அதை எங்களுக்கு ஆலோசனைக்காரருமாக்கி, உமது மாறாத சத்தியத்தில் தைரியங்கொண்டிருந்து, கற்பனையைத் தியானித்து அதைக் கைக்கொள்ளுவதே எங்கள் வாஞ்சையாக்கியருளும். இயேசுவினிமித்தமே. ஆமென்.

D. J. HARRIS.

## பிரசங்கிகளுக்கேற்ற திருஷ்டாந்தங்கள் (தொடர்ச்சி)

5. **அனுதாபம்.** நப்போலியன் சக்கரவர்த்தி சென்ற் ஹெலனா என்னும் தீவில் கைதியாயிருக்கும்போது ஓர்நாள் அவரும் அவர் தோழரும் வழிநடந்து போகையில் ஓர் கிழவி விறகுக்கட்டு ஒன்றைத் தலைமேல் வைத்து அந்தப் பாரத்தால் மிகவும் வருந்தி கூனிக்கொண்டு போனாள். சக்கரவர்த்தி வரும் வழியில் அவள் விலகாமல்போனதைக் கூடவந்தவர்களில் ஒருவன் கண்டு அவளை விசனித்து வழி விலகச்சொன்னான். சக்கர

வர்த்தி விசனமடைந்து, 'சிநேகிதனே, அந்தப் பாரமான சுமையைக் கவனித்து அதற்காகவாவது இரங்கு' என்றாராம்.

6. **தேவனுடைய ஐசுவரியத்தை அசட்டைபண்ணுதே.** பிரபல்யமான பத்திரிகையொன்றில் பிரசுரித்திருந்த விளம்பரமாவது: ஜனங்களுக்குப் பொதுவான ஓரிடத்தில் 500 பவுண் புதைத்து அல்லது மறைத்து வைத்திருக்கிறதாகச் சொல்லி அதைக் கண்டுபிடிக்கும் முறையை விவரிக்கும்படி ஓர் கதையை எழுதிப் பிரசுரித்திருந்தது. அப்பத்திரிகையை வாசித்தவர்களில் லட்சக்கணக்கான பேர் அக்கதையை வாசித்து அப்பொக்கிஷத்தைக் கண்டுபிடிக்குமாறு வேண்டும் பிரயத்தனம் செய்தார்கள். எப்படியிருந்தாலும் உலகப்பிரகாரமான இப்பொக்கிஷத்தைத் தேடுகிறவர்களில் ஒருவன் மாத்திரம் அதைச் சுதந்தரிக்கக்கூடும். மற்றவர்கள் யாவரும் தவறிப்போவார்கள். ஆனால் தேவன் அருளும் ஆவிக்குரிய பொக்கிஷமோ தேடுகிற யாவருக்கும் கிடைக்கத்தக்கது. அதைக் கண்டுபிடிக்கும் முறை அவருடைய பரிசுத்த வசனத்தில் விவரித்திருக்கிறது. என்றாலும் லட்சக்கணக்கான பேர் அதைத் தேட முயலுகிறதில்லை.

7. **தப்பிதமாய் அருத்தப்படுத்தாதே.** இங்கிலாந்து தேசத்தில் வேலை முடிவான ஓர் ரெயில்வே பாலத்தையைத் திறக்கும் நாளில் ஓர் பிரபு பீடம் வகித்து உபந்நியாசித்தார். அவர் உபந்நியாசித்துக்கொண்டிருக்கும்போது வந்திருந்த பெரியோரில் பலர் தங்கள் கைக்கடியாரங்களை ஒரே நேரத்தில் எடுத்துப்பார்க்கிறதைப் பிரபுவானவர் கவனித்துத் தமது உபந்நியாசம் நீண்டுபோயிற்றென்று எண்ணிக் கடியாரத்தைப் பார்க்கிறார்களென்று யோசித்துக்கொண்டு மனதில் விசனங்கொண்டார். ஆனால் காரியத்தை விசாரித்துப்பார்க்கவே அவர்கள் தங்கள் கடியாரம் மதியம் ஒரு மணிக்குப் போடப்படும் பீரங்கிக் குண்டுக்குச் சரியாயிருக்கிறதாவென்றுதான் பார்த்தார்களென்று அறிந்து பிரபுவானவர் மிகவும் சந்தோஷப்பட்டார்.

8. **ஊழியம் வீட்டிலே ஆரம்பிக்கவேண்டும்.** தீர்க்கதரிசியொருவன் தான் தேவனுக்குப் பூரணமாய் ஊழியஞ்செய்யக் கருதி இதை நிறைவேற்றும் முறை சீனாய் மலைக்குப்போனால் தனக்குத் தெரியவரும். தேவனே தனக்குத் தரிசனமாகி தேவசத்தம் உண்டாகிப் பரிசுத்த ஜீவியத்தின் ரகசியங்களெல்லாம் தனக்கு வெளிப்படுத்தப்படும் என்றெண்ணிப் புறப்பட்டுப்போனான். வெகு பிரயாசத்தோடு சீனாய் மலைக்குப் போய் தனக்குத் தேவதரிசனம் கிடைக்குமென்று ஆவலோடு வெகுநாள் காத்துக்கொண்டிருந்தான். யாதொரு விசேஷமும் காணப்படவில்லை. ஒருநாள் அவன் மலையண்டை போனபோது அலங்காரமான பாசியும் பூக்களும் ஓரிடத்திலிருக்கிறதைக் கண்டு அவைகள் தன் வீட்டில் தன் அருமைக் குழந்தை பிரியமாய் வளர்த்து தனக்கு அடிக்கடி இனமளிக்கும் அந்த வகையான பூக்கள் என்றறிந்து மலையில்மட்டுமல்ல தன் சொந்த வீட்டி



லும்கூடத் தேவன் இவ்விதமாக இயற்கைச் சிருஷ்டிகளை உண்டாக்கி அவைகளைக்கொண்டு தமது பிள்ளைகளைப் போதிக்கிறார் என்று எண்ணித் தன் வீட்டுக்குத் திரும்பிப்போய் தன் ஜீவியத்தை மிகுந்த ஆசீர்வாதமானதாகப் பின்னிட்டான்.

---

## நம்மைச் சுத்திகரித்துக்கொள்வோமாக

### 2 கொரி. 7: 1. (தொடர்ச்சி)

(7) நமது ஜீவியத்தின் சகல அசுசிகளையும் விட்டு நம்மைச் சுத்திகரித்துக்கொள்ளவேண்டும். நம்முடையபேரில் சாராமல், நமது சொந்த பிரயாசத்தை நம்பாமல், நமது சொந்த மகிமையைத் தேடாமல், நமது சுயசித்தத்தின்படி நடவாமல், நாம மறக்கப்பட்டாலும் எண்ணப்படாமற்போனாலும் அதையெல்லாம் பாராட்டாமல் எல்லாக் காரியத்திலும் எஜமானையே பிரியப்படுத்தி அவரையே நமது ஜீவியத்துக்கு அதிபதியும் ராஜாவுமாக்கி பிறருடைய பக்திவிருத்திக்கேதுவாக நடப்போமாக. வீண் பெருமை, பொருளாசை, பேராசை, சிற்றின்பம், இவ்வுலகத்தின் சகல ஆடம்பரங்களுக்கும் பூராவாய் மரிப்போமாக. தன்னில் கெடுதியில்லாதவைகளும் குற்றமற்றவைகளுமாயிருந்தும் நம்மில் உள்ளான பற்று உண்டாக்கக்கூடியதெதுவோ அவைகளைத் தள்ளிவிடவேண்டும்.

III. **பரிசுத்தமாகுதலை பூரணப்படுத்துவோமாக.** பரிசுத்தம் தேவ லக்ஷணம். பரிசுத்தத்தை நாம் அடையவேண்டுமானால் தேவனையே அவருடைய பரிபூரண தன்மையில் நமக்குள் வாசஞ்செய்கிறவராக்கவேண்டும். வெளிச்சத்தின் கதிர் முழுவதும் ஓர் அறையைப் பிரகாசிக்கச்செய்ய வேண்டுமானால் அவ்வறையின் கதவுகள் ஜன்னல்களெல்லாம் சூரியனுக்கெதிரே திறந்திருக்கவேண்டும். அவ்விதமாகவே, தேவனுடைய பரிசுத்தம் நமக்கு வேண்டுமானால் அவருடைய பரிபூரணம் முழுவதும் நம்மை நிரப்பத்தக்கதாக நாம் அவருக்கு நேராக, அவரையே நோக்கி அவரையே முற்றிலும் சார்ந்து ஜீவிக்கவேண்டும். பரிசுத்தம் நம் சுயபிரயாசத்தால் நாம் அடைந்துகொள்ளும் ஓர் நிலைமையல்ல. தேவகிருபையால் நமக்குக் கிடைக்கும் விசுவாச ஜீவிய அளவு.

ஆகையால் பாவத்திலிருந்து விடுதலையாகவும் தேவனுடைய பரிசுத்தாவியினால் நிரப்பப்படவும் நம்மை மனப்பூர்வமாய் ஒப்புக்கொடுப்போம். அவர் தாமே நம்மில் வந்து வாசம்பண்ண இடங்கொடுப்போமாக. அவர் நமது பிதாவாயிருக்கச் சம்மதித்த அவருடைய மட்டற்ற கிருபைக்காக நாம் அவரைத் துதித்து நாம் என்றும் அவருடைய ஜனமாயிருக்கும்படி நமது ஜீவியத்துக்கு அவரையே ஆண்டவரும் ராஜாவுமாக்குவோமாக.

ஆனால் அப்போஸ்தலன் 'தேவபயத்தோடே' என்று சொல்லும்போது தண்டனைக்குப் பயப்படுகிற அடிமையின் பயத்தோடல்ல தன் பிதாவுக்கு

1150



மனவருத்தமுண்டாக்க மனமற்ற அன்பான பிள்ளைக்குரிய பயமும் தன் கணவனுக்குக் கோபமுண்டாக்கி குடும்ப சமாதானத்தைக் கெடுக்க மனமற்ற நேச மனைவிக்குரிய பயமும் நமக்கிருப்பதாக.

## சந்தா வரவு

| | Rs. | A. | P. | | Rs. | A. | P. |
|---|---|---|---|---|---|---|---|
| Rev. G. P. George, Kodai | 0 | 8 | 0 | Mr. John David | 1 | 0 | 0 |
| „ S. Samuel Pakiam | 0 | 7 | 0 | „ Matthew Antony | 0 | 7 | 0 |
| „ P. John, Nazareth | 0 | 7 | 0 | „ G. Simeon | 0 | 7 | 0 |
| Mr. S. Gnanamuthu | 1 | 2 | 0 | Rev. A. Daniel Gnanadikam | 0 | 7 | 0 |
| Miss H. Lazenghurst | 1 | 0 | 0 | Miss S. Loomis | 0 | 8 | 0 |
| Mr. M. David | 1 | 13 | 0 | Mr. S. Joseph | 0 | 7 | 0 |
| „ P. Devasagayam | 0 | 4 | 0 | „ D. Devadason | 0 | 7 | 0 |
| „ G. Sundaram | 0 | 7 | 0 | Rev. A. Young | 7 | 2 | 0 |
| „ C. V. Chariaku | 0 | 8 | 0 | Mr. Jonathan David | 0 | 11 | 0 |
| „ John D. Pakianathen | 0 | 7 | 0 | „ R. A. Peter Pillai | 0 | 4 | 0 |
| Rev. Christina David | 0 | 12 | 0 | „ T. R. Jothinayagam | 0 | 7 | 0 |
| Mr. B. M. Kadaksham | 0 | 6 | 0 | Mrs. E. S. Nalliah Pillai | 0 | 8 | 0 |
| „ S. Cyprian | 0 | 5 | 0 | „ Annal John | 0 | 4 | 0 |
| Miss F. Warbey | 5 | [illegible] | 0 | Mr. Samuel Maduram | 0 | 4 | 9 |
| Mr. Gopalakrishnan | 0 | 8 | 0 | „ G. Devadason | 0 | 4 | 0 |
| „ M. Manuel | 0 | 8 | | „ John Noah | 0 | 7 | 0 |
| Rev. V. James | 2 | 6 | 0 | „ David Koilpillai | 0 | 14 | 0 |
| Mr. J. T. Paul | 0 | 7 | 0 | „ J. Gibb | 1 | 0 | 0 |
| „ A. M. Doss | 0 | 7 | 0 | „ D. Solomon | 0 | 14 | 0 |
| „ I. C. Pabicodan | 0 | 8 | 0 | „ S. Gnanamuthu | 1 | 2 | 0 |
| Mr. S. Ephraim | 0 | [illegible] | 0 | „ M. P. Sivaraman | 0 | 14 | 0 |
| Mrs. E. Devasigamoni | 0 | 3 | 0 | „ C. M. Gell | 0 | 14 | 0 |
| Mr. G. Y. Tucker | 0 | 14 | 0 | Miss A. Lazenguest | 0 | 6 | 0 |

## நோட்டீஸ்.

1917-ம் வருஷத்துக்குரிய சந்தாக் கொடாத நண்பர்கள் உடனே யனுப்புவிக்கும்படி கேட்கிறேன். யுத்தக் கஷ்டத்தால் காகிதக் கிரயம் ஜாஸ்திப்பட்டுவிட்டபடியால் பத்திரிகையில் 4 பக்கம் குறைத்திருக்கிறது. மன்னித்துக்கொள்ளவும்.

Printed at the Palamcottah Printing Press, Palamcottah and published by the Christian Brotherhood Association, Tinnevelly.

September 1917. Registered No. M. 163

# The Water of Life
# ஜீவத்தண்ணீர்

“என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்.” யோவான் 7: 38.

OF THE REGISTRAR OF ... 24 SEP 1917 ... MADRAS

Vol. XVIII செப்டெம்பர் 1917

## ‘என் தாசனாகிய தாவீது’

பக்தனாகிய தாவீதின் சரித்திரம் எவ்வளவு அருமையானது! முழுச் சரித்திரத்தையும் தியானிக்கப்போனால் மிகவும் விசாலமாயிருக்கும். நம்மைப்போல அவனும் பெலவீன மனுஷனாயிருந்தபடியால் அக்கிரமங்களுக்கும் பாவங்களுக்கும் அவனுடைய ஜீவியம் தப்பினதல்ல. ஆகிலும் தேவன் அவனைத் தன் தாசன் என்று அழைக்கத்தக்கதாக அவனுடைய உள்ளத்தில் உண்மையிருந்தது. ஒரு பாவமும் செய்யாத மனுஷனே பரிசுத்தவான் என்பது வேதபோதனையல்ல. பெரும்பாவியாயிருந்தும் தன் அக்கிரமத்தை மறைக்காமல் கர்த்தருக்கு அறிக்கையிட்டு அவரால் சுத்திகரிக்கப்பட்டவனே பரிசுத்தன். வெளிவேஷமும் மாயமும் கபடும் நிறைந்த மனுஷனை தேவன் மிகவும் அருவருக்கிறார். சிலர் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்படுவதற்கும் மற்றவர்கள் அவரால் புறக்கணிக்கப்படுவதற்கும் காரணம் இதுதான், உள்ளத்தில் உண்மையிருக்கவேண்டும். மாயம் நாகம்.

தாவீதின் சரித்திரம் அவனுடைய நற்குணங்களும், அவனுடைய பாவங்களும், அவனிடத்தில் விளங்கின தேவகிருபைகளும் காணப்படும். அவன் ராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்டதையும் அவனில் விளங்கின நற்குணங்களையுமே இப்பொழுது கவனிப்போம்.

1. முதலாவது அவனுடைய தகப்பனாகிய ஈசாவைப்பற்றிச் சில காரியங்களைப் பார்ப்போம். இவன் முக்கியமான கோத்திரவரிசையைச் சேர்ந்தவன். யாக்கோபிலிருந்து எண்ணினால் பத்தாவது தலைமுறையில் இவனுடைய பேர் வருகிறது. இவனுடைய தகப்பன் ஓபேத். ஓபேத்தின் தகப்பன் ரூத்தின் புருஷனான போவாஸ். ஆகவே போவாஸ் இவனுக்குப் பாட்டன், தாவீதுக்குப் பூட்டன். இவனுடைய குடும்பத்தின் முன்

18-9-17

சரித்திரம் விசேஷம்தான். ஆகிலும் இவனுடைய குடும்பத்தின் பின் சரித்திரமோ எல்லாவற்றிலும் விசேஷித்தது. இஸ்ரவேலனைத்துக்கும் ராஜாவாகப் போகிறவன் இவனுடைய கடைசி மகன் உலக ரட்சகராகிய இயேசு தாவீதின் மகன் என்று அழைக்கப்பட்டார். தாவீதரசனின் மற்ற வர்த்தமானங்கள் மகத்துவ செயல்களின் மூலமாக ஈசாயின் குடும்பத்துக்கு உண்டான மேன்மை கொஞ்சமல்ல. ஈசாயைப்பற்றி நமக்கு அதிகம் சொல்லப்படவில்லை. அவனை நாம் சந்திக்கும்போது விருத்தாப்பியனாகக் காண்கிறோம். சிறு வயது, வாலிபத்தின் சரித்திரம் நமக்குத் தெரியாது. நாட்டு மனுஷனைப்போல சாதாரணமான ஒரு மனுஷனாயிருந்திருக்கலாம். தாவீதின் தாயைப்பற்றியோ ஒன்றுமே நமக்குத் தெரியாது. தாவீதின் வரங்களையும் சாமர்த்தியத்தையும் கவனிக்கும்போது தகப்பனாகிய ஈசாயினிடமிருந்து அவைகள் வந்திருக்குமோ என்று சொல்ல இடமில்லை. சில கெட்டிக்காரபிள்ளைகளை நாம் பார்த்து, தகப்பன் எப்படிப்பட்டவன், அவன் சாமானியமானவனா? பின்னே பிள்ளையும் அப்படித்தானேயிருக்குமென்று சொல்வதுண்டு. ஈசாயைப்பற்றி அப்படிப் புகழ இடமில்லை. ஒருவேளை தனக்கு அப்படிப்பட்ட வரங்கள் இல்லாமற்போனாலும் மகனிடத்தில் விசேஷித்த வரங்களிருப்பதைக் கண்டு மகனை முன்னுக்குக் கொண்டுவரும்படி ஞானிகள் சாஸ்திரங்களிடம் கல்விகற்றுக்கொள்ள அனுப்பினானோ? அதுவுமில்லை. ஈசாய் தன் கடைசி மகனை எங்கே அனுப்பினான்? கிராமங்களிலே நாம் அடிக்கடி கேள்விப்படுகிறதில்லையா? ஐயா உங்கள் மூத்தமகன் சாமுவேல் என்ன செய்கிறான்? அவனா? அவன் எவ். எ வகுப்பில் வாசிக்கிறான். அடுத்தவன் தாவீது என்ன செய்கிறான்? அவன் உபாத்தியாயர் வேலை பார்க்கிறான். உங்களுக்கு ஒரு மகன் எஸ்தர் உண்டல்லவா அதெங்கே? அந்தப்பிள்ளை போர்டிங் பாடசாலையில் விட்டிருக்கிறேன். இன்னொரு சின்னப்பையன் இருந்தானே அவனெங்கே? அவன் இப்போ சற்று வளர்ந்திருக்கிறான், ஆனாலும் சுத்தமட்டி, படிப்பு கொஞ்சமாகிலும் ஏறவில்லை. நமது ஆடுமாடுகளை மேய்ச்சுக்கிட்டு வீட்டுமட்டுக்கு இருக்கிறான். இதைப்போல் அநேகம் நாம் கேட்டிருக்கிறோம். ஈசாயின் பெரிய மக்கள் சவுல் ராஜாவின் சேவகத்தில் அமர்ந்து உத்தியோகம் பார்க்கிறார்கள். இளைஞன் தாவீதையோ தகப்பன் ஆடுகளை மேய்க்கும்படி காட்டுக்கு அனுப்பிவிட்டான். தகப்பன் நினைத்ததொன்று; தேவன் நினைத்ததொன்று ஆடுகளின் பிறகே திரிந்த மனுஷனை ராஜாவாக்கினார். தேவனாலும் உயர்வு (promotion) எக்காலத்திலும் அதிசயமே. அவர் ஆட்களைத் தெரிந்துகொள்ளும்போது நமது கண்களுக்கு ஆச்சரியமாகவேயிருக்கும்

II. தாவீதின் ராஜா அபிஷேகம். சவுல் புறக்கணிக்கப்பட்டதின் பின் கர்த்தர் சாமுவேலைப் பார்த்து. நீ சவுலுக்காக என் துக்கித்துக் கொண்டிருக்கிறாய்? உன் கொம்பைத் தைலத்தால் நிரப்பு. பெத்லகேமியனாகிய ஈசாயினிடத்திற்குப் போ. அவன் குமாரரில் ஒருவனை நான்



ராஜாவாகத் தெரிந்துகொண்டேன் என்றார். அவன் இன்னானென்று சாமுவேலுக்கு கர்த்தர் சொல்லவில்லை. சவுல் இதைக் கேள்விப்பட்டால் தன்னைக்கொன்றுபோடுவானென்று சாமுவேல் பயப்படுகிறான். ஒரு காளையைத் தன் கையோடே கொண்டுபோய் அங்கே செலுத்தும்படியாகவும் ஈசாயின் குடும்பத்தைப் பலி விருந்துக்கு அழைக்கும்படியாகவும் கற்பித்து அனுப்பினார். அப்படியே விருந்துக்கு எல்லாரும் வந்தபோது சாமுவேல் ஈசாயின் மகன் எலியாபை அபிஷேகம் பண்ண எத்தனித்தான். கர்த்தர் சாமுவேலைத் தடுத்து. இவனுடைய முகத்தையும் சரீரவளர்ச்சியையும் பார்க்காதே; நான் இவனைப் புறக்கணித்தேன் என்றார். பின்பு அபினதாப் வந்தான், சம்மாவும் வந்தான். இப்படி ஈசாய் தன் குமாரரில் ஏழுபேரை சாமுவேலுக்கு முன்பாகக் கொண்டு வந்து நிறுத்தினான். இவர்களில் ஒருவனையும் கர்த்தர் தெரிந்துகொள்ளவில்லையென்று சாமுவேல் சொன்னான். மக்களிலொருவனாகிய தாவீதை ஈசாய் ஏன் நினைக்கப்போகிறான். நினைக்கப்படுவதற்கு தாவீது எம்மாத்திரம்? ஆடு மேய்ச்சிப் பையன் ராஜாவாகவும் கூடுமோ? அவ்வளவு நல்லெண்ணம் இருந்திருந்தால் ஏற்கனவே ஒரு ஆளை வேகமாகத் தாவீதினிடத்துக்கு அனுப்பி வரவழைத்திருக்கமாட்டானோ? சாமுவேல் திகைத்தவனாக ஈசாயைப்பார்த்து; உன் பிள்ளைகள் இவ்வளவுதானா என்று கேட்டான் அதற்கு ஈசாய் இன்னும் ஒரு கடைசி மகனிருக்கிறான் அவன் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருக்கிறான் என்றான். நீ அவனை உடனே அழைப்பி, இல்லாவிட்டால் நான் பந்தியிருக்கமாட்டேன் என்று சாமுவேல் சொன்னான். தாவீது வந்தபோது கர்த்தர்: இவன்தான், நீ எழுந்து இவனை அபிஷேகம் பண்ணு என்றார். சாமுவேல் அவனை அபிஷேகம் பண்ணினபோது கர்த்தருடைய ஆவியானவர் தாவீதின் மேல் வந்து தங்கினார். அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்ளுகிற அநேக எலியாப், அபினதாப், சம்மாக்களுண்டு. ஆகிலும் கர்த்தரால் தெரிந்து கொள்ளப்படுகிற தாவீதுகளாலேயே சபைகள் செழித்தோங்கும்.

தேசத்தில் எத்தனையோ பேர் இருக்கலாமே. கர்த்தர் தாவீதைத் தெரிந்துகொள்ளவேண்டிய தென்னவென்று கேட்கலாம், அதற்குக் காரணமிருக்கிறது. தாவீதின் இளமைப்பக்தி மறக்கப்படக் கூடியதல்ல. தியான ஜீவியத்தில் மிகச்சிறந்தவன். வனாந்தரத்தில் ஆடுகளை மேய்க்கிற போது அவனுக்கிருந்த சந்தோஷம் இவ்வளவென்று சொல்ல முடியாது. ஒரு கவணும் ஒரு தடியும், ஒரு வாத்தியக்கருவியும், தன் முன் மேய்கிற ஆடுகளுமே அவனுடைய ஐசுவரியம். எவ்வளவு ஒருவனுக்கிருந்தாலும் தேவபக்தியில்லையென்றால் அவனுக்கு ஒன்றும் திருப்தியாயிருக்கமாட்டாது. தேவனோடு சஞ்சரித்த தாவீது சகலத்திலும் விருத்தியடைந்தான் மூற்பிதாக்களை தியானத்தின் மூலமாகத் தன் கண்முன் நிறுத்துகிறான். ஈசாக்கைப் பார்க்கிறான், பேர்போன மேய்ப்பனாகிய யாக்கோபைப் பார்க்

கிறான். யோசேப்பு, மோசே யோசுவா, எப்தா முதலானவர்களின் வீரதீரச் செயல்களும் பலத்த விசுவாசமும், அவர்களடைந்த ஜெயங்களும் அவனுடைய ஞாபகத்தில் வருகிறது இப்பேர்க்கொத்த தேவபக்தர்களின் தியானம் அவனுடைய ஜீவியத்தில் பெரிய எழுப்புதலையும் பெரியகாரியங்களை எதிர் பார்க்கிற வாஞ்சையையும் உண்டாக்குகிறது. தேவனுடைய ராஜ்யத்துக்காக நாம் பெரிய காரியங்களை யோசிக்கவும் செய்யவும் தேடுவோமானால் தேவபக்தர்களின் ஜீவிய சரித்திரங்களை படித்துத் தியானிக்க வேண்டும்.

தாவீது தேவதியானமுள்ளவனுமாயிருந்தான். ஆடுகளை மேயவிட்டதின் பின் தான் ஒரு சிறு குன்றின்மேல் உட்கார்ந்துகொண்டு எல்லாம் படைத்தவல்ல கடவுளின் காருண்யத்தையும் ஞானத்தையும் தியானிக்கிறான். 'எங்கள் ஆண்டவராகிய கர்த்தாவே, உமது நாமம் பூமியெங்கும் எவ்வளவு மேன்மையுள்ள தாயிருக்கிறது! உமது விரல்களின் கிரியையாகிய உம்முடைய வானங்களையும் நீர் ஸ்தாபித்த சந்திரனையும் நட்சத்திரங்களையும் நான் பார்க்கும்போது மனுஷனை நீர் நினைக்கிறதற்கும் நீர் அவனை விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம் என்கிறான். ஆடுகளுக்கு நான் மேய்ப்பனாயிருந்து அவைகளுக்காக எவ்வளவோ கவலைப்படுகிறேனே. மகா பெரிய கர்த்தரல்லவா என் மேய்ப்பர் என்று களிகூர்ந்து பாடுகிறான். ஆ, தாவீதின் சங்கீதங்கள் எவ்வளவு அருமையானவைகள்! எல்லாப் புஸ்தகங்களும் போய் விட்டாலும் எனக்குத் தாவீதன் சங்கீதங்களிருந்தால் போதும் என்று ஒரு பக்தன் சொன்னார். அவர்கள் யாவருக்கும் எந்தச் சமயத்திற்கும் ஏற்றதாயிருக்கின்றன. மற்ற மற்ற புஸ்தகங்கள் திருஷ்டாந்தமாக எபேசியர் நிருபம், வெளிப்படுத்தின விசேஷம் முதலானவை தங்களிலே அருமையான உபதேசங்களையுடையவைகள்தான். ஆகிலும் எந்தச் சமயத்திலும், எந்த நிலைமையிலுள்ளவர்களுககும், எப்பொழுதும் அவைகள் பொருந்தாதிருக்கலாம். சங்கீதங்களோ எதை எடுத்து வாசித்தாலும் உள்ளம் உருகுமல்லவா? அவைகளை நெஞ்சுருக்கி நூல் என்று தைரியமாகச் சொல்லலாமே. எத்தனையோ வருஷக்காலங்களாக, எத்தனையோ மனுஷருக்கு, எவ்வளவோ ஆசீர்வாதங்களையும் ஆறுதல்களையும் அருளிச்செய்த அருமை நிறைந்த அரிய பொக்கிஷமல்லவா?

என் தாசனாகிய தாவீது என்று தேவன் அருமையாய் அழைத்தது சும்மாதானோ? இதுநிற்க, அவருடைய சங்கீதவித்வத்தையும் நாம் கவனிக்கவேண்டுமே. அவன் கையிலிருக்கிறதென்ன? சுரமண்டலவாத்தியம். தற்காலத்தில் நாம் காண்கிற கின்னரம் பிடில் முதலான வாத்தியக் கருவிகள் எவ்வளவோ சிறப்பாய்ச் செய்யப்பட்டு அழகான நிறங்கள் பூசப்பட்டவைகளாயிருக்கின்றன. தாவீதின் சுரமண்டலம் எப்படிப்பட்டதோ தெரியாது. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்பதுபோல் ஆட்டுத் தாவீ



துடைய பாட்டுத்திறமை எங்கும் பிரசித்தமாகிவிட்டது. கர்த்தர் சவுலைப் புறக்கணித்த நாளிலிருந்து ஒரு பொல்லாத ஆவி அவனை அலைக்கழித்தது. எந்த வைத்தியனாலும் எந்த மருந்தாலும் அந்த ஆவி நீங்குவதற்கு வழியில்லை. இராஜாவின் மனுஷர் ஒரு ஆலோசனை சொன்னார்கள். சுரமண்டலம் வாசிப்பதில் தேறின ஒருவன் உமக்குமுன் வந்து தன்கையினால் அதை வாசித்தால் உம்மை அலைக்கழிக்கிற ஆவி உம்மைவிட்டு நீங்கும் என்றார்கள். நன்றாய் வாசிக்கத்தக்க ஒருவனைத் தேடி என்னிடத்தில் கொண்டுவாருங்கள் என்றான். அவன் ராஜனாக அநேக வாத்தியக்காரரைக் கேட்டிருக்கலாம். ஆகையால்தான் நன்றாய்த் தேறின வாசிப்புக்காரன் வேண்டுமென்றான். அப்படிப்பட்ட நிபுணன் எங்கே கிடைப்பான்? காட்டிலே ஆடுகளை மேய்க்கிற ஈசாயின் மகன் தாவீதே அந்த வித்துவான் சங்கீத நிபுணன்! சவுலிடத்தில் வந்து தன் வாத்தியத்தைக் கையிலெடுத்து வாசிக்கவே சவுலைப் பிடித்திருந்த பொல்லாத ஆவி நீங்கி அவன் ஆறுதலடைந்தான். பிசாசு வந்து சோதித்தால் பாட்டுபாடிப்பார் என்பது கனம் உலாக்கர் ஐயரவர்களின் பல்லவிகளில் ஒன்று. தகாத நினைவுகளும் பாவ எண்ணங்களும் உட்பிரவேசிக்கும்போது, நல்ல கீதங்களைப்பாடி சோதனைகளை மேற்கொண்டார்கள் அநேகர். நாமும் அப்படிச் செய்தால் நல்லது. மேலும் நமது தாலந்துகளை நாம் புதைத்துவைக்காமல், அது பாடும் வரமோ, பாட்டு உண்டாக்கும் வரமோ, வாத்தியங்கள் வாசிக்கும் வரமோ, இவைகளை நாம் விர்த்திபண்ணி நாளுக்குநாள் தேறுவோமானால தேவனுடைய ராஜ்யத்துக்கு நாம் எவ்வளவோ பிரயோஜனமாயிருக்கக்கூடும். ஆகவே அபிஷேகம்பண்ணும்படி தேவன் தெரிந்துகொண்ட இளைஞன் சிறந்த தேவ பக்தனும், சங்கீத வித்வானும், பராக்கிரமசாலியும், காரிய சமர்த்தனுமாயிருந்தானென்றும், கர்த்தர் அவனோடேகூடயிருந்தார் என்றும் அறிவோம்.

III. தாவீதின் நற்குணங்களில் சிலவற்றை முடிவாகப்பார்ப்போம். சாதாரணமான நிலைமை தேவபக்தர்களுக்குச் சந்தோஷமும் திருப்தியுமான நிலைமையே யென்பதற்கு ஐயமில்லை. அன்றன்றுள்ள வேலையைச் செய்தோம், ஆண்டவர் கொடுத்த சாப்பாட்டைச் சாப்பிட்டோம், பராபரனை ஸ்தோத்திரித்து அக்கடாவென்று படுத்தோம் என்பது தேவனுடைய பிள்ளைகளின் மகிழ்ச்சியான ஜீவியம். பதவி உயர்ந்ததோ அபாயம் வந்ததோவென்று மேலான நிலைமைக்குப் போகப்போக உபத்திரவங்களும் ஏற்படுவது இயல்பே. தாவீதும் சவுலும் சிலநாட்கள் நன்றாகத்தானிருந்தார்கள். சவுல் அனுப்புகிற இடமெங்கும் தாவீதுபோய் காரியங்களை சாமர்த்தியமாக நடத்தினதில் மகா ஞானவான் என்று பேரெடுத்தான். என்கிலும் பொறாமை யாரைத்தான் விட்டது? ஒருவனுக்குப் புகழ்ச்சி வந்தால் அடுத்தவனுக்குப் பொறாமை வருவது ஆச்சரியமா? தாவீது பெலிஸ்தனைக் கொன்று திரும்பிவந்தபின்பு இஸ்ரவேலின் ஸ்திரீகள் மகா சந்தோ

ஷத்தோடு கீதவாத்தியங்களை எடுத்து ஆடல் பாடல்களுடன் சவுலுக்கு எதிர்கொண்டு வந்தார்கள். அச்சமயத்தில் சவுல் கொன்றது ஆயிரம், தாவீது கொன்றது பதினாயிரம் என்று மாறி மாறிப்பாடினார்கள். சவுலைவிட்டுப் போன பேய் திரும்பவும் அவனுக்குள்ளே வந்துவிட்டது. தாவீதுக்கு பதினாயிரம் கொடுத்தார்கள் எனக்கோ ஆயிரமாத்திரம் கொடுத்தார்கள். இனி என்ன செய்கிறேன் பாரென்று அன்றுமுதல் சவுல் தாவீதின்பேரில் ஆங்காரமும் மூர்க்கமுமுள்ளவனாயிருந்தான். இரண்டுமுறை தாவீதைக் கொன்றுபோடும்படி தன் ஈட்டியை அவன்பேரில் எறிந்தான். ஆகிலும் தாவீது சகலத்தையும் பொறுமையாகச் சகித்துக்கொண்டு மகா புத்திமானாகவும் ஞானமுள்ளவனாகவும் நடந்துகொண்டான். தாவீதின் ஞானத்தைக் கவனித்து சவுல் அவனுக்குப் பயந்திருந்தான். ஸ்திரீகளுடைய பாடல்கள் தாவீதுக்கு எவ்வளவேனும் பிரியமில்லை. புத்தியில்லாத ஸ்திரீகள் தங்கள் புகழ்ச்சியான வார்த்தைகளினால் ஏழைத்தாவீதைத் துன்பத்திற்காளாக்கிவிட்டார்கள். எவ்வளவுக்கு நாம் உயர்த்தப்படுகிறோமோ, நமக்கு மாலைகளும், கௌரவப் பட்டங்களும் புகழ்ச்சியான வார்த்தைகளும் எவ்வளவுக்கு அதிகப்படுகிறதோ அவ்வளவுக்கதிகமாக நாம் நம்மைத் தாழ்த்தி மறைந்துபோகவேண்டியதே ஞானம். நமக்குப் புகழ்ச்சி பெருகும்போது நம்மைக் கெடுக்கும்படி சவுலின் மக்கள் காத்திருக்கிறார்கள் என்பதை நாம் மறந்துபோகக்கூடாது. ஒருவன் மேன்மையடையும்போது அவன் அதிக ஞானமாக நடந்துகொண்டால் மாத்திரம் தீங்குக்குத் தப்புவான்.

தாவீதில் விளங்கின ஞானமாத்திரமல்ல அவனுடைய தாழ்மையும் கவனிக்கப்படத்தக்கது. சவுல் தன் மூத்தகுமாரத்தியை தாவீதுக்கு மனைவியாகக்கொடுப்பேன் என்றான். ஆ, சவுல் தாவீதை எவ்வளவாகச் சொந்தம் பாராட்டி நேசித்தான் என்று நாம் நினைக்கலாம். தாவீது விவாகம் பண்ணி வாழவேண்டுமென்பது சவுலுடைய எண்ணமல்ல. தாவீதை மடியப்பண்ணவேண்டுமென்பதே சவுலுடைய உபாயம். மூத்தமகளைக் கொடுக்கவில்லை. மீகாளைக் கொடுப்பேன் என்றான். இந்த சமயத்திலும் தாவீது அழிந்துபோகும்படியான ஒரு நிபந்தனையை ஏற்படுத்தினான். நல்லது இதிருக்கட்டும். விவாகப்பேச்சு வந்தபோது தாவீது என்ன சொன்னான்? ராஜாவுக்கு மருமகனாவதற்கு நான் எம்மாத்திரம், என் ஜீவன் எம்மாத்திரம், இஸ்ரவேலிலே என் தகப்பன வம்சமும எம்மாத்திரம் என்றான். இதே தாழ்மையான வார்த்தைகளை மற்றவர்களிடத்திலும் சொன்னான். மனத்தாழ்மையுள்ள தாவீது கர்த்தரால் எவ்வளவு மேன்மையடைந்தான் பாருங்கள்.

அவனுடைய நீதி கவனிக்கப்படத்தக்கது. வேறேயாருமல்ல சவுலே தாவீதை நீதிமான் என்று அழைத்தான். தாவீது சவுலுக்கஞ்சி இப்போ வனாந்தர குகையில் தங்குகிறான். சவுல் தன் மனுஷரோடு அவனைத் தேடித்



திரிகிறான். தெரியாமல் தாவீதிருந்த இடத்துக்கே வந்து சேர்ந்தான். தாவீதின் மனுஷர்: நல்ல சமயம் ஒரே வெட்டாய் வெட்டி தலையைக் கொண்டு வாரும் என்றார்கள். தாவீது அப்படிச் செய்யாமல் சவுலின் சால்வையின் ஓரத்தை மாத்திரம் வெட்டிக்கொண்டுவந்து சவுலைப்பார்த்து: என் ஆண்டவனே, கர்த்தர் இன்று உம்மை என் கையில் ஒப்புக்கொடுத்திருந்தும் நான் உம்மைக் கொல்லாமல் தப்பவிட்டேன், உமது சால்வையை எடுத்துப்பாரும், அதின் தொங்கல் எங்கே? இதோ என் கையிலிருக்கிறது. என்னோடிருந்தவர்கள் உம்மைக் கொன்றுபோடும்படி எவ்வளவோ கேட்டும் நான் அப்படிச்செய்யாமல் உமது பிராணனைத் தப்பவிட்டேனே. நீர் கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்டவரல்லவா? நான் ஒரு தெள்ளுப்பூச்சி செத்த நாய்க்குச் சமானம். என்னை ராஜா பின் தொடருவது நியாயமாவென்றான் உடனே சவுல் சத்தமிட்டு அழுது: என் மகனே தாவீதே நீயே நீதிமான். உன் சத்துருவான என்னை நீ கொன்றுபோடாமல தப்பவிட்டாயே என்றான். இந்தத் தயாளகுணமும் சத்துருவுக்கு நன்மை செய்கிற சிந்தையும் தாவீதினிடத்தில் கடைசிவரையிலிருந்தது. மெய்யாகவே, தாவீது நீதிமானும் இரக்கமுள்ளவனுமாயிருந்தான்.

அவனுடைய விசாலமான இருதயத்தையும் கவனிக்கவேண்டும் அவன் வனாந்தரத்தில் பரதேசியாகத் தங்கினகாலத்தில் ஒடுக்கப்பட்டார்கள், கடன்பட்டார்கள், முறுமுறுக்கிறவர்கள், தள்ளப்பட்டவர்கள் இப்படி பற்பல மனுஷர் அவனிடத்தில் வந்தார்கள். எல்லாருக்கும் அவன் உள்ளத்தில் இடமிருந்தது. அப்போது மாத்திரமல்ல அவன் ஜீவகாலமுழுவதிலும் ஆண்களோ பெண்களோ உயர்ந்தவர்களோ தாழ்ந்தவர்களோ யார் யார் அவனிடத்தில் வந்தாலும் எல்லாருக்கும் அவன் இருதயம் விசாலமுள்ளதாயிருந்தது. யார் யார் அவனோடு சம்பந்தப்பட்டார்களோ அவர்கள் அவனுடைய உத்தம தயாள குணத்தையும் பெருந்தன்மையையும் வெளிப்படுத்தினார்கள். தாங்களும அவனால் மாற்றப்பட்டார்கள். தாவீதினிடத்திற்குப்போக, அவனோடு பேச, தங்கள் ரகசியங்களை அவனுக்குச்சொல்லி, அவனுடைய ஆலோசனையையும் சகாயத்தையும் பெற்றுக்கொள்ள எவரும் மலைத்து நின்றதில்லை. ஏனென்றால் அவன் உள்ளம விசாலமாயிருந்தது. சவுல் பிற்காலத்தில் கொரிந்தியரே எங்கள் வாய் உங்களோடே பேசத்திறந்திருக்கிறது, எங்கள் இருதயம் பூரித்திருக்கிறது, தேவனுக்கு முன்பாக வெளியரங்கமாயிருக்கிறோம், உங்கள் மனச்சாட்சிக்கும் வெளியரங்கமாயிருக்கிறோம் என்று சொன்னார். சிலரை எப்படிப்பட்டவர்களென்று அறியமுடியாது அவாகளிடத்தில் போகவும் தாராளமாகப் பேசவும் மற்றவர்கள் பயப்படுவார்கள். நான் பேசினால் என்னை அவர் என்ன நினைத்துக்கொள்ளுவாரோ? என் வார்த்தைகளை எப்படி அருத்தப்படுத்துவாரோ? எனக்கு என்ன தீங்கு நேரிடுமோவென்று சிலரைக் குறித்து மற்றவர்கள் பயப்படுவதுண்டு. இதற்குக் காரணமென்ன? சிலருடைய இருதயம் மகா ஒடுக்க

மானது. தாராளமாகப்பேசமாட்டார்கள். பட்சமோ கோபமோ எதையும் வெளிக்குக் காட்டமாட்டார்கள். அதிக அடக்கமாயிருப்பார்கள். இது மேலான குணம் என்று நினைத்துக்கொள்ளுவார்கள். ஆனால் இதைப் போல் கர்த்தருடைய ஊழியத்தில் ஒருவனை முற்றிலும் பிரயோஜனமற்றவனாக்கிப் போடுகிறது வேறொன்றுமில்லை. மற்றவர்கள் நம்மை நம்பக்கூடாவிட்டால் நாம் அவர்களுக்கு ஆசீர்வாதமாயிருப்பதெப்படி? தாவீதில் விளங்கின ஞானம், தாழ்மை, நீதி, விசாலமான இருதயம் நமக்கும் இருக்கும்படி தேவன் கிருபை செய்வாராக.

S. பரமானந்தம்

## ‘பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்கள’

ரோமர் 1: 2.

‘நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாகவேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல, பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார்’. 1 தெச. 4: 3, 7. தேவசித்தம், தேவ அழைப்பு ஆகிய இரண்டும் திருச்சபைக்கு மகா முக்கியமாய்க் காணப்படவேண்டும். தேவன் முதலாவது தமது குமாரன் மூலமாய் இரட்சிப்பைச் சம்பாதித்தார். பின்பு அந்த இரட்சிப்பைக்கூறி அறிவிக்கும்படி அவர் சுவிசேஷங்களை அனுப்பி, சபைகளைச் சேர்த்தார். அப்படிச் சேர்க்கப்பட்ட ஜனங்களைப் பார்த்து அவர், நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாகவேண்டுமென்பதே என் சித்தம், அதற்காகவே உங்களைத் தெரிந்துகொண்டேன் என்கிறார். பரிசுத்தமே திருச்சபையின் அலங்காரமாயிருக்கிறது. அசுத்தமுள்ள சபை கிறிஸ்து சபை என்று அழைக்கப்படப் பாத்திரமானதல்ல, இதைத் தேவ ஊழியர் உணருவது மகா அவசியம். தேவ சித்தத்தை நிறைவேற்றவே தேவ ஊழியர்கள் வைக்கப்பட்டிருக்கிறார்கள். சபையார் பரிசுத்தமுள்ளவர்களாகவேண்டுமென்பதே ஊழியர்களின் முக்கிய நோக்கமாயிருக்க வேண்டும். இந்த நோக்கத்தோடு ஊழியஞ்செய்துவரும் உத்தமர்களுக்கு உதவியாக இங்கே சில ஆலோசனைகள் சொல்லுகிறோம். சபையார் பரிசுத்தமுள்ளவர்களாகும்படி உத்தம ஊழியர்கள் செய்யக்கூடியதென்ன?

**1-வது பரிசுத்தத்தின் முக்கியத்தை ஆண்டவர் காட்டுகிறபடி சபையார் உணரும்படி செய்யவேண்டும்.** பரிசுத்த பவுல் இப்படிச் செய்தார். தாம் எழுதின ஒவ்வொரு நிருபத்தின் ஆரம்பத்திலும் இதைப் பற்றித் திட்டமாய் எழுதுகிறார். அவர் எழுதிய ஒவ்வொரு நிருபத்தின் முக்கிய நோக்கமும் இதுவே. அவர் எழுதிய முதல் நிருபமாகிய 1 தெசலோனிக்கேயரை இதற்கு உதாரணமாக எடுத்துக்கொள்ளுவோம். 3: 18ல் ‘இவ்விதமாக நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தமது பரிசுத்த



வான்கள் அனைவரோடுங்கூட வரும்போது நீங்கள் நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாகப் பிழையற்ற பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கும்படி உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துவாராக’ என்கிறார். 4-ம் அதிகாரத்தில கர்த்தராகிய இயேசுவினாலே நாங்கள் உங்களுக்குக் கொடுத்த கட்டளைகளை அறிந்திருக்கிறீர்களே. நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாகவேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது என்றும்; உங்களில் அவனவன் தன் தன் சரீர பாண்டத்தைப் பரிசுத்தமாயும் கனமாயும் ஆண்டுகொள்ளும்படி அறிந்திருங்கள் என்றும்; இப்படிப்பட்ட விஷயங்களெல்லாவற்றையுங் குறித்து கர்த்தர் நீதியைச் சரிக்கட்டுகிறவராயிருக்கிறார். தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல, பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார், ஆகையால், அசட்டைபண்ணுகிறவன் மனுஷரை அல்ல, தமது பரிசுத்த ஆவியை நமக்குத் தந்தருளின தேவனையே அசட்டைபண்ணுகிறான் என்றும் எழுதுகிறார். 5-23-ல் சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக, உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக, உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர், அவர் அப்படியே செய்வார் என்கிறார். சபையார் பரிசுத்தமுள்ளவர்களாகவேண்டுமென்ற ஆத்திரமுள்ள ஊழியர் இப்படியே செய்வார்கள். தேவனுடைய கட்டளையைப் பலமாய்க் கூறுவார்கள். தேவனுடைய சித்தத்தைத் தெளிவாய்த் தெரிவிப்பார்கள். தேவனுடைய அழைப்பை அடிக்கடி அறிவிப்பார்கள். சபையார் அதை அறியவேண்டியபடி அறிந்து, அதைப்பற்றி ஆத்திரப்படவேண்டியபடி ஆத்திரங்கொள்ளுமட்டும் அவர்கள் அமர்ந்திருக்கமாட்டார்கள், மற்றப்படி சபையின் பரிசுத்தக் குறைவுக்கு ஊழியர் உத்தரவாதிகளாவார்கள். சுவாமியுடைய நாளில் ஆத்துமாக்களின் இரத்தப்பழி அவர்கள்மேல் சுமத்தப்படும்.

**2-வது, பரிசுத்தமாக்கப்படும்படி ஆண்டவர் ஏற்படுத்திய முறையைத் தெளிவாய்ப் போதிக்கவேண்டும்.** ரோமர் நிருபம் இதற்காகவே முதல் நிருபமாக வேத புஸ்தகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. அவபக்தியையும் அநியாயத்தையும் நடப்பித்து, தேவ கோபாக்கினைக்குப் பாத்திரனான ஒரு பாவி, நீதிமானும் பரிசுத்தவானுமாக்கப்படுகிற உபதேச சத்தியம் அதிலே வெகு விஸ்தாரமாய் விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. நியாயப்பிரமாணமில்லாத புறஜாதியான் ஒருவன் எருசலேமின் ஆலயத்திற்குள் படிப்படியாக வெளிப்பிராகாரம் பரிசுத்தஸ்தலம, மகா பரிசுத்தஸ்தலம் இவைகளுக்குள் பிரவேசித்துவிட்டு, பின்பு வெளியேவந்து மற்றவர்கள் உள்ளே வரும்படி அவர்களை அழைக்கிறதற்கொப்பாக இந்த நிருபம் இருக்கிறதென்று ஒருவர் சொல்லுகிறார். 6: 17-ல், முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தும், இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்ததினாலே தேவ

னுக்கு ஸ்தோத்திரம். அதின்படி, பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு தேவனுக்கு அடிமைகளானதினால், பரிசுத்தமாகுதல் உங்களுக்குக் கிடைக்கும் பலன், முடிவோ நித்திய ஜீவன் என்று பரிசுத்த பவுல் சொல்லுகிறார். (வச. 18, 22) உபதேச சட்டம் ஒப்புவிக்கப்பட்டதின் பலனாக அவர்கள் பரிசுத்தமாக்கப்பட்டார்கள். மற்றபடி அவர்கள் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கமாட்டார்கள். தமது அந்திய காலத்தில் அவர் எபேசு சபையைப்பார்த்து, தேவனுடைய ஆலோசனையில் ஒன்றையும் நான் மறைத்துவைக்காமல் எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தபடியினாலே எல்லாருடைய இரத்தப்பழிக்கும் நீங்கி நான் சுத்தமாயிருக்கிறேன் என்பதற்கு உங்களை இன்றையதினம் சாட்சிகளாக வைக்கிறேன் என்கிறார். அப். 20: 26, 27. இயேசு சுவாமி அதிகாரமுடையவராய்ப் போதித்தபடியினால் அவருடைய போதகத்தைக் குறித்து ஜனங்கள் ஆச்சரியப்பட்டார்கள் பரிசுத்த ஜீவியத்தைப்பற்றிய உபதேச சட்டம் திட்டமாக அதிகாரத்தோடு இக்காலத்தில் போதிக்கப்படாததினாலேயே சபையின் ஜனங்கள் பரிசுத்தமாகாதிருக்கிறார்கள். என் ஜனங்கள் அறிவில்லாமல் சிறைப்பட்டுப்போகிறார்கள் என்று ஆண்டவர் சொல்லுகிறார். சபைகளின் அறிவீனத்துக்குக் காரணர் ஊழியர்தானே! கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள் என்று சொல்லப்பட்டபடி, போதிக்கப்படாதவர்கள் எப்படிப் பரிசுத்தமாவார்கள் என்றும் சொல்லலாமே!

**3-வது சபைகளில் காணப்படும் அசுத்தத்தினிமித்தம் நாம் ஆண்டவருடைய சமுகத்தில் நம்மைத் தாழ்த்தவேண்டும்.** இதுவும் பரிசுத்த பவுல் கையாடின முறைகளில் ஒன்று. அவரைப்போலொத்த மற்ற பக்தர்களும் அப்படியே செய்திருக்கிறதைப் பார்க்கலாம் 'என் தேவன் உங்களிடத்தில் என்னைத் தாழ்த்தும்படிக்கு முன் பாவஞ்செய்தவர்களாகிய அநேகர் தாங்கள் நடப்பித்த அசுத்தத்தைவிட்டு மனந்திரும்பாமல் இருக்கிறதைக் குறித்து நான் துக்கப்படவேண்டியதாயிருக்குமோவென்று பயந்திருக்கிறேன்' என்று அவர் கொரிந்து சபையைப் பார்த்துச் சொல்லுகிறார். 'எல்லாச் சபைகளைக் குறித்தும் உண்டாயிருக்கிற கவலை என்னை நாள்தோறும் நெருக்குகிறது ஒருவன் பலவீனனானால் நானும் பலவீனனாகிறதில்லையோ? ஒருவன் இடறினால் என்மனம் எரியாதிருக்குமோ' என்று அந்தச் சபையைப் பார்த்தே அவர் சொல்லுகிறார். ஆகானின் நிமித்தம் உண்டான தோல்விக்குப் பின், யோசுவா தன் வஸ்திரங்களை கிழித்துக்கொண்டு, கர்த்தரின் பெட்டிக்கு முன்பாகத் தரையிலே முகங்குப்புற விழுந்து, தலையின் மேல் புழுதியைப் போட்டுக்கொண்டு கிடந்தான். அப்பொழுது ஆண்டவர் அவனைப்பார்த்து, நீ இப்படி விழுந்து கிடக்கிறது என்ன, எழுந்திரு, ஜனங்களைப் பரிசுத்தம்பண்ணு என்று சொன்னார். சிறையிருப்பிலிருந்து வந்த யூதசபையில் அநேகர் அந்நிய ஜாதியாரோடு கலந்துபோனதாகக் காணப்பட்டபோது, எஸ்றா அழுது விண்ணப்



பம்பண்ணி, தேவனுடைய ஆலயத்துக்கு முன்பாகத் தாழவிழுந்து கிடந்தான் அப்பொழுது மகா பெரிய சபை அவனிடத்தில் கூடிற்று. ஜனங்கள் மிகவும் அழுதார்கள்: எழுந்திரும் ஜனத்தைச் சுத்திகரிப்போம் வாரும் என்று கெஞ்சினார்கள். ஜனங்களிடத்தில் காணப்படும் பாவங்களினிமித்தம் தேவ ஊழியக்காரர் தங்களைத் தாழ்த்தும்போது, பலமான பாவ உணர்வு உண்டாகவும் சுத்திகரிப்பு நடக்கவும் ஆண்டவர் கிருபை செய்கிறார்.

**4-வது, துணிகரமான பாவங்கள் அகற்றப்படும்படி பக்திவைராக்கியத்தோடு கிரியை செய்யவேண்டும்.** கொரிந்து சபையிலே தன் தகப்பனுடைய மனைவியை வைத்துக்கொண்டிருந்த மனிதனைச் சாத்தானுக்கு ஒப்புக்கொடுக்கும்படி பரிசுத்த பவுல் இயேசுகிறிஸ்துவின் அதிகாரத்தோடே தீர்ப்புச்செய்தார். அவர் காலத்தில் சபை கற்புள்ள கன்னிகையைப் போல இருக்கும்படியாய் அவர் அவைகளுக்காக தேவ வைராக்கியமான வைராக்கியம் கொண்டிருந்தேன் என்கிறார். அப்படியே, சபைகளின் பாவத்துக்காக தாழவிழுந்து கிடந்து ஜெபித்த யோசுவா எஸ்றா முதலிய பக்தர்களும் மிகுந்த பக்தி வைராக்கியத்தோடு எழும்பி அக்கிரமஞ் செய்தவர்களைத் தண்டித்து சபையைச் சுத்திகரித்தார்கள். வனாந்தரத்தில் இஸ்ரவேலர் மோவாபிய ஸ்திரீகளோடே வேசித்தனம் பண்ணினபோது, பினேகாஸ் மிகுந்த பக்தி வைராக்கியத்தோடு இருவரை ஒன்றாய்க் குத்திக் கொன்றுபோட்டான். அதை ஆண்டவர் அவனுக்கு நீதியாக எண்ணி அதினிமித்தம் அவனை ஆசீர்வதித்தார். இந்த வேலை மகா அவசியமானது ஆனால் இது மகா ஞானத்தோடும் செய்யப்படவேண்டும் சபையைக் கொண்டே பரிசுத்த பவுல், எஸ்றா முதலியவர்கள் இதைச் செய்தார்கள். இதிலுள்ள கஷ்டத்தினிமித்தம் அநேகர் இதைச் செய்யாமல் போகிறார்கள் ஆனால் சபையின் பரிசுத்தத்துக்காகப் பக்தி வைராக்கியம் கொண்ட பக்தர்களில்லாத சபை சீக்கிரத்துக்குள் பாழாய்ப்போய்விடும் என்பது நிச்சயம்.

**5-வது சபையாருக்கு முன்பாக ஊழியக்காரர் முன்மாதிரியான தேவபரிசுத்தமுள்ளவர்களாய் ஜீவிக்கவேண்டும்.** இது மகா முக்கியம் பரிசுத்த பவுல் தமது முதலாம் நிருபத்தில் இதைப் பற்றி பலமாய்ப்பேசுகிறார். நாங்களும் உங்களுக்குள்ளே இருந்தபோது உங்கள் நிமித்தம் எப்படிப்பட்டவர்களாயிருந்தோமென்று அறிந்திருக்கிறீர்களே; விசுவாசிகளாகிய உங்களுக்குள்ளே, நாங்கள் எவ்வளவு பரிசுத்தமும நீதியும் பிழையின்மையுமாய் நடந்தோமென்பதற்கு, நீங்களும் சாட்சி, தேவனும் சாட்சி என்று அவர் சொல்லுகிறார், 1 தெச. 1: 5; 2: 10. இதோ, நம்மிடத்தில் எப்போதும் வந்து போகிற தேவனுடைய மனுஷனாகிய இவர் பரிசுத்தவான் என்று காண்கிறேன்' என்று எலிசாவைக்குறித்து ஒரு ஸ்திரீ தன் புருஷனிடத்தில் சொன்னாள், 2 இரா. 4: 9, தங்களுடைய சபைகளினிமித்தம் ஊழியர்கள் தங்களைப்பரிசுத்தம் பண்ணிக்கொள்ள வேண்டி

யது மகா அவசியம், இயேசு இராஜா முதலாய் அப்படிச்செய்தார், 'அவர்களுக்காக நான் என்னைத்தானே பரிசுத்தமாக்குகிறேன்: என்று அவர் சொன்னார். ஒருமாதிரியும் இல்லாதபோது எத்தனையான போதனையும் சிட்சையும் பிரயோஜனப்படமாட்டாது, ஊழியர் தகாதவிதமாய் ஜீவிக்கும் போதோ சபையெல்லாம் கெட்டுப்போம். பகிரங்கமான பாவங்கள் ஊழியரால் நடத்தப்பட்ட இடங்கள் அநேக வருஷங்களாய் உயிரடையாமல் போய்விட்டதைப் பார்க்கலாம். பலத்த சுவிசேஷ ஊழியத்தாலுங்கூட அவைகள் அசைக்கப்படுகிறதில்லை ஆதலால் ஊழியரால் நன்மை இல்லாது போனாலும் தீமை இல்லாதிருப்பது மகா அவசியம்.

ஆதலால் ஊழியரே, 'பரிசுத்தமுள்ளவர்களாயிருக்க நாடுங்கள்; பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே' கர்த்தருடைய சபையைத் தீவிரமாய் பரிசுத்தம் பண்ணுங்கள். கர்த்தருடைய நாள் சமீபிக்கிறதே! உங்களைக் குறித்தும் உபதேசத்தைக் குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள். இது கள்ள உபதேசங்கள் பெருகிப்போகிற கடைசிக் காலமாயிருக்கிறதே! 'உம்முடைய ஆசாரியர்கள் நீதியைத் தரித்து, உம்முடைய பரிசுத்தவான்கள் கெம்பீரிப்பார்களாக' என்று ஆண்டவரைப் பார்த்து ஊக்கமாய் ஜெபியுங்கள். 'அதின் ஆசாரியர்களுக்கு இரட்சிப்பை உடுத்துவேன், அதிலுள்ள பரிசுத்தவான்கள் கெம்பீரிப்பார்கள்' என்று ஆண்டவர் உத்திரவு கொடுக்குமளவும் அவரை அமர்ந்திருக்க விடாதிருங்கள். சங்கீதம் 132 : 9, 16.

S. G. மதுரம்.

---

## சந்தா வரவு

| | Rs. | A. | P. | | Rs. | A. | P. |
|---|---|---|---|---|---|---|---|
| Mr. S. Jivanantham | 1 | 2 | 0 | Mr. P. Rajaratnam | 0 | 7 | 0 |
| ,, A. V. Arumy | 0 | 7 | 0 | Miss. Grove | 1 | 14 | 0 |
| Major Gnanadesigar | 0 | 7 | 0 | Mrs. Sargunar J. Solomon | 0 | 14 | 0 |
| Rev. J. T. Maclean | 7 | 6 | 0 | Mr. S. Masillamoni | 1 | 6 | 0 |
| Mr. E. G. Vethanayagam | 1 | 0 | 0 | ,, D. Simon Pillai | 0 | 7 | 0 |
| ,, Isaac Manikam | 0 | 7 | 0 | Rev. W. S. Sutherland | 9 | 12 | 0 |
| ,, P. E. Kochukunju | 1 | 14 | 0 | ,, M. S. Thiruthuvathason | 0 | 14 | 0 |
| Rev. W. T. Simeon | 0 | 7 | 0 | Mr. M. C. Abraham | 0 | 8 | 0 |
| ,, G. W. Hardie | 3 | 4 | 0 | ,, J. D. Sathianathen | 0 | 14 | 0 |
| Thro Mr. V. Samuel | 5 | 0 | 0 | ,, A. D. Solomon | 0 | 7 | 0 |

---

Printed at the Palamcottah Printing Press, Palamcottah and published by the Christian Brotherhood Association, Tinnevelly.

28 JAN 1918 MADRAS

November, December 1917. Registered No. M. 183

# The Water of Life
# ஜீவத்தண்ணீர்

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்." யோவான் 7: 38.

Vol. XVIII நவம்பர், டிசம்பர் 1917

## தேவ பராமரிப்பு

**'இரண்டு காசுக்கு ஐந்து அடைக்கலான் குருவிகள்'. லூக். 12: 6.**

வேதத்தில் உவமானங்களுக்குக் குறைவில்லை. மாடுகளின் பொறுமை, எறும்பின் சுறுசுறுப்பு, சிலந்திப்பூச்சியின் சாமர்த்தியம், மான்களின் ஓட்டம், கழுகுகளின் வேகம், புறாக்களின் சாந்தம், பாம்பின் வினை, இப்படிப்பட்ட அனந்தம் உண்டு. இவைகளோடு அற்பமான அடைக்கலான் குருவிகளையும் ஆண்டவர் மறந்துபோகவில்லை. மத்தேயு காசுக்கு இரண்டு என்கிறார். லூக்கா இரண்டு காசுக்கு ஐந்து குருவிகள் என்கிறார். இதிலே தோஷம் ஒன்றுமில்லை. காசுக்கு இரண்டு பழங்கள் என்று கடைக்காரன் சொல்லும்போது இரண்டு காசுக்கு ஐந்து தரக்கூடாதா என்று கேட்க அப்படியும் ஒன்றுபோட்டுக் கொடுப்பது வழக்கமே. இரண்டு காசுக்கு வாங்கும்போது கூட ஒரு குருவி போட்டுக்கொடுப்பது பெரியகாரியமல்ல. அடைக்கலான் குருவிகள் அற்பமானவைகள் என்பதை இது காட்டுகிறது. அவைகள் அற்பமானவைகள்தான். சிறகில் அழகில்லை. குரலில் இனிமையில்லை. விருந்தாகச் சாப்பிட உடலில் இறைச்சியுமில்லை. அவ்வளவு அற்பமான அடைக்கலான் குருவிகளில் ஒன்றாகிலும் தேவனால் மறக்கப்படுகிறதில்லையே. அப்படியிருக்க எவ்வளவோ விசேஷித்தவர்களாகிய உங்களை தேவன் மறப்பாரோவென்று கிறிஸ்து நம்மைத் தைரியப்படுத்துகிறார்.

தேவன் மகா பெரியவராயிருப்பதால் பெரிய காரியங்களைத்தான் அவர் கவனிப்பார் என்று நாம் நினைக்கலாம். பெரிதும் உன்னதமுமான சிகரங்களை மாத்திரமல்ல ஒரு சிறு புல்லையும் அவர் கவனிக்கிறார். திரளான தண்ணீர் நிறைந்த சமுத்திரத்தை மாத்திரமல்ல நமது கண்களில் காக்கும்

ஒரு துளிக்கண்ணீரும் அவருக்கு மறைவானதல்ல. வானத்தின் நட்சத்திரங்களை மாத்திரமல்ல நமது தலை உரோமமெல்லாம் எண்ணி வைத்திருக்கிறார். லட்சக்கணக்கான இஸ்ரவேலரின் பெருமூச்சை மாத்திரமல்ல ஏழை அன்னாளின் பெருமூச்சும் அவருக்குத் தெரியும். இஸ்ரவேலின் திரள் சேனையைப் போஷிக்கிறவராக மாத்திரமல்ல சீதோன் நாட்டு ஏழை விதவையையும் போஷிக்க அவருக்குக் கவனம் உண்டு. உலகத்தைச் சூழ்ந்திருக்கும் ஆகாயத்தைமாத்திரமல்ல நீ சுவாசிக்கிற கொஞ்ச அளவான அந்த ஆகாயத்திலும் அவர் கவனம் வைத்திருக்கிறார். தேவன் மகா பெரியவராயிருந்தாலும் தாழ்வானவைகளையும் அற்பமாக எண்ணப்பட்டவர்களையும் அவர் மறக்கிறவரல்ல. ஆகையால்தான் அவர் தேவன்.

## தேவபராமரிப்பு எவ்விதமாக வெளிப்படுகிறது?

1. நமக்கு உத்தியோகங்களைத் தெரிந்துகொள்ளுகிறவர் அவரே. தோட்டத்துக்கு எஜமான் வேலையாட்களை அனுப்புகிறபோது: நீ ஏர் பூட்டி உழுப்படி போ, நீ வேலிகளை ஜாக்கிரதையாக அடை, நீ கல்லுகளைப் பொறுக்கு, நீ வளர்ந்திருக்கும் செடிகளை வெட்டு, நீ களைகளைப் பிடுங்கு, நீ தண்ணீர் இறை என்று அவனவனுடைய அறிவுக்கும் திறமைக்கும் ஏற்ற வேலைகளைக் கொடுத்து அனுப்புவதுபோல தேவனும் நமக்காக வேலைகளைத் தெரிந்துகொள்ளுகிறார். நாம் விரும்புகிறதின்படியல்ல அவருடைய சித்தப்படியே அவர் தமது பிள்ளைகளை உத்தியோகத்தில் நடத்துகிறார். நாம் தெரிந்துகொண்டதும் நம்மை ஆயத்தம்பண்ணிக்கொண்டதுமான வேலை ஒன்றாயிருக்கலாம், நாம் இன்று செய்துவரும் வேலை இன்னொன்றாயிருக்கலாம்.

கலப்பை பிடித்து உழுகிறவனை தீர்க்கதரிசியாக அழைக்கிறார். ஆடுகளை மேய்க்கிறவன் சர்வ இஸ்ரவேலுக்கும் இராஜாவாகிறான். கழுதையைத் தேடப்புறப்பட்டவன் ராஜ அபிஷேகம் பெறுகிறான். ஆயத்துறையிலிருக்கிறவன் அப்போஸ்தலனாகிறான். மீன்பிடிக்கிறவர்கள் மனுஷரைப் பிடிக்கிற மகாத்துமாக்களாகிறார்கள். வக்கீல் வேலைக்குப் படித்துத் தேறின பின்னி என்பவர் சபைகளை உயிர்ப்பிக்கும் வல்ல பிரசங்கியானார். சப்பாத்துக்கடையில் அலுவல் பார்த்த மூடி என்பவர் ஜாதிகளுக்குச் சுவிசேஷத்தைக் கூறும் தேவ ஊழியனானார். நிலக்கரிக் கேணியில் வேலை செய்த பில்லிபிரே ஆத்துமாக்களை ஆதாயம்பண்ணவும் அநேகம் கோவில்களை கட்டவும் அதிசயமாய் நடத்தப்பட்டார். தேக அப்பியாசத்தில் தேறி சமர்த்தன் எனப் பெயரெடுத்தவன் இன்று போதகனாயும் பிரசங்கியுமாகயிருக்கிறான். இவைகள் நமது கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது. தன் வழியை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்ல. தேவன் நம்மை அறிந்திருக்கிறார் நமது தகுதி அவருக்குத் தெரியும், வைத்திய வேலைக்



குப் படிக்கிறார்கள். போதகர் ஊழியம் பார்க்கிறார்கள். போதகர் வேலைக்குப் படிக்கிறார்கள். போலீஸ் வேலைக்கோ, வியாபாரத் தொழிலுக்கோ போய்விடுகிறார்கள். வக்கீல் வேலைக்குப் படிக்கிறவர்கள் தேவ ஊழியத்துக்கு வந்துவிடுகிறார்கள். தேவ ஊழியத்துக்குப் படிக்கிறவர்கள் வக்கீல் வேலைக்குப் போய்விடுகிறார்கள். இவ்விதமாக, அநேகர் தாங்கள் நாடினதும் ஆயத்தம்பண்ணினதுமான உத்தியோகத்தில் வைக்கப்படாமல் எதிர்பாராத உத்தியோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். தேவன் நமக்காக உத்தியோகங்களைத் தெரிந்துகொள்ளுகிறார். நாம் வைக்கப்பட்டிருக்கும் உத்தியோகங்களைக்குறித்து முறுமுறுக்கக்கூடாது. இந்த வேலையை விட்டுப்போட்டு அந்த வேலைக்குப்போனால் நன்றாயிருப்பேன் என்று நினைக்கக்கூடாது. எந்த வேலையில் கர்த்தர் நம்மை வைத்திருக்கிறாரோ அந்த வேலையை உற்சாகத்தோடும் உண்மையோடும் செய்யவேண்டியது நமது கடமை. உத்தியோகத்தில் ஏதாவது மாறுதல் உண்டாகவேண்டும் என்று தேவன் காண்பாரானால் ஏற்ற காலத்தில் அவரே அதைச் செய்வார்.

2. நமக்கு வீடு வாசல் ஏற்படுத்துகிறவர் தேவனே. நான் 'இளைஞனாயிருந்தேன் முதிர்வயதுள்ளவனுமானேன், ஆகிலும் நீதிமான் கைவிடப்பட்டதையும் அவன் சந்ததி அப்பத்துக்கு இரந்து திரிந்ததையும் நான் காணவில்லை' என்று சங்கீதக்காரன் சாட்சிபகர்ந்தார். கர்த்தரையே நம்பியிருக்கிறவர்கள் கைவிடப்படார்கள். தாவீது அடைக்கலான் குருவிகளைக் குறித்து, உமது பீடங்களண்டையில் அடைக்கலான் குருவிக்கு வீடு கிடைத்ததே என்று பாடினார். அந்த அடைக்கலான் குருவிகளைப் பார்க்கிலும் விசேஷித்தவர்களாகிய தமது பிள்ளைகளை திக்கற்றவர்களாக தேவன் விடமாட்டார். எந்தப் பட்டணத்தில் அல்லது கிராமத்தில், எந்தப் பாகத்தில், எந்த தெருவில், எந்த வீட்டில் நாம் குடியிருக்கவேண்டுமென்பதை அவர் அறிந்திருக்கிறார். அதற்கேற்றவிதமாக அவர் நடத்துகிறார். குடியிருப்பின் விஷயத்தில் நாம் சில சமயங்களில் தேவ ஆலோசனையைத் தேடாமல் ஆத்திரமாக ஒரு வீட்டைத் தெரிந்துகொண்டோமானால் அதைவிட்டு நம்மை வெளியேற்ற தேவனுக்கு அதிக நாட்செல்லாது. இஸ்ரவேல் கோத்திரங்களுக்கு அவர்கள் வசிக்கவேண்டிய பாகங்களையும் வீடுகளையும் தெரிந்துகொண்டவர் தமது பிள்ளைகள் தாம் தெரிந்துகொள்ளும் இடத்தில் வசிக்க விரும்புகிறார். ஒருவேளை இது விஷயத்தை நாம் அதிகமாக எண்ணாதிருந்தாலும் தேவன் மெய்யாகவே நம்மை நடத்தி வந்தாரென்பதற்குச் சந்தேகமில்லை. ஒரு வீட்டில் நாம் குடியிருக்கும்போது வீட்டுக்குச் சொந்தக்காரன் திடீரென வீட்டைக் காலிபண்ணும்படி சொல்லலாம். இனி எங்கேபோய் குடியிருக்கிறதென்கிற கவலை நமக்கு உண்டாகலாம். வீடுதேடப் புறப்படுகிறோம். எந்தத் தெருவில் வீடு இருக்கிறதோ, அது எந்த வீடோ, காலியாயிருக்கிற வீடுதான் அகப்படுமோ

என்னமோ ஒன்றும் தெரியவில்லை. தெருத்தெருவாய்ப் போகும்போது ஒரு வீடு அன்றுதான் காலியாயிருக்கிறது. உள்ளேபோய்ப் பார்த்தால் நமக்கே ஆயத்தம்பண்ணி வைத்ததுபோல் அவ்வளவு திருப்தியாக யிருக்கிறது. இது தற்செயலோ தேவச்செயலோ? ஒரு நாளாகிலும் தெருவில் நின்று தவிக்காமல் நமக்காக இன்னொரு வீட்டைக் காலிபண்ணினவர் தேவனல்லவா? அடைக்கலான் குருவிக்கு வீடு கொடுத்தவர் நமக்கு வீடு கொடாமலிருப்பாரா?

3. **தேவன் நமக்குச் சிநேகிதர்களைக் கொடுக்கிறார்.** தேவனுடைய கோபம் மனுஷர் மூலமாக விளங்குகிறது. தேவனுடைய பட்சமும் மனுஷர் மூலமாக விளங்குகிறது. இந்த உலகத்தில் நமக்கு நல்ல சிநேகிதர்கள் கிடைத்திருப்பது தேவ தயவென்றே சொல்லவேண்டும். சிநேகிதர்களின் அன்பு, ஆதரவு, தைரியம், ஆலோசனை, நமக்கு எவ்வளவோ ஆறுதலைக் கொடுக்கிறது. புதிதாக ஒரு இடத்துக்குப் போகும்போது அங்கே யாரும் நமக்குத் தெரியாதிருக்க, ஒருவர் நம்மைக் கண்டு விசாரித்து பட்சமாக வீட்டுக்கழைத்துப்போய் சகல உபசரணைகளையும் செய்து அவ்விடத்தில் நமக்காக வேண்டிய வேலை விஷயத்திலும் நமக்கு ஒத்தாசை செய்வாரானால் நமக்கு எவ்வளவோ சந்தோஷமாயிருக்குமே. இப்பேர்ப்பட்ட ஓர் சிநேகிதன் கிடைத்தது தற்செயலல்ல தேவச்செயலே. தாவீது சவுலால் பகைக்கப்பட்ட காலத்தில் யோனத்தானின் சிநேகம் எவ்வளவோ அவனுக்கு ஆறுதலையும் தைரியத்தையும் கொடுத்தது. சிநேகிதரற்றவன் நிர்ப்பந்தன். இவ்வுலகில் எனக்கு ஒரு சிநேகிதனுமில்லை என்று ஒருவன் சொல்வானானால் அது அவனுடைய துர்க்குணத்தைக் காண்பிக்கிறதேயன்றி மற்றவர்களுடைய தப்பிதமல்ல.

IV. **தேவன் நம்மை வழிநடத்துகிறார்.** தேவ பராமரிப்பில் அவர் நம்மை வழிநடத்துவது மிகவும் முக்கியம். அவருடைய நடத்துதல் அதிசயமானது. நமது புத்திக்கேற்றபடி இருக்கமாட்டாது. தேவன் இஸ்ரவேலரை வனாந்தரத்தில் வழிநடத்தினார். அவர்கள் செய்த பிரயாணத்தைப் பார்த்தால் நேரே ஒழுங்காகத் தோன்றாமல் முன்னும் பின்னும் இப்பக்கமும், அப்பக்கமும், நதி மார்க்கமும், சமுத்திரமார்க்கமும், இப்படியும், அப்படியுமாக தாறுமாறாகத் தோன்றும். சங்கீதக்காரன்: தேவன் அவர்களைச் செவ்வையான வழியில் நடத்தினார் என்று கூறினார். தேவனுடைய வழிகள் நம்முடைய வழிகள் அல்ல. நமது ஜீவியத்தைக் கவனிக்கும்போது துன்பம், துக்கம், வறுமை, சந்தோஷம், பெலன், நோய் முதலான பல மாறுதல்கள் நிறைந்திருந்தது என்று காணலாம். ஆகிலும் இவ்வழியாக நடத்தினவர் தேவனே என்று உணரும்போது அது செவ்வையான வழிதான் என்று நாம் அறியவேண்டும். நான் உனக்குப் போதித்து நீ நடக்க வேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன் என்று சொன்னவர் உண்மையுள்ள பரமபிதா. இப்போ விளங்காத அநேக விஷயங்கள் பிற்பாடு விளங்



கும். இரத்தினக் கம்பளம் பார்க்க மிகவும் அழகாயிருக்கும். அது செய்யப்படுகிற இடத்தை ஒருவர் பார்க்கப்போனார். முதல் அறையில் கயிறும் பஞ்சுமாக அலங்கோலமாகத் தோன்றிற்று. இதுதானா இரத்தினக் கம்பளம் என்று கேட்டார். மேலறைக்குப் போய்ப்பாரும் என்றார்கள். மேலறைக்குப்போனால் கயிறும் சம்பளியும் சேர்த்து இணைக்கப்பட்டபோதிலும் இரத்தினக் கம்பளத்தின் அழகு தோன்றவில்லை. இதுதானா இரத்தினக் கம்பளம் என்று கேட்டார். மேலே போய்ப் பாரும் என்றார்கள். இவ்விதமாக மேலே கடைசி அறைக்கு அவர் போனபோது பூரணமாக முடிந்திருந்த அழகான இரத்தினக் கம்பளியைக் கண்டு மகிழ்ந்தார். நமது ஜீவியத்துக்கடுத்த அநேக காரியங்கள் இப்போ குறைகுறையாகத் தோன்றுகிறது. மேலே மறுமைக்குள் நாம் பிரவேசிக்கும்போது தேவனுடைய அதிசயமும் ஞானமும் நிறைந்த நடத்துதலின் மாட்சிமையைக்கண்டு ஆனந்த பரவசமடையமாட்டோமா?

கபோதி நான் ஐயா! முன் நிற்பதறியேன்
நீர் என்னை நடத்தும், நான் பின்னே செல்லுவேன்
என் பங்கேதாயினும், என் இஷ்டம் எதிலும்
வேண்டாம் என் தேவனே, நீர் ஆண்டு நடத்தும்.

S. பரமானந்தம்

## 'கர்த்தாவே, நீர் என்னை ஆராய்ந்து அறிந்திருக்கிறீர்'

சங். 139: 1.

'அவர் உங்களை ஆராய்ந்து பார்த்தால் அது உங்களுக்கு நலமாயிருக்குமோ?' யோபு. 13: 9.

பம்பாயில் கொள்ளை நோயுண்டாகி ஆயிரம் ஆயிரமான ஜனங்கள் மாண்டார்கள். நாள்தோறும் பெருகிக்கொண்டே வந்தது. தங்கள் வீடுகளில் அந்த வியாதி உண்டென்பதை அநேகர் மறைத்துப்போட்டார்கள். அந்தரங்கத்தில் மரணம் நடந்தது. கடைசியில் வேறே போக்கில்லாததால் சர்க்கார் ஒவ்வொரு வீட்டைச் சோதிக்கவேண்டுமென்றும் வீடுகளில் கொள்ளைநோய் பிடித்த யாராவது அகப்பட்டால் ஆஸ்பத்திரிக்குக் கட்டாயமாய்க் கொண்டுபோகவேண்டுமென்றும் உத்தரவு கொடுத்தார்கள். அநேக ஜனங்களுக்குப் பிரியமில்லை சர்க்காருடைய ஆட்கள் வந்து தங்கள் வீடுகளைச் சோதித்துப் பார்ப்பது அவர்களுக்குச் சம்மதமில்லை. ஆனால் வேறே போக்கு இல்லை. தீராத அவசியம் வீடுகள்தோறும் பரிசோதனைசெய்து வியாதிப்பட்ட ஆட்களை வெளியே கொண்டுவந்து அந்த வீடுகளைச் சுத்தம் பண்ணின பின்பு மாத்திரம் அந்த வியாதியின் மும்முரம் நின்றுபோயிற்று. இன்னேயும் ஓர் கொள்ளைநோய், பாவநோய் அந்தரங்கத்தில் நடமாடுகிறது. அநேக ஆத்துமாக்கள் கெட்டுப்போகிறது. அந்தக் கொள்ளைநோயை எடுத்

துப்போடவும் உங்களைச் சுகப்படுத்தவும் கர்த்தர் உங்களை ஆராய்ந்துபார்க்க வருகிறார் சம்மதமா? இடங்கொடுக்கிறீர்களா? நீங்கள் இடம் கொடுத்தால் லேசாய் விடமாட்டார். உங்கள் இருதயத்தில் மூலைக்கு மூலைவந்து ஆராய்ந்து பார்ப்பார். எப்படிச் சோதிப்பார்? (1) செப். 1: 12. அக்காலத்தில் நான் எருசலேமை விளக்குக்கொளுத்திச் சோதிப்பேன்.

நான் சிறுபையனாய் வளர்ந்த ஊருக்குச் சமீபமாய் சில மலைகள் உண்டு. அவைகளில் கெபிகள், குகைகளுமுண்டு. இருட்டு ஒன்றும் தெரியாது. அதிலுள்ள விஷபூச்சியோ, அசுத்தங்களோ, தெரியாது. என்னசெய்தோம்? விளக்குக் கொளுத்தி அங்கே போவோம். அப்போது எல்லாம் தெரியும். விளக்குக்கொளுத்தி அங்கேபோய் சுத்த இருண்ட கெபிகளிலிருந்த எல்லாக் காரியங்களையும் சோதித்துப் பார்ப்பது எங்கள் வழக்கம். அப்படிப்போல், தமது விளக்கை கொளுத்தி உங்கள் இருதயங்களை ஆராய்ந்துபார்க்க வருகிறார். அதிலுள்ள கெட்ட குணங்கள், அசுத்த எண்ணங்கள், தகாத காரியங்கள் இவைகளையெல்லாம் எடுத்து உணர்த்திக் காட்டுவார். உங்களுக்குச் சம்மதமா? தேவனுடைய வசனமே அந்த விளக்கு.

(2) வெளி. 2: 23. நானே உள்ளிந்திரியங்களையும் இருதயங்களையும் ஆராய்கிறவர் என்று எல்லாச் சபைகளும் அறிந்துகொள்ளும். (அக்கினிச் சுவாலை போன்ற கண்களுள்ளவர் வா. 18) அவர் கண்கள் அக்கினிச்சுவாலையைப்போலிருக்கிறதாம். அப்படியானால் எங்கும் செல்லும். எனக்கு அக்கினிக் கண் என்றால் இருட்டிலே பார்ப்பேன். உங்கள் மனதைப் பார்ப்பேன். சகலத்தையும் பார்ப்பேன். சூரியனுடைய பிரகாசம்—வெயில் செல்லாத இடம் உண்டா? தியத்தீராச் சபையோடு பேசுகிறார். அந்தச் சபையில் ரகசிய பாவம் நடந்தது. வேசித்தனம் இருந்தது. அந்தரங்கத்தில் பேய் பிசாசுகளுக்குக் கொடுப்பார்கள். ஒருவருக்கும் தெரியாதபடி ரொம்ப ரகசியமாய் நடந்தது. ஆனாலும் கர்த்தருடைய அக்கினிக் கண் அதைக் கண்டது. சகோதரரே, அக்கினிக் கண்களுக்கு முன்பாக உங்கள் பாவத்தை மறைக்கக்கூடுமா?

I. நம்முடைய நினைவுகளை ஆராய்ந்து அறிந்திருக்கிறார். 'என் நினைவுகளைத் தூரத்திலிருந்து அறிவீர்' சங். 139: 2. மதிகேடன் தனக்குள்ளே சிந்தித்துச் சொல்லிக்கொண்டான் (லூக். 12: 19). வாயினால் ஒன்றும் சொல்லவில்லை. ஜலப்பிரளயம் வந்ததற்கு விசேஷித்த காரணம் 'மனுஷனுடைய இருதயத்து நினைவுகளின் தோற்றம் எல்லாம் நித்தம் பொல்லாததே'. ஆதி. 6: 5. கெட்டவார்த்தை பேசாமலும் பாவக் கிரியைகளைச் செய்யாமலும இருந்தாய் என்று வைத்துக்கொள்வோம். உன் கெட்ட நினைவு போதும். 'துன்மார்க்கருடைய நினைவுகள் கர்த்தருக்கு அருவருப்பானவைகள்' (நீதி. 15: 26). பெருமை, பொறாமை, பகை, பொருளாசை, கெட்ட இச்சை, ஐயோ, எத்தனை ஏராளம்! அவைகளில்



ஒன்றுமாத்திரம் நம்மை நரகத்தில் போடுகிறதற்குப் போதுமானது. ஆனால் குணப்படாத மனிதனுடைய நினைவுகள் எல்லாம் பாவம். எல்லாவற்றையும் பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுபாடுள்ளதுமாயிருக்கிறது. அதை அறியத்தக்கவன் யார்? கர்த்தராகிய நானே இருதயத்தை ஆராய்கிறவரும் உள்ளிந்திரியங்களைச் சோதித்தறிகிறவருமாயிருக்கிறேன். (எரே. 17: 9, 10).

II. நம்முடைய செய்கைகளையும் ஆராய்ந்து அறிந்திருக்கிறார். 'என் வழிகள் எல்லாம் உமக்குத் தெரியும்' (வா. 3). எல்லாம் தெரியும். ஒருவேளை மற்றவர்களுக்குத் தெரியாதிருக்கலாம். அவருக்கோ நன்றாய்த் தெரியும். ராகேல் தகப்பனுடைய வீட்டைவிட்டுத் தன் புருஷனோடு புறப்பட்டுப்போகும்போது லாபானுடைய சுரூபங்களைத் திருடிக்கொண்டாள். ஆதி. 31: 19. புருஷனுக்குத் தெரியாது. பிற்பாடு அவள் தகப்பன் பின்தொடர்ந்துவந்து தன் சுரூபங்களைக் கேட்டான். யாக்கோபின் கூடாரத்தில்போய்ப் பார்த்தான். காணோம். லேயாளுடைய கூடாரத்திலும் சோதித்துப் பார்த்தான். அங்கேயும் இல்லை. அப்புறம் ராகேலின் கூடாரத்தில் பிரவேசித்தான். அவள் அவன் வருவதையறிந்து அந்தச் சுரூபங்களையெடுத்து ஒட்டகச் சேணத்தின்கீழ்வைத்து அதின்மேல் உட்கார்ந்திருந்தாள். தந்திரத்தைப் பாருங்கள். அந்தத் தந்திரத்தினால் அவைகளைக் கண்டுபிடிக்க லாபானுக்குக் கூடாமற்போயிற்று. புருஷனையும் வஞ்சித்தாள். தகப்பனையும் வஞ்சித்தாள். ஆனால் ஒருவர் நின்றுபார்த்தார். தேவன் அவைகளைக்கண்டு அவள் வஞ்சகத்தை வேத புஸ்தகத்தில் எழுதி வைத்திருக்கிறார். அப்படிப்போல, அநியாயமோ, சண்டையோ, குடிவெறியோ, விபசாரமோ, வஞ்சகமோ, அஞ்ஞானக் கிரியையோ, பித்தலாட்டமோ எல்லாம் தெரியும்.

III. நம்முடைய வார்த்தைகளையும் ஆராய்ந்து அறிந்திருக்கிறார். 'என் நாவில் சொல் பிறவாததற்குமுன்னே, இதோ, கர்த்தாவே அதை எல்லாம் நீர் அறிந்திருக்கிறீர்' வா. 4. சீரிய ராஜா தன் பள்ளி அறையில் பேசின வார்த்தைகளை எலிசா தீர்க்கதரிசி அறிந்துகொண்டானாம். எப்படி? தேவன் கேட்டு அறிவித்தார். மனுஷன் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே அவன் கணக்கு ஒப்புவிக்கவேண்டும்'. பொய், புரட்டு, தூஷணம் அவதூறு, கோள்சொல்லுதல், ஐயோ கணக்கில்லை. ஆகையால் 'நாம் நம்முடைய வழிகளைச் சோதித்து ஆராய்ந்து கர்த்தரிடத்தில் திரும்பக்கடவோம்' புலம். 3: 40.

Rev. T. WALKER.

## ஜீவியத்துக்கேற்ற திருஷ்டாந்தங்கள்

9. தேவனுடைய வசனம் வாக்குத்தத்தங்களால் நிறைந்திருக்கிறது. அவைகளை விசுவாசிகள் அநேகா பரீட்சித்து அனுபவிக்கிறார்கள். இவைகள் பாவிகளை யேசுகிறிஸ்துவின் மட்டற்ற அன்புக்கும் ரட்சிப்புக்கும் வழி நடத்தப் போதுமானவைகள். இவைகளை விட்டு ரட்சிப்புக்கவசியமில்லாத காரியங்களில் தங்கள் நேரத்தையும் பிரயாசத்தையும் செலவிடுகிறது வீண். ஓர் காலத்தில் கார்ப்பென்றர் அத்தியக்ஷர் தெருப் பிரசங்கம் நடத்திக் கொண்டிருக்கும்போது நாஸ்திகன் ஒருவன் அவரிடம் வந்து 'யோனாவை மீன் விழுங்கிவிட்டதே, அதை ரூபிக்கக்கூடுமா' என்று கேட்டான். அதற்கு அத்தியக்ஷர், 'நான் மோக்ஷத்திற்குப் போகும்போது யோனாவிடத்தில் அதைப்பற்றிப் கேட்பேன' எனறார். அதற்கு நாஸ்திகன், 'யோனா ஒருவேளை அங்கேயிராவிட்டால் என்னசெய்கிறது?' என்றான. அத்தியக்ஷர் மாறுத்தரமாக 'அப்படியானால் நீதான் கேட்கவேண்டியது வரும்' என்று சொன்னார்.

10. பேர்போன சாஸ்திரியார் ஒருவர் தன் சிநேகிதனைப் பார்த்துச் சொன்னதாவது:—நான் இப்பொழுது 54 வருஷங்களாய்த் தாபர சாஸ்திரி (Botanist)யாயிருக்கிறேன். சிறுவனாயிருந்தபோது நான் யாதொரு சந்தேகமுமின்றித் தேவனை நம்பினேன். அவரை நோக்கி ஜெபித்தேன். அவருடைய காட்சி எனக்குக் கிடைத்தது. அவரை ஓர் ஆளாகப் பாவித்து நடந்தேன். அனுபவத்தால் அறிந்தேன். சற்று வளர்ந்து பெரியவனான போது தேவனே இல்லையென்று சாதித்தேன். உலகத்திலெல்லாம் அவரை நான் காணாதவன்போல் ஜீவித்தேன். நான் கேட்கிறதையும் காண்கிறதையுமே நம்பினேன். இயற்கையைத்தான் பெரிதாகப் பாவித்துவந்தேன். இப்போதே நான் எங்கேபார்த்தாலும் தேவனையே காண்கிறேன். அவரையல்லாமல் ஒன்றுமில்லை' என்று அறிந்திருக்கிறேன் என்றார்.

11. சில வாலிபர் சேர்ந்து ஓர் சிறுவனிடத்தில்போய், 'நீயும் எங்களோடு சேர்ந்து பக்கத்துத் தோட்டத்தில்போய்ப் பழம் பிடுங்கலாம் வா' என்று கூப்பிட்டார்கள். அவன் நான வரமாட்டேன், அது களவு என்றான். அவர்களோ, நாங்களெல்லாரும் உனக்கு விரோதமாயிருக்கும் போது நீ எப்படி எங்களோடே சேராமல் தனிமையாயிருக்கக்கூடும்? என்றார்கள். அதற்கு அவன், சற்றுநேரம் அமரிக்கையாயிருந்து சொல்லுவான். அண்ணமாரே, நான் அநேகமாய்த் தனிமையாயிருக்கிறதில்லை நாங்கள் இருவராயிருக்கிறோம். என்னோடிருக்கிறவர் தேவன். அவருக்கு விரோதமாய் எத்தனை பேர் வந்தாலும் மாளாது என்றான். அப்போது அந்தக் கூட்டத்தின் தலைவன் மற்றவர்களைப் பார்த்து, தோழரே, நாம் போவோம், இந்தப் பயலை விட்டுவிடுவோம். இவனோடு பேசி நாமும் பைத்தியக்காரர் ஆகவேண்டாம் என்று சொல்ல, எல்லாரும் போய்விட்டார்கள்.



12. ஒரு தாய் தன் ஆறு பிள்ளைகளையும் தன் தோட்டத்துக்குக் கூட்டிக்கொண்டுபோய் பழ விருக்ஷங்களையெல்லாம் காட்டினாள். கடைசியாக ஓர் மாத்தண்டை வந்தபோது அதில் ஒரு பழமாத்திரம் இருக்கக்கண்டு பிள்ளைகளே, நீங்கள் இதைப் பிடுங்கவேண்டாம் என்றாள் மறுநாள் அந்த மாத்தண்டை தாய்வந்து பார்த்தபோது பழத்தைக் காணோம் உடனே பிள்ளைகளிடத்தில்போய்ப் பழத்தைப் பிடுங்கவேண்டாம் என்றேனே என்ன செய்தீர்கள் என்றாள். பிள்ளைகளெல்லாரும், அம்மா, நாங்கள் பிடுங்கவில்லை என்று சொன்னார்கள். அவர்களில் மூத்தபிள்ளை தைரியமாய்ச்சொன்னது. அம்மா, நீங்கள் நன்றாய்ப் பாருங்கள். பழத்தின் தூர் மாத்திலேதானிருக்கிறது நாங்கள் ஒவ்வொருவராய் மாத்தில் ஏறி ஒவ்வொரு கடி கடித்தோம், பழத்தைப் பிடுங்கவில்லை யென்றது. நாமும் இந்தப் பிள்ளைகளைப்போலவே தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாமை காட்டி நமக்கு வருத்தம் நேரிடும்போது அவருடைய சகாயத்துக்காகக் கெஞ்சுகிறோம். கீழ்ப்படியாதவர்களுக்குத் தேவன் எப்படித் துணை புரிவார்?

---

## 119-ம் சங்கீதம்

### 5. எ செக்ஷன். வா. 33—40.

பேசி. நீர் என்னில் நடத்தும் தெய்வீக கிரியையின் பலனாக, நான் உமக்கு உண்மையாயிருப்பேன்.

பொழிப்புரை.

வா. 33. உமது பிரமாணங்களை நீர் எனக்குப் போதிக்க, நான் அதைக் காத்துக்கொண்டு உமக்கு உண்மையாயிருப்பேன்.

வா. 34. நீர் எனக்கு உணர்வைத்தர, உமது வேதத்தைப் பற்றிப் பிடித்து அதைக் கைக்கொள்ளுவதில் உண்மையாயிருப்பேன்.

வா. 35. உமது கற்பனைகளில் நீர் என்னை நடத்த, நான் அதில் பிரியமாயிருந்து உமக்கு உண்மையாயிருப்பேன்.

வா. 36. உமது சாட்சிகளை நான் சாரும்படிசெய்ய, பொருளாசையை நான் சாராமல் உமக்கு உண்மையாயிருப்பேன்

வா. 37. உமது வழிகளில் நீர் என்னை உயிர்ப்பிக்க, மாயையைப் பாராதபடி உமக்கு உண்மையாயிருப்பேன்.

வா. 38. உமது வார்த்தை உமது அடியேனுக்கு உறுதிப்படுத்த, உமக்குப் பயப்படும் பயத்தில் நான் உமக்கு உண்மையாயிருப்பேன்.

வா. 39. நான் அஞ்சுகிற நிந்தையை நீர் விலக்க, உம்முடைய நியாயத்தீர்ப்புகள் நல்லவைகள் என்று அதில் உண்மையாயிருப்பேன்.

வா. 40. உமது நீதியால் என்னை உயிர்ப்பிக்க, உமது கட்டளைகளை வாஞ்சித்து, அதில் உண்மையாயிருப்பேன்.

பொருட்குறிப்பு.

1. கர்த்தருடைய பிரமாணங்களை நாம் கைக்கொள்ளுவதற்கு தேவன் நம்மில் நடப்பிக்கவேண்டிய கிரியை. வா. 33—35.

(1) உமது பிரமாணங்களின் வழியை எனக்குப் போதியும். வா. 33.

(2) நீர் போதிக்கிற சத்தியம் இருதயத்தில் பதியும்படி எனக்கு இருதயத்தில் உணர்வைத் தாரும். வா. 34.

(3) இருதயத்தில் உமது சத்தியத்தை உணர்த்துகிறதுடன், உமது கற்பனைகளின் பாதையில் என்னை நடத்தும். வா. 35. உமது கற்பனைகள் என் ஜீவியமாக மாறப்பண்ணும். அப்பொழுது உமது பிரமாணங்களைக் கைக்கொண்டு உமக்கு உண்மையாயிருப்பேன்.

2. இரண்டு விசேஷித்த பாவங்களின்மேல் ஜெயத்தைக் கட்டளையிட நீர் என்னில் கிரியை நடப்பியும். வா. 36, 37.

(1) உமது சாட்சிகளைச் சாரும்படி என்னை உம்மண்டைக்கு இழுத்து பொருளாசையைச் சாராதபடி, அதின்மேல் ஜெயத்தை எனக்குத் தாரும். வா. 36.

(2) உமது நித்தியத்தின் வழிகள் யாவையும் எனக்குமுன் ஜீவனுடையவைகளாக்கி, மாயையைப்பாராதபடி என்னை விலக்கியருளும். வா. 37. நித்தியம் என்முன் பிரத்தியக்ஷமாயிருக்க, அநித்தியம் பறந்துபோகச் செய்யும்.

சயிரன்ஸ் பாடின பாட்டைவிட அதிக இன்பக் கவிகளைப்பாடி தன் கப்பல்காரரை ரட்சித்த கப்பல் தலைவனைப்போல, நீர் எனக்கு உம்முடைய வழிகளை அதிக இன்பமுடையவைகளாக்கி, பொருளாசை மயக்கமும் மாயையின் மயக்கமும் உம்முடைய பிரமாணங்களுக்குமுன் ஒன்றுமில்லாமல் போகச்செய்யும்.

3. இரண்டு விசேஷித்த பயத்தின் சம்பந்தமாய், நீர் என்னில் கிரியை நடப்பியும். வா. 38, 39.

(1) உமது வாக்குகளை நீர் எனக்கு நிறைவேறச் செய்யும்போது, உம்மைப்பற்றிய பயம் எனக்கு உண்டாகும். வா. 38.

(2) உமது நியாயத்தீர்ப்புகளைக் கைக்கொள்ளுவதின் நிமித்தம் மற்ற மனுஷரால் எனக்கு வரும் நிந்தையை என்னைவிட்டு அகற்றும். அதற்கு நான் அதிகமாய் பயப்படுகிறேன். வா. 39.

4. நீர் என் ஆத்துமாவில் புதுப்பெலன் கொடுக்க, உமது கட்டளைகள்மேல் முடிவுபரியந்தம் வாஞ்சை வைப்பேன். வா. 40.



உமது நீதியால் என்னை உயிர்ப்பியும் = உமது உடன்படிக்கைகளுக்கு உண்மையாயிருக்கும் உமது பரிசுத்த நீதியின் லட்சணத்தைப் பார்த்து, எனக்குப் புதுப்பெலன் கொடும்.

ஜெபம். எங்கள் அன்புள்ள பரமபிதாவே, நீர் என்னில் உமது கிரியையை நடப்பியும்; அப்போது நான் உமது பிரமாணங்களைக் கைக்கொள்ளுவேன். நீர் என்னில் கிரியை நடப்பியும்; அப்போது நான் பொருளாசையையும் மாயையான யாவையும் ஜெயிப்பேன். நீர் என்னில் கிரியை நடப்பிக்க, உமக்குப் பயந்து நடந்து நான் அஞ்சுகிற நிந்தைக்கு விலக்கிக் காக்கப்படுவேன். இயேசுவினிமித்தமே. ஆமேன்.

D. J. HARRIS.

## வேதாகமப் பாடமுறை. 21–ம் பாடம்

### 1 நாளாகமம். (தொடர்ச்சி)

II. சவுல், தாவீது இவர்களின் இராஜ்யபார சரித்திரம். அதி. 10—21. சவுலின் மரணம் (1 நாளாகமம் 10 அதி; 1 சாமு. 31 அதி). சவுலின் முடிவு பயங்கரம். அவனுடைய கீழ்ப்படியாமை அவனுக்கு அழிவை வருவித்தது. தாவீது சிங்காசனமேறினன். ஈசாயின் மகனிடத்தில் சேர்ந்தவர்களில் மூன்றுபேர் பராக்கிரமத்தில் பேர்போனவர்கள். 1. யாஷோபியாம், 2. எலெயாசார், 3. சம்மா, (11: 11, 12; 2 சாமு. 23: 11). மற்றப் பராக்கிரமசாலிகளில் பிரதானமானவர்கள் அபிசாய், பெனாயா (11: 20—22).

உடன்படிக்கைப்பெட்டியைத் தாவீதின் கூடாரத்திற்குக் கொண்டு வருதல் (அதி. 13—15.)

உடன்படிக்கைப்பெட்டியைத் தொட்டதினால் ஊசாய்க்கு நேர்ந்த சடுதியான மரணம் (15: 13—15). தேவனுடைய பெட்டியைப் பாதுகாக்க ஊசாய் தன் கையை நீட்டினதினிமித்தம் அக்ஷணமே அவனுக்கு நேரிட்ட தண்டனை, தமது ஜனங்களுக்குள்ளே தேவனுடைய பிரசன்னத்தையும் அவருடைய நுட்பமான கட்டளைகளையும் கைக்கொள்ளவேண்டும் என்கிற அவசியத்தையும் நமக்குப் போதிக்கிறதென, மார்ஹென் என்பவர் கூறுகிறார். உடன்படிக்கைப்பெட்டி பத்திரமாய்வந்து சேர்ந்தவுடன்; தாவீது கர்த்தருக்குத் துதியாக ஸ்தோத்திர சங்கீதம் (சங். 105: 1—15; சங். 96) உண்டாக்கிப், பாடகர்கள் அதைப் பாடும்படி செய்தான். கர்த்தருக்குத் தகன பலிகளையும் சமாதான பலிகளையும் செலுத்தினான். அவன் பாடின சங்கீதத்தில் யெகோவாவின் மகத்துவத்தையும் பெருமையையும் பூர்வீகத்தில் தங்கள் பிதாக்களுக்கு அவர் செய்த அற்புத அதிசயங்களையும் எடுத்துக் கூறி கர்த்தருக்குரிய மகிமையை அவருக்குச் செலுத்தவேண்டுமென்று ஜனங்களைத் தூண்டினான்.

பின்பு தாவீது தான் கர்த்தருக்கு ஒரு ஆலயத்தைக் கட்டவேண்டுமென்கிற ஆசையை வெளியிடுகிறான். அது விஷயத்தில் தீர்க்கதரிசியாகிய நாத்தானுடன் அவன் ஆலோசனைபண்ண, தீர்க்கதரிசியும் அவனைத் தைரியப்படுத்துகிறான். ஆனால் தேவதீர்மானம் வேறு. தாவீது கர்த்தருடைய ஆலயத்தைக் கட்ட கர்த்தர் சம்மதிக்கவில்லையென்றறிந்தபோது அவனுக்குப் பிரமிப்புண்டாயிருந்திருக்கலாம். மனிதர் சில காரியங்களை நடப்பிக்காதபடிக்குக் கர்த்தர் தடுப்பதற்கு நியாயங்களுண்டு. ஆனால் அவர் தமது நியாயங்களைச் சொல்லாதபடி தமது ஆலயத்தைக் கட்டுகிற பாக்கியம் அவனுக்கு மறுக்கப்பட்டபோதிலும் அவன் குமாரனுக்குக் கிடைக்குமென்று சொல்லி அவனை ஆறுதல்படுத்தினார்.

தாவீதின் அரசாட்சி, யுத்தங்கள், ஜெயங்கள். (அதி. 18—20; 1 சாமு. அதி. 8—1 ).

கடைசியாகத் தாவீது ஜனங்களைத் தொகையிடுதல். இச்செய்கை சாத்தானின் வல்லமையைத் தெளிவாய்க் காட்டுகிறது. இது தந்திரமாய் மறைந்திருக்கிற பாவங்களிலொன்று. வெளிக்குப் பாவமாகத் தெரியாது. மனிதர் தங்களையறியாமலே இவ்விதமான பாவங்களில் விழுவார்கள். ஆனால் தேவன் தமது நாமத்தையும் கனத்தையும்பற்றி வைராக்கியமுள்ளவர். தாவீதின் ஞானதிருஷ்டிக்காரனாகிய காத்தை ராஜாவினிடம் அனுப்பி அவனுக்கு முன்பாக மூன்று வாதைகளை வைத்து ஒன்றைத் தெரிந்துகொள் என்றார். ராஜாவோ 'கர்த்தருடைய கையில் விழுவேனாக' என்றான். இவ்வசனம் அதிக அருமையானது. ராஜா தன் முழுக்குற்றத்தையும் தேவனிடம் ஒப்புவித்து, அவர்மேல் முழுநம்பிக்கை வைத்து அவரிட்ட தண்டனையைச் சகிக்கத் தன்னைப் பூரணமாய் ஒப்புக்கொடுக்கிறான். தண்டனையிலும் அவரைவிட்டு விலக மனமில்லாதவன்.

III. தேவாலயம். அதி. 22—29.

(1) ஆலயத்தைக் கட்ட தாவீது செய்த ஆயத்தம். அதி. 22.

(2) ஆசாரியரின் பணிவிடைகளைத் தாவீது ஒழுங்குபண்ணுதல் அதி. 23—27.

(3) சாலொமோனுக்குத் தாவீது சொன்ன புத்திமதிகள். அதி. 28.

(4) தாவீதின் ஜெபமும், முடிவுரையும். அதி. 29.

(1) ஆலயத்தைக் கட்ட தாவீது செய்த ஆயத்தம். அதி. 22. தாவீது தன் விருப்பத்தின்படி தானே ஆலயத்தைக் கட்ட இடங்கிடையாமற்போயினும், அதற்கு வேண்டிய சாமான்களைச் சவதரித்து வைத்தான். தன் மகன் சாலொமோனை அதற்கென்று தைரியப்படுத்தினான். வா. 11—13; II சாமு. 7: 4—16). டாக்டர் மேக்லாரென் இதைப் பற்றிப் பின்வருமாறு கூறுகிறார். 'தாவீது ஆலயங்கட்டுவதற்கென்று



சாமான்களையும் செல்வத்தையும் வெகு கவலையாய்த் தேடிவையாமற்போனால் சாலொமோன் தானாகப் பொருள்சேர்த்து அதைக் கட்டிமுடிக்க அவனது அரசாட்சியில் வெகுகாலம் பிடித்திருக்கும். நாம் செய்கிற ஊழியம் நமக்குப் பின் வருகிறவர்களுக்கு நாம ஆயத்தம்பண்ணிக் கொடுக்கிற ஊழியமாயிருந்தால் அதை அற்பமாய் எண்ணாதிருப்போமாக. ஊழியத்தின் எந்தப் பாகத்திலாயினும பங்கு பெறுகிற யாவரும் ஊழியத்தின ஜெயத்திலும் பங்கு பெறுவார்களென்பது நிச்சயம். விதைக்கிறவனும் அறுக்கிறவனும் ஒன்றாய்ச் சேர்ந்து சந்தோஷிக்கக்கடவர்கள்' என்பதே.

(2) ஆலயப் பணிவிடைகளுக்கு தாவீது ஏற்படுத்தின ஒழுங்கு. அதி. 23—27. லேவியருக்குக் குறிக்கப்பட்ட முக்கிய பணிவிடைகள். அதி. 23, 24. தாவீது ஏற்படுத்தின பாடகர் வகுப்பில் அநேகர் சேர்ந்தார்கள். 400 பேர் கீதவாத்தியங்களால கர்த்தரைத் துதித்தார்கள்.

(3) சாலொமோனுக்குத் தாவீது சொன்ன புத்திமதிகள். அதி. 28. தாவீது தன் ராஜ்யத்திலுள்ள சகல பிரபுக்களையும், பிரதானிகளையும், ராணுவத்தலைவரையும் அழைப்பித்துக் கூடிவரப்பண்ணி, அவர்களுக்கும, குமாரன் சாலொமோனுக்கும் புத்திமதிகள் சொல்லுகிறான். இப்புத்திமதிகள் சபையாருக்கும், சாலொமோனுக்கும பொதுவாய்ச் சொல்லப்பட்டவைகளாகும். கடைசியாக சாலொமோனுக்குச் சுருக்கம் சுருக்கமாய் புத்திமதிசொன்னான். அவனுக்கு ஒரு காரியம அழுத்தமாய்ச் சொல்லப்பட்டது. அதாவது உன் பிதாக்களின் தேவனை அறிந்துகொள். இதுவே இப்புத்திமதியின் அஸ்திபாரம். சாலொமோனின் கீழ்ப்படிதலில் இனிவரும் ஆசீர்வாதம் அடங்கியிருக்கிறது. கர்த்தருக்குள் திடமனதாயிருந்து காரியங்களை நடப்பிக்கத் தைரியப்படுத்துகிறான்.

(4) தாவீதின் பிரார்த்தனையும் முடிவுள்ள சம்பவமும். அதி. 29. தாவீதின் ஜெபத்தில் தேவனுடைய வல்லமை, மகத்துவம், மாட்சிமை பூமியின் கடையாந்தரபரியந்தமும் ஆளுகை ஆகிய இவைகளை எடுத்துக் கூறுகிறான். பிரார்த்தனை முடிவில் சபையார் தலைகுனிந்து வணங்கினார்கள். பலிகள் செலுத்தப்பட்டன. சாலொமோனை ராஜாவாக்கினார்கள். ஜனங்கள் யாவரும் சாலொமோனுக்கு அடங்கியிருந்தார்கள். தாவீது 40 வருஷம் ராஜ்யபாரம்பண்ணினபின் நல்ல முதிர்வயதில் மரணமடைந்தான். அவனுடைய கடைசி நாட்கள் செல்வமும் மேன்மையும் பொருந்தியிருந்தன.

## 'கொடுங்கள்: அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்'

சில வருஷங்களுக்குமுன் சுகவீனத்தினால் யாதொரு வேலையும் செய்யக்கூடாத நிலைமையில் முழுவதும் தேவ பராமரிப்பிலேயே தங்கள் முழு நம்பிக்கையையும் வைத்திருந்த ஓர் பக்தியுள்ள குடும்பத்தார் இருந்தார்கள். அக்காலங்களில், கஷ்டம் அதிகமாயிருந்தபோதிலும் தேவனுடைய அன்பையும் இரக்க உருக்கங்களையும் நன்றியறிதலோடு நினைவுகூரும் காலங்களாயுமிருந்தன.

ஒரு சமயத்தில் ஆகாரத்திற்கு வழியில்லாத நிலைமைக்கு வந்துவிட்டார்கள். ஆனால் கிறிஸ்துவையும் அவருடைய மட்டற்ற கிருபையையும் நன்குணர்ந்தவர்களானபடியால் இவ்விதக் கஷ்டம் நேரிடுகிறதற்கு ஏதாவது முகாந்தரம் இருக்கவேண்டுமென்று தங்களை ஆராய்ந்து பார்க்க ஆரம்பித்தார்கள். தாங்கள் அவருக்காக அல்லது அவருடைய பிள்ளைகளுக்காகச் செய்யவேண்டியதும் தாங்கள் செய்யக்கூடியதுமான ஏதாவது குறையிருக்குமோவென்று சந்தேகித்தார்கள். 'உங்களுக்குக் கொடுக்கப்படும்' என்பது நிறைவேறவேண்டுமானால் அதற்குமுன், 'கொடுங்கள்' என்பது நிறைவேறவேண்டுமென்று யோசித்தார்கள். தங்களுக்கு மிச்சமானதும் மற்றவர்கள் குறைவின்றி உபயோகிக்கத்தக்கதுமான வஸ்துவும் ஏதாவது தங்களிடத்திலிருக்குமோவென்று தேடிப் பார்த்தார்கள்; இல்லை. தங்கள் புஸ்தகங்களில் ஏதாவது பிரயோஜனமற்றதாய், தேவ ஊழியர் யாராவது மிகுந்த ஆதாயத்தோடு உபயோகிக்கக் கூடியதாய், தங்கள் புஸ்தகசாலையில் இருக்குமோவென்றும் பார்த்தார்கள். அப்படியும் இல்லையென்று கண்டார்கள். அப்படியானால் காரியம் என்ன? தேவனுடைய வாக்குத்தத்தங்கள் மாறுதலடைவதில்லையா? தங்களிடத்தான் ஏதோ குறையிருக்கிறதென்று நிச்சயித்துக்கொண்டு முன்னிலும் அதிகமாய் விசாரணை செய்தார்கள். கடைசியாக, தங்களுக்கு அநேக வாரங்களுக்குப் போதுமான வெண்ணெய் அப்பொழுதுதான் ஓரிடத்திலிருந்து வந்திருக்கிறதைக் கண்டுபிடித்து அதைத் தங்களுக்கென்று வெகுகாலத்துக்குச் சேர்த்துவைத்திருப்பதிலும் அதையும் அவசியமானவர்களுக்குப் பகிர்ந்து கொடுப்பதுதான் தங்கள் கடமையென்றுணர்ந்து அதைச் சிறு பார்சல்களாகக் கட்டி இவ்விதக் குறைவுபட்டவர்கள் யார் யாரென்று தங்களுக்குத் தெரியுமோ அவர்களுக்கெல்லாம் அதை அனுப்பினார்கள். இப்படி அனுப்பிக்கொண்டிருக்கும்போதே, 'உங்களுக்குக் கொடுக்கப்படும்' என்பதின் நிச்சயத்தைக் கண்டுபிடித்தார்கள். இச்சம்பவம் நடந்து ஒருவருஷத்துக்குப் பின்தான் தங்கள் வெண்ணெய் பகிர்ந்து கொடுத்ததும் தேவ நடத்துதலாயும் அதுவும் தேவனுடைய பிள்ளைகளின் குறைவு நிறைவுபட்டதென்றும் கண்டுபிடித்துக் களிகூர்ந்து தேவனை மகிமைப்படுத்தினார்கள். அதாவது:—அவர்களிருந்த



பட்டணத்தில் இரக்ஷண்ய சேனையைச் சேர்ந்த ஓர் தளகர்த்தரும் அவருடைய குடும்பமும் இருந்தது. அவருடைய மனைவி அப்பொழுது சிலகாலமாய் வியாதிப்பட்டு பசியை இழந்து வெண்ணெய் கிடைத்தால் தன் நோய் தீரும் என்று கவலைப்பட்டுத் தன் புருஷனிடத்தில் வெண்ணெய் வாங்கித் தரும்படிக் கேட்டாள். புருஷனோ வெண்ணெய் வாங்கப் பணமில்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்து ஒருநாள் சாயங்காலம் கூட்டத்துக்குப் போகுமுன் மனைவி அதிக ஆத்திரத்தோடு வெண்ணெய்க்காகக் கெஞ்ச, நான் கூடியமட்டும் பிரயாசப்படுவேன். பணமில்லாததால் நான் வேறென்ன செய்யக்கூடும் என்று சொல்லிப்போனார். கூட்டத்துக்குப் போகவே, அங்கே ஆண்டவருக்காகச் செய்துகொண்டிருந்த ஊழியத்தின் மத்தியில் மனைவியின் வேண்டுகோளை மறந்து கூட்டம் முடிந்தபின் வீட்டுக்குப் புறப்பட்டார். புறப்பட்டு வருகிற வழியில் ஓர் பார்சல் அவர் கையில் கிடைத்தது. அதை உடைத்துப் பார்க்காமல் நேரே வீட்டுக்குக் கொண்டு வந்தார். வியாதிக்காரியான மனைவிக்குமுன் நின்று அதை உடைத்துப் பார்க்கவே, அதுவே மனைவி கெஞ்சிக் கேட்ட வெண்ணெய் என்று கண்டு ஆண்டவரைத் துதித்தார்கள். கொடுங்கள்; அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும். ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைத் தாராளமாய்ப் பெற்றிருப்பவர்களாகிற சகோதரரே, சகோதரிகளே, இந்த வாக்கின் சத்தியத்தை உங்கள் ஜீவியத்திலும் பரீட்சித்துப் பாருங்கள்.

## மிஷனெரி வர்த்தமானங்கள்

கொரியா சபைகள். டாக்டர் கிளார்க் என்பவர் எழுதுகிறதாவது: எங்கள் சமுசாரிகள் மிகவும் ஏழைகள். அதிக வரும்படியில்லாத மாதங்களில் தேவ ஊழியருக்குப் பூரணசம்பளம் கொடுப்பது மிகவும் கஷ்டம். அதினால் ஆராதனைகளின் சந்தோஷம்கூடக் கெட்டுப்போகத்தக்கதாயிருக்கும். என் சேனையைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள் 200 அல்லது 300 பேர் தானிருக்கும். சம்பளத்தில் மூன்றில் இரண்டு பாகத்தைக் கொடுத்துவிடுவார்கள். அடுத்த பாகம் கிடைப்பது மெத்தக் கஷ்டம். அந்தக் கஷ்டம் நீங்குவதற்காக ஜனங்களே ஒருவழி கண்டுபிடித்துச் சொன்னார்கள். அதாவது தாங்கள் சொந்தமாய் நிலத்தை மானியமாகவிடவும் அதன் வரும்படியிலிருந்து ஊழியரின் மூன்றிலொரு சம்பளத்தைச் சரிப்படுத்தவுமே. அப்படி மானிய நிலம் வாங்கப் பணம் சேகரிக்க ஆரம்பித்தார்கள். சிலர் வருஷத்தில் சில நாட்களின் சம்பளத்தைக் கொடுத்தார்கள். [illegible] நிறுத்திவைத்து அதனால் செல்லும் செலவைக் கொடுத்தார்கள். சிலர் தங்கள் ஞாபகார்த்தமான ஆபரணங்கள் கலியாண மோதிரங்களைக் கொடுத்தார்கள். ஒருவன் தன் தானியத்துக்காகப் பண்டசாலைக் கட்ட வைத்திருந்த பணத்தைக் கொடுத்தான். இவ்விதமாக சில மாதங்களுக்குள் மூன்றிலொரு பாகத்துக்கும் போதுமான நிலம் வாங்கும் பணம் வந்துவிட்டது

அவர்கள் ஆவிக்குரிய ஜீவியமும் தளர்ந்துபோகவில்லை. ஜெபக்கூட்டங்கள் ஒழுங்காய் நடந்துவருகின்றன. சபையாரே நடத்துகிறார்கள். ஆலயங்கள் பகல் முழுவதும் திறந்து வைக்கப்பட்டிருக்கும். காலையில் வெளிச்சமானவுடன் ஜெபிக்க அநேகர் வந்து கூடுவார்கள். சபையில் இடைக்கிடையே நூதனமான ஆட்கள் விசேஷமாய் வாலிபர் வந்துகொண்டேயிருப்பார்கள்.

**பௌர்ணமி பிரசங்கம்.** கொரியா சபையார் இந்த வேலையை உற்சாகமாய்ச் செய்து வருகிறார்கள். சுவிசேஷம் அறிவிக்கப்படாத புது இடங்களைத் தேடி அங்குபோய் இரவில் பிரசங்கம் செய்கிறார்கள். கலியாணத்துக்கு உபயோகிக்கும் கூடாரங்களை வாடகைக்கு அமர்த்தி அவைகளை அப்படிப்பட்ட ஊர்களில் அடித்து பக்கத்து ஊர் கிறிஸ்தவ சபையார் தாங்கள் செய்துவரும் வேலையைத் தொடர்ச்சியாய் நடத்திவருவோமென்றால் மட்டும் வேலையை ஆரம்பிப்பார்கள். ஜனங்கள் உட்காரப் போதுமான பாய்களும் வாடகைக்கு வாங்கிக்கொண்டுபோவார்கள். பகலில் ஊருக்குள் நோட்டீஸ் கொடுத்து இரவில் கூட்டம் நடத்துவார்கள். சராசரி 500பேர்கள் கூடுவார்கள். இவர்களெல்லாரும் இதற்குமுன் சுவிசேஷத்தைக் கேள்விப்படாதவர்கள். ஆசையோடு கேட்கிறவர்களைக் குறித்துக்கொண்டு பக்கத்து ஊர் சபையார் ஓய்வுநாட்களில் அவர்களுக்கு ஆராதனைவைத்து நடத்துவார்கள். இவ்விதமாக மூன்று மாசத்துக்குள் குறைந்தது 25,000 பேர் வசனத்தைக் கேட்டார்கள். இதன் பலனாக வாரந்தோறும் 25 முதல் 50 ஆட்கள் வரை திருச்சபையில் சேர்ந்துகொண்டே வருகிறார்கள். ஒவ்வோர் ஊர்ச்சபையாரும் தங்களிலிருந்து பிரசங்கத்துக்குப் போகிறவர்களுடைய பிரயாணச் செலவு, சாப்பாட்டுச் செலவு, கூடாரம், பாய் இவைகளின் வாடகையில் தங்களுக்குவரும் பாகம் இவ்வளவையும் ஏழைகளான சபையார் தங்கள் வறுமையிலிருந்து மிகுந்த உற்சாகமாய்க் கொடுத்து வருகிறார்கள்.

### சந்தா வரவு

| | RS | A. | P | | RS. | A. | P. |
|---|---|---|---|---|---|---|---|
| Mr. C. ornam | 1 | 0 | 0 | Mr. M. Pakkianathan | 0 | 7 | 0 |
| Mrs. S. T. Chinnappa | 0 | 7 | 0 | ,, A. S. Devavaram | 0 | 7 | 0 |
| Miss. S. R. Howland | 15 | 6 | 0 | Name not known M. O. | 0 | 7 | 0 |
| Mr. V. Joseph | 0 | 14 | 0 | ,, M. O. | 0 | 7 | 0 |
| ,, J. Sundaram | 0 | 7 | 0 | Rev. Bunyan | 1 | 2 | 0 |
| ,, J Srinivasagam | 0 | 15 | 0 | Mr. F. J. Arulappa Pillai | 1 | 0 | 0 |
| Rev. D Jesudason | 9 | 4 | 0 | Rev. D. A. Samuel | 0 | 7 | 0 |
| ,, A. Paramanandam | 0 | 14 | 0 | M. G. P. Venkoba | 0 | 7 | 0 |
| Miss. Munisami | 0 | 7 | 0 | Mr. Muthusami Pillai | 0 | 10 | 0 |
| Rev. S. D. Velupillai | 5 | 4 | 0 | ,, R. P. Hensman | 0 | 9 | 0 |
| Mr. Joseph Nadar | 0 | 8 | 0 | ,, M. Devasundaram | 0 | 8 | 0 |
| Rev. G. Kantaya | 0 | 8 | 0 | ,, P. K. Vanath | 0 | 5 | 0 |
| | | | | Rev. S. M. Devadas | 1 | 12 | 0 |

Printed at the Palamcottah Printing Press, Palamcottah and published by the Christian Brotherhood Association, Tinnevelly.

407

OFFICE OF THE REGISTRAR ... 28 JAN 1918 MADRAS

January 1918. Registered No. M. 163

# The Water of Life
# ஜீவத்தண்ணீர்

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்." யோவான் 7: 38.

Vol. XIX ஜனவரி ௴ 1918

## முன் ஒருபோதும் நடவாத வழி

'இதற்கு முன்னே நீங்கள் ஒருபோதும் இந்த வழியாய் நடந்துபோகவில்லை'. யோசு. 3: 4.

இஸ்ரவேல் புத்திரருக்கும் நமக்கும் பழக்க வழக்கங்களிலும் உடைநடை பாவனைகளிலும் இன்னும் பலவகையிலும் மிகுந்த பேதமுண்டென்பது உண்மையாயினும் ஜீவியத்துக்கடுத்த விஷயத்தில் நாமும் அவர்களும் ஒன்றுதான் என்பது மெய். அவர்களுடைய வனாந்தர பிரயாண சரித்திரம் புது வருஷத்தில் பிரவேசிக்கிற நமக்கு எவ்வளவோ போதனை நிறைந்ததாயிருக்கிறது. கர்த்தருடைய தாசனாகிய மோசே மரித்து கர்த்தரால் அடக்கம்பண்ணப்பட்டான். நூனின் குமாரன் யோசுவாவை கர்த்தர் தெரிந்துகொண்டு மோசேக்குப் பதிலாக ஏற்படுத்தினார். இஸ்ரவேலர் வாக்குப்பண்ணப்பட்ட தேசத்தை சுதந்தரித்துக்கொள்ளும்படி நடத்தவேண்டியது இவனுடைய வேலை. ஜனங்கள் சித்தீமிலிருந்து பிரயாணம் பண்ணி யோர்தான் நதிக்கரை வந்துசேர்ந்தார்கள். நதியைக் கடக்குமுன்னே யோசுவா ஜனங்களைப் பார்த்து: 'இதற்கு முன்னே நீங்கள் ஒருபோதும் இந்த வழியாய் நடந்துபோகவில்லை' என்கிறான். வனாந்தர ஜீவியத்தை முடித்து நல்ல தேசத்தை நோக்கினவர்களாய் நிற்கிறார்கள். பழைய வருஷத்தைக் கடந்து புது வருஷத்தின் ஓரத்தில் நிற்கிற நமக்கும் இவை ஏற்ற வார்த்தைகளல்லவா? புது வருஷம் நமக்கு முன் நிற்கிறது. அதில் அநேக மாசங்களும் வாரங்களும் நாட்களுமுண்டு. ஆகிலும் அது இதற்கு முன்னே நாம் ஒருபோதும் நடவாத வழி என்பது எவ்வளவு சத்தியம்!

இரண்டு காரியங்களை எடுத்துத் தியானிப்போம்.

முதலாவது, புது வருஷத்தைப்பற்றிய அதிசயம்.

இரண்டாவது, புது வருஷத்தைப்பற்றிய நிச்சயம்.

**I. புது வருஷத்தைப்பற்றிய அநிச்சயம்.** இதோ யோர்தான் நதிக்கரையில் நிற்கும் ஜனங்களைப் பாருங்கள். வாக்குத்தத்த தேசத்தை நோக்கினவர்களாக நிற்கிறார்கள். ஆனாலும் ஒருபோதும் அவ்வழியாக இதற்குமுன் போனவர்களேயல்ல. நாற்பது வருஷங்களுக்கு முன் இவர்கள் இந்த இடத்திற்கு வந்தார்கள். தேசத்தை வேவு பார்க்கப் போனவர்கள் மூலமாய் அத்தேசத்தின் மலைகள், பள்ளத்தாக்குகள், கோட்டை கொத்தளங்கள், பெரிய வீடுகள், நதிகள், அங்கே வசித்த ஜனங்கள், தேசத்தின் செழிப்பு, முதலான காரியங்களைக் குறித்து அப்பொழுது கேள்விப்பட்டிருந்தார்கள். அக்காலத்தில் பெரியவர்களாயிருந்தவர்கள் தங்களுடைய அவிசுவாசம், முறுமுறுப்பு, மற்றும் பாவங்களினிமித்தம் வனாந்தரத்தில் மடிந்துபோனார்கள். அவர்களுடைய பிள்ளைகளுக்குத் தேசத்தைக்கொடுப்பேன் என்று தேவன் சொல்லியிருந்தார். பிள்ளைகள் பெரியவர்களாகி யோர்தான் நதிக்கரையில் நின்றபோதிலும் தாங்கள் சிறுவர்களாயிருந்தபோது தேசத்தைப்பற்றிக் கேள்விப்பட்டது ஞாபகமிருக்கலாம். ஆகிலும் திட்டமாக இவர்களுக்கு ஒன்றும் தெரியாது. முன் ஒருபோதும் இவர்கள் நடவாதவழி. முன் ஒருபோதும் இவர்கள் பிரவேசிக்காத தேசம். யோசுவா சொன்ன வார்த்தைகள் உண்மையே சகோதரரே! புதிய வருஷம் நமக்கு முன் இருந்தபோதிலும் அவ்வருஷத்தைப்பற்றி நமக்கு என்ன தெரியும்? நமக்கு என்ன நிச்சயமுண்டு? முன் ஒருபோதும் நாம் நடவாத வழியில் நடக்கப் போகிறோமே. புது வருஷத்தின் அறியாமையிலிருந்து மூன்று காரியங்கள் உண்டாகிறது.

ஒரு ஆசை. பாலும் தேனும் ஓடுகிற நல்ல தேசத்தைக் காணும்படி ஜனங்களுக்கு எவ்வளவோ ஆசையிருந்திருக்கும்! ஆபிரகாமுக்கு ஆதியில் வாக்குப்பண்ணப்பட்டு, அநேக வருஷங்களாக ஞாபகப்படுத்தப்பட்டு, ஆவலோடு எதிர்பார்க்கப்பட்ட தேசம். அதில் பிரவேசிக்கப்போகிறோம் என்கிற செய்தி அவர்களுக்கு எவ்வளவோ ஆசையை உண்டாக்கியிருக்கவேண்டும். நூதனமான காரியங்களை அறிய நாடுவதும் மறைவான விஷயங்களைக் காணும்படி ஆசிப்பதும் மனுஷ இயல்பே. உலகத்தில் நடக்கும் விசேஷங்களை அறியும்படியான ஆசை வர்த்தமான பத்திரிகைகளை ஆவலோடு வாசிக்கும்படி ஏவுகிறது. இந்தப் புது வருஷம் நமக்கு மறைவான வருஷம்போலிருக்கிறது. அதில் என்னென்ன சம்பவிக்கும் என்று தெரியாது. ஆகையால் இயல்பாகவே இந்த வருஷத்தில் ஏதாகிலும் ஒரு ஆசீர்வாதம், ஒரு அனுகூலம் வந்துவிடாதாவென்று நாம் ஆசைப்படுகிறோம். கடந்த வருஷத்தில் கஷ்டப்பட்டேனே, இந்த வருஷத்திலாவது கஷ்டம் நீங்கிவிடாதா? தரித்திரம் ஒழிந்து ஒரு நற்காலம் பிறந்துவிடாதா? என் பிள்ளைகளுக்கு ஒரு ஒழுங்காகாதா? உத்தியோகத்தில் உயர்வு வந்துவிடாதா? நோயும் நொம்பலமும் நீங்கி தேக ஆரோக்கியம் கிடைக்காதா?



என் ஜீவியத்தில் இன்னும் பரிசுத்தமாகமாட்டேனா? என் ஊழியத்தில் இன்னும் அதிகப் பலன் காணமாட்டேனா என்று நன்மையான பல காரியங்களைப் புது வருஷத்தில் ஆசையோடு எதிர்பார்ப்பதும் இயல்பு. தேவன் தம்மை நம்புகிறவர்களைக் கைவிடாமல் புது வருஷத்தில் புதிய நன்மைகளினால் நிரப்பச் சித்தமுள்ளவராயுமிருக்கிறார்.

ஆசைமாத்திரமல்ல ஒரு அச்சமும் உண்டாகிறது. இதற்குமுன் ஒருபோதும் நடவாத பாதையாயிருக்கிறதே. வழியில் என்ன ஆபத்து சம்பவிக்குமோ? வனாந்தரத்தின் பயங்கரங்களை அறிவோம். இனிமேல் போகும் வழியில் எத்தனை பயங்கரங்களோ? கடக்கவேண்டிய ஆறு எவ்வளவு ஆழமோ? சகிக்கவேண்டிய சங்கடங்கள் எவ்வளவு அகோரமோ? நடக்கவேண்டிய வழி எவ்வளவு தூரமோ? மறைவான சத்துருக்கள் மேல்விழுந்து அடிப்பார்களோ? பலத்த போர்வீரர்களோடு போராட நமக்குப் பெலனுண்டோ? இப்படி அறியாத வழியைக் குறித்து அநேக திகில்கள் அவர்களுக்கு உண்டாயிருக்கும். புதிய வருஷத்தின் பயம் நம்மையும் பிடிக்கக்கூடியதே. நமக்கு விரோதமாகப் போர்செய்ய புதிய சத்துருக்கள் வழியிலிருக்கலாம். குடும்பத்தில் என்னென்ன மாறுதல்களோ? எதிர்பாராத துன்பம் நேரிடுமோ? அருமையானவர்கள் நோய்க்குள்ளாகி நம்மைவிட்டுப் பிரிவார்களோ? உத்தியோகத்திற்கு மோசம் வருமோ? மனுஷருடைய விரோதங்கள் ஏற்படுமோ? இப்படி நாம் இன்னும் நடவாத புதிய வருஷத்தைக் குறித்து அச்சமும் பயமும் உண்டாவது இயல்பே.

அச்சமாத்திரமல்ல ஒரு ஆயத்தமும் உண்டாகிறது. புது வருஷத்தில் பிரவேசிக்கும்போது அடையக்கூடிய நன்மைகளை நினைத்துச் சந்தோஷமும், நேரிடக்கூடிய சங்கடங்களை நினைத்துப் பயமும் உண்டானாலும், நம்மை ஆயத்தம்பண்ணிக்கொள்ளவேண்டுமென்கிற எண்ணமும் உண்டாகிறது. புது வருஷத்தில் என்னென்ன காரியங்கள் சம்பவித்தாலும் தேவகிருபையினால் நாம் அதற்கெல்லாம் ஆயத்தமாயிருக்கவேண்டும். வனாந்தரம் பின்னும் தேசம் முன்னுமாக நிற்கிற ஜனங்களைப் பார்த்து யோசுவா: 'உங்களைப் பரிசுத்தம் பண்ணிக்கொள்ளுங்கள், நாளைக்கு கர்த்தர் உங்கள் நடுவில் அற்புதங்களைச் செய்வார்' என்கிறான். இந்த வருஷத்தில் சம்பவிக்கப்போகிறதெல்லாம் நான் இன்றைக்கே அறியக்கூடுமானால் நான் கவலையற்றவனாயிருப்பேன். அறியாதபடியினால்தான் ஆயத்தம் அவசரம். எதிரியின் பெலனை அறியாதிருக்கும்போது எவ்வளவோ பெரிய ஆயத்தம் அவசரமே. ஐரோப்பாவில் யுத்தம் ஆரம்பித்தபோது ஜெர்மானியர் தகுந்த ஆயத்தமுள்ளவர்களாயிருந்தார்கள். மற்றவர்களுக்கு அவ்வளவு ஆயத்தமில்லை. அதனால் நேரிட்ட கலக்கமும் கவலையும் இவ்வளவென்று சொல்லமுடியாது. ஆகிலும் அதிக ஜாக்கிரதையோடும் விழிப்போடும் சகல விஷயத்திலும் இவர்கள் தங்களை ஆயத்தம்பண்ணிக்கொண்டபோது எதிரியோடு போராடக்கூடியவர்களானார்கள். முன் நடவாத பாதை

யில் நடக்கப்போகிற நமக்கு ஆயத்தம் வேண்டும். சத்துருவின் சகல வல்லமையையும் மேற்கொள்ளத்தக்க உன்னத பெலத்தோடு இவ்வருஷத்தில் பிரவேசிப்போமாக. சாத்தானுடைய சகல உபாய தந்திரங்களையும் ஜெயிக்கத்தக்கதாக சர்வாயுதவர்க்கத்தை தரித்துக்கொண்டு முன் செல்லுவோமாக. பரிசுத்தமே சிறந்த ஆயத்தம். நாளைக்கு மாத்திரமல்ல நாட்களெல்லாம் தேவதுணையைப்பற்றிக்கொண்டு நடப்போமாக.

II. புது வருஷத்தைப்பற்றிய நிச்சயம். 'இதற்கு முன்னே நீங்கள் ஒருபோதும் இந்த வழியாய் நடந்துபோகவில்லை' என்ற வார்த்தைகள் நமக்குள் ஒருவகையான அச்சத்தையும் திகிலையும் உண்டாக்கினபோதிலும் நாம் தைரியத்தோடும், சந்தோஷத்தோடும், நிச்சயத்தோடும் முன் அறியாத வழியில் நடக்கும்படி நம்மை ஏவிவிடுகிற காரியங்கள் உண்டா? உண்டு அவை மூன்று காலங்களைக் காட்டும்.

முதலாவது கடந்த காலத்தை நினைவுகூறவேண்டும். மோசே கடைசியாகச் சொன்ன வார்த்தைகள் மகா முக்கியம். 'கர்த்தர் உன்னை இந்த நாற்பது வருஷமளவும் நடத்திவந்த எல்லா வழியையும் நினைப்பாயாக' என்றான். கடந்த காலத்தில் கர்த்தர் செய்த செயல்களை நினைப்பதே வருங்காலத்தைப்பற்றி நமக்கிருக்கிற தைரியம். கடந்த காலத்தில் தேவன் நம்மை நடத்திவந்த விதத்தை சந்தேகிக்கப்பண்ண யாராலும் கூடாது. ஒருவேளை இனிவருங்காலத்தைக்குறித்து ஒருவன் என்னைக் கலங்கப்பண்ணலாம். இப்படி அப்படி நடக்கபபோகிறதென்று பயப்படுத்தலாம். சில வருஷங்களுக்கு முன்னே ஒரு ஜோஷியன் தென் இந்தியாவில் பயங்கரமான பூமியதிர்ச்சி உண்டாகப்போகிறதென்று அறிவித்தான். அநேக ஜனங்கள் கலங்கி அன்றிரவில் வீடுகளையும் ஊர்களையும்விட்டு ஓடி வெளியிற்போய்த் தங்கினார்கள். ஆனால் கடந்தகால அனுபவத்தை மாற்ற யாரால் கூடும்? அது நாம திட்டமாய் அறிந்த விஷயம. நிச்சயமாய்க் கண்ட காரியம்.

இந்த ஜனங்கள் மோசேயின் வார்த்தைப்படி தேவன் தங்களை நாற்பது வருஷமாக நடத்தின அதிசய நடத்துதல்களை நினைத்துப் பார்க்கிறார்கள். பெரிய தைரியம் உண்டாகிறது. என்ன, எகிப்தின் பலத்த அடிமைத்தனத்திலிருந்து விடுவித்த ஆண்டவர் கானானில் பிரவேசிக்கப்பண்ண மாட்டாரா? சிவந்த சமுத்திரத்தில் வழியை உண்டாக்கின வல்லவர் யோர்தான் ஆற்றிலும் வழியை உண்டாக்கமாட்டாரா? வானத்திலிருந்து மன்னாவைக் கொடுத்தவர் தேசத்தின் நன்மையினால் திருப்தி செய்யக் கூடாதா? கன்மலையிலிருந்து தண்ணீர் வரப்பண்ணினவர் பாலும் தேனும் கொடுப்பது பெரிய காரியமா? பயங்கரமான வனாந்தரத்திலே வழிநடத்தினவர் தேசத்திலும் வழிநடத்தமாட்டாரா? என்று தேவன் தங்களை இதற்குமுன் நடத்திவந்த விதத்தை நினைத்துப்பார்த்து இனிமேலும் அப்படி நடத்துவார் என்று தைரியம் கொண்டார்கள். தாவீது ராட்சதனாகிய



கோலியாத்துக்கு முன் நின்றபோது தான் முன்னே சிங்கத்தையும் கரடியையும் கொன்றதை நினைவுகூர்ந்து மேற்கொண்டான். தனக்குக் கலக்கமும் சோர்வும் உண்டாகும்போதெல்லாம் கர்த்தர் எனக்குச் செய்த நன்மைகளை நினைவுகூருவேன். பூர்வகாலத்து அதிசயங்களை நினைவுகூருவேன் என்று சொல்லியிருக்கிறான். இஸ்ரவேலர் கர்த்தர் தங்களுக்குச் செய்த நன்மைகளையும் அதிசயங்களையும் மறந்துபோனபோதெல்லாம முறுமுறுத்துக் கலகம்பண்ணி தேவகோபாக்கினைக்குள்ளானார்கள். சகோதரரே, அறியாத புது வருஷத்தில் சந்தோஷத்தோடும் நம்பிக்கையோடும் பிரவேசிக்கத்தக்கதாக தேவன் கடந்த வருஷங்களில் நமக்குச் செய்த நன்மைகளை நினைப்போமாக. அவைகளைத் திரும்பவும் திரும்பவும் நினைத்து அவனைத் துதிப்போமாக. முன் நடத்தின வல்ல தேவன் இந்த வருஷத்திலும் நடத்துவது எவ்வளவு நிச்சயம் என்று சொல்லுவோமாக.

இரண்டாவது தற்காலத்தையும் கவனிக்கவேண்டும். அறியாத பாதையில் இஸ்ரவேலர் தைரியமாய் நடக்கத்தக்கதாக தேவன் இரண்டு காரியங்களை அவர்கள் கண்களுக்கு முன்பாக வைத்தார். ஒரு பெட்டி, ஒரு தலைவன். பிரயாண விஷயத்தில் சில மாறுதல்களைக் காண்கிறோம். பயங்கரமான வனாந்தர பிரயாணம் ஒழிந்தது; தேசப்பிரயாணம் ஆரம்பித்திருக்கிறது; இதுவரை அவர்களை வழிநடத்திவந்த மேகஸ்தம்பம் அக்கினிஸ்தம்பம் நின்றுவிட்டன; கர்த்தருடைய பெட்டி இதுமுதல் அவர்களை நடத்தும். இந்தப் பெட்டி இதற்கு முந்தியே அவர்களோடு இருந்தது. ஆனால் அது அவர்களை வழிநடத்தாமல் மேகம் வழிநடத்திற்று. மேகம் நிற்க அவர்கள் நிற்பார்கள். மேகம் முன்செல்ல அவர்கள் பின்செல்லுவார்கள். இனிமேல் பெட்டி முன்செல்ல அவர்கள் தூரத்தில் பயபக்தியோடு பின்செல்லவேண்டும். வனாந்தரத்தில் மோசே தலைவனாயிருந்து நடத்திவந்தான். இப்பொழுது யோசுவா நடத்தப்போகிறான். இதிலும் மாறுதலைக் காண்கிறோம். எங்களுக்கு மேகம்தான் வேண்டுமென்று அவர்கள் சொல்லக்கூடாது. எங்களுக்கு மோசேதான் வேண்டுமென்றும் சொல்லக்கூடாது. தேவன் தமது ஞானத்தின்படியே காலத்துக்கும் சமயத்துக்கும் ஏற்ற மாறுதல்களை உண்டாக்குவார். அவருடைய வார்த்தைக்குச் செவிகொடுத்து முன் செல்லவேண்டியதே அவர்கள் கடமை.

நாம் திக்கற்றவர்களாக இந்த அறியாத வருஷத்தில் பிரவேசிக்கிறதில்லை. நமக்கும் இரண்டு உண்டு. கர்த்தருடைய வசனமும் தலைவராகிய இயேசுவும் கர்த்தருடைய வார்த்தையினால் உண்டாகும் நம்பிக்கை, ஆறுதல், தைரியம், விசுவாசம, மகிழ்ச்சி இவ்வளவென்று சொல்லமுடியாது. நாம் நடக்கும்போது அது வழிகாட்டும். படுக்கும்போது நம்மைக் காப்பாற்றும். விழிக்கும்போது அது சம்பாஷிக்கும். நமது பாதைக்கு அது வெளிச்சம். இக்கொடிய காலத்தில் மனுஷர் வேதத்தை மறந்து அசட்டைசெய்து அற்பமாய் எண்ணிவிட்டார்கள். ஆகையால் உலகமும் பிசா

சும பாவமும் அப்படிப்பட்டவர்களைப் பூராவாக ஆண்டுகொண்டு நடத்துகிறது. தேவனுடைய பிள்ளைகளே! நீங்கள் இந்த வருஷத்தில் நன்றாயிருக்கவேண்டுமானால் வேதத்தை நேசித்து அடிக்கடி அதிகமாக வாசித்துத் தியானியுங்கள். அவருடைய கிருபையால் வசனத்துக்குக் கீழ்ப்படிந்து நடவுங்கள். எப்பேர்ப்பட்ட தீங்கும் உங்களை மேற்கொள்ளமாட்டாது. புதுவருஷப் பிரயாணம் உங்களுக்கும் உங்கள் குடும்பத்துக்கும் ஆசீர்வாதமாயிருக்கும்.

எபிரேயர் நிருபத்தில் மோசே ஜனங்களுக்கு விடுதலை கொடுத்தபோதிலும் தேசத்தில் பிரவேசிக்கச் செய்யவில்லையென்றும், யோசுவா அவர்களை பிரவேசிக்கச் செய்தபோதிலும் இளைப்பாறுதல் கொடுக்கவில்லையென்றும் சொல்லியிருப்பதைக் காணலாம். இரட்சிப்பின அதிபதியாகிய இயேசுவோ மோசேயிலும் யோசுவாவிலும் பெரியவராகயிருக்கிறார். அவர் நம்மை விடுவிக்கிறவரும், சுதந்தரத்தில் பிரவேசிக்கச் செய்கிறவரும், இளைப்பாறுதல் கொடுக்கிறவருமாகயிருக்கிறார். எவரோடும் ஒப்பிடக்கூடாத நிகரற்ற இரட்சகர் இவர்! இவரை அறிந்து இவரோடு பழகப்பழக இவர் தம்மை வெளிப்படுத்துகிறார். இக்காலத்தில் அநேகர் வேதத்தை அசட்டைசெய்வதுபோலவே வேதத்தின் இரட்சகரையும் அசட்டைசெய்து மற்றமற்ற ஞானிகள் ரிஷிகள் என்று சொல்லப்படுகிறவர்களோடு ஒப்பிட்டுப் பேசுகிறார்கள். இந்தப் புத்தி கிறிஸ்தவர்களுக்குள் பெருகப்பெருக சபைகளின் நிலைமை எசேக்கியேல் தீர்க்கதரிசி கண்ட உலர்ந்து வெளுத்துச் சிதறுண்டுகிடந்த பள்ளத்தாக்கின் எலும்புக் காட்சிபோலாகும். ஒரு கிறிஸ்தவன் நாசரேத்தூரானாகிய இயேசுவை 'என் ஆண்டவரே, என் தேவனே' என்று உள்ளத்திலிருந்து சொல்லுகிறவனாயில் அவன் அவரை அறிந்தவனல்ல. சகோதரரே, தேவனுடைய சகல பரிபூரணமும் மகிமையும் நிறைந்த வல்ல இயேசு நம்மோடுகூடயிருந்து நம்மை நடத்துவாரானால் நமக்குப் பயமேது? குறைவேது? என் ரட்சகர் என்னோடுகூடயிருக்கிறார்; அவர் என்னை நடத்துகிறார் என்கிற நிச்சயம் நமக்கு எவ்வளவோ ஆறுதலையும் சந்தோஷத்தையும் கொடுக்கிறது!

மூன்றாவது வருங்காலத்தில் நம்பிக்கை வைக்கவேண்டும். நமது விசுவாசமே ஜெயம். கடந்த காலத்தின் அனுபவம் நமக்குத் தைரியம் என்பது சரி. தற்காலத்தின் கிருபையின் எத்தனங்களும் அதிபதியாகிய இயேசுவும் நமக்குத் தைரியம் என்பதும் சரி. வருங்காலத்தில் நமக்கு என்ன தைரியமுண்டு? வருங்காலம் அநிச்சயகாலமல்லவா? அநிச்சயத்திலிருந்து நிச்சயம் எப்படி வருமென்று கேட்கலாம். அவருடைய வாக்கின் மேல் வைக்கும் நம்பிக்கையே நமக்குத் தைரியம், யோசுவாவையும் ஜனங்களையும் அறியாத வழியில், முன் ஒருபோதும் நடவாத பாதையில் புறப்பட்டுப் போங்கள் என்று சொன்ன தேவன் ஒரு வாக்கை அவர்களுக்குக் கொடுத்தார். 'நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் ஒருவனும் உனக்கு முன்



பாக எதிர்த்து நிற்பதில்லை; நான் மோசேயோடேயிருந்ததுபோல உன்னோடும் இருப்பேன்; நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை, பலங்கொண்டு திடமனதாயிரு'. சகோதரரே, இந்த வாக்கைவிட வேறே என்ன நமக்கு வேண்டும்? ஒவ்வொரு வார்த்தையாக எடுத்துத் தியானித்தால் எவ்வளவு உற்சாகத்தையும் தைரியத்தையும் நமக்குக் கொடுக்கிறது! கப்பர்நகூம் ராஜாவின் மனுஷனுடைய நம்பிக்கையை நாம மறக்ககூடாது. அவன் வீட்டுக்குத் திரும்பினபோது அவன் பிடிக்கிறதற்குக் கர்த்தருடைய வார்த்தையையன்றி வேறொன்றுமில்லை. பிள்ளையும் பிழைத்தது, குடும்பமும ரட்சிக்கப்பட்டது. இந்த வருஷத்தில் ஆண்டவருடைய வாக்குகளை நம்பி அதின் உண்மையைச் சோதித்துப் பார்ப்போமாக. வாக்குகளை உறுதியாய்ப் பிடித்துக்கொண்டு ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வோமாக. முன் ஒருபோதும் நடவாத இந்தப் புதிய வருஷத்தில் நாம் நிச்சயத்தோடும் தைரியத்தோடும் நடக்கவேண்டுமானால் பூர்வகாலத்து அதிசயங்களை நினைவுகூருவோமாக. நமக்கு முன்வைக்கப்பட்டிருக்கும் திருவசனத்தையும சேனாதிபதியாகிய இயேசுவையும் நோக்கிப் பின்செல்லுவோமாக. வருங்காலத்துக்கு அவருடைய வாக்கு நம்மைத் தேற்றுவதாக. தேசத்தில் ராட்சதர்கள் உண்டோ? கர்த்தருடைய நாமத்தினால் அவர்களை சங்கரிப்போம். பெரிய பெரிய பட்டணங்கள் உண்டோ? கர்த்தரின் கிருபையால் அவைகளைச் சுதந்தரித்துக்கொள்வோம். கஷ்டங்கள் நேரிடுமோ? உன்னத பெலத்தால் அவைகளை மேற்கொள்ளுவோம்.

S. பரமானந்தம்

## ஜீவிய மாறுதல்

ஒரு பாவியின் ஜீவியத்தில் ரட்சகர் நடப்பிக்கிற அதிசய மாறுதலைப் படம்போல் விளக்கிக்காட்டும் பல திருஷ்டாந்தங்கள் பரிசுத்த வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கின்றன. எப்பேர்ப்பட்ட கொடிய பாவியையும் முற்றிலும் மாற்றும் தெய்வீக வல்லமையை அவைகளின் மூலமாய் அறியலாம். அப்படிப்பட்ட திருஷ்டாந்தங்களிலொன்று, 'லேகியோன்' பிசாசு பிடித்த மனுஷனை ரட்சகர் சொஸ்தமாக்கினது.

I. அவனுடைய முன்னான ஜீவியம். அவனுடைய முன்னான ஜீவியம் ஒரு பாவியின் சரியான நிலைமையைக் காட்டுகிறது.

முதலாவது, கல்லறையின் ஜீவியம். அவனுடைய குடியிருப்பு கல்லறைகளிலே இருந்தது. ஐயோ! பாவம்! அருமையான வீட்டில் வசிப்பது அவனுக்குப் பிரியமில்லை. இனபந்துக்களின் சவகாசத்தை வெறுத்தான். நல்லோர் கூட்டுறவு அவனுக்கு மிகவும் வெறுப்பு. ஆனால் நாற்றம் நிறைந்த, அசுத்தமுள்ள கல்லறைகளில் வசிப்பதுதான் அவனுக்கு

இஷ்டம். பாவத்திற்கு அடிமைப்பட்ட ஒருவனுடைய ஜீவியமும் அப்படியே. அசுத்த ஜீவியம் சகலவிதமான கிருபையின் யத்தனங்களையும், தேவதாசரின் சவகாசத்தையும் வெறுக்கும் ஜீவியம். துர்ச்சனர் சவகாசத்தை விரும்பும் ஜீவியம். துர்க்கந்தம் நிறைந்த ஜீவியம். தன் நிலைமை எப்படிப்பட்டதென்று உணர்ந்துகொள்ளக்கூடாமல் அதில் திருப்தியாயிருக்கும் ஜீவியம்.

இரண்டாவது, கட்டுக்கடங்காத ஜீவியம். அவனைச் சங்கிலிகளாலும் கட்ட ஒருவனாலும் கூடாதிருந்தது. அவன் அநேகந்தரம் விலங்குகளினாலும் சங்கிலிகளினாலும் கட்டப்பட்டிருந்தும், சங்கிலிகளை முறித்து, விலங்குகளைத் தகர்த்துப்போடுவான். அவனையடக்க ஒருவனாலும் கூடாதிருந்தது. மனுஷருடைய எந்தப் பிரயத்தனமாவது அவனுடைய ஜீவியத்தை மாற்றமுடியாமற்போனது. பாவத்திற்கு அடிமைப்பட்ட ஒருவனை மனுஷ முயற்சி மாற்றமுடியாது. திருச்சபையின் பிரமாணச் சட்டங்களாவது, மேலதிகாரிகளின் கட்டுகளாவது ஒரு பாவியின் ஜீவியத்தை மாற்றுவது கூடாத காரியம். ஆவியானவர் உள்ளத்தில் கிரியை நடப்பிக்காதபட்சத்தில் எவ்விதப் பிரசங்கமும், போதனைகளும், புத்திமதிகளும் பயன்படா. ஏனெனில் உள்ளத்தை ஆட்கொண்டிருக்கும் சாத்தான் மனுஷவல்லமைக்கு மிஞ்சினவன்.

மூன்றாவது, கறைப்படுத்தும் ஜீவியம். அவன் எப்பொழுதும் இரவும் பகலும், மலைகளிலும் கல்லறைகளிலும் இருந்து, கூக்குரலிட்டு, கல்லுகளினாலே தன்னைக் காயப்படுத்திக்கொண்டிருந்தான். தனக்குத் தானே சேதத்தை வருவித்துக்கொண்டிருந்தான். பாவம் எப்பொழுதும் பாவியைக் கறைப்படுத்துகிறது. ஆத்துமாவைக் கறைப்படுத்துவதோடு, ஒருவன் தான் நடப்பிக்கிற பலவிதமான அசுத்த ஜீவியத்தால் தன் சரீரத்தையும் கறைப்படுத்துகிறதில்லையா? ஐயோ! பாவம் எத்தனை கொடிதானது.

இவன் தன்னைக் கறைப்படுத்தினதோடு, மற்றவர்களையும் காயப்படுத்தக்கூடியவனாயிருந்தான். அந்த வழியாக ஒருவனும் நடக்கக்கூடாதிருந்தது. மற்றவர்களுக்குச் சாபமாயிருந்தான். பாவத்தில் நிலைத்திருக்கும் ஒரு பாவி தன்னைக் கெடுக்கிறது மட்டுமல்ல, தன்னையடுத்துவரும் மற்றவர்களையும் கெடுக்கக்கூடியவனாயிருக்கிறான் என்பதை மறந்துபோகாதிருப்போமாக. பாவம் தொத்து வியாதி. அசுத்த ஜீவியம் செய்யும் ஒருவன் மற்றவர்களையும் கெடுக்கக்கூடியவனாயிருக்கிறான்: நம்மைக் கெடுத்து மற்றவர்களையும் கெடுக்கும் ஜீவியம் நம்மிடத்திலுண்டா? எச்சரிக்கையாயிருப்போமாக.

நாலாவது, மாறுதலடைய மனமற்ற ஜீவியம். குணமாக்கும் ரக்ஷகரைத் தூரத்தில் கண்டபோது, ஓடிவந்து, அவரைப் பணிந்துகொண்டு: இயேசுவே, உன்னதமான தேவனுடைய குமாரனே, எனக்கும் உமக்கும்



என்ன? என்னை வேதனைப்படுத்தாதபடிக்கு தேவன்பேரில் உமக்கு ஆணையென்று சத்தமிடுகிறான். போதகத்தைத் தள்ளுதலும், கடிந்துகொள்ளுதலை வெறுப்பதும், கிருபையின் யத்தனங்களை அசட்டைபண்ணுவதும், மாறுதலடைய மனமற்றிருப்பதும் ஒரு பாவியின் இயல்பான சுபாவமல்லவா? வியாதியஸ்தன் மருந்தை உட்கொள்ள மனமற்றிருப்பதும், ரணரோகி தன் ரணத்திற் கத்தி கையாடிச் சிகிச்சைசெய்ய இடங்கொடாதிருப்பதும் எத்தனை புத்தியீனம்.

II. அவனடைந்த மாறுதல். எத்தனை ஆச்சரியமான மாறுதல் இவனிடத்தில் உண்டானது. பிரேதக் கல்லறைகளில் குடியிருந்தவன் இயேசு ரட்சகரின் பாதப்படியில் உட்கார்ந்திருக்கிறான். வஸ்திரந் தரியாதவன் வஸ்திரந்தரித்திருக்கிறான். மனுஷரால் கட்டப்படக்கூடாதிருந்தவன் யாதொரு கட்டுமின்றி அமைதியாய் உட்கார்ந்திருக்கிறான். சொஸ்தபுத்தியற்றவன் புத்தி தெளிந்திருக்கிறான். இவனை ஆட்கொண்டிருந்த பிசாசுகள் முற்றிலும் நீங்கின. என்ன ஆச்சரியம்! பூர்ண மாறுதல், கண்டவர்கள் யாவரும் ஆச்சரியப்படத்தக்கதான மாறுதல் எளிதில் நம்பக்கூடாத காரியமல்லவா? அருமையான பாடத்தைப் படிப்பிக்கிறது. ரட்சகர் மாற்றக்கூடாத பாவி இவ்வுலகத்திலுண்டா? மனுஷ வல்லமைக்கு மிஞ்சின எப்படிப்பட்ட பாவியையும் ரட்சகர் மாற்றக்கூடும்.

இப்படிப்பட்ட மாறுதலுக்கு ரகசியமென்ன? ரட்சகரின் பாததரிசனமல்லவா? எந்தப் பாவி ரட்சகரின் பாதத்தில் போய் விழுகிறானோ, அவன் எப்படிப்பட்ட கொடிய பாவியாயிருந்தாலும் அவனை மாற்றுகிறார். இவன் ரட்சகரிடம் போனதுமட்டுமல்ல தன் உண்மையான நிலைமையை அறிக்கையிட்டான் என்றும் சொல்லலாம். என் பேர் 'லேகியோன்' என்று சொன்னான். ஒன்றும் மறைக்காமல் பாவத்தை அறிக்கையிடுவது அவசியம்.

அன்றியும், இவனுடைய உள்ளத்தில் உண்டான மாறுதல் வெளியரங்கமாய்க் காணப்பட்டது. இவனைப் பார்த்த யாவரும் இவனில் மாறுதலைக் கண்டார்கள். மற்றவர்கள் சாட்சிகொடுக்க அவசியமிருந்ததில்லை. 'அகத்தினழகு முகத்தில் தெரியும்'. ஜீவியமாறுதல் கிரியையில் விளங்கும். நம்முடைய ஜீவியத்தைப் பார்க்கிற மற்றவர்கள் நாம் குணப்பட்ட, தேவனுடைய பிள்ளைகள் என்று அறியக்கூடுமா?

III. அவனுடைய கடமை. மாறுதலடைந்தபின் அவன் இயேசுவோடுகூட இருக்கும்படி ஆசித்தான். ஆயினும் ரட்சகர் அதற்கு இடங்கொடாமல், அவன் செய்யவேண்டிய ஓர் விசேஷித்த கடமையை அவனுக்கு உணர்த்துகிறார். 'நீ உன் இனத்தாரிடத்தில் உன் வீட்டிற்குப் போய், கர்த்தர் உனக்கு இரங்கி, உனக்குச் செய்தவைகளையெல்லாம் அறிவி' என்று சொன்னார். தான் பெற்ற நன்மையைப்பற்றி மற்றவர்

களுக்குச் சாட்சிபகரவேண்டுமென்கிறார். குணப்பட்ட தேவனுடைய பிள்ளைகள் ஒவ்வொருவரும் அனுபவ சாட்சி பகரவேண்டியது அவசியம். தேவவல்லமையையும் ரட்சிப்பையும்பற்றிய பொதுவான சாட்சியல்ல, தன் சொந்த ஜீவியத்தில் ரட்சகர் நடப்பித்திருக்கும் மாறுதலைப்பற்றிய சாட்சியே மேலானது. மற்றவர்களுக்குப் பிரயோஜனப்படாமல் மரக்காலின்கீழ் மூடிவைக்கப்படும் விளக்கு அணைந்துபோவதுபோல் சாட்சிபகராத ஜீவியமும் ஒழிந்துபோம். தன் ஜீவியத்தில் மாறுதலடையாத தேவ ஊழியன் மற்றவர்களுக்கு எப்படி சாட்சிபகரக்கூடும்? இதை வாசிக்கும் ஒவ்வொருவரும் தம் தம சொந்த ஜீவியத்தை ஆராய்ந்து பார்ப்போமாக. இப்புது வருஷத்தில் புதிய ஜீவியத்திற்காகக் கெஞ்சுவோமாக.

J. S. P.

## 'இதுவே நான் அவர்களால் மதிக்கப்பட்ட மேன்மையான மதிப்பு' சகரி. 11. 13.

கிறிஸ்துநாதர் நிற்கிறார். முள்முடி சூட்டப்பட்டவராய், ஐங்காயங்களுடையவராய், ரத்தஞ்சிந்திப் பாடுபடுகிறவராய்க் கேட்கிறார்.' உங்கள் பார்வையில் நன்றாய்க் கண்டால் என் கூலியை (விலையை) தாருங்கள். வாக். 12. தேவகுமாரன், நித்திய ராஜா, பரலோகநாதர் பதினாயிரம் பேரில் சிறந்தவர், முற்றிலும் அழகுள்ளவர். விலைகட்டுங்கள், மதிப்புப் போடுங்கள், ஐயோ, அருமை ரக்ஷகரை நன்கு மதிக்கிறவர்கள் சிலர். அவரை அற்பமாய் எண்ணுவரோ அநேகர்.

I. ஏசா போட்ட மதிப்பு=ஒருவேளை போஜனம். எபி. 12. 16. ஒருவேளைப் போஜனத்திற்காகத் தன் ஜேஷ்டபுத்திர பாகத்தை விற்றுப்போட்ட ஏசா. 'அத்தனை கெட்டவன் அல்ல. வேட்டையாடுவதில் கெட்டிக்காரன், தைரியசாலி. ஒருவகையான ஆசீர்வாதத்தைப் பெற விரும்பினவன். ஆனால் பக்தியில்லை. தேவபயமும் தேவ நேசமும் அவனுக்கு இல்லை. வரப்போகிற ரக்ஷகரைப்பற்றி நம்பிக்கையுமில்லை. அவனுக்கு வயிறே தேவன். ஒரு சாண் வயிற்றைப் போஷித்தால் போதுமென்றிருந்தான். ஏசாவே, லோக ரக்ஷகருக்கு மதிப்புப்போடு. மோட்சம் பிரியமா? சாப்பாடு பிரியமா? 'ஒருவேளைச் சாப்பாடு பிரியம்' என்கிறான். யேசுநாதர் ஒரு பக்கம், கொஞ்சம கூழ் ஒரு பக்கம். 'இதுவே நான் அவனால் மதிக்கப்பட்ட மேன்மையான மதிப்பு.'

II. யூதாஸ் போட்ட மதிப்பு=முப்பது வெள்ளிக்காசு. முப்பது வெள்ளிக்காசை நிறுத்தார்கள, 'நான அவரை உங்களுக்குக் காட்டிக்கொடுக்கிறேன்' நீங்கள் எனக்கு என்ன [illegible]டுக்கிறீர்கள் 'அவர்கள் அவனுக்கு முப்பது வெள்ளிக்காசைக் கொடுக்க [illegible]ன்பட்டார்கள்' [மத். 26. 15].



கிறிஸ்துவின் சீஷனும் சிநேகிதனுமானவன், அப்போஸ்தலனாய் நியமிக்கப்பட்டவன்; அற்புதங்களைச் செய்தவன், இயேசுவின் அன்பைக் கண்ணாரக் கண்டவன், அவருடைய அருமையை நன்றாய் அறிந்தவன், ஆண்டவரை விலைகூறி விற்றுப்போடுகிறான். முப்பது வெள்ளிக்காசு=அறுபது ரூபாய் [உத்தேசம்] அடிமையானவனுடைய விலை [யாத். 21. 32] ஆகிலுமுண்டான லாபம் என்ன? மனச்சாட்சி அவனை வாதித்தது. உலகம் அவனைச் சபித்தது. நரகவேதனை லபித்தது. உலகப்பொருளுக்காக ஆண்டவரை விற்றுப்போடுவோர் அநேகர்.

III. அகிரிப்பா போட்ட மதிப்பு=மாம்ச இச்சை. அப். 26. 28. புத்திமான், அறிவாளி, பழைய ஏற்பாட்டு வேதவாக்கியங்களை நன்றாய் வாசித்தவன், மார்க்க விஷயங்களில் கொஞ்சம் உணர்ச்சியுள்ளவன். பவுல் அப்போஸ்தலனுடைய பிரசங்கம் அவன் மனதில்பட்டது. 'நான் கிறிஸ்தவனாகிறதற்குக் கொஞ்சங் குறைய நீ என்னைச் சம்மதிக்கப்பண்ணுகிறாய் என்றான். ஆனால் பெண்ணாசையிருந்தது. அவன் பக்கத்தில் உட்கார்ந்திருந்த துரைச்சானியின் பேரில் மெத்தப்பாசம், தகாத நேசம். அவன் மனைவியல்ல, அதை விட்டுவிட மனமில்லை.

IV. லோத்தின் மனைவி போட்ட மதிப்பு=உலக நேசம். ஆதி. 19. 26. சோதோமின் பேரில் மெத்தப் பிரியம். அங்கே தான் அவள் வீடு, பொக்கிஷம், சந்தோஷம். அந்த ஜனங்களோடு மெத்தப் பழக்கம். அவளுன்ன வேடிக்கைகளைப் போய்ப் பார்ப்பாள். பணக்காரருக்குத் தன் பிள்ளைகளைக் கட்டிக்கொடுக்க ஏற்பாடு செய்தாள். அங்கே அவள் புருஷன் ஒரு தாசில்தார் போலிருந்தான். அதினால் அவளுக்கு ரொம்பக் கர்வம். தேவதூதர்கள் அவளைப் பலவந்தமாய்ப் பட்டணத்தைவிட்டு வெளியே கொண்டுவந்தபோதிலும் அங்கேதான் அவளுடைய நினைவு இருந்தது. பின்னிட்டுப் பார்த்தாள், உப்புத்தூண் ஆனாள்.

## ஜீவியத்துக்கேற்ற திருஷ்டாந்தங்கள்

எப்போதும் குருமாரைப் பரியாசம்பண்ணுகிற ஓர் கூட்டத்தார் ஒரு நாள் குருவைச்சுற்றி யிருந்துகொண்டு தமாஷாகப் பேச ஆரம்பித்தார்கள். அவர்களில் ஒருவன் குருவானவரைப்பார்த்து (ஐயா) மரம் பழுத்திருந்தால் தான் அதன் கீழ் கற்கள் அதிகமாய்க் கிடக்கும் என்றான் குருவானவர் அவனைப் பார்த்து எப்போதும் அப்படியல்ல மரத்தில் தேன் கூடு இருந்தால் தேனீக்களைக் கலைத்துக் கொட்டும்படியாகவும் கற்கள் எறியப்படும் என்றார். அதைக் கேட்டவர்கள் மனதில் உணர்வடைந்து உள்ளதைப் பெரிதாக்கல், பரியாசம், சக்சந்தம், கிந்தித்தல், பொய் முதலிய சகல தீமைகளும் தேனீக்களைப் போன்றவை யென்று நிச்சயித்து அவைகளை விட்டுவிட்டார்கள்.

கிறிஸ்தவ இளைஞன் ஒருவன் ஓர் பெரிய அச்சாபீசில் வேலைக்கு அமர்ந்திருந்தான். ஒரு சனிக்கிழமை சாயங்காலம் அவனிடத்தில் ஒரு வேலை ஒப்புவிக்கப்பட்டு அது உடனே செய்துமுடிக்கவேண்டுமென்ற கட்டளையும் கொடுக்கப்பட்டது. அவன் மறுநாளாகிய ஓய்வுநாளில் வேலை செய்தால் மட்டும் அது முடியக்கூடியதாயிருந்தது. உடனே அவன் எஜமானிடத்தில் (Foreman) போய் நான் இன்று இரவு 12 மணிவரைக்கும் வேலை செய்கிறேன், எவ்வளவு முடியுமோ அவ்வளவையும் முடித்துத் தருகிறேன். நாளைக்கு ஓய்வுநாள், நான் அன்று வேலைசெய்யக்கூடாது' என்றான். எஜமான் மாறுத்தரமாக, 'அப்படியானால் நீ உன் வேலையை விட்டுவிடவேண்டியதுவரும்' என்றான். பையன் தனக்குக் கொடுத்த வேலையை அச்சாபீசின் முதலாளியிடத்தில் கொண்டுபோய், அவரைப் பார்த்து, 'நான் என் வேலையை விட்டுவிடக்கூடும். ஆனால் என் மனச்சாட்சிக்கு விரோதமாய நடக்கக்கூடாது' என்றான். அன்று முதல் அவனை ஓர்காலும் ஓய்வுநாள் வேலைக்குக் குறிக்கமாட்டார்கள்.

குடிகாரர் கூட்டமும் மதுவிலக்குச் சங்கத்தாரும் ஓர் பட்டணத்தில் ஒரே நாளில் தெருக்களில் வெவ்வேறு திசைகளிலிருந்து பவனிசெல்ல ஆரம்பித்தார்கள். குடிகாரர் கூட்டத்தின் முன்புக்கு ஓர் பெரிய மனிதன் ஓர் கொடியைப் பிடித்துக்கொண்டு போனான். அதில், 'புருஷரே, உங்கள் சுயாதீனத்தை விட்டுவிடாதீர்கள்' என்று வரைந்திருந்தது. மதுவிலக்குச் சங்கத்தாரின் முன்புக்கு சிறுவன் ஒருவன் ஓர் கொடி பிடித்துச் சென்றான். அதில், 'தகப்பன்மாரே, உங்கள் குமாரரை ரட்சிக்க மறவாதீர்கள்' என்று வரைந்திருந்தது. இவ்விரு கூட்டத்தாரும் ஓர் தெருவில் சந்திக்க நேரிட்டது. கொடிபிடித்திருந்த பெரிய மனிதன் தன் கொடியைத்தூர எறிந்துவிட்டு எதிர்க்கொடி பிடித்திருந்த பையனைத் தன் தோள்மேல் ஏற்றிக்கொண்டு மதுவிலக்குச் சங்கத்தாரோடு சேர்ந்து நடந்துபோனான் கொடியை எறிந்துவிட்டவன் தகப்பன், அவன் தூக்கிக்கொண்டவன், அவனுடைய மகன்.

## விளம்பரம்.

இப்பத்திரிகையின் சந்தாதாரர்களாகிய நண்பர் யாவருக்கும் புது வருடவந்தனம் சொல்லுகிறேன். முன் ஓர் சஞ்சிகையில் நான் தெரிவித்தபடி யுத்தத்தினால் காகித கிரயம் மட்டுக்கு மிஞ்சிப்போகிறபடியால் அச்சடிப்புச் செலவு ஜாஸ்தியாகிறது. சந்தாப்பாக்கியுடையவர்கள் அவைகளைப் பூரணமாய்ச் செலுத்துவதோடு 1918-மவருஷத்துச் சந்தாவையும் முன்பணமாக அனுப்பக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

R. V. ASIRVADAM,
*Manager.*

Printed at the Palamcottah Printing Press, Palamcottah and published by the Christian Brotherhood Association, Tinnevelly.

February 1918. Registered No. M. 163

# The Water of Life
# ஜீவத்தண்ணீர்

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்." யோவான் 7: 38.

Vol. XIX பெப்ருவரி மீ 1918

## மேகத்தில் வில்

'அந்த வில் மேகத்தில் தோன்றும்'. ஆதி. 9: 14.

நம்மைச் சூழ்ந்திருக்கிற சகலமும் நம்மோடு பேசுகிறது. தேவனுடைய பிள்ளைகள் சகலத்திலும் ஆவிக்குரிய போதனைகளை அடைகிறார்கள். சூரியன் நீதியின் சூரியனாகிய இயேசுவை நினைப்பூட்டுகிறது. நட்சத்திரங்கள் ஆத்துமாக்களை நீதிக்குட்படுத்துகிறவர்களின் பிரகாசத்தை வெளிப்படுத்துகிறது. காற்று பரிசுத்தாவியின் கிரியையை உணர்த்துகிறது. இருள் குணப்படாத பாவிகள்மேல் வரும் கோபாக்கினையைக் காட்டுகிறது. வீடு இனி வாசம்செய்யப்போகிற நித்திய வீட்டை நினைப்பூட்டுகிறது. வாசல் கிறிஸ்து ஜீவனுக்கு வழியும் வாசலுமாயிருக்கிறார் என்பதைப் போதிக்கிறது. போஜனமும் தண்ணீரும் இயேசு நமது ஜீவ அப்பமும் ஜீவத்தண்ணீருமாயிருக்கிறாரென்பதை ரூபிக்கிறது. வஸ்திரம் நீதியின் வஸ்திரத்தைக் காண்பிக்கிறது. அடைக்கலான் குருவிகள் பிதாவின் பராமரிப்பைத் தெரிவிக்கிறது. இவைகளைப்போல வானவில்லிலும் நமக்கு ஆறுதலான போதனைகள் உண்டு.

ஜலப்பிரளயத்தின் பயங்கரங்களை விவரிக்க யாரால் கூடும்? தேவ கிருபையால் நோவாவும் அவன் குடும்பமும் பேழையின் மூலமாய் ரட்சிக்கப்பட்டபோதிலும் இப்போர்க்கொத்த பயங்கரமான அழிவு இனிமேலும் நேரிடுமோ என்கிற பயம் நோவாவுக்குள் இருந்திருக்கலாம். அப்படிப் பயப்படவேண்டியதில்லையென்று தைரியப்படுத்த தேவன் வானவில்லை அடையாளமாகக் காட்டி இனி ஒருபோதும் இவ்விதமான ஜலப்பிரளயம் உண்டாகாதென்பதற்கு அதனை உடன்படிக்கையின் அடையாளமாக்கினாரே. ஆகிலும் 1800 வருஷங்களுக்குப்பின் தேவன் மறுபடியும் தமது

உடன்படிக்கையின் உண்மையை தீர்க்கதரிசி மூலமாய் நினைப்பூட்டினார். 'நோவாவின் காலத்தில் உண்டான வெள்ளம் இனிப் பூமியின்மேல் புரண்டு வருவதில்லை' என்றார் (ஏசா. 54: 9). இன்னும் 800 வருஷங்களுக்குப் பின் அப்போஸ்தலன் யோவான் கண்ட தரிசனத்தில் 'சிங்காசனத்தைச் சுற்றி ஒரு வானவில் இருந்தது, அது பார்வைக்கு மரகதம்போல் தோன்றிற்று' என்கிறார். இவ்விதமாய் ஆண்டவருடைய உடன்படிக்கையில் வில் ஆதியாகமத்தின் ஒரு மூலை தொடங்கி வெளிப்படுத்தலின் மறுமூலை வரைக்கும் அழகாய்ப் பிரகாசிக்கிறதைக் காணலாம். வானவில்லின் சம்பந்தமாய் மூன்று காரியங்களைக் கவனிப்போம்.

1. வானவில்லானது கார்மேகத்தில்தான் வெகு அழகாய்த் தோன்றும். வானவில்லில் தோன்றும் ஏழு நிறங்கள் பார்வைக்கு எவ்வளவு அலங்காரமாயிருக்கிறது! சிறு பிள்ளைகளும் பெரியவர்களும் அதைப் பிரியத்தோடு பார்க்கிறார்கள். விசுவாசிகள் உடன்படிக்கையை நினைவு கூருகிறார்கள். மேகத்தின் இருட்சிக்குத்தக்கபடி வானவில் அலம்பரமாகத் தோன்றும். பஞ்சுபோன்ற மேகத்தில் வானவில் வெகு மங்கலாகத் தோன்றும். கலைந்துபோன மேகத்தில் வானவில் அரைகுறையாகத் தோன்றும். மேகம் எவ்வளவுக்குத் திரண்டு கறுக்கிறதோ அவ்வளவுக்கு வானவில் பிரத்தியக்ஷமாகவும் அழகாகவும் காணப்படும்.

மேகம் என்பது நமது துன்பத்தைக் குறிக்கும். நமது ஜீவியத்தில் துன்பமாகிய மேகம் எவ்வளவுக்குக் கறுக்கிறதோ அவ்வளவுக்கதிகமாக தேவ அன்பாகிய வில் நம்மில் தோன்றும். யாக்கோபின் சரித்திரத்தில் இதைக் காணலாம். ஐயோ கிழ யாக்கோபு! அதிகப் பிரியமும் நேசமுமான மனைவி ராகேல் மரித்துப்போனாள். அவன் குடும்பத்தில் மேகம் வந்துவிட்டது. அன்புக்குரிய அருமை யோசேப்பை உடன் சகோதரர் மோசம் போக்கினார்கள். அவனை பீறுண்டு மாண்டுபோனான் என்று யாக்கோபு எண்ணி மிகவும் அங்கலாய்த்துப் புலம்பினான். மேகம் மெள்ள மெள்ளக் கறுக்க ஆரம்பித்தது. இது போதாதென்று தேசத்தில் பஞ்சம் உண்டானது. யாக்கோபுக்கும் மக்களுக்கும் சாப்பிட ஆகாரமில்லை. மேகம் இன்னும் கறுத்தது. மக்களே! எகிப்துக்குப்போய் தானியம் வாங்கி வாருங்கள் என்றான். போன மக்கள் வர நாள்சென்றபோது கலங்கினான். வந்தபோதோ யாக்கோபு அடைந்த சஞ்சலமும் வியாகுலமும் கொஞ்சமல்ல. தேச அதிகாரி எங்களை நம்பாமல் வேவுகாரர் என்றெண்ணி தம்பி சிமியோனைக் கட்டிவைத்துக்கொண்டான். பென்யமீனையும் கொண்டுபோய்க் காட்டவேண்டுமாம் என்றார்கள். ஐயோ, யாக்கோபு பட்டபாடு அதிகம். யோசேப்புமில்லை, சிமியோனும் இல்லை, பென்யமீனையும் கொண்டுபோகவா? என் நரைமயிரை சஞ்சலத்தோடே பாதாளத்தில் இறங்கப்பண்ணுகிறீர்களே. 'இதெல்லாம் எனக்கு விரோதமாய் நேரிடுகிறது' என்று புலம்பினான். யாக்கோபின் மேகம் இப்பொழுது சரியானபடி



திரண்டு கறுத்துப்போய்விட்டது. இப்பொழுது அழகான அலம்பரமான வில் அந்த மேகத்தில் காணப்படப்போகிறது. 'யோசேப்பு உயிரோடிருக்கிறான், அவன் எகிப்து தேசத்துக்கெல்லாம் அதிபதியாயிருக்கிறான்' என்பதே. யாக்கோபின் சந்தோஷத்திற்கு அளவுண்டோ? ஆ, என் மகன் யோசேப்பு இன்னும் உயிரோடிருக்கிறானே, இதுபோதும், நான் அவனைப் பார்ப்பேன் என்று சொல்லி அதிக ஆறுதல் அடைந்தான். எல்லாம் எனக்கு விரோதம் என்று சொன்ன யாக்கோபு யோசேப்பினிடம் வந்து சகலத்தையும் கண்டபின் எல்லாம் எனக்கு அநுகூலமாயிருந்தது என்று சொல்லியிருக்கமாட்டானோ? யாக்கோபின்மேல் படர்ந்த இருண்ட மேகத்தையும் அதின்மேல் தோன்றின அழகான வில்லையும் தேவன் முன் அறிந்திருந்தார். யாக்கோபோ அதைக் காணவில்லை. ஆனால் வானவில் பிரகாசித்தபோது யாக்கோபுடைய கண்ணுக்குக் கார்மேகம் மறைந்தே போய்விட்டது. அது வழக்கந்தானே. நாம் அழகிய வானவில்லைப் பார்க்கும்போது அதின் பின்னே இருக்கிற மேகத்தைக் கவனிக்கிறதில்லையல்லவா? நமக்கு நேரிடும் பல துன்பங்களின் மூலமாய் தேவன் நமக்கு நன்மை செய்யும்போது துன்பமாகிய கார்மேகத்தை மறந்தே போகிறோம்.

II. மேகமில்லாத வானவில் இல்லை. எலிசபெத் ராணி கைதேர்ந்த சித்திரக்காரன் ஒருவனை அழைத்து தன்னுடைய சாயலைப் படமாக வரைந்து கொடுக்கும்படி கேட்டாளாம். ஆனால் படத்துக்குப் பின்னே கொஞ்சமாகிலும் கறுப்பு நிழல் (shade) இருக்கவே கூடாதென்று கட்டளையிட்டான். அந்தச் சித்திரக்காரன் கறுப்பு நிழல் பின்னுக்குக் காட்டாமல் படம் வரையத் தன்னால் கூடாது என்று சொன்னபோது அதிகக் கோபம் கொண்டாளாம். சித்திர சாஸ்திரத்தைப்பற்றி அவளுக்கிருந்த அறிவீனமே இதற்குக் காரணம். நமது அறிவீனமும் அதற்குக் குறைந்ததல்ல. மேகமில்லாமல் வானவில் காணப்படவேண்டுமென்று நாமும் விரும்பினதில்லையா? ஆண்டவர் சொன்னவார்த்தையைக் கவனியுங்கள். 'நான் பூமிக்குமேலாய் மேகத்தை வருவிக்கும்போது அந்த வில் மேகத்தில் தோன்றும்.' வில் மேகத்தில்தான் தோன்றும் என்று கர்த்தர் மூன்றுமுறை திரும்பத்திரும்பச் சொல்லியிருக்கிறதையும் நாம் காணலாம். அநேகருக்கு மேகம் பிரியமில்லை. தங்கள் ஜீவியத்தில் எவ்விதமான கவலை, கஷ்டம், பாடு, நோய் ஒன்றுமில்லாமல் எப்போதும் சாங்கோபாங்கமாய் வாழ விரும்புகிறார்கள். பாடுகள் துன்பம் இல்லாத ஜீவியம் நேரே நரகத்துக்குக் கொண்டுபோகிற ஜீவியம். வேசிப்பிள்ளைகளுக்குச் சிட்சையில்லை. அன்புநிறைந்த பரமபிதா தாம் நேசிக்கும் பிள்ளைகளை சிட்சியாமல் வளப்பாரோ? மெய்தான், சிட்சிக்கப்படும்போது சந்தோஷமாயிராமல் துக்கமாகவேயிருக்கும். இருண்ட மேகம்போலவே தோன்றும். சிட்சையின் நோக்கத்தைக் கவனித்தாலோ சமாதானமும் சந்தோஷமுமாயிருக்குமே. தம்முடைய அழகான வில்லாகிய பரிசுத்தத்திற்கு நாம் பங்குள்ளவர்களாகும்படி நம்மு

டைய பிரயோஜனத்திற்காகவே மேகத்தை வரவிடுகிறார் என்று உறுதியாய் நம்பவேண்டும்.

சஹாரா வனாந்தரத்தில் மேகமில்லை. அங்கே தண்ணீரில்லை, பசுமையில்லை, பச்சையில்லை, ஜீவனில்லை. பாழும் நாசமும் மரணமுமே அதின் பங்கு. பிரயாணிகள் பவுஞ்சுபவுஞ்சாக ஒட்டகங்கள் மேல் ஏறிக்கொண்டு பிரயாணம்செய்யும்போது காற்று பலமாயடிக்க அவர்கள் நடக்கிறதினால் உண்டாகும் தூசி மேகம்போல் எழும்பும். ஆனால் அதிலே வானவில் காணப்படுவதில்லை. அந்தக் காற்றினாலும் தூசியினாலும் அவர்கள் படும் அவஸ்தை மிகுதி. ஆண்டவர் சொல்லுகிறதென்ன? நான் மேகத்தை வருவிக்கும்போது அந்த வில் தோன்றும் என்கிறார். தேவன் அனுப்பும் மேகத்தில் வில் காணப்படுமேயன்றி மனுஷனுடைய காலடித்தூசி கிளம்புவதினால் வில் காணப்படமாட்டாது. இதிலே ஒரு பெரிய ஆறுதலுண்டு. வெறும் காரிருள் நம்மைச் சூழ்ந்துகொள்ளுமானால் நாம் அலறவேண்டியது நியாயமே. வெறும் மேகமல்ல ஆண்டவரும் அதிலேயிருக்கிறார். சங்கீதக்காரன் ஓரிடத்தில் சொல்லுகிறபடி கர்த்தர் மேகங்களைத் தமது இரதமாக்கியிருக்கிறார். அவர் தமது பிள்ளைகளைச் சந்திக்கும்போது அந்த இரதத்தில் ஏறிவருகிறார். கார் இருள்போல் தோன்றினாலும் அருமைக் கர்த்தர் அதிலே யிருக்கிறார் என்கிற நிச்சயம் நமக்கு எவ்வளவோ ஆறுதலைக் கொடுக்கவேண்டியது. தேவ பக்தர்கள் முற்காலத்தில் அக்கினியில் போடப்பட்டபோது தேவ புத்திரனும் கூடக் காணப்பட்டாரல்லவோ? ஆத்துமாவே! உனக்கு நேரிடும் எந்தத் துன்பத்திலும் சோர்ந்துபோகாதே. கர்த்தர் கூடயிருப்பதைக் கவனி. உனக்கு அனுகூலமான அழகிய வில் உன் மேகத்தில் தோன்றும் என்பதை எதிர்பார்.

III. சிங்காசனத்தைச் சுற்றியிருந்த வானவில். 'அந்தச் சிங்காசனத்தைச்சுற்றி ஒரு வானவில் இருந்தது. அது பார்வைக்கு மரகதம் போல் தோன்றிற்று'. வெளி 4: 3.

இந்த வில்லினுடைய நிறத்தில் நமக்கு நல்ல போதனையுண்டு. அது பார்வைக்கு மரகதம்போல் தோன்றிற்று. மரகதம் பச்சை நிறமாயிருக்கும். பச்சைநிறம் மூன்று சத்தியங்களை வெளிப்படுத்துகிறது.

பச்சைநிறம் இளைப்பாறுதலைக் கொடுக்கிறது. நாம் வீட்டுக்குள் இருந்து வெகுநேரம் வாசித்து எழுதிக்கொண்டிருந்தபின் சற்று உலாவும்படி ஊருக்கு வெளியே போவோமானால் அங்கே பச்சையான நெற்பயிருள்ள வயல்களைக் காண்போம். ஆ! அவைகள் சோர்ந்துபோன நமது கண்களுக்கும் மனதுக்கும் எவ்வளவோ குளிர்ச்சியையும் உற்சாகத்தையும் கொடுக்கிறது! பச்சையான செடிகள் சோலைகள் மனதுக்கு எவ்வளவோ இளைப்பாறுதலை அருளுகிறது. மறுமையில் நாம் அநுபவிக்கப்போகிற மெய்யான இளைப்பாறுதலை பச்சைநிறம் நினைப்பூட்டுகிறது. மோசே



ஜனங்களை விடுவித்து நடத்தினான். யோசுவா அவர்களை தேசத்தில் பிரவேசிக்கச்செய்தான். மோசேயிலும் யோசுவாவிலும் மேலான இயேசுவோ விடுவிக்கிறவரும், ராஜ்யத்தைச் சுதந்தரிக்கப்பண்ணுகிறவரும், இளைப்பாறச் செய்கிறவருமாயிருக்கிறார்.

பச்சைநிறம் அங்கே பாடில்லை என்று போதிக்கிறது. வானவில்லில் ஏழு நிறங்கள் இருந்தபோதிலும் சிவப்பு, மஞ்சள், நீலம் இம்மூன்று நிறங்களும் பிரதானமானவை. இதிலே சிவப்பைத் தள்ளிவிட்டு மஞ்சளையும் நீலத்தையும் ஒன்றாய்ச் சேர்த்தால் பச்சை நிறமாகும். ஆம் சிவப்பு பாடுகளைக் காட்டுகிறது. நாம் மறுமையில் பிரவேசிக்கும்போது சகல பாடுகளும் வேதனைகளும் நம்மைவிட்டு முற்றிலும் நீங்கிப்போமென்பதை இந்தப் பச்சை வானவில் காட்டுகிறது.

பச்சைநிறம் தேவனுடைய உண்மைக்கு அடையாளம். தூதர்களில் ஒரு கூட்டத்தார் தவறிப்போய் முழுப்பொய்யரானார்கள். தீர்க்கதரிசிகள் பூர்வ பக்தர்கள் உண்மையில் நிலைத்திருந்ததில்லை. அப்போஸ்தலர்கள் எவ்வளவோ குறைவுள்ளவர்கள். தேவனோ எக்காலத்திலும் உண்மையுள்ளவராகவேயிருக்கிறார். நாம் உண்மையற்றவர்களாயிருந்தாலும் தமது உடன்படிக்கையையும் வாக்குகளையும் காத்துக்கொள்வதில் தேவன் மகா உண்மையுள்ளவர் என்பதை பச்சை தெரியப்படுத்துகிறது.

நிறத்தின் போதனை இப்படியிருக்க வானவில்லின் வடிவத்தையும் நாம் கவனிக்கவேண்டும். பூரண வட்டமாய் சிங்காசனத்தைச் சுற்றியிருந்ததென்று யோவான் சொல்லுகிறார். நாம் சாதாரணமாகப் பார்க்கும் வானவில்லில் பாதி மாத்திரம் நமக்குத் தோன்றுகிறது. நாம் பூமியிலிருந்து பார்ப்பதினால் மறுபாதி நமக்குக் காணப்படுகிறதில்லை. ஆகாயக்கப்பலில் பிரயாணம் செய்கிறவர்கள் மேகத்திற்குமேல் பறக்கிறபோது வானவில்லை பூரண வட்டமாகக் காண்கிறதாக அறிவித்திருக்கிறார்கள்.

இவ்வுலகில் நாம் இருக்கிற நாளளவும் நாம் எல்லாவற்றிலும் குறைந்த அறிவுடையோராயிருக்கிறோம். மேலே போனதின்பின் பூராவாக அறிந்துகொள்ளுவோம். இப்பொழுது நான் குறைந்த அறிவுள்ளவன், அப்பொழுது அறியப்பட்டிருக்கிறபடியே அறிந்துகொள்ளுவேன் என்று பவுல் சொன்னார். அறியப்பட்டிருக்கிறபடியே என்று சொல்லும்போது இருக்கிறபடியே காரியங்களை அறிந்துகொள்ளுவோம் என்று பொருள்படும்.

சுவிசேஷத்தின் மூலமாக எல்லாவற்றையும் நாம் அறிந்ததுபோல் நமக்குத் தோன்றலாம். ஆனால் எதையும் சரியானபடி நாம் அறிந்தவர்களல்ல என்பது எவ்வளவு உண்மை! கிறிஸ்துவின் பிறப்பு, அவருடைய உபதேசம், அவருடைய மரணம், அவருடைய மனுஷ தேவதன்மை இவைகளைப்பற்றி நமக்கு என்ன தெரியும்? பெற்றுக்கொண்ட கொஞ்ச அறிவுக்காக தேவனுக்கு ஸ்தோத்திரம்! ஆகிலும் இப்போ நாம் அறியாத அநேக

சத்தியங்கள் மறுமையில் நமக்கு விளங்கும். நமது சொந்தக் காரியங்களில் எத்தனையோ விஷயங்கள் நமக்கு இன்னும் மறைபொருளாகவேயிருக்கிறது. ஏன் எனக்கு இந்தக் கஷ்டம்? என் குடும்ப வறுமை ஏன் இன்னும் நீங்காமலிருக்கிறது? என் அருமைப் பிள்ளைகளை தேவன் ஏன் எடுத்துக்கொண்டார்? என் குணத்துக்கேற்ற மனைவி கிடையாமல் முள் போன்ற மனைவி எனக்குக் கிடைத்ததென்ன? இப்படிப்பட்ட குணப்படாத முரட்டுப் புருஷன் எனக்கு வாய்த்ததென்ன? நோயினால் நான் இப்படி அடிக்கடி கஷ்டப்படுவானேன்? என்ன பிரயாசப்பட்டாலும் அன்றன்றுள்ள ஆகாரத்தைத்தவிர அதற்கு மேலே ஒன்றும் கிடைக்கவில்லையே. இப்படி அனந்தம் காரியங்கள் நமக்கு விளங்காத இரகசியம்போலிருக்கலாம். 'இப்போது அறியாய், இனிமேல் அறிவாய்'. 'இப்பொழுது கண்ணாடியிலே நிழலாட்டமாய்ப் பார்க்கிறோம் அப்பொழுது முகமுகமாய்ப் பார்ப்போம்'.

இங்கே நமக்கு விளங்காததும், மறைவானதும், வெளிப்படாததுமான காரியங்கள் மறுமையில் துலாம்பரமாய், பூரணமாய் வெளிப்படும். எல்லாம் விரோதமாக நேரிடுகிறதே என்று புலம்பின யாக்கோபு எல்லாம் அனுகூலமாக முடிந்ததே என்று மகிழ்ந்ததுபோல, நாமும் மறுமையில் நமது ஜீவியத்தின் வானவில்லைப் பூரணமாகக் காணும்போது பரவசமடைந்து தேவனே, நீர் எவ்வளவு ஞானமுள்ளவர்! உமது நடத்துதல்கள் யாவும் எவ்வளவு அதிசயமானவை என்று போற்றாதிருக்க முடியுமா? சேபாவின் ராஜஸ்திரீ சாலோமோனைக் கண்டபோது: ராஜாவே! இவைகளில் பாதிமுதலாய் என் தேசத்தில் எனக்கு அறிவிக்கப்படவில்லையே; நான் கேள்விப்பட்டதைப் பார்க்கிலும் நான் காண்கிறது அதிகமாயிருக்கிறதே என்று புகழ்ந்து பேசினதுபோல நாமும் நமதாண்டவரைப் பார்த்து: என் ஆண்டவரே, நான் பூமியில் உமது அன்பைக்குறித்து அறிந்தது எவ்வளவு சொற்பம், அதின் பூரணத்தை இங்கே காண்கிறேனே; எனக்கு மறைவாயிருந்த விஷயங்களெல்லாம் இப்போ தெளிவாய் விளங்குகிறதே என்று அவரை இடைவிடாமல் போற்றாதிருக்க முடியுமா? இக்காலத்து மேகங்களும் கார்மேகங்களும் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமையான வில்லுக்கு எவ்வளவேனும் ஒப்பிடத்தக்கவைகள் அல்ல. இங்கே பாதிவில்லைக் காண்கிறோம். அங்கே முழுவில்லையும் காண்போம்.

S. பரமானந்தம்

## அநுபவசாட்சி

கிறிஸ்தவன் ஒவ்வொருவனும் சாட்சிபகரும் ஜீவியம் செய்யக் கடமைப்பட்டவன் என்பது பரிசுத்த வேதாகமத்தின் போதனை. ரட்சகர் தமது சீஷரைத் தெரிந்துகொண்டதின் முக்கிய நோக்கம் அதுவே



அவர்களுக்குக் கொடுத்த கடைசிக் கட்டளை, 'நீங்கள் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்' என்பதே. கிறிஸ்தவர்கள் என்று பெயர்பெற்ற யாவரிடமிருந்தும் உலகம் எதிர்பார்க்கிறதும் அதுதான். இயேசுகிறிஸ்து மனுஷாவதாரஞ்செய்த காலத்தில் அவரிடமிருந்து நன்மைபெற்ற பலர் அவரைக்குறித்து சாட்சிபகர்ந்ததாக வாசிக்கிறோம். அன்றியும் தம்மிடமிருந்து விசேஷித்த நன்மைபெற்றவர்கள் தாங்கள் பெற்ற நன்மையைக் குறித்து சாட்சிபகரவேண்டுமென்று எதிர்பார்த்ததாயும் அறிகிறோம். உதாரணமாக பெரும்பாடுள்ள ஸ்திரீ ரட்சகரிடமிருந்து குணமாக்கும் வல்லமையைப் பெற்று ஆரோக்கியமானபின்பு தான் மறைந்திருக்க முயன்றும் ரட்சகர் அதற்கு இடங்கொடாமல், அவள் யாவருக்கும் முன்பாக சாட்சிபகரும்படி செய்தார். லேகியோன் என்னும் பிசாசு பிடித்த மனுஷனைக் குணமாக்கின பின்பு அவன் தம்மோடிருக்க ஆசித்தும் அதற்கு இடங்கொடாமல் 'நீ உன் வீட்டுக்குத் திரும்பிப்போய் தேவன் உனக்குச் செய்தவைகளையெல்லாம் அறிவி' என்று கட்டளையிட்டார். ஆனாலும் தற்கால கிறிஸ்துசபை இவ்விஷயத்தில் எவ்வளவோ குறைவுள்ளதாகக் காணப்படுகிறது. காரணமென்னவென்றால் தன் கடமையையும் பொறுப்பையும் அறிந்துகொள்ளாததினாலும், சாட்சியின் தன்மையை உணர்ந்துகொள்ளாததினாலும்தான்.

பலர் நினைக்கிறபடி, கிறிஸ்துவின் மனுஷாவதார சரித்திரத்தை, அல்லது சன்மார்க்கப் போதனைகளை எடுத்துரைப்பது சாட்சியாகமாட்டாது. தான் கண்டறிந்த விஷயங்களை அறிவிப்பதே மெய்யான சாட்சியாகும். யூதாசுக்குப் பதிலாக புதிய அப்போஸ்தலனைத் தெரிந்துகொள்ளும்போது, அந்த அப்போஸ்தலன் கிறிஸ்துவின் ஜீவியத்தையும் உயிர்த்தெழுதலையும் பற்றிக் கண்கண்ட சாட்சியாயிருக்கவேண்டுமென்பதே சீஷரின் எண்ணமாயிருந்தது.

இயேசுரட்சகர் தாமும், தமது பிதாவைக்குறித்துக் கண்கண்ட சாட்சியாய் விளங்கினார். 'நான் என் பிதாவினிடத்தில் கண்டதைச் சொல்லுகிறேன்' என்றார். அன்றியும் தாம் வருகிறவரான மேசியாதானோவென்றறிய யோவானால் அனுப்பப்பட்ட சீஷருக்கு நேராய் விடைபகராது 'நீங்கள் போய், கண்டவைகளையும் கேட்டவைகளையும் . . . . . அறிவியுங்கள்' என்று சொன்னார். இவ்விதமாய் சாட்சிபகரும் ஜீவியமே கிறிஸ்துவின் போதனையும் சாதனையுமாயிருந்தது.

அன்றியும் இவ்வித அனுபவ சாட்சியின் மூலமாகவே ஆதித் திருச்சபை நாளுக்குநாள் பெருகிக்கொண்டு வந்தது. பெந்தெகொஸ்தே நாளில் பரி. பேதுரு கொடுத்த பலத்த சாட்சியும் இதுவே. 'இந்த இயேசுவை தேவன் எழுப்பினார். இதற்கு நாங்களெல்லாரும் சாட்சிகளாயிருக்கிறோம்' என்கிறார். மேலும் பேதுருவும் யோவானும் சங்கத்தாருக்கு முன் விசாரிக்கப்படும் சமயத்திலுங்கூட அவர்கள் அஞ்சா நெஞ்சாய்

தைரிய சாட்சிபகர்ந்ததின் ரகசியம் அவர்கள் கண்கண்ட சாட்சியே: 'நாங்கள் கண்டவைகளையும் கேட்டவைகளையும் பேசாமலிருக்கக் கூடாதே' என்றார்கள். தற்காலம் கிறிஸ்துசபை* விர்த்தியடையாமலிருப்பதின் காரணம் அனுபவ சாட்சிகள் இல்லாமையே. கிறிஸ்துவின் தெய்வீகத் தன்மையையும் மரண புண்ணியத்தையும் பற்றிச்செய்யும் சாதுரியப் பிரசங்கம் ஆத்துமாக்களை ரட்சகரண்டை இழுக்கமாட்டாது. இயேசு கிறிஸ்து என் ஜீவியத்தை மாற்றியிருக்கிறார். என் பாவத்தை மன்னித்திருக்கிறார், என்னைப் பரிசுத்த ஜீவியத்தில் நாள்தோறும் காத்துவருகிறார், பாவத்தை ஜெயிக்கும் வல்லமையை நான் பெற்றிருக்கிறேன் என்று அனுபவ சாட்சி பகரக்கூடியவர்கள் எத்தனை பேர்? இந்துக்களிடம் பேசும்போது அவர்கள் கேட்கிற கேள்வி, 'நீ கிறிஸ்து மார்க்கத்தில் கண்டதென்ன? உனக்கு அந்த இயேசுகிறிஸ்து செய்ததென்ன? என்பதல்லவா. பிறவிக்குருடனின் சாட்சியைப் பாருங்கள். எத்தனை அருமையானது, 'நான் குருடனாயிருந்தேன், இப்பொழுது காண்கிறேன். இது ஒன்றுதான் எனக்குத்தெரியும்.' இவ்வித தீர்க்கசாட்சி பகரக்கூடுமா? என் பழைய ஜீவியம் இப்படி; இயேசுவை என் சொந்த ரக்ஷகராக ஏற்றுக்கொண்டதன் பலனாக இப்பொழுது என் ஜீவியம் இவ்விதமாய் மாறுதலடைந்திருக்கிறது என்று சொல்லக்கூடுமா? இல்லையானால் நம்மைத் தாழ்த்துவோமாக. அனுபவ சாட்சிபகரும் ஜீவியத்திற்காகக் கெஞ்சுவோமாக.

யேசு எனது ரட்சகர், ஆ! சிறந்த மீட்பர்,
பாவ மன்னிப்பை ஈந்து என் துயரத்தைச் சுமந்தார்.
யேசு எனது ரட்சகர், ஆ! சிறந்த மீட்பர்,
அடிமை எனக்கு விடுதலைகூறி வெண்மையாக்கினர்!

என்று ஜெயகீதம் பாடும் அனுபவமே மெய்யான சாட்சிக்கு வழி நடத்தும். அப்படியானால் தான் வீட்டிலும் வெளியிலும் நாம் அனுபவ சாட்சிகளாயும், கிறிஸ்துவின் கிருபைகளாயும் விளங்கக்கூடும்.

---

## 'நாம் எல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும்'. 2 கொ. 5: 10.

ஒரு மனுஷன் இருந்தான்; அவனுக்குப் பெரிய மாளிகைவீடு உண்டு, ஐசுவரியவான்போல் ராத்திரியில் வேஷமாறி வெளியேறி, வீடுகளைக் கன்னமிட்டுக் களவுசெய்து பின்பு வீட்டுக்கு வந்து படுத்துக்கொள்ளுவான். பாரிவீட்டுக்காரன், அவன்மேல் சமுசயமில்லை. சிலரைக் கொலை செய்ததுமுண்டு. அநேக வருஷ காலத்துக்குப்பின்பு வெளிக்கு வந்தது. அவனைப் பிடித்துக் கோர்ட்டிலே நிறுத்திச் செய்த பாதகங்களையெல்லாம் ருசுப்



பண்ணினார்கள். அப்படிப்போல நம்முடைய பாவங்களும் வெளிக்குவரும்; ருசுவுக்குவரும். நிச்சயம்!

(1) நியாயத்தீர்ப்பு தீர்மானிக்கப்பட்டிருக்கிறது எபி. 9: 27.

(2) நியாயத்தீர்ப்பு நாள் குறிக்கப்பட்டிருக்கிறது. அப். 17: 31.

(3) நியாயம் தீர்க்கிறவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

(4) நியாயந்தீர்க்கிறதற்கு வாக்குமூலங்கள் ஆயத்தமாயிருக்கிறது. வெளி. 20: 12.

'உங்கள் பாவம் உங்களைத் தொடர்ந்துபிடிக்கும் என்று நிச்சயமாய் அறியுங்கள்' எண் 32: 23 எவ்வளவு திட்டமான காரியம்! இப்போது வேஷம்போட்டுக் கிறிஸ்தவன்போல பாவனை காட்டுகிறாயாக்கும்; அங்கே வெளிப்படவேண்டும். நியாயத்தீர்ப்பு நாள் வந்துவிட்டதென்று வைத்துக்கொள்வோம். வெள்ளை சிங்காசனம்! பயங்கரம்! புஸ்தகங்கள்! ஒவ்வொருவனும் அவர் முன்புக்கு நிறுத்தப்படுகிறோம். ஒண்டியாய் தனிமையாய், தப்ப இடமில்லாதவனாய்.

### நடக்கப்போகிற சில காரியங்கள்

I. மனம்போனபடி நடந்த வாலிபன் பிர. 11: 9 உல்லாசமாய் நடந்தான்; மாம்ச இச்சைகளை நிறைவேற்றினான்; கெட்ட வார்த்தைகளைப் பேசினான்; பூர்த்தியாய்ச் சாப்பிட்டுவந்தான்; மற்றவர்களோடு சண்டை போட்டான்; இந்த உலகம் சதமென்று எண்ணினான்; ஏழைகளை மீறினான்; சிலவேளை கள்ளும் குடித்தான். பெற்றோருக்குக் கீழ்ப்படியாமை காட்டினான். 'நான் வாலிபன், என் குணப்பட வேண்டாம்; வயசானபின்பு குணப்பட்டால் போதாதா? என்று கடத்திக் கடத்தி வந்தான். திடீரென்று மரணம் வந்தது; இறந்துபோனான். குணப்படாதவனாக, பாவமன்னிப்பு அடையாதவனாக, யாதொரு நம்பிக்கையற்றவனாக. இப்போது உயிரோடெழுப்பப்பட்டு, ஆண்டவர் முன்பாக நிற்கிறான். பயம், நடுக்கம், திகில். அவன் செய்த அசுத்தமான பாவங்கள் பேசின கெட்ட வார்த்தைகள் எல்லாம் ஒவ்வொன்றாக வாசிக்கப்பட்டபின்பு அவனுக்குப் போக்கில்லை. இயேசுநாதர் பைசல் சொல்லுகிறார். 'இவனை புறம்பான இருளிலே தள்ளிப்போடுங்கள், அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும்' மத். 25: 30. 'வாலிபனே! இவை எல்லாவற்றினிமித்தமும் தேவன் உன்னை நியாயத்தில் கொண்டுவந்து நிறுத்துவார் என்று அறி'.

II. தூஷணவார்த்தைகளைப் பேசினவன். மத். 12: 36; 5: 22. ஓர் பெண்பிள்ளை கோவிலுக்கு வருவாள்; ஞானஸ்நானம் பெற்றவள்; பிரசங்கம் கேட்டாள்; ஜெபம் பண்ணுவாள்; ஆனால் குணப்படாதவள், வாயில் வந்தபடி பேசுகிறது; திட்டுகிறது, ஏசுகிறது, சண்டைபோடுகிறது; ஐயோ! கிறிஸ்தவளாயிருந்து பிரயோஜனமென்ன? வெள்ளை சிங்காசனத்

னுக்கு முன்பாக நிற்கிறான். கூச்சம், வெட்கம், நாணம், நீதிபரன் அவனைப் பார்க்கிறார். 'நீ யார்'? 'என் பெற்றோர் கிறிஸ்தவர்கள், நானும் கிறிஸ்தவன்'. புஸ்தகத்தை வாசிக்கட்டும்; 'இவன் தூஷணை பேசினான்; சண்டை போட்டான்; இவன் வாயாடி'. '[illegible] கூசியுங்கள்' 'மனுஷன் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்தும், நியாயத்தீர்ப்பு நாளில் கணக்கொப்புவிக்கவேண்டும்'. மத் 12: 36. போதும் 'என் பிள்ளையல்ல, மாயக்காரரோடு இவன் பங்கு பெறட்டும்'. 'உன்னை அறியேன், நரகத்துக்குப்போ' என்கிறார்

II. குணப்படாத கிறிஸ்தவன் மத். 7. 21, 22. சபையான், சங்கப்பணம் கொடுத்தவன்; 'ஆண்டவரே! ஆண்டவரே!' என்று நேர்த்தியாய் ஜெபம்பண்ணுவான். ராப்போஜனக்காரன்; பார்வைக்கு நல்ல கிறிஸ்தவன் ஆனால் மனந்திரும்பவில்லை பாவத்தை விட்டுவிட்டவனல்ல. பாவஞ்செய்தாலும், மோட்சத்துக்குப் போகலாமென்று வீணாய் நினைத்தவன் அவனும் அந்தப் பரிசுத்த சந்நிதானத்தில் நிறுத்தப்பட்டிருக்கிறான். சுவாமி அவனைப் பார்த்து 'உன்னை அறியமாட்டேன்' என்கிறார் ஐயோ! 'நான் கிறிஸ்தவனல்லவோ! உம்முடைய நாமத்திலே ஜெபம்பண்ணினேன்; மற்றவர்களுக்குப் போதித்தேன்; பிரசங்கம்பண்ணினேன்; அநேக காரியத்தைச் செய்தேன்; அஞ்ஞானியல்ல'. சாட்சிக்காரர், நினிவே பட்டணத்தார்; தென்தேசத்து ராஜஸ்திரீ பரி. மத் 11. 21—24. வாசிக்கவும்.

'ஜீவ புஸ்தகத்தில் இவன் பேருண்டா'? 'இல்லை' 'அப்படியானால் இவனை அகற்றிவிடுங்கள்; என் ராஜ்யத்துக்கு ஏற்றவனல்ல' அக்கிரமக்காரனே! என்னைவிட்டு அகன்றுபோ'.

Rev T Walker.

---

## சாது சுந்தர் சிங்

இக்கிறிஸ்தவ சாது மேல்நாடுகளில் பல இடங்களில் சென்று கிறிஸ்தவர்களுக்குள்ளும் அஞ்ஞானிகளுக்குள்ளும் நல்வேலை செய்துவருகிறார். இவரைப்பற்றிய செய்தி முதன்முதல் 'சிலுவை நேசன்' (Lover of the Cross) என்னும் ஓர் புத்தகத்தில் அவருடைய ஜீவிய சரித்திரத்தின் சில விசேஷங்கள் அடங்கினதாய் வெளியானது பின்பு பத்திரிகைகளில் அவர் நடப்பித்துவந்த வேலை விபரங்கள் பிரசுரமாயின. அநேகப் பிரயாசத்தோடு அவர் [illegible] வரும் [illegible] கிடைத்தது அவர் துறவுபூண்ட சந்நியாசியல்ல, அவ்வாறு சிலகாலம் ஜீவித்தவராயினும் [illegible] தமது ஜீவியத்தில் கிறிஸ்துவின் சிந்தையை அணிந்தவராய் [illegible] தமது அனுபவ சாட்சியைப் பகர்ந்து கிறிஸ்தவர்களை உஜ்ஜீவியத்துக்கு எழுப்பிவிடுகிற ஓர் கிறிஸ்தவ சாது. அவரைப் பார்க்கும்போதே அவருடைய உள்ளான ஜீவியம் துலங்குகிறது. அவருடைய பிரசங்கம் யாவும் கிறிஸ்துவின் உள்ள ஜீவியத்தைச் சுத்த சுவிசேஷமாய் அறிவித்து, தம்மனுபவத்திலுள்ள பல சிறந்த திருஷ்டாந்தங்களால் கிறிஸ்தவர்களை அவ்வித ஜீவியத்துக்கு வழிநடத்த முயற்சிக்கிறார். கர்த்தருடைய வேதத்திலுள்ள சரித்திரங்களிலுள்ளவைகளைத் தெளிவான திருஷ்டாந்தங்களாக்குகிறார் இந்தியா இரட்சிக்கப்படவேண்டுமானால் கிறிஸ்தவர்களுடைய ஜீவியம் வளர வேண்டும். கிறிஸ்துவுக்காக உழைக்கவேண்டும். கிறிஸ்துவினிமித்தம் துன்பத்தை யனுபவிக்கவேண்டும் என்பதே அவருடைய பிரசங்கங்களின் சாரம். அவருடைய ஜீவியமும் நாம் கவனிக்கத்தக்கது. அவருடைய வஸ்திரம் காவி வஸ்திரம். ஒரே வஸ்திரம்தான். இரண்டாம் புது வஸ்திரம், பட்டு அங்கி கொடுத்தாலும் ஏற்றுக்கொள்ளார். மெத்தைக் கட்டில் கொடுத்தாலும் தரையில்தான் படுத்துக்கொள்வார். அவருடைய ஜீவியமும் ஜீவியத்தின் சாட்சியும் மிகவும் அருமையானது. தேவன் தமது பரிசுத்தாவியினால் அவரை நடத்தி அநேக ஆத்துமாக்கள் உயிர்ப்பிக்கப்படவும் கிறிஸ்துவுக்குச் சாட்சிகளாய் எழும்பவும் பலர் தங்கள் ஜீவியத்தைக் கர்த்தருக்கென்று ஒப்புவிக்கவும் அருள்புரிவாராக.

---

## திருஷ்டாந்தங்கள்

ஓர் பிரபு தன் நிலங்களில் சிலவற்றை காப்பிரி ஒருவனுக்கு அடைத்துக்கொடுத்தார். அவன் நிலத்தின் விளைச்சலில் நாலில் ஒன்றை பிரபுவுக்குக் கொடுக்கவேண்டுமென்பதே நிபந்தனை. அப்படியே காப்பிரி நிலங்களைப் பயிரிட்டு காலம்வந்தபோது அறுத்துத் தானியத்தைத் தன் வீட்டுக்குக் கொண்டுபோய்விட்டான். பிரபு வெகுநாள் சென்றபின் அந்தக் காப்பிரியைக் கண்டு, 'சாமு, வயலெல்லாம் அறுப்பாகிவிட்டதே' எனக்குரிய நாலில் ஒன்று எங்கே? என்று கேட்க, காப்பிரி மாறுத்தரமாக, 'ஐயா அது வாஸ்தவம்தான்' நாலு கட்டுக் கதிர்கள் கிடைத்தாலல்லவோ நான் உங்களுக்கு ஒரு கட்டுக் கொடுப்பேன். எனக்குக் கிடைத்ததே மூன்று கட்டுகள்தான்' என்றான். சாமு செய்தது எவ்வளவு மதியீனம் என்று நாம் சொல்லலாம். ஆனால் நம்மிலும் அநேகர் தேவனுக்கு நாம் கொடுக்க வேண்டியவைகள் விஷயத்தில் இந்தக் காப்பிரி சாமுவைப்போல் சொல்லுகிறதில்லையா?

அதிக திறமையுள்ள நியாயவாதியொருவரும் மிகப் பரிசுத்தனான தேவ ஊழியன் ஒருவரும் லிவர்பூல் பட்டணத்தில் ஒன்றாய் உலாவிக் கொண்டிருந்தார்கள். வழியருகே ஏழையான பிச்சைக்காரன் ஒருவன் அவர்களுக்குச் சமீபித்துச்சென்று முதலாவது நியாயவாதியின் முகத்தையும் பின்பு குருவானவருடைய முகத்தையும் உற்றுநோக்கிக் குருவானவரைப் பார்த்து, 'முகத்தில் மோக்ஷத்தைக் காண்பிக்கிற சகோதரனே, எனக்கு ஒரு பென்னி கொடும்' என்றுகேட்டான்." கிறிஸ்துவின் ஒளியால் பிரகாசிக்கப்பட்ட இருதயத்தையுடைய பக்தனின் முகம் உலகத்தாருடைய

முகத்தைப் பார்க்கிலும் 'எவ்வளவு வித்தியாசமாயிருக்கிறது. மேலும் இருதயத்திலுள்ள கிறிஸ்துவின் மகிமை முகத்தில் எவ்வளவாய் விளங்குகிறது. அஞ்ஞான உலகம் இவ்வித்தியாசத்தைக் கவனிக்கத்தக்கதாகவும், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது' என்ற யேசுவின் சத்தியம் எவ்வளவு பிரத்தியட்சமாகவும் துலங்குகிறது.

இந்தியாவிலுள்ள ஓர் கிராமத்தில் 40 பேர் கிறிஸ்தவர்களாகி ஞானஸ்நானத்துக்கு ஆயத்தமாயிருந்தார்கள். அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படி மிஷனரி ஒருவர் அவ்வூருக்குப் போயிருந்தார். இதைக் கேள்விப்பட்ட இந்துக்களான அவ்வூரார் ஞானஸ்நானம் கொடுக்கும்படி குறிக்கப்பட்ட ஆற்றுக்குப் போனார்கள். ஞானஸ்நானம் பெறப்போகிற 40 பேரையும் பார்த்து இந்துக்களில் கிராம முதாளியானவன் சொன்னதாவது:—கிறிஸ்தவர்களாகப் போகிறவர்கள் எல்லாரும் தண்ணீர்க் கரைக்குப் போங்கள், மற்றவர்கள் எங்களோடு தரித்திருங்கள். இன்றுமுதல் கிறிஸ்தவர்களாகப் போகிறவர்களுக்கு வேலையும் கொடுக்கமாட்டோம், நிலமும் கொடுக்கமாட்டோம், வண்ணானையும் விலக்கிப்போடுவோம், நாவிதனும் சவரம் செய்யக்கூடாது. விலக்கக்கூடிய எல்லாவற்றையும் விலக்குவோம். இப்போது, கிறிஸ்தவர்களாகப் போகிறவர்கள் போகலாம் என்றான். அந்த 40 பேரும் ஒருமனப்பட்டு முதற்கொண்டு அவர்களை விட்டுப்பிரிந்து தண்ணீர் ஓரத்துக்குப்போய் நின்றார்கள். கிறிஸ்துவின் நிமித்தம் தங்களுக்கு நேரிட இருந்த சகல துன்பங்களையும் சகிக்கத் தங்களைப் பொறுமையோடே ஒப்புக்கொடுத்தார்கள். இதுதான் கிறிஸ்து விளிம்பித்தம் படும்பாடு.

பெல்ஜியத்திலுள்ள ஒரு ஸ்திரீ பெருவனுக்கு ஜர்மனிய பாஷையில் எழுதிய கடிதம் ஒன்று கிடைத்தது. அது தனக்கு வாசிக்கத்தெரியாதபடியால் மிகவும் வருத்தமடைந்தாள். அவ்விருந்து பிரசங்கியாரிடத்துக்குப் போனாள். அந்த பாஷையை வாசிக்கத்தெரிந்தவர் யாருமில்லை. கடைசியாக அங்கிருந்த ஒரு ஜர்மன் போர்வீரர் ஒருவரிடத்தில் கொண்டுபோனாள். அவர் கடிதத்தை வாங்கிக்கொண்டு தன்னாலியன்ற உதவிபுரிவதாக வாக்களித்தார். மறுநாளில் அவர் கடிதத்தையும் தெளிவாய் பிரான்சு பாஷையில் எழுதின அதன் கருத்தையும் கொடுத்தார். இந்த உதவி யாரால் செய்யப்பட்டது என்று விசாரிக்க அந்தச் சேனை நாயகர்களே இதைச் செய்ததாகத் தெரியவந்தது. ராஜாக்கள் தங்கள் பிரஜைகளின் கஷ்டங்களை இவ்வாறு நீக்க உதவிபுரிவார்களானால் இவ்வுலகத்தில் எவ்வளவு ஆச்சரியமான காரியங்கள் உண்டாகக்கூடும்.

Printed at the Palamcottah Printing Press, Palamcottah and published by the Christian Brotherhood Association, Tinnevelly.

௬ March 1918.

15 JUN 1918

Registered No. M. 163

# The Water of Life
# ஜீவத்தண்ணீர்

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்." யோவான் 7: 38.

Vol. XIX மார்ச்சுமீ 1918

## திருநெல்வேலி இந்திய கிறிஸ்தவர்களின் கன்வென்ஷன் கூட்டம்.

### மேமீ 21உ முதல் 23உ முடிய வைகாசிமீ 8உ முதல் 10உ முடிய

நடந்த......வருஷங்களாகத் திருநெல்வேலி நாட்டிலுள்ள தேவனுடைய பிள்ளைகள் பலர் ஓரிடத்தில் வருஷத்தின் மிகுந்த உஷ்ணமான காலத்தில் கூடி, ஐக்கியப்பட்டு ஜெபிக்கவும், தேவன் அருளிச்செய்யும் செய்தியைக் கேட்கவும் நமதாண்டவர் அருளிச்செய்த அவருடைய பெரிய கிருபைக்காக அவருக்கே ஸ்தோத்திரம் செலுத்துவோமாக. உலகத்தின் ராஜ்யங்களில் யுத்தத்தினால் பெரிய மாறுதல்கள் உண்டாகியிருக்கின்றன. தேசங்கள்தோறும் ராஜாங்க விஷயமான பல அமளிகளும் மாறுதல்களும் நடந்துகொண்டிருக்கின்றன. இந்தியாவிலும் சுயராஜ்யம்வேண்டுமென்ற அமளி நடந்துகொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட காலத்தில் தேவனுடைய சபையானது தன் கண்களை ஏறெடுத்துப்பார்க்கவேண்டியதிருக்கிறது. தேவபக்தர்கள் நமதருமை எஜமானின் கட்டளைப்படி தங்கள் தலைகளை உயர்த்தித் தூரத்தில் நோக்கிப்பார்க்கவேண்டியவர்களாயிருக்கிறோம். இந்தியாவின் தென்பாகத்திலுள்ள சபைகள் பூர்வீகச் சபைகளாயும் கிறிஸ்துமார்க்க சலாக்கியங்களை மிகுதியாய் அனுபவித்தவைகளாயும் மார்க்க பக்தி சிறந்து விளங்குகிறவைகளாயும் இருக்கிறதும் கிறிஸ்தவ சாதுக்கள் இந்தியாவின் வடபாகத்திலிருந்தும் கிறிஸ்தவ ரத்தச்சாட்சிகள் இந்தியாவுக்கு வடக்கிலிருந்தும் எழும்புகிறார்களென்று பார்க்கிறோம். யூதர்களாகிய தேவனுடைய சொந்த ஜனத்தார் மறுபடியும் தங்கள் சுயதேசத்துக்குவந்து சமாதானமும் அமரிக்கையுமாய் ஜீவிக்கத்தக்கதாக பலஸ்தீனாவின் முக்கிய பாகங்கள் தற்சமயம் கிறிஸ்தவ ராஜாங்கத்தாருக்குச் சொந்தமாகக் கையளிக்

கப்பட்டிருக்கிறது. சகலரும் விழிப்பாயிருக்கிற இக்காலத்தில் திருநெல்வேலியின் பிள்ளைகளான நாம் தூங்குகிறவர்களாய்க் காணப்படாதிருப்போமாக. நாம் செய்யவேண்டிய வேலை அதிகம். எஜமானுக்காக ஆயத்தப்படவும் ஆயத்தப்படுத்தவும் வேண்டியவைகள் மிகுதி. விழித்துப்பார்ப்போம். ஜெபம் பண்ணுவோம். நாம் செய்யவேண்டியதின்னதென்று தேவசமூகத்தில்கூடி விசாரிப்போம். தேவன் தமது செய்தியை நமக்குக் கட்டளையிடும்போது அவர் சொற்படி செய்வோம். நமது விளக்குகள் எரிந்துகொண்டிருக்கட்டும். நமது அரைகள் கட்டப்பட்டிருக்கட்டும். மணவாளன் வருகிறார் என்ற சத்தம்கேட்டு உடனே எரிகிற விளக்குகளோடு அவருடன் கலியாண வீட்டுக்குள் பிரவேசிக்க ஆயத்தமாயிருப்போம். நமது சொந்த அலுவல்களைச் சிலநாள் தள்ளிவைத்துத் தேவனுடைய பிள்ளைகளோடு கூடிவருவோம். தேவன் தாமே கூடிவரும் நமது பிள்ளைகளனைவரையும் போதித்து ஆசீர்வதிப்பாராக.

வருகிறவர்களெல்லாரும் தயவுசெய்து 20உ திங்கள் இரவு 7மணிக்கே வரும்படி கேட்கிறோம். ஆயத்தக்கூட்டமே நமது முதல் கூட்டம். 'இடவசதி, சாப்பாடுவசதி யெல்லாம் வழக்கம்போல் நடக்கும். திங்கள் இரவு சாப்பாடு வேண்டியவர்கள் தயவுசெய்து முன்னமே அடியிற்காட்டிய விலாசத்துக்குத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

கன்வென்ஷன் கமிற்றிமாருக்காக,

Rev. R. V. Asirvadam,<br>Bishop's Chaplain,<br>Palamcottah.

R. V. Asirvadam.

## வல்லமை புறப்பட்டது

'அவரிடத்திலிருந்து வல்லமை புறப்பட்டு எல்லாரையும் குணமாக்கிற்று'. லூக். 6: 19.

இயேசு ராஜா மரித்துயிர்த்துப் பரலோகம் போனபின் அவருடைய வல்ல கிரியைகள் முற்றுப்பெற்றதென நினைக்கலாகாது. தாம் இவ்வுலகில் ஆரம்பித்த தமது வேலை வரவர வளர்ந்து பெருகவேண்டுமென்பதே அவருடைய விருப்பம். அந்தப்படியே அந்நாள்முதல் இந்நாள்வரை தமது ஆவியின் மூலமாகக் கிரியை நடப்பித்து வருகிறார். இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னுள்ள கிறிஸ்துவையல்ல, இப்போதும் நம்மோடிருக்கிற ஜீவனுள்ள ஆண்டவரை நோக்கினவர்களாக நாம் ஜீவிக்கவேண்டும். அக்காலத்தில் அவரில் விளங்கின வல்லமை கிருபையைக் குறித்துப் பேசுகிறவர்களாக மாத்திரமல்ல, இப்பொழுதும் விளங்கக்கூடிய அவருடைய கிருபைகளை நாம் கவனிக்கவேண்டும். தேவனுடைய சகல பரிபூரணமும்



நிறைந்த ரட்சகர் நம்மை ஆசீர்வதிக்க வாஞ்சிக்கிறார். அன்றும் இன்றும் மாறாத அன்பும் தயாளமும் நிறைந்தவராயிருக்கிறார். அக்காலத்தில் வெளிப்பட்ட அவருடைய வல்ல கிரியைகள் விசுவாசிகள் மூலமாய் இப்பொழுதும் வெளிப்படுகிறது. நமது அவிசுவாசமே கிறிஸ்துவை வல்லமையற்றவர்போலாக்குகிறது. பிரசங்க வாக்கியத்திலிருந்து மூன்று காரியங்களைப் பார்ப்போம்.

1. நாம் ஆசீர்வதிக்கப்படவேண்டுமானால் கிறிஸ்து இருக்கவேண்டிய இடத்தில் அவர் இருக்கவேண்டும். பதினேழாம் வசனத்தில் கிறிஸ்து சமனான ஒரு இடத்திலே நின்றார் என்றும் திரளான ஜனங்கள் அவரைச் சூழ்ந்துநின்றார்கள் என்றும் பார்க்கிறோம். நோயாளிகள் திரளாகக்கூடினாலும் கிறிஸ்து அவர்கள் மத்தியில் இல்லாவிட்டால் அவர்களுக்கு யாதொரு பிரயோஜனமும் உண்டாகமாட்டாது. அவர் அங்கேயிருந்ததினால் வல்லமை அவரிடமிருந்து புறப்பட்டு எல்லாரையும் குணமாக்கிற்று. நாம் ஆசீர்வதிக்கப்படவேண்டுமானால் நமது ஜீவியத்தில் கிறிஸ்து இருக்கவேண்டும். அவருக்குரிய இடத்தை அவருக்கு நாம் கொடாததினாலேயே அவருடைய வல்லமைக்கும் ஆசீர்வாதங்களுக்கும் அபாத்திரராகப்போயிருக்கிறோம். நமது ஆராதனையில் அவருக்கு இடமுண்டு. நமது விசுவாசப்பிரமாணத்தில் அவருக்கு இடமுண்டு. நமது பிரசங்கத்தில் அவருக்கு இடமுண்டு. நமது பாட்டுகளிலும் அவருடைய பேரை நாம் மறக்கிறதில்லை. எல்லாவற்றிலும் மேலாக அவர் விரும்பும் நமது இருதயத்தில் அவருக்கு இடமுண்டா? ராஜா தமது சிங்காசனத்தில் வீற்றிருந்து ராஜரீகம் செய்கிறாரா? அவருடைய ஆளுகை எங்கேயுண்டோ அங்கே அவருடைய வல்லமை புறப்படும். அவருடைய சிங்காசனத்தில் அவர் இருக்கவில்லையென்றால் நமது ஜீவியம் மகா நிர்ப்பாக்கியமாயிருக்கும். தற்காலம் ருஷியாவைக்குறித்து அதிகமாக வாசித்துவருகிறோம். அந்தேசத்தில் ஓர் பெரிய ராஜ மாளிகையுண்டு. அம்மாளிகைக்குள் ஒரு சிறந்த சிங்காசனமுண்டு. அந்தச் சிங்காசனத்தில் ராஜன் இல்லை. அவர் நல்லவர் அல்லது கெட்டவர் என்பதல்ல நமது விஷயம். ராஜ்யத்தின் நிலைமையைக் கவனிக்கும்போது மகா பரிதாபம். ஆள் ஆளுக்கு அதிகாரம். எங்கேபார்த்தாலும் கட்சிகளும் பிரிவினைகளும், தேசக் கலகத்துக்கும் கொலைபாதகங்களுக்கும் குறைவில்லை. சொன்னால் ஒருபக்கமும் பட்டினி மறுபக்கமும் கண்ணீரும் கலக்கமும் சொல்லிமுடியாது. சத்துருவினால் ஒடுக்கப்பட்டுத் தாழ்த்தப்பட்டார்கள். இயேசு ராஜா நமது இருதய சிங்காசனத்திலிருந்து ஆளுகை செய்யாவிட்டால் நமக்குப் பெலனேது? சந்தோஷமேது? ஆசீர்வாதமேது? ஜெயமேது? நமது ஜீவியம் கலக்கமும், அபஜெயமும, பாவமும் நிறைந்துள்ளதாயிருக்கும். இயேசு என் உள்ளத்தில் வசிக்கிறாரா என்று நாம் ஒவ்வொருவரும் நம்மைக் கேட்கவேண்டும். ஒருசமயம் ராஜ அரண்மனையில் ஒரு சத்தம் தொனித்தது. அரண்மனையிலிருந்து அச்சத்தம்

அடுத்த வீடுகளுக்குச் சென்றது. பின்பு அந்தச் சத்தம் தெருத்தெருவாகச் சென்றது. அப்புறம் கிராமம் கிராமமாகத் தொனித்தது. இவ்விதமாக அந்தச் சத்தம் தேசமெங்கும் சென்றது. அந்தச் சத்தம் எதுவாயிருந்திருக்கலாம்? யூதருக்கு ராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே? என்பதே அந்தச் சத்தம். இன்று நமது உள்ளங்களில் அது தொனிக்கட்டும். தேவன் நம்மைப்பார்த்து நான் அபிஷேகம்பண்ணின உங்கள் ராஜா எங்கே? அவரை எங்கே வைத்திருக்கிறீர்கள் என்று கேட்டால் என்ன உத்தரவு சொல்லுவோம். பிதாவே நீர் அபிஷேகம் செய்து எனக்காக அனுப்பின என் ராஜாவாகிய இயேசு என் இருதயத்தில் வசிக்கிறார் என்று நாம் சொல்லக்கூடுமானால் எவ்வளவு பாக்கியம்! ஆசீர்வாதத்திற்கு ரகசியம் அதுதான்.

2. நாம் ஆசீர்வதிக்கப்படவேண்டுமானால் நாம் இருக்கவேண்டிய இடத்தில் நாமும் இருக்கவேண்டும். அவருடைய உபதேசத்தைக் கேட்கவும் பற்பல நோய்களிலிருந்து குணமாகவும் திரளான ஜனங்கள் அவரிடத்தில் வந்தார்கள். திரள்கூட்டம் அவரைச் சூழ்ந்திருந்தபோதிலும் எல்லாரும் ஆசீர்வதிக்கப்படத்தக்க இடத்தில் இருக்கவில்லை. ஆசீர்வதிக்கப்படத்தக்க இடமெது? நம்முடைய குறைவுகளை உள்ளபடி உணர்ந்துகொள்ளுதலும், அவைகளை நீக்கி நம்மை ஆசீர்வதிக்க கிறிஸ்துவுக்கு வல்லமையும் மனமும் உண்டு என்று நம்பி, அவரை விசுவாசத்தோடு பற்றிக்கொள்ளுதலுமே. திரள்கூட்டம் அவரைச் சூழ்ந்திருந்தபோதிலும் எல்லாரும் ஆசீர்வதிக்கப்பட்டார்கள் என்று சொல்லமுடியாது. பரிசேயரின் கூட்டம் அங்கே உண்டு. இவர்கள் மார்க்க அபிமானிகள். ஆசார பக்தர்கள். சுயநீதிக்காரர். தங்களைப் பாவிகளென்று ஒத்துக்கொள்ள மனமில்லாதவர்கள். யோவானுடைய ஸ்நானத்தை அசட்டைசெய்து தேவ ஆலோசனைக்கு எதிர்த்துநின்றவர்கள். இந்தக் கல்லறைகள் பலமுறையும் கர்த்தரிடம் வந்தபோதிலும் கடுகளவு ஆசீர்வாதம் பெற்றதில்லை. சதுசேயரின் கூட்டமும் உண்டு. இவர்கள் உபதேச தர்க்கப்பிரியர். மறுமை, உயிர்த்தெழுதல், தேவதூதர், இப்படிப்பட்ட விஷயங்களில் நம்பிக்கையில்லாதவர்கள். இயேசுவின் உபதேசம் முழுவதும் மறுமையையும் அதின் நித்திய பாக்கியங்களையும் பற்றினதாகயிருந்தது. சதுசேயர் அப்படிப்பட்ட உபதேசங்களைப் பரியாசம்பண்ணுவார்கள். ஏழுபேர் ஒரு ஸ்திரீயை விவாகம்பண்ணி மரித்துப்போனால் மறுமையில் அவள் யாருக்கு மனைவி என்பது இவர்களுடைய பரியாசக் கேள்வி. தேவவல்லமையையும் வேதவாக்கியங்களையும் அறியாததினால் அல்லவா இத்தப்பெண்ணமென்று ரட்சகர் அவர்களைக் கடிந்துகொண்டார். ஏரோதின் கூட்டமும் உண்டு. இவர்கள் மார்க்கவிஷயத்தில் அல்ல. தேச விஷயங்களில் ராஜ்யத்துக்கடுத்த காரியங்களில் மிகச் சிரத்தையுடையவர்கள். ராஜனுக்கு வரிகொடுக்கிறது நியாயமா வென்று ஆண்டவரைச் சோதித்தவர்கள் இவர்களே. இக்கூட்



டத்தார் ஆண்டவரிடம் அடிக்கடி போனதுமுண்டு. நோக்கம் மகா தப்பிதம். குற்றம் பிடிக்கவும் தர்க்கம்பண்ணவுமாக தகாத நோக்கத்தோடு போனதினால் நன்மை காணாமற்போனார்கள். அவரண்டை சென்று, அவர் முகம் பார்த்து, அவர் வார்த்தைகளைக் கேட்டபோதிலும் இருதயத்தில் அவர்கள் தூரமாகயிருந்து ஆசீர்வதிக்கப்படத்தக்க நிலைமைக்கு வராதபடியால் யாதொரு பிரயோஜனத்தையும் அடையாமற்போனார்கள். நாம் ஆசீர்வதிக்கப்படவேண்டுமானால் பரிசேயரின் சுயநீதியின் ஆவி நம்மைவிட்டு நீங்கவேண்டும். போஜன பாத்திரத்தின் வெளிப்புறமல்ல அதின் உட்புறம் முதலாவது சுத்தமாகவேண்டும். பலவித ஆசரிப்புகள் நற்கிரியைகளிலுலே ரட்சிப்பைத் தேடாதே. கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் ரட்சிக்கப்பட்டுப் பின்பு நற்கிரியை செய். தேவனே பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்று சொல்லுகிற இடத்துக்கு வா. சதுசேயரின் ஆவியையும் விட்டுவிடு. உபதேச தர்க்கம் பிரயோஜனமல்ல. ஆண்டவர் சொல்லும் வார்த்தையை நம்பி அதில் நிலைத்திரு. ஏரோதியரின் ஆவியும் நல்லதல்ல. கிறிஸ்துமார்க்கத்தை உலக ராஜ்யத்தோடு சம்பந்தப்படுத்தாதே. அவருடைய இராஜ்யம் இவ்வுலகத்துக்குரியதல்ல. நாம் ஆசீர்வதிக்கப்படவேண்டுமானால் அந்த நோயாளிகளைப்போல நமது பெலவீனமான சாவுக்குரிய நிலைமையை உள்ளபடி உணர்ந்து கிறிஸ்துவின் பாதத்தில் விழவேண்டும். மெய்யாகவே அவரிடத்திலிருந்து வல்லமை புறப்பட்டு நம்மைக் குணமாக்கி ரட்சிக்கும்.

3. அவரிலிருந்து வல்லமை புறப்பட்டது. அவரில் ஞானம் உண்டு. இரக்கம் உண்டு. கிருபையுண்டு. அன்புண்டு. ஆனால் வல்லமை புறப்பட்டதென்று சொல்லியிருக்கிறது. கிறிஸ்து மார்க்கத்தில் வல்லமைதான் விசேஷம். ஆவியின் மூலமாய் அருளப்பட்டதும் உன்னத சக்தியே. பாவங்களிலிருந்து விடுவிக்கப்பட, பாவங்களை மேற்கொள்ள, சோதனைகள் துன்பங்களை சகிக்க, தீமைகளை ஜெயிக்க, மற்றவர்களை ஆதாயப்பண்ண நமக்கு வல்லமை வேண்டும். மற்றவர்களிலிருந்து நம்மை விசேஷப்படுத்துவது இந்த வல்லமைதான். 'என் பாவங்கள் மன்னிக்கப்பட்டது, நான் ரட்சிக்கப்பட்டேன், சந்தோஷம் என்று நாம் சொல்லிக்கொண்டிருப்பதில் தேவனுக்கு மகிமை வரமாட்டாது. கிறிஸ்தவ ஜீவியம் தேவனை மகிமைப்படுத்துகிற ஜீவியம். பாவமன்னிப்பினால் அல்ல, வல்லமையின் ஜீவியத்தினாலேயே தேவனுக்கு மகிமை வரக்கூடும். பாவமன்னிப்பு முக்கியமானாலும் அது மறைவான ஆசீர்வாதம். அது நமது இருதயத்துக்குத் தெரியும். மற்றவர்கள் காணமுடியாது. வல்லமையின் ஜீவியமோ யாரும் காணக்கூடும். மனுஷர் உங்கள் நற்கிரியைகளை அல்லது வல்லகிரியைகளைக்கண்டு பிதாவை மகிமைப்படுத்தும்படி என்று ரட்சகர் சொன்னார். இமிர்வாதக்காரன் பயத்தை

இயேசு மன்னித்தார். மன்னிக்கப்பட்டது என்று அவர் சொன்னபோதே மன்னிக்கப்பட்டது மெய். கூடியிருந்த ஜனங்கள் அதைக் காணவில்லை. ஆனால் அப்படிச் சொன்னதற்காக முறுமுறுத்தார்கள். அவன் எழுந்து நடந்த அந்த வல்லமையைக் கண்டபோதோ தேவனை மகிமைப்படுத்தினார்கள் மறுவார்த்தை பேசக்கூடவில்லை. ஜீவியத்தில் ஆவியின் வல்லமையற்றவர்கள் நாங்கள் ரட்சிக்கப்பட்டோம் என்று சாட்சி கூறுவது அடிக்கடி முறுமுறுப்பையும் தூஷணத்தையுமே பிறப்பிக்கும். அவரிடத்திலிருந்து வல்லமை புறப்பட்டது. நாம் தேவனுக்கு மகிமை வரத்தக்கவிதமாக ஜீவியம் செய்யவேண்டியது உண்மையாகிலும், முதலாவது மகிமையல்ல அதற்குமுன் இரண்டு காரியங்களைக் கவனிக்கவேண்டும். கர்த்தருடைய ஜெபத்தில் அந்த வரிசையைக் காணலாம். முதலாவது ராஜ்யமும் அப்புறம் வல்லமையும் அப்புறம் மகிமையும். இராஜாவாகிய இயேசு தமக்குரிய சிங்காசனமாகிய இருதயத்தில் அந்த ராஜ்யபாரம் பண்ணவேண்டும். அந்த ஆளுகையின் பலனாக நாம் ஆசீர்வதிக்கப்பட்டு ஜீவியத்தில் வல்லவர்களாகிறோம். அந்த வல்லமையின் ஜீவியத்தை மற்றவர்கள் கண்டு தேவனை மகிமைப்படுத்துகிறார்கள்.

S. பரமானந்தம்.

## இதோ வாசற்படியில் நின்று தட்டுகிறேன். வெளி. 3. 20

முகவுரை, ஓர் சபையோடு பேசுகிறார். லவோதிக்கேயா சபை. அவர்கள் காரியம் மெத்தப் பரிதாபம். தங்களை நல்லவர்களென்று நினைத்தார்கள். தங்களுக்கு ஒரு குறைவுமில்லை என்று நினைத்தார்கள். தங்களுக்கு ரக்ஷிப்புண்டு, மோட்சம் கிடைக்கும் என்று எண்ணினார்கள். ஆண்டவரோ அப்படி நினைக்கவில்லை. நீ குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப்பாயிருக்கிறதினாலே உன்னை என் வாயினின்று வாந்திபண்ணிப்போடுவேன் என்கிறார். நிர்ப்பந்தர், பரிதபிக்கப்படத்தக்கவர்கள், தரித்திரர், குருடர், நிர்வாணிகள் என்று சொல்லுகிறார். ஆகையால் நீ ஜாக்கிரதையாயிருந்து மனந்திரும்பு என்று ஏவுகிறார். இந்தச் சபையாரும் அப்படியே. எகிப்தியர் விருந்துசெய்யும்போது, எல்லாரும் ஒன்றாய்ச் சாப்பிட்டு சந்தோஷமாயிருக்கும்போது, செத்த பிரேதம் ஒன்றைக் கொண்டுவந்து விருந்துசாலையில் வைத்து, ஜனங்களே நீங்கள் எல்லாரும் இந்தப் பிணத்தைப்போல் ஆகப்போகிறீர்கள், அதை நினைத்துக்கொள்ளுங்கள் என்று கூறுவார்கள். இதோ, பிரேதத்தைப்போலாகப் போகிறீர்கள் என்றல்ல, பாவத்தினாலும் அக்கிரமத்தினாலும் செத்தவர்களாயிருக்கிறீர்கள் என்று ஆண்டவர் சொல்லுகிறார். குருடனைக் கொண்டுவந்து நிறுத்தி, மனுஷனே, மனுஷியே நீ இந்தக் குருடனைப்போலிருக்கிறாய்



உனக்கு ஒன்றும் தெரியாது என்கிறார். நிர்வாணியைக் கொண்டுவந்து நிறுத்தி, நீ இப்படி நிர்வாணமாயிருக்கிறாய். உன் அவலட்சணம் எல்லாம் எனக்குத் தெரியும். உனக்கு வஸ்திரமில்லை, உன் நிர்வாணத்தை மூட உனக்கு ஒன்றுமில்லை என்கிறார். நம்முடைய நிர்ப்பந்தமான நிலைமையை உணர்த்தி, அப்புறம் அன்போடு சொல்லுகிறார், இதோ தட்டுகிறேன். முக்கியமான காரியத்தை அறிவிக்கிறேன். தேவனுடைய கதவைப் பாவி தட்டும்போது ரக்ஷகர் உடனே திறக்கிறார். தட்டுங்கள் அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும் (மத். 7. 7). ஆனாலோ ஆண்டவர் பாவியின் கதவைத் தட்டும்போது திறக்கமாட்டான். தேவன் வராதபடிக்கு தன் இருதயத்தை நன்றாய்ப் பூட்டிப்போடுகிறான்.

1. தட்டிக்கொண்டே நிற்கிறார். கிறிஸ்துநாதர் தட்டுகிறார் என்று அநேகர் நம்புகிறதுமில்லை, உணருகிறதுமில்லை. எருசலேமில் மரியாளுடைய வீட்டில் ஜெபக்கூட்டம் நடக்கிறது. கதவு நன்றாய்ப் பூட்டியிருக்கிறது. இராக்காலம். பேதுரு சிறைச்சாலையிலிருந்து விடுதலையாகி இப்போது வரவேண்டுமென்று ஜெபம்பண்ணினார்கள். வந்துவிட்டான். வாசல் கதவைத் தட்டினான். திரும்பத்திரும்பத் தட்டினான். சத்துரு என்று பயந்தார்கள். கதவைத் திறக்க மனமில்லை. அவனோ விடவில்லை. தட்டிக்கொண்டே நின்றான். ஒரு பெண்பிள்ளை ஒற்றுக்கேட்க வந்தாள். பார்த்தீர்களா? ஆண்பிள்ளைகள் வரவில்லை. பேதுரு என்று அறிந்துகொண்டாள். மற்றவர்களோ நம்பவில்லை. பிதற்றுகிறாய் என்று சொன்னார்கள். பேதுருவோ விடவில்லை. பேதுரு பின்னும் தட்டிக்கொண்டிருந்தான் அப். 12. 16. கடைசியில் வெகுநேரத்திற்குப் பிறகு கதவைத் திறந்தார்கள். அவர்கள் திறந்தபோது, அவனைக் கண்டு பிரமித்தார்கள். அப்படிப்போல இயேசுவானவர் தட்டிக்கொண்டே நிற்கிறார். சத்துரு அல்ல, பரம சிநேகிதர். பார்வையைக் கொடுக்கவந்தவர். நீதிவஸ்திரத்தைத் தரிப்பிக்கவந்தவர், பரம பொக்கிஷத்தைத் தரவந்தவர். பாவத்திலிருந்து ரக்ஷிக்க வந்தவர். ஜெபம் பண்ணுகிறதுமாத்திரம் போதாது. கதவைத் திறக்கவேண்டும்.

2, எப்போதும் தட்ட வரமாட்டார். என் ஆவி என்றைக்கும் மனுஷனோடே போராடுவதில்லை (ஆதி. 6, 3). உன்னதப்பாட்டு 5. 2—5. அவன் உடனே திறக்கவில்லை. உன். 5. 6, என் நேசர் இல்லை. போய்விட்டார். அவரைத் தேடினேன். அவரைக் காணவில்லை. அவரைக் கூப்பிட்டேன், அவர் எனக்கு மறு உத்தரவு கொடுக்கவில்லை. கிறிஸ்துநாதர் சொல்வதைக் கேளுங்கள். நீதி, 1, 24—26. பயங்கரம். மேலும் அவருடைய கதவை அப்போது தட்டினாலும் திறக்கமாட்டார் லூக். 13: 25.

III. மூன்று திருஷ்டாந்தங்கள்.

1. கதவைத் திறந்து வைத்தவள். லீதியாள் அப். 16: 14, 15. ஆராதனைக்காய் சில ஜெபவீடு ஸ்திரீகளுடைய கூட்டம். அங்கே பவுல் அப்போஸ்தலன் வந்து போதிக்கிறார். அங்கே 20 ஸ்திரீகள் இருந்திருக்கலாம். எத்தனை என்று தெரியாது, எல்லாரும் கேட்டார்கள். அப்பிரசங்கத்தின் மூலமாய் தேவன் அவர்களுடைய இருதயக் கதவைத் தட்டினார். திறக்கவேண்டுமென்று கேட்டார். ஒருத்திமாத்திரம் திறந்தாள். இரட்சகர் உள்ளே வந்தார். அங்கேயே [illegible]ப்பட்டாள். கர்த்தர் அவள் இருதயத்தைத் திறந்தருளினார். அவளுக்கும் அவள் வீட்டாருக்கும் இரட்சிப்பின் நாள் அது. கதவைத் திறக்க உங்களுக்கு மனதுண்டா?

2. கதவைத் திறக்க யோசித்தவன். அகிரிப்பா இராஜா. அப். 26: 28. யோசித்தான் திறக்கவில்லை அவனும் பவுல் அப்போஸ்தலனுடைய பிரசங்கத்தைக் கேட்கிறான். கேட்டு உணர்வடைகிறான். குணப்பட்டால் நல்லது என்று உணருகிறான். கிறிஸ்துவுக்குக் கதவைத் திறந்தால் நாவிலா என்று யோசிக்கிறான். பிரசங்கியாரைப்பார்த்து நான் கிறிஸ்தவனாகிறதற்கு கொஞ்சங்குறைய நீ என்னை சம்மதிக்கப்பண்ணுகிறாய் என்றான். பூரணசம்மதமில்லை ஏன்? பனிதருக்குப் பயந்தான். மேலும் அவனுக்குப் பிரியமான ஒரு பாவம் இருந்தது. அது அசுத்தமான பாவம். அதைவிட்டுவிட மனமில்லை. கொஞ்சங்குறைய கதவைத் திறக்கச் சம்மதித்தான் திறக்கவில்லை முடிவு என்ன? அவன் காலத்தில் எருசலேம்பட்டணம் சுட்டெரிக்கப்பட்டது. அவன் ராஜ்யம் போய்விட்டது. தூரதேசத்திற்குக் கொண்டுபோகப்பட்டான். அவனோடு அந்த வம்சம் முடிந்துபோயிற்று. தேவன் தட்டும்போது திறவாமல்போவது மோசமான காரியம். ஒருவேளை உங்களில் சிலர் அப்படித் தாமதிக்கிறதுண்டு. கொஞ்சங்குறைய சம்மதிக்கிறீர்கள்

3. கதவைத் திறவாமற் பூட்டினவன். பார்வோன் இராஜா. எத்தனை விசை தேவன் தட்டினார்! தமது ஊழியக்காரரையனுப்பித் தட்டினார். அடையாளங்களைக் காட்டித் தட்டினார். பத்து வாதைகளை வரவிட்டுத் தட்டினார். பார்வோன் சிலசமயங்களில் பயந்து நடுங்கினான். ஆனாலும் அவன் கதவைத் திறக்கவில்லை. பல தாழ்ப்பாள்களைப்போட்டுக் கதவைப்பூட்டித் தன் இருதயத்தை நன்றாய்க் கடினப்படுத்தினான். கடைசியாக மோசேயைக் கோபித்து என்னைவிட்டு அப்பாலே போ என்றான். யாத். 10 28. சுவாமி போய்விட்டார், அவன் முடிவு அழிவு. 2 நாளா. 15: 2. நீங்கள் அவரைத் தேடினால் உங்களுக்கு வெளிப்படுவார். அவரை விட்டீர்களேயாகில் அவர் உங்களை விட்டுவிடுவார்.

Rev. T. Walker.



# வேதாகமப் பாடமுறை.

## 22-ம் பாடம்.

### 2 நாளாகமம்.

இவ்வாகமத்தில் சாலொமோன் ஆளுகையிலிருந்து, யூதாவின் சிறையிருப்புமட்டுமுள்ள சரித்திரம் அடங்கியிருக்கிறது. 1 நாளாகமத்தைப் போலவே, இவ்வாகமத்திலும் ராஜாக்களின் ஆகமங்களில் சொல்லப்படாமல் விட்டிருக்கிற நூதன சங்கதிகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவையாவன:—பின்வரும் பாகங்களைப் பார்க்க. 2 நாளா. 6: 40—42; 11. 5—53; 12. 4—8; 13. 3—21; 14. 3—15; 15. 1—15; 16. 7—10; 17 அதி; 19 அதி; 20 அதி. 1—30, அதி. 21. 2—4, 11—19; 24. 15—22; 25 5—10, 12—16; 26. 5—20; 27. 4—6; 28. 5—25; 29. 3—36; 30 அதி 31 அதி; 32 அதி. 22, 23, 26—31; 33 அதி. 11—19; 34. 3—7; 35. 2—17, 25; 36. 11—23.

வேதாகமத்தின் மற்ற ஆகமங்களில் சொல்லப்படாத விஷயங்கள் இந்த ஆகமத்தில் 20 முழு அதிகாரங்களில் அல்லது 24 அதிகாரங்களின் பாகங்களில் வருகின்றன. ஆகையால் நாளாகமங்கள் விசேஷித்த ஆகமங்கள்தான் நூதன விஷயங்களாய் மாத்திரமல்ல, நூதனத் தோற்றமுடையவைகளாயுமிருக்கின்றன. இதில் யூதராஜ்யபார சரித்திரம் ராஜாங்க விஷயமான தோற்றமுடையதாய் எழுதப்படாமல் திருச்சபைக்குரிய தோற்றமுடையதாய் எழுதப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி டாக்டர் எ. ற. பீயர்ஸன். பின்வருமாறு கூறுகிறார். 'ஆலயத்தைப்பற்றிய விஷயங்கள், அதின் பாதுகாப்பு, சீர்திருத்தம், சத்தாங்க வணக்கம், ஆராதனைகளின் ஒழுங்கு, விக்கிரக ஆராதனைச்சடங்குகள் ஸ்தாபனங்களைப்பற்றிய பகை, ஜனங்களின் இருதயத்தில் தேவனை சிம்மாசனபதியாய் உயர்த்துதல் முதலிய குறிப்புகள் இதில் உண்டு. ராஜாதி ராஜாவுக்குமுன் உலக ராஜாக்களின் நிலைமை எவ்வாறென்பதே இவ்வாகமத்தின் திறவுகோல். அந்தந்த ராஜாக்கள்செய்த நன்மை தீமைக்குத்தக்கதான தண்டனைகள் அல்லது பலன்கள் கூறப்பட்டு அவரவர்க்கு நிறைவேறித் தீர்க்கன. விக்கிரக ஆராதனைக்காரரான அக்கிரம அரசர்கள் மூன்றுபேர் தொடர்ந்தேர்ச்சியாய் ஆளுகைசெய்த பின் தேவாலய அழிவும் நெடுங்கால சிறையிருப்பும் சேர்ந்தன. பரிசுத்த தேவவணக்கத்தை முக்கியப்படுத்தின அரசர்கள் அவ்வாதையை [illegible] சேரிடாதபடி தாமதப்படுத்தினார்கள்.

நாளாகமங்களுக்கும் ராஜாக்களின் ஆகமங்களுக்குமுள்ள ஒற்றுமை வித்தியாசங்களைக் கவனியுங்கள். ராஜாக்களின் ஆகமங்களில் இஸ்ரவேல் யூதராஜ்யங்கள் இரண்டையும் குறித்து ராஜாங்க விஷயமான முறையாயும் சரித்திர சம்பவங்களை வரிசைக்கிரமமாயும் யுத்தங்கள், விக்கிரக ஆராதனைகளைக் குறிப்பிட்டு, விக்கிரக ஆராதனையை பரமராஜாவுக்கு விரோத

மான துரோகமென்றும் காட்டியிருக்கிறது. ராஜாகமங்களில் யூதராஜ்ய பாரம் ஒன்றைமாத்திரம் குறித்தும தெய்வவணக்கம் ஆலயத்தின் பணிவிடை, ஆராதனே, ஆசாரியத்துவம், மீட்பு, மனந்திரும்புதல், சீர்திருத்தம் இவைகளைக்குறித்தும் சரித்திரத்தை நியாயசாஸ்திர முறைப்படி பிரித்துக் காட்டியும், விக்கிரக ஆராதனையானது தேவனுடைய உடன்படிக்கையை மீறி அவரைவிட்டு விலகுவதாகும் என்றும் கூறியிருக்கிறது' என்பதே

இவ்வாகமத்தின் இரண்டு பிரிவுகள்.

1. சாலோமோனின் ஆளுகை. அதி 1—9.
2. யூதராஜாக்கள். அதி 10—36.

1. சாலோமோனின் ஆளுகை அதி 1—9. ஒரு விசேஷித்த வசனம். 1 நாளா. 29. 23. 'சாலோமோன் தன் தகப்பனாகிய தாவீதின் ஸ்தானத்திலே கர்த்தருடைய சிங்காசனத்தில் ராஜாவாய் வீற்றிருந்து பாக்கியசாலியாயிருந்தான். 1 நாளா. 28. 5ஐயும் பார்க்க. மத்தேயு ஹென்றி என்பவர் சொல்லுகிறபிரகாரம் 'சிங்காசனம் கர்த்தருடையது. அவரே அதை ஏற்படுத்துகிறவராகவும் அதில் உட்காரும் ஆளை நியமிப்பவராகவும் இருக்கிறார்'.

தேவன் சாலோமோனுக்குத் தரிசனமாகி அதி. 1: 7. நீ விரும்புகிறதை என்னிடத்தில் கேள் என்றார். இது அவனைச் சோதித்த கேள்வியல்லவா? அவனுடைய இருதயத்தில் என்ன எண்ணம் இருந்ததென்பதை இது கண்டுபிடித்துவிட்டதல்லவா? மனிதரின் குணாதிசயங்கள் அவர்கள் நாடித் தேடுவதிலும் ஆசிப்பதிலுமே அநேக தடவைகளில் வெளியாகும். தாவீதின் உத்தம குமாரனை ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைத் தெரிந்து கொண்டான். 'என் தகப்பனாகிய தாவீதுக்கு அருளின உமது வாக்குத்தத்தம் உறுதிப்படுவதாக' அதி. 1: 9. ஜெபத்திற்கு உத்திரவு கிடைத்தது தேவன் அவனுக்கு ஞானத்தைக் கொடுத்தார் யாக். 1. 5. அவன் கேட்காத ஆஸ்தியையும் கனத்தையும் கூடக் கொடுத்தார். மத். 6. 33.

சாலோமோனின் ஞானம், ஆஸ்தி அதி. 8, 9. சாலோமோன் காலத்தில் தேவாலயம் கட்டப்பட்டதும் அதன் பிரதிஷ்டையும் விசேஷித்த சம்பவங்கள். தாவீது ராஜா ஆலயம் கட்டுவதற்கு வேண்டிய பொருள்களை சேகரித்துவைத்தான். சாலோமோன் அதைக் கட்டி முடிக்கத் தீர்மானித்தான். அதி. 2: 1. மகத்துவம் பொருந்திய ஆலயத்தைக் கட்டி முடித்து, அதைத் தேவனுக்கென்று பிரதிஷ்டை பண்ணினான். அதி 5; அச்சிறந்த கட்டடம் தேவனின் மகிமைக்கென்று பரிசுத்தமாக்கப்பட்டது. தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டி ஆலயத்தில் வைக்கப்பட்டது. துதியின் சத்தம் பூரிகைகளாலும் தாளங்கள் கீதவாத்தியங்களாலும் தொனித்தது. ஆலயம் கர்த்தருடைய மகிமையால் நிரம்பிற்று. மோசேயின் ஆசரிப்புக் கூடாரத்தைத் தேவன் அங்கீகரித்ததுபோல இந்த ஆலயத்தையும் அவர் அங்கீகாரம் செய்ததாக விசேஷித்துக் காட்டினர். ஜெப



மும் பலியும் செலுத்தப்பட்டது. தேவன் அக்கினியினால் உத்தரவு அருளினார். ஜனங்கள் சந்தோஷமும் மனமகிழ்ச்சியுமாய்க் கூடாரங்களுக்குத் திரும்பினார்கள். அதி. 7: 10.

சாலோமோனின் கட்டடங்கள். அதி. 8. 1—6.

பகுதி கட்டின ஜாதியார். அதி. 8: 7—10.

ஆராதனை. 8. 11—16. கப்பல் வியாபாரம் 8. 17. சேபாவின் ராஜஸ்திரீ சாலோமோனைப் பார்க்கவருதல். பூமியின் அரசர்கள் யாவர் மேலும் சாலோமோனின் சொல்சக்தி வியாபித்தல். சாலோமோனின் மரணம் அதி. 9.

2. யூதாவின் அரசர்கள். அதி. 10—36. நல்ல அரசர்கள் காலத்தில் வாழ்வும், கெட்ட அரசர்கள் காலத்தில் கஷ்டங்களும் சோதனைகளும் இருந்தன.

ரெகோபெயாமின் குற்றமுள்ள ஆளுகை. அதி. 10—12. அபியாவின் சுருக்கமான சுறுசுறுப்புள்ள ஆளுகை. அதி. 13. ஆசாவின் நீண்ட சமாதான ஆளுகை. அதி. 14—16. யோசாபாத்தின் பக்தியும் வாழ்வுமுள்ள ஆளுகை. அதி. 17. யோராம் அகசியா என்பவர்களின் அவபக்தியும் அவகீர்த்தியுமுள்ள ஆளுகை. அதி. 21, 22. யோவாஸ் அமசியா என்பவர்களின் நிலையற்ற ஆளுகை. அதி. 24, 25. உசியாவின் நீண்ட வாழ்வுள்ள ஆளுகை. அதி. 26. யோதாமின் ஒழுங்கான ஆளுகை. அதி. 27. ஆகாஸ் விக்கிரக பீடங்களை யுண்டுபண்ணி தேவாலயத்தை அவமதித்தலான கெட்ட ஆளுகை. அதி. 28. எசேக்கியாவின் கிருபையும் மகத்துவமும் பொருந்திய ஆளுகை. அதி. 29—32. மனாசே ஆமோனின் கெட்ட ஆளுகை. அதி. 33. யோசியாவின்சீர்திருத்த ஆளுகை. அதி. 34, 35. அவன் குமாரரின் அழிவுள்ள ஆளுகை. அதி. 36.

இவைகளெல்லாவற்றையும் ஒன்றுசேர்த்து கவனிக்குங்கால் 'என்னைக் கனம் பண்ணுகிறவர்களை நான் கனம் பண்ணுவேன். என்னைக் கனவீனம் பண்ணுகிறவர்கள் கனவீனம் பண்ணப்படுவார்கள்' என்ற தேவ வசனத்தின் உண்மை தெளிவாகிறது. இவ்வாகமத்திலடங்கிய சரித்திரத்தில் தவறுதலும் சீர்கிருத்தமும் சிறையிருப்பின் காலமட்டும் மாறிமாறி வருகின்றன. பின்வரும் அரசர்களில் ஆசா யெகோவாவின் வணக்க விஷயமாயும் யோசபாத், வேதாகமத்தைப் போதிப்பதிலும், யோவாஸ் கர்த்தருடைய ஆலயத்தைப் பழுதுபார்ப்பதிலும் எசேக்கியா காத்தரை ஆராதிப்பதில் மார்க்க எழுப்புதலையும் யோசியா ஆவிக்குரிய விஷயங்கள் சன்மார்க்க விஷயங்களில் சீர்திருத்தங்களையும் உண்டுபண்ணினார்கள். தாவீதின் வம்ச அரசர்களில் பின்வருபவர்கள் ஜனங்களுக்கு மீட்பையுண்டுபண்ணினார்கள். அபியா யெரொபெயாமின்மேல் ஜெயம்பெற்றான். அதி. 13. ஆசா எத்தியோப்பியரின் பெரிய சேனையை முறிய அடித்தான். அதி. 14. யோசபாத்துக்கு அதைவிட அதிசயமான ஜெயம் கிடைத்தது. ஒரு

பட்டயமாவது உருவாமலும் அம்பு எய்யாமலும் கர்த்தர் அவனுக்கு ஜெயத்தையருளினார். அதி. 20. எசேக்கியாவுக்குக் கிடைத்த மீட்பு இன்னும் அதைவிட அதிசயமானது. இராத்திரியின் அமைதியான நேரத்திலே, கர்த்தர் ஒரு தூதனையனுப்பி அசீரியரின் பாளயத்தை அதம்பண்ணினார் அதி. 32. 20, 21, ஒவ்வொரு சமயத்திலும் தேவன் யூதாவுக்காக யுத்தம் பண்ணினதே ஜெயத்திற்குக் காரணம். அதி. 13. 18; 14. 11; 20. 27; 32. 20, 21.

சிலர் முழுவதும் கெட்ட அரசர்கள். யெகோராம், யோராம் அகசியா, ஆகாஸ், ஆமோன். சிலர் பலவீனரும் சபைக்கு உதவாத அரசர்கள். யோயாக்கீம், யோயாக்கின் சிதேக்கியா. மிகக் கேவலமான யூத அரசர்களில் ஒருவன் மனாசே. என்றாலும் கடைசிக்காலத்தில் கர்த்தரிடமாய்த் திரும்பினான். ஆனால் சிலர் ஆரம்பத்தில் நல்ல ஆளுகை செய்தாலும் முடிவில் கேடான நிலைமைக்குள்ளானார்கள். யோவாஸ் ஆரம்பத்தில் கர்த்தருடைய ஆலயத்திற்காக பக்திவைராக்கியம் காட்டினபோதிலும் முடிவில் விக்கிரக ஆராதனைக்காரனானான். பயங்கர வியாதியினால் வேதனைப்பட்டு வெட்டுண்டு கொல்லப்பட்டான். தாவீதின் நகரத்தில் அடக்கம்பண்ணப்பட்டான். என்றாலும் இராஜாக்களின் கல்லறைகளில் வைக்கப்படவில்லை. அமசியாவின் சரித்திரமும் அதைப்போன்றதே. ராஜவம்சத்தில் பிறந்த உசியாவும் குஷ்டரோகியாய்ச் செத்தான். நிர்ப்பந்தமான முடிவு. நல்ல அரசர்களிடத்திலுங்கூடக் குறையு காணப்பட்டது. உபத்திரவத்தில் நல்லவனாயிருந்த எசேக்கியா வாழ்வில் தவறினான்.

இவ்வாகமத்திலுள்ள பூராச் சரித்திரம் தனித்தனி ஆட்களுக்கும் சபைக்கும் ஜாதிகளுக்கும் எச்சரிப்புகளடங்கியது. முடிவில் உண்டான ஆபத்து இருதயத்தில் அதிக ஆராய்ச்சியை உண்டுபண்ணும். பாவம் எல்லாவையும் அழித்துப்போட்டது. தாவீதின் வம்சத்தையும் சாலொமோனின் ஆலயத்தையும் மகத்துவமும் பரிசுத்தமுமுள்ள ஞாபகங்களடங்கிய நகரத்தையும் அழித்துப்போட்டது, பாவம் அருக்காத அழிக்காத இருதயம் வீடு, இராஜ்யம், சபை கிடையாது. இதன் முடிவில் தேவன் எருசலேமுக்காக அழுகிறது. காணப்படுகிறது, ஆனால் அவர் தமது வணக்கத்தையாவது, பிரமாணத்தையாவது கைக்கொள்ளும்படி கட்டாயப்படுத்தமாட்டார். தமது தீர்க்கதரிசிகளைக்கொண்டு, ராஜாக்களிடத்திலும் ஜனங்களிடத்திலும் பேசினார். அவர்கள் செவிகொடாதேபோனால் அவர்களுடைய அழிவை எதுவும் தடைசெய்யமுடியாது. பிந்தியகாலத்தில் தேவகுமாரனும் எருசலேமுக்காகக் கண்ணீர்விட்டார். ஏனெனில் அதின் பிள்ளைகள் அவரிடத்தில் கூட்டிச் சேர்க்கப்படவில்லை. பயபக்தியுள்ள நகரம் மறுபடியும் தனக்குத்தானே நாசத்தை வருவித்துக்கொண்டது.

Priuted at the Palamcottah Printing Press, Palamcottah and published by the Christiau Brotherhood Association, Tinnevelly.

April 1918. Registered No. M. 163

# The Water of Life
# ஜீவத்தண்ணீர்

15 JUN 1918

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்." யோவான் 7: 38.

Vol. XIX ஏப்பிரல் மீ 1918

## நீ ஜீவனைத் தெரிந்துகொள் உபா. 30: 19.

முகவுரை.—மோசே தன் கடைசிநாட்களில் ஜனங்களுக்குப் புத்திமதிகள் சொன்னார். சீக்கிரம் போய்விடுவார். மலையின் மேல் ஏறி கானான் தேசத்தைத் தூரத்திலிருந்து பார்த்து மரணமடையப்போகிறார். காலம் சுருக்கம். ஆகையால் ஊக்கத்தோடு பேசுகிறார். 120 வயதாயிற்று. தான் 40 வருஷம் நடத்திவந்த ஜனங்கள் எல்லாரும் தேவனைப் பின்பற்றவேண்டுமென்று விரும்புகிறார். அவர்கள் ஏதப்பழி தன் நிலையின்மேல் சுமராதபடிக்கு அவர்களை எச்சரித்துப் பேசுகிறார். இந்த உபாகமத்தில் மோசேயின் பிரசங்கங்கள் அடங்கியிருக்கிறது. அடிக்கடி அவர்களுக்குப் போதித்தார். இது கடைசிப் பிரசங்கம்போலிருக்கிறது. ஆகையால் காரியம் நிர்மாணத்துக்கு வரவேண்டும். ஜனங்கள் பிரியமாய்க் கேட்டது மாத்திரம் போதாது. பிரசங்கத்தைக் கேட்ட யாவரும் தெரிந்துகொள்ளவேண்டும். பிரசங்கித்த சத்தியம் மறைபொருளுமல்ல, தூரமானதுமல்ல, வானத்திலுள்ளதுமல்ல, சமுத்திரத்திற்கு அப்புறத்திலுள்ளதுமல்ல. 'நீ அந்த வார்த்தையின்படியே செய்யும்பொருட்டு, அது உனக்கு மிகவும் சமீபமாய் உன் வாயிலும், உன் இருதயத்திலும் இருக்கிறது,' [வா. 14]. தெரியாத காரியமல்ல. வழி தெள்ளாயிருக்கிறது. அதில் நடந்தால் ஜீவன். இல்லாவிட்டால் மரணம். 'ஜீவனைத் தெரிந்துகொள்' அப்படிப்போலவும் போது எல்லாம் விசேஷித்த பிரசங்கம். பாவத்தை விட்டுவிடவேண்டும், ரக்ஷகரைப் பற்றிக்கொள்ளவேண்டும். மறைபொருளுமல்ல, தூரமானதுமல்ல, உங்கள் வாயிலும் இருதயத்திலும் இருக்கிறது. தெரிந்துகொள்ளுங்கள். திருஷ்டாந்தம்:—இரண்டு ராஜாக்களுக்குள் மனஸ்தாபம். ஒருவன் மற்றவனிடத்துக்கு ஆள் அனுப்பி 'உமக்குச் சமாதானம் வேண்டுமா?

சண்டை வேண்டுமோ? தெரிந்துகொள்ளும்' என்று கேட்டார். தீர்மானம் பண்ண அந்த ராஜாவுக்கு மனதில்லை. சமாதானம் வேண்டுமென்றால் அந்த மற்ற ராஜாவுக்குக் கீழ்ப்படியவேண்டும், சண்டை வேண்டும், ஆனால் ஒருவேளை எனக்கு மோசம் வந்து என் ராஜ்யம்போய்விடும் என்று பயந்தார். கடத்தப்போடப் பார்த்தார். ஆனால் தூதனாக வந்த அந்த ஆள் அவனைவிடவில்லை. ராஜாவைச்சுற்றி தன் தடிக்கம்பினாலே தரையிலே வட்டம்போல ஒரு கோடுபோட்டு 'நீர் கால்தூக்கி இந்த வட்டக் கோட்டைக் கடந்து தாண்டு முன்னமே எனக்கு உத்தரவுவேண்டும். சமாதானமா, சண்டையா தெரிந்துகொள்ளும். உத்தரவு சொல்லாமல் இந்த கோட்டைத் தாண்டினீரானால் சண்டையென்று சொல்லுகிறதற்குச் சமானம்' என்றான். ராஜா அகப்பட்டார். வேறே போக்கில்லை. தெரிந்துகொண்டார். நீங்களும் அப்படியே ஒவ்வொருவரும் தெரிந்துகொள்ளவேண்டும். ஜீவனா, மரணமா, சமாதானமா, சண்டையா? உங்கள் முன்புக்கு இரண்டையும் வைக்கிறேன் தெரிந்துகொள்ளுங்கள்.

I. பெரிய ஆட்கள் தெரிந்துகொள்ளவேண்டும். எபி. 11: 24 25. மோசே பெரியவனானபோது தெரிந்துகொண்டான். 40 வயது எகிப்து தேசத்தின் சேனையா? தேவனுடைய ஆசீர்வாதமா? ஒரு பக்கத்தில் கீர்த்தி, ராஜ்யம், பாவசந்தோஷங்கள். இன்னொரு பக்கத்தில் துன்பம் வறுமை நிந்தை. இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்தான். அவன் பாக்கியவான். நல்ல பங்கைத் தெரிந்துகொண்டான். நஷ்டமல்ல நித்திய லாபம் அடைந்துகொண்டான்.

மத். 27. 22. பிலாத்து 'கிறிஸ்து என்னப்பட்ட இயேசுவை நான் என்னசெய்யவேண்டும்' என்று கேட்டான். தீர்மானம்பண்ணாமல் காரியத்தை நடத்தப் பார்த்தான். உங்கள் நியாயப் பிரமாணத்தின்படியே நீங்கள் தீர்ப்புசெய்யுங்கள் என்றான். ஏரோது ராஜாவினிடத்தில் அனுப்பினான். பண்டிகையில் ஒருவனை விட்டுவிடுவது வழக்கம். ஆகையால் இவரை விடுவிப்பேன் என்று பார்த்தான். கூடவில்லை. குற்றமற்றவர் என்று தெரியும். ஜனங்களைப் பிரியப்படுத்த விரும்பினான். கடைசியில் யேசுவை வாரினால் அடிப்பித்து சிலுவையில் அறையும்படிக்கு ஒப்புக்கொடுத்தான [வச. 26]. முடிவு பயங்கரமாம். தற்கொலையோ, [illegible]? சுவிசேஷத்தைக் கேட்ட நீங்கள் யேசுவைப்பற்றிக்கொள்ள வேண்டும். அல்லது அவரை மறுபடியும் சிலுவையிலறையப் போகிறீர்கள், தெரிந்துகொள்ளுங்கள்.

II. ஸ்திரீ ஜனங்களும் தெரிந்துகொள்ளவேண்டும். ரூத் 1. 16. நீ அங்கே இருந்துவிட்டால் இனத்தார், ஜனத்தார், வீடுவாசல் சுகம் இன்பம் இருந்திருக்கும். மாமியோடு போய்விட்டால் வருத்தம் கஷ்டம் அந்நியதேசம் அனுபவிக்கவேண்டும். ஆனால் தேவன், ரக்ஷிப்பு ஜீவன்



உண்டு. தெரிந்துகொண்டாள். அவளை விடாமல் பற்றிக்கொண்டாள், ரூத். 1. 14. ஓர்பாள் அழுதாள் ஆனால் போய்விட்டாள். இரண்டு பேருக்கும் சரியான நல்ல சமயம் கட்டளையிடப்பட்டது. ஒருத்தி குணப்பட்டாள், மற்றொருத்தி பின்வாங்கிப் போனாள். தெரிந்துகொள்ளுங்கள். மோவாப் தேசமா? கானான் தேசமா? இனத்தாருடைய தேசமா? இரக்ஷகருடைய தேசமா?

III. வாலிபர்களும் தெரிந்துகொள்ளவேண்டும். எபி. 12. 16. ஏசா ஒருவேளை போஜனத்துக்காக தன் ஜேஷ்ட புத்திர பாகத்தை விற்றுப்போட்டவன். ஏசா நல்ல வாலிபன் கெட்டிக்காரன். வேட்டையாடுவதில் தெரிந்துகொள்ளுகிறான் சிவப்பான கூழோ? பெரிய சுதந்தரமோ? வயிறோ? தேவனோ?

தீமோத்தேயு பவுல் அப்போஸ்தலன் லீஸ்திராவிலே பிரசங்கம் பண்ணும்போது கல்லெறிந்து, பட்டணத்திற்கு வெளியே இழுக்கப்பட்டு மரித்தவன்போல விடப்பட்டான். இந்த வாலிபன் பிரசங்கத்தைக் கேட்டிருப்பான். நடந்ததைப் பார்த்துமிருப்பான். அதனாலே குணப்பட்டான் என்று சொல்லலாம். நல்ல பங்கைத் தெரிந்துகொண்டான். உத்தம தேவ ஊழியக்காரனானான்.

REV. T. WALKER

## கடைசி சத்துரு

1. கொரிந்தியர் 15: 26. பரிகரிக்கப்படும் கடைசிச் சத்துரு மரணம்.

இயேசு ராஜாவுக்கும் அவருடைய பிள்ளைகளுக்கும் எப்போதும் முக்கியமாய் மூன்று சத்துருக்கள் உண்டென்று சொல்லலாம். பிசாசு, பாவம், மரணம் என்பவைகளே. பிசாசாகிய சத்துருவை தமது மரணத்தினாலே ஜெயித்தார் (எபி 2: 14). பாவத்தை தமது பரிசுத்த ஜீவியத்தினாலே ஜெயித்தார் (யோ. 8: 46). மரணத்தை தமது உயிர்த்தெழுதலினாலே ஜெயித்தார் (வெளி. 1: 18). (1 கொரி. 15: 57). மரணத்தை ஒரு வீரனுக்கு ஒப்பிடலாம். உலகத்தில் வீரர்கள் என்று பெயர்பெற்றவர்கள் தங்களைப்போலொத்த வீரர்களையும் ஜெயித்தார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் அப்படிப்பட்ட எந்த வீரர்களும் இந்த வீரனுக்கு எதிர்த்து நிற்கமுடியாமல் இவனால் ஜெயிக்கப்பட்டுப்போனார்கள் என்று சொல்லலாம். ஆகையால் மரணமாகிய சத்துரு ஒரு பெரிய வீரன் என்பதற்குச் சந்தேகம் இல்லை.

I. இந்த வீரன் நீண்டகால சத்துரு. மெத்தூசலா 969 வருஷ மாத்திரம் உயிரோடிருந்தான். இவனோ ஆதாம் முதல் இயேசு ராஜா

நியாத்தீர்ப்புக்கொடுக்கும் நாள்வரைக்கும் உயிரோடிருப்பான் ஆகையால் இவன் வயதை இப்போது கணக்கிடமுடியாது. அவ்வளவு நீண்டகால சத்துருவாயிருந்து கோடாகோடி ஜனங்களை தனக்கு இரையாக்கிப்போட்டான். இன்னும் இரையாக்கிக்கொண்டுவருகிறான். ஆனாலும் இவனுக்கு முடிவு உண்டு (1 கொரி. 15: 26; வெளி. 20: 14).

II. இந்த வீரன் இரக்கமற்ற சத்துரு. இந்த வீரனுக்கு இரக்கம் என்பது கிஞ்சித்தேனும் கிடையாது. அவனுடைய எஜமான் எப்படியோ அப்படியே இவனும் இருக்கிறான். நாயீன் ஊர் கைம்பெண்ணை புலம்பித் தவிக்கும்படி செய்தான். மார்த்தாள், மரியாள் என்பவர்களை ஓலமிடும்படி செய்தான். அருமைரக்ஷகரையும்கூட கண்ணீர்விடும்படி செய்துவிட்டான். தாயைவிட்டு அருமைப் பிள்ளையை வாரிக்கொண்டு போய்விடுகிறான். பிள்ளையைவிட்டு நேச தாயை பிரித்துப்போடுகிறான். பாசமுள்ள சகோதரர் சகோதரிகளைப் பிரித்துவிடுகிறான். பிராண சிநேகிதர்களையும் பிரித்துவிடுகிறான். மரண வீடுகளைப்போய்ப் பார்த்தவர்களுக்கு இவனுடைய இரக்கமற்ற செய்கைகள் நன்றாய்த்தெரியும். ஐயோ ஓலம், புலம்பல், தவிப்பு, கண்ணீர், கூப்பாடு. அவ்வீடுகளில் எவ்வளவு ஏராளம். இப்போதும் யுத்தம் நடக்கும் தேசங்களில் இவனுடைய இரக்கமற்ற செயல்களைக் கேள்வியுற்றவர்கள் யார்தான கண்ணீர்விடாமல் இருக்கக் கூடும்.

III. இவன் திடீரென வரும் சத்துரு. பொதுவாய் இவன் திடீரென்று வந்தே மனுமக்களை கொண்டுபோய்விடுகிறான். இரவில் தூங்கின அநேகர் காலையில் பிரேதங்களாகக் காணப்பட்டிருக்கிறார்கள். எழுதிக்கொண்டிருக்கும்போதே உயிர்விட்டவர்கள் அநேகர். நடக்கும்போது விழுந்துமரித்தோர் பலர். பேசிக்கொண்டிருக்கும்போதே மருமைக்குள்ப் பட்டவர்கள் பலர். மாப்பிள்ளைக் கோலமாய் இருக்கும்போதே பிணக்கோலமானவர்களும் உண்டு. சாப்பிட்டுக்கொண்டிருக்கும்போதே மரித்தோர்களும் உளர். முழங்காலிலிருந்து ஜெபித்துக்கொண்டிருக்கும்போதே பரலோக ராஜ்யத்திற்குப் போனவர்களும் உண்டு.

IV. இந்த வீரன் கொடிய சத்துரு. உலகத்தையெல்லாம் ஜெயித்த மகா வீரனான மகா அலெக்ஸந்தரையும் இவன்மேற்கொண்டுவிட்டான். வீரன் நெப்போலியனும் இவனுக்கு முன்பாக நிற்கமுடியாமல் போனான். பயமென்றால் எப்படியிருக்கும் என்று தன் பாட்டியாரைப் பரியாசம் செய்த அஞ்சா நெஞ்சனான நெல்சனும் இந்த வீரனுக்குத் தப்பமுடியாமல் போனான். கையிலெடுத்த பட்டயம் ரத்தம்குடிக்காலொழிய திரும்ப அதைத் தன் உறைக்குள் போடக்கூடாது என்று வீரம் சாதிக்கும் சீக்கப்பட்டாளத்தாரும்கூட இவனுக்கு இரையாகிவிட்டார்களே. வீரரான ஸ்கொத்திலாந்து பட்டாளத்தாரும் தீரரான புருஷிய போர்ச்சேவகர்



களும் இவனுக்கு முன்பாக நிற்கமுடியாது. இவன் அவ்வளவு பலசாலி. அருமை இரக்ஷகரோடும்கூட ஒருகை பார்த்தான். அவர் மரித்துப்போனார். அடக்கம்பண்ணப்பட்டாயிற்று. கல்லறை முத்திரையிடப்பட்டு போர்ச்சேவகர் பந்தோபஸ்து பண்ணிக்கொண்டிருக்கிறார்கள். ஆகையால் நாம் இவரை முற்றிலும் ஜெயித்துப்போட்டோம். நாமே ஜெயவீரனென்று இவன் கூவிக் களித்துக்கொண்டிருக்கும்போதே ஜீவாதிபதியாகிய இயேசு உயிர்த்தெழுந்து மரணத்தையும் மரணத்திற்கு அதிகாரியாகிய பிசாசையும் ஜெயித்து வெற்றிவேந்தராகக் காணப்பட்டார். அப்போதே இந்த வீரனுடைய பெலன் குன்றி, இவனுடைய எஜமானனாகிய பிசாசின் தலையும் உடைக்கப்பட்டாயிற்று (ஆதி. 3: 15; எபி. 2: 14). ஆகையால் விசுவாசிகளே நீங்கள் மரணத்திற்குப் பயப்படவேண்டிய அவசியமில்லை. இயேசு ராஜா மரணத்தின் மூலமாய் நமக்கு முன்சென்று பரலோகத்தில் வீற்றிருக்கிறார் அவர் சென்ற வழியாகவே நாமும் போகிறோம். நமக்கு இப்போ மருள், மயக்கம், பயம் அல்ல. பெரிய வெளிச்சம் உண்டாகியிருக்கிறது. அந்த வெளிச்சம் ஜீவனுள்ள நம்பிக்கையே (1 பேது. : 4). அந்த வெளிச்சத்தின் மூலமாய் நமக்கு முன் வைக்கப்பட்டிருக்கிற அழியாததும் மாசற்றதும வாடாததுமாகிய சுதந்தரத்தைப் பார்க்கிறோம். அருமை ரக்ஷகரே அதை நமக்கு ஆயத்தம் செய்துவைத்திருக்கிறார் (யோ. 14: 2). அவர் திருவாக்கைப் பிடிப்போமாக. அதை எதிர்நோக்கினவர்களாய் உலகத்தில் ஆண்டவருக்கென்று பிழைத்து உழைத்து அவரை மகிமைப்படுத்துவோமாக. உலக துன்பங்களை பொறுமையாய் சகிப்போம் இன்னும் கொஞ்சக்காலந்தான (1 பேது. 1: 6). ஆண்டவர் நம்மை அழைக்கும்போது 'கிறிஸ்து எனக்கு ஜீவன். சாவு எனக்கு ஆதாயம் என்றும்' 'மரணமே உன் கூர் எங்கே, பாதாளமே உன் ஜெயம் எங்கே என்றும்' கூவிக் களித்து நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயம் கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம் என்றும் நாம் எப்போதும் பாடித் துதிக்கிறவர்களாயிருப்போம்.

## வல்லமையின் ரகசியம்

தேவநாம மகிமைக்கென்று உன்னத ஜீவியம் செய்யவேண்டும், வல்லமையான ஊழியம் நடப்பிக்கவேண்டும், அநேக ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணவேண்டும் என்னும் வாஞ்சை தேவனுடைய மெய்ப்பிள்ளைகள் யாவருக்கும் உரியது. ஆயினும் அப்படிப்பட்ட ஜீவியத்திற்கும் ஊழியத்திற்கும் வேண்டிய வல்லமையைப் பெறாதபட்சத்தில் அவ்வாஞ்சை பயனற்றதாகும். சிலர், ஒருகாலத்தில் தங்கள் ஜீவியத்தாலும் ஊழியத்தாலும் கிறிஸ்துவுக்குப் பலத்த சாக்ஷிகளாக விளங்கி, காலாகாலங்களில் பல கார

ணங்களையிட்டு அக்கினிமையினின்று வழி விலகி, வல்லமையை இழந்து பரிதபிக்கிறதையும் காணலாம். இதற்கு ஏற்ற உதாரணமாக கிறிஸ்துவின் சீஷரையே எடுத்துக்கொள்வோம், அவர்கள் ரட்சகரால் தெரிந்துகொள்ளப்பட்டு, ஆவியின் அபிஷேகம்பெற்றுப் பற்பல இடங்களுக்குச் சென்று சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்கள், நோயாளிகளைக் குணமாக்கினார்கள், பிசாசுகளையும் துரத்தினார்கள். ஆயினும், ரட்சகர் மறுரூப மலையிலிருக்கும் சமயத்தில், தனிமையாயிருந்த சீஷர்களிடம் கொண்டுவரப்பட்ட சந்திரரோகியாகிய ஊமையான ஆவி பிடித்தவனைக் குணமாக்கக்கூடாமற்போயிற்று. வெட்கமும் துக்கமும் நிறைந்தவர்களானார்கள். தங்கள் வல்லமையற்ற நிலைமையைக் கண்டுகொண்டார்கள். அதற்கு காரணமென்னவென்று அறிய விரும்பினார்கள். ஆகையால் இயேசுவினிடத்தில் தனித்து வந்து, 'அதைத் துரத்திவிட எங்களால் ஏன் கூடாமற்போயிற்று' என்று கேட்டார்கள். அப்பொழுது இயேசு அவர்களுடைய பெலவீனத்திற்குக் காரணமென்னவென்று கூறி, வல்லமையின் ரகசியத்தை விளக்கிக்காட்டினார்.

மேற்கூறிய அனுபவம் தேவஊழியருக்குப் பற்பல சமயங்களில் நேரிடுவதுண்டு. தாங்கள் நடப்பிக்கும் ஊழியம் பலனற்றதாய்ப் போகும்போது மனஞ்சோர்ந்து தளர்ச்சியடைந்து பின்வாங்கிப்போவதுண்டு. அப்படிப்பட்ட சமயங்கள் தேவ ஊழியருக்குப் பலத்த சோதனை காலம். சீஷரைப்போல, பெலவீனத்தை உணர்ந்து, ரட்சகரிடம் தனித்துப் போவதற்குப் பதிலாக, சிம்சோனைப்போல நடிக்கும் சுபாவம் இயல்பாய் உண்டாகக்கூடும். சிம்சோன் தேவ ஐக்கியத்தைவிட்டு விலகி, மாம்ச இச்சையில் மயங்கி, சிற்றின்பத்திற்கு இடங்கொடுத்ததின் பலனாக ஆவியின் வல்லமையை இழந்துபோன சமயத்திலும் சத்துருக்கள் தனக்கு விரோதமாய் வந்தபோது கர்த்தர் தன்னைவிட்டு விலகினதை அறியாமல், எப்போதும்போல உதறிப்போட்டு வெளியே போவேன் என்றான். ஐயோ! பாவம்! சத்துருக்கள் கையில் விழுந்தான், நிந்தையையும் அவமானத்தையும் அடைந்தான், யாவருக்கும் வேடிக்கையானான்.

மேற்கூறிய விஷயங்களைக் கவனிக்கும்போது, அனுபவத்தைச் சார்ந்தாவது, சுயபெலத்தை நம்பியாவது தேவ ஊழியத்தைச் செய்வது மோசமும் பயங்கரமுமானது என்று விளங்குகிறது. 'என்னையேயல்லாமல், உங்களால் ஒன்றுஞ் செய்யமுடியாது' என்று ரட்சகர் பகர்ந்தார். தேவ வல்லமையைப்பெற்ற ஊழியனாகிய பவுலோ 'என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு' என்று கூறுகிறார். ஆகவே கிறிஸ்தவ ஜீவியத்திற்கும் ஊழியத்திற்கும் வேண்டிய வல்லமையைத் தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளவேண்டியது அவசியம். அப்படியானால் அந்த வல்லமையைப் பெற்றுக்கொள்வதின் ரகசியமென்ன?



உயிர்த்தெழுந்த ரட்சகர் தாம் பரத்துக்கெழுந்தருளுமுன் சீஷர்களுக்குத் தரிசனமளித்து அவர்கள் தமக்குச் சாட்சிகளாக விளங்கவேண்டுமானால் செய்யவேண்டிய ஒரு முக்கிய விஷயத்தை உணர்த்தினார். அதாவது 'நீங்கள் உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும்வரைக்கும் காத்திருங்கள்' என்று கற்பித்தார். அப்படியே அவர்கள் காத்திருந்து வல்லமையைப்பெற்று பலத்த சாக்ஷிகளாக விளங்கினார்கள். ஏசாயா 40:31ல் 'கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்கள் புதுப்பெலனடைந்து கழுகுகளைப்போல செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய சமுகத்தில் காத்திருப்பதே வல்லமையின் ரகசியம். சீஷர்கள் காத்திருந்த விதமென்ன? ஒருமனப்பட்டு ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள். அப்பொழுது ஆவியின் வல்லமையைப் பெற்றார்கள். பிற்பாடு பலத்த சாக்ஷி பகர்ந்தார்கள். தேவ ஊழியத்தின் காரியசித்திக்கு ரகசியம் அதுவே. 'அறையில் ஆடி, அம்பலத்தில் ஆடு' என்றபடி, ஊழியத்திற் பிரவேசிக்குமுன் போதுமான அளவு தனிஜெபத்தில் தரித்திராத பட்சத்தில் ஊழியம் பயன்படாது. ஜெபமே தேவனையும் நம்மையும் ஐக்கியப்படுத்தி, அவரிடத்திலிருந்து வல்லமையைக் கொண்டுவருகிறது. எந்த அளவு ஜெபத்தில் தரித்திருக்கிறோமோ, அந்த அளவுதான் சொந்த ஜீவியம் பலப்படும், ஊழியத்திலும் வல்லமை விளங்கும். நூற்றுக்கணக்கான ஆத்துமாக்கள் குணப்படத்தக்கதாக பலத்த ஊழியம் நடப்பித்த ஒரு தேவ ஊழியனிடம் அவருடைய சிநேகிதன் ஒருவர்போய் உம்முடைய ஊழியத்தில் இவ்வளவு பலன் காணப்படுவதற்கு ரகசியமென்னவென்று வினவியபோது அவர் மாறுத்தரமாக ஒன்றுஞ் சொல்லாமல் தம்முடைய மேல்வீட்டறைக்கு அவனை அழைத்துச்சென்று தம்முடைய படுக்கையின் பக்கத்தில், தாம் வழக்கமாய் முழங்காலூன்றி ஜெபித்துத் தேய்ந்துபோயிருந்த சமுக்காளத்தின் பாகத்தைக் காண்பித்தாராம். இரவும் பகலும் அவர் அவ்விடத்திலேயே முழங்காலில் நின்று ஜெபித்துவருவார். அந்த ஜெபமே அவருடைய ஊழியத்தின் சித்திக்குக் காரணமாயிருந்தது. ஓர் பக்தன் சொல்லுகிறபடி 'ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணப்படும் இடம் பிரசங்க பீடமல்ல, தனிஜெபத்திற்காக உபயோகப்படுத்தப்படும் அறைவீடே'. அருமை ரட்சகர் தாமும் தமது ஊழியத்தின் சித்திக்கு ரகசியம் பிதாவோடு தமக்கிருக்கும் ஐக்கியமே என்று உணர்ந்து அதிகாலையிலும், சாயங்கால வேளையிலும், ஊழியத்தின் மத்தியிலும், சில சமயங்களில் இராமுழுவதும் தனிஜெபத்தில் செலவிட்டார். எந்த நேரமும் பிதாவின் சமுகத்தைத் தரிசித்துவந்தார். பிதாவோடு இணைபிரியாத ஐக்கியமுடையவராயிருந்தார். தமது ஊழியரும் அவ்விதமாகவே இருக்கவேண்டுமென்று போதித்தார். 'கொடியானது திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டால், அது தானாய்க் கனிகொடுக்க மாட்டாதது

போல நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால் கனி கொடுக்கமாட்டீர்கள்' என்றார். ஜெபத்தால் ஐக்யப்பட்டே நிலைத்திருப்பது. இவ்வண்ணமான ஜெபக்குறைவே சீஷரின் ஊழியம் வல்லமையற்றுப்போனதற்குக் காரணம். இதைப்பற்றியே இரக்ஷகர் 'இந்த ஜாதிப்பிசாசு ஜெபத்தினாலும் உபவாசத்தினாலுமேயன்றி மற்றெவ்விதத்தினாலும் புறப்பட்டுப்போகாது' என்றார். ஆகவே நம்மில் யார்யார் தங்களுடைய ஜீவியத்திலோ, ஊழியத்திலோ வல்லமையற்றவர்களாகக் காணப்படுகிறோமோ, அவர்கள் சீக்கிரம் தேவ பிரகாசம் இரக்ஷகரிடம் தனித்துப்போய் நம்மை சரிப்படுத்திக்கொள்ளவோமாக.

J. S. P.

## வேதாகமப பாடமுறை.

### 23-ம் பாடம்

### எஸ்றாவின் புஸ்தகம்

பொருளடக்கம். இவ்வாகமத்தில் யூத ஜனங்கள் பாபிலோன் சிறையிருப்பிலிருந்து திருமபிவரும் சுமார் 80 வருஷ சரித்திரம் அடங்கியது. யூதசரித்திரத்தின் இப்பாகம் முக்கியமான சம்பவங்களிலொன்று. வெகு தெளிவும உண்மையுமான விவரங்களடங்கியது.

ஆக்கியோன். இவ்வாகமம் பலரால் எழுதப்பட்டதல்ல, முழுவதும் ஒருவராலே எழுதப்பட்டதென்று இவ்வாகமத்திலிருந்தே அறிகிறோம். நாளாகமங்களை எழுதினவர் எஸ்றா என்று முந்தின பாடத்தில் கவனித்தோம். அந்த ஆகமங்கள் இவ்வாகமத்தோடு சம்பந்தப்பட்டிருப்பதினால் இதின் ஆக்கியோனும் எஸ்றாதான் என்பதற்கு இன்னொரு நியாயமாகும்.

இவ்வாகமத்தின் பாஷை நடை. தானியேல் தீர்க்கதரிசனத்தைப் போல இதுவும் சில பாகம் எபிரேய பாஷையிலும் மீதிப்பாகம் கல்தேய பாஷையிலும் எழுதப்பட்டிருக்கிறது. கல்தேயபாஷை பாபிலோனில் சாதாரணமாய் வழங்கிய பாஷையானதலால் எஸ்றா அப்பாஷையில் நன்றாய் பேசிப் பழக்கமுண்டு. அக்காலத்தில் யூதேயா பாரசீக ராஜ்யத்தின் ஒரு மாகாணமானதால் இப்பாஷையில் அநேக பாரசீக பதங்களுண்டு. எஸ்றாவைப்பற்றி எஸ்றா, நெகேமியா என்ற இரண்டு ஆகமங்களில் மாத்திரம் வாசிக்கிறோம். அவன் ஆரோன் வம்சத்தில் பிறந்த படிப்பும் தேவபக்தியுமுள்ள ஒரு ஆசாரியன் அதி. 7: 1—5. அவன் மோசேயின் நியாயப்பிரமாணத்தை நன்றாய்க் கற்று மற்றவர்களுக்கு அதை உபதேசித்து விவரித்துக் காட்டுவது முக்கிய வேலையாயிருந்தபடியால் வேதபாரகன் என்று அழைக்கப்பட்டான். இவ்வாகமத்தின் முதல் ஆறு அதிகாரங்களிலும் எஸ்றாவைப்பற்றி யாதொன்றும் சொல்லப்படாமல் பின்னுள்ள அதிகாரங்களில் அவனை விசேஷித்துக் காட்டியிருக்கிறது. இவ்வாகமத்தில்



யாதொரு அதிசயச்செயல்கள் சொல்லப்படவில்லை. இச்சரித்திரமானது அக்காலத்தில அவர்களுக்கிருந்த பலவீனத்தையும் தாழ்வையும் காட்டுகிறது 4: 5—7ல் நான்குபுறஜாதிகளான அரசர்களின் பெயர்கள் இராவேவரின் சம்பந்தமாய் வருகின்றன. இச்சரித்திரம் பூரணமானதுமல்ல. ஏனெனில் 6-ம் 7-ம் அதிகாரங்களுக்கு இடையில் 60 வருஷ சரித்திரம் எழுதப்படவில்லை.

இவ்வாகமத்தின் இரண்டு முக்கிய பிரிவுகள்.

1. சிறையிருப்பிலிருந்தவர்கள் செருபாபேலுடன் திரும்பிவருதல். அதி. 1—6. 2 எஸ்றாவுடன் திரும்பிவருதல் அதி. 7—10. இன்னொரு பகுஞ்ச ஜனங்கள் நெகேமியாவுடன் திரும்பிவந்தார்கள். இது நெகேமியாவின் ஆகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

I. செருபாபேலுடன் திரும்பிவருதல் அதி. 1—6. (1) கோரேஸின் விளம்பரம் அதி 1. (2) செருபாபேலுடன் திரும்பிவருதல் அதி. 2 (3) பலிபீடம் கட்டுதல் பண்டிகை ஆசரித்தல் அதி. 3: வா. 1—7. (4) ஆலயம் திரும்பக் கட்டுதல் அஸ்திபாரம் போடுதல், தடைபடுதல், முடிவு அதி. 3: 8—6: 1-15. (5) ஆலயப்பிரதிஷ்டை, பஸ்கா பண்டிகை ஆசரித்தல் அதி. 6: 16—22.

பெர்சியாவின் ராஜாவாகிய கோரேஸ் என்பவன், அத்தேசத்து ராஜ வம்சத்திலுள்ள ஒரு இளவரசனது குமாரன். தனது யுத்த தீரத்தினாலும் வல்லமையினாலும் பாரசீகருக்குத் தலைவனாகி, பெர்சிய ராஜ்யத்தை ஸ்தாபித்து அதை ஆண்டான். தன் வசமிருந்த சொற்ப பாரசீகரைக்கொண்டு 12 வருஷத்திற்குள்ளாக மேதியா, லீதியா, பாபிலோனியா என்ற மூன்று பெரிய ராஜ்யங்களை அழித்தான். ஆசியா முழுவதையும் ஜெயித்தான். இரண்டு நூற்றாண்டுகளாக அவனுடைய வம்சமே உலக ஆளுகையைப் பெற்றிருந்தது. என்னவிதமாய்க் கோரேஸ் பாபிலோனைப் பிடித்தான் என்பதற்குத் திட்டமான விபரமில்லை. பாபிலோனியர் திராட்சரசம் குடித்து வெறித்திருக்கையில் இரவில் அந்நகரம் பிடிக்கப்பட்டது தானி. 5 அதி. ஐப்பிராத்து நதியின் தண்ணீர் வேறொரு திசையாய்த் திருப்பப்பட்டு நதியின் தண்ணீரை வற்றச்செய்து, அதின் வழியாக சத்துருக்கள் நகரத்திற்குள் பிரவேசித்து அதைப் பிடித்தார்கள். சண்டை அல்லது மல்யுத்தம் பண்ணாமலே சத்துருக்கள் நகரத்திற்குள் புகுந்தார்களென்று கோரேசின் சொந்த சாசனத்தில் கண்டிருக்கிறது. கோரேஸ் பாபிலோனைப் பிடித்தது. இஸ்ரவேலருக்கு மிகுந்த சந்தோஷத்தையுண்டாக்கிற்று, அறியாத வண்ணமாகக் கோரேஸ் அவர்களை மீட்கும் தலைவனாக ஏற்பட்டானென்று அறிந்துகொண்டார்கள், அவன் நீதியும் தாராளமுமுள்ளவன். தான் பாபிலோனுக்கு ராஜாவாக வந்தவுடனே, யூதர்கள், தங்கள் சுயதேசத்திற்குத் திரும்பிப்போகச் சுயாதீனம் கொடுத்திருக்கிறேனென்று தன்

ராஜ்யமெங்கும் விளம்பரம் பண்ணுவித்தான். கோரேஸ் விஷயமாய்ச் சொல்லப்பட்ட தீர்க்கதரிசன வசனங்களை ஏசா 44: 23 ஏசா 45: 1-13 எரே. 2 : 12, 29: 10. தானியேல் அவனுக்கு எடுத்துக்காட்டி இஸ்ரவேலருக்கு அவனுடைய தயவைக் கிடைக்கப்பண்ணினான். கோரேஸ் விளம்பரம் செய்தபின் அவன் செருபாபேலின் கையில் நேபுகாத்நேச்சார் எருசலேமிலிருந்து கொண்டுவந்த 5400 பொன் வெள்ளிப் பணிமுட்டுகளைக் கொடுத்தான். மேலும் ஜனங்களும் தங்களோடு மிருக்க ஆஸ்திகளை கொண்டுபோனார்கள். சிறையிருப்பிலிருந்து செருபாபேலுடன் எருசலேமுக்குத் திரும்பின இஸ்ரவேலரின் தொகை 2-ம் அதிகாரத்தில் கூறப்படுகிறது. சிறையிருப்பின் காலத்திலும் தேவனுடைய ஜனங்களின் வம்சங்கள் வெகு கவலையாய்ப் பாதுகாக்கப்பட்டிருக்கின்றனவென்று நம்ப இடமுண்டு. பிரயாணம் வெகு நீண்டதும் கஷ்டமாயுமிருந்தது. நாலு மாதம் சென்றது. செருபாபேல் உடனே ஆலயத்தைக் கட்டுவதற்கான ஆயத்தங்கள் பண்ணவும் அனுதின பலிசெலுத்தவும் ஏற்பாடு செய்தான். ஜனங்கள் தங்கள் பாவங்களுக்காக நிவிர்த்தி செய்யவும் ஆலயம் கட்டுவதற்காகச் செய்யும் ஆயத்தங்களுக்கு தேவ ஆசீர்வாதம் கிடைக்கவும் அனுதின பலி அவசியமானது. ஆலயம் அஸ்திபாரம் போடப்படுகிற போது சந்தோஷத்தின் சத்தமும் அழுகையின் சத்தமும் கலந்திருந்தது. பூரிகைகளை ஊதுகிற ஆசாரியரும் தாளங்களைக் கொட்டுகிற லேவியரும் கர்த்தரைத் துதித்து, 'கர்த்தர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது' என்று பாடினார்கள். 118ம் சங்கீதம் புதிய ஆலயம் அஸ்திபாரம் போடப்படுகிறபோது பாடினது என்று எண்ணப்படுகிறது. சமாரியரும் மற்றக் குடியேற்ற நாட்டு ஜனங்களும் அதைக் கேள்விப்பட்டு அந்த வேலையில் தங்களுக்கும் பங்குண்டு என்றார்கள். அதி 4: வச. 1, 2. ஆனால் செருபாபேல் முதலானோர் 'அது கூடாது, கலப்பில்லாத யூதஜாதியாருக்கே உரியது' என்றார்கள். சற்காலத்தில் தேவனுடைய சபை உலகத்தின் உதவியை வேண்டாமென்று சொல்ல வல்லவளாய் விரும்புகிறதில்லை. சமாரியர் இதற்காகக் கோபப்பட்டு யூதர்களைத் தடைபண்ணினார்கள். கோரேஸ் செய்த விளம்பரத்திற்கு மாறாக அர்தசஷ்டாவினிடமிருந்து ஆலயவேலை நிறுத்தப்படும்படியான கட்டளைபெற்று வேலை நிறுத்தப்பட்டிருந்தது, அதி 4. வெகுகாலமாக இப்படி வேலை தாமதமாகி ஆகாய், சகரியா என்ற தீர்க்கதரிசிகள் மறுபடியும் வேலையைச் சுறுசுறுப்பாய் நடத்தும்படி ஜனங்களை ஏவிவிட மறுபடியும் சத்துருக்கள் அதைத் தடைபண்ண எத்தனித்தபோது அப்போது ராஜாவாகவிருக்கும் தரியுவுக்கு ஒரு மனுப்பண்ணி அதன்பேரில் கோரேஸினுடைய கிடைத்த பழைய விளம்பரம் தரியுவினால் மறுபடியும் பலமாய் உறுதிபண்ணப்பட்டது அதி. 6: 1—2. ஆகையால் வேலை வெகு ஊக்கமாய் நடத்தப்பட்டது. செருபாபேல் அதை அஸ்திபாரம் போட்டதிலிருந்து 12 வருஷத்திற்குப்பின் ஆலயம் கட்டிமுடிந்தது. சகரியா 4: 9.

II. எஸ்றாவுடன் திரும்புதல் அதி. 7—10. இன்னும் 60 வருஷம் சென்றபிறகு எஸ்றாவின் வசமாக இரண்டாவது ஒரு கூட்டத்தார் பாபிலோனிலிருந்து பிரயாணஞ்செய்து எருசலேமுக்கு வந்தார்கள். இந்த 60 வருஷத்திற்கிடையில்தான் எஸ்தர் ஆகமத்தில் சொல்லப்பட்டுள்ள சரித்திரம் நடந்திருக்கிறது. அழிவிலிருந்துதான் யூதருக்கு அதிசய மீட்பு எஸ்தர் மூலமாய்க் கிடைத்தது. எஸ்றாவுக்கு அர்தசஷ்டாவினிடம் அதிகத் தயவு கிடைத்ததினால் இந்த இரண்டாவது பிரயாணம் அநுகூலமாயிற்று. ராஜாவினிடமிருந்து அவன் கேட்டதெல்லாம் கிடைத்தது. ராஜாவின் தயவு இருந்தபடியினால் அவன் தன்னோடு அதிக ஆஸ்திகொண்டுவந்தான். இன்னும் வேண்டிய செலவுக்கு ராஜாவின் கஜானாவிலிருந்து பெற்றுக்கொள்ள ராஜா ஒரு அதிகாரபத்திரம் கொடுத்தனுப்பினான். அதி.7:1 —26. தெய்வ நடத்துதலையும் பாதுகாப்பையும் எஸ்றா நன்றாய் அறிந்திருந்தபடியால் 6000 அல்லது 7000 ஜனங்களோடு பாபிலோனிலிருந்து புறப்பட்டு 700 மைல் பிரயாணம்பண்ணி நாலு மாசத்திற்குள் எருசலேமுக்குச் சுகபத்திரமாய் வந்துசேர்ந்தான். பின்பு பலிசெலுத்தினார்கள். எஸ்றா. 7: 9; 8: 35. எஸ்றாவுடன் பிரயாணமாக வந்த வம்சத் தலைவர்களின் பெயர்களும் அவர்களின் வம்ச அட்டவணையும் எட்டாம் அதிகாரத்தில் வருகிறது. சிறையிருப்பிலிருந்த யூதரில் ஒரு பங்குபேருக்கு மாத்திரம் தங்கள் சுயதேசத்திற்குத் திரும்பிவரும் சிலாக்கியம் கிடைத்தது. ஏனெனில் பாபிலோனில் பிறந்த அநேகர், பாழாய்ப்போன தேசத்திற்குக் கஷ்டமான பிரயாணம் செய்து போவதைவிட இருந்த இடத்தில் இருக்கிறதையே சிரேஷ்டமாக எண்ணினார்கள். யூதேயாவில் திரும்பக் குடியேற்றப்படுவதினால் கிடைக்கும் சொற்ப பலனுக்காக, அஞ்ஞானிகளின் மத்தியில் தங்களுக்குண்டான ஆஸ்திகளை விட்டுப்போக ஆத்திரம் உண்டாகவில்லை. யூத ஜனங்களில் மீதியாயிருந்த சிலர் மாத்திரம் எஸ்றாவுடன் திரும்பிவர ஏவப்பட்டார்கள். திரும்பிவந்த ஆண்கள் மாத்திரம் 1754. ஸ்திரீகளையும் பிள்ளைகளையும் சேர்த்து சுமார் 6000 அல்லது 7000 இருக்கலாம்.

எஸ்றா விசேஷமாகச் சொல்லும் ஒரு வசனம். 'எங்கள் தேவனுடைய கர்த்தருடைய கரம் எங்கள்மேலிருந்தது' 7: 6, 9, 28; 8: 18, 22, 31. தேவனிடத்தில் பலத்த விசுவாசமும், நம்பிக்கையும் எஸ்றாவுக்கு இருந்தது. பிரயாணத்தில் தனது பாதுகாப்புக்காக ஒரு காவற் சேவகர் கூட்டம் வேண்டுமென்று ராஜாவினிடம் கேட்கத் தான் வெட்கப்பட்டதாக எஸ்றா தானே வெளிப்படையாகச் சொல்லுகிறான். ஏனெனில் அவன் ராஜாவினிடத்தில் தெய்வ பாதுகாப்பைப்பற்றியும், தேவனைத் தேடுகிறவர்கள் தங்களுடைய பெரிய அபாயத்திலுங்கூட அவருடைய செட்டைகளின் நிழலில் சுகபத்திரமாயிருக்கிறார்களென்றும், அவரை விட்டுவிடுகிறவர்கள் அதிசுகபத்திரமான நிலைமையிலிருக்கும்பொழுதுங்கூட எப்பொழுதும் மோசத்திற்கு ஏதுவான நிலைமையிலிருக்கிறார்களென்றும் சொல்லியிருந்

தான். தேவனுடைய ஊழியக்காரர் அவருடைய வல்லமையைத் தங்களுக்குரியதாக்கிக்கொள்ளுகிறார்கள். அவருடைய சத்துருக்களோ அவ்வல்லமையைத் தங்களுக்கு விரோதமாக்கிக்கொள்ளுகிறார்கள். தேவனை நம்பி அவரில் ஜெயம் பெறுகிறவர்கள் தங்களுடைய பாதுகாப்புக்காக ஒரு சிருஷ்டியினிடத்தில் கேட்க வெட்கப்படுவார்கள். அல்லது தங்களுடைய சொந்த பாதுகாப்புக்காக எந்த விஷயமான தூஷிக்கப்படத்தக்க ஏமாற்றுகளை உபயோகிக்கமாட்டார்கள். அப்படிச் செய்தால் தாங்கள் சொல்வதையும், நம்புவதையும் மறுதலிப்பதாயிருக்கும். எஸ்றா எருசலேமுக்கு வந்தபோது ஜனங்கள் ஆவிக்குரிய விஷயத்தில் வெகு தாழ்வான ஸ்திதியிலிருப்பதாகக் கண்டான். ஜனங்கள் நியாயப்பிரமாணத்திற்கு விரோதமான கலியாணங்களை செய்து தேவனுடைய கட்டளையை மீறினார்கள். சாதாரண ஜனங்கள் பிரபுக்கள் மாத்திரமல்ல, ஆசாரியர்களுங்கூட அந்நிய மனைவிகளை வைத்திருந்ததினால் குற்றவாளிகளானார்கள். எஸ்றா பயந்து மிகுதியாய்த் துக்கித்துக்கொண்டிருந்தான். அவன் தன் வஸ்திரங்களைக் கிழித்து தன் தலையிலும் தாடியிலுமுள்ள மயிரைப்பிடுங்கி அந்திபலி செலுத்துமட்டும் திகைத்தவனாய் உட்கார்ந்துகொண்டிருந்தான் 9: 1—5; எஸ்றா பண்ணின விண்ணப்பம் யாவரும் அறிந்துகொள்ளவேண்டிய ஒரு ஜெபம். பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்டிருக்கும் விசேஷித்த ஜெபங்களிலொன்று. பாவ அறிக்கை அதிக ஊக்கமும் ஆழத்திலிருந்தும் எழும்பினது. குற்றத்திற்கு நியாயஞ்சொல்ல எத்தனிக்கவில்லை. தேவனுடைய இடைவிடாத தன்மை எடுத்துக் கூறப்படுகிறது. கர்த்தருக்கு கோபமூட்டின குற்றத்தை மிகுந்ததாயும் நிந்தையாயும் பேசியிருக்கிறது. இந்த விண்ணப்பத்தில் யாதொரு வேண்டுதலுமில்லை. இச்ஜெபம் ஒரு நீண்ட பாவ அறிக்கைதான். அவ்விஷயத்தில் எஸ்றா தனியாகக் குற்றமில்லாதவனாயிருந்தபோதிலும் ஜனங்களோடு தன்னைச் சம்பந்தப்படுத்திப் பேசுகிறான். அவனுடைய துக்கமும் வியாகுலமும் அந்தப் பெரிய சபையில் நொருங்குண்ட ஆவலை உண்டாக்கிற்று 10 : 1. அப்பொழுது செக்கனியாவும் தான் இந்த விஷயத்தில் குற்றமுள்ளவனாகத் தோன்றவில்லையாயினும் ஜனங்களுக்காக எஸ்றாவோடு பேசி ஓர் தீர்க்கமான ஆலோசனை சொன்னான். இவனிடத்தில் சுத்த மனச்சாட்சியும் தைரியமும் இருந்ததாக விளங்குகிறது. இவ்வாலோசனையை நிறைவேற்ற உறுதிப்பாடு பண்ணி விசாரிப்புகாரர் ஏற்படுத்தப்பட்டார்கள். மூன்று மாசத்திற்குள்ளாகத் தகுதான எல்லாக் காரியமும் முடிவுபட்டுப்போயிற்று. இதற்குப்பின் 12 வருஷங்களாக எஸ்றாவின் ஆளுகையைப்பற்றிய சரித்திரம் கிடையாது.

Printed at the Palamcottah Printing Press, Palamcottah and published by the Christian Brotherhood Association, Tinnevelly.

May, June 1918. Registered No. M. 163

# The Water of Life
# ஜீவத்தண்ணீர்

8-OCT 19

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்." யோவான் 7: 38.

Vol. XIX மே, ஜூன் 1918

## 'நீ நித்திரைபண்ணுகிறது என்ன?'

யோனா 1: 6.

முகவுரை. யோனாவின் சரித்திரம் உங்களுக்குத் தெரியுமே. கர்த்தருடைய சித்தத்தை அறிந்தவன்; என்றாலும் அதின்படி செய்ய மனமற்றவனாயிருந்தான். நினிவே பட்டணத்துக்குப் போகப் பிரியமில்லாமல் தேவனுடைய சமுகத்திலிருந்து விலகும்படி கப்பலிலே ஏறிப்போய்விட்டான். தூரதேசத்துக்கு ஓடிப்போனால் ஆண்டவர் என்னைக் காணமாட்டார் என்று யோசித்தான். புத்தியீனம்! 'நான் விடியற்காலத்து செட்டைகளை எடுத்து சமுத்திரத்தின் கடையாந்தரங்களிலே போய்த் தங்கினாலும், அங்கேயும் உமது கை என்னை நடத்தும்; உமது வலதுகரம் என்னைப் பிடிக்கும்'. சங். 139: 9. என்ற வசனத்தின்படி அவன் காரியம் முடிந்தது. தேவனுடைய கரம் யோனாவைப் பிடித்தது. ஓடிப்போன பாவி அகப்பட்டான். அஞ்ஞானிகளான கப்பற்காரர் அவன் மாய்மாலத்தை அறிந்துகொண்டார்கள். அவனுடைய பாவத்தைக் கண்டு ஆச்சரியப்பட்டார்கள். அவனைப் பிடித்துக்கொண்டு சில கேள்விகளைக் கேட்டார்கள். அவர்கள் அன்றைக்கு கேட்ட கேள்விகளை நாம் யோசித்துப்பார்த்தால் பிரயோஜனமாயிருக்குமென்று நம்புகிறேன்.

I. 'நீ நித்திரைபண்ணுகிறது என்ன'? (வா. 1: 6). அதோ! சமுத்திரத்தின்மேல் பெருங்காற்று அகோரமாய் அடிக்கிறது. கடலிலே பெரிய கொந்தளிப்பு உண்டாகி தண்ணீரும் அலைகளும் முழக்கமிடுகிறது. கப்பல் உடையும் என்று நினைக்கத்தக்கதாய் அதிலே அலைகளெல்லாம் ஒன்றின்பின்னொன்று மோதிக்கொண்டிருக்கிறது. கப்பற்காரர் பயந்து அவரவர் தன் தன் தேவனைநோக்கி வேண்டுதல் செய்கிறார்கள். 'சுவாமி! எழும்,

பகவானே! ரட்சியும்' என்று கைகளைக் கூப்பி மன்றாடுகிறார்கள். அந்தக் கப்பலில் ஒருவன்மாத்திரம் கவலையற்றவனாய்க் காணப்படுகிறான். மோசம் என்று அவனுக்குத் தெரியாது. கீழ்த்தட்டிலே இறங்கிப் படுத்துக்கொண்டு அயர்ந்த நித்திரை செய்கிறான். அவன் யாரென்றால் வேதக்காரன்: யோனா என்பவன். புறமதஸ்தர் எல்லாரும் கவலைப்பட்டுத் தங்களுக்குத் தெரிந்த மட்டும் ஜெபம்பண்ணுகிறார்கள், பிரயத்தனம் செய்கிறார்கள், இந்த வேதக்காரன் மாத்திரம் ஏனோதானோ என்று இருக்கிறான், அக்கறையில்லாதவனாயிருக்கிறான், தூங்கிக்கொண்டே வருகிறான், காற்றடித்தாலும் அவனுக்குக் கவையில்லை. கடல் கோஷித்தாலும் அவனுக்குக் கரிசனையில்லை; கப்பல் உடைந்தாலும் அவனுக்குத் தெரியாது. உறங்கிக்கொண்டேயிருக்கிறான். அஞ்ஞானிகள் அதைக்கண்டு ஆச்சரியப்படுகிறார்கள். அவனைத் தட்டி எழுப்பிக் கண்டிக்கிறார்கள். 'நீ நித்திரைபண்ணுகிறது என்ன? எழுந்திருந்து உன் தேவனை நோக்கி வேண்டிக்கொள்' என்று தூக்கத்தைவிட்டுச் சுகத்தைத் தேட அவனை ஏவுகிறார்கள்.

பாவம் நீங்காத சகோதரனே! சகோதரியே! 'நீ நித்திரைபண்ணுகிறது என்ன?' தேவனுடைய கோபமாகிய புசற்காற்று அடிக்கப்போகிறது. மலைகள், தீவுகள் யாவும் தங்கள் இடங்களைவிட்டு அகன்றுபோம். (வெளி. 6: 14). 'அவருடைய கோபாக்கினையின் மகாநாள் வரும்போது யார் நிலைநிற்கக்கூடும்? சமாதானமும் சௌக்கியமுமுண்டென்று அவர்கள் சொல்லும்போது கர்ப்பவதியானவளுக்கு வேதனைவருவதுபோல அழிவு சடுதியாய் அவர்கள் மேல்வரும்; அவர்கள் தப்பிப்போவதில்லை' (1 தெ. 5: 3). 'இவ்வளவு பெரிதான ரட்சிப்பைக் குறித்து கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக்கொள்ளுவோம்' (எபி. 2: 4; நீதி. 6: 9-11).

'உணர்வில்லாததென்ன?
பயங்கர மோசமுண்டாம்,
இயேசுவினாலே யல்லாமல்
விமோசனமேயில்லையாம்'.

போனவருஷம் பாளையங்கோட்டையில் துக்கமான காரியம் நடந்தது. தாம்பரவர்ணி ஆற்றிலே சில மண்டபங்களுண்டு. ஒருநாள் ராத்திரியில் சில ஜனங்கள் ஒரு பெரிய மண்டபத்திலேபோய் படுத்துக்கொண்டிருந்தார்கள். இங்கே சுகமாய்த் தங்கலாம் என்று தூங்கிவிட்டார்கள். அவர்கள் அங்கே அயர்ந்த நித்திரை செய்கையில்,— ஆற்றிலே பெரிய வெள்ளம் திடீரென்று வந்தது. அந்த வெள்ளமானது புரண்டோடித் தூங்கிக்கொண்டிருந்த ஆட்களை வாரிக்கொண்டுபோய்விட்டது. மாண்டுபோனார்கள். மோசம் வருமென்று அவர்களுக்குத் தெரியவில்லை. நித்திரை செய்துகொண்டிருக்கையில் தண்ணீர் சடுதியாய் வந்து அவர்களை வாரிக்கொண்டு



போனது. பாவநித்திரை செய்கிறவனே! நீ எழுந்து தேவனை நோக்கி வேண்டிக்கொள். இல்லாவிட்டால் உன் காரியமும் அப்படியே பயங்கரமாகும். ஆண்டவருடைய கோபமாகிய வெள்ளம் நிச்சயமாய் வரும். நோவாவின் காலத்தில தேவனுடைய வாக்கின்படியே ஜலப்பிரளயம் வரவில்லையா? வராது! வராது! என்று ஜனங்கள் தங்களைத் தேற்றிக்கொண்டார்கள். ஆனாலும் வந்தது! வந்தது! நோவாவும் அவன் குடும்பத்தாரும் மாத்திரம் பேழையிலே காக்கப்பட்டார்கள். குணப்படாத பாவிகளும் அவிசுவாசிகளும் எல்லாரும் அழிக்கப்பட்டார்கள். பரி. லூக். 17: 26, 27. பாவி! நித்திரைபண்ணுகிறது என்ன? எழுந்திரு! எழுந்திரு! ரட்சணிய பேழைக்குள் பிரவேசி! இயேசுவண்டையில் ஓடிவா! காலம் சுருக்கம்; மோசம் சமீபம்! 'ஆதலால் தூங்குகிற நீ விழித்து, மரித்தோரைவிட்டு எழுந்திரு; அப்பொழுது கிறிஸ்து உன்னைப் பிரகாசிப்பார்'. எபே. 5: 16.

II. 'உன் தொழில் என்ன? நீ எங்கேயிருந்து வருகிறாய்? உன் தேசம் எது? நீ என்ன ஜாதியான் (வா. 1: 8). ஆ! யோனா தூக்கத்தைவிட்டுச் சுற்றிப்பார்க்கிறான். மோசம் வந்துவிட்டதென்று அறிகிறான். தன் பாவம் தன்னைப் பிடித்தது என்று உணருகிறான். மனமயங்கி நிற்கிறான். நடுநடுங்குகிறான். என்ன நேரிடுமோ என்று பயந்து நிற்கிறான். அப்போது அந்தக் கப்பற்காரர் அவனைக் கேட்டு விசாரிக்கிறார்கள். 'உன் தொழில் என்ன?' &c. பார்த்தீர்களா? நித்திரை தெளிந்த பாவி தன்னை இன்னான் என்று அறியவேண்டும். தான் செய்த குற்றத்தை ஒப்புக்கொள்ளவேண்டும். யோனா என்பவன் ஒன்றையும் மறைத்துக்கொள்ளவில்லை. சகலத்தையும் வெளிப்படுத்தினான். சாக்குப்போக்குச் சொல்லாமல் தன் காரியத்தை அறிவித்தான். ஆ! சகோதரரே! எழுப்பப்பட்ட பாவியானவன் தன் அக்கிரமத்தை மூடிக்கொள்ளமாட்டான். தேவன் முன்புக்கும் மனிதர் முன்புக்கும் அதை அறிக்கையிடுவான். 'தன் பாவத்தை மறைக்கிறவன் வாழ்வடையான், அதை அறிக்கையிட்டு விட்டுவிடுகிறவனோ இரக்கம்பெறுவான்.'

(a) 'உன் தொழில் என்ன? சகோதரனே! உனக்கு என்ன வேலை? நான் சமுசாரி, வியாபாரி, [illegible] ஆசாமி, பண்ணையாள் என்று சொல்லுவாயாகும்; அதல்ல! தேவன் பார்க்கிறபடி இரண்டுவகையான வேலை மாத்திரம் உலகத்தில் நடக்கிறது. பாவஞ்செய்கிறது; நன்மைசெய்கிறது (1 யோ. 3: 7, 8). பிசாசின் வேலை, தேவனுடைய வேலை; பாவத்தொழில், பரிசுத்தத்தொழில்; இவ்விரண்டு தொழிலையும் [illegible] ரோ. 6: 13ல் காண்க. 'நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்துக்கு ஒப்புக்கொடாமல், உங்களை [illegible] அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாக தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள்'. குணப்படாத பாவிகள் பாவத்துக்கு ஒப்புக்கொடுக்கிறார்கள் [illegible] அவயவங்களை [illegible] அநீதியின் ஆயுதங்களாகச் [illegible]. அவர்களுடைய

வாயோ! அநீதியின் அவயவம். பொய் பேசுகிறார்கள், சங். பிசாசின் வேலையைச் செய்கிறது. கைகளோ! அநீதியின் அவயவம். அநியாயம் பண்ணுகிறது. மற்றவர்கள் சொத்தை எடுத்துக்கொள்ளுகிறது. பொய்யான பிரமாணங்களை எழுதுகிறது. காதோ! அசுத்தமான வார்த்தைகளைப் பிரியத்தோடு கேட்கிறது. இப்படியாக அவர்களுடைய ஒவ்வொரு அவயவமும் பாவத்தின் ஆயுதம்; கருவியாயிருக்கிறது. ஜீவியம் எல்லாம் பாவம். பாவம் செய்வதே அவர்கள் தொழில். மெய்க்கிறிஸ்தவர்களோ! தங்களைக் கர்த்தருக்கு முற்றிலும் ஒப்புக்கொடுத்துத் தங்கள் அவயவங்களை எல்லாம் நீதியின் ஆயுதங்களாகக் கையளிக்கிறார்கள். பரிசுத்தமாய் நடப்பது அவர்கள் தொழில். கர்த்தருக்குப் பரிசுத்தம் என்பது அவர்கள் அங்கங்களில் எல்லாம் எழுதியிருக்கிறதுபோலும்.

(*b*) உன் தேசம் எது? இரண்டு வகையான தொழில் இருக்கிறது எப்படியோ அப்படியே இருவகையான தேசமுமுண்டு. பூலோகதேசம், பரமதேசம். இவ்விரண்டு தேசமும் எபி. 11: 15, 1 ல் காட்டியிருக்கிறது. குணப்படாதவர்கள் பூலோக குடிகளாயிருக்கிறார்கள். அவர்கள் சிந்தை உலகசிந்தை; அவர்கள் மேன்மை உலக மேன்மை; அவர்கள் ஆஸ்தி உலக ஆஸ்தி. பூமிக்கடுத்தவைகளைச் சிந்திக்கிறார்கள், நாடுகிறார்கள், தேடுகிறார்கள். அவர்கள் வாசஸ்தலம் இங்கே; குடியிருப்பு இங்கே; பொக்கிஷம் இங்கே; தேசம் இங்கே; மோக்ஷத்தில் உனக்கு ஆஸ்தி உண்டா?

மெய் விசுவாசிகளோ! அப்படியல்ல; 'அதிலும் மேன்மையான பரம தேசத்தையே விரும்புகிறார்கள்.' ஆகையால் தேவன் அவர்களுடைய தேவன் என்னப்பட வெட்கப்படுகிறதில்லை; அவர்களுக்கு ஒரு நகரத்தை ஆயத்தம்பண்ணியிருக்கிறார்.

சகோதரனே! சகோதரியே! உன் நிலைமை என்ன? நீ அதை அறிந்துகொள்ளவேண்டும். உன் தொழில் என்ன? பாவம் செய்கிறாயா? நீதியைச் செய்கிறாயா? நீ எங்கேயிருந்து வருகிறாய்? உன் முன்னடக்கை எப்படி? நீ குடியிருக்கிற காசபட்டணத்தைப் பார். ஏசா 51: 1. உன் தேசம் எது? இப்பூமியா? மோட்சமா? நீ என்ன ஜாதியான்? பாவமனுஷனா? விசுவாசக் குடும்பனா?

III. 'நீ ஏன் இப்படிச் செய்தாய்?' (1: 10). யோனாவுடைய காரியங்கள் எல்லாம் வெளிப்படையாயிற்று. அவன் செய்த துரோகம் வெளிக்கு வந்தது. அவன் கர்த்தருடைய சமுகத்திலிருந்து ஓடி விலகிப் போகிறவனென்று எல்லாருக்கும் தெரிந்தது. தேவனுக்கு மாத்திரமல்ல அஞ்ஞான ஜனங்களுக்கும் அவன் பாவம் துலங்கிற்று, கேட்கிறார்கள். 'நீ ஏன் இப்படிச் செய்தாய்?' அப்படிச் செய்தது மகா புத்தியீனமான காரியம். ஏனென்றால் யோனாவே சொல்லுகிறான்,— 'சமுத்திரத்தையும், பூமியையும் உண்டாக்கின பரலோகத்தின் தேவனாகிய கர்த்தரி-



டத்தில் பயபக்தியுள்ளவனாயிருக்கிறேன்' என்கிறான். அப்படியானால் சமுத்திரத்தை உண்டாக்கினவர் சமுத்திரத்தினின்று கப்பல் ஏறி தூரப்பிரயாணம் போனதினாலே விலகக்கூடுமோ? சமுத்திரத்தை உண்டாக்கினார் என்றால் கடலிலும் இருப்பாரே.

சிநேகிதனே! பாவத்தை விட்டுவிடாமலும், குணப்படாமலும் தேவனுடைய சமுகத்திலிருந்து விலகி ஒளித்துக்கொள்ளப்பார்க்கிறாய், முடியுமா? ஏன் அப்படிச் செய்கிறாய்? ஆண்டவர் சொல்லுகிறார், 'அவர்கள் சமுத்திரத்தின் அடியிலே போய் என் கண்களுக்கு மறைந்துகொண்டாலும், அங்கே அவர்களைக் கடிக்கப் பாம்புகளுக்குக் கட்டளையிடுவேன்'. ஆமோஸ் 9: 3. ஓடிப்போகிறது பிரயோஜனமில்லை. திருஷ். எருசலேம் பட்டணம் பாபிலோன் ராஜாவினாலே பிடிக்கப்பட்டபோது யூதருடைய ராஜாவும், யுத்தவீரரும் ராத்திரியில் எழுந்து ஒருவருக்கும் தெரியாமல் ஓடிப்போனார்கள். தப்பித்துக்கொள்ளலாம் என்று நினைத்தார்கள்; பிரயோஜனமில்லை; அவர்களைப் பின்தொடர்ந்து பிடித்தார்கள். அப்படிப்போல நமது பாவம் நம்மைத் தொடர்ந்து பிடிக்குமென்பது நிசம். 'சீர்கெட்ட பிள்ளைகளே! திரும்புங்கள்; உங்கள் சீர்கேடுகளைக் குணமாக்குவேன்' என்கிறார் எரே. 3: 22. நம்மை நேசிக்கிறவரும், நம்மை ரட்சிக்கக் காத்திருக்கிறவருமான தேவன். அப்படியானால் ஏன் இப்படிச் செய்கிறாய்?

IV 'உனக்கு என்ன செய்யவேண்டும்' (வா. 1: 11). யோனாவினாலே அநேகருக்கு மோசம் வந்தது கப்பற்காரர் எல்லாரும் அபாயமான நிலைமையில் அகப்பட்டார்கள். அவனைக் காப்பாற்ற விரும்பியும் தேவநீதி அதற்கு இடங்கொடுக்கவில்லை: அவன் தண்டிக்கப்படவேண்டும். 'நாங்கள் உனக்கு என்ன செய்யவேண்டும்'? என்று கேட்கிறார்கள். அவனே தீர்ப்புச் சொல்லுகிறான். 'என்னை எடுத்து சமுத்திரத்தில் போட்டுவிடுங்கள்' என்கிறான். தான் தப்பித்துக்கொள்ளலாம் என்று அவன் யோசிக்கவில்லை. தான் மரணத்துக்குப் பாத்திரன் என்று உணர்ந்துகொள்ளுகிறான். ஆகையால் அவனை எடுத்துக் கடலிலே போட்டுவிட்டார்கள். நீதி அல்லவா? நிசந்தான், தேவன் அற்புதவிதமாய் அவனை ரட்சித்தார். தன் பாவத்தை உணர்ந்து மனந்திரும்பினதினாலே காக்கப்பட்டான். இல்லாவிட்டால் மாண்டுபோயிருப்பான் என்பதற்குச் சந்தேகமில்லை. தேவன் கேட்கிறார்; 'பாவி நான் உனக்கு என்ன செய்யவேண்டும்'. இன்னொரு கடல். வெளி. 20: 14, 15. அந்த அக்கினிக் கடலில் ஒதுங்கத்தக்கதாக மீன் வயிறு ஒன்றுமில்லை. இரக்ஷிப்பா? இரண்டாம் மரணமா?

Rev. T. WALKER.

## 10-வது டக்கரம்மாள்புரம் மே மாசக் கன்வென்ஷன்

ஈந்த வருஷத்துக் கன்வென்ஷன் கூட்டங்கள் மேமீ 20உ முதல் 22உ வரைய நடைபெற்றது. வழக்கமாய் 150 பேருக்குக் குறையாமல் கூடுகிற கூட்டம் இவ்வருஷத்தில் 65 பேர் மாத்திரம் வரும்படியாகக் குறைந்துவிட்டது. இதற்கு விசேஷித்த காரணம் ஒன்றும் சொல்லுகிறதற்கு ஏதுவில்லை. பொதுவாகப் பணக்கஷ்டத்தினால் இருந்திருக்கலாம் என்று எண்ண வழியிருக்கிறது. ஆனால் அது தகுந்த ஆதாரம் இல்லாததுபோல் தோன்றுகிறது. ஆகையினால் மூன்று நாள் நடத்தவேண்டிய கூட்டங்களை இரண்டு நாளைக்குள் சுருக்கி முடிக்க நேரிட்டது. தேவகிருபையினால் இந்த வருஷத்துக் கூட்டங்கள் கூடி வந்தவர்களுக்குப் பிரயோஜனமாய் நடைபெற்றன. காலைக் கூட்டங்கள் இரண்டில் கனம். மதுரம் ஐயரவர்கள் தானியேல் தீர்க்கதரிசனத்திலிருந்து, தானியேலின் ஜீவியம், அவனுடைய காட்சிகள், அவனுடைய தீர்க்கதரிசனம் என்ற பொருள்களின் பேரில் அதிக விபரமாய்ப் பேசினார்கள். மூன்று நாளை இரண்டு நாளாக்கினவுடனே சில சகோதரர் நாட்கள் குறைந்தாலும் இந்தப் பொருள்கள் தங்களுக்குச் சொல்லப்படவேண்டும் என்று ஆவலோடு கேட்டுக்கொண்டார்கள். 1½ மணிக்கு நடக்கும் ஜெபக்கூட்டங்களை தினம் ஒவ்வொருவராக Mr. ஜான் தேவதாஸ் அவர்களும் Mr. ஜே. அன்புடையான் அவர்களும் ஊக்கமான ஜெபம் செய்ய ஏவி அவர்களுக்குக் குறிக்கப்பட்ட பொருள்களின் பேரில பலர் ஜெபிக்கும்படி ஏவினார்கள். முதல் நாள் 3½ மணிக்கூட்டத்தில் கனம் M. ஆசீர்வாதம் ஐயரவர்களும், 7 மணிக்கூட்டத்தில் கனம். ஊக் ஜான் ஐயரவர்களும் பேசினார்கள் இரண்டாம் நாள் மிஷனெரிக் கூட்டத்துக்கென்று அழைக்கப்பட்ட நமது முதல் முதல் டோர்ணக்கல் மிஷனெரியவர்களாகிய கனம் சாமுவேல் பாக்கியநாதன் ஐயரவர்கள் சுரத்தினாலும் பெலவீனத்தாலும் வரத் தடைப்பட்டது மிகுந்த துக்கமான விஷயம். ஆனால் அக்கூட்டத்திலே பேசும்படி கேட்டிருந்த கனம். M. V. ஜான் ஐயரவர்களும் கனம். ஜி.தேவதாசன் ஐயரவர்களும் மிஷனெரி ஊழியம் செய்யும்படி உற்சாகப்படுத்தக்கதாகப் பேசினார்கள். இரவு 6½ மணி பரி. நற்கருணை ஆராதனையில் கனம். K. T. அருணைநாயகம் ஐயரவர்கள் 'புது உடன்படிக்கை' என்ற விஷயத்தின்பேரில் பிரசங்கம் செய்தார்கள். திருநெல்வேலி ஜில்லாவுக்கு ஆசீர்வாதமாயிருக்கிற இக்கூட்டங்களுக்கு தேவனுடைய பிள்ளைகளான யாவரும் உற்சாகமாய் வரவும், இவ்விடத்தில் செய்யப்படுகிற ஊழியம் அநேகருக்கு நித்திய ஆசீர்வாதமாயிருக்கவும் தேவனேதாமே கிருபை செய்வாராக.

---



## 'இங்கே ஒரு பையன் இருக்கிறான். அவன் கையில் ஐந்து வாற்கோதுமை அப்பங்களும இரண்டு மீன்களும் உண்டு'. 'அவைகளை என்னிடத்தில் கொண்டுவாருங்கள்'.

பரி. யோ. 6: 1—11. பரி. மத். 14. 18.

ஐயாயிரம் பேர்கொண்ட திரள் ஜனம் இயேசுவின் முன்னிருக்கிறது. அவர்களுக்குப் பெரிய ஆசீர்வாதம் அளிக்க விரும்புகிறார். அந்த ஆசீர்வாதம் ஒருவனுடைய சிறு சுயவெறுப்பான செய்கையால் வரக்கூடியதாயிருக்கிறது. கானாவூர்க் கலியாணத்தில் திராட்சரசம் உண்டாக்கத் தண்ணீரை யத்தனமாகக்கொள்ளுகிறார். ஒரு சர்ப்பத்தை யுண்டாக்கக் கோலை உபயோகிக்கச் சொல்லுகிறார். இரும்பு மிதக்க ஓர் மரக்கொம்பு வேண்டியதாயிருந்தது. திரள் கூட்டத்தைப் போஷிக்கவும் ஓர் சிறு யத்தனம் தேடுகிறார். இந்தப் பெரிய ஆசீர்வாதத்தை அளிக்குமுன் ரட்சகர் சில காரியங்களைத் திட்டமாய் விரும்புகிறார்.

முதலாவது அந்தத் திரள் கூட்டத்திலெங்கும் ஆகாரமில்லையென்பதைத் திட்டமாய் அறியச்செய்கிறார். 'புசிக்கிறதற்கும் இவர்களிடத்தில் ஒன்றுமில்லை. ஆகையால் இவர்கள் சுற்றியிருக்கிற கிராமங்களுக்கும் ஊர்களுக்கும் போய் தங்களுக்காக அப்பங்களை வாங்கிக்கொள்ளும்படி இவர்களை அனுப்பிவிடவேண்டும்' என்று சீஷர்கள் கேட்டார்கள். ஏனென்றால் இயேசு ஜனங்களுக்காகப் பரிதபித்தார். நீங்களே ஆகாரங் கொடுங்கள் என்றார். 'இவர்கள் சாப்பிடத்தக்கதாக அப்பங்களை எங்கே கொள்ளலாம்' என்று கேட்டார். ஆகவே அக்கூட்டத்தில் எங்கும் சிறுவன் ஒருவனிடத்தில் அப்பம் இருந்ததேயல்லாமல் வேறு அப்பம் கிடையாது.

இரண்டாவது, தமது சீஷரில் ஒருவனையே இந்தப் பெரிய ஆசீர்வாதத்துக்குக் கருவியாக உபயோகிக்க விரும்பிப் பிலிப்புவைத் தெரிந்துகொள்ளுகிறார். அவனிடத்தில் சொற்ப விசுவாசம் இருந்தாலும் அந்த விசுவாசத்தைப் பெலப்படுத்தி அவனையே ஆசீர்வாதக்காரனாக்க விரும்பி, 'அப்பங்களை எங்கே கொள்ளலாம்?' என்றார். அவனோ தன் மறுமொழியில் கொஞ்சமும் நம்பிக்கைக்கு இடமில்லாதபடி செய்தான். இருநூறு பணம் அல்லது சுமார் நூறு ரூபாய்க்கு வாங்கினாலும் போதாது. வாங்குகிறது எங்கே? பணம் எங்கே? என்பதுபோல சொல்லி முடித்துவிட்டான். அச்சமயத்தில் அந்திரேயா ஆண்டவரிடத்தில் வந்து, 'இங்கே ஒரு பையன் இருக்கிறான். அவனிடத்தில் ஐந்து வாற்கோதுமை அப்பங்களும் இரண்டு மீன்களும் உண்டு. ஆனாலும் அவைகள் இத்தனை ஜனங்களுக்கு எம்மாத்திரம்' என்றான். இயேசுவானவர் பிலிப்புவினிடத்தில்

பசிக்கொண்டிருக்கும்போதே அந்திரேயா கூட்டத்தில்போய் விசாரித்திருக்கிறான். இந்தப் பையன் வைத்திருந்த அப்பத்தைக் கண்டு அதை இயேசுவானவரிடத்தில் சொல்லி இவ்விதமாய் அந்தக் கூட்டத்துக்கு ஆசீர்வாதம் கிடைக்கக் காரணமாயிருந்த யத்தனத்தைக் காட்டினதோடு தன் விசுவாச பெலவீனத்தையும் அறிக்கையிடுகிறான்.

இந்தப் பையன் யார்? அவன் பேர் விபரமென்ன? வேதத்தில் சொல்லப்படவில்லை. சில விசேஷித்த ஆட்களின் பேர் வேதாகமத்தில் சொல்லப்படாமலேயிருக்கலாம். மறைந்திருப்பது நல்லது. நாம் கர்த்தருக்காகப் பெரிய கிரியைகளைச் செய்தாலும் சின்ன வேலைகளைச் செய்தாலும் மறைந்திருக்க விரும்புவோமாக. இந்தப் பையனைப்பற்றிச் சற்று கவனிப்போம். அவனிடத்தில் ஐந்து வாற்கோதுமை அப்பமும் இரண்டு மீன்களும் இருந்தது. ஏழைகளின் ஆகாரம், ஐந்து கேப்பைத்தோசை, சோளத்தால் செய்த ரொட்டி, இரண்டு சிறு பொரித்த அல்லது சுட்ட கருவாடு, என்று நம்முடைய தேசபாஷையில் சொல்லலாம். இவனுடைய தாய் இந்தக் கட்டுச்சாதத்தைத் தன் பையன் கையில் கொடுத்து இயேசுவைப் பார்க்கவும் அவருடைய உபதேசத்தைக் கேட்கவும் அவரைப் பின்பற்றவும் விரும்பி இப்படிச் செய்திருக்கிறாள். இந்தப் பையன் பல நாளாய் இதைச் சுமந்து திரிந்து கொஞ்சம் சாப்பிட்டுவிட்டு மீதிநாட்களுக்காக வைத்திருந்திருக்கிறான. தன் மகன் இயேசுவைப் பார்க்கவேண்டுமென்று விரும்பி இவ்விதம் அனுப்பின தாய் எப்படிப்பட்டவளாயிருக்கவேண்டும்? தன் மகன் குணப்பட்டு இயேசுவின் சீஷனாகி வளரவேண்டும் என்று விரும்பி, ஜெபித்து வந்தவளாயிருக்கவேண்டும். பார்த்தீர்களா? ஜெபிக்கிற தாய் பெரிய ஆசீர்வாதத்துக்கு ஊற்றாகிறாள்.

ஆண்டவர் அந்திரேயாவிடத்தில் 'அவைகளை என்னிடத்தில் கொண்டு வாருங்கள்' என்கிறார். அந்த அப்பங்களைத் தேடி, விசாரித்துக் கண்டு பிடிக்க அந்திரேயாவுக்குக் கட்டளை பிறக்கிறது. பையன் கூட்டத்தில் எங்கே போனானோ? கண்டுபிடித்தாலும் தனக்கென்று வைத்திருக்கிற அப்பங்களையும் மீனையும் கொடுக்கிறானோ? அந்திரேயா தேடி விசாரித்துக் கண்டுபிடித்தான். பையனிடத்தில் கேட்கிறான். பையன், 'எத்தனை அப்பம் வேண்டும், எத்தனை மீன் வேண்டும், இரண்டு அப்பமும் ஒரு மீனும் காட்டுமா? என்கிறான். அந்திரேயா இயேசுவானவரிடத்தில் சொன்னபடி அந்தப் பையனிடத்தில் கேட்கிறான். ஆண்டவர் கேட்கிறார் என்றான். உடனே பையன் எல்லாவற்றையும் கொடுத்துவிடுகிறான். ஓர் சிறுவனின் பிரதிஷ்டை, சுயவெறுப்பு எவ்வளவு பெரிய ஆசீர்வாதத்துக்குக் காரணம்! அவர் இந்த ஜன கூட்டத்தைப் போஷிக்க வானத்திலிருந்து அப்பத்தை வருஷிக்கச் செய்யக்கூடும். ஒரு வார்த்தைமாத்திரம் சொன்னால் போதுமான அப்பம் கிடைத்திருக்கும், ஆகிலும் இச்சிறுவனின் சுயவெறுப்பை ஓர் மகத்தான கருவியாகக் கொள்ளுகிறார். இதை வாசிக்கிறவனே, நீ யாரானாலும் உன்னை மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக்க, உன்னைக்கொண்டு மற்றவர்களை ஆசீர்வதிக்க உன்னிடத்தில் சுயவெறுப்பு, தற்பிரதிஷ்டையை எதிர்நோக்குகிறார்.

மோசேயைத் தமது ஜனங்களை நடத்தும் தலைவனாகத் தெரிந்து கொள்ளத் தேவன் சித்தங்கொண்டார். தேவன் தன்னை அழைத்துத் தெரிந்துகொள்ளுமுன் தன்னை இஸ்ரவேலின் தலைவனாக்கிக்கொள்ள அவன் விரும்பினான். மாம்ச வைராக்யம் காட்டினான். ராஜ அரண்மனையிலிருந்து ராஜகுமாரனாகப் பாவித்து இஸ்ரவேலருக்கு நீதியையும் நியாயத்தையும் நடப்பித்து அவர்கள் தலைவனாக எகிப்திலேயே இருக்க விரும்பினான். போதும், அது தேவனுடைய முறையல்ல. 40 வருஷம் ஆடு மேய்க்கப் போட்டார். அதின் முடிவில் அவனுடைய மாம்ச வைராக்யம் ஒழிந்தது. தேவன் அழைக்கிறார். சாக்குப்போக்குச் சொல்லிக் கோழைத்தனம் காட்டுகிறான். இவ்விதமாய்த் தன்னைச் சாராமல் தன் பெலத்தை நம்பாமலிருக்கிறவனே நமக்கு ஊழியம் செய்வான் என்று கண்டு அவனை ஓர் ஜனக் கூட்டத்துக்கு அதிபதியாக்கினார்.

புதிய ஏற்பாட்டின் காலத்தில் பரிசுத்த பவுல். மிகுந்த மாம்ச வைராக்யமுள்ள வாலிபன். தன் யோசனைப்படி சகலத்தையும் செய்துமுடிக்கும் சாமர்த்தியமுள்ளவன். அவனையே தமக்கு ஊழியக்காரனாக, சுவிசேஷ ராஜ்யத்தின் முதல் புறத்தேச ஸ்தானாபதியாகத் தெரிந்துகொள்ளச் சித்தங்கொண்டார். அவன் தன் சுயசித்தத்தை ஒழித்து, 'ஆண்டவரே, என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர்?' என்று கேட்கத்தக்கதாக அவனுடைய சுய சித்தத்தை முற்றிலும் விட்டுவிட்டான். தான் வெறுத்து அற்பமாய் எண்ணின சிறிய [illegible] ஒருவனே [illegible] தேவனுடைய சித்தத்தை அறிவிக்கவுமான தேவசித்தத்துக்குத் தன்னை கீழ்ப்படுத்தினான். அவனுடைய ஊழியம் 35 வருஷம் இதில் 14 வருஷம் ஊழிய ஆயத்தகாலம், 21 வருஷம் மிஷனெரி ஊழியகாலம், 4 வருஷம் நிருபங்கள் எழுதின காலம். இவ்விதமாய்ப் [illegible] எண்ணிறந்த ஜனங்களுக்குத் தன் ஊழியத்தினாலும் நிருபங்களாலும் ஆசீர்வாதமாயிருந்த பரிசுத்த பவுல் தன் சித்தத்தை முற்றிலும் [illegible] தேவனுடைய சித்தத்துக்கு அடிமைப்படுத்தவேண்டியதாயிருந்தது. இதுவே ஆசீர்வாதத்துக்கு வழி. பிரதிஷ்டை, சுயவெறுப்புக் காட்டாத ஊழியம் பிறருக்கு எவ்விதத்திலும் ஆசீர்வாதமாயிருக்கமாட்டாது. [illegible] இயேசுவிடம் [illegible]. அவர் [illegible] நம்மையும் ஆசீர்வதிப்பார். நாம் [illegible] ஆசீர்வாதமாயிருக்கும்படி நம்மை உபயோகிப்பார்.

# யோபின் ஆகமம்

முகவுரை. நியாயதோரணை, பாஷையலங்காரம் இவ்விரண்டிலும் சிறந்த திவ்ய ஆகமங்களில் இவ்வாகமம் ஒன்று. ஆக்கியோன், இவ்வாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிற ஆட்கள், இவ்வாகமம் எழுதப்பட்ட காலம் இவைகளைப்பற்றிப் பல அபிப்பிராயங்களுண்டு. யோபு என்பவன் வாஸ்தவமான ஓர் ஆள்தானோ இல்லையோ என்பதைப்பற்றிய அபிப்பிராயங்களும் பல உண்டு. நாம் இந்த ஆகமத்தைக் கற்றுக்கொள்ளப்போகிற விஷயத்திற்கு, எசேக்கியேல் தீர்க்கதரிசியும் யாக்கோபு அப்போஸ்தலனும் யோபைப்பற்றிப் பேசியிருக்கிறதைக் கவனிக்குங்கால் யோபு உண்மையான ஓர் ஆள்தான் என்று நம்ப இடமிருக்கிறது. இவ்வாகமத்தின் மிச்சமான பாகம் கவியாகவேயிருக்கிறது. இவ்வாகமம் அதிபூர்வமானதென்பதற்கு இவ்வாகமத்திலேயே போந்த ஆதாரமுண்டு. அநேகமாய் மூற்பிதாக்கள் காலத்துக்கடுத்தது என்று சொல்லலாம். இவ்வாகமத்தின் பொருளை ஒரே வார்த்தையில் அடக்கவேண்டுமானால் 'துன்பம்' என்று சொல்லலாம். இதில் வெளிப்படையாய்க் காட்டப்பட்டிருக்கிற கருத்து மூன்று:

(1) ஆவிக்குரிய நன்மை, தீமைகளுக்கும் மனுஷனுக்குமுள்ள சம்பந்தம்.

(2) மனுஷனுக்கடுத்த காரியங்களை நிதானிக்க தத்துவ சாஸ்திரம் போந்ததல்ல.

(3) தேவனுடைய சித்தம் தயையுள்ளது.

இவ்வாகமத்தைப் பொதுவாக மூன்று பிரிவாய்ச் சொல்லலாம்.

I. முகவுரை. சரித்திரப்பாகம். அதி. 1, 2.

II. கவி. தர்க்க பாகம். அதி. 3—42: 6.

III. முடிவுரை, சரித்திரப்பாகம். அதி. 42: 7—17.

இவ்வாகமம் ஆவிக்குரிய சத்தியங்களை விசேஷித்துப் போதிக்கிறபடியால் பின்வருகிறபடி பிரிக்கலாம்,

I. மனுஷன். அதி. 1: 1-5. II. தர்க்கம். அதி 1: 6-37. III. யெகோவா அதி. 37—42. 6. IV. முடிவு. அதி. 42. 7—17.

பலனை எதிர்நோக்கிச் செய்யும் ஊழியம் தேவனுக்காகச் செய்யும் ஊழியமல்ல. அது மனதின் உண்மை, தேவசமுகத்தை வாஞ்சித்தல், அதினால் நேரிடக்கூடிய கஷ்டம், தண்டனை, காந்தம் துருவத்தை நோக்குவதுபோல, காரியங்கள் பேரெதிரிடையாய்த் தோன்றினபோதிலும் தேவனைப்போலாகவேண்டுமென்ற ஒரே காரியத்தை நோக்குதல், இம்மையின் அந்தகாரம், இஜ்ஜீவியத்தின் கஷ்டங்களை மறந்து மறுமையின் சந்தோ



ஷத்தை எதிர்நோக்குதல் இவைகள்தான் ஆண்டவருக்காகச் செய்யும் மெய்யான ஊழியம் இவைகளே இவ்வாகமத்தின் கருத்து என்று சொல்லலாம்.

அதிகாரம் 1: 1—5. யோபின் சரித்திரம் மிகவும் சுருக்கமாய்ச் சொல்லப்பட்டபோதிலும் அவனைக் குறித்து மிகவும் சிறப்பாய்ச் சொல்லியிருக்கிறது. அவனைப்பற்றி மூன்று குறிப்புகள் கவனிக்கலாம். முதலாவது, அவனுடைய குண விசேஷம், அவன் உத்தமன், சன்மார்க்கன், தேவனுக்குப் பயப்படுகிறவன், பொல்லாப்புக்கு விலகுகிறவன். அவனுடைய உத்தமம் மெச்சிக்கொள்ளத்தக்க விதமாயிருக்கிறது. இப்பாகத்தின் முடிவில் அவனுடைய இன்னொரு குண விசேஷம் சொல்லியிருக்கிறது. அவன் தன் பிள்ளைகளிடத்தில் காட்டிய அன்பும் அனுதாபமும் தன் குடும்பத்து ஆசாரியனாகத் தன் பிள்ளைகளைக் குறித்துக் கவலைப்பட்டு அவர்களுக்காகத் தேவசமுகத்தில் விண்ணப்பம்பண்ணுகிறான். அவர்கள் தங்கள் சந்தோஷத்தின் மத்தியில் பாவம் செய்யாமலிருக்கவேண்டுமென்று ஆத்திரப்பட்டு ஜெபிக்கிறான். இரண்டாவது அவனுடைய குடும்ப ஜீவிய விசேஷம், தன் பிள்ளைகளில் மகிழுகிறான். அவர்கள் சந்தோஷம் கொண்டாட இடம் கொடுக்கிறான் என்றாலும் அவர்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்துக்காகக் கவலைப்படுகிறான். மூன்றாவது அவனுடைய ஐசுவரியம் திரண்ட ஐசுவரியமுள்ளவன். தேவனுக்குப் பயப்பட்டு பொல்லாப்புக்கு விலகுகிறான். இவ்விரண்டும் பொருந்தியிருப்பது எவ்வளவு விசேஷம். 'கிழக்கத்திப் புத்திரர் எல்லாரிலும் பெரியவனாயிருந்தான்'.

கோத்திரப் பிதாவே குடும்பத்துக்கு ஆசாரியன். அவன் குமாரரும் குமாரத்திகளும் ஒருவரோடொருவர் ஐக்கியமாய்ச் சந்தோஷங்கொண்டாடியிருந்தார்கள். விருந்துண்கிறார்கள். ஆனால் தகப்பன் அவர்களோடில்லை. தூர இருந்தாலும் அவர்களைக் கவனித்துக்கொண்டேயிருக்கிறான். அவர்களுக்காக அதிகாலமே எழுந்திருக்கிறான். ஒருவேளை என் குமாரர் பாவஞ்செய்து தேவனைத் தங்கள் இருதயத்திலே தூஷித்திருப்பார்கள் என்று சொல்லி அவர்களின் இலக்கத்தின்படியே சர்வாங்க தகனபலிகளைச் செலுத்துகிறான். தற்காலம் பலி முதலிய சடங்குகள் அவசியமில்லை. என்றாலும் குடும்பத்தலைவன் குடும்பத்துக்கு ஆசாரியன்தான். 'என் பிள்ளைகளைக் கவனிப்பது என் கடமை. நல்ல பிள்ளைகளாயிருக்கலாம், சற்குணசாலிகள்தான் ஆசேபனையில்லை. என்றாலும் மனுஷர்தான். அவர்களுக்காக இன்னமும் ஜெபிப்பது மிகவும் அவசியம்' என்று அவன் சொல்லவேண்டியவனாயிருக்கிறான்.

அதி. 1: 6—12. பூமிக்குரிய நியாயஸ்தலங்களில் குற்றஞ்சாட்டுகிறவர்களும் அவர்களின் வைக்கீல்களும் இருக்கிற பாவனையை இங்கு காட்டியிருக்கிறது. தேவதூதர்கள் மனுஷருடைய நன்மைக்காகத் தேவகட்டளைப்படி போக ஆயத்தமாயிருக்கிறதுபோல சாத்தானும் அவர்களுக்கு

விரோதமாய்த் தீமையான காரியங்களைச் செய்ய ஆயத்தமாயிருக்கிறான். இச்சமயத்தில் அவன் நன்மைக்காக வராமல் யோபுக்குத் தீமைசெய்ய வேண்டுமென்றே வந்திருக்கிறான். தேவபுத்திரர் நடுவில் சாத்தான் காணப்படுவது ஒரு விசேஷித்த கருத்துள்ளதாயிருக்கிறது. அதாவது, சாத்தான் தேவனுடைய ஆளுகைக்குக் கீழானவன். அவன் கீழ்ப்படிய வேண்டிய மேலான அதிகாரம் ஒன்றிருக்கிறது. அவனுடைய மூர்க்கத்துக்கு மட்டுக்குறிக்கிற மேலான சித்தம் ஒன்றுண்டு. அவ்வெல்லைக்குட்பட்டு தன் தீய சுபாவத்தின்படி கிரியை செய்தாலும் அதுவும் திவ்ய தீர்மானத்தை நிறைவேற்றும்படியே கையாடப்படவேண்டும். தீமையின் அதிபதி, தலைவன் நன்மைக்கு அடங்கி நன்மையுண்டாகவே கிரியைசெய்யவேண்டும். தெளிவாய்ச் சொல்லவேண்டுமானால், சாத்தான் தேவ ஊழியக்காரனாக அவருடைய ஜனங்களைச் சீர்ப்படுத்தவும் பயிற்றுவிக்கவும் கருவியாகக் காட்டப்படுகிறான். 9-ம் வசனத்தில் 'யோபு விருதாவாகவா தேவனுக்குப் பயந்து நடக்கிறான்?' என்பதே இச்சரித்திரத்தின் முக்கிய கருத்து. யோபின் ஜீவியத்தில் வெளியரங்கமான ஒரு குற்றமும் காணப்படவில்லை. யோபின் சிநேகிதரைப் பார்க்கிலும் சாத்தான் ஞானமுள்ளவனாய் அவனுடைய உத்தமத்தைக் கண்டு மெச்சிக்கொள்ளுகிறான். ஆனால் அவன் கிரியைகளின் நோக்கத்தில் பழுதுண்டாவென்று கவனிக்கிறான். அதாவது சுயபிரயோஜனத்தை நாடாமல், சுத்த அன்பினால் ஏவப்பட்டு உத்தமனாயிருக்கிறானா? அல்லது சமயத்துக்குத்தக்கதாக, புறம்பான வாழ்வுகளுக்காக உத்தமனாயிருக்கிறானா? இதுதான் அந்தக் கேள்வியின் கருத்து.

அதி. 1: 13-22. 'கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம்' ஜீவன், கஷ்டம் இவைகளைக் குறித்துக் கவலையற்ற ஒருவனுடைய வார்த்தைகளல்ல. நேரிட்டவைகள் பயங்கரமானதாயிருந்தபோதிலும் அவனுடைய ஜீவியத்திலிருந்து முன் யோசனையின்றி இயற்கையாய் வந்த வார்த்தைகள். தேவபராமரிப்பின் ஒழுங்குப்படி இவ்வித துக்க செய்தி தன் காதுக்கெட்டினபோதிலும் 'கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம்' என்பதே அவன் மனதிற்குத் திருப்தியைக் கொடுக்கிறது. இவ்வுலகத்தில் அவனுடைய நம்பிக்கைகள் குலைந்து சந்தோஷம் கெட்டு அவனுடைய உள்ளம் ஆயாசப்பட்டபோதிலும் இவ்வித துக்க செய்தியைக் கொண்டுவந்தவர்கள் முன்னிலையில் அவன் கொடுத்த சாட்சி இதுவே. 'கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம்' ஒரு மனுஷனுக்கு மிஞ்சின துக்கம் நேரிட்டிருக்கும்போதும் தேவனுடைய கிழவொதுக்குத் தனக்குண்டென்று நம்புவதும் சிலவேளைகளில் தேவன் தமது சித்தத்தை நிறைவேற்றத் தமது ஈவுகளை நம்மைவிட்டு எடுத்துக்கொண்டபோதிலும் அவரே ஜீவாதிபதி, அவரே நம்மை நடத்துகிறவர், துக்கமே இன்னும் மேலான பாக்கியத்துக்கு நம்மை நடத்தும் வழியென்றறிந்து நிச்சயித்திருப்பது எவ்வளவு பெரிய காரியம். நமக்கு நேரிடும் கஷ்டங்கள் நமக்கு விளங்காதிருந்தாலும் தேவனே அவைகளை நடத்துகிறவர். அவர் நம்மைத் தாம் மறந்துவிடமாட்டார் என்று நிச்சயித்திருப்போமாக. அவர் நமக்குக் கொடுக்கிற தமது ஈவுகளை நம்மைவிட்டு எடுக்கும் விஷயத்திலும் சுத்திகரிப்பும் பாக்கியமும் இருக்கிறது. ஆகையால்தான் யோபு 'கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம்' என்றான். நமக்கு நேரிடும் கஷ்டங்களை லாபங்கள் என்று எண்ணும்போது தான் நாம் நம்மைக் கிறிஸ்துவினுடையவர்கள் என்று சாட்சி கொடுக்கிறவர்களாயிருப்போம்.

## திருஷ்டாந்தங்கள்

உவேல்ஸ் நாட்டுக் கரையோரத்தில் ஒருவர் தாம் இயற்றின கவியொன்றில் சூரியனும் அதன் உபகிரகங்களும் கிறிஸ்துவுடைய வெள்ளைச் சிங்காசனத்தைச் சுற்றிவருகிறதாகவும், ஒவ்வொரு கிரகமும் தனதன் வரிசையில் வந்தபோது கிறிஸ்துநாதர் ஒவ்வொன்றையும் பார்த்துச் சிரித்துச் சந்தோஷப்பட்டதாகவும், பூமியானது தன் வரிசையில் வந்தபோதோ அவருடைய முகம் வெட்கத்தாலும் துக்கத்தாலும் மூடப்பட்டதாகவும் பாடியிருக்கிறார். பூமியின் பாவமே அதற்குக் காரணம்.

தாய் தகப்பனை இழந்த அநாதப்பெண் ஒருத்தி இருந்தாள். அவளைப் பராமரிக்கிறதற்கென்று சில துரைமாரும் துரைசானிகளும் சேர்ந்த ஓர் போஷகக் கமிட்டி Board of guardians) ஏற்பட்டிருந்தது. அந்தப் பெண் துன்மார்க்கமாய் நடந்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டாள். அவளுடைய போஷகர்முன் கொண்டுவரப்பட்டாள், தான் செய்த குற்றத்தினிமித்தம் அவள் வெட்கப்படவேண்டியதாயிருக்க, அவளுடைய இருதயம் கடினப்பட்டிருந்தபடியால் முகத்தில் சற்றும் வெட்கம் தோன்றாதவளாய்க் காணப்பட்டாள். அந்தக் கமிட்டியிலிருந்த துரைசானியின் முகமோ அந்தச் சோரமாகி துக்கத்தாலும் வெட்கத்தாலும் நிறைந்திருப்பதை இந்தப் பெண் பார்த்தவுடனே தாங்கக்கூடாதவளாய்க் கதறி அழுது கண்ணீர் சொரிந்தாள். பின் அந்த அம்மாளிடத்தில் போய் மனம் நொந்து தன் குற்றத்தையெல்லாம் உணர்ந்து ஒத்துக்கொண்டு அன்றுமுதல் தன் பொல்லாத நடக்கைகளையெல்லாம் விட்டுவிட்டாள்.

ஓர் அம்மாள் தன் குருவானவரிடத்தில் போய், 'ஐயா நான் வேதாகமத்தை வாசித்து வருகிறேன். எனக்கு யாதொரு குறைவுமில்லை' என்றாள். குருவானவர் அவளைப் பார்த்து, 'அம்மா, நீங்கள் வீட்டுக்குப் போய்ப் புதிய ஏற்பாட்டைத் திறந்து ஓர் கட்டளை உங்கள் கண்ணுக்கு நேரென்பதைமட்டும் வாசியுங்கள். வாசித்தவுடன் புஸ்தகத்தை மூடிவிட்டு அந்தக் கற்பனைக்குக் கீழ்ப்படிந்திடுங்கள்' என்றார். சில வாரங்களுக்குப்பின் அந்த அம்மாள் குருவானவரிடத்தில் சிரித்த முகத்தோடு போய், 'ஐயா, நான் முன்னமே வந்து உங்களுக்கு நன்றி சொல்ல விரும்பி

னேன், 'வேதாகமம் எனக்கு இப்போது புதுப் புஸ்தகமாயிருக்கிறது'. என்றான். உவர்ட்ஸ்வர்த் என்னும் கவிஞர் வேதாகமத்தைக் குறித்துச் சொல்லுகிறதாவது, 'வேதத்தைக் கவனமாய் வாசித்துப் பார். அவ்வசனத்துக்கேற்க உன் நடக்கையைச் சீர்ப்படுத்து. கவலையுள்ள மாலுமியைப்போல கண்களை வானத்துக்கு நேரெதிராகக் கைகளைச் சுக்கானில் வைத்திருப்பது போல் நட.

## வேதாகமப் பாடமுறை

### 24-ம் பாடம் நெகேமியாவின் புஸ்தகம்

இவ்வாகமம் எஸ்றாவின் புஸ்தகத்தோடு சேர்க்கப்பட்ட ஒரு இயற்கையான அநுபந்தம். இவ்விரண்டு ஆகமங்களும் யூதருடைய கனோன் வேதாகமத்தில் ஒரே ஆகமம்தான். வயது சென்ற வேதபாரகனும் பாலியனான பானபாத்திரக்காரனும் ஒருமித்து வேலை செய்தார்கள்.

ஆக்கியோனின் நோக்கம்: எருசலேம் நகரத்தின் வாசல்களையும் அலங்கங்களையும் திரும்ப எடுப்பித்துக் கட்டுதலும் யூதரைத் தங்களுடைய சுயதேசத்தில் திரும்ப நிலைநாட்டுதலுமாகிய சரித்திர சம்பவங்களைக் கூறுவதுதான்.

ஆக்கியோன்: நெகேமியா இவ்வாகமத்தை எழுதினனென்பதற்கு யாதொரு சந்தேகமில்லை (அதி. 1: 1). சில பாகங்கள் (8, 9, 10 அதி.) எஸ்றாவினால் எழுதப்பட்டதென எண்ணப்படுகிறது. அப்படி வைத்துக் கொண்டாலும் நெகேமியாவே முழு ஆகமத்திற்கும் பொறுப்பான ஆக்கியோனென்று ஒப்புக்கொள்ளப்படுகிறது. இவன் யூதாக் கோத்திரத்தைச் சேர்ந்த அகலியாவின் குமாரன் அதி. 1: 1. இவன் குடும்பம் எருசலேம் நகரத்திற்குரியதென்று அதி. 2: 5ல் காண்கிறோம். ஆனால் இவன் சிறையிருப்பில் பிறந்தவன். என்றாலும் இஸ்ரவேலின் தேவனைப்பற்றிய விசுவாசத்தில் வளர்க்கப்பட்டவன். யோசுவா காலேப் என்ற பழைய ஆட்களைப் போன்ற சரியான உத்தம மனுஷன். விசுவாசமும் பக்தியும் தேசாபிமானமும் வீரமுமுள்ளவன். பாரசீக ராஜ்யத்தின் முக்கிய ஸ்தானமாகிய சூசான் அரண்மனையிலே ஒரு உயர்ந்த கண்ணியமுள்ள உத்தியோகம் வகித்தான். அசுவேரு ராஜாவின் பானபாத்திரக்காரனாயிருந்தான் ஒரு சாதாரண பட்லர் மாத்திரமல்ல, ராஜ்யத்திற்குரிய ஒரு உயர்ந்த மகிமையுள்ள உத்தியோகஸ்தன். ஆகையால் ராஜாவோடு நெருங்கிய சம்பந்தமுடையவனான். இவ்வுத்தியோகம் பிரபலமான நிலைமையைக் கொடுத்தபோதிலும் அதிக அபாயத்தையும் வருவிக்கக்கூடியது. அவன் ஒரு சோதனையான இடத்திலிருந்தான். பாபிலோன் அரண்மனையிலிருந்த தானியேலையும் மற்ற மூன்று விசுவாசிகளைப்போலவும் ஆகாப் வீட்டிலிருந்த ஒபதியாவைப்போலவும் தேவன் அவனை வைத்திருந்தார்.



மூன்று முக்கிய பிரிவுகள்

I. நகரத்தையும் அதின் அலங்கங்களையும் திரும்பக் கட்டுதல் 1 அதி.—7 அதி. ஜெபம் 1 அதி. உத்தரவு 2: 1—8 பிரயாணம் 2: 10, 11. ஆயத்தம் 2: 12—20. வேலைக்காரர் 3 அதி. தடை 4 அதி.—6: 14. முடிவுபெறுதல் 6: 15—7 அதி.

II. தேவனையும் அவருடைய வசனத்தையும்பற்றிய எழுப்புதல் 8 அதி.—12: 26 நியாயப்பிரமாணத்தை வாசித்தல், 8: 1—13 பண்டிகையை ஆசரித்தல் 8: 14—18 உபவாசித்தல் 9 அதி. உடன்படிக்கைக்கு முத்திரைபோடுதல் 10 அதி. ஜனங்களின் பட்டியலை 11 அதி.—12: 26

III. ஆலய ஆராதனையைத் திரும்ப ஏற்படுத்துதல். 12: 27—13 அதி. அர்ப்பணம் 12: 27—43. ஆலய ஆராதனை 12: 44—47 மோசேயின் புஸ்தகம் 13 அதி. அந்நிய மனைவிகள் 13: 23—28 தசமபாகம் 13: 10—13. ஓய்வுநாள் 13: 15—22

I. நெகேமியாவின் ஜெபம்: இவன் உத்தம இருதயமுள்ள இஸ்ரவேலன். கீழ்தேச அரண்மனையின் பகட்டு தன் சொந்த ஜனங்களுக்கும் சுயதேசத்திற்குமுரிய தேவையை நோக்கவிடாமல் அவனை மயக்கச் செய்யவில்லை. ஆகையால் எருசலேம் பாழாய்க் கிடப்பதற்காக அவன் அழுது துக்கித்து, உபவாசித்து மன்றாடினான். அந்நகரத்தின் நிலைமை அவன் இருதயத்தில் ஒரு பாரம்போலிருந்தது. அது பாழாய்க்கிடக்கும் பரியந்தம் பாரசீக அரண்மனையின் மகிமை அவன் பார்வையில் ஒன்றுமில்லை. தன் பிதாக்களின் கல்லறைகளுள்ள நகரமாகிய எருசலேமின் அலங்கம் இடிபட்டும் அதின் வாசல்கள் சுட்டெரிக்கப்பட்டுமாய்க் கிடந்த செய்தி அவன் தன்னுடைய பகட்டும் வாழ்வுமான ஜீவியத்தை விட்டுவிடப்பண்ணினது. அவன் பண்ணின விண்ணப்பம் உண்மையான ஒரு ஜெபத்திற்கு மாதிரி. அதில் தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிதலும், பாவ அறிக்கையும், தாழ்மையும், வணக்கமும், துதியும், வேண்டுதலும் அடங்கியிருக்கிறது 1 அதி 5—11 தனக்கு ராஜாவினிடத்தில் தயவு கிடைக்கும்படி ஜெபம் பண்ணுகிறான். மற்ற ஜெபங்கள் 2 அதி: 4—5; 4 அதி: 4, 5, 9; 5 அதி. 19; 6 அதி: 9, 14; 13 அதி: 14, 31. இவ்வாகமம் ஜெபத்துடன் முடிகிறது

ஜெபத்திற்கு உத்தரவு, 2: 1—9. நான்கு மாசத்திற்குப்பின் நெகேமியாவுக்கு ராஜாவிடம் பேசச் சமயம் கிடைத்தது. இவன் துக்கமுகமாயிருக்கிறதை அர்தசஷ்டா ராஜா கவனித்தார். இது அவருக்குப் பிரியவீனத்தை உண்டாக்கியிருக்கலாம். பாரசீக அரசன்முன் துக்க குறிப்பைக் காட்ட ஒருவருக்கும் இடங்கிடையாது. (எஸ்தர் 4: 2). நெகேமியா தன் நிலைமையை நன்றாய் உணருகிறான். ராஜாவின் கோபமுகத்தைக் கவனித்து அதிகமாய்ப் பயந்தான். ராஜாவின் பிரியனம் அவன் பிராண

னுக்கு அபாயமாய் முடியும் அல்லது அரண்மனையிலிருந்து தள்ளப்பட்டு காவலில் போடப்படுவான். ராஜாவின் கோபத்தைத் திருப்ப முயலாவிட்டால், தான் எண்ணியிருக்கிற நோக்கம் தவறிவிடுமென்று பயந்தான். தன் விருப்பத்தைச் சொல்லும்படி ராஜா கேட்டதினால் அவன் தைரியமடைந்து அம்புபோல் போகும் ஒரு சிறு ஜெபத்தை உடனே தேவனை நோக்கி மனதில் செய்து பின்பு ராஜாவுக்குப் பதிலுத்தரவு கொடுத்தான். இவ்வித ஜெபம் உத்தமர்களுக்குத் தங்கள் அனுதின ஜீவியத்தின் வேலை சமயங்களின் மத்தியிலும் விசேஷமாகத் தங்களுடைய கஷ்டசமயங்களிலும் உதடுகள் அசையாமல் கண்ணைச் சற்று மேல்நோக்கி ஒரு சுருக்கமான வேண்டுதலை வெகு விரைவாக வசனித்து வானத்து முழுவதையும் தங்களுடைய உதவிக்குக் கொண்டுவரும்படி கீழே இறங்கப்பண்ணுவதுபோலிருக்கும். அவன் பண்ணின நீண்ட விண்ணப்பங்களுக்குப் பலனாய் இவ்வித சிறு ஜெபங்களை அவன் உபயோகித்ததில்லை. சமயம் கிடைக்காதபோது இவ்வித சிறு ஜெபங்கள் உபயோகிக்கலாம். வேலையின் மத்தியிலும் இவ்வித ஜெபம் செய்வது நமக்குக் கிடைத்த ஒரு சுயாதீனம். ராஜா அவன் வேண்டிக்கொண்டதற்கு இணங்கினார். எருசலேமுக்கு அவன் பண்ணும் பிரயாணத்துக்கு அநுகூலமாக ராஜாவிடமிருந்து இராணுவச் சேவைக்காரரையும் சேனைவீரரையும் ராஜாவின் கடிதங்களையும் பெற்றுக்கொண்டான். அவன் விசுவாசமும் ஜெபசிந்தையுமுள்ளவனாயிருந்தபோதிலும், பிரயாணத்தில் தேவையான பாதுகாவலர்களையும் சவதரித்துக்கொண்டான்.

பிரயாணம் 2: 10, 11. சுகத்தோடாய் எருசலேம் போய்ச் சேர்ந்தான். அவன் பாழான நிலைமை அவனுக்கு மிகுந்த துக்கத்தைக் கொடுத்தது. அதிலிருந்தவர்கள் அதை உணராமல் திருப்திகரமாயிருந்தது, அவன் துக்கத்தை அதிகப்படுத்திற்று.

வேலைக்கு ஆயத்தம் 2: 12—20. மூன்று நாளாக நெகேமியா தனிமையாக இருந்தான். பிரயாணக் களைப்பினால் மூன்று நாள் இளைப்பாறியிருக்கலாம். ஆனால் அதே சமயத்தில் அக்காட்டையும் அதின் ஜனங்களையும் பற்றிய கவலைக்கிடமான சங்கதிகளைக் கேட்டும் கவனித்தும் என்னையிட்டுக்கொண்டும் ஜெபம்பண்ணிக்கொண்டுமிருந்திருப்பான். தன் நோக்கத்தை வெளியிடாமல் இரவில் கவனித்து சோதனை செய்து வேலையை ஆரம்பிக்கிறான். ஏனெனில் தான் எதிர்பார்த்தபடி தனக்குத் தடைசெய்பவர்களுடைய சூழ்ச்சி சிக்கிக்கொள்ளாதபடி அப்படிச் செய்தான். அந்த இரவில் அவன் தனித்துப் போய் சவாரி செய்து போனதில் அதின் பாழான காட்சியைப் பார்த்து அவனுக்குள் ஆவியின் அனல் மூண்டது. ஒவ்வொரு கிறிஸ்தவனும் இப்படியே சுற்றிப் பார்த்து மெய்யாகவே மனிதர் தன் மையில் சாத்தான் என்ன பாழ்க்கடிப்புகளை உண்டாக்கினான் என்பதைக் கவனித்து 'இத்தீங்கை ஒழிக்க என் வல்லமை முழுவதையும் பிரயோகிப்பேன், தேவனே எனக்கு உதவிசெய்யும்' என்று சொல்லவேண்டும். விபா

திரை அறிந்துகொள்வது அவசியம். சுகம் எப்படி அப்போதைய நிலைமையை நன்றாய் அறிந்தபின் அவன் ஆசாரியர்களையும் பிரபுக்களையும், அதிகாரிகளையும் அழைத்து 'வாருங்கள், அலங்கத்தைக் கட்டுவோம்' என்றான். எல்லாரும் அவனுக்கு இணங்கினார்கள். ஒருவனுடைய வல்லமை மற்றவர்களை அனல்மூட்டி எழுப்பிவிடுமென்று அறிந்துகொள். எதிரிகள் உடனே தடைசெய்ய எழும்பினார்கள். எருசலேமைச் சுற்றிக் குடியிருந்த கலப்பும் விக்கிரக ஆராதனைக்காரருமான ஜாதிகளே தடைபண்ணினவர்கள். ஓரோனியனான சன்பல்லாத்தும் அம்மோனியனான தொபியாவும் அரபியனான கேஷேமும் இவர்களின் தலைவர்கள். இவர்கள் மூவரும் ஒன்றாய் ஐக்கியப்பட்டு எதிர்த்து உழைத்தார்கள். 4: 1—3. 6: 1, 2, 5, 12, 14. யூதர்கள்மேல் இவர்களுக்கிருந்த பகை பலவிதமாய் வெளிப்பட்டது. வேலை ஆரம்பித்ததினிமித்தம் பரியாசம்பண்ணி நிந்தித்தார்கள். வேலை பெரியது, கட்டுகிறவர்களும் கொஞ்சம், ஏதுக்களும் கொஞ்சம் என்றார்கள். நெகேமியா கர்த்தருக்குள் தன்னைத் திடப்படுத்திக்கொண்டு அலங்கத்தைக் கட்டும் வேலையை நடப்பித்தான். 2: 20.

வேலை துவக்குதல். 3 அதி. வேலைசெய்ய ஆயத்தப்பட்டவர்களின் அட்டவணை இந்த அதிகாரத்தில் வருகிறது. பிரபுக்கள் குலத்து ஸ்திரீகளும் கூடச்சேர்ந்து கட்டினார்கள். 3: 12: நுகத்தைக் கழுத்தில் வைக்க விடாமல் பின்வாங்கும் காளைகளைப்போல, சில ஊரின் பிரபுக்கள் வேலையினின்று பின்வாங்கிக்கொண்டார்கள். சாதாரண ஜனங்கள் தங்களிஷ்டப்படி செய்தால் செய்யட்டும் இல்லாவிட்டால் இருக்கட்டும் என்று அப்பிரபுக்கள் தங்கள் மட்டுக்குத் தூர இருந்துகொண்டார்கள். இப்படிப்பட்டவர்களைத் தவிர பற்பல வயதும் அந்தஸ்துமுள்ள மற்றெல்லாரும் ஏகோபித்து எழும்பிக் கட்டினார்கள். வேலை செய்ய ஜனங்களுக்கு மனமுண்டாயிருந்தால் எருசலேமின் அலங்கத்தைக் கட்ட அக்கிராசியின் முழுப்பெலமும் உபயோகிக்கப்பட்டது. தற்கால ஜீவனுள்ள சபையைப் பற்றி இவ்விதம் உண்மை சொல்லப்படுமானால் ஆயிரவருஷ அரசாட்சி சமீப வாசலில் வந்திருக்கும்.

தடை. 4 அதி.—6: 14. அலங்கம் அதிகமாய் உயர எழும்ப ஆரம்பித்தவுடன் தடங்கல்களும் அதிகரித்தன. தடைசெய்கிறவர்களினிமித்தம் அமிழ்ந்துபோய் நாங்கள் கட்டமுடியாது என்றார்கள் (4: 10). கர்த்தரை நினைத்துக்கொள்ளுங்கள் (4: 14) என்று நெகேமியா சொல்லி ஜனங்களைத் தைரியப்படுத்தினான். வேலை நடந்தது. பின்பு நெகேமியா ஜனங்களுக்கிருந்த கஷ்டங்களையும் குறைகளையும் விசாரித்தபடியே தன் மனதைச் செலுத்தினான். ஐசுவரியவான்கள் பஞ்சகாலத்தில் ஏழைகளுக்குத் தானியத்தைக் கொடுத்து அதற்குப் பதிலாக அவர்களுடைய உரிமைகளை அபகரித்து அடிமைகளாக்கிக்கொண்டதினிமித்தம் நெகேமியா அவர்களைக் கண்டித்து அவ்வுரிமைகளை உடனே திரும்பக் கொடுத்து

விடவேண்டுமென்று கேட்டுக்கொண்டான். அதே பிரகாரம் பிரபுக்களும் அதிகாரிகளும் சம்மதித்து ஒரு கண்ணியமான முடிவுசெய்தார்கள். நெகேமியா எருசலேம் ஜனங்களை ஆளும் அதிகாரியாயிருந்து காரியங்களை நடத்துகிறானென்று சத்துருக்கள் அறிந்து அவனைத் தங்கள் வசப்படுத்தப் பார்த்தார்கள். அவனோடு தனித்துப் பேசும்படியாக நாலுதடவை அவனை வெளியே கூப்பிட்டார்கள். ஆனால் அவன் ஒவ்வொரு தடவையிலும் மறுத்துவிட்டான் (6: 4). அவனுடைய இருதயத்தின் உத்தமத்தினாலும் தேவனுடைய வேலைக்காக அவனுக்கிருந்த மாயமற்ற ஊக்கத்தினாலும் அவன்மீது அவர்கள் செய்த சதியோசனை ஒன்றும் பலிக்கவில்லை.

வேலை முடிவு. 6: 15—7 அதி. அலங்கம் கட்டிமுடிந்தவுடன் அதைக் கட்டினவர்களும் அவர்களின் சத்துருக்களும் கூட அவ்வேலை தேவனால் நடைபெற்றது என்று ஒப்புக்கொள்ளவேண்டியதாயிற்று (6: 16). நகரத்தைக் காவல்காக்க காவலாளர்களும் ஜாமங்காக்கிறவர்களும் நியமிக்கப்பட்டார்கள். நெகேமியா ஜனங்களைத் தொகையிட்டு வம்ச வரிசைப்படி எழுதினான். இத்தொகை எஸ்றாவின் புஸ்தகத்திலுள்ள வம்ச அட்டவணைக்கு ஒத்திருந்தது. இதன்பின் பிரபுக்களும ஏழைகளும் வேலைக்கென்று உற்சாகமாய்க் காணிக்கை செலுத்தினார்கள். 7: 70-72.

II. தேவனையும் அவருடைய வசனத்தையும்பற்றிய எழுப்புதல். 8 அதி—12: 26. இப்பாகத்தில் மறுபடியும் எஸ்றா முக்கியமானவனாக வெளிப்படுகிறான். இவ்வாகமத்தின் முதற்பாகத்தில் எஸ்றா எருசலேமில் இல்லாததாகத் தெரிகிறது. அல்லது எஸ்றாவின் புஸ்தகத்தின் கடைசி அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ள சம்பவத்துக்குப்பின் எஸ்றா நகரத்தை விட்டு வெளியேறியிருக்கலாம். நியாயப்பிரமாணச் சுருளைக் கொண்டுவந்து வாசிக்கும்படி ஜனங்கள் எஸ்றாவை அழைத்தார்கள். (8: 3, 9). எருசலேமின் வீதியில் ஆகாய வெளியிலே மரத்தினால் செய்யப்பட்ட ஒரு பிரசங்க பீடத்தின்மேல் நின்று தேவனுடைய நியாயப்பிரமாண புஸ்தகத்திலுள்ளவைகளைத் தெளிவாக வாசித்து அர்த்தஞ்சொன்னான். அதாவது எபிரேய வசனங்களைக் கல்தேய பாஷைக்குத் திருப்பி ஜனங்களுக்கு விளங்கப்பண்ணினான். நியாயப்பிரமாண வார்த்தைகளைக் கேட்டபொழுது ஜனங்கள் அழுதார்கள். ஆனால் அந்நாள் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருக்கவேண்டிய பெரிய விருந்து நாளானதால், அழுகிறது தகாது அழவேண்டாம் என்று நெகேமியாவும் எஸ்றாவும் லேவியரும் ஜனங்களுக்குச் சொல்லி அவர்களை யமர்த்தி சந்தோஷம் கொண்டாடும்படி அனுப்பிவிட்டார்கள். (8: 12). பண்டிகைக்குப்பின்பு உபவாசம் கொண்டாடினார்கள். (அதி. 9). ஜெபம் பண்ணி பாவ அறிக்கைசெய்தார்கள். ஜனங்கள் தேவனோடு உடன்படிக்கைபண்ணி அதை எழுதி முத்திரைபோட்டார்கள். அவ்வுடன்படிக்கைக்கு எல்லாரும் சம்மதித்தார்கள். உடன்படிக்கையின் நிபந்தனைகளும் அதில் முத்திரைபோட்டவர்களின் பெயர்களும 10-ம் அதிகாரத்தில்



வருகின்றன. அதி. 11—12: 26. வரையுமுள்ள பாகத்தில் வரும் பெயர்களின் அட்டவணை அதிக முக்கியமானதல்லவென்றாலும் யூதஜாதியாரின் சரித்திரத் தொடர்ச்சிக்கு அவசியமானது.

III. ஆராதனை. 12: 27—13 அதி. அலங்கம் கட்டிமுடிந்து 13 வருஷத்திற்குப்பின் அதற்குப் பிரதிஷ்டை கொண்டாடப்பட்டது. 12: 27—43. இவ்வாறு பிந்திக் கொண்டாடினதற்குக் காரணம் சொல்லப்படவில்லை. பிரதிஷ்டை சமயத்தில் எக்காளங்கள் ஊதப்பட்டன. பாடகர் உரத்த சத்தமாய்ப் பாடினார்கள். பலிகள் செலுத்தப்பட்டன. எருசலேமின் ஸ்திரீகளும் பிள்ளைகளும்கூடக் களிகூர்ந்தார்கள். 12: 43. பின்பு நெகேமியா ஆலய பணிவிடை ஆராதனை ஒழுங்குகளை மறுபடியும் ஏற்படுத்தினான் 12: 44—47. பின்பு அவன் 12 வருஷங்களாக எருசலேமை விட்டு பாரசீக ராஜதானிக்குப் போயிருந்தான். மறுபடியும் எருசலேமுக்கு வந்து ஜனங்கள் ஆவிக்குரிய விஷயத்தில் வெகு தாழ்வான நிலைமையிலிருக்கிறதாகக் கண்டான். (அதி. 13.) ஜனங்களிடத்தில் காணப்பட்ட மீறுதல்களென்னவெனில் அஞ்ஞானக்கலியாணம், ஓய்வுநாளைப் பரிசுத்தக் குலைச்சலாக்குதல், ஆலய அவமதிப்பு. முதல் மீறுதல் பிரதான ஆசாரியனுடைய குடும்பத்திலும காணப்பட்டது. எருசலேம் நகரத்தில் ஓய்வுநாளில வியாபாரம் நடந்தது. நாட்டுப்புறங்களிலும் விவசாய வேலையும திராட்சை ஆலைகளில் வேலையும் ஓய்வுநாளில் நடைபெற்றன. தசம பாகம் கொடுப்பது ஒழுங்கில்லை. கர்த்தருடைய ஆலயம கர்த்தருக்குப் பரிசுத்தமானது என்ற எண்ணமகூட இல்லாமல்போயிற்று. ஆலயத்தின் ஒரு பாகம் பிரதான ஆசாரியனின் உத்தரவுப்படி ஒரு வீட்டு அறையாக உபயோகப்படுத்தப்பட்டது. நெகேமியாவின் கண்டிப்பினால் தசம பாகக் காணிக்கையை ஒழுங்காய்ச் செலுத்த ஏற்பாடுசெய்து ஓய்வுநாளில் செய்யும வியாபாரம் தொழில் வேலைகளை நிறுத்தி ஆசாரியத்துவத்தையும் சுத்திகரித்தான். தேவனுக்கு உத்தமமும் உண்மையுமாய் ஊழியஞ்செய்த நெகேமியாவின் சரித்திரம இதற்குப்பின் சொல்லப்படவில்லை.

குறிப்புகள். பழையேற்பாட்டின் காலத்திலும் புதியேற்பாட்டின் காலத்திலுமுள்ள மோசே, யோசுவா, நியாயாதிபதிகள், யோசியா, எசேக்கியா, யோவான் ஸ்நானகன், நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, அப்போஸ்தலர் ஆகிய இவர்கள் காலங்களில் ஆவிக்குரிய எழுப்புதல்களைக் காண்கிறோம். சாகப்போகிற நிலைமையிலிருக்கும்போதுதான் ஒரு பெரிய எழுப்புதல் உண்டாகிறது. நாமும் ஒரு பெரிய எழுப்புதல் தோன்றப்போகும் காலத்திலிருக்கிறோமென்று நினைக்கிறதில்லையா? எருசலேமின் வாசல்கள் சுட்டெரிக்கப்பட்டதும் அதின் அலங்கங்கள் பாழாயிருப்பதும் தேவனுடைய ஆலயம் சுற்றிலுமுள்ளவர்களுக்கு நிந்தையாயிருப்பதுமான காலத்தில அந்நகரத்தின் [illegible] அதிகாரியாயிருந்த [illegible] தேவ பணி

விடைக்காரனை செலேகேமியாவின் ஜீவியம் வழியம், தேவ பணிவிடைக்காரருக்கு எவ்வளவு சிறந்த மாதிரி! இவ்வாகமம் வாசித்து தியானித்து மனதில் பதியும்படியாக அறிந்திருக்கவேண்டியது.

சந்தா

| | Rs | A. | P. |
|---|---|---|---|
| Mr. M. Vedanayagam, Gobi-chettipalayam | 0 | 9 | 0 |
| Miss Daniels, Nilghiris | 4 | 2 | 0 |
| Mr. V. James, Kallakurichi | 2 | 6 | 0 |
| ,, Gnanakan, S. Thomas Mount | | 7 | 0 |
| ,, D. akyanadan (C. B. A.) | 1 | 0 | 6 |
| ,, P akianathen, Ceylon | 1 | 6 | 0 |
| ,, I. Manikam Ceylon | 0 | 11 | 0 |
| ,, A D. Chinnappa illai, Sathiamangalam | | 7 | 0 |
| Rev. S. Isaac, Cumbum | 0 | 7 | 0 |
| ,, W. S utherland | 9 | 12 | 0 |
| ,, Samuel Joseph | 3 | 12 | 0 |
| Mrs. S. T Chinnappa, Jaffna | 0 | 7 | 0 |
| Mr. D. oseph, Pasumalai | 0 | 7 | 0 |
| Miss W E unhill, Bangalore | 1 | 0 | 0 |
| Mr. Y. Jacob Catechist | 0 | 7 | 0 |
| ,, G. D. Rhennis, Balangadu | 0 | 8 | 0 |
| ,, G. Gnanapragasam, ada-thakulam | 0 | 7 | 0 |
| ,, S amuel, Tiruvadi | 0 | 7 | 0 |
| ,, R A Petor illai | 0 | 4 | 0 |
| ,, J. David Pillai N. Tebal | 0 | 10 | 0 |
| Mrs. T. R othinayagam | 0 | 7 | 0 |
| ,, Kate David, Palamcottah | 0 | 4 | 0 |
| ,, Yesuadial avid | 0 | 4 | 0 |
| Mr. V. S. Chelliah, Salem | 0 | 7 | 0 |
| ,, Matthew Antony, Bethel | 0 | 7 | 0 |
| Mrs Cox, Tituvilei | 0 | 15 | 0 |
| Mr. J. D akianathan, Ceylon | 0 | 14 | |
| Rev. D. Yesuadian Rosanagaram | | 8 | 0 |
| ,, A. Paramanandam Bangalore | 0 | 15 | 0 |
| Mr M. David, Madras | 0 | 10 | 0 |
| ,, J. S. Gnanamuthu, Ceylon | 0 | 8 | 0 |
| Ensign Yudha Daksha, Ceylon | 0 | 8 | 0 |
| Mr. M. D. Adaikalam Nadar | 0 | 7 | 0 |
| Mrs Appasami, Palamcottah | 0 | 8 | 0 |
| Mr. V. E Jesunesan, Rangoon (C. B. A) | 1 | 0 | 0 |
| rs. Walker | 4 | 0 | 0 |
| Mr M. Pakianathen | 0 | 8 | 0 |
| Miss G. Thomas, Coimbatore | 0 | 7 | 0 |
| Rev P. Jacob, Jubbalpore | 0 | 8 | 0 |
| Mr. R. Pakianathen, Ceylon | 1 | 11 | 0 |
| ,, S. Joseph | 0 | 7 | 0 |
| ,, E evasugunam | 1 | 0 | 0 |
| ,, Ratnam Paul, Mettupalayam | 0 | 7 | 0 |
| ,, G. S Nathaniel, Amaravilei | 0 | 8 | 0 |
| ,, G. S. evadason | 0 | 8 | 0 |
| ,, R Vethamuthu, Karur | 0 | 8 | 0 |
| ,, S. D. Lazarus Nazareth (C. B. A.) | 1 | 0 | 0 |
| ,, J. S. Asirvatham (C. B. A) | 6 | 0 | 0 |
| Rev James Rowland | 1 | 2 | 0 |
| Mrs Annal John, alamcottah | 0 | 4 | 9 |
| Miss S. Loomis, Vellore | 0 | 8 | 0 |
| Mr Z. Paul | 0 | 7 | 0 |
| ,, A. Gnanamoni Philippuram | 5 | 0 | 0 |
| Mrs. M. S hristian, Ceylon | 1 | 8 | 0 |
| Miss F Warbey, Pondicherry | 5 | 10 | 0 |
| Mr. A. J. Manuel, Solegawa | 1 | 0 | 0 |
| ,, . Rajaratnam, Suraman-galam | 0 | 7 | 0 |
| Rev. S. Masillamoni, Kumba-konam | 6 | 7 | 0 |

Printed at the Palamcottah Printing Press, Palamcottah and published by the Christian Brotherhood Association, Tinnevelly.

July 1918. Registered No. M. 153

# The Water of Life
# ஜீவத்தண்ணீர்

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்." யோவான் 7: 38.

Vol. XIX ஜூலை 1918

## யோபு

### 2-ம் அதிகாரம்

மறுபடியும் பரலோகத்தில் சங்கம் கூடினது, சாத்தானும் அதில் வந்திருந்தான். உன்னதமானவர் தமது தாசனைக் குறித்து முன்போலவே நல்வசனம் கூறினதோடு அவன் போராட்டத்தில் ஜெயங்கொண்டதாகவும் தெரிவித்தார். சாத்தானோ தான் கையாடக்கூடியவைகளைக் கர்த்தர் மட்டுப்படுத்தினபடியால் தன் நோக்கம் நிறைவேறவில்லையென்றும், யோபின் ஆஸ்திகளெல்லாம் அழிந்தும் அவன் ஜெயங்கொண்டபோதிலும் அதினால் அவனுடைய உத்தமம் விளங்காது என்றும் அவனுடைய சொந்த ஜீவன் இன்னும் தொடப்படாதபடியால் அவன் தன் உத்தமத்திலே நிற்கிறான் அவனுடைய சரீரத்தைத் தொட்டால் அவன் தேவனை மறுதலிப்பான் என்றும் சாத்தான் சொன்னான். மாம்சத்தை முக்கியப்படுத்துவதே சாத்தானுடைய சோதனை. கர்த்தரை நம்புகிற ஆத்துமாவுக்கு இதுவே போதுமான பிக்ஷை. இதே சோதனை அநேக நாற்றாண்டுகளுக்குப் பின் வனாந்தரத்தில் தனித்திருந்தவருக்கு உண்டாயிற்று. பொல்லாங்கன் எப்போதும் மனுஷனைக் குறித்து மிகுந்த குறைவான எண்ணமுள்ளவனாகவேயிருக்கிறான். மனுஷன் அந்தக் குறைவான எண்ணத்திற்குத் தன்னைத் தாழ்த்தும்போது சாத்தானுடைய காரியம் ஜெயமாகிறது. என்றாலும் தேவன் சாத்தானுடைய வல்லமையை இன்னும் மட்டுப்படுத்துகிறதாகப் பார்க்கலாம்.

சத்துரு புறப்பட்டுப்போய் தன் கிஷ்டே வேலையை ஆரம்பிக்கிறான் அதின் பலனாகத் தேவனுடைய மனுஷன் சரீரத்தில் சொல்ல முடியாத கீர்ப்பந்த நிலைமையை அநுபவிக்கிறான், அவனுடைய சரீரத்தின் வேதனை

களின் மத்தியில் முன் நடந்த சம்பவங்களிலுண்டான இருதயதுக்கம் இன்னும் அவனிலிருக்கிறது என்பதை மறந்துபோகக்கூடாது. இவ்விரண்டும் சேர்ந்து அவனை மிகுந்த அந்தகாரத்துக்குட்படுத்தினது. இதற்கு முன் நடந்த சம்பவங்களோடுகூட அவனுடைய மனைவியின் அனுதாபம் கூட்டப்படுகிறது. ஏன் அதை அனுதாபம் என்று சொல்லுகிறேன் என்றால், அன்புக்குரிய ஓர் ஆள் அடிபட்டு நொறுக்கப்பட்டு வாதிக்கப்படுகிறதைப் பார்த்துக்கொண்டிருக்கிற ஸ்திரீ இவ்விதம் பேசுகிறதை அனுபவசாலிகள் குற்றப்படுத்தப்பார்த்தார்கள். மெய்தான் அவளுடைய ஆலோசனை திவ்ய நடத்துதலுள்ளதல்ல. தேவனை மறுதலித்து ஜீவனை மாய்க்கச் சொல்லுகிறாள். ஓர் சத்துரு இவ்விதம் சொன்னால் மனவருத்தத்தைக் கொடுக்கும். நேச மனைவி சொல்லும்போது எவ்வளவு மிகுந்த மனவருத்தத்தைக் கொடுக்கும். யோபோ மனைவியோடு உருக்கமாய்ப் பேசுகிறான். தேவனைப்பற்றும் நம்பிக்கையை விடவில்லை. சத்துரு ஓடிப்போகிறான். தான் செய்யக்கூடியதெல்லாம் செய்துவிட்டான். அவனுடைய வாக்குமூலம் பொய்யென்று ரூபகாரமாகிவிட்டது. யோபுக்குண்டான துக்கங்களுக்கெல்லாம் காரணம் இன்னதென்பது நமக்கு விளங்கத்தக்கதாக எழுதியிருக்கிறது. யோபுக்காவது அவனுடைய சிநேகிதருக்காவது யோபைப்பற்றிப் பரலோகத்தில் நடந்த போராட்டம் தெரியமாட்டாது. யோபின் பயங்கர நாட்கள் வச. 1—13ல் நடந்தவைகளே. ஒரு மனுஷனுக்குத் துன்பத்தின்மேல் துன்பம் வரும்போது மற்ற மனுஷர் அவன்மேல் பெருமை பாராட்டுகிறார்கள். இவ்விதக் கொடிய துன்பங்களுக்குப் பின்னுண்டான அமைதல் மறுபடியும் போராட்டத்துக்கு இடமாகிறது. யோபு தனிமைக்குள் வந்துவிட்டான். அவனுடைய சிநேகிதர் வருகிறார்கள். மூவர் பேர்தான் இவ்விடத்தில் சொல்லியிருக்கிறது. ஆனால் எலிகூவும் கூடவேயிருக்கிறான். மனதில் ஒரு கேள்வியுண்டாகிறது. யோபின் வாழ்வில் பங்கு பெற்றவர்களெல்லாம் எங்கே? செழிப்பான காலங்களில் கூடுகிறவர்கள் தோழர். ஆனால் சிநேகிதரோ தாழ்வான காலத்திலும் கூடுவார்கள். மெய்தான், சத்துருவாகிய சாத்தானுடைய சோதனைகளைப் பார்க்கிலும் இச்சிநேகிதராலேயே யோபு மிகுந்த துன்பமடைந்தான். என்றாலும் அவர்களிடத்தில் காணப்பட்ட நற்குணத்தைத் தள்ளிவிடக்கூடாது. அவர்கள் எல்லாரும் அவனைப் பார்க்க வந்ததே மெச்சிக்கொள்ளப்படத்தக்கது. மேலும் ஏழுநாள் இரவு, பகல் அவனோடு மௌனமாயிருந்திருக்கிறார்கள். மிகுதியான துக்கம் நிறைந்திருக்கும்போது சிநேகிதர் மௌனமாயிருப்பதே அவர்களுடைய சிநேகத்தின் மிகுதியைக் காட்டும். மேலும் அவர்கள் தங்கள் பேச்சினால் அவனுக்குத் துக்கத்தையுண்டாக்கினபோதிலும் அவனைப்பற்றித் தங்களுக்கிருந்த அபிப்பிராயங்களைப் புறத்தியில் மற்றவர்களோடு பழித்துப் பேசாமல் அவன் முன்னிலையிலேயே பேசினது மெச்சிக்கொள்ளப்படத்தக்கது.



சோதனை பலவிதமானது. தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாக சோதனைக்காரனாகிய சத்துரு பல தந்திரமான வேஷங்கள் போடுகிறான். மோக்ஷப் பிரயாணியாகிய கிறிஸ்தியான் பள்ளத்தாக்கிலிருக்கும்போது தூஷித்துக்கொண்டு வந்தான். அப்போது அவனைச் சத்துரு என்று கண்டு அவனை ஜெயிக்கலாம். ஆனால் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத்தரித்து தேவனுடைய பிள்ளைகளிடத்தில் இனிமையான வாக்குத்தத்தங்களோடு வரும்போது அவனை இலகுவாய்க் கண்டுகொள்ள முடியவில்லை. இவ்விதமாய் நமக்கு நேரிடக்கூடிய மோசங்களை விலக்கும் முறை யென்னவென்றால் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிடத்திலும் அவருடைய திருவசனத்திலும் நாம் நெருங்கி ஜீவிக்கவேண்டும். இதுதான் நமக்குக் கிடைத்திருக்கிற அடைக்கலம்.

## 3-ம் அதிகாரம்

யோபின் முதல் பிரசங்கத்தின் ஆரம்பம் மௌனமாயிருந்த நாட்களில் அவனுடைய ஆத்தும நிலைமை இன்ன பிரகாரமிருந்ததென்பதைக் காட்டுகிறது. ஓர் ஆத்துமா இடிசென்று நிர்ப்பந்த நிலைமைக்குட்படும்போது கலக்கமடைகிறதென்பதையறிகிறோம். ஆகையினால் யோபு தன் வாயைத் திறந்து தான் பிறந்தநாளைச் சபிக்கிறான். தன் ஜீவனைப்பற்றிய வெறுப்பு, மரணத்தால் கிடைக்கும் இளைப்பாறுதலை வாஞ்சித்து மரணத்தைக் கோருதல் இவைகள்தான் யோபின் பிரசங்க சாரம். ஆனால் அவன் ஆக மனக்கலக்கங்கொண்டவன் என்பதைக் காட்டுகிறது. தன் ஜீவியத்தில் திவ்ய நடத்துதலையிழந்ததாக எண்ணினான். பாரம் அமைந்தவிதத் தன் இருதயத்தின் அங்கலாய்ப்பை வெளியிடும் நோக்கம்தான் ஜீவனோடிருந்தால் பயனென்ன என்பதுபோல் பேச ஆரம்பிக்கிறான். நான் ஏன் தண்டிக்கப்படவேண்டும் என்பது யோபின் கேள்வியல்ல. இவ்விதக் கசப்பும் அந்தகாரமுமான ஜீவியம் இருக்கக் காரணமென்ன என்பதுதான் அவனுடைய கேள்வி. தான் தண்டிக்கப்பட்டவனானால் கைவிடப்பட்டவனென்றாகும். கைவிடப்படவில்லையானால் தனக்கு நேரிட்டிருக்கிறது அநியாயம். தனக்கு நேரிட்டிருக்கிறது தண்டனைதான் என்ற எண்ணம் அவனுக்குள்ளிருக்குமானால், தன்னிடத்தில் அல்லது தேவனிடத்தில் இதற்குக் காரணம் என்னவிருக்கிறது என்று ஆராய முயற்சிப்பான். தன்னுடைய அக்கிரமத்தினால், மனுஷசுபாவ பாவத்தன்மையின் காரணத் தன்னையறியாமல் தான் கறைப்பட்டினால் தன்னிலேயே இதற்கு மூலாதாரம் இருக்கலாமென்ற எண்ணம் அவன் மனதில் படவேயில்லை. இதற்கு நேரெதிரிடையாக, தான் தன் ஜீவியத்தில் ஒரு விழிப்பாயிருந்து தேவனுக்குமுன்பாக உத்தம ஜீவியம்செய்து வந்தவன் என்ற நிச்சயமானது இவ்வித துன்பம் நேரிட்டபோது அவனைப் பிரமிக்கப்பண்ணிற்று. இவ்வித துன்பத்துக்குத் தேவனே காரணர் என்று அவரைக் குற்றஞ்சாட்டவும் அவன் துணியவில்லை.

துன்பத்தின் உச்ச நிலைமையை இவ்வதிகாரம் விளக்குகிறது. நம்பிக்கையின் வாசல் அணுவேனும் இல்லை. இருதயம் நொறுங்குண்டு போயிற்று. என்றாலும் துன்பத்தின் திட்டமான காரணம் கண்டுபிடிக்கப்பட்டதாயில்லை. யோபு தன் உத்தமத்தைப் பிடித்துக்கொள்ளுகிறான். தேவனைவிட்டு விலகாமலுமிருக்கிறான். இதினால் அவன் தன் வார்த்தைகளில் குற்றமற்றவன் என்று தீர்க்கிறதில்லை. ஆனால் அவன் பேச்சில் காணப்பட்ட குற்றம் அவனுடைய பெலவீனமென்றே சொல்லவேண்டும். அவனுடைய ஆவியில் அறிவீனத்தாலுண்டாகிற அந்தகாரத்தின் நிழல் காணப்படுகிறது. ஆனால் அவைகளால் அவன் இருதயம் கறைப்படவில்லை. அவன் பேசின வார்த்தைகளில் அநேக சமமானவை தீர்க்கதரிசிகளாலும் பரிசுத்தவான்களாலும் இயேசுகிறிஸ்துவாலும் எடுத்துக்கூறப்படுகின்றன.

### 4-ம் அதிகாரம்

யோபுக்குண்டான மூன்றாவது துன்பம். அவன் சிநேகிதருடைய இரக்கமில்லாத நிந்தைமொழிகளாலும், அவனுடைய ஜீவியத்தைக் குறித்த சமுசயமான வார்த்தைகளாலும், நியாயமில்லாத குற்றஞ்சாட்டுதலாலும் உண்டானது. அவர்களுடைய நியாயதோரணை என்னவென்றால், இவ்வுலக ஜீவியத்தில் தேவன் நீதிபரர், பாவத்துக்கும் தண்டனைக்கும் சம்பந்தமுண்டு. யோபின் பாவமே அவன் துன்பத்துக்குக் காரணம் என்பதே. பாவத்துக்கும் துன்பத்துக்கும் சம்பந்தமுண்டென்று அவர்கள் சாதித்தது சரியே. நமது தற்கால ஜீவியத்தை ஆளுகிறவர் தேவனே. அந்த ஜீவியத்தில் தேவனுடைய நீதி நியாயத்தை அறிந்துகொள்ளாதவன் குருடன். நமது தற்கால சரித்திரத்திலேயே உலகத்தில் தேவனுடைய நியாயத்தீர்ப்பு நடந்துகொண்டேயிருக்கிறதென்று நம்பினால் மாத்திரம் கடைசி நியாயத்தீர்ப்பைப்பற்றிய விசுவாசம் நம்மில் புத்தி பூர்வமாய் இருக்கக்கூடும். இனிவரும் ஜீவன் ஓர் புது ஆரம்பமான ஜீவியமல்ல. தற்கால ஜீவியத்தின் முடிவாம். நாம் இடையில் இல்லாமற்போய் மறுபடியும் தோன்றுகிறதில்லை. இவ்வுலகத்தில் பாவம் அழிவுக்குக் காரணமாயிரா விட்டால் நரகம் இல்லையென்றுதான் சொலலவேண்டும். அதே பிரகாரம் நீதியின் பலனாக ரட்சிப்பும் சந்தோஷமும் இவ்வுலகத்தில் கிடைக்காவிட்டால் மோக்ஷம் இல்லையென்றுதான் சொல்லவேண்டும். வேதாகமத்தில் சொல்லப்படுகிற தேவன், இந்த உலகம் முடிவடைந்தபின்தான் வல்லமையோடு எழும்புகிறவரல்ல. அவர் ஆதிமுதல் அந்தம் வரையும் இடையறாமல் ஜீவனுள்ள தேவனாகவேயிருக்கிறார். நியாயந்தீர்க்கிறதிலும் இவ்வுலகத்தில் சந்தோஷத்தைப் பலனாக அளிக்கிறதிலும், 'மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்' என்றும் தமது பிரமாணத்தை உறுதிப்படுத்துகிறார். ஆகையால் யோபின் சிநேகிதர் பேசின நியாய தோரணையில் சத்தியம் இருக்கிறது. ஆனால் இந்தப் பிரமாணத்தை மட்டுக்கு மிஞ்சி யோபின் விஷயத்தில் பேசினார்கள். சன்மார்க்கத்துக்குப் பரீக்ஷையாகவும் பாடுகள் நேரிடலாம் என்பதையும் அல்லது ஓர் பக்தனின் ஜீவியத்தில் மறைந்திருக்கும் குறைவுகளை வெளியாக்கவும் அவைகள் அனுப்பப்படலாம் என்பதையும் மறந்துவிட்டார்கள்.

### 5-ம் அதி. 1—16.

ஒவ்வொரு சம்பாஷணையிலும் முதல் முதல் பேசுகிறவன் எலிப்பாஸ். அவன் மூவரில் மூத்தவனாயிருக்கவேண்டும். அவன் சாவதானமாயும் நிதானமாயும் பேசுகிறான். இவனுடைய ஆரம்ப வார்த்தைகள் சூடானவைகளாயிருந்தும் சற்று அனுதாபம் காட்டுகிறது. அவன் யோபினிடத்தில் காணப்பட்ட கோபத்தைக் கண்டிக்கிறான். அது சரியே. பரிசுத்த சிருஷ்டிகருக்கு முன் சிருஷ்டிகள் பாவமுள்ளவைகள் என்று உறுதிப்படுத்துகிறான். பாவத்தினால் மனுஷருக்குத் துக்கம் உண்டாகும் என்றும் மனுஷனுக்கு அடைக்கலம் தேவனுடைய உருக்க இரக்கத்தில்தான் உண்டென்றும் சொல்வது சரியே. துன்பமே மனுஷனை தேவனிடத்தில் வழி நடத்தும் கருவியென்று சொல்வதும் சரியே. ஆனால் துன்பமானது பாவத்தை உணர்த்துவதோடுகூட, மனுஷருடைய தன்மையைச் சுத்திகரிக்கும் கருவியென்பதை மறந்துவிட்டான். மனுஷருடைய உண்மையைப் பரீட்சிக்கவும், ஜீவனாகிலும் மரணமாகிலும், நிகழ்காரியங்களானாலும் வருங்காரியங்களானாலும் பக்தனை தேவனைப்பற்றும் அன்பைவிட்டுப் பிரிக்காது என்னும் சத்தியத்தைத் துன்பப்படுகிறவனுக்கும் துன்பத்தைக் கவனிக்கிற மற்றவர்களுக்கும் மனதிற் படும்படியாகத் துன்பம் அனுப்பப்படும் என்பதையும் மறந்துவிட்டான். இதுதான் யோபுக்கு நேரிட்ட துன்பத்தின் முக்கிய நோக்கம். 'யோபு விருதாவாகவா தேவனுக்குப் பயந்து நடக்கிறான்?' என்று கேட்கப்பட்ட கேள்வியின் சம்பந்தமாய் பரலோகத்தில் உண்டான சம்பாஷணையை அவன் அறியவில்லை. துன்பமானது பாவத்துக்குச் சம்பந்தமில்லாமல் தேவனுக்காக உண்டாகலாம் என்பதையும் அவன் அறியவில்லை. 'உமது நிமித்தம் நாங்கள் எந்நேரமும் கொல்லப்படுகிறோம்' என்று சங்கீதக்காரன் சொல்வதைப் பரி. பவுலப்போஸ்தலனும் எடுத்துக் கூறுகிறார்.

### 6-ம் அதி. 17—27

யோபின் பக்தியை வியந்துபேசினால் அவனுடைய துக்கம் தணியும், உற்சாகம் உண்டாகும் என்று எண்ணிப்பேசுதல் புத்தியீனம். யோபின் துக்கத்தில் அனுதாபமான சிந்தையும் உருக்கமான வார்த்தைகளும்தான் ஆறுதல்படுத்தக்கூடியது. பாவமும் தேவ தண்டனையும் சம்பந்தமுள்ளது என்று எலிப்பாஸ் பேசுவது பொது நியாயத்துக்குப் பொருந்தும். ஆனால் எல்லாருடைய விஷயத்திலும் இதுவே பிரமாணம் என்பதும் யோபின் விஷயத்தில் இதைக் குறித்து மிகவும் கண்டிப்பாய்ப் பேசுவதும் பிசகு. பொதுப் பிரமாணத்தின்படி பாவம் எந்த அளவுப்படி காணப்படுகிறதோ

அந்த அளவுப்படி தண்டனையும் இருக்குமானால் நியாயம் என்று சொல்லலாம். விசேஷித்த பாவம் காணப்படாதபோது விசேஷித்த துன்பம், பாடுகள் காணப்படுமானால் இதற்கு என்ன நியாயம் சொல்லலாம்? பாவம் யாவருக்கும் பொதுவானது. ஆனால் ஒருவன் மாத்திரம் விசேஷித்துத் தெரிந்துகொள்ளப்பட்டு அவன் விசேஷித்த துன்பம் அடையவேண்டியது அந்தப் பிரமாணத்தின்படி நியாயமாகாது. ஆகையால் துன்பம் அனுப்பப்படுகிற விசேஷித்த நோக்கம் இன்னதென்பது பேசப்படவில்லை. குணத்தைப் பரீட்சிக்கவும், பக்தனைப் பயிற்சித்துப் பரிசுத்தப்படுத்தவுமான இவ்விரு நோக்கத்தின் பலனும் மிகுதியாய்க் கிடைக்கும் என்கிற விஷயம் எலிப்பாசுக்கு விளங்கவில்லை. எலிப்பாசுடைய நியாயம் எல்லாம் இதுதான். அதாவது:— மனுஷன் பாவியானதால் பாடுபடுகிறான். அவன் பரிசுத்தனாயிருந்தாலும் பாடனுபவிப்பான் என்பது எலிப்பாசுக்கு புலப்படவில்லை. பக்தன் சோதிக்கப்பட்டால் அதிகப் பரிசுத்தனாய் விளங்குவான் என்பதும் அவன் அனுபவிக்கும் பாடுகளுக்குத் தக்கதாகப் பலனும் அதிகப்படும் என்பதும் எலிப்பாசுக்குத் தெரியவில்லை. பாடுகள் பாவத்துக்குத் தண்டனையாயும் தேவகோபத்தைக் காட்டுகிறவைகளாயுமிருக்கின்றன. என்பதே எலிப்பாசுக்குத் தெரிந்த சத்தியம். துன்பம் அன்புக்கு அடையாளமென்றும், ஓர் கிருபையின் யத்தனமென்றும், ஆசீர்வாதத்தின் மறைவு என்றும் 'கர்த்தர் தாம் நேசிக்கிறவனைச் சிட்சித்து தாம் ஏற்றுக்கொள்ளுகிற புத்திரனைக் கண்டிக்கிறார்' என்றும் எலிப்பாஸ் அறியாதே போனான்.

## திருஷ்டாந்தங்கள்

நான்காவது உவில்லியம் என்ற பிரடெரிக் ராஜா ஒருநாள் பந்தியிலிருக்கும்போது வேலைக்காரன் ஒருவன் காட்டின கவலையீனத்தினிமித்தம் கோபாவேசங்கொண்டு மூர்க்கத்தோடு அவனைக் கடிந்துகொண்டார். அவர் பக்கத்திலிருந்த எலிசபெத்து ராணி மெதுவாய் நாற்காலியை விட்டெழுந்து ஏதோ ஒன்றைக் காணாமல் தேடுகிறதுபோல் தேடிக்கொண்டிருந்தார்கள். ராஜா ராணியைப் பார்த்து, 'என்ன தேடுகிறீர்கள்?' என்று கேட்க ராணியம்மாள், 'ராஜாவைத் தேடுகிறேன்' என்றார்கள். ராஜா உடனே கோபத்தை விட்டமர்ந்து சாந்தமாய்ப் பேசினார். நம்மில் இடைக்கிடையே எழும்பும் மாம்சத்தின் சிந்தையான கோபம் நமக்குண்டாகும் வலிப்பு நோய்போலாகி கோபவேளையில் பலமுள்ளவர்களைப்போல் காணப்பட்டாலும் வரவர நமது பலத்தைக் குறைக்கும்.

ஸர் சாமுவேல் பேக்கர் என்னும் பிரபு ஜெனரல் கார்டனைப் பார்த்து, 'நீர் சௌடானுக்குக் கவர்னர் ஜெனரல் ஆவீர்' என்றார். இதைக் கேட்டதும் தளகர்த்தனுடைய முகத்தில் பெருமையும் ஆசையும் விளங்கினது. இச்சம்பவத்தில் கூடஇருந்த ஓர் சிநேகிதரிடத்தில் தளகர்த்தனானவர்



தனித்துப்போய், 'நீர் இன்று என்னைப் பார்த்தீரல்லவா? நீர் பார்த்தது என்னைத்தான்—நான் ஜெயிக்க விரும்புகிற 'நான்' என்பவனை இன்று என் முகத்தில் பார்த்தீரல்லவா? என்றார். பெருமை மனதின் பாவம். இதுவே தன்னயத்தைப் பிறப்பிக்கும் பெரிய பாவம். சாத்தானைக் கெடுத்ததும், சாத்தான் மற்றவர்களைக் கெடுக்கிறதுமான பாவம் இதுவே.

பிரயாணி ஒருவர் ஓர் குதிரைவண்டியிலேறிப் போனார். ஓரிடத்தில் வந்ததும் குதிரைக்காரன் காரணமின்றிக் குதிரையைச் சவுக்கால் மிகுந்த பலமாய் அடித்தான். இதைக் கவனித்துக்கொண்டிருந்த துரை குதிரைக்காரனைப் பார்த்து, 'ஏன் நிர்நிமித்தமாய் அந்தக் குதிரையை அடித்தாய்?' என்று கேட்கக் குதிரைக்காரன், 'ஐயா, அதோ ஓர் வெள்ளைக்கல் பக்கமாய் இருக்கிறதே அதைக் கண்டதும் என்னுடைய குதிரை மிரளுகிற வழக்கமுண்டு. ஆகையால் குதிரை அதைக் கவனிக்காமல் தன் காலில் படும் சவுக்கடியின் வேதனையைமட்டும் கவனித்துப் பயப்படாமலிருக்கும்படி செய்தேன்' என்றான். பாவத்தை நம்மை விட்டகற்றும் சிறந்த முறையென்னவென்றால் நமது இருதயத்தைத் தேவவசனத்தால் நிரப்புவதே, 'நான் உமக்கு விரோதமாய்ப் பாவம் செய்யாதபடி உமது வசனத்தை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன்'.

மிகவும் குளிர்ச்சியான ஓர் இரவில் சிறு கப்பல் ஒன்று பாறையில் மோதி உடைந்துபோயிற்று. புசல் பலமாயடித்துக்கொண்டிருந்தது. பிரயாணிகள் கப்பலிலிருந்த இரண்டு படவுகளை யிறக்கி அதில் குதித்தார்கள். ஒரு படவு ஆட்களால் நிறைந்துபோனதைக்கண்ட இருவர் (ஆட்கள்) தாங்களும் படவில் ஏறினால் மற்ற ஜனங்களுக்கும் உயிர்ச் சேதம் நேரிடுமென்றெண்ணித் தாங்களே மனதாரக் கடலில் குதித்துவிட்டார்கள். 'தங்கள் உயிரைக் காப்பாற்றுவதைவிட படவிலிருந்த இதர ஜனங்களின் உயிர் காக்கப்படட்டும். தங்கள் ஜீவன்போனாலும் பரவாயில்லை' என்று சொல்லிக்கொண்டே கடலில் குதித்தார்கள். இவர்களைக் காற்றுத் தள்ளிக்கொண்டு போய் ஒரு சிறு தீவின் கரையில் சேர்த்தது. பிரயாணிகளடங்கிய படவோ அலைகள் மோதிக் கவிழ்ந்து அதிலிருந்த அனைவரும் மாண்டார்கள். இதை ஆவிக்குரிய பிரகாரம் கவனிப்போம். (மாற்கு 8: 35, 36).

பிரான்சு தேசத்தின் சித்திரம் வரைகிற ஒருவன் பாரிஸ் பட்டணத்தின் சகல இடங்களுக்கும் சென்று அங்கங்கே தான் கண்ட காட்சிகளைப் படங்களாக வரைந்து அவைகளெல்லாவற்றையும் ஒரு சாலையில் உபயோகிக்கும் ஓர் திரைச்சீலையில் அமைத்தான். ஆனால் ஒவ்வொரு காட்சிப் படத்தின் மத்தியிலும் சிறந்தவனானவரின் படத்தையும் வரைந்து வைத்தான். அவன் வரைந்த படங்களில் அநேகம் பாரிஸ் நகரத்து அந்தரங்கமான இடங்களின் காட்சிகளில் [illegible]. இந்தப் படங்களை

ஜனங்கள் பார்த்தபோது தன்னுடைய பட்டணத்தின் அக்கிரமங்களையெல்லாம் கிறிஸ்துநாதர் ஆலயத்தின் மதிலிலிருந்து பார்க்கிறார் என்ற எண்ணம் உண்டாகவே அவர்கள் வெட்கத்தால் மூடப்பட்டுத் திகிர்ப்பிடித்தவர்களானார்கள்.

கிறிஸ்தவனே, நீ உன் வீட்டிலும், சபையிலும், சந்தைகளிலும் நடந்துகொள்ளுகிற உன் ஜீவியத்தைப் படம் பிடித்துக் காட்டினால் உனக்கு வெட்கமுண்டாகுமா? தைரியம் உண்டாகுமா? உன் ஜீவியத்தையெல்லாம் கிறிஸ்து கவனிக்கிறார் என்று அறி.

கொரியா தேசத்திலுள்ள கிறிஸ்தவன் ஒருவன் நூறுமைல் தூரம் நடந்து தன் குருவானவரிடத்தில் போய் தான் பாராமல் மனப்பாடமாய்ப் படித்த சில வேதவாக்கியங்களை ஒப்புவித்தான். மலைப்பிரசங்க முழுவதையும் யாதொரு பிசகின்றி ஒப்புவித்தான். குருவானவர் பொறுமையாய் கேட்டுக்கொண்டிருந்து அவனைப் பார்த்து, 'நீ மிகுந்த ஞாபகசக்தியுள்ளவன். ஆனால் வெறும் மனப்பாடம் பண்ணுவது மனதிற்கு நல்ல அப்பியாசம்தான். இந்த வாக்கியங்களிலடங்கிய போதனையின்படி நடப்பதுதான் மெத்த நலம் என்றார். அந்த மனிதன் சந்தோஷத்தினால் நிறைந்து, ஐயா, அந்த நோக்கத்தோடுதான் இந்த வாக்கியங்களைப் படித்தேன். முதலில் மனப்பாடம்பண்ணப் பார்த்தேன், ஞாபகத்திலிருக்கவில்லை. ஆகையால் நான் ஒவ்வொரு சத்தியத்தையும் படித்தவுடன் அந்தச் சத்தியத்தை அயலானான அஞ்ஞானி ஒருவனிடத்தில் அந்தச் சத்தியத்தின் போதனையை நிறைவேற்றி இவ்விதமாய்ப் பிரசங்க முழுவதையும் ஞாபகப்படுத்திக்கொண்டேன் என்றான்.

மாலுமியொருவன் சாராயக்கடைப் பக்கமாய் நடந்துபோனான். கடைக்காரன் அவனைக் கூப்பிட்டு, 'உள்ளே வாரும், காலை குளிராயிருக்கிறது. ஒரு கிளாஸ் சாப்பிட்டுவிட்டுப்போம்' என்றான். மாலுமி ஓர் காலம் குடிகாரனாயிருந்து தன் பணத்தையெல்லாம் சாராயக் கடைக்குக் கொடுத்துவந்தான். ஒரு வருஷத்துக்குமுன் தான் குடிக்கமாட்டேன் என்று தீர்மானம்பண்ணி மதுவிலக்குச் சங்கத்தில் கையொப்பமிட்டுக் கொடுத்திருந்தான். அவன் கடைக்காரனைப் பார்த்து, 'நான் குடிக்க முடியாது, என் பக்கத்தில் கனமான கட்டியொன்று இருக்கிறது' என்றான். கடைக்காரன் அவனைப் பார்த்து, 'நீ குடியை விட்டதால்தான் கட்டி வந்திருக்கிறது. முதற்தரமான சாராயம் குடித்தால் அந்தக் கட்டி போய்விடும். நீ வைத்தியக்காரன். உன் கட்டி பெரிதாகிறதுமல்லாமல், குடிக்காவிட்டால் மறுபக்கத்திலும் கட்டி புறப்படும்' என்றான். மாலுமி குலுங்கச் சிரித்து மாறுத்தரமாக, 'நீ சொல்வதெல்லாம் சத்தியம்' என்று தன் பக்கத்தில் சேப்புக்குள் வைத்திருந்த தங்கக்கட்டியை எடுத்து அவனுக்குக் காட்டி, 'இதுதான் என் கட்டி, நான் குடித்தால் இந்தக் கட்டி போய்விடும் என்றாயே அது மெய்தான். உனக்கு மெத்த வந்தனம். அடுத்த பக்



கத்திலும் எனக்குக் கட்டி கிடைக்கும். இன்னும் குடியாமலேயிருப்பேன். சலாம்' என்று சொல்லிப் போய்விட்டான்.

## 'உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு'

ஆமோஸ் 4: 12.

இந்நாட்களில் ஓர் பலத்த சத்தம் நமது காதுகளில் தொனிக்கிறது. 'எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று'. 1 பேதுரு 4: 7. 'இதோ சீக்கிரமாய் வருகிறேன்.' வெளி. 22: 12. 'வருகிறவர் இன்னும் கொஞ்சக் காலத்தில் வருவார் தாமதம்பண்ணார்.' எபி 10: 37. ஆகையால் 'உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு.' ஆயத்தப்படவேண்டியது அவசியமான காரியம். நாங்கள் ஓர்காலத்தில் கிராமங்களுக்குப் போகும்போது பாளையங்கோட்டை பங்களாவுக்குக் காவலாக இரண்டு மூன்று வேலைக்காரரைவைத்து பங்களாவை நன்றாய்ப் பார்த்துக்கொள்ளவேண்டுமென்று உத்தரவுகொடுத்து சில வாரங்களாகப் புறப்பட்டுப் போய்விட்டோம். திரும்பி வருகிறபோது, முந்தித் தெரியப்படுத்தி விடியற்காலத்தில் திரும்பி வருவது வழக்கம். அந்த விசையோ திடீரென்று வேலைக்காரர் நினையாத நேரத்தில் சாயந்தர வேளையில் திரும்பிவந்தோம். வரும்போது அங்கே காவலாக ஒருவருமில்லை. தோட்டக்காரன் தன் வீட்டுக்குப் போய்விட்டான். குதிரைக்காரன் போய்விட்டான். குசினிக்காரனும் போய்விட்டான். பங்களா கதவெல்லாம் பூட்டப்பட்டிருந்தது. வேலைக்காரர் எல்லாரும் தன் தன் வீட்டிலே சாப்பிட்டும் படுத்தும் இருந்தார்கள். விடியற்காலமட்டும் எஜமான் வரமாட்டார் என்று எண்ணிக்கொண்டார்கள். ஒரு ஆயத்தமும் இல்லை. கதவெல்லாம் பூட்டப்பட்டதினாலே அங்கேபோக இடமில்லாமல் வெளியே நின்று விசனப்பட்டோம். பார்த்தீர்களா? வீட்டெஜமான் சாயங்காலத்திலோ, நடு இராத்திரியிலோ, சேவல்கூவும் நேரத்திலோ, காலையிலோ, எப்பொழுது வருவார் என்று நீங்கள் அறியீர்கள். நீங்கள் நினையாத வேளையில் அவர் வந்து உங்களை தூங்குகிறவர்களாகக் கண்டுபிடியாதபடிக்கு விழித்திருங்கள். ஐயோ, அவர் இன்றைக்கு வருவாரானால் உங்களில் எத்தனை பேருடைய இருதயம் பூட்டப்பட்டதாகக் காணப்படும். உங்களில் மிச்சமானபேர் அந்த அருமையான ஆத்துமாவைக் காப்பது செய்யாதவர்களாய், உலக ஆசாபாசங்களில் சிக்குண்டவர்களாய், யாதொரு ஆயத்தமில்லாதவர்களாய், தண்டனைக்குப் பாத்திரவான்களாய் இருப்பீர்கள் என்பது நிசமான காரியம்.

I. மணவாளனாக வருகிறார், ஆகையால் மணவாளனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு. 'இதோ, மணவாளன் வருகிறார், அவருக்கு எதிர்கொண்டுபோகப் புறப்படுங்கள்.' மத். 25: 6. ஆம், கிறிஸ்துநாதர் முதலாவது தமது சபையைச் சந்திக்க வருவார். தம்முடைய ஞான மணவாட்டியைச் சேர்த்துக்கொள்ள வருவார். ஆகாயத்திலே தம்முடைய மெய்ப்

பக்தர் எல்லாரையும் எடுத்துக்கொள்ள வருவார். தம்முடைய விவாக உற்சவத்தைக் கொண்டாட வருவார். மணவாளனாக வந்து தம்முடைய நாயகியாகிய திருச்சபையை இப்பூமியிலிருந்து எடுத்துக்கொண்டு, அப்புறம் விடப்பட்ட உலகத்தார்மீதில் தம்முடைய உக்கிரகோபத்தை ஊற்றிவிடுவார். பரிசுத்தவான்கள் மாத்திரம் அந்தக் கோபத்துக்கும் உபத்திரவத்துக்கும் விலக்கிக் காக்கப்பட்டு ஆண்டவருடைய நேச மனைவியாக எடுத்துக்கொள்ளப்படுவார்கள். குணப்படாத கிறிஸ்தவர்கள் எல்லாரும் இந்த பூமியில் விடப்பட்டுச் சொல்லமுடியாத வேதனையையும் உபத்திரவத்தையும் அனுபவிப்பார்கள். காரியம் இப்படியிருப்பதினாலே, சகோதரனே, சகோதரியே, நீ ஏனோ, தானோவென்றிராமல், 'மணவாளனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு'. எப்படி ஆயத்தம்பண்ணுகிறது என்று கேட்பாய்.

1. உன் பெருமையை விட்டுவிட்டு உன்னைத் தாழ்மைப்படுத்தி இவ்விதமாக ஆயத்தப்படு ஆதி. 24: 65. அதோ ஓர் கலியாணப்பெண் ரெபேக்காள் என்பவள் தன் மணவாளனைச் சந்திக்க ஆயத்தம் செய்கிறாள். அவள் தன் வீட்டிலே இருக்கும்போது எலியேசர் வந்து தன் எஜமானுடைய சனத்தையும் தனத்தையும் தெரியப்படுத்தினான். அதற்குத் திருஷ்டாந்தமாக வஸ்திர ஆபரணங்களை எடுத்துக்கொடுத்தான். என் எஜமானைப்போல நல்ல மணவாளன் வேறொருவரும் இல்லை என்பதாக அறிவித்தான். அப்புறம் அந்த வீட்டார் ரெபேக்காளைப் பார்த்து, 'நீ இந்த மனிதனோடேகூடப் போகிறாயா'? என்று கேட்க அவள் உடனே சம்மதித்து 'போகிறேன்' என்றாள். (ஆதி. 24: 58) பார்த்தீர்களா? தன் ஜனத்தையும் தன் தகப்பன் வீட்டையும் மறந்துவிட்டு மணவாளனுக்கு எதிர்கொண்டு போகப் புறப்பட்டாள். அப்புறம் தூரத்தில் தன் கண்களை ஏறெடுத்துப் பார்க்கும்போது, அதோ ஈசாக்கு மாப்பிள்ளை தென்படுகிறான். மணவாளன் என்று அறிந்தவுடனே அவள் ஒட்டகத்தைவிட்டிறங்கி முக்காடிட்டுக்கொண்டாள். ஆதி. 24: 65. மணவாளனைச் சந்திக்க எத்தனிக்கும்போது தன்னைத் தாழ்த்திப்போட்டு அவ்விதமாக ஆயத்தம்பண்ணினாள் என்று பார்க்கிறோம்.

அப்படிப்போலவே, ஞான மணவாட்டிக்கு ஒரு முக்காடு அவசியம் வேண்டும். அதற்கு மனத்தாழ்மையென்று பேர். ரெபேக்காள் செய்தது போல, நாமும் நம்முடைய பழைய இடத்தையும் ஜனத்தையும் வழக்கங்களையும் விட்டுவிடவேண்டும். அவளைப்போல நாமும் பெருமை என்னும் ஒட்டகத்தைவிட்டிறங்கவேண்டும். அவளைப்போல நாமும் தாழ்மை என்னும் முக்காடு இட்டுக்கொள்ளவேண்டும்.

தாவீதின் ஊழியக்காரர் அபிகாயில் என்னும் பெண்ணண்டைக்கு வந்து 'தாவீது உன்னை விவாகம்பண்ண மனதாய் எங்களை உன்னிடத்தில் அனுப்பினார்' என்று தெரிவிக்கும்போது உடனே அவள் எழுந்திருந்து தரைமட்டும் முகங்குனிந்து 'நான் என் ஆண்டவனுடைய ஊழியக்காரரின்



கால்களைக் கழுவத்தக்க பணிவிடைக்காரியாகிய அவருடைய அடியாள்' என்றாள். 1 சாமு. 25: 40, 41. இப்படித் தன்னைத் தாழ்மைப்படுத்தி பின்பு அபிகாயில் தீவிரித்து எழுந்து தாவீதின் ஸ்தானாபதிகளுக்குப் பின் சென்றுபோய் அவனுக்கு மனைவியானாள். வச. 42. மனத்தாழ்மையைக் காட்டி இவ்விதமாக மணவாளனைச் சந்திக்கத் தீவிரமாய் ஆயத்தம்பண்ணி புறப்பட்டுப்போனாள்.

சிநேகிதனே, நீ ஒரு பெரிய ஒட்டகத்தின்பேரில் வெகு டம்பத்தோடு ஏறிச் சவாரிபோகிறாய். பெருமையாகிய ஒட்டகம். பெருமைக்காரன். அந்த நிலைமையில் இருக்குமட்டும் ஆண்டவருக்கு உதவமாட்டாய், உன்னை ஏற்றுக்கொள்ளவுமாட்டார். இறங்கிவா, உலக ஆடம்பரங்களைப் பின்பற்றுகிறாய். பெருமை! ஞான மணவாட்டிக்குப் பெருமை ஆகாது.

2. பரிசுத்த வஸ்திரத்தை அணிந்துகொண்டு இவ்விதமாக ஆயத்தப்படு. சங். 45: 13, 14. முக்காடு மாத்திரமல்ல, கலியாண வஸ்திரமும் அவசியம் வேண்டும். 45-ம் சங்கீதத்தில் இன்னொரு கலியாணப்பெண் காட்டப்பட்டிருக்கிறாள். அவளும் மணவாளனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படுகிறாள். அவளும் தன் ஜனத்தையும் தன் தகப்பன் வீட்டையும் மறந்துவிடுகிறாள். அப்புறம் மணவாளனுடைய சமுகத்திலேபோய் அவருடைய மனைவியாகத்தக்கதாக தகுந்த வஸ்திராதிகளை அணிந்துகொள்ளுகிறாள். 'ராஜகுமாரத்தி உள்ளாகப் பூரண மகிமையுள்ளவள். அவள் உடை பொற்சரிகையாயிருக்கிறது. சித்திரத்தையலாடை தரித்தவளாய் ராஜாவினிடத்தில் அழைத்துக்கொண்டுவரப்படுவாள்'. கேட்டீர்களா? அவளுடைய வஸ்திராலங்காரத்தை விவரிக்கும்போது முதலாவது உள்ளான காரியத்தைக் கவனிக்கிறார். 'உள்ளாகப் பூரண மகிமையுள்ளவள்.' முத்துமாலை, தங்கக்காப்பு, காதணி, சிலம்பு முதலான நகைகளைச் சொல்லுமுன்னும் பொற்சரிகைச் சேலைமுதலிய உடைகளை விவரிக்குமுன்னும் உள்ளான அலங்காரத்தை விசேஷித்துப் பேசுகிறார். உனக்கு உள்ளான மகிமையுண்டா? இருதய சுத்தமுண்டா? பரிசுத்த குணமுண்டா? மனமாறுதலுண்டா? மணவாளனைச் சந்தோஷத்தோடு சந்தித்து அவரோடுகூட வாழவேண்டுமானால் உனக்கு அவசியமவேண்டிய வஸ்திரம் என்னவென்றால் பரிசுத்தமே. 'பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே.' எபி. 12: 14. உலகத்தை நேசித்து அதோடு சோரம்போனவனே, போனவளே, உன்னுடைய பங்கு புறம்பான இருளில் கிடைக்கும். ஆண்டவருடைய கலியாண விருந்தில் உனக்குப் பங்குமில்லை, பாகமுமில்லை. அழுக்கான கந்தைத் துணிகளைப் போட்டுக்கொண்ட பெண்ணை விவாகம்பண்ண யார் விரும்புவார்கள்? ஒருவருமில்லை. அப்படியானால் இவ்வுலக ஆசாபாசங்களில் சிக்கிக்கொண்ட சபையாளைப் பரம மணவாளன் எப்படி விரும்பக்கூடும்?

அமெரிக்கா தேசத்துப் பிரபு ஒருவர் ஓர் திக்கற்ற அனாதப்பிள்ளையைக் கண்டு அதன்மேல் பரிதபித்து தன் சொந்தச் செலவால் படிக்க வைத்து நேர்த்தியான வஸ்திரங்களைக் கொடுத்து சகல நல்ல காரியங்களி

னும் பழக்குவித்து ஆயத்தப்படுத்தி அப்புறம் கலியாணம் செய்துகொண்டார். கிறிஸ்துவின் அன்பும் ஆயத்தமும் இப்படியே யிருக்கிறது.

'ஆட்டுக்குட்டியானவரின் கலியாணம் வந்தது. அவருடைய மனைவி தன்னை ஆயத்தம்பண்ணினாள் என்று சொல்லக் கேட்டேன். சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம் தரித்துக்கொள்ளும்படி அவளுக்கு அளிக்கப்பட்டது. சுத்த மெல்லிய வஸ்திரம் பரிசுத்தவான்களுடைய நீதிகளே'. வெளி. 19: 6, 7, 8. சுத்தமும் பிரகாசமுமான அந்த வஸ்திரம் உனக்குண்டா?

3. தேவாவியினாலே நிரப்பப்பட்டு இவ்விதமாக ஆயத்தப்படு. மத். 25: 4, 10. இதோ இந்தக் கன்னியாஸ்திரீகளைக் கவனித்துப் பாருங்கள். 5 பேர் ஒரு பக்கம் 5 பேர் இன்னொரு பக்கம். வெளித்தோற்றத்தில் இவர்களுக்கும் அவர்களுக்கும் அத்தனை வித்தியாசமில்லை. இவர்களும் கன்னிகைகள், அவர்களும் கன்னிகைகள். இவர்களும் சபையார், அவர்களும் சபையார். இவர்களும் மணவாளனுக்கு எதிர்கொண்டுபோகப் புறப்பட்டார்கள், அவர்களும் மணவாளனைச் சந்திக்கப் புறப்பட்டார்கள். இவர்களும் தீவட்டிகளைப் பிடித்துக்கொண்டார்கள், அவர்களும் தீவட்டிகளைப் பிடித்துக்கொண்டார்கள். இவர்களும் காத்திருந்தார்கள், அவர்களும் காத்திருந்தார்கள். ஆனால் இவர்களுக்கும் அவர்களுக்கும் வித்தியாசமுண்டு. இவர்களுக்கு எண்ணெய் உண்டு, அவர்களுக்கோ எண்ணெய் இல்லை. அந்த வித்தியாசம் உடனே தெரியவில்லை. கடைசியில் மாத்திரம் தெரிந்தது. மணவாளன் வந்தவுடனே தெரியவந்தது. இவர்கள் ஆயத்தமுள்ளவர்களாய்க் காணப்பட்டார்கள். மணவாளனோடு கூடக் கலியாண வீட்டுக்குள் பிரவேசித்தார்கள். நித்திய பாக்கியத்தை அனுபவித்தார்கள். அவர்களோ வெளியே விடப்பட்டார்கள். புறம்பான இருளிலே தள்ளுண்டு நித்திய நிர்ப்பந்தத்தையும் அடைந்துகொண்டார்கள்.

பிரியமானவர்களே, 'கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல'. உங்கள் வெளிவேஷத்தைப் பாராமல் இருதயமாகிய பாத்திரத்தில் எண்ணெய் உண்டா என்று மாத்திரம் கவனிக்கிறார்.

சாலோமோனைப்பற்றிய ஓர் கதையுண்டு. இரண்டு பூங்கொத்துகள் இருந்தது. ஒரு கொத்து சரியான புஷ்பங்கள், தோட்டத்தில் வளர்ந்த புஷ்பங்கள். இன்னொரு கொத்து மனுஷனுடைய யுக்தியினாலும், வித்தையினாலும் செய்யப்பட்ட சித்திர வேலையான பூக்கள். நிறத்தில் வித்தியாசமில்லை, வாசனையில் வித்தியாசமில்லை, அளவில் வித்தியாசம் இல்லை, வெளித்தோற்றத்தில் வித்தியாசமில்லை. ஆனால் பெரிய வித்தியாசமிருந்தது. இவைகளுக்கு உயிருண்டு, அவைகளுக்கோ உயிரில்லை. ராஜா பார்த்தார். வித்தியாசம் தெரியவில்லை. உடனே ஜன்னலைத் திறக்கச் சொன்னார். ஜன்னல் வழியாய் அநேக தேனீக்கள் ஙுணுங்கென்று இரைச்சலோடு மொய்த்து வந்தது. உடனே வித்தியாசம் தெரிந்தது. தோட்டத்தில் வளர்ந்த உயிருள்ள புஷ்பங்களுக்கு மாத்திரம் நேராய்ப் போய் மொய்த்துக்கொண்டது. என்னவென்றால் அங்கே தேனிருந்தது. மற்றப் புஷ்பங்களையோ அவைகள் தொடவேயில்லை.

மூன்று வகையான ஆயத்தம் வேண்டும். 1. முக்காட்டு ஆயத்தம், 2. உப்பு ஆயத்தம், 3. எண்ணெய் ஆயத்தம்.

Printed at the Palamcottah Printing Press, Palamcottah and published by the Christian Brotherhood Association, Tinnevelly.

1043

August 1918. Registered No. M/163.

# The Water of Life
# ஜீவத்தண்ணீர்

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்." யோவான் 7: 38.

Vol. XIX ஆகஸ்டு 1918

## உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு

ஆமோஸ் 4: 12.

II. இராஜாவாக வருகிறார் ஆதலால் இராஜாவைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு. 'இதோ, உன் ராஜா ...... உன்னிடத்தில் வருகிறார்'. மத். 21: 4. ஆம், பூலோக ராஜாவாகவும் வருகிறார். இவ்வுலகத்துக்கு ஓர் செங்கோலரசன் அவசியம் வேண்டும். ஆதிமுதல் இது பரியந்தம் சரியான ராஜாங்கத்தை இப்புவியில் காணோம். தாவீது அரசன் அநேக காரியங்களில், தேவனுடைய இருதயத்துக்கு ஏற்றவனாகக் காணப்பட்டும் அவன் கொலைபாதகனும் காமவிகாரனும் இருந்தான். சாலோமோன் ராஜா மகா ஞானவானும் தேவாலயத்தைக் கட்டினவனும் இருந்தபோதிலும் மாமிச சிற்றின்பங்களுக்கும் விக்கிரக ஆராதனைக்கும் இடங்கொடுத்து வெகுதூரம் தவறிப்போனான். பலவித பெரிய பெரிய ராஜ்யங்கள் காலாகாலங்களில் தோன்றிப் புகழ்பெற்றோங்கியும் அவைகள் எல்லாம் தேவனுடைய தராசிலே நிறுக்கப்பட்டுக் குறையக் காணப்பட்டன. பாவ கிரியைகளும் அக்கிரமங்களும் நாளுக்குநாள் பெருகிக்கொண்டே வருகிறது. பிசாசானவன் மனுமக்களை வஞ்சித்து ஏமாற்றிக் குருடாக்கித் தன் ராஜ்யத்தையும் அதிகாரத்தையும் இப்பூமியில் வெகு பலமாய் ஸ்திரப்படுத்தியிருக்கிறான். அவனுக்கு 'இப்பிரபஞ்சத்தின் தேவன்' என்றும் 'இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதி' என்றும் பெயர். சொல்லவேண்டுமானால் அந்தக் கொடிய சத்துருவானவன் இப்பூலோகத்தில் வீரியம் பாராட்டி தேவனுடைய ராஜ்யத்தையும் அதிகாரத்தையும் தனக்கென்று எடுத்துக்கொண்டு அரசாட்சி செய்துவருகிறான். அவன் வசத்தில், தேவன் இந்தப் பூமியை முற்றிலும் ஒப்புக்கொடுத்துவிட்டாரோ? அல்ல, அல்ல. பட்டத்து ராஜா

சீக்கிரம் வருகிறார். மெய்யான அரசன் வந்து ஆளுகை செய்வார். சாத்தானைப் பிடித்துக்கொண்டு சங்கிலியினாலே கட்டிப்போட்டு பாதாளத்தில் தள்ளி அடைத்து தாமே சிங்காசனம் ஏறி செங்கோல்செலுத்தி நீதியோடும் கிருபையோடும் அரசாளுவார். அப்போது பூமி எங்கும் சமாதானமும் சுகவாழ்வும் உண்டாயிருக்கும். 'சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம்'.

லோக ராஜா, வாழ்க! வாழ்க!
நீதி செங்கோல் அரசே!
பூமி எங்கும் ஆள்க! ஆள்க!
சாந்தப்ரபு, யேசுவே!

திருஷ்டாந்தம். அப்சலோம் என்பவன் வஞ்சனையாய் நடந்து ஜனங்களுடைய இருதயங்களைத் தன் வசமாக்கிக்கொண்டு தாவீது அரசனைத் துரத்திவிட்டு ராஜ மேன்மையைத் தனக்கென்று அபகரித்துக்கொண்டு கொஞ்சக்காலம் அரசாண்டான். சரியான ராஜன் அப்சலோமல்ல, தாவீதரசனே. அதிகாரமும் வல்லமையும் அவனுக்கே உரியது. அவன் சிறிது காலம் துரத்துண்டபோதிலும் பிற்பாடு ஜெயம்பெற்று தன் ராஜ நகரத்துக்கு திரும்பி வந்தான். தாவீது ராஜா திரும்பி வருகிறார் வெற்றி வேந்தனாக வருகிறார். அரசர் வருகிறார் என்று கேட்டவுடனே அப்படி வருகிற ராஜாவைச் சந்திக்கும்படி குடிகள் எல்லாரும் ஆயத்தம்பண்ணினார்களாம். அந்தச் சரித்திரம் 2 சாமுவேல் 19-ம் அதிகாரத்தில் காட்டப்பட்டிருக்கிறது. அதிலே மூன்று பேருடைய வரலாறு சற்று விபரமாய்ச் சொல்லப்பட்டதால் அதைக் கவனித்தால் நம்முடைய காரியத்துக்கு அனுகூலமாயிருக்கும் என்று எண்ணுகிறேன்.

1. சிலர் வெட்கத்தோடே தங்கள் ராஜாவைச் சந்திக்கப்போகிறார்கள். அதோ! தாவீதரசன் எருசலேம் நகரத்துக்குத் திரும்பும்படி யோர்தான் நதிமட்டும் வந்திருக்கிறான். யூதா கோத்திரத்தார் எல்லாரும் ராஜபக்தியில் சிறந்து அவனுக்கு எதிர்கொண்டு வந்திருக்கிறார்கள். ராஜாவானவன் பெரிய கூட்டத்தோடும் பரிவாரத்தோடும் அநேக மகிமையோடும் ஆற்றைக் கடக்கக் காத்திருக்கிறான். அந்தச் சமயத்தில், அதோ! ஒருவன் ஓடிவருகிறான். ஓடிவந்து ராஜாவுக்கு முன்பாகத் தாழவிழுந்து, 'அக்கிரமம் செய்தேன், துரோகம்பண்ணினேன், பாவம் புரிந்தேன்' என்று அறிக்கையிடுகிறான். பயத்தோடும் வெட்கத்தோடும் ராஜாவைச் சந்திக்கிறான். மனச்சாட்சி அவனை வாதிக்கிறது. திகில் அவனைப் பிடிக்கிறது. ஒருபக்கம் அச்சமும் இன்னொரு பக்கம் வெட்கமும் அவனைத் தள்ளுகிறது. அவன் யார் என்றால், சீமேயி என்பவன். முந்தித் தாவீதைத் தூஷித்தவன், அரசனைச் சபித்தவன். 'இந்த ராஜன் தள்ளப்பட்டான், இனி வரமாட்டான் என்று எண்ணி அவனை அவமதித்து அசட்டை செய்து கல்லெறிந்து கூடியமட்டும் அவனை வருத்தப்படுத்தினவன்.' 'ஆ, சீமேயீ, சீமேயி, தாவீது போய்விட்டான், 'அவன் திரும்பி வரான். இப்போது



இஷ்டம்போல் நடக்கலாம். அப்சலோமோடு வாழலாம் என்று நினைத்தாயே. புத்தியீனம், புத்தியீனம். ராஜாவின் பாதத்தில் அவனைக் கவனித்துப் பாருங்கள். அவன் வீரியம் எங்கே? தைரியம் எங்கே? சந்தோஷம் எங்கே? பிடித்த கொம்பும் ஒடிந்து, மிதித்த கொம்பும் முறிந்தது என்பதுபோல அவன் நம்பின நம்பிக்கையெல்லாம் வீணாய்ப் போய்விட்டது. 'ராஜா என்னை அதம்பண்ணுவாரோ?' என்று பயந்து நடுங்கி இலச்சையடைந்தவனாய்க் கீழேவிழுந்து கும்பிடுகிறான்.

ஆ, ஜனங்களே, கிறிஸ்துநாதர் போய்விட்டார், இனி வரமாட்டார் என்று நினைக்கிறீர்களாக்கும். இஷ்டப்படி வாழலாம், பாவம் செய்யலாம், மனம்போனபோக்கிலே நடக்கலாம், என்ன பயம் என்று எண்ணுகிறீர்களாக்கும். சீமேயி என்பவன் அப்சலோமோடே சேர்ந்துகொண்டு அந்த ராஜதுரோகியோடு வாழ்வதே காரியம் என்று நினைத்ததுபோல நீங்கள் உலக மக்களோடு சேர்ந்து உலகப் பொருளை விரும்பி அருமை ரக்ஷகரை அவமானப்படுத்தி, 'இந்த ராஜா வேண்டாம், அவனுக்குக் கீழ்ப்படியமாட்டேன்' என்று அருள்நாதரைத் தள்ளிவிடுகிறீர்கள். மோசம் போகவேண்டாம். 'இதோ உன் ராஜா . . . வருகிறார்' உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு. ஆ, சீமேயினுடைய முடிவைச் சிந்தித்துக்கொள்ளுங்கள். ராஜா கொஞ்சக்காலம் அவனுக்குப் பொறுத்து வந்தும் அந்த சண்டாளத் துரோகி கடைசியிலே தான்செய்த அக்கிரமத்தினிமித்தம் பட்டயத்துக்கு இரையானான் (1 ராஜா. 2: 46). அப்படிப்போல தேவகுமாரன் ராஜ்யத்தைப் பெற்றுக்கொண்டு திரும்பி வரும்போது நம்முடைய தூதரைப் பார்த்து, 'நான் ராஜாவாகிறதற்கு மனதில்லாதவர்களாகிய என்னுடைய சத்துருக்களை இங்கே கொண்டுவந்து எனக்கு முன்பாக வெட்டிப்போடுங்கள்' என்று உத்தரவு அருளுவார்.

திருஷ்டாந்தம். சில நாளைக்குமுன் பம்பாயில் நடந்த சங்கதி. ஒரு பிராமணன், பத்திரிகையை அச்சிட்டு அதிலே நம்முடைய ராஜாங்கத்தாரைத் தூஷித்தான். அதினாலே மோசம் வராது, அவர்கள் கவனிக்கமாட்டார்கள் என்று எண்ணினான். ஆனாலும் அவர்கள் அதை அறிந்துகொண்டார்கள், அவனைப் பிடித்துக்கொண்டார்கள். கோர்ட்டில் நிறுத்தி நியாயம் விசாரித்தார்கள். அப்போது அவனுக்கு உண்டான கலக்கமும் பயமும் கொஞ்சமல்ல. 'நான் செய்தது தப்பிதம், மன்னிக்கவேண்டும்' என்று கெஞ்சிக்கேட்டான். ஆ, சர்க்காரைத் தூஷிக்கும்போது அவனுக்கு மெத்த வீரியம், ரொம்ப பெருமை, தண்டனை வரும்போதோ அவனுக்குத் தைரியமேயில்லை. அவனை விடவில்லை ஒரு வருஷம் தீர்ப்பு. தீர்ப்பைக் கேட்டவுடனே வாய்விட்டலறினான். விம்மி விம்மி அழுதான். கூ, கூவென்று புலம்பினான். பிரயோஜனம் இல்லை. காவலில் கிடந்து வெட்கப்பட்டான். ஆ, பாவீ! தேவதூஷணா நீ அசட்டை செய்கிறாய். தேவனைத்

தூஷித்துத் தள்ளி துரோகம் செய்கிறாய் எதுமட்டும்? வருவார், நியாயம் விசாரிப்பார், வாசனுவார், துரோகிகளைத் தண்டிப்பார். ஒரு வருஷமாத்திரமல்ல, நித்திய காலமாய் நாகதண்டனை வகிக்கும் குணப்பட்டால் சாவினை. 'உன் ராஜனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு'.

Rev. T. Walker.

## சத்துரு உட்புகுதலும் குடியோடிப்போகுதலும்

இந்த யுத்த பயங்கரத்தில், சத்துருவின் பலம், அவன் வருகிற நேரம், வருகிற வழி வகைகள் எவ்விதமென்று தெரியும்போது மாத்திரம் ஜெயம் கிடைக்கிறதென்றறிகிறோம். அவ்வாறே, ஆவிக்குரிய போராட்டத்தில் சத்துருவாகிய சாத்தான் பல வேஷம்பூண்டு சமயம் பார்த்து உட்புகுந்து இருதயமாகிய கோட்டையைப் பிடித்துக்கொள்ளுகிறான். திருச்சபையினுட்பிரவேசித்து, அதன் அன்பையும், ஐக்கியத்தையும் குடியோடிப்போகச் செய்கிறான். தேவசபையின் காவலாளர், சத்துரு வருகிற நேரத்தைத் திட்டமாய் அறிந்துகொள்ளவேண்டியது அவசியம். வேதாகமத்தின் மூலமாய் சத்துரு உட்பிரவேசிக்கும் தருணங்கள் எவையெனக் கண்டுபிடித்து சிந்தித்துக்கொள்வோம்.

I. தூக்கமயக்கம் சத்துரு உட்பிரவேசிக்கும் நேரம் மனுஷர் நித்திரைபண்ணுகையில், சத்துரு வந்து களைகளை விதைத்தான். மத். 13: 25. கர்த்தருடைய பெட்டியும், கர்த்தருடைய சேனையும் போர்முகத்தில் நிற்கையில் கர்த்தருடைய யுத்தங்களை முன்னின்று நடத்தவேண்டிய தாவீதோ, பகலில் நித்திரைசெய்து, பத்சேபாளின் பாவத்துக்குட்பட்டான். நாத்தான் அந்த நல்ல உவமை சொல்லி, உணர்த்தியபோது வழிப்போக்கன் ஒருவன் வந்தான், அவனுக்கு ஆட்டுக்குட்டி சமையல் பண்ணப்பட்டதென்கிறான். இவ்வழிப்போக்கன் யார்? இவனே சாத்தான். இவனுக்கு சமையல்பண்ணப்பட்ட சமையல் எது? தாவீதின் இரக்ஷண்ய சந்தோஷமே. ஆத்துமாவே! ஓர் காலத்தில் உனக்கிருந்த ஊக்கமும் உற்சாகமுமெங்கே? உன் பாவ தூக்கம், அந்த ஞான ஊக்கத்தைக் குறைத்துவிட்டதல்லவா? உன் பாவ ஓட்டம், ஞான ஓட்டத்தைத் தடுத்துவிட்டதல்லவா! தெலிலாள் மடியில் படுத்திருந்த சிம்சோன் தன்னறிவில்லாமல் தன் சடையை இழந்துபோனான். தன் பெலனாகிய தேவன் தன்னைவிட்டு விலகினதையறியாமல் தன் கையையும் காலையும் ஆட்டி சத்துரு வரும்போது சண்டைக்குப்போனான். வெட்கத்துக்குள்ளானான். முதல் ராஜனாகிய இஸ்ரவேலின் சவுல் தூங்கும்போது தன ஈட்டியையும் தண்ணீர்ச் செம்பையும் பறிகொடுத்துப் பரிதவித்தான். தேவ ஊழியனே! தேவவசனமாகிய உன் ஆவியின் பட்டயமும் தண்ணீர்ச் செம்பாகிய பரிசுத்த ஆவியின் அபிஷேகமுமெங்கே? அதினாலே வேதவாசிப்பும் தனிஜெபமும்



குறைந்துபோய்விட்டதல்லவா! விழித்திருக்கக் கட்டளைபெற்ற சீஷன், தூங்கியல்லவோ சத்துருவினால் சளிகளைப் புடைக்கப்பட்டான். எல்லாரும் தங்கள் தங்கள் தேவனை நோக்கிக் கூப்பிடுகையில், தூங்கின யோனா எத்தனை துன்பத்துக்குள் அழுந்த நேரிட்டது.

நமது விசுவாசமாகிய படகு இந்த துக்கசாகர அலைகள் நிறைந்த உலகில் பாமயாத்திரைபண்ணுகையில் நமது இரட்சகருக்குத் தலையணை வைத்து நித்திரைசெய்ய இடங்கொடாதிருப்போமாக. மாற். 4: 38. லூக். 8: 23. குடும்ப ஜெபத்திற்கும், வேதவாசிப்புக்கும், ஆலய ஆராதனைக்கும் அசம்பந்தம்கொள்வதே நித்திரை. நமது சபைகொந்தளிப்பதற்குக் காரணமென்ன? யோனாவே, நீ தூங்குவதே காரணம். அதிகாலையில் நீ எழுந்து கர்த்தனைத் தேடு. ஆலயத்தை மறவாதே. தனி ஜெபத்தில் யாக்கோபைப்போல இராமுழுவதும் விழித்திருந்து போராடு. அப்பொழுது சத்துருவாகிய ஏசாவும உன்னை முத்தங்கொடுக்க வந்துசேருவான். சபைகளில் வீடு தவறாமல் போய்ச் சந்தித்து ஜெபம் செய். அப்பொழுது சபையில் சத்துரு உட்புகுதலும் குடியோடிப்போகுதலுமிராது. பட்டணக்கரை வாசியான ஒருவர் ஐயா எங்கள் சபையின் ஊழியர் யாரென்று ஞாயிற்றுக்கிழமை கோவிலில் போய்ப்பார்த்தால்தான் தெரியுமென்று பரிதபித்தார். சபைகளெல்லாம் பாசிபிடித்த குளம்போல யாதொரு அசைவுமற்று, அனலுமற்றிருப்பதேன்? கர்த்தனைப் பிரஸ்தாபிக்கிறவர்களே! நீங்கள் அமரிக்கையாயிருந்து அவரையும் அமர்ந்திருக்கவிடுகிறதினாலேதான். நித்திரை சத்துரு. முக்கியமான நேரத்தில் மோசம்பண்ணுகிற சத்துரு. பெரிய பட்டாளமொன்று காட்டில் பாளையமிறங்கியிருக்கும்போது, அதற்குக் காவல் நிறுத்தியிருந்த பாராச் சேவகன் ஒரு இரவில் சுடப்பட்டு விழுந்தான். மறு இரு நாட்களிலும் அவ்வண்ணமே, பின்னிருவர் சுடப்பட்டு, அதே இடத்தில் வீழ்த்தப்பட்டனர். நாலாம்நாள் இரவில் காவல் காக்கப்போனவனோ விழிப்பாளி; கண்ணும் கருத்துமாக கவனித்து நின்றான். தூரத்திலே ஒரு செடி தெரிந்தது. திரும்ப கவனிக்க அந்த செடிக்கு நேரே குண்டு போட்டு சத்துருவை வீழ்த்திவிட்டான். சத்துரு பல வேஷம் போட்டு உட்பிரவேசிக்க வருவான். சர்ப்ப வேஷமுமுண்டு, சிங்க வேஷமுமுண்டு. சத்தமும் சந்தடியுமின்றி நமது ஆதி தாய் தகப்பனும் பேதுருவும் சோதனைக்குட்பட்டனர். ஆகையினால் விழித்திருங்கள்; விசுவாசத்தில் நிலைத்திருங்கள்; பிசாசிற்கு எதிர்த்து நில்லுங்கள். அப்பொழுது அவன் உங்களைவிட்டோடிப்போவான் என்பதே பேதுருவின் அநுபோக சாட்சி. அருள்நாதர் தமது சீஷரைப் பார்த்து, 'நீங்கள் சோதனைக்குட்படாதபடி விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள் என்கிறார். தமிழ்நாட்டு சபையின் ஊழியரே! நித்திரையை விட்டு எழுந்திருக்கத்தக்க வேளையாயிற்று. ஆண்டவர் பூமியைச் சந்திக்க வருகிறார். தமிழ்நாட்டு சபையே! தூங்குகிற நீ

மரித்தோலைவிட்டு எழுந்திரு. சாத்தான் தனக்கு கொஞ்சகாலம் என்று கண்டு பூமியில் இறங்கிவிட்டான். விழித்திருப்பவன் பாக்கியவான்.

II. நாம் தற்பெருமைகொள்ள தலைப்படும் நேரம், கெர்ச்சிக்கிற சிங்கம் நம்மை தாக்கவரும் நேரம். தாவீது தான் வெட்டி எடுக்கப்பட்ட குழியையும், தோண்டி எடுக்கப்பட்ட கன்மலையும் எட்டிப்பாராமல், தற்பெருமை கொண்டபோது தான் சாத்தான் அவனை லக்ஷம்பார்க்க வழி விட்டதாக அறிகிறோம். சவுல் ராஜன் பெருமையுடன் கில்காலில்போய் ஜெயஸ்தம்பம் நாட்டி, தீர்க்கதரிசியாகிய சாமுவேலின் சால்வையை பிடித்துக் கிழிக்கவே, பரிசுத்த ஆவி அவனை விட்டுவிலகி, அலைக்கழிக்கிற அசுத்த ஆவி அவனை ஆட்கொண்டது. தேவ ஆவிபெற்ற தாவீதைத் துரத்தி வேட்டையாடத் தலைப்பட்டான். இந்தப் பாவம் இப்பொழுதும் பலரைப் பிடித்து அலைக்கழிக்கிறது. ஓர் காலம் தேவ ஆவியை பெற்று தேவ புத்திரரை நேசித்தவர்கள், இப்போது பணமும், பேரும், உத்தியோகமும் அதிகாரங்களும் வரவே, முன் நேசிக்கப்பட்டவர்கள் பகைக்கப்பட ஆனார்கள். இதற்குக் காரணம் பெருமைதான். நான் என்ற ஆணவம்கொண்ட பேதுரு, ஒரு பெண்பிள்ளைக்கு முன் கர்த்தரை மறுதலித்தான். பரி. பவுலும் தான் மாம்சத்தில் கர்வம் கொள்ளாதபடி என்னைகுட்டும் சாத்தானுடைய தூதனாகிய ஒரு முள் கொடுக்கப்பட்டிருக்கிறது என்கிறார். பெருமை நரகத்தின் அதிபதி கொண்டுவந்த சாபத்தின் முன். நாம் முன்னுள்ள எளிமையை நினைத்து கனபக்தியுடன் நடப்போமாக! பூர்வகால பக்தர் எத்தனை தாழ்மையுடன் மனுகுலத்துக்கு ஊழியம் செய்து பேர்பெற்றனர். இப்போது சகலவித ஆளுகையும் ஆணவமும் சபைக்குள் நுழைந்து சபையை மேன்மைப்படுத்திய பரிசுத்த ஆவி விலகிவிட்டதுபோல தோன்றுகிறது. சபையே! உன் தூசியை உதறிவிட்டு பெந்தெகொஸ்தின் மனத்தாழ்மைக்குத் திரும்பு. அப்போது பெந்தெகொஸ்து உனக்கு நிச்சயமாய் திரும்பி, அந்த பூர்வ வல்லமையைபெற்றனுபவிப்பாய்.

III. நாம் உலக ஆசைகொள்ளும் நேரமே! இவ்வுலகத்தின் அதிபதி வரும் நேரம். ஏவாள் விலக்கப்பட்ட கனிமீது இச்சைகொள்ள, ஏதேனின் சத்துரு உட்புகுதலும் குடியோடிப் போகுதலும் நேர்ந்தது. லோத்து உலக ஆசைகொள்ள சகலத்தையும் பறிகொடுத்து ஓடி வெட்கமும் துக்கமும் வந்து பலித்தது. யூதாஸ் பொருள்மீது ஏக்கமுற்று, ஏதும் கிடையாது குடல் சரிந்து நாசமானான். கேயாசி அற்ப பொருள்மீது ஆசையுற்றான். நீங்காத நித்திய குஷ்டரோகத்துக்காளானான். ஒரு சகோதரி அதிக நகையின்மீதும் துணியின்மீதும் ஆசைப்பட்டாள். ஆவிக்குரிய ஜெபம் செய்யும் உதாசீனமானாள். ஆயிரக்கணக்கான நகையும், தங்க ஒட்டியாணமும், பட்டுத்துணிகளும் கிடைத்தது. அவள் இச்சித்ததை கர்த்தர் கொடுத்தார். அவள் ஆத்துமாவிலோ, கர்த்தர் இளைப்பை அனுப்பினார் இவர் உயர்ந்த



உத்தியோகங்கள் மீதும், பட்டங்கள் மீதும் ஆசைப்பட்டு பாலியத்தின் பக்தியையும், இளவயதில் சுவாமியின்மீது பாராட்டிய அன்பையும் இழந்தே போயினர். முள்ளும் கூடவளர்ந்து, வசனம் பலன் செய்யாதபடி நெருக்கியேபோடுகிறது. வாசிக்கும் என் உடன் ஆத்துமாவே! இப்போது உன் அந்தரங்க ஆசையும், விருப்பமும் என்ன? இன்னும் இரண்டு எஜமான்களுக்குத்தானே ஊழியம்செய்ய ஆசைப்படுகிறாய்? தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியம் செய்ய ஒருவனாலும் கூடாதே. ஆபிரகாமுக்கு எகிப்தின் ராஜா கொடுத்த அசுத்த இனம் அல்லவா, சகல பிரிவினைக்கும் காரணம் ஆனது. ஒரு துரைமகன் காட்டில் வேட்டைக்குப் போயிருக்கும் தருணம், தூரத்தில் செத்த பிணம் ஒன்றின் அருகில் உயரமாய் வானமட்டும் எட்டிப் பறக்கக்கூடிய வைகுண்ட பொன்னிற கழுகு ஒன்றைக்கண்டு சுட பிரயத்தனம் செய்யவே, அக்கழுகு திடீரென செட்டையடித்து உன்னதமாய் மேகமட்டும் பறந்துபோயிற்று. இந்த அதிசய காட்சியை இத்துரை பார்த்துக்கொண்டேயிருக்கையில், திடீரென உன்னதத்தில் சிறகு விரித்து வீரியமுடன் பறந்தாடிய கழுகு, சட்டென்று கீழே விழுந்து செத்துப்போனது. செத்த பட்சியை திருப்பிப் பார்த்தபோது, துரைமகன் காரியத்தை கண்டுபிடித்தார். அந்த கழுகு பிணத்தை தின்று கொண்டிருந்த அதே சமயத்தில், அதை யறியாமல் ராஜகிரி யென்னும் ஓர் விஷபாம்பு அதின் இறக்கைகளின் மீது ஏறிக் கடிக்கவே இது வெடுக்கென பறந்துவிட்டது. அதின் விஷம் ஈரக்குலையில் தாவிவிடவே திடீரென விழுந்துமாண்டது. கர்த்தரின் தாசர் பலர் வைகுண்ட பொன்னிற கழுகைப் போன்றவர்கள்தான். பிரசங்கரோம் மேகமண்டலம் எட்டும்படி பேசக்கூடியவர்கள்தான். ஜெபரோம் மூன்றும் வானமட்டும் தொடக்கூடிய வல்லவர்கள்தான். ஆனால் அவர்களிலிருக்கும் பொருளாசையும், உலக நேசமும், சுயபிரயோஜன சிந்தையுமான துவாரங்கள் வழியாக சத்துரு உட்பிரவேசிக்கிறான். சாரத்தையெல்லாம் உறிஞ்சிவிட்டு சக்கையை போட்டவாறு இப்போது பல தேவபுத்திரர் ஜெபத்திலும் பிரசங்கத்திலும் சாரமறுப் போய்விட்டனர். காரணம் என்ன? இவர்கள் வாய் அன்பை காட்டியபோதிலும (எசே. 33. 31). அவர்கள் இருதயமோ பொருளாசையைப் பின்பற்றிப் போகிறது. தேவனுடைய பிள்ளையே, உலகத்தை நேசித்து, பிசாசுக்கு இடம் கொடாதிருப்பாயாக! அவனுடைய உபாயத் திரங்கள், நமக்குத் தெரியாதவைகளல்லவே

IV. நாம் தேவபிள்ளைகளின் ஐக்கியம் விட்டு உலகத்தாருடன் ஐக்கியமாகும் நேரம் சாத்தான் நமக்கு விரோதம் செய்யவரும் நேரம். பிரதான ஆசாரியனாகிய யோசுவா அம்மோனியனான தொபியா வீட்டில் சம்பந்தம் கலந்து, அதின் அடையாளமான அழுக்கு வஸ்திரம் தரித்து நிற்கவே, சாத்தான் அவனுக்கு விரோதம் செய்யும்படிக்கு அவன் வலது பக்கம் வந்து நின்றதாக வாசிக்கிறோம் (சகரி. 3: 1). துன்மார்க்கனுக்குத்

துணைநின்று கர்த்தரைப் பகைக்கிறவர்களை நீர் சிநேகிக்கலாமா? (2 நாளா. 19: 2) பக்தியுள்ள யோசபாத் துன்மார்க்கனான ஆகாபுக்குக் கை கொடுக்கப்போய் கர்த்தர் அவனுடைய கிரியைகளை முறித்துப்போட்டார். 2 நாளா 20: 37. ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது? கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவேது? அவர்களை விட்டுப் பிரிந்துபோய் அசுத்தமானதைத் தொடாதிருக்கும்போது மாத்திரம் கர்த்தருடைய ஆவியானவர் நம்மோடு சேர்ந்துவருவார். கர்த்தருடைய பிள்ளையே! நீ உலகத்தோடு உறவாடி வேத வாசிப்பையும் தனி ஜெபத்தையும் பக்தரின் கூட்டுறவையும், பரிசுத்தரின் சகவாசத்தையும், விட்டுவிட்டு துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடந்து பாவிகளுடைய வழியில் நிற்கும்போது உனக்குக் காவலாய் நிற்கவேண்டிய பரம சம்மனசு உன்னைவிட்டு விலக, உன்னைக் குற்றப்படுத்தக் குரோதிக்கும் சாத்தான் உன் வலதுபக்கத்தில் வந்து நிற்பான். எப்பிராயீம் விக்கிரகங்களோடு இணைந்துபோனான். அவனைப் போகவிடு, என்று கர்த்தர் உன்னை உன் இருதயக் கடினத்திற்கே விட்டுவிடுவார். தன் இருதயத்தைக் கடினப்படுத்துகிறவனோ தீங்கில் விழுவான் (நீதி. 28: 14). என்ற திருவாக்கின்படி நீ சாத்தான் கையில் விழுந்து அபாயப்பட நேரிடும். ஆகையால் என் மகனே! பாவிகள் உனக்கு நயம் காட்டினாலும் நீ சம்மதியாதே. உன் காலை அவர்களுடைய வழிக்குத் தூரப்படுத்து. அப்பொழுது நீ பேதையனாயிருந்தாலும் திசைதப்பிப் போகமாட்டாய். மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழியுண்டு. அதன் முடிவோ மரணவழிகள். உம்முடைய நல்லாவியானவர் என்னை அநுதினமும் செம்மையான வழியில் நடத்துவாராக என்று அநுதினமும் ஜெபிப்பாயாக. கர்த்தருடைய வழிகள் செம்மையானவைகள் நீதிமான்கள் அவைகளில் நடப்பார்கள். பாதகரோவென்றால் அவைகளில் இடறிவிழுவார்கள்.

## யோபின் ஆகமம்

**அதி. 6: 1-13.** இதுதான் யோபின் முதல் பிரசங்கம். முதலாவது தனக்கு நேரிட்ட துன்பமே எலிப்பாஸ் சாட்டின குற்றங்களுக்கு மாறுத்தரம் என்கிறான். எலிப்பாஸ் சொன்ன நியாயங்களுக்கு மாறுத்தரமாகவல்ல, யோபின் புலம்பலில் விளங்கின அநியாயமும் புத்தியீனமுமான வார்த்தைகள் தப்பிதம் என்று அவன் சாட்டின குற்றத்துக்கே மாறுத்தரமாகப் பேசுகிறான். எலிப்பாஸ் கண்டிப்பான வார்த்தைகளை உபயோகித்தான். யோபோ, எலிப்பாஸ் தனக்கு நேரிட்டிருக்கிற துன்பத்தைத் தானே அறியாததால் தன்னுடைய வார்த்தைகளையும் நிதானிக்கக்கூடாது என்று பேசுகிறான். தனக்கு நேரிட்டிருக்கிற உபத்திரவத்தையும் தன் வார்த்தைகளையும் நிறுத்துப்பார்க்க வேண்டும் என்கிறான். அப்படிச் செய்தால் தான் பேசின கோப வார்த்தைகள் தன் உபத்திரவத்தின் அளவுக்



குத் தக்கவைகளல்ல குறைவிருந்தால் தான் புலம்பல் உண்டாகும் இரை கிடைத்தால் காட்டுக்கழுதை கத்தாது, எருது கூப்பிடாது. அவனுக்கு நேரிட்ட துக்கத்தைத் தாங்கத்தக்க பெலன் தனக்கு இல்லாததால் தனக்கு மரணம் நேரிட்டாலும் நல்லது என்று அதை விரும்பினதாகச் சொல்லுகிறான்.

யோபு தனக்கு மிகுந்த சரீரப்பாடு வந்ததினால் இவ்விதம் அங்கலாய்க்கிறான் என்று நாம் எண்ணுவது தப்பிதம். அதல்ல, அநேகப்பாடுகளெல்லாம் தேவனால் உண்டானது என்ற எண்ணம்தான் அவனுக்கு அதிக வருத்தத்தைக் கொடுத்தது. அவைகளைத்தான் 'சர்வவல்லவரின் அம்புகள்' என்கிறான். பாடுகள், கஷ்டம் எவ்வளவு வந்தாலும் சகிப்பான். மரணம் வந்தாலும் பொறுமையாய் ஏற்றுக்கொள்வான். தேவன் தன் சிநேகிதர் என்பது அவன் நம்பிக்கை. அப்படியானால் ஏனென்று தான் நம்பினதால் தனக்கு ஆபத்துண்டாவதேன் என்பதுதான் அவனுடைய கலக்கம். பொல்லாதவனுக்குத்தான் துன்பப்படுகிற காரணம் தெரியும் மனச்சாட்சியினிமித்தம் பாடுகளையனுபவிக்கிற ரத்தசாட்சிக்கும் தான் கைக்கொண்ட சத்தியம் அவன் மனதைத் திடப்படுத்தும். யோபுக்கோ இவ்வித காரணம் ஒன்றும் தென்படவில்லை தான் தேவனோடு சமாதானமாயிருக்கும்போதே அவர் கோபமுள்ளவராகவும் தமது ஊழியக்காரனுடைய பிராணனைக் கசப்பாக்குகிறவராகவும் அவனுக்குக் காணப்படுகிறார். அவன் பிராணனை அவனுக்குக் கசப்பாக்கி, பயங்கரங்கள் அவனைச் சூழ்ந்து அவன் உதடுகளிலிருந்து பதஷ்டமான வார்த்தைகள் புறப்படுகிறது.

அதி. 6: 14-30. எலிப்பாஸ் சொன்ன நியாயங்களுக்கு உத்தரவு சொன்னபின் யோபு முதலாவது தன் சிநேகிதர் சிநேகிதருக்குரிய கடமையாகிய அநுதாபம் காட்டவில்லையென்று குற்றஞ்சாட்டி (வ. 14—21) அப்புறம் அவர்களிடத்தில் காணப்பட்ட நியாயத்தப்பு, குரூரம் முதலிய குற்றங்களை எடுத்துக்காட்டுகிறான். தன் சிநேகிதர்கள் பேசின சூடான வார்த்தைகளைவிடத் தன்னைக்குறித்து அவர்கள் கொண்டிருந்த அபிப்பிராயங்கள்தான் அவனை வாதித்தது. இதுதான் அவன் எதிர்பாராத காரியம். அவர்கள் மோசம் போக்குகிற காட்டாறுகள் என்கிறான்.

**அதி. 7.** 'என் நாட்கள் நெய்கிறவன் எறிகிற நாடாவிலும் தீவிரமாய் ஓடுகிறது (வ. 6), மனுஷனுடைய ஜீவியத்தின் இருண்ட பாகத்தைக் குறித்தே யோபு பேசுகிறான். தன் ஜீவியத்தின் முன்பாகத்தில் விளங்கின தேவஅன்பு, தயவு இவைகளைத் தன் பின் அனுபவத்தின் துன்பங்களினால் மறந்துவிட்டதுபோலிருக்கிறது. இந்த உவமானத்தால் ஓர் நல்ல போதனை அடங்கியிருக்கிறது நமது ஜீவிய ஓடத்துக்குச் சமானம் நெய்கிறவன் வாஞ்சிப்படி நெய்கிறான். அப்படியே நாம் பின்பற்றி நடக்கவேண்டிய மாதிரியுண்டு. அதற்கு நம்மை நடத்துகிறவர் தேவனே.

ஜீவியத்தின் நோக்கம் நமது சுபாவம் நித்திய காலத்துக்கென்று மறுரூபமடையவே. ஒவ்வொரு நாள் ஜீவியமும் அதற்கு நம்மை ஆயத்தப்படுத்துகிறது. விசுவாசி ஒவ்வொருவனும் அந்த உத்தரவாதத்தைத் தினந்தோறும் உணர்ந்து எஜமானுடைய நோக்கத்தைப் பூரணப்படுத்தவேண்டும். நமது முழுமனதையும் பலத்தையும் இதில் செலுத்தவேண்டும். ஒருதரம் செய்த மாதிரியை அழிக்கவும் மாற்றவும் முடியாததுபோல நமது தினசரி ஜீவியத்திலுண்டான தீமை மறுநாள் ஜீவியத்தின் நன்மையினால் மாற்றக்கூடாது. நமது ஜீவியத்தின் ஓட்டத்தைக் கவனித்து நம்மைப் பெலப்படுத்தவும் புதுப்பிக்கவும் பரிசுத்தாவியானவர் நம்மோடிருக்கிறார்.

## ஜீவியத்துக்கேற்ற திருஷ்டாந்தங்கள்

தங்களுக்கு ஓர் நல்ல குருவானவர் வேண்டுமென்று விரும்பி அவருக்கிருக்கவேண்டிய நல்ல லக்ஷணங்களெவையென்று தீர்மானிப்பதற்காக ஓர் சபையை நடத்தும் கமிட்டிமார் ஆலோசித்து மெம்பர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாக அவரவர் விரும்பும் லக்ஷணங்களைக் கடிதத்திலெழுதி அதன்பேரில் தீர்மானிக்க யோசித்தார்கள். அப்படியே ஓர் குறித்தநாளில் அந்த லக்ஷணங்களெவை யென்றறியக் கூடிவந்தபோது எல்லாருடைய விருப்பமும் ஆவிக்குரிய தன்மையுள்ளவர் என்று தெரியவந்தது. அவர்களில் ஒருவர் இதன் விசேஷ முக்கியத்தைக் காட்டும்படித் தமது குறிப்பில், முதலாவது லக்ஷணம் ஆவிக்குரியது. இரண்டாவது லக்ஷணம் ஆவிக்குரியது. மூன்றாவது லக்ஷணம் ஆவிக்குரியது என்று எழுதியிருந்தார். இதைக்கொண்டு நாம் கற்றுக்கொள்ளுகிறதென்னவெனில், ஒரு மனுஷனின் ஆசை யெதுவோ அதுவே அவனுடைய செய்கையிலும் தீர்மானத்திலும் விளங்கும் என்பதே.

காலஞ்சென்ற விக்டோரியா சக்கரவர்த்தினியவர்கள் வாசம்பண்ணும் உவின்சர் மாளிகை (Windsor Castle) யில் வாத்தியம் நடத்தும் தலைவர் (Band Master) ஞாயிற்றுக்கிழமை தோறும் இரண்டுமணி நேரம் வாத்திய அப்பியாசம் இருக்கும் என்று வாத்தியக் கூட்டத்தாருக்கு நோட்டீஸ் கொடுத்தார். அவர்களில் இருவர் ஞாயிற்றுக்கிழமை அப்பியாசத்தை ஆட்சேபித்தார்கள். ஆனால் தலைவரோ அவர்களிருவரையும் உத்தியோகத்திலிருந்து நீக்கிவிட்டார். ராணியம்மாளவர்கள் இதைக் கேள்விப்பட்டுத் தலைவனைக் கூப்பிட்டு' உடனே அவர்களிருவரையும் வேலையில் வைக்கவேண்டும். உவின்சர் மாளிகையில் மார்க்க விஷயத்துக்காக எவ்வித தண்டனையும் விதிக்கப்படவே கூடாது. அது மாத்திரமல்ல, இனிமேல் ஓய்வுநாள் அப்பியாசமே செய்யக்கூடாது என்று கட்டளையிட்டார்கள். அரசர்கள் ஓய்வுநாளைப்பற்றி இவ்வித மதப்புள்ளவர்களாயிருந்தால் எவ்வளவு நன்மையாயிருக்கும்.



தோட்டங்களில் இருவகையான பூச்சிகள் அல்லது ஈக்களைப் பார்க்கலாம். ஒருவகையான பூச்சிகள் பார்வைக்கு அழகானவைகளும் அங்குமிங்கும் ஓடிச் சிற்சில பூக்களில் தங்கி ஒவ்வோர் சொட்டுத் தேனை மாத்திரம் குடிக்கும். அவைகளைவிட அழகில்லாத ஈக்களோ பூக்களில் தங்கியிருந்து, ஆழமாய்த் தேனை எடுத்து அதைப் பின்காலத்துக்கென்று சேர்த்துவைக்கும். முந்தின பூச்சிகள் குளிர்காலம் வந்தவுடன் மாண்டுபோம். பிந்தின வகையான ஈக்களோ மழைகாலமெல்லாம் பிழைத்திருந்து தாங்கள் சேர்த்துவைத்த தேனைச் சாப்பிட்டுப் பிழைத்திருக்கும். வேதாகமத்தை வாசிக்கிறவர்களிலும் இவ்விருவகுப்பாருண்டு. நீ எந்த வகுப்பைச் சேர்ந்தவன்?

## 'கர்த்தர் அறிவார்'

'கர்த்தர் தம்முடையவர்களை அறிவார்'. 2 தீமோ 2: 19.

தேவனுடைய பிள்ளைகளுக்கு இது எவ்வளவு ஆறுதலான வசனம்! சோதனைகளும் பாவங்களும் நிறைந்த இவ்வுலகத்தில், துன்பமும் தொல்லைகளும் நிறைந்த உலகத்தில், நாசங்களும் மோசங்களும் பெருகிவருகிற இந்த உலகத்தில் தேவன் தங்களை அறிந்திருக்கிறார் என்பது எவ்வளவு ஆறுதலைக் கொடுக்கிறது! நமது தவிப்புகள், போராட்டங்கள் மற்றவர்களுக்குத் தெரியாதிருக்கலாம். ஒருவேளை தெரிந்தாலும் உதவிசெய்ய அவர்களால் கூடாமலிருக்கலாம். ஆனால் கர்த்தருக்கு எல்லாம் தெரியுமென்பது மிகுந்த அமரிக்கையை உண்டாக்குகிறதல்லவா?

1. தம்மை நம்புகிறவர்களுக்கு நன்மைசெய்ய அறிந்திருக்கிறார். தம்மை நம்புகிறவர்களை அறிந்திருக்கிறார்' (நாகூம், 1: 7). கர்த்தரை நம்புகிற விஷயத்தில் சங்கீதக்காரன் அதிக அனுபவமுடையவர். நம்புவதின் பாக்கியத்தை அநேக இடங்களில் விவரமாய் பேசியிருக்கிறார். அவர் மாத்திரமல்ல நாமும் தம்மை நம்பவேண்டுமென்று தேவன் விரும்புகிறார். நாம் அவரை நம்பியிருக்கும்போது அது அவருக்குத் தெரியும். நாம் வேறொன்றிலும் நம்பிக்கை வைக்காமல் கர்த்தர்பேரிலேயே பற்றுதலாயிருந்து, எல்லாக்காரியங்களுக்காகவும் அவர் ஒருவரையே நம்பி, எல்லாக் காலத்திலேயும் அவரையே நம்பியிருக்கும்போது அந்த நம்பிக்கை வீணாய்ப் போகிறதில்லை. கர்த்தரை நம்புகிறவர்கள் வெட்கப்பட்டுப்போவதில்லை. நம்மை வெட்கப்படுத்தி பேரைக்கெடுத்து தேவனுக்கு ஆகாதவர்களாக்கிப் போடவேண்டுமென்பது சாத்தானுடைய கோரிக்கையும் முயற்சியுமாயிருக்கிறது. என்னவானாலும் சரிதான். கர்த்தரை நம்பியிருக்கிறவன் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போவதில்லை. அவரை நம்புகிறவர்கள் கைவிடப்பட்டுப்போவதில்லை. நாம் மாறலாம். சிலவேளை உற்சாகமும் சிலவேளை சோர்வும் காணப்படலாம். சிலவேளை பக்தியும் சிலவேளை அவபக்தியும்

தோன்றலாம். நம்முடைய உணர்ச்சி பல காரணங்களாலே பலவிதமாயிருக்கலாம். கர்த்தரோ உண்மையுள்ளவர். அவர் தாமே நம்மைப் பிடித்திருக்கிறார், அவரை நம்பியிருக்கும் பிள்ளைகளை அவருடைய வல்ல கரங்களின் பிடியிலிருந்து பறித்துக்கொள்ள ஒருவனாலும் கூடாது. அவரை நம்புகிறவர்கள் அசைக்கப்படமாட்டார்கள். என்றென்றைக்கும் அசையாத சீயோன் பர்வதம்போலிருப்பார்கள். பெருமழை சொரியலாம், பெருவெள்ளம் வரலாம், பெருங்காற்று அடிக்கலாம், அவன்மேல் இவைகளெல்லாம் மோதலாம், அவன் விழமாட்டான் ஏனென்றால் அவனுடைய நம்பிக்கையின் அஸ்திபாரம் கர்த்தருக்குள் ஆழமாய்ப் போடப்பட்டிருக்கின்றது. 'கர்த்தாவே உமக்குப் பயந்தவர்களுக்கும் மனுப்புத்திரருக்கு முன்பாக உம்மை நம்புகிறவர்களுக்கும் நீர் உண்டுபண்ணிவைத்திருக்கிற உம்முடைய நன்மைகள் எவ்வளவு பெரிதாயிருக்கிறது. மனுஷருடைய அகங்காரத்துக்கு அவர்களை உமது சமுகத்தின் மறைவிலே மறைத்து, நாவுகளின் சண்டைக்கு அவர்களை விலக்கி உமது கூடாரத்திலே ஒளித்து வைத்துக் காப்பாற்றுகிறீர்' (சங். 31: 19, 20) நம்புகிறவர்களுக்கு வாக்குப் பண்ணப்பட்ட நன்மைகள் இன்னும் அநேகமுண்டு.

2. அன்புகூருகிறவர்களை ஆசீர்வதிக்க அறிந்திருக்கிறார். 'தேவனில் அன்புகூருகிறவனெவனோ அவன் தேவனால் அறியப்பட்டிருக்கிறான்' (1 கொரி. 8: 3) ரட்சகர் பேதுருவைப் பார்த்து என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயாவென்று கேட்டார். தமக்குத் தெரியாததினால் அல்ல, பேதுருவை ஸ்திரப்படுத்தும்படி அப்படிக் கேட்டார். பேதுரு சொன்னதென்ன? நீர் அறிந்திருக்கிறீர் ஆண்டவரே என்பதுதான். நாம் அன்புகூருகிறோமோ இல்லையோ அது அவருக்குத் தெரியும். பாவஜீவியம் அன்பின் ஜீவியமல்ல. மற்றெல்லாவற்றைப்பார்க்கிலும் அவரை நாம அதிகமாய் நேசிக்கவேண்டும். அவருடைய அன்பில் நாம் நிலைத்திருக்கும்போது அவருடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளுகிறோம்

(இன்னும் வரும்).

---

## தோட்டமலை

ஆழ்வார்தோப்பிலுள்ள மனோமணி பிரசங்கியார் திருநெல்வேலி, மதுரை அத்தியக்ஷ சங்கத்தைச் சேர்ந்த சபைகளிலும் ஆலயங்களுக்குள்ளும் ஊழியம் செய்யத் தன்னை ஒப்புக்கொடுத்திருக்கிறார். அவ்வித வேலை செய்யும்படி மகாகனம் அத்தியக்ஷர்களும் உத்தரவு கொடுத்திருக்கிறார்கள். வைத்தியமான பண ஊதியம் எதுவும் பாராமல் வேலை செய்வார். தங்கள் சபையிலும் தங்கள் சுவிசேஷம் அவருடைய ஊழியம் வேண்டும் விரும்பும் குருமார் யாவரும் அவருக்கே நேரே கடிதம் எழுதி அழைத்துக்கொள்ளலாம்.

அவருடைய விலாசம்:—

மனோமணி பிரசங்கியார்,
ஆழ்வார்தோப்பு, ஆழ்வார்திருநகரி.

Printed at the Palamcottah Printing Press, Palamcottah and published by the Christian Brotherhood Association, Tinnevelly.

September 1918. Registered No. M. 163.

# The Water of Life

# ஜீவத்தண்ணீர்

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்." யோவான் 7: 38.

Vol. XIX செப்டெம்பர் 1918

## மகா துயரமான வார்த்தைகள்

'அப்படியிருந்தும் உங்களுக்கு ஜீவன் உண்டாகும்படி என்னிடத்தில் வர உங்களுக்கு மனதில்லை'. யோ. 5: 40.

ஓர் பெரிய கல்லறைத் தோட்டத்தைப் பார்ப்போமானால் திரளான பிரேதங்கள் அங்கே அடக்கம்பண்ணப்பட்டிருப்பதைக் காண்போம். குழந்தைகளும் வாலிபப்பிராயமுள்ளவர்களும் முதிர்வயதுள்ளவர்களுமான அநேகர் அங்கே புதைக்கப்பட்டிருப்பார்கள். தேவபார்வையில் இவ்வுலகம் ஓர் பெரிய கல்லறைத் தோட்டம்போலிருக்கிறது. கணக்கற்ற மாந்தர்கள் அவர் பார்வையில் செத்த பிரேதங்களாயிருக்கிறார்கள். நீ அதைப் புசிக்கும் நாளில் சாகவே சாவாயென்று ஆதாமுக்குச் சொல்லப்பட்டது. புசித்த நாளிலேயே அவன் தேவ ஜீவனை இழந்து அவருக்குத் தூரமாகித் தன் பாவத்தில் செத்தான். அந்த மரணம் எல்லா மனுஷரையும் ஆண்டுகொண்டது. கிருபையுள்ள தேவன் செத்தோருக்கு ஜீவன் அருளச்சித்தமானார். தம்முடைய குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்கு தேவன் அவரை இவ்வுலகத்தில் அனுப்பினதினால் தமது அன்பை வெளிப்படுத்தினார். ஜீவனாகிய இயேசு உலகத்தில் வெளிப்பட்டார். மனுஷருக்குள் சஞ்சரித்து ஜீவனையும் ஆசீர்வாதத்தையும் அருளினார். மரித்தோருக்கு உயிரைக்கொடுத்த தமது வல்லசெய்கையினால் தாம் நித்திய ஜீவனை அருள வல்லவரென்று ரூபித்தார். சிறு பெண்ணே எழுந்திரு என்க செத்தவள் பிழைத்தாள். வாலிபனே எழுந்திரு என்க கல்லறைக்குழிக்குள் போகவேண்டியவன் தன் தாயோடு மகிழ்ச்சியாய் வீட்டிற்குச் சென்றான். லாசருவே வெளியே வாவென்க நாறிப்போனவன் வெளியேறி வந்து அவரோடு போஜனபந்தியிருந்தான். இதுபோலவே ஞான ஜீவனை தாம் அருளக்கூடியவரென்று அவர் போதித்தும் அநேகர் அவரை விசுவாசிக்காதிருந்தார்கள். அப்படிப்பட்ட ஓர் சமயத்தில் கூடிநின்றவர்களைப் பார்த்து

நமது ஆண்டவர் இந்த மகா துயரமான வார்த்தைகளைச் சொன்னார். உங்களுக்கு ஜீவன் உண்டாகும்படி என்னிடத்தில் வர உங்களுக்கு மனதில்லையே என்கிறார்.

'அப்படியிருந்தும்' என்று ஆண்டவர் சொல்வதைப் பார்க்கும்போது ஜீவனைப் பெற்றுக்கொள்வதற்கு அவர்கள் அவரிடத்தில் வரும்படிக்கான தகுந்த ஆதாரங்களிருந்தும் அவர்கள் வர மனமில்லாமற்போனார்கள் என்று தெரியவருகிறது. ஆகையால் நாலு சாட்சிகளை அழைத்து அவர்களுடைய குற்றத்தை உணர்த்துகிறார்.

(1) முதலாம் சாட்சி வனப்பிரசங்கியின் சாட்சி. 'நீங்கள் யோவானிடத்தில் ஆளனுப்பி விசாரித்தீர்கள், அவன் சத்தியத்திற்குச் சாட்சி கொடுத்தான்'. ஸ்திரீகளிடத்தில் பிறந்தவர்களில் யோவானைப் பார்க்கிலும் பெரிய தீர்க்கதரிசி ஒருவனுமில்லை. தீர்க்கதரிசனத்தால் முன்குறிக்கப்பட்டவன். தேவதூதனால் அறிவிக்கப்பட்டுப் பிறந்தவன். தன் தாயின் வயிற்றிலிருக்கும்போதே பரிசுத்தாவியினால் நிரப்பப்பட்டிருந்தவன். உலகத்தைவிட்டுப் பிரிந்து தேவஊழியத்துக்குத் தன்னைச் சமூலமாகத் தத்தம் செய்தவன். வல்லமையான பிரசங்கி. அவன் எரிந்து பிரகாசிக்கிற விளக்காயிருந்தான். நீங்களும் சிலகாலம் அவன் வெளிச்சத்தில் களிகூர மனதாயிருந்தீர்கள். அவன் வெளிச்சம் யூதேயாவில் மாத்திரமல்ல எபேசுமட்டும் எட்டினது. அவனை கிறிஸ்து என்று நீங்கள் நினைத்து அவனிடத்தில் ஆளனுப்பி விசாரித்தீர்களே. அவன் சத்தியத்திற்குச் சாட்சிகொடுத்தானே. அவன் சொன்னதென்ன? நான் கிறிஸ்துவல்ல, இயேசுவானவரே கிறிஸ்து. அவர் எனக்குப் பின்வந்தும் எனக்கு முன்னமே இருக்கிறார். அவருடைய பாதரட்சைகளின் வாரை அவிழ்க்கிறதற்கும் நான் பாத்திரனல்ல. அவர் பெருகவேண்டும் நான் சிறுகவேண்டும். நான் தண்ணீரால் ஞானஸ்நானம் கொடுக்கிறேன், அவரோ பரிசுத்தாவியினாலும் அக்கினியினாலும் ஞானஸ்நானம் கொடுப்பார். நான் பாவங்களைக் குறித்துக் கண்டித்துப் பிரசங்கிக்கிறேன், அவரோ பாவங்களைச் சுமந்து தீர்த்துப்போடுகிற தேவ ஆட்டுக்குட்டி. நான் நியாயத்தீர்ப்பைப்பற்றிப் பேசுகிறேன். கோடரி மரங்களின் வேரருகே வைக்கப்பட்டிருக்கிறது. நல்ல கனி கொடாத மரங்கள் வெட்டப்படும் என்கிறேன். அவரோ உலகத்தை நியாயந்தீர்க்கும் நியாயாதிபதி. தூற்றுக்கூடை அவர் கையிலிருக்கிறது. தமது களத்தை நன்றாய் விளக்கிக் கோதுமையைத் தமது களஞ்சியத்திலே சேர்ப்பார், பதரையோ அவியாத அக்கினியால் சுட்டெரிப்பார். நான் அவருக்கு முன்னாக அனுப்பப்பட்டவன். அவரோ தேவகுமாரனாயிருக்கிறார். நான் பூமியிலிருந்து உண்டானவன். அவரோ பரலோகத்திலிருந்து வந்தவர். அவர் எல்லாரிலும் மேலானவர். தேவன் அவருக்குத் தமது ஆவியை அளவில்லாமல் கொடுத்-



திருக்கிறார். எல்லாவற்றையும் அவர் கையில் ஒப்புக்கொடுத்திருக்கிறார். 'குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறான். குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை; தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும்' என்றான். என்னைக் குறித்து திட்டமாகச் சொல்லியிருந்தும் என்னிடத்தில் வந்து ஜீவனைப் பெற்றுக்கொள்ள உங்களுக்கு மனதில்லையே.

(2) இரண்டாம் சாட்சி வல்ல கிரியைகளின் சாட்சி. 'நான் செய்துவருகிற கிரியைகளே . . . என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறது' என் கிரியைகள் யோவானுடைய சாட்சியிலும் மேன்மையானது. நீங்கள் யோவானை கிறிஸ்துவென்று நினைத்தீர்களே. யோவான் ஒரு அற்புதத்தையும் செய்யவில்லையே.

கிறிஸ்து வரும்போது அற்புத கிரியைகளைச் செய்வார் என்று தீர்க்கதரிசனங்களில் முன்னறிவிக்கப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவாக வருகிறவர் அற்புத கிரியைகளைச் செய்வாரென்று யூதர்களும் அறிந்திருந்தார்கள். நிக்கொதேமு இயேசுவினிடத்தில் வந்தபோது ரபீ, நீர் தேவனிடத்திலிருந்து வந்தவர், ஒருவன் தன்னுடனே தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்யமாட்டான் என்றான். பிறவிக்குருடனாயிருந்த கண் திறக்கப்பட்டவன் பரிசேயரைப் பார்த்து: பிறவிக்குருடனுடைய கண்களை ஒருவன் திறந்தானென்று உலகமுண்டானதுமுதல் கேள்விப்பட்டதில்லையே. இவர் தேவனிடத்திலிருந்து வராதிருந்தால் ஒன்றும் செய்யமாட்டாரே என்றான். மாரிகாலத்தில் அவர் சாலொமோனுடைய மண்டபத்திலே உலாவிக்கொண்டிருக்கையில் யூதர்கள் அவரைச் சூழ்ந்துகொண்டு நீர் கிறிஸ்துவானால் எங்களுக்குத் தெளிவாய்ச் சொல்லும் என்று கேட்டார்கள். நான் கிறிஸ்துதான் என்று சொன்னாரா? அல்ல, நான் அதை உங்களுக்குச் சொன்னேன், நீங்கள் விசுவாசிக்கவில்லை. நான் செய்கிற கிரியைகளே என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறது என்றார். யோவான் சிறையிலிருந்து தன் சீஷர்களை அனுப்பி வருகிறவர் நீர்தானோவென்று விசாரிக்கச்சொன்னான். தான் முற்றிலும் கைவிடப்பட்டதுபோல் தோன்றினபடியால் மனங்கலங்கி, விசாரிக்க ஆட்களை அனுப்பினான். நான் கிறிஸ்துதான் என்று சொன்னாரா? நீங்கள் காண்கிற கிரியைகளைப் போய் யோவானுக்குச் சொல்லுங்கள். குருடர் பார்வையடைகிறார்கள் சப்பாணிகள் நடக்கிறார்கள். குஷ்டரோகிகள் சுத்தமாகிறார்கள். சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது. இதைப் போய்ச் சொல்லுங்கள் யோவான் கண்டுகொள்வான் என்றார். ஆம் அற்புத கிரியை செய்கிறவராக கிறிஸ்து உலகத்தில் வந்தார். அவருடைய கிரியைகளைக் கண்டும் அவர்கள் அவரை ஏற்றுக்கொள்ளாதது அவருக்கு மகா துக்கம்.

மேலும் அவர் அவர்களைப் பார்த்து: நான் செய்த அற்புத கிரியைகளைக் கவனித்துப்பாருங்கள். அவைகள் பெரிய கிரியைகள் அல்லவா?

யாராகிலும் அப்படிப்பட்ட கிரியைகளைச் செய்ததுண்டா? ஒருவனும் செய்யாத கிரியைகளை நான் செய்யாதிருந்தேனானால் உங்களுக்குப் பாவமிராது. நீங்கள் அவைகளைக் கண்டும் என்னைப் பகைக்கிறீர்களே (யோ. 15: 24). அவைகளை ஏராளமாக நான் செய்யவில்லையா? சில கிரியைகள் மாத்திரம் செய்து அப்புறம் நிறுத்திவிட்டேனா? சகல நோயாளிகளையும் சகல பேய்பிடித்தவர்களையும் இடைவிடாமல் நான் குணமாக்கவில்லையா? அவைகளை எல்லாரும் அறிய நான் நடப்பிக்கவில்லையா? நான் மறைவிலே நான் ஒன்றும் செய்ததில்லையே. திரள் கூட்டம் கூடியிருந்த சமயங்களில் யாவரும் காணத்தக்கதாக நான் எத்தனையோ அற்புதங்களைச் செய்தேனே. என்னை விரோதிக்கிறவர்களும்கூட அவைகளைக் கண்டார்களே. மேலும் வேறு நோக்கத்தோடு நான் அற்புதங்களைச் செய்யாமல் நோயாளிகள்மேல் மனதுருகியல்லவோ அவைகளைச் செய்தேன். என்னிடத்தில் நன்மை பெற்றவர்கள் உள்ளாகவும் மாற்றப்பட்டிருக்கிறார்களே. நான் கிறிஸ்து வென்பதற்கு என் கிரியைகள் சாட்சியல்லவா என்றார்.

கிறிஸ்து செய்த அற்புதங்கள் மகா முக்கியமானவைகள். தற்காலத்தில் அநேகர் அவைகளைப் பழங்கதைகள்போல் எண்ணுகிறார்கள். சிலர் அவைகள் நடந்ததோ என்னமோவெனச் சந்தேகிக்கிறார்கள். வேறு சிலர் உவமானமாகச் சொல்லப்பட்டிருக்கிறதென்கிறார்கள். கிறிஸ்துவின் கிரியைகளைச் சந்தேகிக்கிறவர்கள் எப்படி கிறிஸ்தவர்களாயிருப்பார்களோ நமக்குத் தோன்றவில்லை. ஆனால் கிறிஸ்துவின் சத்துருக்களோ அவர் செய்த அற்புதங்களைச் சந்தேகிக்காமல் ஒப்புக்கொண்டார்கள். இவன் நாம் காணத்தக்கதாக அநேக அற்புதங்களைச் செய்கிறானே என்றார்கள். ஆனால் அவர் சாத்தானுடைய உதவியைக்கொண்டு செய்கிறதாகச் சொன்னார்கள். அற்புதங்கள் செய்யப்படவில்லையென்று சொல்லாமல் செய்யப்பட்ட அற்புதங்கள் பிசாசினாலே என்று தப்பாய் நினைத்தார்கள். அவர்கள் இருதயம் திருக்குள்ளதாயிருந்தபடியால் அப்படி நினைத்தார்கள்

(௩) மூன்றாம் சாட்சி வானபிதாவின் சாட்சி 'என்னை அனுப்பின பிதாதாமே என்னைக் குறித்துச் சாட்சி கொடுத்திருக்கிறார்.' அவர் ஞானஸ்நானம் பெற்று கரையேறினபோது இவர் என்னுடைய நேசகுமாரன் இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று பிதா சாட்சிபகர்ந்தார். மறுரூப மலையில் இவர் என்னுடைய நேசகுமாரன் இவருக்குச் செவிகொடுங்கள் என்று சாட்சிகொடுத்தார். கிரேக்கர் அவரைப் பார்க்க ஆசைப்பட்டு வந்தபோது மகிமைப்படுத்தினேன் இன்னும் மகிமைப்படுத்துவேன் என்கிற சத்தம் வானத்திலிருந்து உண்டாயிற்று. அங்கே நின்றவர்கள் இது இடிமுழக்கம் என்றார்கள். வேறு சிலர் தேவதூதன் அவருடனே பேசினான் என்றார்கள். இயேசுவோ அவர்களைப்பார்த்து இந்தச் சத்தம் என்னிமித்தம் உண்டாகாமல் உங்கள் நிமித்தமே உண்டாயிற்று என்றார். பிதாவினால் உண்டான சாட்சிக்கு அவர்கள் செவிகொடுக்கவேண்டியது எவ்வளவு



நியாயம்! ஒரு பெரிய ஆலயத்தில் ஒருவர் பிரசங்கித்துக்கொண்டிருக்கும் போது வானத்திலிருந்து: இவன் என்னுடைய ஊழியக்காரன் இவன் பேசும் வார்த்தைகளுக்குச் செவிகொடுங்கள் ஜனங்களே என்று ஒரு சத்தம் உண்டாகுமானால் சபையார் எவ்வளவு பயத்தோடும் கவனத்தோடும் செவிகொடுப்பார்கள்! ஆனால் இயேசுவின் நாட்களில் இருந்தவர்களோ அவருடைய உபதேசத்துக்குச் செவிகொடாமல் கெட்டுப்போனார்கள் பரிசுத்த பேதுரு வெகுகாலத்திற்குப் பிறகு பிதாகொடுத்த சாட்சியைக் குறித்து என்ன சொல்லுகிறார் பாருங்கள். 'நாங்கள் தந்திரமான கட்டுக்கதைகளைப் பின்பற்றினவர்களாக அல்ல அவருடைய மகத்துவத்தைக் கண்ணாரக் கண்டவர்களாகவே நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் வல்லமையையும் வருகையையும் உங்களுக்கு அறிவித்தோம். இவர் என்னுடைய நேசகுமாரன் இவரிடத்தில் பிரியமாயிருக்கிறேன் என்று சொல்லுகிற சத்தம் உன்னதமான மகிமையிலிருந்து அவருக்கு உண்டாகி பிதாவாகிய தேவனால் அவர் கனத்தையும் மகிமையையும் பெற்றபோது, அவரோடே கூட நாங்கள் பரிசுத்த பர்வதத்திலிருக்கையில் வானத்திலிருந்து பிறந்த அந்தச் சத்தத்தைக் கேட்டோம்.' (2 பேது. 1: 16—18) அப்படியிருந்தும் ஜீவனுண்டாகும்படி அவரிடத்தில் போக அவர்களுக்கு மனமில்லாமற்போயிற்று.

4) மேலாய சாட்சி வசனத்தின் சாட்சி. 'வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள் என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறவைகள் அவைகளே'. யூதர்கள் தங்கள் வேதத்தை மதித்தார்கள். அடிக்கடி வாசிக்கக் கேட்டார்கள். ஒரு குருட்டுப் பக்திபோல் அதை வாசித்தார்களேயன்றி ஆராய்ந்து பார்க்கவில்லை, பெரோயா ஊராரைக் குறித்து: அவர்கள் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்தபடியினால் தெசலோனிக்கே பட்டணத்திலுள்ளவர்களைப்பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தார்கள் என்று சொல்லியிருக்கிறது. வெறும் வாசிப்புக்கும் ஆவலோடு வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்ப்பதற்கும் மிகுந்த வித்தியாசமுண்டு. ஆபேலின் பலியால் குறிக்கப்பட்டவர் யார்? நோவாவின் பேழை போதிப்பதென்ன? பஸ்கா ஆடு யாருக்கு அடையாளம்? யாக்கோபின் ஏணி போதிக்கிறதென்ன? ஆசரிப்புக்கூடாரம், வானத்தின் மன்னா, வெண்கல சர்ப்பம், கன்மலையின் தண்ணீர் இவைகளெல்லாம் யாரைக் காட்டுகின்றன? ஸ்திரீயின் வித்தென்றும், ஆபிரகாமின் சந்ததி என்றும், சமாதானக் கர்த்தரென்றும் அழைக்கப்பட்டவர் யார்? 'நமது மீறுதல்கள் நிமித்தம் அவர் காயப்பட்டு, நமது அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்' என்று ஏசாயா யாரைக் குறித்துச் சொன்னான்? சகல ஜாதிகளாலும் விரும்பப்படத்தக்கவர் வருவார் என்று ஆகாய் யாரைக் குறித்து முன்னறிவித்தான்? வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள். அவைகளெல்லாம் என்னில் நிறைவேறுகிற மாதிரி வேறே யாரிலேயாகிலும் நிறைவேறினதுண்டா? அப்படியிருந்தும் உங்

களுக்கு ஜீவனுண்டாகும்படி என்னிடத்தில் வர உங்களுக்கு மனதில்லையே என்கிறார்

ஜீவனைப் பெற்றுக்கொள்ளும்படி அவர்கள் ஏன் வரவில்லை? ஆண்டவர் சொல்லுகிற காரணமென்ன? மனமில்லாததினாலேயே என்கிறார். மனம்தான் காரணம். என்னை ஏன் நீங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை? 'என் உபதேசத்தைக் கேட்க மனமில்லாததினால் அல்லவா?' எத்தனை தரமோ நான் உங்களை சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேனே, 'உங்களுக்கோ மனதில்லாமற் போயிற்று'. நீங்கள் சாகிறது எனக்குப் பிரியமேயில்லை. உங்கள் ஒவ்வொருவனுக்காகவும் மரணத்தை ருசிபார்த்திருக்கிறேன். உங்கள் ஒவ்வொருவனையும் அழைக்கிறேன். உங்கள் ஒவ்வொருவனையும் ரட்சிக்க மகா ஆசையாயிருக்கிறேன். அதற்காக எவ்வளவோ பாடுகளைப் பட்டேன். அப்படியிருந்தும் உங்களுக்கு மனமில்லாமற்போனால் நான் என்ன செய்யட்டும்? நீ கெட்டுப்போனால் நீதான் காரணம். என்பேரில் தோஷமில்லை. நடக்கமாட்டாத 38 வருஷம் வியாதிக்காரனுக்கு சொஸ்தமாக மனமா வென்று கேட்டேன். மனமுண்டென்று கண்டபோது எழுந்து நடக்கச் செய்தேன். எல்லா இடங்களிலும் நன்மை செய்ததுபோல நாசரேத்தூராருக்கும் நன்மைசெய்ய நாடிப்போனேன். அவர்களுக்கு மனமில்லை. என்னால் ஒன்றும் செய்யக்கூடாமற்போயிற்று.

இதை வாசிக்கும் சகோதரனே, கிறிஸ்துவினிடம்போய் ஜீவனைப் பெற்றுக்கொண்டாயா? மரண நிலைமையை விட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறாயா? ஜீவனுண்டாகும்படி என்னிடத்தில் வா என்று ஆண்டவர் சொன்ன வார்த்தையைக் கவனி. மார்க்கத்தில் நீ வந்திருக்கலாம். சபையில் சேர்ந்திருக்கலாம். ஞானஸ்நானத் தொட்டியண்டை நின்றிருக்கலாம். ராப்போஜனத்தில் பங்கு பெற்றிருக்கலாம். வேதத்தைத் திறந்து வாசித்திருக்கலாம். குருவினிடம் அடிக்கடி போயிருக்கலாம். ஏமாந்து போகாதே. மனதைத் தேற்றிக்கொள்ளாதே. யாராயிருந்தாலும் சரி ஒருவன் கிறிஸ்துவினிடம் போகாவிட்டால் அவனுக்கு ஜீவன் இல்லை. அவன் உயிருள்ளவனென்று பேர்கொண்டிருந்தும் செத்த பிரேதமே. கிறிஸ்தவ சகோதரனே ஜீவனைக் கண்டாயா? உனக்கு அந்த நிச்சயமுண்டா? இருளும் ஒளியும் ஒன்றல்ல. மரணமும் ஜீவனும் ஒன்றல்ல. ஜீவனைக் கண்டவன் ஜீவியத்தில் பெரிய மாறுதல் காணப்படவேண்டும். மரண நிலைமை மூச்சற்று, பேச்சற்று, முயற்சியற்று இருக்கிற நிலைமை. ஜீவ நிலைமையோ ஆவிக்குரிய பெரிய மாறுதலுள்ள நிலைமை. உன்னில் நல்ல மாறுதல்கள் உண்டா இல்லையா? தேவன் உனக்கு நித்திய ஜீவனைத் தந்திருக்கிறார். அந்த ஜீவன் அவருடைய குமாரனுக்குள்ளே இருக்கிறது. அந்த குமாரனையுடையவன் ஜீவனையுடையவன். தேவகுமாரன் இல்லாதவன் ஜீவனில்லாதவன்.

S, பரமானந்தம்



## கர்த்தர் அறிவார். (தொடர்ச்சி)

### 2. அன்புகூருகிறவர்களை ஆசீர்வதிக்க அறிந்திருக்கிறார்.

பரிசேயன் வீட்டில் அவர் பந்தியிருக்கையில் ஒரு பாவியான மனுஷி அவரிடத்தில் வந்தாள். 'இவள் செய்த அநேக பாவங்கள் இவளுக்கு மன்னிக்கப்பட்டது இவள் மிகவும் அன்புகூர்ந்தாளே' என்றார். அவருடைய கிருபையினால் சம்பாதிக்கப்பட்ட ரட்சிப்பு அன்பர்களுக்கு அருளப்படுகிறது. அன்பர்களோடு அவர் வசித்து அவர்களுக்குத் தம்மை வெளிப்படுத்துகிறார். யோவான் பதிவினால் இதைக்காண்கிறோம். அன்பனிடத்தில் வந்து நான் வாசம்பண்ணுவேன் அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன் என்கிறார். உன்னதமான காரியங்கள் அன்பின் சிஷனுக்கல்லவோ வெளிப்படுத்தப்பட்டது. வாசம்பண்ணுவதும் வெளிப்படுத்துவதும் எவ்வளவு பெரிய ஆசீர்வாதம்! எந்த சாஸ்திரமும் அதின்பேரில் அன்புவைக்கிறவனுக்கே தன்னை வெளிப்படுத்தும். சங்கீதமும் தன்னை விரும்புகிறவனுக்கே தன்னை வெளிப்படுத்துகிறது. அநேகர் இயேசுவை அறிந்திருப்பது ஆச்சரியமல்ல. இது சொல்லிவருகிற காரியமல்ல. வெளிப்படுத்தி அறியவேண்டிய காரியம். அன்பர்களுக்கு ஜீவக் கிரீடத்தை தேவன் ஆயத்தம்பண்ணியிருக்கிறதாக யாக்கோபு சொல்லுகிறார். இன்னும் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு தேவன் ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை என்று பவுல் சொல்லுகிறார். அன்பர்களுக்கு அருளப்படும் ஆசீர்வாதம் மகா மேலானது. அன்பற்றவனுக்கு அருளப்படுவதோ சாபம். 'ஒருவன் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிடத்தில் அன்புகூராமற்போனால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக் கடவன்' (1 கொரி. 16: 22). பயங்கரமான முடிவு!

3. **தேவனுடைய ராஜ்யத்தை தேடுகிறவர்களுக்கு தேவையானதைக் கொடுக்க அறிந்திருக்கிறார்.** 'இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகளென்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார். முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள் அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக்கொடுக்கப்படும்' (மத். 6: 32, 33). இவ்வசனங்களில் நமது ரட்சகர் பரமபிதா நமதுபேரில் வைத்திருக்கும் கரிசனையை வெகு தெளிவாக எடுத்துக்காண்பிக்கிறார். ஒரு நல்ல தகப்பன் தான்பெற்ற பிள்ளைகளுக்கு வேண்டிய நன்மைகளை தன் திராணிக்குத் தக்கதாக கொடுக்க எவ்வளவோ முயலுகிறான். பரமபிதா தம்மைத் தேடும் பிள்ளைகளுக்கு நன்மையானவைகளைச் செய்வது எவ்வளவு நிச்சயம்! தேவன் நமக்கு நன்மை செய்வார் என்கிற நம்பிக்கை நமக்கு உண்டாகும்படி ரட்சகர் எடுத்துக்காட்டுகிற உபமானங்களைப் பாருங்கள். காட்டுப் புஷ்பங்களைக் கவனித்துப் பார்க்கச் சொல்லுகிறார். எவ்வளவு அலங்காரமாக தேவன் அவைகளை உடுத்தியிருக்கிறார்! காட்டுப் புல்

லைப் பார்க்கிலும் நீங்கள் எவ்வளவோ விசேஷித்தவர்கள் அல்லவா? அடைப்பிலே போடப்படும் காட்டுப் புல்லுக்கு தேவன் இவ்விதமாக உடுத்துவித்தால் உங்களை உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவா? காகங்களைப் பாருங்கள். அவைகளையும் தேவன் பிழைப்பூட்டுகிறார், பறவைகளைப் பார்க்கிலும் நீங்கள் எவ்வளவோ விசேஷித்தவர்களாயிருக்கிறீர்களே. உங்களைப் போஷிக்கமாட்டாரா? தேவன் தமது குமாரனாகிய என்னை உங்களுக்காக வல்லவா கொடுத்தார். என்னையே கொடுத்தவர் கிழிந்துபோகிற வஸ்திரங்களையும், அழிந்துபோகிற போஜனத்தையும் மங்கிப்போகிற பொன்னையும், உங்களுக்கு இன்னும் தேவையான நன்மைகளையும் கொடாமல் இருப்பாரா?

இப்படிச் சொன்னவர் ஒரு நிபந்தனை போடுகிறார். நீங்கள் தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையுமே பிரதானமாகத் தேடுங்கள். அதையே எப்பொழுதும் எல்லாவற்றிலும் தேடுங்கள். அப்பொழுது உங்களுக்கு வேண்டியதெல்லாம் கூடக் கொடுக்கப்படும் என்கிறார். சொன்னவர் உண்மையுள்ள ரட்சகர். அநேகர் இது உண்மையென்று தங்கள் அனுபவத்தால் கண்டறிந்திருக்கிறார்கள். இது நமக்கும் பலிக்காதோ? வண்டி ஓடவேண்டுமானால் குதிரையை வண்டிக்கு முன் கட்டவேண்டும். வண்டிக்குப் பின்னே குதிரையைக் கட்டிக்கொண்டு வண்டி ஓடவில்லையே என்று முறையிடுவது மதியீனம். நமது தேட்டம் யாவும் முதலாவதாக உலகமாயிருக்கிறது. எப்படிச் சம்பாதிப்போம்? என்னத்தை உண்போம்? என்னத்தை உடுப்போம்? எப்படிப் பிழைப்போம் என்று இடைவிடாத கவலையில் ஆழ்ந்துபோயிருக்கிறோம். தேவனுடைய ராஜ்யத்தின் தேட்டமோ இல்லை. ஒருவேளை இருந்தாலும் அதை இரண்டாம் காரியமாகப் பின்னுக்குக் கட்டிப்போடுகிறோம். குடும்பசகடமாகிய வண்டி ஓடவில்லையே என்றும் முறையிடுகிறோம். ஆண்டவருடைய ஒழுங்கு, நமது கவலையும் வாஞ்சையும் தேட்டமும் உழைப்பும் முதலாவதாக பிரதானமாக எப்பொழுதும் தேவகாரியமாயிருக்கட்டும். அப்பொழுது தேவன் அதிசயமான பிரகாரம் நமது உள்ளம் களிகூர்ந்து பூரிக்கத்தக்கவண்ணம் நமது குடும்பக் காரியங்களை ஆசீர்வதிக்கிறாரோ இல்லையோவென அதிலே அறிவோம்.

4. தேவ பக்தர்களை சோதனையினின்று காக்க அறிந்திருக்கிறார் (2 பேது. 2: 9). பேதுரு இரண்டு மூன்று திருஷ்டாந்தங்களைச் சொன்ன பின் இந்த வார்த்தைகளைத் தேறுதலாகச் சொல்லுகிறார். பூர்வ உலகமனைத்தையும் தேவன் அழித்த காலத்தில் பக்தனான நோவாவையும் அவன் குடும்பத்தையும் காக்க அவர் மறக்கவில்லை. சோதோம் கொமோரா பட்டணங்களை அக்கினியால் அழித்தபோது பக்தனான லோத்தை ரட்சிக்க அவர் மறந்துபோகவில்லை. அப்படியே எக்காலத்திலும் தேவ பக்தர்களை தேவன் காப்பாற்றுகிறார் என்று பேசுகிறார். சகோதரரே, பயங்கரமான காலங்கள் இனி வருகிறதாயிருக்கிறது. ஜனத்துக்கு விரோதமாய் ஜன



மும் ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பிவிட்டதல்லவா? உலக சரித்திரத்தில் இப்பேர்க்கொத்த பயங்கரமான யுத்தம் ஒருபோதும் நடந்ததில்லை. ரட்சகர் முன்னுரைத்த வார்த்தை இத்தோடு போய்விட்டதா? பல இடங்களிலும் மகா பூமியதிர்ச்சி உண்டாகவேண்டுமே. பஞ்சங்களும் கொள்ளைநோய்களும் பரவவேண்டுமே. சமுத்திரத்தில் கொந்தளிப்பும் வானத்தில் பயங்கரமான அடையாளங்களும் தோன்றவேண்டுமே. பூமியின்மீது குடியிருக்கிறவர்களுக்கு தத்தளிப்பும் இடுக்கணும் உண்டாகும். நேரிடும் ஆபத்துகளுக்குப் பயந்து எதிர்பார்க்கிறதினால் மனுஷருடைய இருதயம் சோர்ந்துபோகும் என்றாரே. கொடியகாலத்தில் அல்லவோ வந்திருக்கிறோம். தேவனுடைய பிள்ளைகள் மேலே நோக்கிப்பார்த்து தங்கள் தலைகளை உயர்த்தவேண்டிய சமயம் வந்துவிட்டது என்ன நேரிட்டாலும் இவைகள் எல்லாவற்றிலுமிருந்து தேவன் தமது பக்தர்களைக் காத்து ரட்சிப்பது நிச்சயம். நீ நம்பியிருக்கிற இந்த நம்பிக்கை என்ன? கர்த்தரை நம்பியிருக்கிறாயோ? அவர் உன்னைக் காப்பாரென்று வஞ்சித்துக்கொள்ளாதே என்று ரப்சாக்கே, எசேக்கியாவுக்கு விரோதமாக ஆணவத்தோடு பேசினான். மெய்யாகவே, எசேக்கியா கர்த்தர் பாதத்தில் விழுந்து கர்த்தரையே நம்பியிருந்தான். நடந்தென்ன? அன்று இரவு ஒரே தூதன் புறப்பட்டு அசீரியரின் பாளயத்தில் லட்சத்தெண்பத்தையாயிரம் பேரைச் சங்கரித்தான். சனகெரிப் ஓர் மகன் கையினால் மடிந்தான். வல்ல தேவன் பக்தர்கள் பட்சத்திலிருக்கிறார். அவர்களுடைய போராயுதங்கள் அரண்களை நிர்மூலமாக்கும். தேவ பக்தர்களை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக்காக்க தேவன் அறிந்திருக்கிறார் என்று பார்க்கிறோம். ஆகையால், தேவன் ஒருவரையே எக்காலத்திலும் நம்புவோமாக; அவர் தம்மை நம்புகிறவர்களுக்கு நன்மை செய்ய அறிந்திருக்கிறார்.

தேவனிடத்தில் முழு இருதயத்தோடும் அன்புகூருவோமாக: அவர் தம்மில் அன்புகூருகிறவர்களை ஆசீர்வதிக்க அறிந்திருக்கிறார்.

தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையுமே தேடுவோமாக; அப்படித் தேடுகிறவர்களுக்கு தேவையான நன்மைகளைக் கூடக் கொடுக்க அவர் அறிந்திருக்கிறார்.

தேவனிடத்தில் பக்தியுள்ளவர்களாகயிருப்போமாக; அவர் தேவ பக்தியுள்ளவர்களை எல்லாத் தீங்கினின்றும் சோதனையினின்றும் காக்க அறிந்திருக்கிறார்.

S. பரமானந்தம்.

---

## அன்பில் நிலைத்திருக்க இன்ப ஆலோசனைகள்

நமது ஆண்டவர் வந்த காலத்தில் யூதச் சபையின் நிலைமையைப் பார்த்து, 'நீங்கள் நியாயத்தையும் தேவ அன்பையும் விட்டுவிடுகிறீர்கள்'

என்று ஞாக். 11: 12ல் சொன்னார். 'உங்களில் தேவ அன்பில்லை என்று உங்களை அறிந்திருக்கிறேன்' என்று யோ 5: 42ல் கூறுகிறார். யூதசபையின் முக்கியஸ்தர் பல நற்காரியங்களையும் வெளிச்சடங்காசாரங்களையும் செய்து, தேவனில் அன்புகூறுவதுபோல யாரீசம் செய்து, பார்வைக்கு நீண்ட ஜெபம்பண்ணி, விதவைகளின் வீடுகளை உள்ளபடியே பட்சித்தனர். ஏசேக்கியாவின் காலத்தில் ஜனங்கள் வாயினால் இன்பமாய்ப் பேசி, உள்ளத்திலோ பொருளாசையின் பாதையில் போனதாக வாசிக்கிறோம். பரிசுத்த யோவான் தமது நிருபத்தில் 'அவனுக்குள் தேவ அன்பு நிலைகொள்ளுகிறது எப்படி?' என்றார். 1 யோ. 2: 5. தற்காலம் தமிழ்நாட்டுச் சபையில் பாட்டுண்டு, படிப்புண்டு. ஜெப கூட்டங்களும் சுவிசேஷ எக்காள சத்தமும் முழங்கி தொனிக்கிறது. கிருபையின் சாக்கிரமெந்துகள் ஒழுங்காய் நடைபெறுகிறது. சுய ஆதரவு முயற்சியும் ஊழியப் பிரசங்கமும் அதிகம்தான். கன்வென்ஷன் கூட்டங்களும் கணக்கற்ற பிரசங்க முயற்சிகளும் அதிகமே. ஆனால் 'ஆதியிலிருந்த அன்பை நீ விட்டுவிட்டாய் என்று உன்பேரில் எனக்கு குறையுண்டு என்று அருள்நாதர் பரிதபிக்கிறார். தமிழ்நாட்டிலுள்ள ஒரு பெரியவர் என் பெற்றோர் இந்துக்களாயிருந்த காலத்தில் எங்கள் வீட்டுத் திண்ணையில் இரவில் ஒருவன் வந்து படுத்திருந்தால் அவன் சாப்பிட்டானா என்று தட்டிக் கேட்டு அவன் பசியாற்றாமல் தங்கள் வீட்டை அடைத்து படுக்கமாட்டார்கள். இப்போது கிறிஸ்தவ வீட்டின் வாசல், ஏழை எளியோரை தூரத்தில் காணும்போதே இழுத்து அடைக்கப்படும் அடி இடி ஓசைபோல எதிரொலிக்கிறது' என்று ஏக்கமுற்று புலம்பினார். மயிர் பெருத்த ஆட்டில் மாமிசம் அதிகம் இராது. பெரிய சத்தமிடும் தம்புரு கிழித்தபின் ஒன்றுமிராது. பேச்சும், பிரசங்கமும் அதிகப்படவே ஆவிக்குரிய அன்பு அறைகுறையாகிவிட்டது. ஆனால் இப்படி குற்றம் சொல்லி குறைகூறும்படி இதை எழுதாமல் இவ்விதக் குறை நீங்கவும், அன்பு அதிகரிக்கவும், சில இன்ப ஆலோசனை இங்ஙனம் கூறுவதே என் நோக்கம். திருச்சபையே! தேவ புத்திரரே! உண்மையுடன் உழைக்கிற தேவதாசரே! தேவ ஆவியின் மூலம் தேவ அன்பு உங்கள் இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறது. ரோமா 5: 5. கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மை எவரும் பிரிக்கவுமுடியாது. ரோமர் 8: 39. ஆனால் நமது மீது பரிசுத்தாவியானவர் பொழிந்தருளும் தேவ அன்பை உங்கள் இருதயங்களில் பத்திரமாய் பாதுகாக்கும் (யூதா 21) இன்ப ஆலோசனைக்கு செவி கொடுப்பீர்களாக.

முதலாவது கோள்வார்த்தை சொல்லாதே, கோள்வார்த்தை கேளாதே. விறகு இல்லாமல் நெருப்பு அவியும். கோள் சொல்லுகிறவன் இல்லாமல் சண்டை ஓயும். கோள் சொல்லுகிறவன் பிராண சிநேகிதரையும் பிரித்துவிடுகிறான் என்பது ஞானியின் வசனம். முன்னாலத்துக் கிராமப் பள்ளிக்கூட வாசகப் புஸ்தகத்தில் நான் வாசித்த கதையொன்று என் ஞாபகத்தில் வருகிறது. ஒரு பட்டணத்தில் ஒரு புருஷ



னும் மனைவியும் ரொம்ப அன்பும் ஐக்கியமுமாய் ஜீவித்து வந்தார்கள். அவர்கள் வீட்டுக் குடும்ப ஜீவியம் பாக்கியமுள்ள பரதீசுபோலிருந்தது. அவர்களுடைய அன்பின் வாசனை அப்பட்டணமெங்கும் வீசியது. இதைக் கண்ணுற்ற வன்கண்ணரான சிலர் சபதம்போட்டு இதைப் பிரிக்க ஆலோசனை செய்தனர். அவ்வீட்டுத் திண்ணையில் போய் இருந்து முகஸ்துதி பேசத் தலைப்பட்டனர். முகஸ்துதி பேசுகிறவன் தன் கால்களுக்கு வலையை விரிக்கிறான் என்ற நீதியின் வசனத்தை மறந்து அந்த அம்மாள் ஏவாளைப் போல இவர்கள் சொற்களைக் கவனித்தாள். கோள் சொன்ன அந்த பேலியாளின் மகன் அவளைப் பார்த்து (அம்மா, பாக்கியவதி, நீங்கள்தான் சீதாலக்ஷிமி, உங்கள் வீடுதான் சொர்க்கம்போலிருக்கிறது. உங்கள் வீட்டுடையானைப்போல் தருமர் ஒருவரும் இல்லை, ஆனால் ஒரு காரியம்தான், உங்களிடத்தில் சொல்ல பயமாயிருக்கிறது. உங்கள புருஷன் முன் பிறவியில் உப்புக் குறவனாயிருந்தவர் என்றான்). உடனே அவள் திடுக்கிட்டுக் கோபப்படவே, அம்மா, கோபப்படவேண்டாம், நான் சொல்லுகிறது உண்மை. அதைப் பரீட்சிக்கவேண்டுமானால், இரவில் அவர் தூங்கும்போது உப்புக் குதிகாலை நக்கிப் பாருங்கள். அது உப்புக் கைக்கும் என்றான். இப்படிச் சொல்லி வெளியே போய், ஆபீசிலிருந்து திரும்பி வரும் புருஷனிடம் ஐயா, உங்கள வீட்டு அம்மாளைப்போல் புண்ணியவதி இந்த உலகிலும் கிடையாது. ஆனால் ஒரு காரியம் தங்களிடம் சொல்ல விரும்புகிறேன். அவர்கள முன் பிறவியில் நாய்ப் பிறவியாயிருந்தவர்கள் என்கவே, அவன் கோபப்பட்டு, இதெப்படி தெரியும் என்க, ஒவ்வொரு நாளும் இரவில் தாங்கள் தூங்கும்போது தங்கள் உப்புக் குதிகாலை நக்குவதே அவர்கள் வழக்கம் என்றான். இருவரும் கோள் வார்த்தைக்கு காது கொடுத்தார்கள். இருவரும் இதைச் சோதித்துப் பார்க்க மனதில் தீர்மானித்தனர். அர்த்தராத்திரியில் புருஷன் தூங்கும் சமயம் மனைவியானவள் வந்து காலை நக்க, சீ நாயே என்று இவன் உதைத்துத் தள்ள, அவள் சீ, உப்புக்குறவா என்று சண்டைபோட பெரிய சண்டையும் அடிபிடியுமாகி அன்பு போய் குடும்ப பாக்கியம் அலைகழிவாகிவிட்டது. நமது தமிழ்நாட்டில் கிறிஸ்தவத் தெருக்களில் இவ்விதமாய் வீடுகள்தோறும் கோள் சொல்லுகிறவர்கள் திரிந்து அலைகிறார்கள். நாடியின்மேல் கை வைத்து நலம் பேசுகிறவர்கள்போல பேசி நாம் ஒன்றும் சொல்லப்படாது என்று சொல்லி ஒரு வீடு தவறாமல் பிறரின் நன்மையைத் தூஷித்தலைகிறவர்கள் உண்டு. பிறர்மேல் கோள் சொல்லி தங்களை பெரியோர், மேலதிகாரிகளிடம் நல்லவர்களாகவும் நீதிமான்களாகவும் பாராட்டுகிறவர்கள் உண்டு. இவர்களுடைய வார்த்தைகளினிமித்தம் கண்ணீர் விட்டுப் புலம்பித் தவிக்கிறவர்கள் உண்டு. கோள் சொல்லுகிற நாவே! எச்சரிக்கையாயிரு, கர்த்தர் உன்னை அறுத்துப்போடுவார். நீ ஜீவனுள்ளோர் தேசத்திலிருந்து சீக்கிரம் பிடுங்கப்படுவாய். உன் நாவினால் அயலகத்தானைக் கெடுக்காதே. யார்

கர்த்தருடைய பர்வதத்தில் ஏறுவான்? யார் அவருடைய பரிசுத்த சமுகத்தில் வாசம்பண்ணுவான்? தன் அயலான்மேல் சொல்லப்படும் நிந்தையான பேச்சை எடுக்காமலும் [காது கொடுத்து கேளாமலும்] இருக்கிறவனே. இந்துக்களான எத்தனையோ குடும்பங்கள் எத்தனை தலைமுறையோ பிரிவினையில்லாமல் ஐக்கியமாயிருக்க, கிறிஸ்தவக் குடும்பங்கள் பிரிந்து சீழிவானேன்? கிறிஸ்தவ சபைகள், கிறிஸ்தவ குடும்பங்கள் கட்சியும் வாதும் பண்ணி கோர்ட்டுக்குப் போவானேன்? சிரீவைகுண்டம் கோர்ட்டில் ஓர் நாள் கூப்பிடப்பட்ட பேர்களில் முக்கால்வாசிக் கிறிஸ்தவப்பேர்களே. கோர்டு கச்சேரிகளும், போலீஸ் ஸ்டேஷன்களும், தந்தி ஆபீஸ்களும் கிறிஸ்தவப் பிரிவினைகளைத் தொனித்துக்காட்டும் ஸ்தலங்களாகிறது. இந்தச் சிறியரில் ஒருவனுக்கு இடறலுண்டாக்குகிறவனுக்கு ஐயோ! அவன் கழுத்தில் ஏந்திரக்கல்லைக் கட்டி சமுத்திரத்தின் ஆழத்தில் அமிழ்த்திவிடுவது நலமென்று பரிதபித்தார் அருள்நாதர். ஏன் இவனை இப்படி ஆழத்தில் அமிழ்த்திவிடச் சற்பிக்கிறார்? இந்தக் கெடுதிக்காரப் பாவிகளுடைய பிணம் மிதந்து வந்து கரையில் வந்தாலுங்கூட கெடுதி நேரிடுமென்றல்லோ இப்படிக் குடல் கொதித்தார். சபையிலுள்ள மிஷன் ஆசாமிகள் ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குத் தொக்கு என்றாற்போல, சபையில் கட்சிகளை உண்டாக்கி ஒரு பட்சத்தில் சார்ந்து கைகொடுப்பதும், உண்மையை மறைத்து பொய்யைப் பெரியோருக்குத் தெரிவிப்பதும் எத்தனை துக்கம்! உங்களைக் கலக்குகிறவன் தரிப்புண்டுபோனாலு நலமாயிருக்கும் என்று பரி. பவுல் பிரலாபிக்கிறார். தேவன் தமது சுயரத்தம் சிந்தச் சம்பாதித்த சபையைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். கள்ள மனு எழுதி, கள்ளச்சாட்சி சொல்லி மந்தையை தப்பவிடாத ஓநாய்கள்போல ஒருவனும் தலை எடுக்காதேயுங்கள்.

**இரண்டாவது ஒருவரையும் சமுசயிக்காதே (Don't suspect)**

சிறு பிள்ளைகளின் வாசகப் புஸ்தகத்தில் இன்னொரு கதையுண்டு. நாலு எருதுகள் ஒன்றாக மேய்வதும் ஒன்றாகப்படுப்பதுமாக ஐக்கியமாயிருந்தது. இதை வன்கண்ணுடன் ஒரு மிருகேந்திரன் பார்த்து என்று என் வாயில்போடலாம் என்று ஏமாறிப்போயிருந்தது. இச்சமயத்தைக் கொண்டுசெலுத்த ஒரு நரி வகை தலைப்பட்டது. மேய்ந்துகொண்டிருந்த ஒரு மாட்டண்டை இந்த நரி போய் 'அந்த எருது அதோ நல்ல புல்லில் மேய்கிறது, உனை எக்காளும் மேயாத கட்டையிலேயே மேயவிடுகிறது' என்று சொல்ல, இது அதைக் கவனித்துப்பார்க்கவே, தூரத்துக் கட்டை அந்த மாட்டுக்கு மிகவும் பசுமையாகத் தோன்றிற்று. இவ்விதமாய மாடுகளின் ஐக்கியம் கெட்டு ஒவ்வொன்றாகப் பிரிந்துபோய் மிருகேந்திரனின் கொடிய வாய்க்குள் அகப்பட்டு மாண்டது. மஞ்சககாமாலை நோய்கொண்டவனுக்குப் பார்த்ததெல்லாம் மஞ்சள்போல தோன்றும். சுத்த இருதயமுள்ளவர்களுக்குச் சகலமும் சுத்தமாயிருக்கும். அசுத்தமுள்ளவர்களுக்கு ஒன்றும் சுத்தமாயிராது. (இன்னும் வரும்)

Printed at the Palamcottah Printing Press, Palamcottah and published by
the Christian Brotherhood Association, Tinnevelly.

800

October 1918. 7Registered No. M. 16

# The Water of Life

# ஜீவத்தண்ணீர்

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவதண்ணீருள்ள நதிகள் ஓடும்." யோவான் 7: 88.

Vol. XIX அக்டோபர் 1918

## தேவ சந்தோஷம்

'கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்' பிலி. 4: 4.

இது சஞ்சலம் நிறைந்த உலகம். இதிலே நாம் எப்பொழுதும் சந்தோஷமாயிருப்பது கூடியகாரியமாவென்று கேட்கலாம். தேவன் நம்மை அழைத்திருக்கிற மேலான அழைப்பையும் அவர் ஆயத்தம்பண்ணியிருக்கும் ரட்சிப்பின் மாட்சிமை எவ்வளவு பெரிதென்பதையும் அறிந்த விசுவாசி கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாகவேயிருப்பான். உலகத்தாருடைய சந்தோஷத்துக்கும் விசுவாசியின் சந்தோஷத்திற்கும் மிகுந்த பேதமுண்டு. அவர்கள் உலகத்தில் அதாவது உலகத்திலிருந்து தாங்கள் அடையும் நன்மைகளில் மிகவும் மகிழுகிறார்கள். 'அவர்களுக்குத் தானியமும் திராட்சரசமும் பெருகியிருக்கிற காலத்தின் சந்தோஷம்' என்று சங்கீதக்காரன் சொன்னது சரியே. உலக சந்தோஷத்தையே பெரிய சந்தோஷமாகத் தேடுவார்கள். உலக நஷ்டம் பெரிய நஷ்டமாக எண்ணிப் புலம்புவார்கள். உன்னதமான மெய்யான சந்தோஷத்தை அறியார்கள். ஒரு வேளை விசுவாசிகளைப்பார்க்கிலும் தோற்றத்தில் அவர்கள் அதிக மகிழ்ச்சியுள்ளவர்களாகக் காணப்படலாம். முகமலர்ச்சியும் வெளிச்சிரிப்பும் மெய்ச் சந்தோஷமென்று நினைக்கக்கூடாது. 'இப்பொழுது நகைக்கிற அல்லது சிரிக்கிற உங்களுக்கு ஐயோ; இனி துக்கப்பட்டு அழுவீர்கள்' என்றார். அவர்கள் தங்களுக்குச் சமாதானம் இல்லை என்னும்போது வேதனை அவர்களுக்குப் பெருகும். நமது ரட்சகரைக் குறித்தது துக்கமுள்ள மனுஷன் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவர் சிரித்ததாக நாம வாசிக்கிறதில்லை. நமது பாவங்களினால் உண்டான துக்கம் அவரில் காணப்பட்டது.

ஆகிலும் அவர் தமது சீஷர்களைப் பார்த்து 'என் சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும்படிக்கும் உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படிக்கும் இவைகளை உங்களுக்குச் சொன்னேன்' யோ. 15: 11. ஆம, கிறிஸ்தவ ஜீவியம் சந்தோஷத்தில் ஆரம்பித்து, சந்தோஷத்தில் வளர்ந்து, சந்தோஷத்தில் பூரணப்படுகிறதாயிருக்கிறது. கிறிஸ்துவின் சுவிசேஷம் 'மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தி'யாயிருக்கிறது. நாம் ரட்சிக்கப்படும்போது இந்த சந்தோஷத்தை அனுபவிக்கிறோம். பின்பு ஆவிக்குரிய ஜீவியத்தில் வளரும்போது ஆவியினாலுண்டாகும் சந்தோஷத்தையும் சமாதானத்தையும் அடைகிறோம். முடிவில் எஜமானைச் சந்திக்கும் காலத்தில் அவருடைய சந்தோஷத்திற்குள் பிரவேசிக்கிறோம். 'கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் திரும்பி ஆனந்தக்களிப்புடன் பாடி சீயோனுக்கு வருவார்கள்; நித்திய மகிழ்ச்சி அவர்கள் தலையின்மேலிருக்கும்; சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைவார்கள்; சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம்' (ஏசா. 35: 10).

இந்த சந்தோஷ ஜீவியம் கிடைக்கும் வழியென்ன?

1. விசுவாசத்தினால் உண்டாகும் சந்தோஷம். 'நம்பிக்கையின் தேவன் விசுவாசத்தினாலுண்டாகும் எல்லாவித சந்தோஷத்தினாலும் சமாதானத்தினாலும் உங்களை நிரப்புவாராக'. ரோமர் 15: 13. விடுதலை என்கிற செய்தியை கேட்கும்போது சாகும்படி நியமிக்கப்பட்ட ஒருவனுக்கு எவ்வளவு சந்தோஷம் உண்டாகிறது. மேலான உத்தியோகத்திற்கு நியமிக்கப்பட்டேன் என்ற செய்தியைக் கேள்விப்படும் ஒருவருக்கு எவ்வளவு மகிழ்ச்சி உண்டாகிறது! கப்பலின் ஆபத்துக்கு மகன் உயிர்தப்பிப் பிழைத்தான் என்கிற செய்தியில் தகப்பன் எவ்வளவாய் ஆனந்தக்கண்ணீர் சிந்துகிறான்! ஏறக்குறைய மலையாள தேசத்தில் ஒரு ஏழை உபாத்தியாருக்கு லாட்டரியில் பெருந்தொகை கிடைத்ததென்ற செய்தி அவரைச் சொல்லமுடியாத மகிழ்ச்சிக்குள்ளாக்கிவிட்டதே. உலகத்தில் எவ்வளவு மேன்மையும் லாபமும் ஐசுவரியமும் கிடைத்தபோதிலும் தேவன் கிறிஸ்துவுக்குள் ஆயத்தம்பண்ணியிருக்கிறதும் விசுவாசிக்கு இலவசமாக அவர் அருளச் சித்தமுமாயிருக்கிறதுமான மகா பெரிய ரக்ஷண்ய பாக்கியத்திற்கு முன் இவைகளெல்லாம் எம்மாத்திரம்! இவைகளை பெறும்போது மனுஷர் சந்தோஷப்படுவார்களானால் விசுவாசிகள் எவ்வளவுக்கு அதிகமாகச் சந்தோஷப்படவேண்டியது நியாயம்!

தேவன் தமது தீர்க்கதரிசிகள் மூலமாகவும் தமது நேச குமாரன் மூலமாகவும் தமது அப்போஸ்தலர் மூலமாகவும் நமக்கு அருளிச் செய்திருக்கிற மகா அருமையான வாக்குகளை நாம் நம்புகிறோமா? நம்பினோமானால் ஆனந்தக் கூத்தாடமாட்டோமா? விசுவாசிகளுக்கு ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும் சீக்கிரத்தில் வெளிப்



படப்போகிற நித்திய மகிமையையும் நாம் உண்மையாக விசுவாசித்து ஏற்றுக்கொண்டால் அதன் பலனாக நமது உள்ளம் சந்தோஷத்தினால் நிரம்பியிருக்காதா? அவிசுவாசமும் சந்தேகமும் துக்கத்திலும் கலக்கத்திலும் நம்மை அமிழ்த்திப்போடுகிறது. விசுவாசத்தினாலுண்டாகும் சந்தோஷத்தைக் குறித்து பரி. பேதுரு 'அவரை நீங்கள் காணாமலிருந்தும் அவரிடத்தில் அன்பு கூருகிறீர்கள்; இப்பொழுது அவரைத் தரிசியாமலிருந்தும் அவரிடத்தில் விசுவாசம் வைத்து சொல்லிமுடியாததும் மகிமையால் நிறைந்ததுமாயிருக்கிற சந்தோஷமுள்ளவர்களாய்க் களிகூருகிறீர்கள்' என்கிறார். (1 பேது. 1: 8) விசுவாச ஜீவியம் சந்தோஷமும் மகிழ்ச்சியுமுள்ள ஜீவியம்.

2. ஜெபத்துக்கு வரும் உத்தரவாலுண்டாகும் சந்தோஷம். 'கேளுங்கள் அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்ளுவீர்கள்' (யோ 16: 24). 'விரும்பினது வரும்போது ஜீவவிருக்ஷம்போலிருக்கும்' (நீதி. 13: 12). நாம் ஏதோ ஒன்றுக்காக கிறிஸ்துவின் நாமத்தை முன்னிட்டு மகா வாஞ்சையோடு ஜெபித்துவருகிறோம். சிலநாட்கள் சென்றபின் நாம் கேட்டுக்கொண்ட காரியம் கிடைக்குமானால் நாம் எவ்வளவோ சந்தோஷப்படுவோமல்லவா? ஜெப ஜீவியம் சந்தோஷ ஜீவியமாகிறது. பேதுரு சிறையிலகப்பட்டு அதிகாலையில் கொல்லப்படவிருந்தபோது சபையார் அவனுக்காக ஊக்கமாய் ஜெபிக்க, ஜெபம்பண்ணிக்கொண்டிருக்கும்போதே பேதுரு வந்துவிட்டாரே. சபையார் சந்தோஷப்பட்டிருக்கமாட்டார்களா? யோனாவை ஒரு பெரிய மீன் விழுங்கி மகா ஆழத்திற்குள் கொண்டுபோய்விட்டதே. உலகமுழுவதும் சேர்ந்தாலும் அவனை ரட்சிக்கமுடியுமா? கர்த்தரை நோக்கி அவன் வேண்டிக்கொள்ள மீன் அவனை சமுத்திரக்கரையில் கக்கினபோது அவன் எவ்வளவோ சந்தோஷப்பட்டிருப்பானே. எலியாவின் ஜெபத்தால் வானம் அடைபட்டு மறுபடி அவன் ஜெபிக்க வானம் மழையைப் பொழிந்தபோது எலியாவுக்கு எப்படியிருந்திருக்கும்? நாம் கர்த்தருக்குள் சந்தோஷமாயிருக்கவேண்டுமானால் கர்த்தரின் நாமத்தினால் எப்பொழுதும் ஜெபிக்கிறவர்களாயிருக்க வேண்டும். நாம் வேண்டிக்கொண்டது ஒருவேளை கிடைக்காமற்போனாலும் தேவனுக்கு நமது காரியங்களைத் தெரியப்படுத்தினதிலேயே நமக்குச் சமாதானமுண்டு. 'நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாமல் எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்' (பிலி. 4: 6, 7).

3. நற்சம்பாஷணையினாலுண்டாகும் சந்தோஷம். 'மனுஷனுக்குத் தன் வாய்மொழியினால் மகிழ்ச்சியுண்டாகும், ஏற்றகாலத்தில் சொன்ன

வார்த்தை எவ்வளவு நல்லது!' (நீதி. 15: 23) வாய்ப்பேச்சிலே சந்தோஷமும், வாய்ப்பேச்சிலேயே சஞ்சலமும் உண்டு. நல்ல சம்பாஷணைகள் மகிழ்ச்சியை உண்டாக்கும். ஆகாத சம்பாஷணை நல்லொழுக்கங்களைக் கெடுக்கும். சிறுமையான, கபடான, சூதான, அயோக்கியமான பேச்சுகள் இருதயத்தைக் கெடுத்து முகத்தை அலங்கோலப்படுத்தும். மற்றவர்களுக்கு ரட்சிப்புண்டாக, கர்த்தரில் விசுவாசம் உண்டாக, வேதத்தில் வாஞ்சை உண்டாக, கவலை நீங்கத்தக்கதாக, தைரியம் உண்டாகத்தக்கதாக நாம் பேசுவோமானால் தேவன் அதினாலே மகிமைப்படுகிறார். அந்தச் சம்பாஷணையின் பலனை நமது இருதயத்தில் மகிழ்ச்சியை அருளுகிறார். நீ ஆகாத காரியங்களைப் பேசினபின் உன் முகத்தைக் கண்ணாடியிலே பார். நீ ஆவிக்குரிய காரியங்களைப் பேசினபின் உன் முகத்தைக் கண்ணாடியிலே பார். வித்தியாசத்தை நீயே கண்டுகொள்வாய். சில வருஷங்களுக்குமுன் நானும் என் சிநேகிதர் இன்னொரு பிரசங்கியாரும் கூட்டங்களை நடத்தும்படி ஓர் கிராமத்துக்குப் போயிருந்தோம். நாங்கள் தங்கியிருந்த ஊரிலேயே ஒரு ஆலயம் உண்டு. இரண்டு மைலுக்குள்ளாக இன்னொரு சபையும் ஆலயமும் உண்டு. ஓய்வுநாட் காலையில் நான் இந்த ஆலயத்திலும் என் சிநேகிதர் பக்கத்துக் கிராமத்திலும் பிரசங்கிப்பதாக தீர்மானித்துக்கொண்டோம். நான் ஆராதனையை முடித்து இருக்கிற ஸ்தலத்துக்கு வந்துவிட்டேன். என் சிநேகிதரோ வெகு நேரமாகியும் வரவில்லை. எதிர் பார்த்த கண்ணாயிருந்தேன். வெகுதூரத்தில் வந்தார். நான் அவரைப் பார்த்தபோது அவர் முகத்தில் ஏதோ பொக்கிஷம் கண்டெடுத்தவர்களுக்கு இருக்கும் சந்தோஷம்போல அதிகச் சந்தோஷத்தைக் கண்டு, என்ன ஐயா, நீங்கள் போகிறபோது கவலையுள்ள முகத்தோடு போனீர்களே, இப்போ இவ்வளவு சந்தோஷத்தோடு திரும்பி வருகிறதற்குக் காரணமென்னவென்று கேட்டேன். அதற்கு அவர், நான் கிறிஸ்துவின் வருகையைப்பற்றிப் பேச ஆரம்பித்தேன், முடிக்கப்போகிற சமயத்தில் ஜனங்கள் அதிக வாஞ்சையோடு முடிக்கவேண்டாம், இன்னும் சொல்லுங்கள் ஐயாவென்று கேட்டார்கள். வரப்போகிற மகிமையான காலத்தைக் குறித்துச் சொல்லிக்கொண்டே போனேன். என் உள்ளம் பூரிக்க அவர்கள் உள்ளம் பூரிக்க ஆவியானவர் அருளிச்செய்த சந்தோஷத்திற்கு அளவில்லை என்று சொன்னார். நீங்கள் பத்து பதினைந்து நிமிஷமாகிலும் கிறிஸ்துவின் அன்பைப்பற்றி மற்றவர்களோடு ஆவலோடு சம்பாஷித்துப் பாருங்கள். தேவ சந்தோஷத்தை அடைகிறீர்களோ இல்லையோவென்று அதினால் அறிவீர்கள்.

4. **நல்ல இருதயத்தினாலுண்டாகும் சந்தோஷம்.** 'நீதிமானுக்காக வெளிச்சமும் செம்மையான இருதயத்தாருக்காக மகிழ்ச்சியும் விதைக்கப்பட்டிருக்கிறது' (சங். 97: 11). பழைய ஏற்பாட்டுக் கதைப் புஸ்தகத்தில் அநேக படங்களைக் காணலாம். அதிலே காயீன் ஆபேல் பலிசெலுத்துகிற படமும் உண்டு. ஆபேலின் சாயலை வெண்ணிறமாகவும் காயீனின் சாயல் கறுப்பு நிறமாகவும் செய்யப்பட்டிருக்கும். ஒரு தாயின் பிள்ளைகளில் இவன் கறுப்பாய்ப் போனதென்ன? இதிலே நல்ல போதனை உண்டு. காயீனின் இருதயம் மிகவும் கெட்டது. அவனிருதயம் நரகம். அப்போஸ்தலரைப் படத்தில் பார்க்கும்போது யூதாஸ்காரியோத்தின் சாயல் மாத்திரம் விகாரமாயும் கறுப்பாயும் தோன்றும். அவன் மகா துரோகி. அவன் இருதயம் மிகவும் கெட்டது. பொல்லாத இருதயத்தாருக்கு வேதனையும் கலக்கமுமே பங்கு. நமது இருதயம் தேவனுக்கு முன்பாகவும் மனுஷருக்கு முன்பாகவும் செம்மையாயிருக்குமானால் தேவன் நமக்கு மகிழ்ச்சியை அருளுவார். கிறிஸ்துவைக் குறித்து என்ன வாசிக்கிறோம்? அவர் நீதியை விரும்பி அக்கிரமத்தை வெறுத்ததினால் தேவன் அவரை ஆனந்த தைலத்தினால் அபிஷேகம்பண்ணினார் (சங். 45: 7). அநேகருடைய ஜீவியத்தில் சந்தோஷமில்லை. எப்போதும் சஞ்சலமாகவே காணப்படுகிறார்கள். இருதயத்தில் அசுத்தம, வர்மம், பகை, பொறாமை, பெருமை, அவிசுவாசம், முறுமுறுப்பு, எரிச்சல் முதலான பாவங்களுக்கு இடங்கொடுத்தால் கர்த்தருக்குள் சந்தோஷமாயிருக்க முடியுமா? நமக்குச் சந்தோஷம் வேண்டுமானால் நமக்கு நல்ல இருதயம் வேண்டும்.



5. **தேவனைத் தேடுவதாலுண்டாகும் சந்தோஷம்.** 'கர்த்தரைத் தேடுகிறவர்களின் இருதயம் மகிழ்வதாக' (சங். 105: 3). இங்கே தேவனைத் தேடுதல் என்று சொல்லும்போது ஜெபஜீவியத்தைப் பிரதானமாகக் குறிக்கிறதில்லை. ஜெபத்தாலுண்டாகும் சந்தோஷத்தைப்பற்றி இரண்டாம் பிரிவில் நாம் கவனித்தாயிற்று. இது தேவனிடத்திலிருந்து நமக்குக் கிடைக்கும் நன்மைகளையல்ல, தேவனையே தேடுவதைக் குறிக்கும். ஒரு தகப்பன் சாய்மான நாற்காலியிலிருந்து ஒரு மாலைநேரம் வாசித்துக்கொண்டிருந்தார். அவருக்குப் பிரியமான பெண்மகள் அவர் பக்கத்தில் வந்து உட்கார்ந்து அவர் முகத்தைப் பார்த்துக்கொண்டிருந்தது. தகப்பன் பிள்ளையைப் பார்த்து மகளே உனக்கு என்ன வேண்டும் என்று கேட்டார். அதற்கு மகள், எனக்கு ஒன்றும் வேண்டாம் என்றான். பின்னே ஏன் இங்கே வந்து இருக்கிறாய் என்று தகப்பன் கேட்டார். அதற்கு அந்தச் சிறுபெண் உங்களைப் பார்த்துக்கொண்டிருக்க ஆசையாயிருக்கிறது. அது தான் உங்கள் கிட்ட உட்கார்ந்துகொண்டிருக்கிறேன் என்றது. மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவதுபோல தேவனே என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறதென்று விசுவாசி சொல்லுகிறான். அவரிடமிருந்து பெற்றுக்கொள்ளும் நன்மைகளுக்காக மாத்திரம் அவரைத் தேடாமல் அவரையே தேடும்போது நமது இருதயம் மகிழும். ஆண்டவரே, உமது முகத்தைத் தேடுங்கள் என்று சொன்னீரே, உமது முகத்தையே தேடுகிறேன் கர்த்தாவே. உம்மை இன்னும் நான் அதிகமாக அறியவேண்டும், உம்மோடு இன்னும் அதிகமாகப் பழகவேண்டும், உம்மோடு எப்போதும் நான் தங்கவேண்டும். ஏனென்றால் 'உமது சமூகத்தில் பரி

பூரண ஆனந்தமும் உமது வலது பாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு.' 'ஆண்டவரே உம்மைத் தியானிக்கும் தியானம் எவ்வளவு இனிதாயிருக்கிறது.'

தேவனைத் தேடுகிறவர்களின் இருதயம் மகிழ்வதாக. கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருக்க விரும்பும் என் அருமைச் சகோதரர்களே, மேற்சொன்ன ஐந்து வழிகளையும் மனதில் வைத்துக்கொள்ளுங்கள்.

S. பரமானந்தம்

## யோபின் ஆகமம். அதி. 8-12.

*அதி. 8.* பில்தாதின் நியாயங்கள் எலிப்பாசுடையவைபோலிருக்கிறது. தேவனுடைய நீதியையே நிலைநிறுத்திப் பேசுகிறான். தேவனுடைய நீதி மட்டற்றதென்றும் மனுஷனுடைய துன்பங்கள் குறைவானதென்றும் சொல்லுகிறான். தேவன் நியாயத்தைப் புரட்டுவாரோ? சர்வ வல்லவர் நீதியைப் புரட்டுவாரோ (வ. 3) என்பது பலத்த முகாந்தரம். அதாவது அவர் நீதியைப் புரட்டினால் யோபின் விஷயத்தில் மாத்திரம் அப்படிச் செய்திருக்கவேண்டும். ஒரு மனுஷன் நேர்மையாய்ப் பேசலாம். என்றாலும் அவன் பேசும் விதத்தினால் அவன் உபயோகிக்கும் வார்த்தைகள் தன் நோக்கத்தை நிறைவேற்றக்கூடாமற் போகும். தேவனுடைய நீதியை நிலைநிறுத்த விரும்பி மனிதர் அதைப் பாரமாய் எண்ணும்படி செய்யலாம். ஆனால் தேவனுடைய நீதி முழுவதும் ஒரு மனுஷனுடைய ஜீவியத்தில் விளங்கவேண்டுமென்று விரும்பினால் அது அந்த மனுஷனுக்குப் பெரிய அதிர்ச்சியை யுண்டாக்கி அவனுடைய ஜெபசிந்தையையும் சாந்தகுணத்தையும் எடுத்துப்போடக்கூடியது. நீதி மனுஷனுக்குப் பயத்தை யுண்டாக்காமல் அவனுக்கு நற்செய்தியாயிருக்க வேண்டுமானால் மனுஷனுடைய பெலவீனமான நிலைமைக்குத் தக்கபடிதான் விளங்கவேண்டும். மனுஷ சுபாவத்தின்படி நீதி, நியாயம் என்ற வார்த்தைகள்கூடச் சில சமயங்களில் நமக்குப் பயத்தையும் கோபத்தையும் உண்டாக்கக்கூடும். இரக்கம், உருக்கம், நம்பிக்கையாகிய இவைகள் நமக்குப் பிரியமானது. தேவ நீதியில் அவருடைய இரக்க உருக்கம் அடங்கினவைகள்தான்.

இதுவரை யோபுக்கு ஆறுதல் சொன்ன இரண்டு சிநேகிதரும் சில பொதுவான சத்தியங்களை தனித்தனியாட்களின ஜீவியத்துக்கேற்ற விதமாய்ப் பேச அறியாதவர்கள்போல் காணப்படுகிறார்கள். அவ்விதமாய்ப் பேசக் கற்றுக்கொண்டால் மாத்திரம் ஆவிக்குரிய விஷயத்தில் நாம் மற்றவர்களுக்குப் பிரயோஜனமாயிருப்போம். நீதியையே பிரசங்கித்தால் உலகம் நம்மை விட்டோடிப்போம். நியாயப்பிரமாணத்தின் மாறுமையை வற்



புறுத்தினால் மனுஷ ஜாதிக்கு நம்பிக்கையுண்டாகாது. பில்தாதின் நியாயங்கள் என்னவென்றால், தேவன் நீதிபரர், அவர் நியாயத்தை நடப்பிக்கிறவர், அதை மனுஷன் எதிர்த்துப் பேசவும், குற்றம் சொல்லவும் முடியாது என்பதுதான். இந்த நியாயத்தைக்கொண்டு யோபைச் சரிப்படுத்த முயன்றான். அவன் சொன்ன சத்தியங்கள் வாஸ்தவம். ஆனால் அவைகளை உபயோகித்த விதம் பிசகு.

திருஷ்டாந்தம். ரெயில்வேயில் அதிகமாய் அபாயங்கள் நேரிடாது. நூற்றுக்கு ஒன்றுதான் நேரிடும் என்ற சத்தியம் உலகத்துக்கு நல்ல செய்திதான். ஆனால் அவ்வித அபாயத்திலகப்பட்டு மரித்துப்போன ஒருவனுடைய சிநேகிதனண்டையில் போய் இவ்வார்த்தைகளைச் சொன்னால் அது அவனுக்கு ஆறுதலைக் கொடுக்குமா? இதுதான் பில்தாதுடைய நியாயம்.

*அதி. 9: 1—18.* **யோபின் மாறுத்தரம்.** பில்தாத் சொன்ன பொது நியாயத்தை யோபு ஒப்புக்கொள்ளுகிறான். 'ஆம் காரியம் அப்படியிருக்கிறதென்று அறிவேன்' என்கிறான். 'ஆனால் தேவனுக்கு முன்பாக மனுஷன் நீதிமானாயிருப்பதெப்படி'? என்னும் நியாயத்தை தன் துன்பங்களின் சம்பந்தமாய்ப் பேசுகிறான். இதினால் தான் குற்றமுள்ளவன் என்பதைக் காட்டுகிறதில்லை. அவனுடைய மனதின் எண்ணமெல்லாம் தேவனைப்பற்றியே இருக்கிறது. அதோடு தான் குற்றமற்றவனாயிருக்க தனக்குப் பாடுகள் வருவானேன் என்கிறான். முதலாவது தேவனைப்பற்றிப் பேசுகிறான். (1) அவர் ஞானமுள்ளவர், அவரோடு வழக்காடுவதால் பயனென்ன? 'அவருக்கு விரோதமாகத் தன்னைக் கடினப்படுத்தி வாழ்ந்தவன் யார்'? இதினால் அவரோடு வழக்காடுதலில் பயனில்லையென்கிறான். (2) அப்புறம் தேவன் வல்லமையுள்ளவர். அவருடைய வல்லமையைத் தான் அறிந்தும் தன் மன வியாகுலத்தினால் தான் பயந்து நடுங்கி அதற்கு முன்பாகத் தாழ்ந்து போகவேண்டியதுதான் என்கிறான். யோபு உபயோகிக்கிற சில திருஷ்டாந்தங்களைத் தேவனும் பின்னாலே உபயோகிக்கிறார். இவ்விரண்டிற்குமுள்ள வித்தியாசத்தை நாம் காணலாம். (3) அப்புறம் தேவன் காணப்படக்கூடாதவர். அவருடைய சமுகம் காணப்படுகிறது மெய்தான். ஆனால் யோபுக்கோ அது தென்படவில்லை. (4) அவர் மட்டற்ற நீதியுள்ளவர். ஆகையால் மனுஷன் அவரோடு நீதியைக் குறித்து வழக்காட முயற்சிப்பதால் பயனென்ன?

யோபு ஆரம்பித்த நியாயதோரணை முற்றும் பிசகு. தேவன் இரக்கமற்றவர். மனுஷரிடத்தில் காணப்படும் நன்மை, தீமை இவைகளைச் சற்றும் கவனியாமல் தமது வல்லமையையே உபயோகிக்கிறார் என்று யோபு சொல்வது பிசகு. பரலோகத்திலுள்ள அவருடைய ஆலோசனைச் சங்கத்தைக் கவனித்திருப்பானானால், செம்மையானவனுடைய வழிகளில் அவர்

மகிழுகிறார். தமக்கு உண்மையாய்ப் பயந்து நடக்கிறவர்களை அவர் கனம் பண்ணுகிறார் என்று அறியலாம்.

அதி. 9: 19—35, 'எங்கள் இருவர்மேலும் தன் கையை வைக்கத் தக்க மத்தியஸ்தன் எங்களுக்குள் இல்லையே' வ.33. யோபின் உத்தரவு பிரதாபத்துக்குத் திருப்தியானதல்ல. மனுஷன் தேவனுக்கு முன்பாக நீதிமானாயிருப்பது எப்படி? இதை யோபு ஒப்புக்கொள்ளுகிறான். ஏனென்றால் பெலவீனமான மனுஷன் தேவனுடைய வல்லமைக்கு முன்பாக நிற்கக்கூடாதவன். தேவன் சிருஷ்டிகர், மலைகளைப் பேர்க்கவும், பூமியை அசைக்கவும், சூரியனை அந்தகாரப்படுத்தவும், கடலின் அலைகளை மிதிக்கவும் அவரால் கூடும். இப்படியிருக்க மனுஷன் அவருக்கு முன்பாகத் தன் வழக்கை எப்படி நிலைநிறுத்தக்கூடும்? மேலும் அவர் மனுஷனை நடத்தும் வழிகள் அவனுக்கு விளங்கினவைகளாயில்லை. ஆகையால் தான் அவருடைய சமுகத்தில் நிற்பது கூடாத காரியம் என்கிறான். மேலும் தன் துன்பத்தைத் தான் மறப்பதாலும், தன்னைக் குற்றமற்றவன் என்று தன்னைத் தானே சொல்லிக்கொள்வதாலும் பயனில்லை. ஆகையால் தனக்கும் தேவனுக்கும் உள்ள நியாயத்தைச் சொல்லத்தக்க மத்தியஸ்தன் இல்லையே என்று அங்கலாய்க்கிறான்.

யோபின் முறைப்பாடு சகல மனுஷ ஜாதிகளின் முறைப்பாடாய்த் தான் இருக்கிறது. எக்காலத்திலுமுள்ள மனுஷர் தாங்கள் தேவனுக்கு மிகவும் தூரமானவர்கள் என்றும் இருவரையும் ஒப்புரவாக்க வழியில்லையே யென்றும் முறையிட்டிருக்கிறார்கள். மனுஷர் யாவரும் தேவனுக்காக உண்டாக்கப்பட்டார்கள். ஆகையால் அவரைக் கண்டுபிடிக்குமட்டும் அவர்கள் ஆத்துமாக்கள் திருப்தியடையாது. இவ்விதமான தாகத்தைத் தீர்ப்பதுதான் கிறிஸ்துவின் சுவிசேஷம். தேவனுடைய சிங்காசனத்தை விட்டு பூமியின் தாழ்விடங்களிலுள்ள பாவமனுஷனைத் தேடவந்த மத்தியஸ்தன் அவரே. சிலுவையின் மூலமாய் பிளப்பைக் கடக்கக்கூடும். அவருக்குள் தேவன் உலகத்தைத் தம்மோடு ஒப்புரவாக்கினார்.

அதி. 10, 1—12. யோபு தேவனோடு வழக்காடுகிறான். 'என்னைக் குற்றவாளியென்று தீர்க்காதிரும். நீர் எதினிமித்தம் என்னோடு வழக்காடுகிறீர்? அதை எனக்குத் தெரியப்படுத்தும் (வ. 2). நீர் என்னை ஒடுக்கித் துன்மார்க்கர்களைக் கிருபையாய்ப் பார்க்கிறது உமக்கு நன்றாயிருக்குமோ? (வ. 3). தேவனுக்கு மாம்சமும் கண்களும் உண்டோ? குற்றவாளிக்குப் பதிலாகக் குற்றமற்றவனைத் தப்பிதமாய் நோக்கிப் பார்க்கத்தக்கதாக அவருடைய கண்கள் மனுஷ கண்களோ? அல்லது குற்றவாளி தப்பிப்போகத் தக்கதாக அவருடைய நாட்கள் மனுஷனுடைய நாட்களைப்போல் குறுகினதோ? அல்லது மனுஷனைப்போல குற்றவாளியைக் குற்றவாளியென்று நிச்சயமாய் அறியாமல் சமுசயத்தின்பேரில் தண்டிக்கிறவரோ? என்றாலும்



யோபு குற்றமற்றவனென்றும் தமது கைக்கு யாரும் தப்பிக்கொள்ளக்கூடாதென்பதையும் அவர் அறிவாரே! (வ. 1—7). அப்புறம் யோபு தேவனுடைய 'கரங்களைக்' குறித்துப் பேசி, அவருடைய கரம் ஓர்காலத்தில் தன்னை விலையுயர்ந்த பாத்திரமாகப் படைத்துப் பின்பு தூளாகப் போகப் பண்ணுகிறார் என்கிறான் (வ. 8). இந்த உவமானத்தைப் பின் வசனங்களில் விஸ்தரிக்கிறான். தேவன் தன்னைத் தாயின் கர்ப்பத்தில் விசித்திரமாய் உருவாக்கி தன் உறுப்புகளையெல்லாம் பட்சமாய் இசைத்து ஜீவனைத் தந்து அவனுடைய ஆவியைக் காப்பாற்றிப் பராமரித்தார் (வ. 9—12). இவ்விதமாய்க் கடந்த காலங்களில் அன்பையும் தயவையும் காட்டின தேவன் தற்சமயத்தில் அவனை நடத்துகிற விதம் அவனுக்குப் பிரமிப்பை யுண்டாக்குகிறது. தன்னை உருவாக்கும்போதே பின்ஜீவியத்தில் தனக்கு நேரிடப்போகிற துன்பங்கள் தேவனுக்குத் தெரியும். தன்னை விசித்திர விநோதமாய் உருவாக்கும்போதே தன்னைத் துன்பத்துக்குள்ளாக்குவது தேவனுக்குத் தெரியும் என்பதுபோல் யோபு பேசுகிறான். உன் ஜீவியத்தில் நேரிடும் துன்பங்களினிமித்தம் முறுமுறுக்காதே. உன் ஜீவியத்தின் கவலைகள் உனக்கு மற்றவர்களால் வரும் நிந்தை, மற்றவர்கள் உன்னைத் தூஷித்தல், அற்பமாய் எண்ணல் இவைகளுக்காக மனவருத்தப்படாதே. அதுவும் தேவனுடைய நடத்துதல். உன்னைத் தாழ்மையும் பொறுமையும் தயாளமும் பட்சமும் தயவுமுள்ளவனாக்க இவைகளைக்கொண்டு உன்னைப் பக்குவப்படுத்துகிறார். உனக்குள்ளிருக்கும் சாயலை அவர் உருப்படுத்துகிறார். காலடைவில் அது வளர்ந்து பூரணப்படுத்தும். நீ அறியாய். ஆகையால் ஜீவியத்தின் பாடுகள், துன்பங்களினின்று விலகியிருக்க விரும்பாதே. அவைகளின் மத்தியில்தான் உன் குணம் பூரணப்படும்.

அதி. 10, 13—22. யோபின் துன்பங்கள் அவனுக்கு அநேகக் கொடுமையாய்க் காணப்பட்ட முகாந்தரம் என்னவென்றால் அவைகள் தேவ கோபத்தாலுண்டானது என்று எண்ணினான். அதுவே தன் ஜீவனைக் காப்பாற்றுகிறது என்றும் தன் ஜீவியத்தைப் பாரமாக்கிற்று என்றும் சொல்லுகிறான். மேலும் தன் துன்பங்கள் தேவன் தன்னை வெறுக்கிறார் என்பதற்கு அத்தாட்சிகள் என்றும் இந்தத் தன் சரீரப்பாடுகளே தன் ஆவியைப் புண்படுத்திற்று என்றும் சொல்லுகிறான். தன் துன்பம் அதிகரித்தது. தேவகோபம் அதில் காணப்பட்டது. தான் எவ்விதத்திலும் நல்லவனாகவில்லை. தனக்கு நேரிட்ட மாறுதல்களும் துன்பங்களும் எல்லாம் தனக்கு விரோதமாய் இருக்கிறது. இவைகளில் ஒன்றாலும் தான் உணர்வடையவில்லை யென்கிறான். [வா. 20–22]. மூன்றாம் அதிகாரத்தில் புலம்பினதுபோல் மறுபடியும் புலம்புகிறான். என்றாலும் தான் திரும்பிவாராத தேசத்துக்குப் போகுமுன் தனக்குச் சற்று இளைப்பாறுதல் வேண்டும் என்கிறான்.

சாத்தான் முன்சொன்ன பிரகாரம் யோபு தேவனை மறுதலிக்கும் நிலைமையிலிருக்கிறதாகத் தோன்றும். ஆனால் தேவனை மறுதலிக்கிறது லேசான காரியம் என்று யோபு நினைக்கவில்லை. சிலசமயம் பத்தாம் அதிகாரத்தில் யோபு அவ்வித நிலைமைக்கு படிந்தவர்போல் தோன்றினாலும் தன் நியாயத்தில் பின்வாங்குகிறவர்போல் காணப்படுகிறது. தேவனைக் குறித்துத் தான் எவ்வளவு விசாலமாய் நினைக்கக்கூடுமோ அவ்வளவாய்த் தன் மனதில் நினைத்துப் பேசுகிறான். ஆனால் தன் துன்பங்களுக்கு நியாயம் கண்டுபிடிக்க முயலுகிறான். தேவன் சர்வவல்லவர், எல்லாவற்றையும் அறிகிறவர் என்பதைச் சந்தேகமின்றி அறிக்கையிடுகிறான். மேலும் தன்னை உருவாக்கின விஷயத்திலும் தன்னைப் பராமரித்துக் காப்பாற்றுகிற விஷயத்திலும் தேவன் எவ்வளவு கவலையும் அன்பும் பட்சமுமாயிருக்கிறார் என்றும் உணருகிறான். இவ்விசாலமான உணர்வு சாஸ்திர அறிவினால் உண்டாகாமல் அவனுக்கும் தேவனுக்குமுள்ள ஐக்கியத்தினாலும், தேவனைப்பற்றி அவனுக்கிருக்கும் அன்பு, பயபக்தியினாலுமுண்டானது என்பதற்குச் சந்தேகமில்லை. இன்னும் தேவனோடு ஐக்கியமுள்ளவனாய் ஜீவிக்க வாஞ்சையுள்ளவனாயிருக்கிறான். என்றாலும் அவனுக்கு தற்காலத்தில் உண்டாயிருந்த துன்பம் இதற்கெல்லாம் நேரெதிரிடையாயிருக்கிறதென்று அவனுக்குத் தோன்றுகிறது. ஆவிக்குரியமாய் அவன் தப்பிதமான எண்ணங்களுள்ளவனாயிருந்தாலும் படிப்படியாய்ச் சரியான எண்ணத்துக்கு வழிநடத்தப்பட்டான்.

---

## அன்பில் நிலைத்திருக்க இன்ப ஆலோசனைகள்

(தொடர்ச்சி)

இரண்டாவது ஒருவரையும் சமுசயிக்காதே.

அன்பு தீங்கு நினையாது. நம்முடைய இருதயம் கெட்டுப்போகும் போதுமாத்திரம் பிறரைச் சந்தேகிப்போம். கெடுவான் கேடு நினைப்பான் என்பது உலக சல்லாபம். நமக்குக் கெடுதிவராதபடி பிறருக்குத் தீங்கு நினையாதிருப்போமாக. ஒரு சிறு பெண்ணினிடம் ஒரு பெரியவர் எல்லாரும் உன்னை நேசிப்பதற்குக் காரணம் என்ன என்று கேட்டதற்கு, அந்தப் பெண் 'நான் எல்லாரையும் நேசிக்கிறதே காரணம்' என்றாளாம். அப்போஸ்தலன் தன்னை எல்லாரிலும் பெரிய பாவி என்று உணருகிறார். உலகத்திலுள்ள எல்லாப் பாவிகளிலும் நம்மைக் கொடிய பாவி என்று நம்மைத் தாழ்த்தி, மற்றவர்களை நம்மிலும் நல்லவர்கள் என்று நினைக்க ஏவப்படுவோமாக. அப்பொழுது அன்பு அன்பைப் பிறப்பிக்கும் என்பது சத்தியம்.

மூன்றாவது: பிறர் குற்றங்களைப் பெரிது பாராட்டித் தூற்றாமல் அவர்களிடம் காணப்படும் நற்குணங்களை வியந்து போற்று. வேதத்திலுள்ள எந்த பரிசுத்தவானிடத்திலும் பெலவீனம் இருந்தது. விசுவாசிகளின் தகப்பன் எகிப்திலே போய்ப் பொய்சொன்னான். ஞானியாகிய சாலொமோன் தன் அந்திய காலத்தில் அஞ்ஞானியானான். சாந்தமுள்ள மோசே உதடுகளில் பதறிப்பேசி கோபியானான். பொறுமையுள்ள யோபு பிறந்த நாளைச் சபித்தான். ஜீவந்தமாய் எந்த பக்தனிடமும் பெலவீனமுண்டு. 'சாத்தானே' என்றழைக்கப்பட்ட பேதுரு* பெந்தெகொஸ்தே



யின் அருள்பிரசங்கியானான். கிறிஸ்தவ சபையில் பெலவீனம் இல்லாதவன் இல்லை. எத்தனையோ தவறுதல்களும் உண்டு. இவைகளையே பெரிது பாராட்டி குறைகூறித் தூற்றித்திரியாதிருப்போமாக. மாயக்காரனே, முன்பு உன் கண்ணிலே இருக்கிற உத்திரத்தை எடுத்துப்போடு என்கிறார். மற்றவர்களை குற்றவாளியாகத் தீர்க்கிறதற்கு நீ யார்? பட்டணங்களையிலுள்ள முனிசிபல் தோட்டிகள் ஒவ்வொரு வீட்டிலுமுள்ள அசுத்தங்களை புழக்கடைவாசல்வழியாய்ப் போய் இரண்டாம் பேருக்குத் தெரியாமல் ஊருக்கு வெளியே கொண்டுபோய் ஒளித்துவிடுகிறார்கள். ஆனால் கிறிஸ்தவ சபைகளில் சிலர் பப்ளிக் வாசல்வழியாய்ப் போய் அந்த வீடுகளில் காணப்படும் அறைகுறைகளையும் அசுத்தங்களையும் எடுத்து வீடுவீடாய்ப் போய் விரித்துப் பெருமிதங்காட்டி அலைவது எத்தனை பரிதாபம்! 'அன்பு திரளான பாவங்களை மூடும்' 'தன்னைப்போல பிறனை நேசிக்கும்' உன்னைப்பற்றி அயலார் தூற்றித்திரிய பிரியப்படமாட்டாயே. பின்னை ஏன் நீ அயலார் குறைகளைத் தூக்கிச் சுமந்துகொண்டு அலைகிறாய். வாயை மூடு. மவுனமாயிரு. அறைவீட்டுக்குள் பிரவேசி. உன் உடன் ஆத்துமாவின் குறையை அருமை இரட்சகரிடம் சொல்லு. நீ செய்த எத்தனையோ பாவங்களை மூடி மறைத்து உன்னையும் நல்லவன் என்றும் யோக்கியனென்றும் பிறர் மதிக்க இடம்பண்ணியிருக்கிற பிதா, உன் உடன் சகோதரனுக்கும் அப்படிச்செய்வார் என்று நம்பு. நீ குறைவாய் எண்ணுகிற அந்த ஆத்துமாவிடத்தில் எத்தனை நற்குணங்கள் இருக்கிறது என்று பார். அக்குணங்களை மதித்துப் புகழ்ந்துபேசு. அந்த ஆத்துமாவுக்காகவும் கிறிஸ்து மரித்தாரே. அதின் விலையும் உலகமனைத்[illegible]! உன்னிலும் நல்லவனாகக்கூடிய [illegible] குறைவல்லவே!

நாலாவது, தீமை செய்பவனிடம் ஓய்ந்த தன்மை செய்யப்படியுங்கள். கிறிஸ்தவ சபையில் சிலருக்கு, அயலாருக்குத் தீமைசெய்வதே அவர்கள் முழு எண்ணமாயிருக்கிறது. '[illegible]' என்பது உலகத்தாரின் பழமொழி. [illegible] அம்மா! [illegible] பலவகை [illegible] என்னகாரணம் என [illegible] அழுது [illegible] மாதரானாம். [illegible]

அவனவனுடைய கிரியையின்படி நியாயந்தீர்க்கிறவரை நீ பிதாவாகத் தொழுதுகொள்ளுகிறாய். உன் அயலார் எவருக்கும் தீமை செய்யாதே. உனக்கு தீமைசெய்கிறவர்களை நன்மைசெய்து தீமையை நன்மையினாலே வெல்லு. உன்னை சபிக்கிறவர்களை ஆசீர்வதி. உன் சத்துரு பசியாயிருந்தால் போஜனம்கொடுத்து ஆசீர்வாதங்கூறி ஜெபம் செய்தாரா. தன்னைக் கொன்றவர்களுக்காக மன்னிப்பு ஜெபம்செய்த உன் ரட்சகரைப் பார். பிள்ளைகளை வைத்து உலாவப்போகிற வண்டியை உருட்டிக்கொண்டுபோனா ஓர் பையனை இன்னொருபையன் எப்போதும் அடிக்கிறதும் இவன் கொண்டுபோன வண்டியும் பிள்ளையும் தட்டுப்பிரண்டு கீழேவிழ குழிதாண்டிவைப்பதும் ஓர் கெட்டபையன் வழக்கமாயிருந்தது. இந்தப் பையன் தன் நல்ல தாயிடம் அடிக்கடி வாது பிராதுசெய்துவருவான். ஒருநாள் அந்தத் தாய் தன் மகனிடம் அந்தரங்கமாய்க் கூப்பிட்டு நான் தருகிற இந்த சாமானை உன்னை தொந்தரவு செய்யும் பையனிடம் உடனே கூப்பிட்டுக்கொடு. உன்னை இனி தொந்தரவு செய்யாது உதவிசெய்வான் என்று சொல்லிக் கொடுத்துவிட்டாள். இவன் அந்த துஷ்டபையனைக்கண்டு முகமலர்ந்து பேசாதவன் அன்று 'அண்ணே, அம்மா இந்த பார்சலைத் தந்து கொடுக்கச்சொன்னார்கள் வாங்கிக்கொள்!' அவன் உடனே ஓடிவந்து அந்த நல்ல பலகாரத்து பெட்டியை உடைத்து சாப்பிட்டு, தம்பி இன்று முதல் பள்ளத்தில் விழாமல் வண்டியை விட்டு தள்ளுகிறேன் என்று வண்டி தள்ளி உதவிசெய்தானாம். இப்படி தீமைக்கு நன்மைசெய்வோமாக, அந்த நல்முறையில் நமது பிள்ளைகளை நன்மைசெய்ய பழக்குவிப்போமாக! சீர்மை தேசத்தில் ஒரு தாய் தன் பிள்ளைகளை தினமும் சாப்பாட்டுமேசைக்கு வருமுன் இன்று என்ன நன்மை செய்தாய் என்று கேட்கும் வழக்கமுண்டு. அந்த தாயாருக்கு 3 பெண்மணிகளுண்டு. அந்த நாளில் மூன்று பிள்ளைகளும் பள்ளியிலிருந்து வந்து ஆசையுடன் தீனிக்குமுன் உட்கார அவர்கள் அருமை தாயார் மூத்தவளிடம் இன்று அவளுக்கு என்ன நன்மைசெய்தாய் என்க; அவள் அம்மா! எனக்கு நண்பனுடைய சாப்பிட்டதந்த ஒரு பெண்ணிடம் வகுப்பில் பென்சில் இல்லாத பிள்ளைக்கு பென்சில் வாங்கிக்கொடுத்தேன் என்றது. அடுத்தபெண் அம்மா! வகுப்பு முடிந்து திரும்பும் பாதையில் நீண்ட கஷ்டப்பட்டு புகைமூட்டி அழுத ஒரு ஏழை பிள்ளைக்கு கனிய கொடுப்பு பறவைத்துக்கொடுத்து வந்தேன் என்றது. ஆறுல் மூன்றாவது பெண்ணு அம்மா பாடசாலையில் இருந்து வருமவழி ஓரத்தில் ஒருபையன் எல்லாருடனும் சேராமல் அழுது கொண்டிருக்கக்கண்டு, நான் அவனருகே போய் ஒன்றும் பேசவில்லை. பின்பு நானும் அவன் முகத்தோடு முகம் வைத்து அழுதேன், பின்பு அவன் கண்ணீர் [illegible] என் தாயார் [illegible] பிள்ளைகளுடன் சேர்ந்து விளையாட மனமற்று அழுதேன். இப்போது உன் கண்ணீர் என் கண்ணீரை மாற்றிவிட்டது என்று சொல்லவே அந்த அருமைதாய் ஆனந்த கண்ணீர் விட்டாளாம். இவ்விதமாக இந்த வாக்கும் என் உடன் ஆத்துமாவே! இன்று பிரயத்தனமாய் நமது பிள்ளைகளை நன்மைசெய்ய பயிற்றுவிப்போமாக! பாவருவின கவலையுடையவர்களுடைய கண்ணீரைத் துடைத்த பெத்தானியாவின் [illegible] அன்பை பிறப்பிப்பதாக! ஆமென்.

Printed at the Palamcottah Printing Press, Palamcottah and published by the Christian Brotherhood Association, Tinnevelly.

November 1918 Registered No. M. 163

# The Water of Life

# ஜீவத்தண்ணீர்

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்" யோவான் 7: 38.

Vol. XIX நவம்பர் 1918

## 'பாவம் செய்கிற ஆத்துமாவே சாகும்'. எசேக். 18: 20.

பாவம் செய்கிற ஆத்துமாதான் சாகவேண்டும். பாவமானது காலரா, பிளேக், வைசூரியைப்போலொத்த ஒட்டுவாரொட்டி அல்லது தொற்று வியாதி ஒருவனிடத்திலிருந்து புறப்படுகிற இந்த ஒட்டுவாரொட்டி வியாதியானது அவனையும், அவன் வீட்டாரையும், அவனிடத்தில் நெருங்குகிற யாவரையும் பற்றிக்கொண்டு, அநேகரை மரணத்துக்குள்ளாக்குகிறதுபோலவே, பாவமானது பாவஞ்செய்கிறவனையும், அவன் வீட்டாரையும் அவனோடு சம்பந்தப்பட்டவர்களையும் சாபத்துக்குள்ளாக்கி மரணத்தைப் பிறப்பிக்கிறது. உதாரணமாக: ஆதாமை எடுத்துக்கொள்ளுங்கள். அவன் செய்த பாவத்தால், உலகம் சாபத்துக்குள்ளானது. ஆனாலும், அவர்களில் ஒருவன் நல்வழிநின்று கடவுளுக்கு பயந்து, அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்வானேயாகில், அவன் சாவதில்லை. 'பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும்'. அவன் செய்த பாவமே அவனைக் கொல்லும். தேவன் ஒருவனையும் கொல்லுகிறவரல்ல. உதாரணமாக: யூதாசை எடுத்துக்கொள்ளுங்கள். அவன் பாவஞ்செய்தான். ஜனங்களும் அவனைக் கொல்லவில்லை, காட்டிக்கொடுக்கப்பட்ட இயேசுவானவரும் அவனைக் கொல்லவில்லை, அவன் செய்த பாவமே அவனை கொன்றுகொண்டு சாகப்பண்ணினது.

பாவம். பாவம் முதலில் இன்பமானது. அந்தச் சமயத்தில் மனத்தாகத்தைத் தணிக்கிறது ஆனாலும், அந்த சொற்ப நேரத்து இன்பத்தை விட்டுவிட மனம் வருகிறதில்லை. அற்பமாயக் காணப்பட்ட அந்தப் பாவமானது இருக்க இருக்க அதிகரித்து, மரணத்தைப் பிறப்பிக்கிறது. பாவத்தின் கேடு அநுபவத்தில்தான் தெரியவருகிறது. உதாரணமாக: நான் இமயமலையிலிருக்கையில், ஒருவனைக் கண்டேன். அவன் [illegible]

தில் சஞ்சரித்த தெற்குநாட்டான். அவன் இதற்குமுன் இப்பேர்ப்பட்ட இடங்களுக்கு வராததினாலே, பனிக்கட்டிகளைக்கண்டு அதிசயித்து அவைகளைக் கையிலெடுத்து விளையாடிக்கொண்டிருந்தான். அதைக் கையில் எடுத்தால், கை வெந்துபோகுமென்று நான் சொன்னேன். அதற்கவன்: 'நெருப்பைக் கையிலெடுத்தாலல்லவோ கைவேகும், குளிர்ச்சியான பதார்த்தத்தைக் கையில் எடுத்தால் கை வேகுமோ' என்று சொல்லி மென்மேலும் விளையாடிக்கொண்டிருந்தான். கொஞ்ச நேரத்திற்குள்ளாக, கையிலுள்ள சதையெல்லாம், மெழுகு உருகுவதுபோல உருகி கீழே விழுந்தது. இப்பொழுதுதான் உணர்ந்தான். அதுபோலவே, பாவஞ்செய்கிற ஒருவனிடத்தில், பாவத்தின் கேடுகளைப்பற்றிச் சொன்னால், அவன் கேலிசெய்து கேட்கவும், கேலிபண்ணவும் ஆரம்பிப்பான். ஆனால், அந்த பாவத்தினால் கேடு வரும்பொழுதுதான் உணருவான். பாவத்தைச் செய்யச் செய்ய, பாவத்தின் கேடு மும்முரமாகிறது. உதாரணமாக: ஒரு சிறுவனுக்கு சொறிசிரங்கு வந்திருந்தது. அவன் அடிக்கடி அதை சொறிந்துகொண்டேயிருப்பான். அப்படிச் செய்தால் பெரிய புண் உண்டாகுமென்று யாராவது சொன்னால், அவன் கவனிக்கிறதில்லை. ஏனென்றால், சொறிகிறதினால் உண்டாகிற சொற்ப நேரசுகத்தை விட்டுவிட அவனுக்கு மனம் வரவில்லை. இப்படியாக, நாளுக்குநாள் புண் பெரிதாகி எலும்புக்குள் தாக்கினது. வைத்தியரிடத்தில் காண்பித்ததில், கையை வெட்டினாலொழிய அவனுடைய ஜீவனுக்குக் கேடு உண்டாகுமென்று சொன்னார். முதலில் அற்பமாகக்கண்ட அந்த சொறிசிரங்கு உயிருக்கு மோசத்தைக் கொண்டுவந்தது. சொற்பநேரத்து சுகத்தை நாடி அவன் அடிக்கடி சொறிந்ததே அதற்குக் காரணம். அதுபோலவே கொஞ்சநேரத்து இன்பத்தை நாடி பாவஞ்செய்யச் செய்ய பாவத்தின் கேடு மும்முரமாகி மரணத்தைப் பிறப்பிக்கிறது. தேவன் பாவியை அழிக்கிறதில்லை, பாவமே அவனை அழிக்கிறது. பாவம் மும்முரமாகி மரணத்தைப் பிறப்பிக்குமுன்னமே ரக்ஷிப்படையவேண்டும்.

**இரக்ஷிப்பு.** பாவமன்னிப்படைதல் ரக்ஷிப்பல்ல. பாவ சுபாவம் மாறுவதே ரக்ஷிப்பு. பாவம் செய்வதே மனுஷ சுபாவம். அந்த பாவசுபாவம் மாறாவிட்டால், அதுவே மரணத்தைக் கொண்டுவருகிறது. 'பாவிகளை ரக்ஷிக்க கிறிஸ்துஇயேசு உலகத்திற்குவந்தார்' என்கிறபொழுது, பாவங்களை மன்னிப்பதற்காக மாத்திரம் அவர் வராமல், பாவ சுபாவத்தை மாற்றுவதற்குமே வந்தார். உதாரணமாக: ஒரு மனிதன் திடீரென்று தன் சிநேகிதனைக் குத்தி கொன்றுபோட்டான். ஆகையால், அவனைச் சிறையிலடைத்து, மரணத்தீர்ப்பு கொடுக்கப்பட்டது. இவன் தன் சுயசித்தத்தினால் அந்தக் கொலை செய்யவில்லை, இவனுக்கு ஒரு வியாதியிருக்கிறது. அந்த வியாதி மும்முரமானவுடனே, தன்னையறியாமலே, திடீரென்று கொலைசெய்தான். இதை அறிந்த, ஜனங்களும் அவனுடைய இனத்தாரும், ராஜாவுக்கு மனுக்



கொடுத்து, இவன் செய்த கொலை, தன் சுயசித்தத்தினால் செய்யவில்லையென்றும், அவனுக்குண்டாயிருந்த வியாதியின் அகோரத்தால் அப்படிச் செய்தானென்றும் விண்ணப்பம் பண்ணினார்கள். ஆகையால், ராஜா அவனுடைய குற்றத்தை மன்னித்து விடுதலைபண்ணினார். இதைக் கேட்ட ஜனங்களும், இனத்தாரும் அதிக சந்தோஷத்தோடிருக்கையில், மறுதின இரவிலேயே அந்தக் குற்றவாளி மரித்துப்போனான் என்று வெளியானது. அவன் செய்த குற்றத்தை ராஜா மன்னித்தபோதிலும், அவனுக்குண்டாயிருந்த வியாதியே அவனைக் கொன்றது. அந்த வியாதி நீங்கும்படி மருந்துகொடுத்திருந்தால், அவன் பிழைத்திருக்கலாம்! ஆனால், வியாதியைப் பற்றி ஒருவரும் கவனிக்கவில்லை. அதுபோலவே, நம்மிடத்தில் உண்டாகிற பாவமெல்லாம், பாவசுபாவத்தினால் உண்டாகிறது. பாவசுபாவம் நீங்கினால் பாவமுமிராது. பாவங்கள் மன்னிக்கப்பட்டபோதிலும், பாவத்தை உண்டாக்குகிற பாவசுபாவமாகிய வியாதி நீங்காவிட்டால் மரணத்தைப் பிறப்பிக்கும்.

அநேகர் தேவாலயத்திற்கு சென்று, தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு வந்துவிட்டால், தாங்கள் ரக்ஷிக்கப்பட்டவர்கள் என்று எண்ணி தங்களை வஞ்சித்துக்கொள்ளுகிறார்கள். மெய்யாய் ரக்ஷிக்கப்பட்டவன், இனி நாம் எதிர்பார்க்கும் மோக்ஷத்தை இவ்வுலகத்திலேயே அநுபவிக்கிறான். இதுவே மெய்யான ரக்ஷிப்பு. இவ்வுலகத்தில் மோக்ஷத்தை அநுபவியாதவன், இனி அவன் எதிர்பார்க்கும் மோக்ஷத்தைப்பற்றி கனவிலும் நினையாமலிருப்பதே நலம். பாவம் செய்கிற ஒருவனும் அவன் ஜனங்களும் சாபத்துக்குள்ளாகிறதுபோல, நீதிமான் ஒருவனாலே அவனும் அவன் ஜனங்களும் ஆசீர்வதிக்கப்படுகிறார்கள். உதாரணமாக: தாவீது ராஜாவினால், அவரும் அவருடைய ஜனங்களும் ஆசீர்வதிக்கப்பட்டார்கள். ஆனாலும், அவர்களில் துன்மார்க்கமாய் ஜீவித்தவர்கள் மாண்டார்கள். நமதருமை ரட்சகருடைய புண்ணியத்தால் அநேகர் ரட்சிக்கப்படுகிறார்கள். அவர் மரித்ததால், அவருடைய ஜீவன் நமக்குள் சென்று பாவத்தில் மரித்தவர்களாகிய நமக்கு புதிய ஜீவனைக் கொடுக்கிறது. உதாரணமாக: ஒருவன் ஒரு நல்ல மாமரத்தை வெட்டிக்கொண்டிருந்தான். ஏனென்று கேட்டதற்கு, இதை மற்றொரு மாமரத்தோடு ஒட்டவைப்பதற்கு என்று சொன்னான். நான் மிகவும் அதிசயித்து, 'அப்பா, புளித்த மாமரத்தை வெட்டியல்லவோ நல்ல மாமரத்தோடு ஒட்டவைப்பார்கள், நீ செய்கிறது இயற்கைக்கு விரோதமாயிருக்கிறதே, நல்ல மரத்தை வெட்டுகிறாயே' என்றேன். அதற்கவன், 'இல்லை, இந்த நல்ல மரத்தை புளித்த மரத்தோடு ஒட்டினால், புளித்த மாமரம் முழுவதும் நல்ல கனி கொடுக்கும்' என்றான். அதுபோலவே, நல்ல மாமரமாகிய கிறிஸ்து, நமது புளித்த கனியாகிய பாவங்களுக்காக ஒரே தரம் வெட்டப்பட்டார். புளித்த கனி கொடுக்கும் மரங்களாகிய நம்மில் யார்யார் அவரோடு ஒட்டப்படுகிறோமோ, அவர்களுடைய பாவசுபாவமும், [illegible]

களும் மாறி, கிறிஸ்துவின் கிரியையும், கிறிஸ்துவின் சுபாவமும் உண்டாகிறது. ஆனால், நமக்கு ஒரு சந்தேகம் உண்டாக 2000 வருஷங்களுக்கு முன் அல்லவோ கிறிஸ்துவானவர் உலகத்திற்கு வந்தார் அப்பொழுது நாம் பிறக்கவில்லையே. அவர் வெட்டப்பட்டதினால் நமக்குண்டாகும் பலன் என்ன என்று நினைப்பதற்கு இடமுண்டு (எபி. 7: 9, 10).

‘அன்றியும், மெல்கிசேதேக்கு ஆபிரகாமுக்கு எதிர்கொண்டு போனபோது, லேவியானவன் தன் தகப்பனுடைய அரையிலிருந்தபடியால், தசமபாகம் வாங்குகிற அவனும் ஆபிரகாமின் மூலமாய்த் தசமபாகம் கொடுத்தான் என்று சொல்லலாம்’. இந்த சம்பவத்தில் லேவியானவன் பிறக்கவில்லை. ஆனால் தசமபாகம் கொடுத்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால், லேவியானவன் பிறப்பான் என்பதாக நிச்சயமாகிறது. அவனும் தசமபாகம் செலுத்தினான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விதமாகவே, இயேசுவானவர் இவ்வுலகத்திற்கு வந்து, பாடுபட்டதினாலே, பின்பு பிறந்த நமக்காகவும் பாடுபட்டார் என்று அர்த்தப்படுகிறது. அந்தச் சமயத்தில் நாம் பிறக்காதபோதிலும், நாமும் பிறக்கவேண்டும் என்று தேவனால் நியமிக்கப்பட்டிருக்கிறது. நாம் அவரோடு ஒட்டவைக்கப்படுகிறபொழுது நமது துர்க்கிரியைகள் மாறி, அவருடைய பரிசுத்த கிரியைகள் நம்மில் உண்டாகிறது. அவர் மரித்ததினாலே பாவத்தினால் மரித்தவர்களாகிய நாம் ஜீவனடைந்தோம். ஒருவருடைய மரணத்தினாலே, அநேகர் ஜீவனடைகிறார்கள் என்று, நான் புத்தான் தேசத்தில் பிரசங்கித்தபொழுது, ஒருவன் என்னிடம் வந்து: ‘ஐயா இது எனக்கு முன்னமே தெரியும், என் அனுபவத்தில் நான் அதைக் கண்டிருக்கிறேன். ஒருவன் சாகிறதினால் மற்றவன் பிழைக்கக்கூடும்’ என்றான். இப்படிச் சொல்லுகிறவன், கிறிஸ்தவனாயிருக்கவேண்டுமென்று நினைத்து, அவனை கிறிஸ்தவனா என்று கேட்டதற்கு, அவன், ‘இல்லை, இல்லை, நான் சிறுவனாயிருந்தபொழுது மலையில் ஏறும்போது, கால் தவறி கீழே விழுந்தேன். அதினால் பெரும் காயமுண்டாகி என் உடம்பிலுள்ள இரத்தமெல்லாம் தரையில் ஓடினது. உயிருக்கு இரத்தமே ஆதாரமானதால், இரத்தமெல்லாம் கீழே போய்விட்டபடியால் நான் பிழைக்கமாட்டேனென்று வைத்தியர்கள் சொன்னார்கள். அவர்களிலொரு வைத்தியன்: ‘இவனிடத்திலிருந்து ஓடின இரத்தத்திற்குப் பதிலாக, யாராவது ஒருவன், தன்னுடைய இரத்தத்தைக் கொடுப்பானேயாகில், இவன் பிழைப்பான்’ என்று சொன்னான். உடனே, என் தகப்பனார், தன் இரத்தத்தைக் கொடுப்பதாக தீர்மானம்பண்ணி, என் தகப்பனாருடைய இரத்தாசயத்தை வெட்டி, என் இரத்தாசயத்தோடு ஒட்டவைத்ததினால், என் தகப்பனாருடைய இரத்தம் என் உடம்பில் சென்று நான் பிழைத்தேன், என் தகப்பனாரோ இறந்தார்’ என்றான். அதுபோலவே, நமதருமை ரட்சகர் பாவிகளுக்காக மரணமடைந்தார். யார் யாருடைய இருதயங்கள் அவருடைய இருதயத்தோடு இணைக்கப்பட்டிருக்கிறதோ, அவரவர்களுடைய ஆத்துமா ஜீவனடைகிறது. பிராணனுக்குப் பதில் பிராணன்தான். தகப்பன் உயிர் கொடுத்ததால் மகன் பிழைத்தான். நமதருமை ரட்சகர் தமது ஜீவனைக் கொடுக்க, நாம் உயிரடைகிறோம்.

புது ஜீவனடைந்தவன் அனுபவத்தில் கிறிஸ்தவனாயிருக்கிறான். நான் திபேத்து நாட்டிலிருந்தபோது, ஒரு ரத்தசாக்ஷியினுடைய சம்பவத்தை அறிந்தேன். அவன், சுவிசேஷத்தைப் பிரசங்கித்ததினிமித்தம், அவனைக் கட்டி, இரும்பு ஊசியைப் பழுக்கக் காய்ச்சி, அவனுடைய சரீரத்தில் குத்தினார்கள். அப்படி செய்ததற்காக, அவர்களுக்கு வந்தனமளித்து, அவர்களை நோக்கி: ‘நீங்கள் எனக்கு வேதனை உண்டாக்கும்படி இப்படிச் செய்கிறீர்கள்! ஆனால், என் உள்ளத்திலிருந்து ஒரு ஜீவநதி ஓடுகிறது. இந்த ஊசிகள் என் உடம்பில் பாய்ந்தவுடனே, என் உள்ளத்திலிருந்து வரும் ஜீவதண்ணீரால் அதின் சூடு அணைந்துபோகிறது’ என்று சொல்லி, கடைசியில், ஆர்ப்பரிப்போடும், ஆனந்தக்களிப்போடும், தன் ஆவியை தேவனிடத்தில் ஒப்புக்கொடுத்தான். இவ்விதமாக, அவன் தன் அனுபவத்தால் மெய்க்கிறிஸ்தவனைக் காட்டினான். நாம் இயேசுவானவரோடு இணைக்கப்படும்பொழுது, அந்த ஜீவநதி நம்மில் பாய்ந்து, நமக்குப் புது ஜீவன் கொடுத்து, உலகத்தில் இயேசுவானவருக்காக துன்பங்களையும், பாடுகளையும் சகிக்க நமக்கு பெலன் கொடுக்கிறது. துன்பத்திலும், ‘கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்’ என்று சொல்லக்கூடியவர்களாயிருப்போம். நம் அனுபவத்தில், அவரைக்கண்டு ஜீவித்தால்தான் அவரும் நம்மில் ஜீவிப்பார். அப்பொழுதுதான் ‘கிறிஸ்து இன்னும் உயிரோடிருக்கிறார்’ என்று சாட்சி சொல்லக்கூடியவர்களாயிருப்போம்.

சாது சுந்தர் சிங்

## விஷக்காய்ச்சலும் எச்சரிப்பும்

தற்காலத்தில் நடக்கும் இந்த பயங்கரமான விஷக்காய்ச்சலானது, ‘Influenza’ என்றும், ‘Bombay Fever’ என்றும், ‘Spanish Fever’ என்றும், ‘War Fever’ என்றும் பலவிதமாக அழைக்கப்படுகிறது. இவ்வியாதியானது, ஒரு இடத்தில் மாத்திரமல்ல, இந்த உலகம் முழுவதிலும் பரவி, ஆயிரமாயிரமான மரணத்தைப் பிறப்பித்ததுமல்லாமல், அநேக குடும்பங்களை பரிதாபமான நிலைமைக்குள்ளாக்கிவிட்டது. இவ்விடத்திலும் பிரேதங்களைப் பார்க்காத நேரமும் கிடையாது. இவ்விதக் காய்ச்சல் இல்லாத வீடும் கிடையாது. உலகம் மிகப் பரிதாபமான நிலைமையில் கிடத்தப்பட்டிருக்கிறது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போலக் காணப்படுகிறது. இவ்வகைக் காய்ச்சல், மருந்தினாலும், எவ்வித சிகிச்சையினாலும் சுகப்படுகிறதில்லை. இந்த வியாதி தற்செயலாய் உண்டாயிருக்குமாகில், சிகிச்சைகளினால் சுகப்படுத்திக்கொள்ளலாம்.

ஆனால் இதுவோ, தேவ வார்த்தையால் உண்டானதென்று நாம் வேதாகமத்தில் தெளிவாகக் காணலாம். 'அவருக்கு முன்பாக கொள்ளைநோய் சென்றது. அவர் அடிகளிலிருந்து எரிபந்தமான காய்ச்சல் புறப்பட்டது. அவர் நின்று பூமியை அளந்தார்'. (ஆபகூக் 3: 5, 6). ஒவ்வொரு சம்பவமும் நமது அருமை ரக்ஷகரை நம்மிடமாக நெருக்குகிறது. விஷபேதி உண்டானால், இனிப் பிழைப்பதரிது என்று எப்படிச் சொல்லத்தகுமோ, அப்படியே இந்த வியாதியின் விஷயமும் ஆகிவிட்டது. ஆகையால், இந்த வேதனையைத் தணித்தருளவேண்டுமென்று ஜெபிப்பதை விருத்தி, ஒவ்வொருவரும் தங்களை தேவனுக்கென்று பிரதிஷ்டை செய்வதே மேலான மருந்து. இயேசு மகாராஜா பவனி புறப்பட்டுவிட்டார். இனித் தாமதியார். மோக்ஷ பிரயாணிகளாகிய நாம் எல்லாரும் அந்த மோக்ஷானந்தத்தை அநுபவிக்க ஆயத்தப்படுவோமாக.

'அத்திமரம் துளிர்விடாமற் போனாலும், திராக்ஷச் செடிகளில் பழம் உண்டாகாமற் போனாலும், ஒலிவமரத்தின் பலன் அற்றுப்போனாலும், வயல்கள் தானியத்தை விளைவிக்காமற்போனாலும், கிடையில் ஆட்டுமந்தைகள் முதலற்றுப் போனாலும், தொழுவத்திலே மாடு இல்லாமற்போனாலும் நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன் என் இரக்ஷிப்பின் தேவனுக்குள் களிகூருவேன். ஆண்டவராகிய கர்த்தர் என் பெலன்; அவர் என் கால்களை மான் கால்களைப்போலாக்கி, உயரமான ஸ்தலங்களில் என்னை நடக்கப்பண்ணுவார் (ஆபகூக் 3: 17, 18, 19) என்று நாம் சொல்லக்கூடியவர்களாயிருப்போமானால், நாம் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே. எப்பேர்ப்பட்ட மரணம் நேரிட்டாலும் நாம் பயப்படோம். ஏனென்றால், நமது நம்பிக்கை மேலோகத்திலிருக்கிறது. நமது பந்துக்களையும், சிநேகிதர்களையும், பெற்றோரையும், புருஷர், மனைவி, பிள்ளைகளையும், சகல பரிசுத்தவான்களையும், நமது ஆதித்தாய் தகப்பன்மாரையும் கிறிஸ்துவின் மகிமையில் அதிசீக்கிரத்தில் சந்திப்போம் என்கிற நிச்சயம் நமக்கு உண்டு. தேவன் நம்மைச் சந்திக்கிற இந்தக் காலத்திலேயே 'உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு' (ஆமோஸ் 4: 12).

S. R. D.

## சுயாதீன சுவிசேஷ வேலை

இந்தியாவிலிருந்து ஏறக்குறைய 20 வருஷங்களுக்குமுன் கொழும்புக்குவந்து, தற்சமயம் ஒரு கம்பேனியில், பெரிய உத்தியோகத்தில் ஒருவர் இருக்கிறார். அந்தக் கம்பேனியில் அவர் உயர்ந்த சம்பளம் பெற்றுவருகிறார். இவர் சிலகாலமாக வீடுகள்தோறும் சென்று, ஜெபக்கூட்டங்கள் நடத்தி, இந்துக்குடும்பங்களைச் சந்தித்து, கிறிஸ்துவின் அன்பைப் பற்றி அவர்களுக்குச் சொல்லி, வேதாகமப் பகுதிகளை அவர்களுக்கு இனா



மாகக் கொடுத்து, சுயாதீனமாக தேவஊழியத்தைச் செய்துவந்தார். தன் சொந்தச் செலவில், தமிழிலும், இங்கிலீஷிலும், சிங்களத்திலும் கைப்பிரதிகள் அச்சிட்டு, வேதாகமப் பகுதிகளை பல பாஷைகளிலும் வாங்கி, அவைகளை இனாமாக பல பாஷைக்காரருக்கும் கொடுப்பதும், சந்துகளிலும், வீதிகளிலும், இடுக்கமான இடங்களிலும், கேவலமான ஜாதியாரிடத்திலும், இழிவான ஜாதியாரிடத்திலும், நாற்றமான இடங்களிலும், பெரிய கூட்டங்களிலும் சென்று, கிறிஸ்துவுக்கு சாட்சியாக நின்று, பாட்டுகள் படிப்பதும், இயேசுவின் நாமத்தை அறிவிப்பதும், பிரசங்கங்கள் செய்வதுமாக இருந்தார். இதுவுமல்லாமல், இராப்பள்ளிக்கூடம் ஒன்றில் இனாமாக எல்லாருக்கும் கல்வி கற்றுக்கொடுக்கிறார்.

ஏறக்குறைய இரண்டு வருஷங்களுக்கு முன், சுமார் 23 பிராயமுள்ள ஒரு வாலிபனும் இந்தியாவிலிருந்து கொழும்புக்குவந்து சேர்ந்தான். அவனும் தேவனுக்கு பயந்த ஒரு வாலிபன். தேவ ஒத்தாசையால் அந்த வாலிபனும், அந்த தேவ ஊழியக்காரரும் அறிமுகமானார்கள். தேவ மகிமையைப்பற்றி அந்த இருவரும் அடிக்கடி சம்பாஷிப்பதும், அடிக்கடி ஜெபம் செய்கிறதுமாயிருந்தார்கள். ஆனால், அந்த தேவஊழியர் ஓய்வு நாட்களில் காலை ஆராதனைக்கு மாத்திரம் கோவிலுக்குப் போகிறதுண்டு, ஆனால், சாயந்திரமோ கோவிலுக்குப் போகிறதில்லை. இதைக் கவனித்த அந்த வாலிபன் அவரிடத்தில் அதைப்பற்றி விசாரித்தான். அதற்கவர்: நாம் மாத்திரம் ஒழுங்காய் ஆலயத்திற்குப்போய், விலாப்புடைக்க சாப்பிட்டுவிட்டு வந்தால் போதுமோ? இயேசுவின் நாமத்தை அறியாத எத்தனையோ ஆத்துமாக்கள் ஆத்தும பசியால் சாகிறார்களே! 'உலகமெங்கும் போய் சகல ஜாதிகளையும் என் சீஷராக்குங்கள்' என்று நமதருமை ரக்ஷகர் கட்டளையிட்டிருக்க எல்லாக் கிறிஸ்தவர்களும், தாங்கள்மாத்திரம் சுவிசேஷத்தை அறிந்தால் போதுமென்றும், தாங்கள் மாத்திரம் நித்திய ஜீவனை அடைந்தால் போதுமென்றும் எண்ணினால், கிறிஸ்துவானவருடைய கட்டளைப்படி மற்றவர்களை அவருடைய சீஷராக்குவது எப்படி? என் விஷயத்தில், நானோ, ஓய்வுநாள் காலையில் ஞானபோஜனத்தைத் திருப்தியாய்ச் சாப்பிடுகிறேன். ஆனால், சாயந்திரமோ, பசியாயிருக்கிற என் சகோதரர்களுக்கு ஞானபோஜனத்தை ஊட்டுகிறேன், நான் பாதியும் என் சகோதரர்கள் பாதியுமாகச் சாப்பிடுகிறோம் என்றார்.

இதைக் கேட்டுக்கொண்டிருந்த அந்த வாலிபன், ஒருபக்கம் வெட்கமும், மற்றொருபக்கம் ஆத்திரமுமுண்டாகி, அவருடைய ஊழியங்களைப் பற்றி விசாரித்ததின்பேரில், மேல்சொல்லப்பட்ட சகலமும் அவனுக்கு வெளியானது. தேவன் அவனையும் உபயோகிக்கச் சித்தங்கொண்டார். அவனும் தன்னை தேவஊழியத்துக்கு ஒப்புக்கொடுத்து, அந்த தேவஊழியரோடு சென்று தேவனுக்கு ஊழியம்செய்து வந்தான். தற்சமயம், அந்த வாலிபனுடைய தூண்டுதலின்பேரில், புதிதாய் கிறிஸ்துவை [illegible]

ராக ஏற்றுக்கொண்ட மற்றொரு வாலிபனையும் சேர்த்துக்கொண்டு பகிரங்கமாக தேவஊழியம் செய்துவருகிறார்கள். இந்த மூன்றுபேரும் கம்பேனிகளில் வேலை செய்துவரும் உத்தியோகஸ்தர்கள். என்றாலும், அவர்கள் தங்களை முற்றாய் தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, ஒவ்வொரு ஓய்வுநாள் சாயந்திரத்திலும், தங்களோடு சில பாடகர்களைக் கூட்டிக்கொண்டு, பல இடங்களுக்கும் சென்று, இயேசுவின் நாமத்தை பிரசங்கித்தும், கிறிஸ்தவ சகோதரர்களைச் சந்தித்தும், ஜெபக்கூட்டங்களை நடத்தியும் வருகிறார்கள். இவர்களுடைய வேலையில் பெரிய மாறுதல் உண்டாகக் காத்திருக்கிறோம். அதற்காக உங்கள் எல்லாருடைய ஜெபமும் அவசியம் இந்த சுயாதீனப் பிரசங்கிகளுடைய மன ஊக்கத்தையும், ஆத்திரத்தையும் கவனிக்கும்பொழுது, ஒவ்வொருவருடைய இருதயத்திலும் ஒருவிதமான உணர்ச்சி உண்டாகிறது. அவர்கள மேன்மேலும் தேவஊழியத்தை ஊக்கத்தோடும், ஆத்திரத்தோடும் செய்யவும், அவர்கள் செய்யும வேலையில் விசேஷித்த எழுப்புதல் உண்டாகவும் திரளான பலன் கிடைக்கவும், உங்கள் ஜெபங்களில் அவர்களையும், அவர்களுடைய வேலைகளையும் நினைத்துக்கொள்ளுங்கள்.

இவர்களைப்போல நம்மிலும் அநேகர் சுயாதீனப் பிரசங்கிகளாக எழும்பி, கிறிஸ்துவின் ராஜ்ஜியத்துக்காக ஊக்கத்தோடும் ஆத்திரத்தோடும் வேலை ஆரம்பித்தால், வெகு சீக்கிரத்தில், இந்தியாவிலும் இலங்கைத் தீவிலும் ஆயிரம் பதினாயிரமான ஜனங்கள் கிறிஸ்துவை அறியும் அறிவுக்குள் வருவார்கள் என்பதற்கு சந்தேகமில்லை. 'அறுப்பு மிகுதி, வேலையாட்களோ, கொஞ்சம்'. கிறிஸ்தவர்களான ஒவ்வொருவரும் வேலைக்காரர்தான்.

S. R. D.

## 'உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தபபடு'

(தொடர்ச்சி)

II. ராஜாவாக வருகிறார். ஆதலால் ராஜாவைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு.

2. சிலர் சந்தேகத்தோடு தங்கள் ராஜாவைச் சந்திக்கப்போகிறார்கள் அதோ! இரண்டாவது ஒருவன் தாவீது அரசனைச் சந்திக்கப் புறப்பட்டுவருகிறான். நொண்டி நொண்டி நடக்கிறான், கால் முடவனாயிருக்கிறான். அவன் வெகு சேவலமாய்க் காணப்படுகிறான். அவன் குளித்து வெகு காலமாயிற்று. தன் தாடியை க்ஷவரம்பண்ணி அநேககாள் ஆயிற்று. அவனுக்கும் தைரியமில்லை. ராஜா என்னை ஏற்றுக்கொள்வாரோ தள்ளிப்போடுவாரோ என்று சந்தேகப்பட்டு அதோ! பைய வந்து நமஸ்காரம் செய்கிறான். அரசன் அவனைப் பார்த்து ஒரு கேள்விகேட்கிறான். 'நீ என்னோடேகூட வராமல்போனது என்ன'? அவன் யார் என்றால் மேவிபோசேத்து என்



பவன். ராஜாவினாலே பற்பல நன்மைகளைப் பெற்றவன். அரசனுடைய தயவினாலே உயிரோடே காக்கப்பட்டவன். எதிர்ப்பட்சத்தைச் சேர்ந்தவன். என்றாலும் தாவீதின் அரண்மனைக்கு அழைக்கப்பட்டு அங்கே சம்பிரமமாய் வாழச் சலாக்கியம் பெற்றவன். ஆனாலும் பாருங்கள் தான் பெற்ற நன்மைகளுக்குத் தக்கதாக அவன் நடக்கவில்லை. தனனைக் காப்பாற்றி ஆதரித்துவந்த அரசன் துன்பம் அடைந்து துரத்தப்படும்போது இவன் யாதொரு உதவியும செய்யவில்லை. 'உப்பிட்டாரை உள்ளளவும் நினை' என்பதை மறந்துபோனான். இவன் வேலைக்காரன் நல்லமனையினாலேயோ வஞ்சகத்தினாலேயோ, துன்பப்பட்ட அரசனுக்குப் போய்ச் சகாயம் பண்ணினான். இவனுக்கோ அந்த ஆத்திரமில்லை. ஒருவேளை! தாவீதின் ராஜ்யம அற்றுப்போனாலும் போகும். ஆகையினாலே நான் இந்தச் சமயத்தில் வெளியாக்கமாய் அவன் பேரில் சிநேகம் பாராட்டுவது விவேகமான காரியமல்ல. நிசந்தான், அவன் எனக்கு நன்மை செய்தவன். அவன் ராஜாவாகத் திரும்பி வந்தால் எனக்கு மெத்தச் சந்தோஷம். அவன் துன்பப்படுவது எனக்கு மஹா துக்கமான காரியம், ஆனாலும் நான் சும்மா இருந்தால் தாவீதை. எனக்கு மோசம்வராதபடி மாத்திரம் பார்த்துக்கொள்வது காரியம்' என்று வீட்டிலே சும்மாயிருந்தான்.

பார்த்தீர்களா? ராஜாவின் மஹிமையில் பங்குபெற விரும்பினான். அரசனுடைய பாடுகளிலோ அவனுக்குப் பங்குபெற அவனுக்கு மனமேயில்லை. அப்சலோமோடு அவன் சேர்ந்துகொள்ளவில்லை. தாவீதோடும் அவன் பூரணமாய்ச் சேர்ந்துகொள்ளவில்லை. தாவீதரசன் மெய்யான ராஜாவென்று அறிந்துகொண்டான். அவன் போனதுக்கத்தின் நிமித்தம் கிலேசப்பட்டான்; தன் தாடியை க்ஷவரம் செயயவில்லை. தன் வஸ்திரங்களையும் வெளுக்கவில்லை. என்றாலும் அப்சலோமுக்குப் பயந்துநடந்தான். இரண்டு நினைவுகளால் குந்திக் குந்தி நடந்தான். இதிலும் அவனுக்குச் சந்தோஷமில்லை; அதிலும் சந்தோஷமில்லை. லோத்து என்பவன் சோதோம் பட்டணத்தில் மனவருத்தத்தோடு சஞ்சரித்ததுபோல இவனும் மன ஆறுதலில்லாமல எருசலேம் பட்டணத்தில் வாசம்பண்ணினான். ராஜாவானவன் இந்தச் சமயத்தில் திரும்பிவரும்போது மேவிபோசேத்து அவனைச்சந்திக்கக் காத்திருக்கிறான். 'நீ என்னோடேகூட வராமற்போனதென்ன'? வென்று தாவீது கேட்கும்போது போக்குச்சொல்லுகிறான். என்றாலும் அவனுக்குச் சந்தோஷமில்லை; தைரியமுமில்லை. அவனுக்கு உண்டான நஷ்டத்தைப் பாருங்கள். அவன் சுதந்தரத்தில் பாதிச்சுதந்தரம் வெட்டுப் போயிற்று. பாதி மஹிமையை இழந்துவிட்டான். 'மேவிபோசேத்தே! நீ ராஜாவோடு பாடுபடச் சம்மதித்து அவருடனே கூடப்போனாயானால் உனக்கு நலமாயிருக்குமே. உன் சுதந்தரத்தோடு இன்னும் அதிக மஹிமையையும் மேன்மையையும் தந்திருப்பாரே! இப்பொழுதோ இருந்ததில் பாதியை இழந்துபோனாயே!?

எத்தனையோ கிறிஸ்தவர்கள் இயேசு மஹாராஜாவை இப்படிச் சந்தேகத்தோடு சந்திப்பார்கள். அவர்களில் சிலர் குணப்பட்டவர்களாயிருக்கலாம். இயேசுவின்பேரில் அவர்களுக்குக் கொஞ்சம் விசுவாசமும் நேசமுமுண்டு ஆனாலும் அவரோடுகூடப் பாடுபட அவர்களுக்கு மனதேயில்லை. அவருடைய நிந்தையைச் சுமந்துகொண்டு பாளயத்துக்குப் புறம்பே அவரிடத்திற்குப்போக அவர்களுக்குப் பிரியமேயில்லை அவருடைய பட்சத்தில் அவர்கள் தைரியமாய் நிற்கிறதில்லை. ஒரு கையினால் உலக நேசத்தையும் மறுகையினாலே அருமைரக்ஷகரையும் பிடித்துக்கொள்ளப் பார்க்கிறார்கள். முடியாது! முடியாது! ராஜாவானவர் வரும்போது 'நீ என்னோடேகூட வராமற்போனது என்ன?' என்று கேட்கப்போகிறார்.

அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம். நாம் அவரை மறுதலித்தால் அவரும் நம்மை மறுதலிப்பார் (2 தீமோ. 2: 12). சீமேயியினுடைய காரியம் மாத்திரமல்ல மேவிபோசேத்தின் காரியமும் லூக்கா 19-ல் சொல்லியிருக்கிறது. ராஜாவினுடைய ராத்தலை ஒரு சீலையில் வைத்து அரசனுடைய மஹிமைக்கென்று அதை உபயோகப்படுத்தாத ஊழியக்காரனுடைய பங்கு அவனைவிட்டு எடுபட்டுப்போனதே (வா. 24). அப்படிப்போலவே இருமனமுள்ள கிறிஸ்தவர்களுடைய காரியமுமிருக்கும். அவர்கள் மோக்ஷத்துக்குப் போவார்களோ சந்தேகம். போனாலும் அவர்களுக்கு மஹிமையின் கிரீடமும் கிடையாது; சரியான சுதந்தரமும் கிடையாது.

8. சிலர் தைரியத்தோடு தங்கள் ராஜாவைச் சந்திக்கப் போகிறார்கள். இன்னொருவன் ராஜாவைச் சந்திக்க வந்திருக்கிறான். அவன் வயோதிகன், வயது சென்றவன், அரசனுடைய உண்மையுள்ள சிநேகிதன். தாவீது ஓடிப்போகும் நாளிலே அவனுக்கு வெகுவாய் உதவி செய்தவன். 'மற்றவர்கள் துரோகம் செய்தாலும் நானும் ராஜாவின் பக்ஷத்தில் நிற்பேன்' என்று சொல்லி தைரியமாய் நடந்து அரசனுக்கு வேண்டிய சாமான்களையும் போஜன பதார்த்தங்களையும் திரள் திரளாய் அனுப்பி, அவனைப் போஷித்தவன். பார்த்தீர்களா? ஆபத்து வேளையில் உதவிசெய்கிற சிநேகிதனே சிநேகிதன். அப்சலோம் என்னைக் கொன்றுபோட்டாலும் என் அரசனை ஒருபோதும் மறுதலிக்கமாட்டேனென்று நிச்சயித்தவனாய் நின்றவன். இப்போது தாவீது வெற்றிவேந்தனாகத் திரும்பிவருகிறானென்ற சந்தோஷ செய்தியைக் கேட்டவுடனே இவன் (பர்சிலா என்பவன்) ஆனந்தத்தோடு அவனைச் சந்திக்கப் புறப்பட்டு வந்திருக்கிறான். வயது அதிகம். எண்பது வயது. என்றாலும் நான் சாகுமுன்னமே என் ராஜாவைப் போய்ப் பார்ப்பேன் என்று சொல்லித் தாவீதைச் சந்தித்துச் சந்தோஷம் கொண்டாடுகிறான். ஆ! இவனுக்குப் பயமுமில்லை, வெட்கமுமில்லை, சந்தேகமுமில்லை. ராஜாவானவன் அதோ! அவனை அணைத்து முத்தமிட்டு ஆசீர்வதிக்கிறான் (வா. 39). 'நீ என்னோடேகூட நடந்துவா. எருசலேமிலே



உன்னை என்னிடத்தில் வைத்துப் பராமரிப்பேன்' என்று அழைக்கிறான். 'நீ என்னிடத்தில் வேண்டிக்கொள்வதையெல்லாம் நான் உனக்குக் கொடுப்பேன்' என்றும் வாக்களிக்கிறான். 'பர்சிலாவே! பர்சிலாவே! நீ பாக்கியவான். உனக்கு ராஜாவின் சிநேகிதனென்று பெயர். உனக்கும் உன் குடும்பத்துக்கும் நித்திய மஹிமையும் கீர்த்தியும் கிடைத்தது. இந்தச் சுவிசேஷம் எங்கெங்கே அறிவிக்கப்படுகிறதோ அங்கங்கே எல்லாம் உன் உண்மையும் உன் மேன்மையும் சொல்லப்படும். பார்த்தீர்களா? பர்சிலாவினுடைய சங்கதியையும் லூக்கா 19ல் காட்டப்பட்டிருக்கிறது. 'உத்தம ஊழியக்காரனே! நீ கொஞ்சத்தில் உண்மையுள்ளவனாயிருந்தபடியால் பத்துப் பட்டணங்களுக்கு அதிகாரியாயிரு' (வா. 17).

சகோதரரே! உங்களில் எத்தனை பேர் கிறிஸ்துவினுடைய உத்தம சிநேகிதர்களாயிருக்கிறீர்கள். 'மற்றவர்கள் என்னைத் துன்பப்படுத்தினாலும் ஆகாதவனென்று தள்ளினாலும் என் ராஜாவுக்குத் துரோகம் செய்யமாட்டேன், பாவம் செய்யமாட்டேன்' என்று உள்ளபடி சொல்லக்கூடுமா?

Rev. T. WALKER.

## திருஷ்டாந்தங்கள்

பிரெக்கில்ஸ் என்னப்பட்ட ஓர் அனாதப்பையன் இருந்தான். அவன் தாயும் தகப்பனும் கள் வியாபாரம் செய்து குடித்துவந்ததால வறுமையடைந்து அகால மரணமானார்கள். அவனிருந்த ஊரில், 'கள் கடை வைக்கலாமா' என்பதைப்பற்றிய கேள்வி வந்து ஜனங்களுடைய சம்மதச் சீட்டின்பேரில் தீர்மானிக்க யோசித்தார்கள். பிரெக்கில்சும் அவன் சிநேகிதர் சிலருமான பையன்கள் 'கள்கடை எடுபடவேண்டும்' என்னும் விலாசத்தை எழுதித் தங்கள் சட்டைகளில் தைத்துக்கொண்டார்கள். பெரியவர்கள் சேர்ந்து சம்மதச் சீட்டுக் கொடுத்ததில், கள்கடை வைக்கவேண்டும் என்பதற்குச் சீட்டு அதிகப்பட்டு அப்படியே தீர்மானமாயிற்று. தீர்மானமானபின்பு பையன்கள் விலாசத்தை எடுக்கவில்லை. பெரிய மனுஷன் ஒருவன் பிரெக்கிலசைக் கண்டு, 'உன் விலாசத்துக்கு விரோதமாகத் தீர்மானமாயிற்றே, விலாசத்தை ஏன் எடுக்கவில்லை' என்று கேட்டான். பிரெக்கில்ஸ் பிரதியுத்தரமாக, 'இன்று பெரியவர்கள் சம்மதச் சீட்டுக் கொடுத்தார்கள். பையன்களாகிய நாங்களும் சீக்கிரத்தில் சம்மதச் சீட்டுக்கொடுப்போம். இன்று பையன்கள் கொடிபிடிப்பார்கள். நாளைக்குச் சீட்டுக் கொடுப்பார்கள். பையன்களில்லாவிட்டால் கள்கடைகள் அடைபட்டுப்போம்' என்றான். ஆகையால் குடிவெறி நீங்கவேண்டுமானால் பையன்களைப் பிடித்துக்கொள்வோம்.

ஒரு மனிதன் ஒருநாள் மலைப்பக்கமாய் உலாவிக்கொண்டிருக்கும்போது அதிவேகமாய் ஓடித் தன் ஓட்டத்தினால் செடிகளையும் நிலங்களை

யும அழித்துக்கொண்டுபோன ஒரு காட்டாற்றைக்கண்டு (wild torrent) அவ்வாற்றின் ஜலம் பிரயோஜனமற்றதாய்ப் போகிறது மாத்திரமல்ல, அதிகச் சேதம் உண்டாக்குகிறதேயென்று எண்ணி, கொஞ்சம் கொஞ்சமாக ஓர் அணையைக்கட்டி அவ்வாற்றின் ஓட்டம் தணியவும் பக்கத்து நிலங்களில் பாய்ந்து செழிப்புண்டாகத் தக்கதாகவும் செய்தான். இவ்விதமாக அப்பள்ளத்தெங்கும் செழிப்புண்டாயிற்று. அநேக பாழ்நிலங்கள் பயிர் நிலங்களாயிற்று. மனுஷன் தன் ஞானத்தினால் பிரயோஜனமற்ற ஓர் நீரோட்டத்தைத் தடுத்து அப்பக்கமெங்கும் மிகுந்த ஆசீர்வாதத்தையும் செழிப்பையும் உண்டாக்கும் ஓடையாக்கினான். இவ்விதமாகவே, மனுஷனுடைய சுயாதீனசித்தம் கிறிஸ்துவின் சித்தத்துக்கு அடங்கி அவருடைய நுகத்தை ஏற்றுக்கொள்ளுமானால், அம்மனுஷனே அநேகருக்கு ஆசீர்வாதமாயிருப்பான்.

ஹென்ரி என்னும் போதகர் ஒருவருக்கு கீர்த்தியான குதிரையொன்றிருந்தது. அது ஒரு சேட்டையும் செய்யாது. நிறுத்தின இடத்திலேயே நிற்கும், ஒற்றைக் கடிவாளமானாலும், இரட்டைக் கடிவாளமானாலும், சேணமிருந்தாலும் இராவிட்டாலும், இடதுபக்கம் ஏறினாலும் வலது பக்கம் ஏறினாலும், வண்டியில் கட்டினாலும் கலப்பையில் மாட்டினாலும் நல்ல வேலைசெய்யும் உதைக்காது. இதைக் குறித்துக் குருவானவர் தன் குதிரை தன் சபையில் ஓர் மெம்பராயிருந்தால் நன்றாயிருக்கும் என்றார். நமது சபையில் மூன்று விதமான ஆட்களுண்டு: (1) தோணிக் கிறிஸ்தவர்கள். தோணி அல்லது வள்ளம் துடுப்புகளால் தள்ளப்பட்டால்தான் போகும். அப்படி இவ்வகுப்புக் கிறிஸ்தவர்களை முன்னுக்குத் தள்ளிவிட வேண்டும். (2) பாய்மரக்கப்பல் கிறிஸ்தவர்கள். அனுகூலமான திசைக் காற்றிருந்தால்தான் இக்கப்பல் ஓடும். (3) நீராவிக்கப்பல் கிறிஸ்தவர்கள். இது காற்று எப்படி அடித்தாலும் நாடிய திசைநோக்கித் தைரியமாய் ஓடும். குருவானவருடைய குதிரை இம்மூன்றாவது வகுப்பைச் சேர்ந்தது. அதைப்போன்ற குணம் கிறிஸ்தவர்களுக்கிருந்தால் நல்லது.

---

Printed at the Palamcottah Printing Press, Palamcottah and published by the Christian Brotherhood Association, Tinnevelly.

744

December 1918. Registered No. M. 163.

# The Water of Life

# ஜீவத்தண்ணீர்

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவதண்ணீருள்ள நதிகள் ஓடும்." யோவான் 7: 38

Vol. XIX டிசம்பர் 1918

## தண்டனைக்கு எப்படித் தப்பித்துக்கொள்வோம்?

எபிரேயர் 2: 4.

'அடையாளங்களினாலும், அற்புதங்களினாலும், பலவிதமான பலத்த செய்கைகளினாலும், தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்து கொடுத்ததுமாயிருக்கிற இவ்வளவு பெரிதான இரக்ஷிப்பைக் குறித்து நாம் கவலையற்றிருப்போமானால், தண்டனைக்கு எப்படித் தப்பித்துக்கொள்வோம்'?

கிறிஸ்து மார்க்கத்தில் நமக்குக் கிடைத்திருக்கிற ரட்சிப்பை 'ரக்ஷிப்பு' என்று மாத்திரம் சொல்லக்கூடாது. 'பெரிய ரக்ஷிப்பு' என்று சொல்வதே சரி.

### ஏன் அது பெரிய ரக்ஷிப்பு?

1. **இலவசமாய்க் கிடைத்த ரக்ஷிப்பு.** விலை மதிக்கக்கூடாத ரக்ஷிப்பு. பொருள் கொடுத்து வாங்கின ரட்சிப்பல்ல. இயேசுநாதர் தமது சொந்த ஜீவனைக் கொடுத்துச் சம்பாதித்த ரக்ஷிப்பு. ஆகையால், அது 'பெரிய ரக்ஷிப்பு'. அல்லாமலும், பணம் கொடுத்து வாங்கின ஒரு ஜாமானை நாம் ஒருவருக்கும் கொடுக்கமாட்டோம். ஆனாலோ, நமதருமை ரட்சகர் தமது சொந்த ஜீவனைக் கொடுத்து சம்பாதித்தது மாத்திரமல்ல, அதை இலவசமாய்க் கொடுக்கிறபடியால் அது 'பெரிய ரட்சிப்பு'. அதைப்பற்றிக் கவலையற்றிருப்போமானால் தேவ கோபாக்கினை தப்பாமல் வரும்.

2. இந்த ரக்ஷிப்பானது சதாகாலமும் நம்மோடிருப்பதால் அது 'பெரிய ரட்சிப்பு'. இம்மையிலும், மறுமையிலும் அதை நாம் அநுபவிக்கலாம். அப்படிப்பட்ட 'பெரிய ரக்ஷிப்பைக்' குறித்துக் கவலையற்றிருப்போமானால் தேவ கோபாக்கினை தப்பாது.

3. நாம் மனந்திரும்பிக் குணப்படுகிற அந்த நிமிஷத்திலேயே நமக்கு ரக்ஷிப்புக் கிடைக்கிறது. ஒரு பெரிய மாறுதல்! ஜீவியத்திலும் மாறுதல்! பேச்சிலும் மாறுதல்! நடக்கையிலும் மாறுதல்! அதே நிமிஷத்திலே மெய்ச் சந்தோஷமும், மெய்ச் சமாதானமும், மெய் ஆசீர்வாதமும் கிடைக்கிறது! ஆகையால், அது 'பெரிய ரக்ஷிப்பு'. இவ்வளவு இலவசமாய்க் கிடைக்கிற இரட்சிப்பைப்பற்றிக் கவலையற்றிருப்போமானால் தேவ தண்டனை நிச்சயம்.

நான் ஹிந்துவாயிருந்தபோது அநேக சாஸ்திரங்களைப் படித்துப் படித்து, மனச் சமாதானத்தை எங்கிருந்து பெற்றுக்கொள்ளலாமென்று ஆராய்ச்சிசெய்தேன். ஒரு மார்க்கமும் பாவிகளை ஏற்றுக்கொள்ளவில்லை. ஒரு மஹாத்மா இருப்பானேயாகில், அவன் மாத்திரம் கடவுளோடு சஞ்சரிக்கக்கூடுமென்றும், அவன் மாத்திரம் சந்தோஷத்தை அடையக்கூடுமென்றும் போதிக்கிறதாயிருந்தது. ஆனால், கிறிஸ்து மார்க்கத்தை ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்தபோதோ, 'பாவிகளை ரக்ஷிக்க கிறிஸ்தேசு உலகத்தில் வந்தார்' என்றும், 'நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புதலுக்கு அழைக்க வந்தேன்' என்றும் அறிந்தபொழுதோ பெரிய சந்தோஷத்தை அடைந்தேன். இந்த மார்க்கம் எனக்கு மாத்திரமே ஏற்பட்ட மார்க்கம்போலத் தோன்றிற்று. மற்ற மார்க்கங்களுக்கும், கிறிஸ்து மார்க்கத்துக்கும் பெரிய வித்தியாசத்தைக் கண்டேன். மற்ற மார்க்கம் 'இதைச் செய், அதைச் செய்' என்று கட்டளையிடுகிறது. ஆனால், கிறிஸ்து மார்க்கமோ குற்றுயிரில் உதவி செய்தபிறகே, எழுந்து நடவென்று சொல்லுகிறது. திருடர் கையில் அகப்பட்டுக் குற்றுயிராய்க் கிடந்தவனை அந்தச் சமாரியன் எண்ணெய் வார்த்து, காயங்களைக் கட்டினபிறகே நடக்கும்படி ஏவுகிறான். மேலும், மோக்ஷத்துக்கு வழி நடத்தும் மார்க்கம் கிறிஸ்து மார்க்கமே. கிறிஸ்து மார்க்கமானது, துன்பங்களை நீக்கினபிறகே எழுந்து நடவென்று போதிக்கிறது. நானும் அதிக அனுபவத்தின்பிறகே, அவரைக் குறித்து பேச தைரியமுள்ளவனாயிருக்கிறேன். கடைசியில் என் அருமை ரக்ஷகரண்டை சென்றேன். பாவங்களறக் கழுவப்பட்டு, அந்த 'பெரிய ரக்ஷிப்பை' அடைந்தேன். மேலும், இந்த ரக்ஷிப்பு பணத்தினாலேயுமல்ல, வேறெந்தப் பொருளாலேயுமல்ல. இலவசமாய்க் கிடைக்கிறதென்று அறிந்தபோதோ அதிக சந்தோஷப்பட்டேன். நான் முதலாவது கிறிஸ்தவனானபோது, கிறிஸ்தவர்கள் இத்தனை பேரும் இந்த ரக்ஷிப்பை இலவசமாய்ப் பெற்றிருக்கிறார்களே என்று சந்தோஷப்பட்டேன். ஆனால், சிறிதுகாலம் செல்லச் செல்ல, அந்த ரக்ஷிப்பை அவர்கள் அசட்டைபண்ணுகிறதையிட்டுத் துக்கப்பட்டேன். கிறிஸ்தவர்கள் இப்படி இலவசமான ரக்ஷிப்பைக் குறித்து கவலையற்றவர்களாயும், சோம்பேறிகளாயும், தேவனுக்குப் பயப்படாதவர்களாயும் இருப்பதற்குக் காரணம் என்னவென்று யோசித்தேன். நான்



இருந்த இடத்தில் ஒரு நதி ஓடினது. அதனருகில் மரங்கள் அடர்ந்து செழித்திருந்தது. நதியின் ஓரங்களிலிருக்கிற மரங்கள் இவ்வளவு செழித்திருந்தால் தண்ணீருக்குள்ளிருப்பவைகள் எப்படியிருக்குமென்று யோசித்து, தண்ணீருக்குள் கையை விட்டு ஒரு கல்லையெடுத்தேன். அதில் முழுவதும் தண்ணீர் ஒட்டியிருந்தது. அதை உடைத்து சோதிக்கையில், உள்ளே ஒரு சொட்டுத் தண்ணீருமில்லை. இதேவிதமாக, கிறிஸ்தவர்களில் அநேகர் கிறிஸ்தவ பெற்றோருக்குப் பிறந்திருக்கலாம். கிறிஸ்தவ பள்ளிக்கூடங்களில் படித்திருக்கலாம். ஆனால், எப்படி கல் தண்ணீருக்குள் கிடந்தும் ஈரத்தைப் பற்றிக்கொள்ளவில்லையோ, அப்படியே இவர்களும் ரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளுகிறதில்லை. அப்பேர்ப்பட்ட கிறிஸ்தவர்களுக்கு தேவ கோபாக்கினை தப்பாமல் வரும். நாங்கள் கிறிஸ்தவர்கள், எப்படியாவது எங்களுக்கும் மோக்ஷம் கிடைக்குமென்று இவர்கள் சொல்லிக்கொள்ளுகிறார்கள். முதலாவது, இவர்கள் மோக்ஷத்திற்குப் போனாலும் அங்கே இவர்களால் இருக்கமுடியுமா என்பதைப்பற்றிப் பார்ப்போம்.

ஒரு குணப்பட்ட கிறிஸ்தவனின் தரிசனத்தைப்பற்றி எனக்குத் தெரியும். அவன் இன்னும் உயிரோடிருக்கிறான். அவன் குணப்படுமுன்னே, தான் எப்படியாவது மோக்ஷத்திற்குப் போவதாக எண்ணிக்கொண்டான். அவனுக்கு ஒரு தரிசனம் உண்டானது. தான் இறந்துபோனதாகக் கண்டான். அப்பொழுது பிசாசுகள் அவனை நரகத்திற்குக் கொண்டுபோக வந்தன. ஆனால், அவனோ அவைகளோடு போராடி, தான் ஒரு கிறிஸ்தவனென்றும், தான் மோக்ஷத்துக்குத்தான் போகவேண்டுமென்றும் சொன்னான். அப்படி அங்கே போனாலும் இருக்கமுடியாதென்று அறிந்த பிசாசுகள் அவனை அவனிஷ்டத்துக்கு விட்டுவிட்டன. நெடுகப் போனான். தேவதூதர்களின் மகிமையையும், பரிசுத்தவான்களுடைய மகிமையையும் பார்த்தவுடனே அவனுக்குண்டான சந்தோஷத்துக்கு அளவில்லை. ஆனந்தமடைந்தான். சிறிது நேரம் சென்றவுடன், திரும்பிக்கொண்டு தன்னைப் பார்த்தபொழுதே, தன் தேகம் முழுவதும் பாவத்தாலும், அசுத்தங்களாலும் நிறைந்திருக்கக் கண்டான். இவன் உலகத்திலிருந்தபோது இவன் நடப்பித்த அக்கிரமச் செய்கைகளும், இவன் சிந்தித்த அக்கிரம சிந்தனைகளும், பேசின தீயப் பேச்சுகளும், படம்போல் இவனுடைய சரீரத்தில் காணப்பட்டது. வேதனையுமுண்டாக்கினது. எப்படியென்றால், ஒரு வெள்ளைக் கடிதத்தின்மேல் ஒரு கார்பன் பேப்பரை (carbon paper) விரித்து அதின்மேல் எழுதும்பொழுது, நாம் எழுதும் எழுத்துக்கள் அந்த கார்பன் பேப்பரின்மேல் காணப்படாது. ஆனால், அந்த கார்பன் பேப்பரை நீக்கிவிட்டாலோ, எழுதப்பட்ட ஒவ்வொரு அக்ஷரங்களும் வெகு தெளிவாக அந்த வெள்ளைக் கடிதத்தில் காணப்படுகிறதுபோல, இவன் உலகத்திலி

ருந்த இவ்வளவு காலமும், அவனுடைய ஆத்துமாவாகிய வெள்ளைக் கடிதமானது, அவனுடைய சரீரமாகிய கார்பன் பேப்பரால் மூடப்பட்டிருந்தபடியால், அவனுயைய நடபடிக்கைகளை ஒருவராலும் காணக்கூடாமலிருந்தது. அவன் உலகத்திலிருந்தபோது தினசரியும் அவன் தன் சிந்தனைகளாலும், பேச்சுகளாலும், நடக்கைகளாலும் தன் ஆத்துமாவைக் கறைப்படுத்திக்கொண்டேயிருந்தான். அவைகள் இதுநாள் வரையிலும் வெளியே காணப்படாமலிருந்தது. ஆனால், காலம் வந்தது. இவனுடைய ஆத்துமா சரீரத்தை விட்டுப் பிரிந்தவுடனே, இவன் இதுநாள் வரையிலும் நடப்பித்த பாவ பயங்கரங்கள் பிரத்தியக்ஷமாய்க் காணப்பட்டன. அப்பேர்ப்பட்ட வேதனையை அவனால் சகிக்கமுடியவில்லை. ஆனால், அவனுடைய தலையிலோ 'கிறிஸ்தவன்' என்கிற பெயர் வெகு அழகாகப் பதித்திருந்தது. தன் சரீரம் முழுவதும் வெகு அகோரமாயிருந்தபடியால், தான் ஒளிந்துகொள்ளும்படி ஒரு அந்தகாரமான இடத்தைத் தேடினான். அவ்விடத்தில் இருளடைந்த இடம் எங்கும் காணப்படாமல், எவ்விடமும் பிரகாசமாயிருந்தது. ஆகையால், வனாந்தரங்களில் நெருப்புக் கோழி செய்கிறதுபோல தன் இரு கண்களையும் இறுக மூடிக்கொண்டான். ஆனால், உள்ளேயும் அநேக கண்கள் இருக்கிறதாகக் கண்டான். அந்தக் கண்களினால், அவனுடைய ஆத்துமாவில் ஒட்டியிருந்த சகல அசுத்தங்களையும் வெகு தெளிவாகக் கண்டான். அவனால் இனிமேல் தாங்கக்கூடாததாயிருந்தது. ஆகையால், தன்னை அந்தகாரத்துக்கு அனுப்பிவிடும்படியாய் உத்தரவு கேட்டான். உத்தரவும் கொடுக்கப்பட்டது. அப்பொழுது தேவதூதர்கள் யாவரும் ஏகோபித்து, 'ஐயோ, இலவசமாய் இவனுக்குக் கொடுக்கப்பட்ட ரக்ஷிப்பை இவன் பெற்றுக்கொள்ளாமற் போனானே. உலகத்தில் இவனிருந்த காலத்தில் அந்த பெரிய இரக்ஷிப்பை அசட்டைபண்ணிவிட்டானே' யென்று புலம்பினார்கள். இவன் அந்தகாரத்துக்குத் திரும்பிவருகிறதைக் கண்ட பிசாசுகளெல்லாம் ஆர்ப்பரித்தன. 'நாங்கள் நினைத்தவண்ணமாகவே இதோ நமது கூட்டாளி திரும்பி வருகிறான்' என்பதாக பரிகாசம்பண்ணி, அவனுடைய பங்காகிய எரிநரகத்துக்கு அழைத்துச் சென்றார்கள். அப்பொழுது தேவன் 'நான் மனிதரை நரகத்தில்த் தள்ளுகிறதாக உலகத்தில் அநேகர் பேசிக்கொள்ளுகிறார்கள். நானல்ல, அவர்களே தங்களைத் தள்ளிக்கொள்ளுகிறார்கள்' என்றார். ஆகையால் புதிய இடத்திலிருக்க புதிய மனம் வேண்டும். இவனுடைய தலையின்மேல் கிறிஸ்துவின் நாமம் தரிக்கப்பட்டிருந்தது. ஆனால், மோக்ஷத்தில் இருக்கக்கூடாதவனாய் மிகவும் அழுதான். இவ்விதமாக தரிசனமும் தெளிந்தது. தான் ஒரு தரிசனத்தைக் கண்டதாக மாத்திரம் அவன் அறிந்தபோதோ அதிக சந்தோஷப்பட்டு குணப்பட்டான். இப்பொழுதோ மெய்க் கிறிஸ்தவனாக ஜீவிக்கிறான். மெய்ச் சந்தோஷத்தையும், மெய்ச் சமாதானத்தையும் அடைந்தான். முன்னே, சாராயத்தால் சமாதானத்தைப் பெற்றுக்கொள்ளப் பார்த்தான். இப்பொழுதோ, ரக்ஷிக்கப்பட்டவனாக இந்த உலகத்திலேயே மெய்ச் சமாதானத்தை அநுபவிக்கிறான். அவனுக்குள் பரிசுத்த ஆவியானவர் பூரணமாய்க் கிரியை செய்கிறார். முன்னே கிறிஸ்துவுக்கு விரோதி. இப்பொழுது, தன் ஜீவனையும் கிறிஸ்துநாதருக்காகக் கொடுக்க ஆயத்தம்.



ஐயோ! பிறப்புக் கிறிஸ்தவர்களின் நிலமை யென்ன? கல்லான இருதயத்தை உடைத்து, ஜீவ தண்ணீர் உட்செல்லும்படி இடம் கொடுக்கும்பொழுதுதான், கிறிஸ்துவானவரிடத்திலிருந்து புறப்படுகிற ஜீவ தண்ணீர் உட்சென்று, பாவத்தையும் பாவ கிரியைகளையும் அழித்து, கிறிஸ்துவானவருடைய சிந்தையும், சமாதானமும், நமது இருதயத்தில் ஆளுகை செய்கிறது. அப்பொழுதுதான், இலவசமாகக் கொடுக்கப்படுகிற இந்தப் பெரிதான இரக்ஷிப்பை இந்த உலகத்திலேயே பெற்று, இங்கேயே மோக்ஷானந்தம் அநுபவிக்கிறவர்களாயிருப்போம்.

**சாது சுந்தர் சிங்**

## போக்குச்சொல்ல அவர்களுக்கு இடமில்லை

**முகவுரை.** போக்குச்சொல்வது மனிதனுக்கு இயல்பு. தன்னைக் குற்றவாளியென்று ஒப்புக்கொள்ள மனமில்லை. பெருமையால் பாவம் செய்து, பாவத்தை உணராமலும் ஒப்புக்கொள்ளாமலும் போக்குச் சொல்கிறார்கள். அதினாலே நித்திய ரக்ஷிப்பைப் பெறாமல் போகிறார்கள்.

**திருஷ்டாந்தம்.** ஒரு ராஜா-சிறைச்சாலையில் கைதிகள் எல்லாரையும் கண்டு விசாரித்து, தன் குற்றத்தை மனதார ஒப்புக்கொண்டு, அதினிமித்தம் துக்கப்பட்ட மனிதன் ஒருவனை மாத்திரம் விடுதலைபண்ணினான். 'ஆ! நீ, உன்னைமுற்றிலும் தாழ்த்தி, நீசெய்த பாவங்களையெல்லாம் துக்கத்தோடு அறிக்கைசெய்து உன்னை முழுவதுமாய் வெறுக்குமட்டும், ரக்ஷிப்பேயில்லை. 'தன் பாவத்தை மறைக்கிறவன்' etc. ஆ! மனிதனுக்கு முன்பாக நீ போக்குச்சொல்லப் பார்க்கலாம். தேவன் முன்பாகவோ, போக்குச்சொல்ல இடமில்லை.

1. மனச்சாட்சி பாவியைக் குற்றப்படுத்துவதால் அவனுக்குப் போக்குச் சொல்ல இடமில்லை. ரோமர் 1:20 with 11:14—15. இது எல்லா மனிதருக்கும் பொதுவான நியாயம். ஒரு மனுதனுக்கு சத்தியவேதம் அத்தமாய்த் தெரியாதென்றாலும், அவன் பாவத்தைக்குறித்து போக்குச் சொல்ல இடமில்லை. ஏனென்றால் இயற்கைப் பிரமாணத்தினாலும் மனச்சாட்சியினாலும் கர்த்தருடைய வல்லமையும், நீதியும், மகிமையும் அவனுக்குத் தெரியும். ஆகையால் 'எல்லாவித அவபக்திக்கும் அநியாயத்திற்கும் விரோத

மாய்த் தேவகோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது' அவர்களுடைய மனச்சாட்சியுங்கூடச் சாட்சியிடுகிறதினாலும், குற்றமுண்டு. குற்றமில்லை என்று அவர்களுடைய சிந்தனைகள் ஒன்றை ஒன்று தீர்க்கிறதினாலும் (2:15) அவர்களுக்குப் போக்குச்சொல்ல இடமில்லை.

பொய் சொல்வதும், தூஷணம் பேசுவதும் மகா தப்பிதமென்று எல்லா மனிதருக்கும் தெரியும். 'ஆ, மனச்சாட்சிக்கு விரோதமாய் எத்தனையோ பாவங்களைச் செய்திருக்கிறோம். அஞ்ஞானிகள் பல பேய் பிசாசுகளையும், பொய்யான தேவதைகளையும் வணங்கினாலும் தப்பிதம் என்று அவர்களே ஒப்புக்கொள்வார்கள். ஆகையால் போக்குச்சொல்ல இடமில்லை. மனுஷனுடைய ஆவி கர்த்தர் தந்த தீபமாயிருக்கிறது. நீதிமொழி 20: 27. அந்தத் தீபம் ஏற்றி நம் உள்ளத்திலே வைத்திருக்கிறார். நிசந்தான், அந்த தீபத்தினால் எல்லா சத்தியமும் தெரியமாட்டாது. ஆனால் நமக்கு வேறே வெளிச்சமில்லை என்று வைத்துக்கொண்டாலும், அநேக காரியங்கள் பாவமென்று இச்சிறு தீபத்தினாலே தெரியும். பாவத்தின் மோசம் பூராவாய் அதினாலே தெரியாவிட்டாலும், கூடியமட்டும் தெரிகிறதே.

**திருஷ்டாந்தம்.** விபசாரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஸ்திரீயை வேதபாரகரும், பரிசேயரும் இயேசுவினிடத்தில் கொண்டுவந்து அவள்மேல் குற்றம் சாட்டும்போது, 'உங்களில் பாவமில்லாதவன், இவள்மேல் முதலாவது கல்லெறியக்கடவன்' என்றார். அவர்கள் அதைக்கேட்டு தங்கள் மனச்சாட்சியில் கடிந்துகொள்ளப்பட்டு, பெரியோர்முதல் சிறியோர்வரைக்கும் ஒவ்வொருவராய்ப் போய்விட்டார்கள்.

அவர்களைக் குற்றப்படுத்த வேறே சாட்சிகளை ஆண்டவர் நிறுத்திக் கேட்கவில்லை, அவர்கள் மனச்சாட்சி ஒன்றுமாத்திரம் போதும். போக்குச் சொல்ல இடமில்லாமல் குற்றவாளிகளாய்ப் போய்விட்டார்கள்.

**திருஷ்டாந்தம்.** தண்ணீரில் அமிழ்ந்திப்போகிற ஜனங்களுக்கு அவர்கள் ஜீவியகாலத்தில் தாங்கள் செய்த யாவும், ஒரே நிமிஷத்தில் அவர்கள் மனதில்வந்து நிற்கிறதாம் 'ஆ, கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நிற்கும்போது உங்கள் மனச்சாட்சி உங்களைக் குற்றப்படுத்தும். நீங்கள் செய்த சகல பாவங்களும், மனசுக்கு முன்பாக எழும்பிநிற்கும். 'போக்குச் சொல்ல மனம் இல்லை.'

II. **நியாயப்பிரமாணம் பாவியைக் குற்றப்படுத்துவதால் அவனுக்குப் போக்குச்சொல்ல இடமில்லை.** ரோமர் 2: 1. இவ்வசனத்திலே யூதனுடைய நிலையை விசேஷமாய் எடுத்துக் காட்டுகிறார். யூதர்கள் மற்றப் புறஜாதியாரை புறக்கணித்தார்கள். அவர்கள் விக்கிரகங்களை வணங்கினதினாலும், அநேக அவலட்சண பாவங்களைச் செய்துவந்ததினாலும், அவர்களைக் குற்றவாளிகள் என்று தீர்த்தார்கள். ஆனாலும் சொல்லவேண்டு



மானால், அஞ்ஞானிகளைவிட யூதர்கள் பெரிய பாவிகளென்று ரூபிக்கிறார். ஏனென்றால் மனச்சாட்சி மாத்திரமல்ல நீதிப்பிரமாணமும் அவர்களைக் குற்றப்படுத்துகிறது.

மனச்சாட்சி சிறு தீபமென்றால், நியாயப்பிரமாணம் பெரிய தீபம் என்றே சொல்லவேண்டும். அதிலே, பாவம் இன்னதென்று கர்த்தர் வெகு தெளிவாய்க் காண்பித்திருக்கிறார். 'பாவத்தை அறிகிற அறிவு நியாயப்பிரமாணத்தினாலே வருகிறது'. ரோம. 3: 20. அஞ்ஞானிக்கு ஒரு கண் தெரியாது என்று சொல்லலாம். வேதமறிந்த சபையாருக்கோ, இரண்டு கண்ணும் நன்றாய்த் தெரியும். மனச்சாட்சியுமுண்டு, நியாயப்பிரமாணமும் உண்டு. இரண்டு கண்களையும் திறந்து பாவம் செய்கிறான். ஆண்டவர் தம்முடைய சித்தத்தை வெளிப்படுத்தினார், பிரத்தியட்சமாய்க் காண்பித்தார்.

**திருஷ்டாந்தம்.** வீட்டுச்சுவரில் எழுதப்பட்ட வசனம். 'உன் தேவனை சந்திக்கும்படி ஆயத்தப்படு'. தேவன் அப்படி பிரத்தியட்சமாய் தம்முடைய சித்தத்தை எழுதிவைத்துத் தெரியப்படுத்தினார், போக்குச்சொல்ல இடமில்லை. நியாயப்பிரமாணத்தினால் ரட்சிப்பு உண்டாகும் என்றல்ல. ரக்ஷிப்பு, மோட்சமுமல்ல, பாவத்தை அறிகிற அறிவு நியாயப்பிரமாணத்தினால் வருகிறது. 'மீறுதல் பெருகும்படிக்கு நியாயப்பிரமாணம் வந்தது'. ரோம. 3: 20.

(a) **நியாயப்பிரமாணம் ஓர் உபாத்தியாரைப்போலிருக்கிறது.** நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாராயிருந்தது அது படிப்பிக்கிற பாடம் என்னவென்றால், நீ முழுப்பாவி—உனக்கு இரக்ஷிப்பு வேண்டுமென்பதே.

(b) **நியாயப்பிரமாணம் ஓர் கண்ணாடியைப்போலிருக்கிறது.** அதிலே நம்முடைய சுபாபமுகச் சாயல் தெரியும. Tas. 1: 22—25.

**திருஷ்டாந்தம்.** யோசியா ராஜா நல்லவனாக நடக்கப்பார்த்தான். விக்கிரகங்களை உடைத்துப்போட்டான். தேவாலயத்தைப் பழுதுபார்த்தான். ஒருநாள் தேவாலயத்தில் நியாயப்பிரமாணப் புஸ்தகம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. ராஜாவினிடத்தில் கொண்டுவந்து வாசித்தார்கள். ஒருவிசை மாத்திரம் வாசிக்கக் கேட்டவுடனே, ராஜா தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டான், கண்ணீர்விட்டான், தன்னை அருவருத்தான். ii Chron 34: 19—27. 'ஆ, அதிலே தன்னைப் பார்த்தவுடனே பாவி என்று அறிந்துகொண்டான்.

(c) **நியாயப்பிரமாணம் அளவுகோல்போலிருக்கிறது.** நீ குறையக் காணப்பட்டாய்'. திருஷ்டாந்தம் ஆமோஸ் 7: 7 'தூக்குநூல் பிரமாணத்தினால் கட்டப்பட்ட மதிலின்மேல் நின்றார். கோணலில்லை—சரிவில்லை.

தண்டனை. ஆ! நியாயத்தீர்ப்பு நாளிலே தேவனுடைய நீதிப்பிரமாணம் நம்மைக் குறைப்படுத்தும்.

III. சுவிசேஷம் பாவியைக் குற்றப்படுத்துவதால் அவன் போக்குச் சொல்ல இடமில்லை. ஆ! எல்லாப் பாவிகளிலும் பெரிய பாவிகள் யாரென்றால் கிறிஸ்தவ பாவிகள். அவர்களுக்கு மனச்சாட்சி மட்டுமல்ல, நியாயப் பிரமாணமாத்திரமல்ல, சுவிசேஷமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. சிறு தீபமாகிய மனச்சாட்சி, பெருவெளிச்சமாகிய நியாயப்பிரமாணம் இவைகளைக் கட்டளையிட்டதோடேகூட நீதியின் சூரியனும் உதிக்கச்செய்தார்.

(a) **வந்து பேசினார்.** பாவத்தை உணர்த்தினார். பரிசுத்தத்தை வெளிப்படுத்தினார். மனம் திரும்பி சுவிசேஷத்தை விசுவாசிக்கச் சொன்னார். இன்னமும் வந்து பேசுகிறார்.

(b) **பலத்த காரியங்களைச் செய்தார்.** வல்ல ரக்ஷகர் என்று காட்டினார். ரக்ஷிப்பில் கிரியையையும் முடித்தார். போக்குச்சொல்ல இடமில்லை.

Rev. T. WALKFR.

---

# வேதாகமப் பாடமுறை

25-ம் பாடம்—எஸ்தரின் ஆகமம்.

**ஆகமத்தின் பெயர்.** பாரசீக தேசத்துக்கு ராணியான யூதஸ்திரீயின் பேரால் இந்த ஆகமம் அழைக்கப்படுகிறது.

**எழுதப்பட்ட காலம்.** இவ்வாகமத்தில் சொல்லப்படுகிற ஆகாஸ்வேரு என்பவன் கிரேக்கு தேசத்தைப் படையெடுத்தவனான கோரேஸ் என்பவன் தான் என்பதற்கு அதிகச் சந்தேகமில்லை. இவ்வாகமத்தின் அமைப்பைப் பார்க்கும்போது அவ்வரசன் இறந்த வருஷமாகிய கி. மு. 465-ம் வருஷத்துக்குப் பின் எழுதப்பட்டதாகத் தெரிகிறது. இவ்வாகமத்தின் பாஷை நடை எஸ்றா, நெகேமியா, நாளாகமம் இவைகளின் பாஷை நடைக்கு ஒத்திருக்கிறபடியால், ஏககாலத்தில் இவ்வாகமங்கள் எழுதப்பட்டிருக்கவேண்டும் என்று தோன்றுகிறது. அப்படியானால் கி. மு. 450 அல்லது 440-ம் வருஷத்தில், இல்லாவிட்டால் கோரேஸ் மரித்து ஏறக்குறைய 20 வருஷத்துக்குப்பின் எழுதப்பட்டிருக்கவேண்டும்.

**ஆக்கியோன்.** ஆக்கியோன் இன்னாரென்பது தெரியவில்லை. மொர்தெகாயாயிருக்கலாம் என்கிறார்கள் சிலர். மற்றவர்களோ, சிலர் எஸ்றாவென்றும், சிலர் பிரதான ஆசாரியனாகிய யோயாக்கீம் என்றும் சொல்லுகிறார்கள். இவ்வாகமத்தில் தன்மைப் பெயர் 'நான், நாம்' என்று உபயோகிக்காததாலும், மொர்தெகாயைக் குறித்து அதிகப் புகழ்ச்சியாய் எழுதியிருப்பதாலும், இதை மொர்தெகாய் எழுதியிருப்பதாகச் சொல்வது சரியல்ல. பாஷை நடை எஸ்றாவின் பாஷைநடைக்கு அதிக வித்தியாசமாயிருக்கிறது. யோயாக்கீமுக்கு பாரசீக தேசத்துப் பழக்க வழக்கங்கள் தெரிந்திருப்பது கூடியகாரியமல்ல. ஆனால் இவ்வாகமத்தை எழுதினவன் யூதனாயிருந்து, பாரசீக அரண்மனையில் வெகுகாலம் குடியிருந்து, சூசான் அரண்மனையின் காரியாதிகளைத் திட்டவட்டமாய் அறிந்திருக்கவேண்டும். ஆக்கியோன் யாரென்று தெரியாததால் இவ்வாகமம் திவ்ய அதிகாரமுள்ளதல்லவென்று சொல்லக்கூடாது. உலக சரித்திரத்தையும் தேவனே நடத்துகிறார் என்பதற்கு இவ்வாகமம் ஓர் திருஷ்டாந்தம்.



**விசேஷித்த குறிப்புகள்.** இவ்வாகமத்தில் பலஸ்தீனா, எருசலேம், ஆலயம், நியாயப்பிரமாணச் சட்டங்கள், தேவன் என்ற பதங்கள் வரவேயில்லை. இக்காரணத்தைக்கொண்டே இவ்வாகமத்தைச் சிலர் ஆக்ஷேபித்தார்கள். ஆனால் வியாக்கியானிகள், தேவனுடைய நாமம் இவ்வாகமத்தில் வராவிட்டாலும் அவருடைய கரம் இதில் காணப்படுகிறது என்று உத்தரவளிக்கிறார்கள். சிதறப்பட்ட இஸ்ரவேலருக்காக அஞ்ஞான தேசத்தரசனின் அரண்மனையில் நடந்த சிறு சம்பவங்கள்கூட விரிவாய் எடுத்துரைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளின் மூலமாய் இப்பூமியில் தேவனுடைய ராஜ்யமும் விருத்தியாகிறதைப் பார்க்கலாம். யூதர்கள் இவ்வாகமத்தை நியாயப் பிரமாணத்துக்கு அடுத்த ஸ்தானத்தில் வைத்துப் பேசுவார்கள். ஆனால் பழைய ஏற்பாட்டாகமங்களில் காணப்படுகிற சுவிசேஷத்தின் ஆவி இதில் காணப்படுகிறதில்லை. புதிய ஏற்பாட்டில் இவ்வாகமம் எடுத்துக் கூறப்படவுமில்லை.

**விசேஷ ஆட்கள்:—**

1. ஆகாஸ்வேரு, வீண்பெருமைகொண்ட ராஜா.
2. வஸ்தி, முக்காடிட்ட ராணி.
3. எஸ்தர், வீரதீரமுள்ள ஸ்திரீ.
4. மொர்தெகாய், நல்லொழுக்கமுள்ள தேசாபிமானி.
5. ஆமான், முகஸ்துதி பேசிப் பெருமைகொண்ட மந்திரி.

I. **ஆகாஸ்வேரு-வீண்பெருமைகொண்ட ராஜா.** இவ்வாகமத்தில் ஆகாஸ்வேரு என்று அழைக்கப்படுகிறவன் கிரேக்கருக்குள் கோரேஸ் என்றழைக்கப்படுகிறான். எகிப்து தேசத்தை ஜெயித்தபின், நம்புகிறதற்கரிய எண்ணமும் வல்லமையுமுள்ள சேனையோடும் யுத்தக் கப்பல்களோடும் கிரேக்கு தேசத்தைப் படையெடுத்தான். இந்தப் படையெழுச்சிக்காக ஆயத்தம் செய்துகொண்டிருக்கும் காலத்தில்தான் தன் பிரபுக்களுக்குப் பெரிய விருந்தளித்தான். அவனுடைய தேசாதிபதிகள் தங்கள் தங்கள் சேனைகளையும் திரவியத்தையும் அவனிடம் கொண்டுவந்து கொடுத்தார்கள். இராஜ அரண்

மனையின் தோட்டத்தில் ஏழுநாள் விருந்து நடந்தது. ராஜாவும் பிரபுக்களும் தனியேயும், ராணியும் ஸ்திரீகளும் தனியேயும் விருந்துண்டார்கள். கோரேஸ் வீண்பெருமைகொண்டவன். அவனுடைய ராஜ்யத்தின் விஸ்தீரணம் 127 நாடுகளுள்ளது. இந்துதேச முதல் எத்தியோப்பியா வரையும் உண்டு. கோரேஸ் குரூரமும் கோழைத்தனமுமுள்ளவன்.

2. **வஸ்தி—முக்காடிட்ட ராணி.** பெருமையினாலும், அதிகாரப் பிரியத்தினாலும், திராட்சரசத்தினாலும் மதிமயங்கியிருந்த ஆகாஸ்வேரு அரசன் வஸ்தியை அழைத்தனுப்பினான். பிறந்த ராஜ உத்தரவு எப்படியோ சொல்லப்படவில்லை. ஆனால் ராணியாகிய வஸ்தியோ போக மறுத்தாள். அவளுடைய அழகு அவளுக்கும் அவளுடைய அரசனுக்கும் உரியதேயொழிய குடிவெறியரான பிரபுக்களுக்குரியதல்ல. கீழ் தேசத்தில் ஸ்திரீகளுக்குரிய மரியாதை யென்னவென்றால் அவர்கள் முக்காடில்லாமல் கூட்டத்தில் காணப்படலாகாது. ஆனால் ராஜ உத்தரவோ வஸ்தி முக்காடில்லாமல் கூட்டத்துக்குமுன் வரவேண்டுமென்பதே. வஸ்தியோ, நாணமும் நல்லொழுக்கமும் உள்ளவளானபடியால் ராஜ கட்டளைக்கும் கீழ்ப்படியவில்லை. ராஜ கட்டளைக்குக் கீழ்ப்படிந்து வஸ்தி முக்காடில்லாமல் கூட்டத்துக்கு முன் வந்திருந்தாலும் அந்தப் பிரபுக்களே வஸ்தியைக் குறித்து வெட்கம் அடைந்திருப்பார்கள். வஸ்தியோ மனத்தைரியத்தோடு தன் நாணத்தையும் கற்பையும் காத்து அதினிமித்தம் தன்னையே பலியாகக் கொடுத்துவிட்டாள்.

3. **எஸ்தர்—வீரமுள்ள ஸ்திரீ** ஆகாஸ்வேருவின் பொல்லாப்பினிமித்தம் வஸ்தி ராஜ அரமனையிலிருந்து தள்ளப்பட்டு வெட்கமடைந்தாள். எபிரேய அனாதப் பெண்ணாகிய எஸ்தருக்கு அந்த ஸ்தானம் கிடைத்தது சம்பவங்கள் பலவாறாய் நடந்தபோதிலும் எஸ்தருக்கு ஏற்ற சமயம் வாய்க்கத்தக்கதாகக் காரியங்கள் நடந்தன. ஆகாகியனாகிய ஆமான் யூதரை நாசம் பண்ண உத்திரவு பிறப்பித்ததே எஸ்தருக்கு ஏற்ற சமயமாயிருந்தது. எஸ்தரை வளர்த்த மொர்தேகாய் அந்தச் சமயத்தை அவளுக்கு எடுத்துக்காட்டி யூதர் சங்கரிக்கப்பட்டால் எஸ்தரும் தப்பிப்போவதில்லையென்று அவளை எச்சரிக்கிறான். எஸ்தர் தன் பயத்தையும் பின் வாங்குகிறதற்கிருந்த சகல காரணங்களையும் மேற்கொண்டு 'நான் செத்தாலும் சாகிறேன்' என்று சொல்லிக்கொண்டே தைரியத்தோடு வேலை செய்தாள். ஆமான் காரியம் தோல்வியடைந்தது. யூதர் இரட்சிக்கப்பட்டார்கள். சாராள், மீரியாம், தெபோராள், யாகேல், அன்னாள், உல்தாள் முதலிய எபிரேய ஸ்திரீகளைப் போல எஸ்தரும் தைரியம் பாராட்டினாள். அவர்கள் எல்லாரிலும் இவள் செய்த செய்கை அதிக தைரியத்தையும் சுயவெறுப்பையும் காட்டுகிறது.

4. **மொர்தேகாய்—நல்லொழுக்கமுள்ள தேசாபிமானி.** அநாதப் பெண்ணாகிய எஸ்தரின் சிறிய தகப்பன். சிறையிருப்பிலும் தரித்திரத்திலுமிருந்த தன் மகள் ராஜாத்திக்குரிய மேன்மையான நிலைமைக்கு அழைக்கப்பட்டது அவனுக்கு மெத்த சந்தோஷத்தைக் கொடுத்திருக்கும். மொர்தேகாய்க்கும் அரண்மனையில் வேலை கிடைத்தது. ராஜாவைக் கொல்லும்படி



யான சதியோசனை அரண்மனையிலுள்ள இருவரால் நடந்தது. இதை மொர்தேகாய் ராஜாவுக்கு அறிவித்ததால், ராஜாவின் உயிரைக் காப்பாற்றினான். இது நாளாகமப் புஸ்தகத்தில் எழுதிவைக்கப்பட்டது. மொர்தேகாய் யாவராலும் விரும்பப்படத்தக்கவன் அல்ல எஸ்தருக்கு அவன் அனுப்பின செய்தி மரியாதையான விதமாய்ச் செய்யப்படவில்லை. இவன் பென்யமீன் கோத்திரத்தான். ஆமான் அமலேக்கியன். இஸ்ரவேலருக்குத் தொன்றுதொட்டுச் சத்துருவாகிய அமலேக்கியனைப் பணிந்துகொள்ள ஆமானுக்கு மனம் போகவில்லை. தேவனே சபித்தவனைப் போற்ற மொர்தேகாய்க்கு மனமுண்டாகவில்லை.

5. **ஆமான்—முகஸ்துதி பேசிக்கெட்ட மந்திரி.** ஆமான் மொர்தேகாய்க்கும் எஸ்தருக்கும் இஸ்ரவேல் ஜனங்களுக்கும் விரோதமாய்ச் செய்த சதிமோசத்தைப் பார்க்கும்போது துருக்கி ராஜாங்கத்தில் நடந்தவண்ணமிருக்கிறது. ஆமான் ஏழு பிசாசுகள் குடிகொண்ட மனுஷன். பெருமை, பொறாமை, பழிவாங்குதல் இக்குணங்கள் குடிகொண்ட ஓர் பாவி. இஸ்ரவேலரை அழிக்கும்படி ஆமான் ராஜாவுக்குச் செலுத்தின பணம் 600 கோடி ரூபாய். இப்பெருந்தொகை இவனுக்கு எப்படிக் கிடைக்கும்? யூதரைக் கொள்ளையிட்டு அவர்கள் சொத்துக்களையெல்லாம் பறித்துக்கொள்ளத்தான் யோசித்தான். ராஜா ஆயிரக்கணக்கான தன் பிரஜைகளின் உயிரைப் பார்க்கிலும் பெருந்தொகையான பணத்தையே பெரிதாக நினைத்தான். ஆமானின் சதிமோசம் அவனுக்கே பலித்தது. தான் வெட்டின குழியில் தானே விழுந்தான்.

## 1918-ம் வருஷ பத்திரிகையின் பொருள் அட்டவணை


| நம்பர் | பொருள் | புக்கம் |
|---|---|---|
| 1. | முன் ஒருபோதும் நடவாதவழி .... | 1 |
| 2. | ஜீவிய மாறுதல் .... | 7 |
| 3. | இதுவே நான் அவர்களால் மதிக்கப்பட்ட மேன்மையான மதிப்பு .... | 10 |
| 4. | ஜீவியத்துக்கேற்ற திருஷ்டாந்தங்கள் .... | 11 |
| 5. | விளம்பரம் .... | 12 |
| 6. | மேகத்தில் வில் 'அந்த வில் மேகத்தில் தோன்றும்' .... | 13 |
| 7. | அனுபவ சாட்சி .... | 18 |
| 8. | நாம எல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும் .... | 20 |
| 9. | நடக்கப்போகிற சில காரியங்கள் .... | 21 |
| 10. | சாது சுந்தர் சிங் .... | 22 |
| 11. | திருஷ்டாந்தங்கள் .... | 23 |
| 12. | திருநெல்வேலி இந்திய கிறிஸ்தவர்களின் கன்வென்ஷன் கூட்டம் .... | 25 |
| 13. | வல்லமை புறப்பட்டது .... | 26 |
| 14. | இதோ வாசற்படியில் நின்று தட்டுகிறேன் .... | 30 |

| | | |
|---|---|---|
| 15. | வேதாகமப்பாடமுறை. 22-ம் பாடம் 2 ராஜாகமம் .... | 38 |
| 16. | நீ ஜீவனைத் தெரிந்துகொள் .... | 37 |
| 17. | கடைசி சத்துரு .... | 39 |
| 18. | வல்லமையின் ரகசியம் .... | 41 |
| 19. | வேதாகமப்பாடமுறை. 23-ம் பாடம் எஸ்றாவின் புஸ்தகம் .... | 44 |
| 20. | நீ நித்திரைபண்ணுகிறது என்ன? ... | 49 |
| 21. | 20-வது டக்காம்மாள்புரம் மே மாசக் கன்வென்ஷன் .... | 54 |
| 22. | 'இங்கே ஒரு பையன் இருக்கிறான். அவன் கையில் ஐந்து வாற்கோதுமை அப்பங்களும் இரண்டு மீன்களும் உண்டு' 'அவைகளை என்னிடத்தில் கொண்டுவாருங்கள்' .... | 55 |
| 23. | யோபின் ஆகமம் .... | 58 |
| 24. | திருஷ்டாந்தங்கள் .... | 61 |
| 25. | வேதாகமப்பாடமுறை. 24-ம்பாடம் நெகேமியாவின் புஸ்தகம் | 62 |
| 26. | யோபு 2-ம் அதிகாரம் .... | 69 |
| 27. | திருஷ்டாந்தங்கள் .... | 74 |
| 28. | உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு ஆமோஸ் 4: 12 | 77 |
| 29. | உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு ஆமோஸ் 4: 12 | 81 |
| 30. | சத்துரு உட்புகுதலும் குடியோடிப்போகுதலும் .... | 84 |
| 31. | யோபின் ஆகமம் .... | 88 |
| 32. | ஜீவியத்துக்கேற்ற திருஷ்டாந்தங்கள் .... | 90 |
| 33. | கர்த்தர் அறிவார் .... | 91 |
| 34. | மகா துயரமான வார்த்தைகள் .... | 93 |
| 35. | கர்த்தர் அறிவார் (தொடர்ச்சி) .... | 99 |
| 36. | அன்பில் நிலைத்திருக்க இன்ப ஆலோசனைகள் .... | 101 |
| 37. | தேவ சந்தோஷம் .... | 104 |
| 38. | யோபின் ஆகமம் அதி. 8—12 .... | 110 |
| 39. | அன்பில் நிலைத்திருக்க இன்ப ஆலோசனைகள் .... | 114 |
| 40. | பாவம் செய்கிற ஆத்துமாவே சாகும். எசேக். 18: 20 .... | 117 |
| 41. | விஷக்காய்ச்சலும் எச்சரிப்பும் .... | 121 |
| 42. | சுயாதீன சுவிசேஷ வேலை .... | 122 |
| 43. | உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு .... | 124 |
| 44. | திருஷ்டாந்தங்கள் .... | 127 |
| 45. | தண்டனைக்கு எப்படித் தப்பித்துக்கொள்வோம்? .... | 129 |
| 46. | போக்குச்சொல்ல அவர்களுக்கு இடமில்லை .... | 133 |
| 47. | வேதாகமப்பாடமுறை. எஸ்தரின் ஆகமம் .... | 136 |


Printed at the Palamcottah Printing Press, Palamcottah and published by the Christian Brotherhood Association, Tinnevelly.